# கோப்பாய்

## வரலாறு — கூட்டுறவு

ஆக்கியோன் :

**க. இ. குமாரசாமி**

' அரவிந்த வாசம் '
கோப்பாய்

**1998**

.114
PR

# கோப்பாய் வரலாறு

## பாகம் I

க. இ. குமாரசாமி

1998

## நூல் விபரம்

நூல் : கோப்பாய் வரலாறு
பாகம் I பாகம் II

ஆசிரியர் க. இ. குமாரசாமி

முகவரி : அரவிந்த வாசம்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

பதிப்பு : முதலாம் பதிப்பு — 1998

பதிப்புரிமை : ஆக்கியோனுக்கு

மொழி : தமிழ்

பக்கங்கள் : 334

அச்சுப்பதிப்பு ; முல்லை அச்சகம்,
ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை : 150/-


# முகவுரை

எமது கிராமத்தின் சமகால நிகழ்வுகளை பிற்கால சந்ததியினரும் அறிந்திருத்தல் நலம் – என்று கருதியதாலும், நினைவு விழாக்கள் சிலவற்றில் யான் பேசியதனை எழுதுமாறு நண்பர்கள் தூண்டியதாலும் கோப்பாய் என்ற தலைப்பில் இச்சிறு நூலை எழுதத்துணிந்தேன்.

மனிதனை நிழல் தொடர்வது போல ஒரு இனத்தின் பாரம்பரியமும் தொடர்ந்து அறியபடல் வேண்டும்; பேணப்படல் வேண்டும். பாரம்பரியத்தை முற்றாக மறப்பின் அந்த இனமும் அழிந்து மறைந்து விடும் – என்று எனது சரித்திர ஆசிரியர் கல்லாறு வே. சாமித்தம்பி அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றும் ஞாபகத்திற்கு வந்தது, மேலும்; அன்பர் ஒருவர் எழுதிய - அப்பட்டின சபையால் வெளியிட்ட - சங்கானை எனும் நூலையும், ஆத்மசோதி முத்தையா அவர்களால் எழுதி வெளியிட்ட ஏழாலை என்ற நூலையும் வாசிக்க நேர்ந்ததும், மேலும் எனக்குத் தூண்டுதலாக அமைந்ததெனலாம்.

1920-ல் அரிவரி வகுப்பில் மணலில் கைவிரலாலும் தொடர்ந்து சிலேற்றில் பென்சிலாலும் நாம் எழுதிப்படித்ததும், எந்தந்தையர் காலத்தில் திண்ணைப் பாடசாலைகளில் ஏட்டில் எழுத்தாணியால் எழுதிப்படித்ததும், அக்காலப்பகுதியில் எமது விவசாயிகள் தோட்டங்களில் பயிரிட்ட தினை, சாமை, சிறுவள்ளி, காய்வள்ளி முதலிய உணவுப் பயிர்கள், கிணற்று இறைப்புக்குத் தேவையாயிருந்த பட்டை, ஈர்வாணிக் கொடி, பட்டைக் கயிறு என்பன சம்பந்தமாய் இன்றைய சிறுவர்க்குத் தெரியாது; இப்படியானவற்றை நூதனசாலையிலும் பார்க்க முடியாது. இவ்

வாறானவை இருந்தன; என்றாவது இக்கட்டுரையால் ஓரளவு அறிய முடியும். கோப்பாயிலிருந்த கோட்டை வரலாறும் சுருக்கமாகவுண்டு.

இந்நூலில் கோப்பாய் வடக்கு - கோப்பாய்க் கிராமம்- கோப்பாய்த் தொகுதி என்பனவற்றின் இடப்பரப்பு, குடியிருப்புகள் விவசாய உணவு வகை, கல்வி வசதி முதலியன பற்றி எனக்குத் தெரிந்த காலப்பகுதியிலிருந்து எழுதப்பட்டுள்ளது.

மேலும்; 1505லிருந்து அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இவை காரணமாக எமது கிராமத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் என்பன பற்றியும் 1990 மார்கழி வரை சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கோப்பாய் - என்று எழுதப்பட்டாலும் இது போன்ற பல கிராமங்கட்கும் இவை பொருந்தும்

1990-ல் யாழ் - வளாகத்தில் துணைவேந்தர் அ. துரைராசா அவர்கள் தலைமையில் பொ. மே. க. அன்பர்கள் விவசாய, நீர்ப்பாசன மற்றும் சகல துறைத் தலைவர்கள் வளாக விவசாய பீடத்தார் போன்றவர்கள் 150ற்கு மேற்பட்டோர் கூடிய முழு நாட்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட எட்டுக் கட்டுரைகளில் ஒன்றான, உப்பாற்றுத் திட்ட வரலாறு என்ற எனது கட்டுரையும்;

கோப்பாயிலுள்ள 7 கோயில்கள் 5 வாசிகசாலைகள் சமூக சேவா சங்கம், கோப்பாய்க்கு பெருமை தேடித் தந்த கோப்பாயைச் சேர்ந்த 6 பெரியார்கள் 5 வித்தியாசாலைகள், கோப்பாய்க் கிராமச் சங்கம் - இன்று பிரதேச சபை, கோப்பாய்த் தொகுதிக்கென ஆரம்பமான அரசினர் ஆஸ்பத்திரி, வலி - கிழக்குத் தொகுதிக்கான மணியகாரன் - காரியாதிகாரி - இன்று அரச செயலர் என்பனவற்றின் வரலாறுகளும் யான் பார்த்துக் கேட்டுத் தெரிந்து கொண்ட அளவில் எழுதப்பட்டுள்ளது.

வலி-கிழக்குத் தென்பகுதிக்கான உரும்பராய் கைத்தொழிற் சேவை நிலையம், அகில உலக இந்துமகா சபை (விஷ்வஹிந்து பரிஷத்) இலங்கைக் கிளையும் கோப்பாய்ப் பிரதேசக் குழுவும், இந்துப் பேரவை யாழ்ப்பாணம் - ஆரம்பமான வரலாறு, இவற்றுடன் - அனுப வார்த்தைகளை உதாசீனம் செய்யலாகாது - எனும் கட்டுரையும் உண்டு.

கோப்பாயில் முதலில் ஆரம்பமான ஐக்கிய நாணய சங்கம்; தொடர்ந்து ஐக்கிய பண்டகசாலை, 1944ல் யுத்த காலத் தேவை நோக்கித் தொடங்கிய பண்டக சாலைகளை அங்கத்துவமாகக் கொண்ட வலி கிழக்குப் பண்டகசாலைகளின் சமாசம் - இன்று வலிகிழக்குத் தென்பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். கோப்



பாய் விவசாய விருத்தி விளை பொருள் விற்பனவு ஐக்கிய சங்கம் இது போன்ற சகல சங்கங்களையும் உண்டாக்கி அவற்றை அங்கத்துவமாகக் கொண்டு பெருஞ் சேவையாற்றிய வட பகுதி விவசாய விருத்தி விற்பனைச் சங்கங்களின் கூட்டுறவுச் சமாசம், கோப்பாய் வடக்கு சிகறெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இவ்வாறான சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்டு சேவையாற்றிய யாழ் - சிகறெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்; பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கட்கும் வேண்டிய கடன் உதவி வழங்கிய யாழ் - கூட்டுறவு மாகாண வங்கி, குறித்த வகையான கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் மேற்பார்வை செய்து சீர் பெற நடக்க உதவிய வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை, மேலும் நூல் வெளியீட்டுச் சபையாக ஆரம்பித்து கூட்டுறவுச் சங்கமாகப் பரியப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சகல அச்சிடல் வேலைகட்கும் பேருதவி புரிந்து சீர் பெற நடந்த யாழ் - கூட்டுறவு அச்சகம் - என்பனவற்றின் வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. விசேடமாகக் கூட்டுறவுத் தொடர்புடையோர் 1925 அளவிலிருந்து வட பகுதிக் கூட்டுறவியக்கத்தைப் பற்றிப் பொதுவாக ஓரளவேனும் அறிய இதனால் வாய்ப்பேற்படும்.

மேலும் எழுதப்பட்டுள்ள ஆலயங்கள் பொதுஸ்தாபனங்கள் என்பவற்றின் தொடர் வரலாறுகள் கிராமப் பெயர்கள் காணிக் குறிச்சிப் பெயர்களின் தமிழ்க் கருத்துக்கள் இராணுவ அட்டூழியங்களால் எமது கிராமத்தில் ஏற்பட்ட தாக்கங்கள், சமகாலப் பெரியார்கள் கூட்டுறவுப் பெரியார்கள் என்பனவற்றையும் அடக்கியதான இரண்டாம் பாகம் வெளியிடும் ஆயத்தங்கள் உண்டு. அன்பர்கள் தரும் ஆதரவுதான் முக்கியமானது.

1995 ஐப்பசியில் அவசரமாக அகதிகளாக வெளியேறும் போது வீட்டுச் சென்ற கட்டுரைகள் யாவும் 16.5.96ல் திரும்பிய போது குண்டடியால் தகர்ந்த வீட்டு இடிபாட்டுக்குள் புதையுண்டும், மழையால் நனைந்தும் உக்கிக் கட்டியாகியும் கறையான் தின்றும் காணப்பட்டன. பெரும் பகுதி சீர்செய்ய முடியவில்லை கிடைத்ததை ஓரளவு புனரமைத்து இது வெளியாகிறது. வெளியீட்டுக்கெனத் தயாரித்த வரைபடங்கள், பெரியார்களின் புகைப்படப் பிரதிகள் மீளப் பெற முடியாத நிலையிலும் இவ்வளவிலாவது வெளியிடவைத்தமைக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. இ. குமாரசாமி

# அறிமுகவுரை

நூலாசிரியர் திரு. இளையதம்பி குமாரசாமி அவர்களால் எழுதப்பட்ட 'கோப்பாய் வரலாறு' என்ற நூலுக்கு அறிமுகவுரை ஒன்றினை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் என்ற வகையில் வரலாறு தொடர்பாக எழுதப்பட்ட நூலிற்கு இத்தகைய அறிமுகவுரை எழுதுவது பொருத்தமானது என்றும் எண்ணுகின்றேன். இது தொடர்பாக நூல் ஆசிரியரின் நெருங்கிய நண்பர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் என்னைச் சந்தித்து அவர் சார்பில் அத்தகையதொரு விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

கோப்பாய்ப் பாராளுமன்றத் தொகுதியின் வரலாறு மற்றும் தொடர்பான விபரங்களையும் குறிப்பாகக் கோப்பாய்க் கிராமத்தின் படிமுறை வளர்ச்சி பற்றிய பல சுவையான தகவல்களையும் இந்நூல் எமக்குத் தருகின்றது. இந்நூலில் ஆசிரியர் தான் நேசித்த கோப்பாய்க் கிராமத்தை எம் மனக்கண் முன் கொண்டு வந்து காட்டியிருக்கின்றார். அதன் வளர்ச்சியில் அவர் ஒரு பங்காளராக இருந்து அவை பற்றிய பல தகவல்களை அவர் உருவாகிய சூழ்நிலைக்கண் கொண்டு படம்பிடித்துள்ளார். கோப்பாய்ப் பிரதேசத்தின் ஆரம்பகாலநிலைமை, அதன் வளர்ச்சி, அதன் சீர்குலைவு, புனரமைப்பு, அதன் நிறுவனங்கள், சமூகசேவை அமைப்புக்கள், பெரியார்கள் தொடர்பான பல தகவல்களைப் பிற்கால சந்ததியினருக்குத் தந்திருக்கின்றார்.

தமது நூலில் அவர் தெரிவித்த பல தகவல்கள் வருங்கால சந்ததியினரால் அறியப்பட வேண்டியவையாகும், பல இன்னல்களின் மத்தியில் தம் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு



அப்பகுதி வாழ் மக்கள் ஆற்றிய தொண்டுகள், அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள், எவ்வாறு அவற்றை வெற்றி கண்டனர்? போன்ற பல விடயங்களை அவர் தமது நூலில் குறிப்பிடுகின்றார். அவை வருங்காலச் சந்ததியினருக்குப் படிப்பினையாக இருக்கப் பயன்படுவனவாகும்.

அகவை 85 ஐ அடைந்த நிலையில் எம்மிடையே வாழ்ந்து வரும் அவர் தனது அனுபவங்களை, தமது வாழ்க்கை முறையினை இந்நூலில் சிறப்புறச் சித்திரித்துள்ளார். நாற்பது வருட காலத்தை ஆசிரியர் பணியிலும், சுமார் அறுபத்தெட்டு வருட காலத்தைச் சமூக சேவையிலும் செலவிட்ட பெருமகனின் அநுபவங்கள் எம் அனைவருக்கும் படிப்பினை தரத் தக்கவையாகும். இத்தகைய அநுபவம் கிடைப்பது ஒருவருக்கு எளிதன்று. இத்தள்ளாத வயதில் இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபட்ட அவருக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள்,

இந்நூல் கோப்பாய் வரலாற்றுடன் பலதரப்பட்ட விடயங்களையும் பேசுகின்றது. சுமார் ஒரு நூற்றாண்டு கால யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றை, வளர்ச்சியை அதன் வேதனைகள் அவலங்கள், பலம், பலவீனம், அனைத்தையும் எடுத்துக் காட்டும் வகையில் 'மாதிரி வடிவமாக' உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஆங்காங்கே யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமங்களின் வரலாறு பற்றிய குறிப்பிடத்தக்க நூல்கள் வெளிவந்துள்ளன, அந்த வகையில் கோப்பாய் வரலாறும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

கால ஓட்டத்திலே இங்கு நிகழ்ந்த நிகழ்வுகள் கரைந்து போகாமல் இருக்க அவரது இந்த நூல் பெரிதும் உதவுகின்றது. ஐரோப்பியர் ஆட்சியிலிருந்து ஆரம்பித்துத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைக் குறிப்பிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்தமை ஈறாகப் பலவேறு தரப்பட்ட நிகழ்வுகளை. பாதிப்புக்களை, துன்பங்களை ஆசிரியர் நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்பிரதேசத்தின் பொருளாதார மேம்பாடு, அதற்கான வாய்ப்புக்கள், மூலவளங்கள், விவசாய, கிராமிய உற்பத்திகள், சமூக வழக்காறுகள் எனப் பல விடயங்களை நூலாசிரியர் இங்கு காட்டியுள்ளார். ஆங்காங்கே நூலாசிரியர் தலைகாட்டி தனது அநுபவங்களை, அறிவுரைகளை, ஏக்கத்தை. வேதனைகளை எமக்கு அறிவுறுத்தி இருப்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது.

ஆசிரியர் தனது பலதரப்பட்ட அநுபவங்களைப் பல தலைப்புக்களிலே - அரசியல் மாற்றங்கள், கோவில்கள், பெரி

யார்கள், வாசிகசாலை, ஆஸ்பத்திரி, வித்தியாசாலைகள் விஷ்வ ஹிந்து பரிஷத் - குறிப்பிட்டுள்ளார். ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை எவ்வாறு திட்டமிட்டு வளர்த்துச் செல்லலாம் என்பதற்கான வழி முறைகளை எதிர் கால இளைஞர் சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் நோக்கு அங்கு மறைந்திருப்பதைக் காண முடிகின்றது. தனியே கோப்பாய்க் கிராமம் மட்டுமல்ல யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல கிராமங்களிலும் இதே தன்மைப்பட்ட நடவடிக்கைகள் இடம் பெற்று வந்தமையை எம்மால் அறிய முடிகின்றது. அவ்வாறு சேவை செய்தவர்கள் மறக்கப்பட முடியாதவர்கள் என்பதனை ஆசிரியரின் இந்த முயற்சி நிரூபிக்கின்றது.

அவரது எழுத்துக்கள் அனைத்திலும் கோப்பாய் கிராமத்தை அவர் எவ்வளவிற்கு நேசித்தார்? அதன் வளர்ச்சியில் எந்தளவுக்கு ஈடுபாட்டைக் காட்டினார்? மற்றவர்களுடன் இணைந்து எவ்வாறு காரியங்களைச் சாதித்தார் என்பவை எல்லாம் வெளிப்படுகின்றன. ஆசிரியராக, அதிபராக, நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவராக, தொழிற் சங்கவாதியாக, சமூக சேவையாளனாக, சமயப்பணியாளனாகக் கூட்டுறவாளராகப்பல பரிமாணங்களை, நீண்டகால அநுபவத்தைக்கொண்டிருந்தமை சமகால நிகழ்வுகளை நன்கு விளங்கிக்கொள்ளவும், புரிந்துணர்வுடன், செயற்படவும் அவருக்குப் பக்குவத்தைக் கொடுத்திருந்தமை நூலில் பல பகுதிகளிலும் வெளிப்படையாகவே தெரிகின்றது.

இந்த வயதிலே தனது அநுபவ முத்திரைகளைப்பதித்து உருவாக்கிய அவரது பணி பாராட்டுதற்குரியது. அவர் பெற்ற பல் பரிமாணங்கள் நூல் சிறப்புப் பெற உதவியுள்ளன. நூல் ஒழுங்கமைப்பில் குறைபாடுகள் காணப்படினும் அவரது முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் வரலாற்றாசிரியர் என்ற வகையில் இந்நூல் பல முக்கியமான வரலாற்றுத்தகவல்களை. சமூக வழக்காறுகளை, சமூக விழுமியங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு ஆவணப்படுத்தியுள்ளது என்று கூறமுடியும். அத்துடன் வசனங்களுக்கிடையேயும் ஆய்ந்துணர வேண்டிய பல விடயங்களையும் கொண்டுள்ளமை அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

நூலின் பிற்பகுதி யாழ்ப்பாண மாவட்டத்தின் கூட்டுறவு இயக்கம் பற்றிய பெறுமதி மிக்க தகவல்களைத் தருகின்றது இங்கே கோப்பாய் பிரதேசத்தின் கூட்டுறவு இயக்கங்களின் வரலாறு, செயற்பாடுகள், அரசியல் கலப்பற்ற அமைப்பாகச் சிறப்புடன் பணி செய்தமை போன்றன விபரமாகத்தரப்பட்டுள்



ளன. பல்வேறு கூட்டுறவுச்சங்கங்கள் இணைக்கப்பட்டு சமாசங்கள் இயங்கியமை, அவற்றின் திறம்பட்ட செயற்பாடுகள், அவற்றில் அங்கத்துவம் பெற்ற பிரமுகர்கள் போன்ற விபரங்கள் தரப்பட்டுள்ளன. பிரதானமாகக் கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம். ஐக்கிய பண்டசாலை வலிகிழக்குக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசம், விவசாய விருத்தி விளைபொருள் விற்பனவு ஐக்கிய சங்கம், வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனைக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கோப்பாய் வடக்கு சிகரெற்புகையிலை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம், யாழ் சிகரெற் புகையிலை உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம், யாழ் கூட்டுறவு மாகாண வங்கி போன்றவற்றின் செயற்பாடுகள், யாழ்ப்பாண மக்களுக்கு அவை ஆற்றிய சேவைகள், இலங்கை அரசாங்கம் இவற்றின் வளர்ச்சிக்கு தடையாக இருந்தமை, வடபகுதி விவசாயிகளின் முன்னேற்றத்தை விரும்பாமை - முக்கியமாக விதை உருளைக்கிழங்கு வழங்குவதில் தொடங்கி,திறம்படச் சேவையாற்றிய வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்திற்கு எவ்வித நஷ்டஈடுமின்றி மாக்பெட்டிற்கு வலோத்காரமாகத்தாரை வார்த்துக் கொடுத்தமை போன்ற பல தகவல்களை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுத்துறை வரலாற்றினை ஆய்வு செய்பவர்களுக்கு ஆசிரியர் தரும் தகவல்கள் பெறுமதிமிக்கவை கோப்பாய் பிரதேசத்தை மையப்படுத்தி எழுதியிருந்தாலும் அதனை மாதிரியாக வைத்தே ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கூட்டுறவு வரலாற்றினை அறிய முடிகின்றது.

கூட்டுறவு வரலாற்றின் ஊடே யாழ் மாவட்டத்தில் ஒரு நூற்றாண்டு காலம் விவசாயப் பொருளாதார வரலாற்றையும் ஆசிரியர் எமக்கு காட்டுகின்றார். மலையாளப்புகையிலை உற்பத்தி தடைப்பட்டதனைத் தொடர்ந்து பல்வேறு காசுப்பயிர்கள் யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திப் பொருளாக மாற்றமடைந்தமை, அம்முயற்சிகளில் கூட்டுறவாளர்களின் பங்கு, இலங்கை அரசாங்கம் வடபகுதி விவசாயிகளின் வளர்ச்சியை கண்டு பொறுக்காத நிலைமை, மறைமுக வழிகளில் அவர்கள் விவசாய உற்பத்தியை பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை பற்றிய விவரங்களைத் தமது நீண்டநாள் அனுபவம் வாயிலாக ஆசிரியர் இங்கே தந்திருக்கின்றார். அவ்வகையில் யாழ்ப்பாண விவசாயிகளைப் பொறுத்து இலங்கை அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை பல இடங்களில் வெளிப்படுத்துகின்றார்.

இந்நூல் கோப்பாய்ப் பிரதேசத்தின் கடந்த நூற்றாண்டு கால அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டம்சங்களை எடுத்துக்காட்டும் வகையிலே சிறப்பைப் பெறுகின்றது. சாத்தானின் கீதங்கள், விஷ்வ ஹிந்து பரிஷத், மதமாற்ற நடவடிக்கைகள், இந்திய இராணுவம் இலங்கை வருகை போன்றவை அவர் சமகால நிகழ்வுகளை எந்தளவு கவனமாக அவதானித்து வருகின்றார் என்பதற்குச் சான்று பகர்வன.

இந்த வயதிலும் இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்ட ஆசிரியர் சுகதேகியாக நீண்ட ஆயுளுடனும் நலமுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ச. சத்தியசீலன், எம். ஏ.
தலைவர், வரலாற்றுத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
09. 01. 1998.

# சிறப்புரை

"பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே"

என்று தாய்நாட்டின் மகத்துவத்தினை வாயார மனங்குளிரப் பாடி மகிழ்ந்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே".

என்று பெருமிதம் கொண்டதும் நியாயமானதே என்னும் உணர்வு கோப்பாயின் அரும்பெறற் புதல்வரும் முதுபெரும் ஆசானுமாகிய குமாரசாமி அவர்களின் "கோப்பாய் வரலாறுகள்" என்ற நூலை வாசித்த பொழுது எனக்கு உண்டாயிற்று. ஆயிரம் பிறைகள் கண்ட அப்பெரியார் தம்முடைய அறிவு அநுபவங்கள் யாவற்றையும் திரட்டிக் கோப்பாய் கிராமத்தின் பழம் பெருமைகளை இந்நூல் வாயிலாக எமக்கு வழங்கியுள்ளமை காலத்தினாற் செய்த பேருதவியாகும்.

கோப்பாயின் புவியியல் சார்ந்த செய்திகள், தொழில்கள் கோப்பாய்க்கு பெருமையும் புகழும் சேர்த்த பெரியார்கள், இங்குள்ள ஆலயங்கள், சமயங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், கிராம சங்கங்கள், அரசு நிறுவனங்கள், வாசகசாலைகள், சமூக சேவைகள், அரசியல் மாற்றங்கள், கல்வி நிறுவனங்கள் என்று சகல அம்சங்களையும் ஆதார பூர்வமாக நுணுக்க விபரங்களோடு தந்திருக்கும் பாங்கு மிகுதியும் பாராட்டுவதற்குரியதாகும்.

நாம் வாழ்ந்து வரும் இக்காலம் நெருக்கடிகள் பல நிறைந்தது: என்பதை யாவரும் அறிவர். நவீனத்துவம் (Modernity) என்ற மாயமானை அடைவதற்காய் ஒவ்வொருவரும் அதன் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம். புதுப்புது விஞ்ஞான கண்டு

பிடிப்புக்கள் எமது தேவைகளைப் பெருக்கி அவற்றை அடைய வேண்டும் என்ற பேரவாவினை எம் நெஞ்சங்களிலே பெருநெருப்பாய் மூட்டிவிட அதனை அணைத்துவிட முடியாது திண்டாடுகின்றோம்; நாடு விட்டு நாடு சென்றும், பலவித நெருக்கடிகளை வலிந்து பெற்றும் அல்லற்படுகின்றோம். எங்களின் மனங்கள் அடங்காமல், அமைதி காணாது தவிக்கின்றோம்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும்பாடுபட்டு வயல்களிலும் தோட்டங்களிலும் உழைத்தவர்கள் நம்முன்னோர்கள் ''போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து'' என்ற நிறைவோடு வாழ்ந்தமையால் அவர்களின் வாழ்வில் அமைதி குடிகொண்டிருந்தது. தன்னிறைவோடு கூடிய பொருளாதாரத்தினைக் கடைப்பிடித்து உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் ஆக்கிக் கொண்டதால், போட்டி பொறாமை, புகைச்சலின்றி அவர்கள் வாழ்ந்தார்கள்; கல்வியில் உயர்ந்தார்கள், சமூகத்தின் நல்வாழ்விற்குத் தொண்டாற்றினார்கள். கடவுள் நம்பிக்கையும், சமயாசாரங்களும், ஆன்மீக எழுச்சியும் அவர்களை நல்லவர்களாயும் வல்லவர்களாயும் வாழ வைத்தன

இவ்வுண்மைகளை ஒரு பானை சோற்றுக்கு ஓர் அவிழ் பதமாகக் கோப்பாய்க் கிராமத்தினை மூன்னுதாரமாகக் கொண்டு மூதறிஞர் குமாரசாமி அவர்கள் விவரித்துள்ளமை உள்ளத்தினை ஈர்ப்பதாய் உள்ளது. சென்ற காலத்தின் சிறப்புகளை அறிவுறுத்துவதன் மூலம் நிகழ்காலச் சிறுமைகளைக் களைந்து எதிர்காலத்தை நன்கு அமைக்க எமக்கு உந்துதலையும் ஊக்கத்தையும் எழுச்சியையும் ''கோப்பாய் வரலாறுகள்'' என்ற நூல் வழங்குகின்றது என்று தயங்காது கூறலாம்.

கோப்பாய் கிராமத்தின் பிரதேச மணங்கமழும் பேச்சுவழக்குச் சொற்கள் மொழியியல் ஆய்வாளருக்குப் பயன்தரவல்லன, மக்களின் வாழ்வமிசங்கள் சமூகவியல் ஆய்வாளரின் ஆய்வுகளுக்கு உரம் அளிப்பன, எளிமையான நடை எழுத்தாளருக்கு வழிகாட்டத்தக்கது பண்பாடு சார்ந்த செய்திகள் பண்பாட்டாளர்களின் விழிகளைத் திறக்குந்தகையன.

இவ்வாறு பலருக்கும் பலவாறு பயன்தரத்தக்க ''கோப்பாய் வரலாறுகள்'' என்ற நூலினை வழங்கிய பெரியாருக்கு வாழ்த்துரைக்க எனக்கு வயது போதாது. எனவே அவரைப் பாராட்டி வணங்கி மகிழ்கின்றேன்.

லயன் வைத்தியகலாநிதி வை. தியாகராசா

# சிறப்புரை

''பெற்ற தாயும் பிறந்த பொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே''

என்று தாய்நாட்டின் மகத்துவத்தினை வாயார மனங்குளிரப் பாடி மகிழ்ந்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்,

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே''.

என்று பெருமிதம் கொண்டதும் நியாயமானதே என்னும் உணர்வு கோப்பாயின் அரும்பெறற் புதல்வரும் முதுபெரும் ஆசானுமாகிய குமாரசாமி அவர்களின் ''கோப்பாய் வரலாறுகள்'' என்ற நூலை வாசித்த பொழுது எனக்கு உண்டாயிற்று. ஆயிரம் பிறைகள் கண்ட அப்பெரியார் தம்முடைய அறிவு அநுபவங்கள் யாவற்றையும் திரட்டிக் கோப்பாய் கிராமத்தின் பழம் பெருமைகளை இந்நூல் வாயிலாக எமக்கு வழங்கியுள்ளமை காலத்தினாற் செய்த பேருதவியாகும்.

கோப்பாயின் புவியியல் சார்ந்த செய்திகள், தொழில்கள் கோப்பாய்க்கு பெருமையும் புகழும் சேர்த்த பெரியார்கள், இங்குள்ள ஆலயங்கள், சமயங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், கிராம சங்கங்கள், அரசு நிறுவனங்கள், வாசகசாலைகள், சமூக சேவைகள், அரசியல் மாற்றங்கள், கல்வி நிறுவனங்கள் என்று சகல அம்சங்களையும் ஆதார பூர்வமாக நுணுக்க விபரங்களோடு தந்திருக்கும் பாங்கு மிகுதியும் பாராட்டுவதற்குரியதாகும்.

நாம் வாழ்ந்து வரும் இக்காலம் நெருக்கடிகள் பல நிறைந்தது: என்பதை யாவரும் அறிவர். நவீனத்துவம் (Modernity) என்ற மாயமானை அடைவதற்காய் ஒவ்வொருவரும் அதன் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறோம். புதுப்புது விஞ்ஞான கண்டு

பிடிப்புக்கள் எமது தேவைகளைப் பெருக்கி அவற்றை அடைய வேண்டும் என்ற பேரவாவினை எம் நெஞ்சங்களிலே பெரு நெருப்பாய் மூட்டிவிட அதனை அணைத்துவிட முடியாது இன்று டாடுகின்றோம்; நாடு விட்டு நாடு சென்றும், பலவித நெருக் கடிகளை வலிந்து பெற்றும் அல்லற்படுகின்றோம். எங்களின் மனங்கள் அடங்காமல், அமைதி காணாது தவிக்கின்றோம்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும்பாடுபட்டு வயல் களிலும் தோட்டங்களிலும் உழைத்தவர்கள் நம்முன்னோர்கள் ''போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து'' என்ற நிறை வோடு வாழ்ந்தமையால் அவர்களின் வாழ்வில் அமைதி குடி கொண்டிருந்தது. தன்னிறைவோடு கூடிய பொருளாதாரத் தினைக் கடைப்பிடித்து உணவு, உடை, உறையுள் ஆகிய மூன் றையும் ஆக்கிக் கொண்டதால், போட்டி பொறாமை, பூசல் சலின்றி அவர்கள் வாழ்ந்தார்கள்; கல்வியில் உயர்ந்தார்கள், சமூகத்தின் நல்வாழ்விற்குத் தொண்டாற்றினார்கள், கடவுள் நம்பிக்கையும், சமய சாரங்களும், ஆன்மீக எழுச்சியும் அவர் களை நல்லவர்களாயும் வல்லவர்களாயும் வாழ வைத்தன

இவ்வுண்மைகளை ஒரு பானை சோற்றுக்கு ஓர் அவிழ் பதமாகக் கோப்பாய்க் கிராமத்தினை முன்னுதாரமாகக் கொண்டு மூதறிஞர் குமாரசாமி அவர்கள் விவரித்துள்ளமை உள்ளத் தினை ஈர்ப்பதாய் உள்ளது. சென்ற காலத்தின் சிறப்புகளை அறிவுறுத்துவதன் மூலம் நிகழ்காலச் சிறுமைகளைக் களைந்து எதிர்காலத்தை நன்கு அமைக்க எமக்கு உந்துதலையும் ஊக்கத் தையும் எழுச்சியையும் ''கோப்பாய் வரலாறுகள்'' என்ற நூல் வழங்குகின்றது என்று தயங்காது கூறலாம்.

கோப்பாய் கிராமத்தின் பிரதேச மணங்கமழும் பேச்சு வழக்குச் சொற்கள் மொழியியல் ஆய்வாளருக்குப் பயன்தரவல் லன, மக்களின் வாழ்வமிசங்கள் சமூகவியல் ஆய்வாளரின் ஆய்வு களுக்கு உரம் அளிப்பன, எளிமையான நடை எழுத்தாளருக்கு வழிகாட்டத்தக்கது பண்பாடு சார்ந்த செய்திகள் பண்பாட்டா ளர்களின் விழிகளைத் திறக்குந்தகையன.

இவ்வாறு பலருக்கும் பலவாறு பயன்தரத்தக்க 'கோப்பாய் வரலாறுகள்'' என்ற நூலினை வழங்கிய பெரியாருக்கு வாழ்த்துரைக்க எனக்கு வயது போதாது. எனவே அவரைப் பாராட்டி வணங்கி மகிழ்கின்றேன்.

லயன் வைத்தியகலாநிதி வை. தியாகராசா



கோப்பாய் கிராமச்சங்கம் – இன்று அபிவிருத்திச்சபை நிர்வாகச்செயலாளர் திரு. குகதாசன் தற்போது உதவி அர சாங்க அதிபர் தமது கைவசமிருந்த கோர்வைகள், கூட்ட வர லாறுகள், புத்தகங்கள் தந்துதவினார். நாவற்குழி வாசிகசாலை யிலிருந்து அதன் மேற்பார்வையாளர் சி. தேவராசா அவர்களு தவியுடன் ஆய்வு நூல்கள், யாழ் - வளாக வெளியீடுகள் என்ப வற்றிலிருந்து பெறப்பட்ட குறிப்புகளே 'இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள்' எழுதப் பெரிதும் உதவின. மேலும் வேண் டிய இடங்கட்கு என்னோடு பல நாட்கள் உடன் வந்து அன்பர் சி. நவரத்தினம் வைத்தியர் அவர்கள் பெரிதும் ஊக்கினார். கூட்டுறவு எனும் பகுதியில் யான் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியே எழுதப்பட்டுள்ளன. வலி - கிழக்கு ப. நோ. கூ. சங்கம் தொடர்பாய் கணக்காளர் செ. தெய்வேந் திரம், காரியதரிசி க. இராசசேகரம் இருவரும் யான் கேட்டன தொடர்பான குறிப்புக்கள் உடனுக்குடன் தந்து பெரிதும் உத வினர் யாழ் - கூட்டுறவு மேற்பார்வைச்சபைக் காரியாலய நூலகத்திலிருந்து, வேண்டிய நூல்களை எடுத்துத் தந்தும்; எனது தேவைக்கு உதவக்கூடிய விரிவுரையாளர்களை அறிமுகப் படுத்தியும் ஆவனசெய்த, கூட்டுறவுப்பயிற்சிக்கலாசாலை விரிவு ரையாளர் து. பிரபாகரன் B, Sc. அவர் செய்த உதவிக்குப் பெரிது கடப்பாடுடையேன்.

மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாய் யான் எழுதிய கட்டுரைகளை பலநாட்கள் உடனிருந்து வாசித்து வேண் டிய திருத்தங்கள், புகுத்தல்கள் செய்து பேருதவி புரிந்த, கூட் டுறவு உயர்தர பயிற்சிக் கலாசாலை அதிபரும், எனது அன்பரு மாகிய ந. குமரேசபசுபதி செய்த உதவிகள் இக்கட்டுரைகளை மேலும் சிறப்படையச் செய்தன எனலாம்.

நமது கிராமத்தில் பல சமய சமூகப் பணிகளில் பெருந் தொண்டாற்றி வேண்டிய இடங்களில் அன்பளிப்புகளும் உதவி, கிராமத்தின் நன்மதிப்புக்குரிய முதற்பிரசையாக விளங்கும் வைத் திய கலாநிதி லயன்ஸ் வை. தியாகராசா அவர்கள் அணிந்துரை அளித்தமைக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

பல பண்டிதர்களையும் பண்பாளர்களையும் உருவாக்கித் தந்த வேலணையைத் தாயகமாகக் கொண்டவரும், பேராதனை சர்வகலாசாலையில் வரலாற்றுத் துறையில் சிறப்பு மாணவனாகத் திகழ்ந்து பட்டம் பெற்றவரும், சிந்தனை சஞ்சிகைகள் மூலம் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டும் இலங்கை அரசியலும் மதமும், நாகரிகங்கட்கோர் அறிமுகம் எனப் பலஆய்வு நூல் எழுதி

யும் அறிஞர் உலகால் பாராட்டப் பெற்றவரும், யாழ் பல்கலைக் கழகத்தின் 25 வருடங்களுக்கு மேல் ஆசிரிய அனுபவமுடைய வரும், பல சமய சமூகப் பணிகளில் தொண்டாற்றி வருபவரு மாகிய, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் சு. சத்தியசீலன், எம். ஏ. அவர்கள் இந்நூலை நன்கு பரிசீலித்து ஆய்வுரை வழங்கியமைக்கும் யாழ் கூட்டுறவுச் சபையின் தலை வராக இன்று சேவையாற்றும் பெ. கனகசபாபதி அவர்கள் நீண்ட காலம் கூட்டுறவியக்கத்தோடு தொடர்புடையர். மேலும் தமது கிராமத்தில் பல சமய சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு சேவையாற்றி வருகின்றார். நல்லூர் பல நோக்குச் சங்கத்தின் தலைவராக 0 02.97-ல் மீண்டும் தெரிவு செய்யப் பெற்றுத் தொண்டாற்றுகிறார். இன்றைய சிறந்த ஓர் கூட்டுற வாளரிடமிருந்து அணிந்துரை பெற்றமை பற்றி பெரிதும் மகிழ் வடைகின்றேன்.

எனது கட்டுரைகளை நூலுருவாக்க என்னைத் தூண்டி, ஆலோசனை செய்து, திருத்தங்கள், புகுத்தல்கள் செய்ய வழி நடத் திச் சிறப்படையச் செய்தவரும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளராக பல நூல்களை வெளியிட்ட அனுபவமுடை யவருமாகிய பேரன்பர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர் கட்கும் பெரிதும் கடப்பாடுடையேன்.

அன்று தொட்டு இன்றுவரை தொண்டு மனப்பான்மை யுடன் சேவையாற்றி வருவதும் எனக்கு அண்மையிலுள்ளதும், புறாப் பார்ப்பதில் பெரிதும் உதவிய க. லோகநாதன் உள்ளிட்ட முல்லையச்சகத்தாருக்கும் விசேடமாக எமது கட்டுரைகளில் யானறிந்து கொள்ள முடியாத கீறும் குற்றுமிட்ட இடங்களைத் தேடிப்பூரணப்படுத்த உதவி மேநகடையச் செய்த முகாமையா ளர் க. மயில்வாகனன் அவர்கட்கும் பெரிதும் நன்றியுடையேன்.

வணக்கம்

க. இ. குமாரசாமி



# பொருளடக்கம்

## பாகம் I


| | பக்கம் |
|---|---|
| **வரலாறு** | |
| இடப்பரப்பும் நிலத்தன்மையும் | 01 |
| கோப்பாய்க் கோட்டை | 02 |
| மக்களும் குடியிருப்புக்களும் | 04 |
| மேட்டு நிலப்பயிர்ச் செய்கை | 06 |
| வயல் வேளாண்மை | 11 |
| குடியிருப்பு வீடுகள் | 13 |
| பொருளாதாரம் | 15 |
| இலங்கையில் அரசியல் மாற்றங்களும் கிராமத்தில் ஏற்பட்ட தாக்கங்களும் | 16 |
| உணவுவகை | 30 |
| வன்னிக்குடியேற்றம் | 31 |
| உணவுப் புரட்சி | 33 |
| பிள்ளைகட்குப் பெயரிடல் | 35 |
| நாட்டாசாரம் | 36 |
| தேசவழமைச்சட்டம் | 41 |
| இடப் பெயர்கள் | 43 |
| உப்பாற்றுத்திட்டம் | 45 |
| உவர் நிலநெற் செய்கை | 49 |
| **கோயில்கள்** | |
| வடகோவை சித்திர வேலாயுத சுவாமி கோயில் | 51 |
| பலானை கண்ணகையம்மன் கோயில் | 58 |
| வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் | 64 |
| வடகோவை சக்கிராழ்வார் ஆலயம் | 65 |
| வடகோவை செல்வவிநாயகர் ஆலயம் | 69 |
| மகிழடி வைரவர் கோயில் | 70 |
| அடைப்பந்தாளி வைரவர் கோயில் | 72 |
| **பெரியார்கள்** | |
| இருபாலைச் சேனாதிராய முதலியார் | 74 |
| வடகோவை வித்துவான் சபாபதிநாவலர் | 76 |
| வடகோவை வித்தகம் கந்தையாபிள்ளை | 80 |
| இந்துபோட் சு. இராசரத்தினம் அவர்கள் | 81 |

| | பக்கம் |
|---|---|
| சேர் கந்தையா வைத்தியநாதன் | 86 |
| குருமணி வே. சிதம்பரபிள்ளை | 90 |
| எஸ். ஆர். கனகசபை | 96 |

வாசிகசாலைகள்

| | |
|---|---|
| அம்பாள் ச. ச. நி, இலக்ஷிமி வாசிகசாலை | 99 |
| கந்தசாமி கோவிலடி வாசிகசாலை | 104 |
| வெள்ளெருவைப் பிள்ளையார் ச.ச.நி. வாசிகசாலை | 105 |
| சபாபதி நாவலர் வாசிகசாலை | 107 |
| வள்ளியம்மன் ச. ச. நி. வாசிகசாலை | 115 |
| கோப்பாய் வடக்கு பாலர் விருத்தியும் சமூக சேவா சங்கமும் | 108 |
| கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரி | 117 |
| சிவபூமி | 128 |
| வயோதிபர் அனுபவ வார்த்தைகளை – | 132 |
| ஸ்ரார் விளையாட்டுக்கழகம் | 137 |
| கோப்பாய் கிராமச்சங்கம், பிரதேசசபை | 141 |

வித்தியாசாலைகள்

| | |
|---|---|
| கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி | 149 |
| கோப்பாய் சாதனா பாடசாலை | 159 |
| கோப்பாய் ஆசிரிய கலாசாலை | 164 |
| சரவணபவானந்த வித்தியாசாலை | 174 |
| கோப்பாய் நாவலர் வித்தியாசாலை | 185 |
| கோப்பாய் அரச செயலகம் | 189 |
| உரும்பராய் கமத்தொழிற் சேவை நிலையம் | 201 |
| அ. உ. இந்து மாமன்றம் - கிளை | 206 |
| இந்து சமயப் பேரவை (ஆரம்பம்) | 212 |


# கோப்பாய் வரலாறு

## இடப்பரப்பும் நிலத்தன்மையும்

யாழ். மாவட்டம் வலி - கிழக்குப்பகுதி கோப்பாய் தெற்கு வேளாதோப்பு முதல் வளலாய் இறுதியாக சுமார் 42 ச மைல் விஸ்தீரணமுடையதாய் கோப்பாய், நீர்வேலி, புத்தூர் அச்சுவேலி என்ற நான்கு கிராமச் சங்க இடப்பரப்புக்களையும் உரும்பராய், ஊரெழு பட்டின சபையையும் கொண்டதாயுள்ளது. இன்றைய அரசியலமைப்பின்படி கோப்பாய் பாராளுமன்றத் தொகுதியாயுள்ளது.

இதில் கோப்பாய் கிராமச்சங்க இடப்பரப்பு கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, இருபாலை ஆகிய மூன்று விதானைமார் இடங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது (1994 இல்) கோப்பாய் வடக்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் தெற்கு, இருபாலை, கட்டப்பிராய், கல்வியங்காடு எனும் ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளாக விளப்பமான எல்லைகளையுடையதாய் பிரிக்கப்பட்டுள்ளது, சுமார் 12 ச. மைல் விஸ்தீரணமுடையது. குறித்த இடப்பரப்பில் யாழ் - பருத்தித்துறை பிரதான வீதி, நல்லூர் - அச்சுவேலி, இராச வீதி இரண்டும் வடக்குத் தெற்காகவும் கைதடி - மானிப்பாய் வீதி, இருபாலை - கோண்டாவில் வீதி என்பன கிழக்கு மேற்காகவும் ஊடறுத்துச் செல்கின்றன. இருபாலை ஐந்து சந்தியிலிருந்து பழந்தெரு பிரிந்து இருபாலையூடாக வடக்கு நோக்கி ஒரு மைல் தூரம் வரை சென்று நாவலர் பாடசாலையடியில் மீண்டும் பருத்தித்துறை வீதியை அடைகிறது. இராச வீதியிலிருந்து இன்னொரு வீதி பிரிந்து வடக்கு நோக்கி ஒரு மைல் தூரம் வரைசென்று இருபாலை கலாசாலை வீதியை அடைகிறது. குறித்த கோப்பாய் கிராமச்சங்க இடப்பரப்பின் கிழக்கு - உப்பாறு, வடக்கு - நீர்வேலி, மேற்கு – உரும்பராய், கோண்டாவில், தெற்கு - நல்லூர், திருநெல்வேலி எல்லைகட்கு இடைப்பட்டதாயுள்ளது.

இதில் கோப்பாய் வடக்கு, கைதடி - மானிப்பாய் வீதியை தெற்கு எல்லையாகக் கொண்டு தற்போதுள்ளது.

உப்பாற்றங்கரையிலிருந்து நிலம் படிப்படியாக உயர்ந்து இராச வீதிவரை செல்கிறது. உப்பாற்றினை அடுத்து களிமண் உவர் தரையும் யாழ் - பருத்தித்துறை வீதியையடுத்து இடையிடை மணல் தரையும் அப்பால் செம்மண்ணும் படிமுறையே கூடி நிலமும் உயர்ந்து இராச வீதிவரை சென்று அப்பால் பதிந்து செல்கிறது அதற்குத் தக நீரிலுள்ள உவர்த் தன்மையும் படிப்படியாகக் குறைந்து நன்னீர் காணப்படுகிறது. கிணறுகளும் கிழக்கே 8' - 12' யிலிருந்து படிப்படியாகக் கூடி இராச வீதியையடுத்து 25' - 30 அடி ஆழமுடையனவாகக் காணப்படுகின்றன.

1945 காலப் பகுதியில் இராச வீதியின் இருமருங்கிலும் இருந்த கல்லுக்கட்டிகளில் காணப்பட்ட வைரக்கற்பாறைகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டு கமத்திற்கு மிக வாய்ப்பான அசல் செம்மண் தோட்டங்களாக்கப்பட்டுள்ளன. யாழ். பருத்தித்துறை வீதியில் கிழக்குப் புறமாக குடியிருப்பு, தோட்ட நிலம், வயல், மேய்ச்சல் தரவை, சதுப்பு நிலம் என ஐவகை நிலங்கள் காணப்படுகின்றன. மேற்குறித்த குடியிருப்புப் பகுதியில் நாற்சந்தியிலிருந்து சுமார் 107 யார் வடபுறமாய் பழைய கோப்பாய்க் கோட்டையிருந்ததற்கான அறிகுறிகள் இன்றுமுண்டு.

## கோப்பாய்க் கோட்டை

ஈழவள நாட்டின் வடபகுதியிலிருந்த தமிழரசிற்கு நல்லூர் இராசதானியாகவிருந்தது. சிங்கைபுரம், நல்லைநகர், யாழ்நகர் என்ற பெயர்களும் காலத்துக்குகாலம் வழங்கப்பட்டன. தலைநகரில் பலமான கோட்டையிருந்தது, பாதுகாப்பிற்காக கோப்பாயிலும் வன்னிப் பிரதேசங்களிலும் கட்டப்பட்ட கோட்டைகளிருந்தன. கோ - அரசன் பாய் - இருப்பிடம் கோப்பாய் என்பது அரசன் இருப்பிடம் எனவும் நல்லூர் மந்திரி மனையருகே தூர்ந்து காணப்படும் சுரங்கப்பாதை இங்கிருந்து உப தலைநகரமான கோப்பாய்க்குச் செல்ல உதவியதாகவும் ஆபத்துக் காலங்களில் தலைநகரிலிருந்து அரசர் இதன் மூலம் தப்பிக் கோப்பாய்க்குச் சென்றதாகவும் யாழ்ப்பாண இராச்சியம் எனும் நூலில் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் அரசின் கூழைக்கைச் சக்கரவர்த்தி முதல் சங்கிலியன் செகராசசேகரன் இறுதியாக ஆட்சி செய்த விபரங்களை இலங்கைச் சரித்திரம் கூறுகின்றது. சிங்கள அரசினால் காலத்துக்குங் காலம் எடுத்த படையெழுச்சிகள் முறியடிக்கப்பட்டு தமிழரசு நிலைத்து நின்றது. 1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கீசர் தென்னிலங்கையில் கரைநாடுகளை வசப்படுத்தி ஆண்டபோதும் யாழ்ப்பாணத்தைக் கைப்



பற்ற எடுத்த படையெழுச்சிகள் பல தோற்கடிக்கப்பட்டன. மீண்டும் 1624 இல் புரட்டாதியில் காக்கைவன்னியன் என்பான் சூழ்ச்சியுடன் பறங்கிப் படை வழமைபோல் கொழும்புத்துறையில் இறங்காது பண்ணையில் இறங்கி நல்லூரை நோக்கி நகர்ந்தது. அன்று விஜயதசமி, ஆயுத பூசையில் தமது ஆயுதங்களை படையினர் வைத்து வழிபாடு செய்துகொண்டிருந்த நேரம். திடீரென நுழைந்த பறங்கிப் படைகளின் குண்டுமாரிக்கு எதிர்கொள்ள தமிழ் வீரர் ஆயத்தமான போது காக்கைவன்னியன் தோன்றிச் செய்த சூழ்ச்சியினால் சங்கிலியனை அகப்படுத்திச் சிறையிலிட்டனர். சங்கிலி சிறைக் கூடத்திலிருந்து சுரங்கப் பாதை வழியாக வெளியேறி தப்பி கோப்பாய்க் கோட்டைக்குப் பின்வாங்கினான். பறங்கியர் நல்லூர்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு கோப்பாய்க் கோட்டையை நோக்கி வந்தனர். பறங்கியர் வருகையை அறிந்த சங்கிலியன் இரவோடிரவாய் வன்னிக்கோட்டையை நோக்கிச் செல்லும் வழியில் காக்கைவன்னியன் உதவியுடன் பறங்கியர், ஆனையிறவுப் பூசந்தியில் வைத்துச் சங்கிலியனை இலேசாக அகப்படுத்தியதாகச் சரித்திரம் கூறுகின்றது.

பறங்கியர் நல்லூர்க் கோட்டையையிடித்துப் பண்ணையில் கோட்டை கட்டினர். கோப்பாய்க் கோட்டையையும் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கினர். குறித்த தரைமட்டமாக்கப்பட்ட கோட்டையின் மேற்குப் புறமாய் வீதியருகிலிருந்த நுழைவாயிலில் பழைய கோட்டை ( OLD CASTLE ) என்று எழுதப்பட்டிருந்த கட்டிடம் சில காலத்தின் முன்னரே இடித்தழிக்கப்பட்டது தெரியும். குறித்த கோட்டை வளவில் செங்கற்களாலான உறுதியான சுவர்களையுடைய விசாலமான பழைமையான வீடு ஒன்று இன்றுமுண்டு. தற்போது பல வீடுகள் கட்டப்பட்டுள்ளபோதும் சில இடங்களில் நிலத்தை அகழும் போது செங்கற் குவியல்கள் வெளிப்படுகின்றன குறித்த கோட்டையிருந்த இடத்திலுள்ள குடியிருப்பாளர் உறுதிகளிலும் கோட்டை வாய்க்காலும் பழைய கோட்டையும் என்றே எழுதப்பட்டிருப்பதுவும், அகழும் போது காணப்படும் செங்கற் குவியல்களும், நல்லூர்க் கோட்டைக்கு யமுனா ஏரி போல கோப்பாய்க் கோட்டைக்குக் குதியடிக்குளம் நீச்சல் தடாகமாக அமைந்திருந்ததும், குறித்த கோட்டை வளவிற்கு தெற்கு எல்லையில் செல்லும் கோட்டை வாய்க்காலும் கோப்பாய்க் கோட்டையை நினைவுபடுத்தும் சின்னங்களாக இன்றும் உள்ளன.

குறித்த குதியடிக்குளம் 1955 ஆம் ஆண்டளவில் கி. மு. ச. கோரிக்கையின் படி அரச செலவில் ஆழமாக்கப்பட்டு, குறித்த குளத்தைச் சுற்றியுள்ள அரைசாந்தால் கட்டப்பட்ட அகலமான

சுவர்கள் இடிக்கப்பட்டபோது தென்மேற்கு மூலையில் 6x2 அடி வரையுள்ள ஓர் குழி காணப்பட்டது. அதற்குள் சாம்பல்போன்ற உக்கிய அசேதனப் பொருள்கள் காணப்பட்டன. பண்டைய வழக்கப்படி தடாகம் பூரணமாக்கப்பட்ட வேளை கொடுக்கப்பட்ட நரபலியின் சேதனப் பொருட்களாகயிருக்கலாம் என்ற அபிப்பிராயம் பல அனுபவத்தகர்களினாலும் கூறப்பெற்றது.

## மக்களும் குடியிருப்புக்களும்

யாழ்ப்பாணத்தின் பூர்வீககுடிகள் நாகசாதியர் அவர்கள் நாகவழிபாடுடையவராயிருந்தனர். நாகதம்பிரான் நாகபூஷணி, நாகம்மாள் கோயில்கள் பலவும் அதற்கான சான்றுகளாயுள்ளன.

கோப்பாயிலும் நாகவழிபாட்டிற்கான சான்றுகள் இன்றுமுண்டு. கோப்பாய் வடக்கு கல்லொழுங்கை முடிவின் கிழக்குப் புறமாய் வயலோரத்தில் தாழை மரநிழலில் புராதனமான நாகதம்பிரான் வழிபாட்டிடமொன்றுண்டு. வயலில் விதைப்பு அரிவு வெட்டு சூடுமிதித்தல் ஆரம்பிக்கும்போது நாகதம்பிரானை வழிபடுவது எனக்கு நன்கு தெரியும். சுமார் 1800 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிதமான பலானை கண்ணகையம்மன் ஆலயம் நாக வழிபாடு நடந்த கூழா அருகிலே ஸ்தாபிதமானது. கூழா வடியில் இன்றும் புராதன வழக்கத்தையொட்டி நாகவழிபாடுகளும் நடைபெறுகின்றன. கூழாவிலாச்சி என்று நேர்த்தி செய்வது இன்றும் வழக்கத்திலுண்டு.

அண்மையில் குளம் ஆழமாக்கும் வேலைகள் நடந்தபோது பழைய செங்கல்தளம் காணப்பட்ட நாச்சிமார் கோயிலடி குளமும் ஆராய்ந்தறிய வேண்டிய தொன்றாகும்.

தென்னிந்தியாவிலிருந்து தமிழர் அண்மையிடங்களிலுள்ள அந்தமான் நிக்கோபார் பீஜி தீவுகளில் குடியேறியது போன்று மிக அண்மையிலுள்ள இலங்கையின் வடபாகத்திலும் வந்து குடியேறினர். மேலும் கவிவீரராகவன் பரிசிலாகப் பெற்ற மணற்றி எனும் இந்த மணல் மேட்டில் அவனோடு வந்து பலரும் குடியேறியதாகச் சரித்திரமுண்டு. இவ்வாறு வந்தவர்கள் தாமிருந்து வந்த திருநெல்வேலி, நல்லூர் போன்ற ஊர்பெயர்களையே குடியேறிய இந்த இடங்கட்கும் சூட்டினார். ஆதியிலிருந்த நாகரும் பின்னர் தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் வந்த தமிழரும் கலந்ததே இன்றைய யாழ் - தமிழர் எனல் மிகையாகாது.

தென்னிந்தியாவிலிருந்து தமிழர் குடியேறியுள்ள இடங்களில் சிவ வழிபாடுகளும், தொடர்ந்து விநாயகர், முருகன்,



அம்பாள், வைரவர் முதலிய வழிபாடுகளும் இந்த வகையாகவே இங்கு வந்திருக்க வேண்டும். பழைய ஆலயங்கள் சிலவற்றின் உருமாறிய போதிலும் நாகதம்பிரான் நாகபூஷணி நாகம்மாள் ஆலயங்களாக பெயர் மாறாது இன்றும் பழமையை நினைவூட்டுகின்றன. பெயர் மாறிய போதும் இன்றும் முன்னைய வழமையை யொட்டி பங்குனித் திங்கள் தோறும் பூசைவழிபாடுகள் நடைபெறுகின்றன.

கிணறுகள் தோண்டுவதற்குரிய நவீன சாதனங்களில்லாத அக்காலத்தில் மனித வலுவைப் பெரிதும் பயன்படுத்தியே தோண்டப்பட்டதான பழைய கிணறுகளை இன்றும் காணக்கூடியதாயுள்ளது. இவ்வாறு தோண்டப்பட்ட கிணறுகளின் உட்புறச் சுவர்கள் அழுத்தமில்லாது கரடுமுரடாயும் மண்கண்டத்தில் கட்டப்பட்ட மேற்சுவர்கள் அரைச்சாந்து கொண்டு கண்டகற்களால் கட்டப்பட்டதாயும் உள்ளதனையும் இன்றும் அவதானிக்கக்கூடியதாயுள்ளது. மக்கள் நன்னீருள்ள செம்மண் தரையான மேட்டுப்பிரதேசங்களிலேயே பெரும்பாலும் குடியிருந்தனர் இந்த வகையில் கோப்பாய் வடக்கில் இலகடி, கம்பாவத்தை மாக்கம்பரை, சணவதியம்புலம். அப்பிலானை முதலான கிணறுகள் உருமாறாது இன்றுமிருப்பதனையும். தோட்டக் கிணறுகளான உண்ணாப்புலம், நொங்கியவத்தை, குயவன்புலம், தலம்பத்தை, அம்பியவலைக் கிணறுகளும் இவ்வாறே அமைந்துள்ளதனையும் இன்றும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

குடியிருப்புக் கிணறுகளைச் சுற்றியே மக்கள் சமூகரீதியாக கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். வளவுகளுக்குள் மா, பலா வாழை, தென்னை முதலிய பழம் தரு மரங்களும் சுற்றவரவுள்ள இடங்களில் பனை, வேம்பு, இலுப்பை. புளி என்பனவும் காணப்பட்டன. வெளியான நன்செய்நிலங்களில் வரகு, குறத்தசாமை எள் போன்ற சிறுதானியப் பயிர்களும் மானாவாரியாகச் செய்தனர். தோட்டங்களில் பொதுவாக துலா பட்டைக்கொடி கொண்டு இறைத்து சிறுதானியப் பயிர்களைச் செய்து தமது உணவுத் தேவையைப்பூர்த்தி செய்தனர். இவ்வாறு தோட்டங்களில் செய்வது கமம் என்றும் மழையை நம்பி மானாவாரியாகவும், வாய்ப்பான இடங்களில் அருகேயுள்ள குளங்களிலிருந்து எற்றுப்பட்டைகள் மூலம் நீர்ப்பாய்ச்சியும் வயல் நிலங்களில் நெல் செய்வது வேளாண்மை என்றும் கூறப்பட்டு அதற்கேற்றவாறு அவர்களை கமக்காரர், வேளாளர் என்றழைப்பதும் நமதூர் வழக்கத்திலிருந்து வந்துள்ளது. கிழக்கேயுள்ள வயல்களில் வேளாண்மை செய்வோர் குடியிருப்புக்களாக மேற்கிலுள்ள மேட்டு நிலங்களேயிருந்தன வயல் உறுதிகளில் நெற்பரப்பு என்றும் மேட்டு நிலத்துக்குரிய கம உறுதிகளில் வரகுப்

பரப்பு என்றும் மேலும் அவற்றின் அளவுகள் முறையே பரப்பிற்கு 12 குழிகள் 18 குழிகள் என்றும் கணக்கிடுவதும் இன்று வரையும் இருந்து வருகிறது.

விவசாயத்திற்கும் மற்றும் குடியிருப்புக்களுக்கும் தேவையான உபதொழில்களைச் செய்வோர் தொழிலுக்கு அமைவாகவும் தங்கள் தொழில் பாதுகாப்புக் கருதியும் கூட்டம் கூட்டமாகவே வசிப்பிடங்களை அமைத்து வாழ்ந்த நிலைமை தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கிறது. இக் கூட்டத்தார் ஏனையோருடன் சேர்ந்து பொதுவாகவுள்ள ஆலயங்கட்குச் சென்று வழிபடுவதனோடு, சிறப்பாகத் தங்கள் பாரம்பரிய குல தெய்வங்கட்குக் கோயில்களமைத்து வழிபாடு செய்தும் வருகின்றனர். மர, இரும்புத் தொழிலாளர் காளிதேவியையும், பனை, தென்னந் தொழிலாளர் அண்ணமார், பேச்சியம்மனையும், சலவைத் தொழிலாளர் பெரியதம்பிரானையும், வைரவரையும், பொற்கொல்லர் நாச்சிமாரையும், மற்ற தொழிலாளர்களும் தங்கள் இருப்பிடங்களின் மத்தியில் தத்தம் குல தெய்வங்கட்குக் கோயில்களமைத்து வழிபாடு செய்துவருவது இன்று வரை நீடிக்கிறது.

## மேட்டுநிலக் கமச்செய்கை

நமது கிராமத்தில் இராச வீதியருகில் 1925 ஆம் ஆண்டு அளவில் ஓர் நடுத்தர விவசாயியை எடுத்துக் கொண்டால் 25-30 அடிகள் ஆழமான கிணறுகளுடைய மேட்டுத் தோட்ட நிலத்தில் 1500 – 2000 கன்று வரை தோட்டஞ் செய்பவர்களாகக் காணப்பட்டனர். இதில் 500-1000 கன்று வாழையும் மிகுதி தோட்டப் பயிர்களாயுமிருந்தன.

வாழை செய்வோர் விற்பனைக்காக கூடியளவு கதலியடிகளே நட்டனர். சுயதேவைக்காக தரையினடிப்பகுதியில் கிணற்றடியில் 2 – 3 இதரையடி, கரையோரங்களில் வேடையைத் தாங்கவல்ல 4 - 5 மொந்தன் அடிகள். கோயில் தேவைக்கும் பொங்கல் வழிபாட்டிற்குமாக ஒரு சில கப்பல் அடி. மொத்தமாக 1000 கன்றிற்கு 80 அடி வாழைகள் இவற்றில் ஒன்றிரண்டடிகள் வழிபடு கோயிலுக்காக விடப்படும். கதலிக் குலைகளைச் சுன்னாகம் சந்தையில் காலை நேரம் கொண்டு போய் விற்று தமது வீட்டுத் தேவைக்குமான சாமான்களை வாங்கிவருவர். இரண்டொரு வண்டில் வியாபாரிகளும் குலைகளை வாங்கி சாவகச்சேரிச் சந்தை கொண்டு போவதும் இருந்தது.



வாழைத் தோட்டங்கள் வருடத்தில் ஒன்று இரண்டு தரம் கொத்திப் பசளையிட்டு பாத்தி கட்டி நாலாம் முறைக்கு இறைப்பர். மற்றுதோட்ட நிலங்களில் பயிர் செய்யுங்காலங்களில் வாழையுள் தொட்டில் வைத்து மாடுகள் கட்டப்படும். வாழையுள் அட்டாளை வைத்து இராக்காவல் இடையிடை புயலழிவுகளினால் வாழைத் தோட்டங்கள் பெருஞ்சேதமடையும் போது அரச நிவாரணம் பெறப்படுவது முண்டு.

தென்னிலங்கைக்கும் மலையாளத்துக்கும் அனுப்பும் ஒழுங்கிருந்தமையால் 1000 கன்றுவரை குழையன் எனப்படும் சிவப்புகையிலைக்கன்று செய்து குடிலில் உலர்த்தி விற்பர். மலையாளம் புகையிலைச் சங்கமும் சில செட்டிமாரும் குடிலில் உலர்த்திப் பதப்படுத்திய புகையிலையை வாங்கி இந்தியாவிற்கு அனுப்புவர். மேலும் கொக்குவில், கோண்டாவில் புகையிலை வியாபாரிகட்கு சொற்பபணத்தை அச்சாரமாக வாங்கிக்கொண்டு தோட்டத்தில் வைத்தே பச்சைக் கன்றாகவே கொடுப்பவர்கட்கு உரிய பணம் உலர்த்தி விற்றபின் கொடுக்கப்படும். சுருட்டுத் தேவைக்குரிய தட்டையன் கன்றுகள் நன்கு விளைந்த பின் சீவி, கிடங்கிலவிய விட்டு நிழலில் உலர்த்தி பின் குடிலில் தூக்கி மெல்லிய புகையூட்டி ஐம்பது கொண்ட பிடிகளாகக் கட்டி விற்பர். உரிய கன்று வெட்டியதும் கட்டைகளை வளரவிட்டு வெட்டி கிடங்கில் அவியவிட்டு நிழலில் உலர்த்தி சுருட்டுக்கு உள்ளீடாக விற்கப்படும்.

குறித்த கமக்காரர் ஒரு சோடி எருதுகளும் சில பசுமாடுகளும் வளர்ப்பர். எருதுகள் ஒரு தொட்டிலும் மற்றயவைகள் பிறிதொரு தொட்டிலும் கட்டப்படும் வருடம் ஒருமுறை பெரும்பாலும் மாரிக்கு முன் சிறகடித்துப் படியவிட்ட பனையோலைச் சிறகுகளால் வேய்ந்து காற்றுக்குக்கிளம்பாது நார்க்கிறுகளால் அல்லது இளைக்கயிறுகளினால் வரிவர். தொட்டில்களில் போடும் புல் வைக்கோல் ஒட்டு வாழையிலை முதலியன சிந்தாமலிருப்பதற்காக கருக்குச்சீவிய பனைமட்டைகளை அளவாக வெட்டி தொட்டிலின் கீழ் சட்டங்கட்குமிடையில் நான்கு பக்கங்களிலும் அடியிலும் வடிவாக வரிவர்.

பயிர்கள் செய்யத் தொடங்கும் காலம் வரை தோட்டத்திலும் தொடர்ந்து வாழைகளுள்ளும் தொட்டில்களை வைத்தும் மாடு கட்டுவர். பெரும்பாலும் குடிபுகையிலைக்குரிய தட்டையன் கன்று நடுவோர் பசளையிடற்காக ஆட்டுப்பட்டியும் அடைப்பர் கிராமத்தில் இரண்டு மூன்று பேரிடம் செம்மறியாட்டுப்பட்டியிருந்தது 40 - 50 ஆடுகள் ஒருபட்டியிலிருக்கும். நடுவில் அட்டாளையும் நாலுபக்கமும் தட்டிகளும் கட்டிப் பாதுகாப்பிற்காக இராக்காவலும். வெளிக்கவட்டிகளிலும் கிழக்கே

யுள்ள வயல் தரவைகளில் பகலில் கால்நடைகள் கூட்டம் கூட்டமாக நின்று மேயவிடுவர். எருதுகளுக்கும் பால்மாடுகளுக்கும் கூடக்கவனமும் பாதுகாப்பும், தொட்டில்களில் வைக்கோல், புல், கிழித்த ஓலை, வாழையிலைத்தீனிகள் போட்டும் தவிடு, பிண்ணாக்கும் வைப்பர்.

புகையிலை செய்வோர் நிலங்களை உழுது பண்படுத்தி வைத்திருந்து மாரிகாலச் செழிப்பில் வளர்ந்திருந்த காவிளாய் சிவனார் வேம்பு மகலிய பூண்டுகள் அறுத்தும், மார்கழி, தையில் தென்மராட்சிப் பக்கம் சென்று பூவரசு குழைகளை வெட்டிவந்தும் தாழ்ப்பார், இந்த மாதிரி புகையிலைக் கன்று செய்யும் தரைக்குத் தாழ்க்கும் பசளையைத் தாய்ப்பசளை என்பர் கிழக்கு நாடு பூனகரிப் பகுதிகளிலிருந்து வெட்டிவரும் பிடிக்குழைகளை வாங்கியும் தாழ்க்கப்படும், தாழ்வை முடிந்ததும் தட்டிப்பரவி வாய்க்கால் மாதிரிக் கோலி யாருக்கொன்றாக நிரை கீறி நிலையஞ் சுழித்த மேடைகளில் தயார்ப்படுத்தி வைத்திருந்த கன்றுகளை மாலை வேளையில் பிடுங்கி நட்டு குழை குத்துவர். தினமும் காலையில் தண்ணீர் ஊற்றுவர். விற்பனை மேடைகளில் கன்றுகளை வாங்கி நடுபவர்களுமுண்டு. பெரும்பாலும் தைப்பொங்கலையண்டியே மேட்டு நிலப் புகையிலைச் செய்கை நடக்கும். தை நடுகை, தாய் நடுகை - தாழ் பிரதேசமான வயல் வெளி நிலங்களில் நடுகை ஒரு மாதம் பிந்தியே நடைபெறும்.

கன்றுகள் 5 - 6 இலைவரை வளர்ந்ததும் இரண்டு கன்றுகள் சேர்த்துக் கிறுபாத்திகட்டி மூன்றாம் முறைக்கு இறைப்பர். 10 இலைகள் வரை வளர்ந்ததும் அடியில் நாலைந்து இலைகளை ஒடித்து அடி மண்கொடுத்து பெரும்பாத்தி கட்டி இறைப்பர். 12 – 15 இலை வரை வளர்ந்ததும் தலைப்பமத்து மூன்று நாலுமுறை கெட்டெடுப்பர். நாலு மாதப்பயிர் புகையிலைக் கன்றுகளை சுற்றிவர வெளியோரப்பாத்திகளில் சுய தேவைக்காக மிளகாய்க் கன்றுகளையும் தலைப்புத் தரைகளில் வசதியாகவிருந்தால் கொடிவகைகளும் நடப்படும். புகையிலை வெட்டியதும் தரையை உழுது பண்படுத்தி தினை விதைத்து வாய்க்கால்களில் கை வாய்க்கால் கோலி ஒருபார் கொண்டபாத்திகள் கட்டி நடுவில மாயவள்ளித்துண்டங்களை ஊன்றி பழுதிக் தண்ணீர் கட்டி, நாலாம் முறைக்குத் தொடர்ந்து இறைப்பார். முளை கண்டதும் காய்ச்சல் விட்டுக்கட்டும் தண்ணீருக்கு கண் கழுவல் தண்ணீர் என்பர் நாலைந்து தண்ணீர் இறைப்புக்குப் பின் களை பிடுங்கி இறைத்துக் காய்ச்சல் விடுவர். தினை 3 மாதப் பயிர் இந்த வகையில் பனிச்சாமி விதைப்பவர்களுமுண்டு தினை



யிலுள் சிலர் 100 – 200 கன்று வரை காய்வள்ளி., இராசவள்ளி, சிறுவள்ளி, கொடிக்கறணை தாழ்ப்பார். தினைமணி திரண்டதும் சோழக்காற்றினால் மணிகள் அலைப்புண்டு சிதறாமல் பிடிகட்டுவர். விளைந்ததும் கதிர்களை வெட்டி மிதிப்பதும் தட்டுக்களை வெட்டிப் பிடிகட்டி பட்டறையடுக்கி மாட்டுக்குத் தீனிக்காக வைத்திருப்பதும் பின்னிகழ்வுகளாகும். பனிச்சாமி விளைந்ததும் வெட்டி உலரவிட்டு சூட்டடித்தும் மிதித்தும் தூற்றி மணிகளைச் சாக்கிலிடுவர்.

அறுவடை முடிந்ததும் மரவள்ளியுள் சாறி அல்லது கிண்டி பயறு விதைப்பர். பயறு இரண்டு மாதப்பயிர். எப்பயிர்களுக்கும் பூக்கும் காலத்தில் மழை கூடாது. காய்முற்றியதும் ஆய்ந்து காயவிட்டு அடித்து மணிகளை வேறாக்குவர். மாரி காலத்தில் கடுங்குளிருக்கு மாட்டுத்தீனிக்காக பயற்றங் கோதுகளைச் சாக்கிலிட்டுக் கட்டிப் பத்திரமாக வைத்திருப்பர்.

மார்கழி முடிவில் கொடிவள்ளிக் கிழங்குகளைக் கிண்டி வீடு கொண்டு போய் வெளிச்சம்படாமல் வீட்டுக்குள் கோர்க்காலியின் கீழ் அடுக்கி வைத்திருந்து தேவை நோக்கி எடுத்துபயோகிப்பர். சுன்னாகம் சந்தை கொண்டு போய் விற்பவர்களுமுண்டு. கொடியில் வரும் பெரிய காய்கள் கிழங்குகளின் வட்டுக்கள் அடுத்த வரும் நடுகைக்காகப் பத்திரப்படுத்தி வைக்கப்படும்.

பழைய ஆழக் கிணறுகளிலிருந்து 10 – 15 ஆயிரம் கன்றுகட்கு நீர்ப்பாய்ச்சப்படும் துலாமிதிக்கு இரண்டு பேர் மிதியிறைப்புக்கு ஒருவர் தண்ணீர் கட்ட ஒருவராக நாலு பேர் கொண்டதான கூட்டிறைப்பு. தண்ணீர் வற்றியவுடன் ஊறவிட்ட மறு இறைப்பு. காலை, மாலை அந்தி, விடியப்புறம் என இறைப்பு நேரங்கள் தங்களுக்குள் பேசி ஒழுங்கு செய்து கொண்டபடியேதான் நடைபெறும். துலாப் பேண் கட்டல் புதிய துலாப் போடல் தூரவுள்ள தோட்டங்கட்குச் செல்லும் வாய்க்கால்கள் மினுக்கல் கிணற்று சேறு எடுத்தல் என்பன பங்காளிகள் எல்லாருஞ் சேர்ந்து செய்வர்.

பட்டை கொடியிறைப்புக்குத் தேவையான அனைத்தும் பனம் பிரயோசனங்களே. சார்வு ஈர்க்கும் வார்ந்த பனை மட்டை நாரும் கொண்டு பின்னப்பட்ட ஈர்வாணிக் கொடிகளில் ஓலையினால் இழைக்கப்பட்ட பெரிய பட்டைகளை பனை நாரில் முறுக்கிய பட்டைக் கயிற்றினால் இணைத்தே இறைப்பர். பட்டை, கிணற்று நீரில் முட்டியவுடன் சரிந்து கோலத்தக்கவாறு பாரத்துக்கு பட்டைக்கல்லை பட்டை நடுப்பள்ளியில் கட்டித் தொங்கவிடப்படும். ஈர்வாணிக் கயிறு பட்டையைச் சுழர

விடாதும் மிதியில் பட்டையை வைத்துச் சரித்து இறைக்கவும் வசதியாயிருக்கும். கிணற்றாழத்திலும் பார்க்க சர்வாணிக்கயிறு 2 - 3 முழம் நீளமான பகுதி துலாவில் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் கொடியின் கீழ்ப்பகுதி தண்ணீரில் பட்டு நனைவதால் உண்டாகும் உக்கலுள்ள பகுதி வேண்டிய போது நீக்கப்பட்டு உரியநீளத்துக்கு நுனிப்பகுதி குலைத்துப் பின்னப்படும். இறைப்பு முடிந்தவுடன் இறைப்பட்டைகளை வெயிலில் காயவைத்தோ அல்லது கிடங்கில் கஞ்சல் போட்டு எரித்தோ வெக்கையில் காய்ச்சுவர்.

மேற்கொண்டு இரண்டு வாளிச் சூத்திரங்கள் இரண்டும் பல வாளிச் சூத்திரம் ஒன்றும் 1925 காலப்பகுதியில் கோப்பாய்க் கிராமத்திலிருந்தன. டாக்டர் சுப்பிரமணியம் அவர்களுடைய குடும்பத்தைத் தோட்டத்தில் மாத்திரமே காற்றாடிச்சூத்திரமும் பெரிய தொட்டியுமிருந்தது.

கம ஆயுதங்களாக கலப்பை, நுகம், மண்வெட்டி, கத்தி, புல்லுச்செத்துகம், உழவாரம், கூராம்பை என்பன இருந்தன. தேவை நோக்கி இரவல் வாங்கியும் பாவிப்பர். பெரும்பாலும் குடும்பத்திற்கொரு மாட்டுவண்டியிருந்தது: குப்பை, வைக்கோல், குழை என்பன ஏற்றிப்பறிக்க இரண்டு மூன்று பேரிடம் கூலிக்கு வடக்கன் மாடு வண்டில்களிருந்தன.

அறுவடை காலங்களில் பொங்கல், மாட்டுப் பொங்கல் என்பன பரிமளிப்பாக நடைபெறும். தோட்டம் வரும் உதவிக் தொழிலாளர்கட்கு கிழங்கு வகைகள் சூடுமிதி முடிந்த போது குவலத்தால் அள்ளித் தானியமும் மனங்குளிரக் கொடுப்பர். கம ஆயுதங்கள் செய்பவருக்கு புகையிலைக்கன்று வெட்டுங் காலத்தில் 10 கன்றுகள் அவர்கள் வெட்டிக் கொண்டு போக விடப்படும்.

தொழிலாளி மனங்குளிர்ந்தாலேதான் பயிர்கள் கண் விழிக்கும் என்பது கமக்காரரின் விசுவாசமான நம்பிக்கையாயிருந்தது. வயது கூடிய தொழிலாளர் தோட்டம் வரும்போது ஆச்சாரியார், பரியாரியார், கட்டாடியார் என்று ஆர் விகுதி வைத்து மரியாதைப் பன்மையிலேயே அழைப்பர். அவர்கள் வீட்டுத் தேவைக்கு, குலதெய்வங்கட்கான பொங்கல் வழிபாட்டுத் தேவைகள் என்பனவற்றிற்கு வாழைக் குலையும் கிணற்றடித் தென்னையிலிருந்து பறித்து தேங்காய், இளநீர் என்பனவும் அன்புடன் கொடுக்கும் வழக்கம் இருந்து கொண்டேவந்துள்ளது. தோட்டக்கிணற்றடியென்றாலும் வீட்டுக் கிணற்றடியென்



றாலும் கிணற்றுச் சூழலில் சில தென்னை மரங்கள் நிற்கும். தூரத்தே நின்று பார்ப்பவர்கள் கண்ணில் தென்னை மரங்கள் தெரிந்தால் கிணற்றடி என்பதனை ஊகித்தறியலாம்.

| | கோப்பாய் வடக்கு | கோப்பாய் மத்தி | கோப்பாய் தெற்கு |
|---|---|---|---|
| குடிசை | 787 | 140 | 450 |
| சனம் | 2481 | 3750 | 3907 |
| மாணவர் | 625 | 750 | 1220 |
| விவசாயிகள் | 675 | 480 | 410 |
| அரச உத்தியோகத்தர் | 185 | 400 | 210 |
| சீவல் | 07 | 25 | 35 |
| மேசன் | 08 | 21 | 11 |
| சலவை | 03 | — | 17 |
| தச்சு | — | 20 | 12 |
| பொற்கொல்லர் | 02 | 01 | — |
| பூசகர் | 10 | 06 | 09 |
| இந்துக்கள் | 2480 | 80 % | 80 % |
| றோ. கத்தோலிக்கர் | 01 | 20 % | 103 |

## வயல் வேளாண்மை

யாழ் - பருத்தித்துறை வீதிக்குக் கிழக்குப் புறமாய் கைதடி - மானிப்பாய் வீதியின் இருமருங்கும் வயல் நிலங்கள். நிலத்தை உழுது பண்படுத்திவைத்திருந்து மாரிகால ஆரம்பத்தில் புரட்டாதியில் கறுப்பன், மொட்டைக் கறுப்பன் முதலிய நெல்லினங்களிலொன்றை விதைப்பார். தெற்கில் குளங்கரையை அண்டிய இடங்களில் மாத்திரம் ஆறு மாத நெல் - பெரு நெல் விதைப்பார். ஆடி விதை தேடி விதை என்பது அக்கால இதற்கான பழமொழி. மாரி காலத்தில் இவ்விடம் பெய்யும் மழையை விட கிராமத்தின் மேற்கு மேட்டுப் பிரதேசங்களிலிருந்து மாரி காலத்தில் வழிந்தோடும் வெள்ள வாய்க்கால் பலவின் மூலமும் வரும்நீரும் வயல்களை நிரப்பும் வெள்ளத்துள் கூட்டம் கூட்டமாக நின்று பெண்கள் களைபிடுங்குவதும் வெற்றிடங்கட்கு நாற்று நடுவதும் கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும். மார்கழி, தையில் வீதியினிருமருங்கும் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும். தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது அக்கால வேளாண்மைப் பழமொழி. தைப்பொங்கலுக்கு புதிரெடுத்துப் பொங்குவர். மாசியில் அறுவடை செய்து சூடு மிதிப்பர். ஆள்வசதிக்கும்

தேவைக்கும் தக்கபடி மாடுகளை இணைத்துச் சூடுமிதிக்கும் போது பொலி பொலி என்று சொல்லி மாடுகளை வளைப்பதும், மணி தூற்றும் போது வாதராயா பொலி என்று சொல்லி வாயு தேவனை வரவழைப்பதும் வழக்கம். தூற்றியவுடன் நெல்லில் முதலில் குல்லத்தால் அள்ளி கோயிலுக்கென ஒரு பகுதியை வைப்பர். குல்லத்தால் அள்ளிச் சாக்குகளில் இடும்போது ஓரளவு நெல் மிகுதியிருக்கும். அதனை வந்து நிற்கும் கம உதவியாளர்கட்கும் வறியவர்கட்கும் குல்லத்தாலேயே அள்ளிக் கொடுப்பார். யாவும் நல்லபடியாகவும், வந்தவர்கள் மனங் குளிரவும் நடக்கும். வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணாதான் என்பதனை சூட்டுமிதியின் போதும் பொங்கலின் போதும் அவதானிக்கக் கூடியதாயிருக்கும். யாவும் வண்டிகளில் ஏற்றி வீடு கொண்டு போவர். வைக்கோல் பட்டடை போட்டு வைக்கப் படும்.

அறுவடையானதும் பயறும் மற்றும் சிறுதானியங்களும் தேவை நோக்கிவிதைப்பர். தெற்கிலிருக்கும் குளங்களை அண்டிய இடங்களில் சணல் விதைப்பர். அறுவடை செய்து காய விட்டு மணிகளை எடுத்துக் கொண்டு ஒட்டுக்களைப் பிடிகளாக்கிக் கட்டி அடுக்குவர். வலை பின்னும் கடற்றொழிலாளர் வலை பின்னுவதற்காக அவற்றை வாங்கி ஏற்றிச் செல்வர்.

வயலுக்கும் பிரதான வீதிக்கும் இடையிலுள்ள தோட்ட நிலங்களில் சிறுதானியங்கள் செய்கின்றனர். மாரிமிகுந்தால் வீதியிலிருந்து உப்பாறுவரை ஒரே வெள்ளக் காடாயிருக்கும். குறுகிய காலப் பகுதியில் உரிய வெள்ளம் கடலினுள் வழிந்து சென்றுவிடும். இதனால் பெரும்பாலும் வேளாண்மை பாதிக்கப் படுவதில்லை. குறித்த வயல் நிலங்கள்தான் கிராமத்தவரின் உணவுக் களஞ்சியமாகவிருந்தது. புரட்டாதி – பங்குனி வரை கிராமத்து வேளாண்மை செய்வோர் வயல்வேலைகளிலேயே ஈடுபடுவர்.

குறித்த வயல் நிலங்களை ஆற்றிறோர உவர்த்தன்மை நீக்கி நன் செய் நிலமாக்கவும் மேய்ச்சலுக்கான நல்லினப் புற்களை வளர்க்கவும் பலவாறான திட்டங்களிடப்பட்டு 1949 இல் அரசினால் ஆரம்பித்த உப்பாற்றுதிட்டம் அரசின் மாற்றாந்தாய் மனப்பாங்கினாலும் ஸ்ரீமான் பொதுசனத்தின் குறுகிய சுயநல வேட்டையாலும் எதிரான பயன்களையே கொடுத்தது. இத்தூடனுள்ள உப்பாற்றுத் திட்டம் எனும் கட்டுரையில் விரிவாகவுண்டு. யாழ். வளாகத்தில் நடந்த விவசாயம் சம்மந்தமான கருத்தரங்குகளைத் தொடர்ந்து பொ. மே. கழகத்தாரின் ஊக்கத்துடனும் கோப்பாய் விவசாயிகள் சம்மேளனத்தினால்



ஆரம்பிக்கப்பட்ட உவர்நில நெற்செய்கை 1992 - 93 காலப்பகுதியில் நற்பலன் தந்துள்ளது. தொடர்ந்து அரச அதிபர் ஒத்துழைப்புடன் மேல் 93 – 94 இல் கூடுதலாகச் செய்யப்பட்டது. படிப்படியாக விரிவடையச் செய்யும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

## குடியிருப்பு வீடுகள்

கிராமத்தின் குடியிருப்புக்கள் பிரதான வீதிக்கு மேற்குப் புறமாய் செம்மண்ணும் நண்ணீர்க்கிணறுகளுமுடைய மேட்டுப் பிரதேசங்களிலேயே இருந்தன. கிணற்றைச் சூழவர 10 – 15 வீடுகள். மண்சுவர், ஓலைவேய்ச்சல் சாதாரணமாய் 20 × 15 முழ அளவுகளுடையதாய் நடுவில் அறையும் மூன்று பக்க விறாந்தையும், இடப்புற விறாந்தை வெளிச்சுவர் வைத்துக்கூடமாக்கிக் குசினிப்பாவிப்பு. ஒன்றைக் கதவு. வாசலினிருபக்கமும் ஒருமுழ உயரமான இரண்டு திண்ணைகள் சாணியால் மெழுகப்பட்டிருக்கும்; பகலிருப்புக்கும் இராப்படுக்கைக்குமாக. மறுபக்க விறாந்தையில் கம ஆயுதங்கள், மேசை வாங்கு ஒவ்வொன்று. இது ஓர் நடுத்தர விவாசாயின் வீடு. அறைக்கு ஜன்னல் கிடையாது. சில வீடுகளில் ஒருபக்கத்தில் புறம்பான குசினியும் முற்றத்தில் தலைவாசலும் குசினியின் மேற்புற அட்டாளையில் உழுக்காமலிருப்பதற்காக ஒடியல், மரவள்ளிச் சீவல், பனாட்டுக் கூடைகள் அத்துடன் புகையிலை, பாவல், பயற்றை நெற்றுக்களும் கட்டித் தொங்கும். தலைவாசலில் நான்கு புறமும் குந்துச் சுவரும் மேல்த்தட்டிகளும் நடுவில் மேசை வாங்கு மேல் குறுக்கே மரம் வைத்து மிதிபாய் முதலிய கமத்தொழிற் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும்.

கிணற்றங்கரையோரமாய் நாலைந்து தென்னைகள், கமுகுகள். வளவினுள் மா, பலா சில கப்பல் மொந்தனடி வாழைகள். மரநிழலில் ஆட்டுக்கொட்டிலொன்று. உரல் உலக்கை வீட்டுத்தளபாடங்களும் அதனுள் போடப்பட்டிருக்கும். இன்னொரு பக்கத்தில் மூடுபாவுள்ள புகையிலைக்குடிலொன்று. அப்பால் வெய்யில்படக்கூடிய இடத்தில் பனாட்டுப்பந்தலொன்று. பூவரசு, கிழுவை கதியால்களுடைய வேலிகள் ஓலையால் அடைக்கப்பட்டு மறைவாயிருக்கும். இது 1925 காலப் பகுதியில் ஓர் நடுத்தர விவசாயியின் குடியிருப்பு. கோயில் திருவிழா வேறும் திருநாட்களில் விரதமிருப்பர். விரதநாட்களுக்குரிய சமையல் பாத்திரங்கள் ஒரு பக்கத்தில் குசினியினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும்.

பொதுவாகத் தொழில் செய்தே சீவனம். நடத்துவோர் சுமார் 15×10 அடி கொண்ட ஓலைக்கொட்டில். ஒரு முழக்குந்து மேல்த்தட்டி. பக்கத்தில் சமையலுக்குச் சிறிதொரு கொட்டில். நிதிநிலைமைகட்குத் தக்கபடியே பல்வேறு மக்களும் இருப்பிட வசதிகள் அமைத்திருந்தனர். பொதுவாகக் கல்வியறிவு குறைந்தவர்கள் நாளையைப் பற்றிச் சிந்திப்பதில்லை. எவ்வளவு உழைத்தாலும் நன்றாக உண்டுடுத்துக் குதூகலமாக வாழ்வதனோடு குடியிலுஞ் செலவழித்துவிடுவர். பாதுகாப்புக்கருதியும் வேறு சூழ்நிலைகளாலும் ஒவ்வொரு தொழில் சாதியத்தவரும் கூட்டம் கூட்டமாகவே குடியிருப்புக்களமைத்து வாழ்ந்தனர். இப்படியிருந்தமையால் பொதுவாக சமூக ஒற்றுமையும் பாதுகாப்பும் இனத்தழுவல்களும் நிலவின. இன்றுவரையும் குறித்த நிலை தொடர்கிறது. கிராமத்தின் கிழக்குப் புறமாய் பிரதான வீதியின் மேற்கருகில் கோட்டை வாசல் முகப்பிற்கு நேரே ஒரு சிறுசந்தையிருந்தது. மாலை நேரங்களில் கூடும் தோட்டப் பொருட்களான கிழங்கு, காய்வகை கொண்டுபோய் விற்று தேவையான பொருட்களை வாங்கிவர வயது வந்த ஆண் பிள்ளைகளையனுப்புவர்.

1925 காலப் பகுதியில் அரைசாந்து செங்கல் கொண்டு கட்டிய சுவரும் பீலியோட்டுக் கூரையும் செங்கல் தளமுடை அரச கட்டிடங்களும் பொருளாதார பலமுடைய தனியார் வீடு இரண்டும் இருந்தன. கந்தசாமி கோயிலுக்குக் கிழக்குப் புறமாய் வயல் தோட்ட வருமானங்களுடைய ஒருவரால் சுண்ணாம்பு கண்ட கல்லும் கொண்டு கட்டப்பட்ட சுவரும் இறக்குமதித் தட்டையோட்டினால் (மங்களூர் ஓடு) வேயப்பட்ட கூரையுமுடைய வீடொன்றிருந்தது, குறித்த வீட்டுக்காரரை கல்வீட்டுச் சின்னக்குட்டியர் என்றே அழைத்தனர். மேற்கே 5-ம் கட்டைக்கு அண்மையில் வடபுறமாய் வீதியருகில் மலாயாவில் டாக்டராயிருந்த மகன் அனுப்பிய காசைக் கொண்டு கட்டப்பட்ட வீட்டுக்காரரை கல்வீட்டுச் சின்னப்பர் என்றே குறிப்பிட்டனர். தொடர்ந்து மலாயா வருமானமுள்ளவர்கள் உத்தியோகத்தராயிருந்த கிறிஸ்தவர்களால் கட்டிய இப்படியான வீடுகள் படிப்படியாகக் கூடி வந்தன. மேற்கொண்டு இன்றைய கண்ணகை பண்டகசாலையின் முன் வீதியின் வடபுறமாய் 25 அடி வரை சுற்றளவுள்ள பாரிய அரசமரமொன்றிருந்தது. குறித்த சூழலை அரசடி என்றே சொல்வர். அதன் வட அருகில் சின்னக்குட்டி சின்னப்பு என்பவர் முதிரைக்கல் சூளை வைத்து விற்பனை செய்தார். அக் காலத்தின்போது சுமார் 6½ வரை பரிமாணமுள்ள நான்கு இரும்பு வளையமிறுக்கிய பீப்பா சீமெந்து இறக்குமதியாகியது. சுண்ணாம்புச் சுவரும் தட்டையோட்டு வேய்ச்சலும் சீமெந்துத் தளமுடைய வீடுகள் படிப்படியாகக் கூடி வந்தன. 1950-ம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கடதாசிப் பைகளில் யப்பான், இங்கிலாந்து சீமெந்துகள் இறக்குமதியாகி கொங்கிறீற் வீடுகள் படிப்படியாகக் கூடி வந்தன. காங்கேசன்துறைச் சீமெந்தாலை உற்பத்தியானதும் வீடு கட்டும் தேவைகட்கு இயலுமானவரை சீமெந்து பாவனையே கூடி வந்தது. இந்திய ஓடுகளுக்குப் பதில் உள்ளூரில் - இலங்கையில் உற்பத்தியாக்கப்பெற்ற ஓடுகளும் கிடைத்தன.



## பொருளாதாரம்

1940 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பிரதான காசுப் பயிரான மலையாளம் புகையிலை வியாபாரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வந்து 1946 இல் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. தென்னிலங்கைக்கு அனுப்பிய சுருட்டுப் புகையிலை வியாபாரங்களும் படிப்படியாகக் குறைந்து 1956, 58 வகுப்புக் கலவரங்களோடு துண்டிக்கப்பட்டது. நாடு சுதந்திரமடைந்த 1948 லிருந்து தென்னிலங்கை உத்தியோக வாய்ப்புக்களும் எதிர்பாராத வகையில் அருகின. இவற்றால் யாழ்ப்பாணம் என்றுமில்லாதவாறு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தது, இந்த நேரத்தில் தான் யாழ்ப்பாணம் கூட்டுறவு ஓரளவு கைகொடுத்தூக்க முன்வந்தது. வன்னிப்பிரதேசங்களிலும் யாழ்ப்பாணத்திலும் நெற்செய்கையை விருத்திசெய்ய 1911 இல் ஆரம்பமான விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் 1913 இல் சமாசமாகி யாழ். பெரும் பிரிவுகள் தோறும் கிளைகளை நிறுவிச் சேவையாற்றத் தொடங்கியது. இந்த வகையில் எமது கோப்பாய்க் கிராமத்தில் கோப்பாய் விவசாய விருத்தி விளைபொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் 1952 இல் ஆரம்பமாகி 4500 ச. அடிக்கு மேல் விஸ்தீரணமுடைய களஞ்சிய அறையையும் நிறுவிச் சேவையாற்றியது. மலையாளம் புகையிலை கைவிடப்பட்ட நிலங்களில் மிளகாய்ச் செய்கையை ஊக்கி பெருவெற்றி கண்டது. தொடர்ந்து வெங்காயச் செய்கையை ஊக்கியது. விவசாய உபகரணங்கள், விதைகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பன. சங்கங்கள் மூலம் கடனுக்கும் கிடைத்தன. சுயதேவைப் பூர்த்திக்கும் உள்ளூர்த் தேவைக்கும் போக 6000 அந்தர் வெங்காயம் 140 அந்தர் மிளகாய் என்பன தென்னிலங்கைக்குச் சமாசமூலம் 1958 இல் அனுப்பப்பட்டது 1962 இல் பரீட்சார்த்தமாக இரண்டு ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட உருளைக் கிழங்குச் செய்கை படிப்படியாகக் கூடி 1984 இல் யாழ்ப்பாணத்தில் 1700 ஏக்கர் வரை கூடிச்சென்றது. 1967 இல் எமது கோப்

சங்கத்திற்கு மாத்திரம் 2250 அந்தர் விதை உருளைக்கிழங்கு கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து 1980 ஆனையிறவுத் தடைமுகாம் எடுக்கப்பட்டமையால் விவசாயிகள் தாமாகவே லொறிகள் மூலம் கொழும்பு கொண்டு சென்று விற்று பெருலாபமடைந்தனர், 1985 இல் இவ்விடம் வந்து யாழ். விவசாயத்தை நேரில் கண்டு அதிசயமடைந்த விவசாய மந்திரியார் பயன்தரக்கூடிய வெளிநாட்டு விதையுருளைக்கிழங்கு இறக்குமதியை முற்றாகத் தடை செய்து தரமற்ற உள்ளூர் நுவரேலி விதையுருளைக் கிழங்கை வேண்டுமென்றே திணித்தது. இதனால் 1986 - 87 இல் யாழ். உருளைக்கிழங்கு விவசாயம் முற்றாகப் பாதிப்படைந்து கைவிடப்பட்டது. 1987 யுத்த வேளையிலிருந்து ஏற்பட்ட பொருளாதார போக்குவரத்துத் தடைகள், சுன்னாகம் மின்சார ஒழிப்பு என்பனவற்றால் பாதிப்படைந்த மேட்டு நில விவசாயம் நலிவடைந்தே வந்து கொண்டிருக்கிறது. மாரியை நம்பி சொற்ப எரிபொருள் வசதியுடன் 1987 – 88 இல் செய்த முட்டைக் கோவா, பீட்றூட், போஞ்சி என்பனவும் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் சுயதேவைப்பூர்த்தியை மிஞ்சியதால் அறுவடை செய்யாது நிலத்திலழிய விட்டும், மாட்டுத்தீனியாக வைக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இது விஷயமாய் பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தார் தலையிட்டு உற்பத்தியை மட்டுப்படுத்தி வேறுபயிர்களைச் செய்பவும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியமையால் இந்த அவல நிலை ஓரளவு தணிந்தது. எனினும் இன்றைய தடைகள் யாவும் ஒழிக்கப்பட்டு அல்லது சமன் செய்யப்பட்டு யாழ் - விவசாயி 1965 – 80 காலப்பகுதிக்கு தலையெடுக்கும் நாள் எந்நாளோ?

# இலங்கை அரசியல் மாற்றங்களும் கிராமத்தில் அவற்றால் ஏற்பட்ட தாக்கங்களும்

(ஐரோப்பியர் வருகை, அரசியல் மாற்றங்கள், தமிழர் நலன்கள் பலவும் பாதிப்பு, வகுப்புக் கலவரங்கள், இராணுவம் வருகை, அகதிகள் வெளியேற்றம், இலங்கை இந்திய ஒப்பந்தம், போராளிகள் தோற்றம் இவை காரணமாகக் கிராமத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்பன இக்கட்டுரையில் 31-7-91 வரை சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது.)



## அரசியல் மாற்றம்

சுமார் 500 வருடங்கட்கு முன்னர் இலங்கையில் வடக்குக் கிழக்கில் தமிழரசும் தென் மேற்கில் கோட்டையரசும் மலையகத்தில் கண்டியரசும் இருந்தன. மேற்கில் தெதுறு ஓயா தொடக்கம் கிழக்கில் வளவ கங்கை வரையுள்ள வடகீழ்ப் பகுதிகளில் தமிழரும், ஏனைய தென்மேல் மத்திய பகுதிகளில் சிங்களரும் வாழ்ந்தனர். 1505 இல் வியாபார நோக்கமாக இலங்கை வந்த போர்த்துக்கீசர் இலங்கையின் தென்மேல் பகுதியிலிருந்த கோட்டையரசை இலேசில் கைப்பற்றி தமது சமயத்தையும் பரப்பியாண்டனர். 114 வருட போராட்டங்கட்குப் பிறகு தமிழ்த்துரோகி ஒருவன் உதவியுடன் கி. பி. 1619 இல் வடக்கு-கிழக்கு தமிழரசையும் நாட்டு வன்னிச் சிற்றரசுகளையும் கைப்பற்றினர். 1658 இல் வந்த ஒல்லாந்தர் போத்துக்கீசரிடமிருந்த அரசைக் கைப்பற்றி 138 வருடங்கள் ஆட்சி செய்தனர். 1796 இல் ஆங்கிலேயராட்சி ஆரம்பமானது. மத்திய பகுதியில் தொடர்ந்திருந்த கண்டியரசு போத்துக்கீசர் ஒல்லாந்தரால் கைப்பற்ற முடியாதிருந்தது. ஆங்கிலராட்சியிலும் 36 வருட போராட்டங்கட்குப் பிறகே 1832 இல் ஆங்கிலராட்சிக்குட்பட்டது. 1833 இல் கோல்புறூக் அரசியல்த்திட்ட சிபார்சின் படியேதான் தமிழர் பிரதேசங்களும் சிங்களர் பிரதேசங்களும் இணைக்கப்பட்டு ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலங்கையின் பலபாகங்களிலும் ஆங்கிலக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. ஆங்கிலம் படித்தோர் உத்தியோக வாய்ப்புக்களும் பெற்று முன்னோடியாயிருந்தனர்.

ஆங்கிலராட்சியின் போது மத்திய மலைநாடுகளில் பெருந்தொகையாக இந்தியத்தமிழரை அழைத்து வந்து குடியமர்த்தினர்.

1833 ஆரம்பமான சட்ட நிருபண சபையில் சிங்களவரும் தமிழரும் பெரும்பான்மையோர் எனக் கருதப்பட்டு ஒரே அளவான சமபல பிரதிநிதித்துவம் இருந்தது. சிங்களரும் தமிழரும் பேதமின்றி வாழ்ந்தனர். கண்டி கைப்பற்றப்பட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் 1915 இல் கண்டியில் நடைபெற்றபோது - இலங்கை தேசிய சுதந்திரமடைதல் வேண்டும் - தீர்மானம் நிறைவேறியது. 1915 இல் சிங்கள - சோனகர் வகுப்புக் கலவரம் மூண்டபோது இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டவேளை பயங்கரமான 1 ஆம் உலக மகாயுத்த போர்க்காலச் சூழ்நிலையில் சேர். சி. பி. இராமநாதன் இங்கிலாந்து சென்று அரசுடன் வாதடியதால் உடன் குறித்த மாசிலோ சட்டம் ரத்தாகியது. இராமநாதன் இலங்கை திரும்பிய போது

ஊர்வலமாக அழைத்துச் செல்ல அலங்கரிக்கப்பட்டிருந்த குதிரை வண்டியில் குதிரைகளைக் கழற்றிவிட்டு தாமே இழுத்துச் சென்று மக்கள் தமது அன்பை வெளிக்காட்டினர். 1919 இல் சிங்களவரும் தமிழரும் சேர்ந்தமைத்த இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவராக சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே தெரிவானார். இது அப்போதைய இன ஒற்றுமையின் சின்னமாக அமைந்ததெனலாம். 1919 இல் இலங்கைத் தேசாதிபதியாக வந்த வில்லியம் மானிங் - என்பவர் இலங்கையின் தேசிய காங்கிரசின் போக்கை அவதானித்து தமிழரையும் சிங்களவரையும் பிரித்தாள்வதில் வெற்றிகண்டார். சட்டவாக்கசபையில் சமபல பிரதிநிதித்துவம் போய் 13 சிங்களவரும் 3 தமிழரும் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். பிரித்தானியர் பிரித்தாளும் கொள்கையில் வல்லவர்கள்.

1918 இல் முழு இலங்கையிலும் தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறை கொண்டுவரப்பட்ட போது கொழும்பில் தமிழருக்கு ஒரு பிரதிநிதித்துவம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது. 1920 இல் தேசியக் காங்கிரஸ் முன்னோடிகளாயிருந்து ஒப்பமிட்ட தலைவர்களான ஜேம்ஸ் பீரிஸ், E. J சமரவிக்கிரமா என்போராலேயே பின்னர் இது புறக்கணிக்கப்பட்டது. சேர். பொன்னம்பலம் அருணசாலம் அவர்கள் பெரும் மனமடிவோடு தேசிய காங்கிரசைவிட்டு வெளியேறினார். இலங்கைத் தமிழர் மகாசபை அமைக்க காரணமானார். இலங்கைத் தேசிய மகாசபை ஆங்கிலம் படித்த சிங்களவரின் கரை நாட்டுச் சிங்களவரின் இயக்கமாகவே காணப்பட்டது. மலைநாட்டுச் சிங்களவர் கண்டியத் தேசியப்பேரவை ஒன்றையமைத்தனர். 1926 இல் க. தே. பேரவைத் தலைவர் S. W. R. D. பண்டாரநாயகா சிங்களவர் - தமிழரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் பொருட்டு சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தார். அப்போது ஆங்கிலம் படித்த தமிழரான கிறிஸ்த்தவர்கள் முன்னோடிகளாயிருந்தனர். ஆங்கிலரின் கீழ் இருப்பது உத்தியோக வாய்ப்புக்களைப் பெற உதவும் என்பதனால்ப் போலும் ஜேம்ஸ் இரத்தினம் முதலிய தமிழ் முன்னோடிகள் சமஷ்டிக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தனர். ஒரு தமிழனும் ஆதரிக்கவில்லை. இது போது பிரித்தானிய சாம்பிராச்சியத்தினுள் சுயாட்சி செலுத்தும் ஓர் அங்கத்துவ நாடாகவேயிருக்க பழைமைவாதிகளான அரசியல் திட்ட வாதிகள் விரும்பினர். இதனை மகாசபையின் உள்ளேயும் வெளியேயுமிருந்த தீவிரவாதிகள் - இளைஞர்கள் எதிர்த்தனர்.

1933 டொனமூர் அரசியல் திட்டத்தின் படி 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது. இன ரீதியான பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு பிரதேசவாரியான



பிரதிநிதித்துவ முறை ஏற்பட்டது. சட்டவாக்கசபைக்குப்பதில் 61 பேர் கொண்ட அரசாங்க சபை அமைக்கப்பட்டது. 50 பேர் பிரதேசவாரியாக வாக்காளரினால் தெரியப்பட்டனர். சர்வசன வாக்கெடுப்பு முறையால் சிங்களவருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் கிடைக்கப்பட்டது. — இவ்வாறான ஆட்சி முறைகளால் - சனநாயக ரீதியாகக் கிடைக்கவேண்டிய நலன்கள் கூடப் புறக்கணிக்கப்பட்டு தமிழர் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தக் காலத்திலேயே பரிஸ்டர் ஆகிவந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. பெரும்பான்மையினரான சிங்களவருக்கும் இதர சிறுபான்மையினருக்கும் அரசவையில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற ரீதியில் பிரதிநிதித்துவம் இருந்தாலே தான் இந்த நாட்டில் சனநாயகம் நிலைக்கும் இல்லையேல் சர்வாதிகாரம் தாண்டவமாட வழி பிறக்கும்; சிறுபான்மையினர் நசுக்கப்படுவர்; என்று அபிப்பிராயத்தை தெரிவித்தார். தமிழ்ப் பிரதிநிதிகள் ஆலோசனையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரித்தானிய அரசுடன் கலந்துரையாடி வரும் அரசியல் திட்டத்தில் சேர்க்க ஜீ. ஜீ. யை வழியனுப்பினர்.

லண்டன் சென்று கலந்துரையாடலில் ஐம்பதுக்கு ஐம்பதுக்குப்பதில் அறுபதுக்கு நாற்பது இடம்பெற்றது. இதுகாலை அனுப்பிய பிரதிநிதிகள் மூவர் அனைப்புண்டு மந்திரிசபையில் சேர்ந்துகொண்டனர். பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டது. இதுவும் தமிழர் அதிஷ்டக் குறைகளில் ஒன்றாகும். 1947 இல் தீவிரவாதிகளதும் இடதுசாரிகளினதும் போக்கினால் சோல்பரி அரசியல் திட்டத்தின்படி இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டது. சனப்பிரதிநிதிகள் சபை, செனற்சபை என இருசபைகள் சிபாரசு செய்யப்பட்டு ஈரங்க சபையானது. 1948 இல் நாடு சுதந்திரமடைந்தது. சிங்களவருக்கு அதிக பிரதிநிதித்துவம் இருந்ததால் படிப்படியாக சிறுபான்மையினரான தமிழர் உரிமைகள் பலவும் பாதிக்கப்பட்டன இதனால் 1949 இல் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தார். சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு அடிபணிந்து பண்டாரநாயகா சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டார். 1956 இல் தனிச்சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்ட பிறகே தான் தமிழரிடையே பிரிவினையுணர்ச்சி முளைகொள்ளத் தொடங்கியது. 1957 இல் செல்வநாயகமும் பண்டாரநாயகாவும் சேர்ந்து பிரதேச நிர்வாகசபை எனும் ஒப்பந்தத்திற்குக் கைச்சாத்திட்டனர். முன்பு போல் சிங்கள பௌத்த பேரினவாதம் ஐ. தே. கட்சி, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டி யாத்திரை எழுச்சி என்பன காரணமாகக் குறித்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது.

## தமிழர் நலன்கள் புறக்கணிப்பு

1. சிங்கள மொழிச் சட்டத்தால் தமிழ் புறக்கணிக்கப்பட்டமை
2. தமிழ் பேசும் மக்கள் பிரதேசங்களான சேருவில, அம்பாறைப் பிரதேசங்களில் டி. எஸ். சேனநாயகா காலத்திலிருந்து ஆரம்பித்த திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள்.
3. மலைநாட்டுத் தமிழரின் பிரசா உரிமை பறிக்கப்பட்டமை
4. பல்கலைக்கழகங்கட்கு மொழிவாரி தரப்படுத்தல் திட்டம்.

தமிழரிடையே முளை கொண்டிருந்த பிரிவினையுணர்ச்சி மேலும் வளர்ந்து வலுக்கத் தொடங்கியது. விரத்தியடைந்த பல்கலைக்கழக தமிழ் மாணவரால் அமைக்கப்பட்ட மாணவர் மன்றம் தீவிரமடைந்தது. மேலும் சிங்கள தீவிர இனவாதிகளால் தூண்டப்பட்ட காடையர்களால் 1956, 1958 வருடங்களில் கொழும்பிலும் சுற்றாடலிலுமிருந்த தமிழர் வியாபாரஸ்தலங்கள், குடியிருப்புக்கள் முதலியனவும் சூறையாடப்பட்டும் தீயிடப்பட்டும் 1000 ற்கு மேற்பட்ட தமிழர் நிஷ்டூரமாகக் கொல்லவும் பட்டனர். தப்பியோடி மறைந்திருந்தவர்கள் பாதுகாப்புக் கருதிப்பத்திரமாக யாழ்ப்பாணம் அனுப்பபபட்டனர்.

இவை காரணமாக 13-5-1958 பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களால் தமிழ் நாட்டுக் கொள்கையை வற்புறுத்தி - ஈழத் தமிழர் முன்னணி- அமைக்கப்பட்டது போர்த்துகீசர் வருகைக்கு முன்னரே தொடர்ந்து நிலைத்திருந்த தமிழர் பிரதேசம் மீண்டும் தனிநாடானாலே தான் தமிழர் இந் நாட்டில் மீண்டும் சுதந்திரமாக வாழலாம் - என்பது வற்புறுத்தப்பட்டது. இது வேளை டட்லி சேனநாயகாவும் செல்வநாயகமும் - மாவட்ட சபைகள் அமைப்பு - என்று இரகசிய ஒப்பந்தம் செய்தனர். மாவிட்டபுரத்தில் நடந்ததொரு அரசியல் கூட்டத்தில் தமிழரசு பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரால் குறித்த இரகசிய ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட்டது. இது பரவியதால் சிங்கள பேரினவாத எதிர்ப்புக்கு டட்லி அடிபணிய நேரிட்டது.

மேற்கொண்டு

1. 1970 இல் கூட்டரசின் ஒற்றையாட்சிப் பிரகடனம்
2. பௌத்த மதத்திற்கு மாத்திரமே பாதுகாப்பு
3. சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக சோல்பரி அரசியல் திட்டத்திலிருந்த சரத்து 29 நீக்கப்பட்டது.



4. செனெற்சபை ஒழிப்பு
5. அரச எழுதுவினைஞர் சங்கத் தலைவர் கோடீஸ்வரனால் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்தது வைத்த வழக்கு வெற்றி கொள்ளப்பட்ட போதும் பெரும்பான்மைபலம் கொண்ட அரசால் புறக்கணிப்பு
6. போர் வேண்டுமானால் போர், அமைதி வேண்டுமானால் அமைதி என்ற ஜே. ஆர், ஜெயவத்தனாவின் கொக்கரிப்பு
7. சமதர்மவாதிகளான சமசமாஜி, கொம்மியூனிஸ்ற் கட்சிகள் அரசுடன் சேர்ந்து தமிழர்களுக்கு எதிரான சட்டங்கள் நிறைவேற்ற வாக்களித்தமையால் குறித்த கட்சிகளிருந்த தமிழர் வெளியேற்றம்
8. 1977 ஐ தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் - தமிழ் மக்களுக்கு இந்த நாட்டின் எந்த ஒரு உரிமையுமில்லை; அவர்கள் பௌத்த சிங்கள மண்ணை ஆக்கிரமித்தவர்கள் - எனப்பிரகடனம்
9. 1978 இல் ஜனாதிபதி ஆட்சியாப்பு இதனால் ஜனாதி சர்வவல்லமையுங் கொண்ட ஜனதிபதியாக்கப்பட்டமை
10. திட்டமிட்ட குடியேற்றம் வடக்கு-கிழக்கில் மேலும் தீவிரமாக்கப்பட்டது. வட - கிழக்கு மாகாணங்களில் 1921 இல் 4% ஆக இருந்த சிங்களவர் 1981 இல் 13.2% ஆக்கப்பட்டனர். வடக்கு - கிழக்கைப் பிரிக்க முல்லைத்தீவு - திருமலை இடைப்பட்ட மணலாற்றில் திட்டமிட்ட குடியேற்றங்களைப் பற்றி பிரச்சினையெதுவும் எழவில்லை.

இவை காரணமாகத் தேசிய உணர்ச்சி கொண்ட தமிழர் பலருங் கூடப் பிரிவினை வாதத்தை ஆதரிக்கத் தொடங்கினர். தமிழர் கூட்டணி 1977 இல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த

**தமிழ் ஈழம்**

எனும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. மேற்கொண்டும் இந்த 1977 இல் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களால் முன்னர் எக்காலமும் இல்லாதவாறு தமிழர் நலன்கள் பலவும் பாதிக்கப்பட்டுந் தென்னிலங்கையில் பெருந்தொகையான தமிழர் கொலையுண்டனர். அரசியல் வாதிகளான தமிழர் அரசின் போக்கை எதிர்த்து கொழும்பில் இருந்த சத்தியாக்கிரகத்தின் போது அநாகரிகமான வகையில் காடையர்களினால் துன்புறுத்தப்பட்டனர்.

இவை போன்ற பல காரணிகளாலும் தமிழ் வலிபாரிடையே தீவிரவாதம் தலையெடுத்தது. போராளிக் குழுக்கள் தோற்றின. மறைந்திருந்து அரசுடமைகட்கு சேதம் விளைவித்தனர். சனநாயகவாதிகளாயிருந்த தமிழ் அரசியல் வாதிகள் யாழ். கச்சேரியில் நடத்திய மறியற் போராட்டத்தை பொலீஸாருடன் சேர்ந்து இராணுவமும் தலையிட்டு குண்டாந்தடிப் பிரயோகஞ் செய்தும் கலைத்தது.

## இலங்கை இராணுவம் யாழ் வருகை

இவை காரணமாக யாழ் வந்த ராணுவம் குருநகரில் நிலைகொண்டது 1977 இல் யாழ். நகரச் சந்தை முற்றாகச் சேதமாக்கப்பட்டது. கடற்கரை வீதியிலுள்ள பழைய கிட்டங்கிக் கட்டிடங்கள் பலவும் குண்டடிகளால் அழிக்கப்பட்டன. வடக்கு நோக்கியுள்ள யாழ். குடியிருப்பு பிரதேசங்களிலும் செல்லடிக்கப்பட்டன. உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்டன. மறைந்திருந்த போராளிக் குழுக்கள் ஆயுதமெடுத்து நேரடித் தாக்குதல்களும் தொடங்கினர். கண்டபடி இளவயதினரை வாலிபரைப்பிடித்துத் துன்புறுத்தினர் இதனால் பலர் பயந்து வெளிநாடுகள் செல்லத் தொடங்கினர் இந்தியாவிற்கு - அண்மையிலுள்ள தமிழ் நாட்டிற்கும் அகதிகளாகப் பலர் ஓடினர். குருநகரிலிருந்து ராணுவம் யாழ். கோட்டைக்கு இடம்பெயர்ந்தது. இராணுவ அட்டூழியங்கள் மேலும் கூடின. கோட்டையினுள் வந்திருந்த சிங்கள அரசியல் வாதி ஒருவரின் தூண்டுதலால், தென்கிழக்காசியாவிலேயே முதல்த்தரமானதென்று கருதப்பட்ட யாழ் நூல் நிலையம் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டது. 1984 – 85 ற்கு இடையில் யாழ் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம், வீரசிங்க மண்டபம், ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கட்டிடங்கள், தொலைத் தொடர்புபேசி நிலையம், சத்திரச்சந்தியிலுள்ள கட்டிடங்கள், நகரசபைக் கட்டிடங்கள் பலவும் சேதமாயின. யாழ். மாநகரசபை பாழானது. நகர மக்கள் பாதுகாப்புக் கருதி தூர இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். யாழ். வியாபார நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. இடம் பெயர்ந்தன. மாநகரசபை கூட நல்லூருக்கு இடம் பெயர்ந்தது.

## இலங்கை இந்திய - ஒப்பந்தம்

1956, 1958, 1977, 1981 வகுப்புக் கலவரங்களைத் தொடர்ந்து 1983 இல் திட்டமிட்ட இனப்படுகொலைக்கு அரசும் உடந்தையாயிருந்ததெனலாம். 1981 — 87 இடைப்பட்ட வன்செயல்களினால் 16994 பேர் இறந்தனர். 5272 பேர் காயமடைந்தனர்.



1278 பேரைக் காணவில்லை. இளைஞர்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர். இதனால் வாலிபர் ஐரோப்பா, கனடா முதலிய பல வேறு இடங்கட்கும் அகதிகளாகச் சென்றனர். பெற்றார் தமது உடைமைகளை முற்றாக விற்றேனும் உயிர்ப் பாதுகாப்புக் கருதி தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினர். தாய் நாடாகிய இந்தியாவிற்கும் அகதிகளாக ஏராளமானோர் குடும்பங்களாகவும் சென்று தஞ்சமடைந்தனர். அவ்விடம் தமிழ் நாட்டில் நெருக்கடிக்குள்ளானது. எனவே இந்தியா இது விடயமாகத் தலையிட நேர்ந்தது. இலங்கை — இந்திய அரசுகளிளிடையே நடந்த பேச்சுவார்த்தையின் பலனாக 29—07—1987 இல் இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. சென்ற 10 வருடங்களாகப் போராடும் போராளிக் குழுக்கள் எதனையும் கலந்தாலோசியாது இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியினால் ஜே ஆர். ஜெயவர்த்தனாவுடன் பேசிக் கைச்சாத்தானது. இதனால் பின்னர் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

தமிழரின் தொன்று தொட்ட சாபக்கேடோ என்னவோ போராளிக் குழுக்களிடையேயும் கருத்து மோதல்களுண்டாகிப் பிரிவினைகள் ஏற்பட்டன. ஒன்றோடொன்று மோதின. உயிர்ச் சேதங்கள் பலவும் ஏற்பட்டன. விடுதலைப் புலிகள் இயக்கம் இவ்விடம் நிலைத்து நிற்க மற்றையவை இடப்பெயர்ந்து சென்றன. தொடர்ந்து நடந்த சில பின் விளைவுகளால் விடுதலைப் புலிகளுக்கும் — இந்தியாவுக்குமிடையே எதிர்பாராத விதமாய் கசப்புணர்வு ஏற்பட்டது.

1. குறித்த ஒப்பந்தம் தமிழர்களின் தாயகமாகவிருந்த வடக்கு—கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு அமைச்சின் கீழ் கொண்டுவந்ததாயினும் தொடர்ந்து இரண்டும் இணைந்தபடி இருப்பதா? பிரிவதா? என்று எடுக்கும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் மூலமே தீர்மானிக்கப்படும் என்றிருந்தது. மேற்கே தெதுறு ஓயா தொடக்கம் கிழக்கே வளவகங்கை வரை வடக்கு — கிழக்குப் பிரதேசம் ஓர் அரசின் கீழ் தமிழ்ப் பிரதேசமாக போத்துக்கீசர் வருகையின்போது கூட இணைந்திருந்தது. குறித்த வாக்கெடுப்பு வடக்கு — கிழக்கு தமிழர் தாயகம் — தமிழீழம் என்று போராடி வரும் கோட்பாட்டிற்கு எதிரானது என்பதால் போராளிக் குழுக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதுகாரணமாக விடுதலைப் போராளிகளில் — விசேடமாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அரசுக்குமிடையே முறுகல் நிலை உண்டானது. இந்தியாவின் ஆட்சியின் கீழ் இருந்த — முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீரம் இந்தியாவுடன் இணைந்தபடியிருப்

பதா? அல்லது பிரிந்து தனியரசாவதா? என்று கருத்துக் கணிப்பு வாக்கெடுக்க மறுக்கும் இந்தியா — இலங்கையின் வடக்கு — கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தொடர்வதற்கு கருத்துக் கணிப்பு வாக்கெடுக்க சம்மதித்ததேன்? என்று ஆசங்கை எழுப்பப்பட்டது. இலங்கையில் தமிழ் பேசுபவர்கள் 21.28 வீதம். இதில் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் 72 வீதம் பேர் வாழ்கின்றனர்.

மேலும்

2. சிங்களமும் — தமிழும் உத்தியோக மொழிகளாயிருக்கும். ஆங்கிலம் தொடர்பு மொழியாயிருக்கும்; இதனை நடைமுறைப்படுத்த பாராளுமன்றம் சட்டமியற்றும் — என ஒப்பந்தத்தில் காணப்பட்டுள்ளதனை நடைமுறைப்படுத்த ஜே. ஆர். அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3. பொலிஸ் படைக்கு 80 வீதம் அவ்அவ் மாகாணத்தில் இருந்தே தெரியப்படல் வேண்டும். மேலும் அந்தப் பிரதேச மொழி தெரிந்தவராயிருத்தலும் வேண்டும். இது சர்வ வல்லமையும் கொண்ட ஜனாதிபதி அரசால் பரிசீலிக்கப்படவும் இல்லை. நடைமுறையில் கவனித்தாவன செய்யவுமில்லை இவைபோன்று இன்றும் பல

(ஆளும் வர்க்கத்தின் தமிழ்ப் புறக்கணிப்புக்கு ஒரு சிறு உதாரணம் .— நுவரெலியா மாவட்டத்தில் 21 — 03 — 1988 ஆசிரியர்க்கான முழு நாள் கருத்தரங்கொன்று. 235 தமிழ்ப் பாடசாலைகள் 217 சிங்களப் பாடசாலைகள். கருத்தரங்கு முழுவதும் சிங்களத்திலேயே நடைபெற்றது. தமிழாசிரியர்கள் பாவம் )

## இந்திய ராணுவம் வருகை

இவை காரணமாக விடுதலை இயக்கம் குறித்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கொடுக்கவில்லை. இலங்கை ராணுவத்தோடு தொடர்ந்தும் போராடும் நிலைமை வளர்ந்தது இதனால் இந்திய ராணுவம் இலங்கை வந்தது. இந்திய ராணுவத்தோடும் 10.10.87ல் போராடும் நிலையுண்டானது. இலங்கை ராணுவம் இது காலவரை செய்த அட்டூழியங்களிலும் பார்க்க இந்திய ராணுவத்தால் மக்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. இந்திய ராணுவம் தொகையிலும் வலிவிலும் மிகவும் கூடுதலாக விருந்தமையால் போராளிகள் மறைந்திருந்தே எதிர்த்தனர். இந்திய ராணுவம் கோப்பாய் இராச வீதிச் சந்தியிலும் நிலை கொண்டிருந்தது. இதனால் எமது கிராமம் - கோப்பாய் பெரிதும் தாக்கமடைந்தது. ஒரு சிலவற்றை மாத்திரம் பின் தரப்படுகிறது.



இராச வீதிச் சந்திக்கு சுமார் 150 யார் தொலைவில் உள்ள எமது இராச வீதித் தோட்டத்தில் குழைத்தாழ்வை நடக்கிறது. ஆறு பேர் வேலை செய்கிறார்கள். வடக்கே விமானச் சத்தம் கேட்கிறது குண்டடிக்குப் பயந்து ஆயுதங்களைப் போட்டு விட்டு தென்னை மரங்கள் நின்ற கிணற்றடிக்கு ஓடுகிறோம். 1944 இரண்டாம் மகாயுத்தத்தின் போது விமானத் தாக்குதல் பாதுகாப்புப் பயிற்சியதிகாரி J. R. வேதவனம் அவர்கள் ஆரம்பப் பயிற்சி பெற்றவர் ஒருவர் சொற்படி நிலத்தில் விழுந்து படுக்கிறார்கள். ஒருவர் தென்னை மரத்தின் ஒதுக்குப்புறத்தில் ஒட்டி நிற்கிறார். அவர் இரைச்சலுடன் மேலே வட்டமிட்ட விமானத்தை அண்ணார்ந்து அவதானித்துவிட்டு துள்ளிக் குதிக்கிறார். இந்திய விமானம் எங்களைப் பாதுகாக்க வந்துள்ளது என்றவாறு உரத்துச் சத்தமிடுகிறார். விமானத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் போடப்படுகின்றன. ஓடோடிச் சென்று எடுத்து வாசிக்கப்படுகிறது. காலையில் கிழக்கில் சூரியனையும், மாலையில் வடக்கில் தாய் நாட்டையும் சிதம்பரத்தையும் பார்த்து வணங்கவும், தாய்த்திரு நாட்டைப் பெற்ற தாயென்று கும்பிட்டி பாப்பா - என்று பாடவும் பழக்கப்பட்டவர்கள் நாம். இலங்கை ராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்து தாய் நாடு எங்களைக் காப்பாற்ற; என்று பிரசுரம் வாசித்தவர்கட்கு பேரானந்தம். ஆனாலும் தொடர்ந்து வந்த இந்திய ராணுவத்தால் நமது நாடு — விசேடமாக நமது கிராமம் பட்ட கொடுந்துன்பங்கள் அனந்தம் இந்திய ராணுவத்தின் கொடுமைகளால் நமது கிராம மக்கள் பீதியுடனே தான் வாழ்ந்தனர்.

## இராச வீதிச் சந்தியில் இந்திய ராணுவ முகாம்

இலங்கை வந்த இந்திய ராணுவம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் நிலை கொண்டிருந்ததை விட கோப்பாய் வடக்கு இராச வீதி சந்தியில் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். பெரிய கூடாரங்களில் பாசறையமைத்திருந்தனர். பக்கத்தில் தோப்புக்களிலிருந்து பனைகளைத் தறித்து மண்மூட்டைகள் கொங்கிறீற்கற்கள் கொண்டு பல பாதுகாப்பரண்களும் நிறுவப்பட்டிருந்தன. குடிபெயர்ந்த வீடுகளிலிருந்து சீமெந்து ஓடுகளைக் கழற்றி வந்து சிறு கொட்டகைகள், மறைவிடங்கள் அமைக்கப்பட்டிருந்தது. தினமும் காலையில் ஆயுதபாணிகளாக குழுக்களாகப் புறப்பட்டு புலிகளைத் தேடுதல் நடத்துவர். பொதுவாக விடிந்ததும் ராணுவமும், பொழுது மறைந்ததும் புலிகளும் தென்படுவர். நேருக்கு நேர் சந்திக்கும் போது புலிகள் தந்திரமாய்த் தப்பித்துக் கொள்வர். புலிகள் மாற்றுருவுடன் தப்பிய பல சந்தர்ப்பங்களுமுண்டு தேடுதலின் போது அகப்படும் வாலிபரைத் துன்புறுத்தி முகாம் கொண்டு சென்று புலிகளைக் காட்டும்படி அடித்து விரட்டிய

பின்பு அனுப்புவர். 1987ல் அகதிகளாகப் புறப்பட்டோடிய பின் திரும்பி இராச வீதி வீட்டிலிருக்கிறோம். இடையிடை சூட்டுச் சத்தங்கள் கேட்டுப் பழகிவிட்டோம், எனது வீட்டு வளவின் வட புறமாய் இராணுவத்தின் சுடுபயிற்சி முகாமொன்றிருந்தது. தினமும் காலையில் சுடுபயிற்சி நடக்கும் இடையிடை முகாமைச் சுற்றியுள்ள நிலப்பரப்பைச் சுற்றி பெருவட்டமிட்டுத் தேடுதல் நடக்கும். இப்படியான ஒரு நாள் மேற்கேயுள்ள குடியேற்ற விடத்தில் தேடுதல் நடாத்தி வரும் போது வாசிகசாலையிலும்– பயந்தோடி வீடுகளுக்குள்ளும் ஒழித்திருந்தவர்களான 22 வாலிபர் வரை பிடித்து பக்கத்திலுள்ள வாழைத் தோட்டத்துள் கொண்டு வந்திருந்தினர். புலிகளைப் பற்றிய விசாரணை நடைபெறுகிறது. வாழைவேலியிலிருந்த கற்கிழுவைகளில் கதியால்களை முறித்துச் சுள்ளிகளை ஒடித்த தடியால் மோசமாக அடித்தனர். அழுகையொலி கேட்டு தூரத்தே நின்றவதானித்த பெற்றார் ஓடி வந்த போது ஆகாய வெடிச் சத்தம் போட்டுத் துரத்தினர். நாம் வீட்டிலிருந்து ஜன்னல் ஊடாகப் பார்த்தோம். சிலருக்கு சுள்ளி முறித்த மொக்கு குத்தி இரத்தம் வழிகிறது கண்டோம். ஜன்னலில் எங்களைக் கண்டதும் வீடு நோக்கி இருவர் வந்தனர். யான் பயத்துடன் சுவாமியறையிலிருந்த கட்டிலில் படுத்து விட்டேன். கதவுகள் திறந்தபடியேயிருந்தன. இருவர் வந்தனர்.

ஒருவர் விறாந்தையில் ஏறி உள்ளே வரும் சப்பாத்துச் சத்தம் கேட்கிறது. உள்ளே வந்தவர் வலப்பக்கந்திரும்பி பிளேற்றிலிருந்த சுவாமி படங்களைப் பார்க்கிறார். என்னைப் படுக்குமாறு சைகை காட்டி விட்டு சுவாமி படங்களைப் பார்த்தபடியே பின் காட்டாது சென்றார். மற்றைய அறைகளைப் பார்த்து விட்டு குசினியிலிருந்த எனது திருமதியுடன் உரையாடல் கடுந்தொனியில் நடக்கிறது. கூட வந்தவர் மொழி பெயர்க்கிறார். திரும்பி இருவரும் சென்றனர். இது மாதிரி எனது அயல் வீட்டிலும் விசாரணை நடக்கிறது. வெளியேயிருத்திய வாலிபர்களை இராச வீதிச் சந்தி முகாம் கொண்டு சென்று விசாரித்து விட்டு மாலை கருகும் நேரமே விட்டனர். குறித்த ரோந்து சுற்றிவளைப் பின் போது பயந்தோடி பற்றைக்குள் மறைந்திருந்தவர் சுடப்பட்டு உடனிறந்தமை பின்னால்த் தான் தெரிய வந்தது.

இராச வீதியருகிலுள்ள தோட்டத்தில் இறைப்பு முடிந்து கிணற்றடியிலிருக்கிறார்கள். இராணுவ சுற்றி வலைப்புத் தேடுதல் ஆரம்பமாகிறது. இரு இராணுவம் கிணற்றடிக்கு வருகிறது. தேடுதலின் போது தமிழ் தெரிந்தவருடனே தான் வருவர் கிணற்றடியிலிருந்த 21 வயதுடைய சிவேஸ்வரனுடன் உரையாடல் நடக்கிறது. முகாம் வருமாறு அழைப்பு. ராணுவம் சிவேசைக் கையில் பிடித்து இழுக்கிறது. தாய் கத்திக் கொண்டு மறு கையில்



பிடித்துத் தடுக்கிறார். ஆரவாரம் கேட்டு அயலே வீட்டிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த யான் செல்கிறேன். 24 வயது A/L படித்தவர் இறைத்துக் களைத்துப்போயிருக்கிறார் என்று யானும் கூறினேன். பழுப்பு நிறமுடைய அசாம் வீரர் கேட்பதாயில்லை. ஒரு கையில் ராணுவ பிடி மறு கையில் தாய்ப்பிடித்தபடி. இழுபறியில் சிவேஸ்வரன் நிலத்தில் விழும்போது பல் உடைந்து இரத்தம் பாய்கிறது. அவரது சட்டைப் பையிலிருந்து நிலத்தில் விழுந்த அடையாள அட்டையை ராணுவம் எடுத்துக் கொண்டது. கூட நின்ற தமிழ் தெரிந்த ராணுவ வீரர் சில அடி பின்னோக்கி நகர்ந்து விட வேண்டாம் என்று எனக்கு கை காட்டுகிறார். தமிழன் பாசம் அன்று உணர்ந்தேன். தாயை விட வேண்டாம் என்று மேலும் கூறினேன். இந்திய ராணுவம் பெண்களுக்கு சற்று மரியாதை என்பது தெரியும். தாயின் பிடிவாதத்தால் ராணுவம் கை விட்டு முகாம் வருமாறு கட்டளையிட்டு அடையாள அட்டையையும் கொண்டு சென்றது. அன்று தாய்ப்பிடி தளர்ந்திருந்தால் சிவேஸ்வரன் ராணுவ நெருக்குதலுக்கு உள்ளாகியிருப்பான். மூன்றாம் நாள்க்காலை தாய் முகாம் சென்று அடையாள அட்டையை வேண்டினார். பெரும் பிரயாசத்தின் பேரில் சிவேஸ்வரன் கொழும்பு அனுப்பப்பட்டார். சில காலம் தரித்து நின்று ஐரோப்பிய நாடொன்று முன் சென்ற நெருங்கிய உறவினர் துணையுடன் தங்கியிருந்தார். இந்த மாதிரியான அட்டூழியங்கட்குப் பயந்தே பல பெற்றார் தமதுடமைகளை விற்றுப் பிள்ளைகளின் உயிர்ப் பாதுகாப்புக்கருதி வெளி நாடுகட்கு அனுப்பினர் அனுப்புகின்றனர். பெரும்பாலும் ராணுவ அட்டூழியங்களால் அரசு திட்டமிட்டு ஆண்பிள்ளைகளையே கொன்றொழிக்கிறது. நமது கிராமத்தில் மேல் வகுப்பில் படிக்கும் ஆண், பெண் மாணவர் வீதாசாரம் 44 : 56 ஆகவுள்ளதனை அண்மைக் காலப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதனாலும் எதிர் காலச் சந்ததி பெரிதும் பாதிக்கப்படலாம். கோப்பாய் மாத்திரமல்ல அயலேயுள்ள பல கிராமங்களிலும் இதே நிலைமை தான்.

## கிராமத்தவர் வெளியேற்றம்

1987 ஐப்பசி முதல் வாரத்தில் ஒரு நாள்க்காலை அனைவரும் வீடுகளை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற ராணுவ கட்டளை பிறக்கிறது. வெளியேறியவர்கள் அண்மையிலுள்ள கோயில்களில் தஞ்சமடைந்திருந்தனர். ராணுவ நடமாட்டம் கூடுகிறது. அனைவரும் கிராமத்தை விட்டு வெளியேறுமாறு 2வது கட்டளை ஒலிபரப்படுகிறது. நாலாதிசைகளிலும் தங்கள் உறவினர் அறிமுகமானவர் இடங்கட்குச் சென்றனர் கிராமத்தில் கூடுதலானோர் வடக்கே நீர்வேலி சென்றனர். மேலும் எரிகணைத் தாக்குதல்கள் தொடரவே படிப்படியாக அச்சுவேலி

வரை சென்றார்கள் அப்பால் ராணுவம் நிலை கொண்டிருந்ததால் கிழக்கு நோக்கி மட்டுவில் சாவகச்சேரி கச்சாய் வரை சென்றவர்களுமுண்டு.

வடக்கேயிருந்து கோப்பாய் நோக்கி போராளிகளின் எதிர்ப்பூடாகவும் முன்னேறி வருகிறது கோப்பாய் எல்லை வரை வந்த ராணுவத்தை கோப்பாய் நாற்சந்தியில் காந்தி என்பவர் தலைமையில் நிலை கொண்டிருந்த புலிவீரர்கள் தடுத்து நிறுத்தினர். மோசமான செல்லடிகள் நடக்கிறது நாவலர் பாடசாலைக்கு வடபுறமாய் நாவலடி எனும் வளவில் புலிவீரர்க்கான முகாம் இருந்தது. அவ்விடத்தை நோக்கி நடந்த எறிகணைத் தாக்குதல்களால் சூழவுள்ள பனை. தென்னை மரங்கள் முறிந்தனவேயன்றி முகாம்கள் எதுவும் சேதமடையவில்லை சுமார் 10 நாட்கள் மோதல்களின் பின் ராணுவம் பின்னோக்கியது. குறித்த சந்திக்கும் நாவலடி வளவுக்குமிடையில் இருந்த கட்டிடங்கள் பலவும் அழிந்தன. கிராமங்களை விட்டு வெளியேறியவர்கள் திரும்பலாம் என்ற செய்தி கிடைக்கிறது 28.10 87 ல் வடக்கு-கிழக்கு நோக்கிச் சென்றவர்கள் திரும்பிய போது கோப்பாயைக் கடந்தும் நல்லூர் வரை இரண்டு நிரையாக வீதி வழியே நகர்த்திக் கொண்டு சென்று தத்தம் வீடுகளுக்குச் செல்ல அனுமதி வீதியிலேயே விடப்பட்டனர் வெளியேறியவர்களில் உடன் திரும்பியோர் தமது வீட்டுப் பொருட்கள் எதுவும் திருட்டுப் போகாதது கண்டனர். பிந்தி வந்தோர் வீடுகளில் சில உள்ளூர்க்கள்வர்களால் திருட்டுப் போயிருந்த விபரம் தெரிந்த போதும் முறையிட முடியாத நிலையில் வாளாவிருக்க நேரிட்டது.

## கிராமத்தில் உயிரிழப்புக்கள்

குறித்த மோதல் காலங்களில் கோப்பாயில் 100ற்கு மேற்பட்டோர் கொலையுண்டும் காயமடைந்துமுள்ளனர். கிளுவானை வீதியில் மாத்திரம் 11 பேர் கொல்லப்பட்டனர். குறித்த போது எனது குடும்பத்தில் மூவர் அகாலமரணமடைந்தனர். 1987 ஐப்பசி 12இல் நாமிருவரும் வீட்டிலிருக்கிறோம். மற்றையோர் கொழும்புத்துறை சாமியார் வீதி லோகேஸ் வீடு சென்று விட்டனர். விமான செல்லடிகள் மோசம். நாமும் இருகைப்பைகளுடன் புறப்படும் நேரம்; எங்களை அழைத்துச் செல்ல லோகேஸ் வருகிறார். 2 நிமிஷத்தில் மோசமான செல்லடி பக்கத்துப் பனைகள் முறிந்து விழுகின்றன. சிதறல்கள் பட்டு ஓடுகளும் சிதறுகின்றன. ஓய்ந்ததும் லோகேஸ் பக்கம் செல்கிறேன். சிகரெற் பிடித்தபடி லோகேஸ் சாய்கிறார். நெஞ்சிலும் அதே நேரில் பின்புறமும் காயம் கண்டேன். சப்தம் போட்டபோதும் பக்கத்தின் யாருமில்லை. பெரும் பிரயாசத்தின் பேரில் கொழும்புத்துறை கொண்டு சென்று மறுநாள் கிரியைகள் அஞ்சலி மலரில் விபரமாகவுண்டு. மேலும்;



ராணுவ கட்டளைப்படி அனைவரும் புறப்பட்ட போது வீட்டிலிருந்த தம்பி சுப்பிரமணியம் இராச வீதிச் சந்திக்கருகிலுள்ள தோட்டம் சென்றதும் திரும்பிவராததும் அயல்வீட்டு வயோதிபர் மூலம் அறிந்தோம். ராணுவத்தால் காலமாக நேரிட்டது. நிலாவரையிலிருந்து மாநகரசபைக்கு தண்ணீர் கொண்டு போதற்குரிய குழாய்கள் தாழ்க்க வெட்டிய அகழியருகே திருநெல்வேலிச் சந்தைக்கு விவசாயப் பொருட்கள் விற்கக் கட்டிக் கொண்டுபோன சைக்கிள்கள் பாட்டில் நான்கு கிடந்ததும் உரியவர்களைக் காணாததும் அறிந்தோம். காலமானவர்களைக் குறித்த அகழியில் போட்டு மூடியிருக்கலாமென விசாரணையின் போது அறிந்தோம். இராச வீதிச் சந்தி குறித்த காலப் பகுதியில் ஓர் கொலைக் களமாயிருந்தது. 9.10.90ல் இராசவீதிச் சந்தியை விட்டு ராணுவம் அகன்ற பின் அண்மையிலுள்ள தோட்டவேலியருகில் காணப்பட்ட எலும்புக்கூடுகள் எரிக்கப்பட்ட விபரம் தெரிந்தது. விமானம் வந்த போதிருந்த குதூகலம் ராணுவம் சந்தியை விட்டுச் சென்ற மாலையும் காணப்பட்டது. இராச வீதிச் சந்தி வெளியான பிறகும் யாழ் கோட்டையிலிருந்தும் பலாலியிலிருந்தும் இரவில் ‘பராலைற்’ றுக்கள் போடப்பட்டு எறிகணைத் தாக்குதல்கள் தொடர்ந்தன. சனங்கள் நன்கு பழக்கப்பட்டு விட்டார்கள். இரவில் ஒடிப்பதுங்க முடியாது பார்த்துக் கொண்டிருப்பர்.

## சுன்னாகம் மின் நிலையம் அழிப்பு

ஒருநாள் பகல் 10 மணியளவிலிருக்கும் வீட்டு விறாந்தையிலிருக்கிறோம். பொழுது மங்குவது தெரிகிறது. வெளியில் வந்து பார்க்கிறோம் மழைக்கோலம். வடக்கே கருமேகம் சூரியனை மறைக்கிறது முற்றத்தில் காயப்போட்டனவற்றை அவசரமாகக் கூட்டியள்ளுகிறார். அப்பால் கொடியில் காயப் போட்டனவற்றை ஓடிச் சென்று யான் எடுக்கிறேன், தெற்குப் பக்க அயல் வீட்டிலும் மழைவரப் போகுது ஓடி வாருங்கள் என்றழைத்து முற்றத்தில் மிதியாயில் காயப்போட்ட பழமிளகாயை அள்ளும் ஆரவாரச் சத்தங்களும் கேட்கின்றன.

தமது தோட்டத்து வாழைக்குலைகளை சுன்னாகம் சந்தைக்குக் காலையில் கொண்டு போய் விற்றுவிட்டு திரும்பி வந்த வீட்டுக்காரர் வீட்டாரின் ஆரவாரத்தைக் கண்டு எழுப்பும் சிரிப்

பொலி கேட்கிறது. சுன்னாகம் மின்சார நிலையம் விமானக்குண்டடியால் சேதமடைந்த பெரிய எண்ணெய்த் தாங்கிகள் தீப் பற்றியெரியும் புகை மண்டலமே அது என்று கூறுவதும் கேட்கிறது. குறித்த புகைமண்டலம் பல மணி நேரம் தொடர்ந்து காணப்பட்டது. இலங்கை விமானப் படையினர் கண்ணியமான சேவையிது. மின் நிலையம் தொலைந்தது.

## இன்றைய அவலநிலையைப் போக்க நடுநிலை ஆய்வாளரின் கருத்து

இலங்கை முழுவதிலும் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் தேசியரீதியில் சமாதானமாக வாழ்ந்து வந்தனர். ஜனநாயக அரசியல்முறையில் கட்சிரீதியான அரசியல் தோன்றி வடக்கிலும் தெற்கிலும் வகுப்பு வாதம் கக்கப்பட்டன. குறுக்கு வழிகளால் முன்னேறினர். ஆனால் தீவிரவாதம் தலைப்பட்டு போராளிக் குழுக்கள் தோன்றி வகுப்புக்கலவரங்கள் ஏற்பட்டு நாடு சீரழிந்து வருகின்றது. இந்த அவலநிலை போய் நாடு மீண்டும் அமைதி பெற வேண்டுமானால் ;

கனடாவின் பெரும்பகுதியில் ஆங்கிலரும் கியூபெக் மாகாணத்தில் பிரான்சியரும் பெரும்பான்மையாய் வாழ்கின்றனர். சுயநிர்ணய உரிமையுள்ள சமஷ்டி அரசியல்முறை அவ்விடம் ஏற்பட்டுள்ளதால் முன்னேற்றகரமான நாடுகளில் ஒன்றாக - அமைதியான நாடாக கனடா நிலவுகிறது.

இன்றைய நிலையில் மூன்றாவதொரு நாடொன்றின் தலைமையில் இரு பகுதியாரும் ஒன்று பட்டு பேச்சு வார்த்தை மூலம் - சுய நிர்ணய உரிமையுள்ள சமஷ்டி அரசியல்முறை ஏற்பட்டாலே நாட்டில் அமைதி நிலவ வழி பிறக்கும் என்பது அரசியல் ஆய்வாளரின் கருத்தாகும். நடுவு நிலைமையாளரின் பிரார்த்தனையும் அதுவேயாகும்.

## உணவு வகை

1925 காலப்பகுதியில் சுய தேவைக்காகத் தாங்கள் உற்பத்தி செய்த சிறுதானியங்கள் கிழங்கு வகை நெல் பனம்பொருள் என்பனவே மக்கள் உணவாகும். மத்தியானம் ஒடியற்கூழ், புளிக்கஞ்சி, அவித்த கிழங்கு வகை, சாமிச்சோறு, குரக்கன் பிட்டு உண்பர். ஆடி-புரட்டாதி மாதங்களில் காலை வேளையில் பனங்களி பிணையும் போது தெரிந்தெடுத்து வைத்திருந்த உருசியான பனம் பழங்களை காடி தோய்த்து அடுக்கி மூடி விடுவர். மத்தியானம் வீடு வந்தவுடன் தயாரித்து வைத்திருந்த பனங்காய்களை பிசைந்து பிழிந்துண்டபின் சற்று நேரம் தாமதித்தே மதிய உணவு. பனாட்டு இடைச் சாப்பாடு;



தோட்டம் உதவி வேலைக்குச் சென்ற பெண்கள் மாலை இருட்ட முன் வீடு வந்து இரா உணவுச் சமையல் நடக்கும். இரவுச் சாப்பாடு பெரும்பாலும் நெல்லரிசிச் சோறாயிருக்கும். 9 மணி வரையிலேயே உண்பர். விடியற்புற இறைப்பு மற்றும் வேலைகட்காக ஆண்கள் அதிகாலை எழுந்து தோட்டஞ் சென்று விடுவர். இரவே தயாரித்து வைத்திருந்த பழஞ்சோறும் கறியும் குழைத்து அல்லது வெள்ளென எழுந்து அவித்த குரக்கன், மரவள்ளி, ஒடியற்புட்டுக்கள் ஒன்று சம்பலுடன் சாப்பாட்டு மூடு பெட்டிகளுளிட்டு, பிள்ளைகளிடம் தோட்டம் அனுப்புவர். பிள்ளைகள் காலைச் சாப்பாடு கொண்டு போகும் போது ஆடுகளையும் கொண்டு போய் தோட்டத்தில் மேயக்கட்டுவர்.

பெண்கள் காலையெழுந்ததும் வீடுகளைச் சுத்தஞ் செய்து மெழுகுதல், காலையுணவு தயாரித்தல், பனங்காய் பினைதல், இரவு காய்ச்சி உறையிட்டு வைத்திருந்த தயிர் கடைதல், உரல் வேலை என்பன முடித்தே உபவேலைகட்குத் தோட்டஞ் செல்வர். தோட்டத்தால் திரும்பும் போது கறி வகைக்கான காய் பிஞ்சுகள் இலைக்கீரைகள் வகையும் கொண்டு வருவர். வீட்டிலுள்ள வயோதிபர்க்கு இலேசில் சீரணிக்கத்தக்கான உணவுகள் தயாரித்துக் கொடுக்கப்படும். சாதாரண விவசாயக் குடும்பத்தவரிடம் பால் மாடு ஒன்றிரண்டும் ஒன்றிரண்டு மறியாடும் நிற்கும். வீட்டில் பொதுவாக மோர், நெய் இருக்கும். உணவு வகைக்குத் தயாரிக்க தாளிதம், நெய்யிலேயே செய்வர். நேர்த்திக்கு கோயில்களில் நெய்மோதகம் அவிக்கப்படும். ஒரு சிலர் மருதடி விநாயகர், வல்லிபுர கோயில், பன்றித்தலைச்சி கோயில்கட்கு கூடாரம் கட்டி வண்டில்களில் சென்று நெய் மோதகம் அவித்து மாடுகள் நேர்த்திக்காகவும் படைத்து வழிபடுவர்களுமுண்டு,

## வன்னிக் குடியேற்றம்

1945 காலப் பகுதியிலிருந்து ஏற்பட்ட திடீர் விவசாய அபிவிருத்திகளால் போதிய விவசாய நிலமில்லாக் குறை நிலவியது. குத்தகைக்கு செய்த நிலங்கள் உரிமையாளரினால் மறிக்கப்பட்டுத் தாமே செய்தனர். உற்பத்திப் பொருட்களான மிளகாய், வெங்காயம் 1965 இலிருந்து உருளைக்கிழங்கு சந்தைப்படுத்தலிலும் இருந்த தாமதங்கள், ஆனையிறவு தடைமுகாம் எடுக்கப்பட்டமையால் நீங்கின உற்பத்தியால் தாமே கொண்டு

போய் கொழும்புச் சந்தையில் விற்பதற்கான லொறி வசதிகளுமிருந்தன.

இதே காலப்பகுதியில் 1949 இல் ஆரம்பிக்கப்பட்ட உப்பாற்றுத் திட்டம் சரிவரப் பேணப்படாமையால் அதன் மேற்குப் பகுதியிலிருந்த நன்செய் நிலங்களில் உவருறியதால் கைவிடப்பட்டன. தொண்டமனாறு பாலம் மறைமுகமாகத் திறந்து உப்புநீர் உள்ளே வரவிடப்பட்டது. சன்னிதியின் மேற்குப்புறமாயுள்ள உவர் ஏரிக்கூடாக உப்புநீர் வந்தாற்தான் இறால் விளையும் என்று நீர்வேளாளரும், குறித்தபடி உப்புநீர் பெருக்கினால் உள்ளே வரவிடுவதால் உப்பாறு முழுவதும் உவர் கூடி அருகேயுள்ள நன்செய் நிலங்கள் அரியாலை தொடக்கம் தொண்டமனாறு வரை 880 ஏக்கர் வயல்நிலம் காட்டாந் தரைகளாகின என்று நில வேளாண்மையாளரும் முறையீடுகள். இதனால் வல்வெட்டித்துறை துரைரத்தினம், கோப்பாய் சி. கதிரவேற்பிள்ளை பா. அ: இடையே கருத்து மோதல்கள். அரசின் வெளிநாட்டுத் தாராள இறக்குமதிக் கொள்கைகளால் அரிசி வேண்டியளவு இறக்குமதியாகின. இதனால் நெற்களஞ்சியமாயிருந்த வன்னிப் பிரதேசங்கள் கைவிடப்பட்டு காடு மண்டின. நீர்ப்பாசனக் குளங்களும் கவனிப்பாரற்றுத் தூர்ந்து போயின. 1940 காலப் பகுதியில் மத்தியதர வகுப்பார் சிலர் வன்னிப் பகுதி சென்று விவசாயத்திலீட்பட்டனர் தொடர்ந்து சென்ற சாதாரண விவசாயிகள் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டதனால் வன்னி நெற்செய்கை மலேரியாவால் சாவதைவிட இவ்விடம் பச்சைத் தண்ணீரையாவது குடித்துக்கொண்டிருக்கலாம்; என்று நிலமில்லாத விவசாயிகள் நினைத்தார்கள். இதுபோது தான் பாவனைக்கு வந்த டி. டி ரி. தெளிப்பால் வன்னிப் பிரதேசங்களில் மலேரியா குறைந்தது. இதனைத் தொடர்ந்து வன்னி விவசாயத்தில் ஆர்வம் முளைகொண்டது.

1953 காலப் பகுதியில் உதவி விவசாய மந்திரியாயிருந்த சாவகச்சேரி பா. உறுப்பினர் வே குமாரசாமி அவர்களது பெரு முயற்சியால், முன்னர் தூர்ந்துபோயிருந்த இரணைமடு, அக்கராயன், விசுவமடு முதலிய குளங்கள் சீரமைக்கப்பட்டு, வயலில் மண்டியிருந்த காடுகள் அழிக்கப்பட்டு வன்னிக் குடியேற்றத்திற்கான தூண்டுதல்களும் நடைபெற்றன. 26-06-53 இல் கோப்பாய் விவசாயிகள் சங்கப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்த வே. குமாரசாமி அவர்கள் ''வன்னிப் பகுதியில் நம்மவர்கள் குடியேறி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.'' அவர்கட்கு வேண்டிய அத்தனையும் அரசு மூலம் செய்துதர ஆயத்தமாகவுள்ளேன். காலத்தைத் தவறவிட்டால் உரிய காணிகள்



வேற்றுக் குடியேற்றங்களாகிவிடும். என்று உணர்ச்சி ததும்ப ஓர் அறைகூவல் விடுத்தார்.

எமது கிராமத்தில் முதன்முதல் கல்மடு குடியேற்றத்திற்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. போதிய விவசாய நிலமில்லாக் குறையுள்ளவர்களும், உவருறலால் கைவிடப்பட்ட நன்செய் வயல் நிலக் கமக்காரருமான பலர் குடியேற விண்ணப்பித்தனர். கல்மடுவில், வலிகிழக்கிற்கென ஒதுக்கப்பட்ட 25 நிலங்கள் கூட்டப்பட்டன, யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பிரதேசங்களில் குடியேறியோரில் கூடுதலானோர் நெடுந்தீவு, கோப்பாய்-இடைக்காடு பிரதேசங்களைச் சேர்ந்தோராவர். குறித்த குடியேற்றங்கட்கு அவ்வப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கங்களும் தூண்டுதல்களாயிருந்தன. கோப்பாய் வடக்கு கி. மு, சங்கம் விண்ணப்பங்கள் செய்வதற்கும், கிராமத்தில் தெரிவாகும் தொகையைக் கூட்டவும் தொடர்ந்து கல்மடு சென்று வேண்டிய உதவிகள் செய்யவும் பெரிதும் துணை போனது. கோப்பாய்ப் பகுதியிலிருந்து வன்னிக்கு இந்த வகையில் குடியேறியோரில் ஊக்கமுள்ள விவசாயிகள் சிலர் சீரும் சிறப்பும் மிக்கவராய் முன்னோடிகளாய் வாழ்வது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆரம்பத்தில் 1955-ல் கண்டாவளையில் மத்திய தர வகுப்பாருக்கு 10 ஏக்கர் வீதம் 150 பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டன தொடர்ந்து 1956-ல் 10 ஏக்கர் வீதம் நெற்காணிகளும் கொடுக்கப்பட்டன. 1958-ல் கல்மடுக்குளத்தைப் புனருத்தாரணஞ் செய்து ஆரம்பத்தில் 58 பேருக்குக் காணிகள் கொடுக்கப்பட்டன. படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு 10 ஏக்கர் மேட்டுக் காணியும் 5 ஏக்கர் தாழ் நிலமும் கொடுக்கப்பட்டது. 1976-ல் கிளிநொச்சியில் 602 இளைஞர்கட்கு $1\frac{1}{2}$ ஏக்கர் வீதமும் அக்கராயனில் இரண்டு ஏக்கர் வீதமும் வழங்கப்பட்டன. படித்த பெண்களுக்கான திட்டம் திருவையாற்றில் ஆரம்பிக்கப்பட்டு 176 பெண்களுக்குக் கொடுக்கப்பட்டது.

## உணவுப் புரட்சி

அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் வெளிநாட்டு உணவு வகைகள் அரிசி என்பன தாராளமாக இறக்குமதியாகின பர்மாவிலிருந்து அரிக்கன் அரிசி மூடைகள், இந்திய குத்தரிசி என்பவற்றுடன் வெங்காயம் மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களும் வேண்டியளவு இறக்குமதியாகின. இதனால் உள்

ளூர் உணவுப் பொருட்கள் - சிறுதானிய உற்பத்தி என்பன அருக விடப்பட்டு புகையிலை, வாழை முதலிய காசுப்பயிர்கள் செய்தலில் நாட்டம் கூடியது. கோதுமை மா பாவனை 1942-ல் ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பட்டினிச்சாவு நிகழாது கூப்பன் முறையேற்படுத்தப்பட்டு இறக்குமதியில் கிடைத்த உணவுப் பொருட்களைச் சம பங்கீடு செய்யக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டன. இது வேளை அரிசி மூடைகளோடு கோதுமை மா மூடைகளும் பண்டகசாலைகளில் இறக்குமதியாகின. இது வேளைதான் கோதுமை மா பாவனைக்கு வந்தது. இதற்கு முன்னர் காற்றாடிப்பட்டங்கள், மங்கல காரியங்கட்கு அலங்கரிக்கவும் பாடைகட்குக் கடதாசியொட்டவும் மாத்திரமே தான் கோதுமை மாவில் கழிகிண்டிப் பாவிக்கப்பட்டது. கோதுமை மாப்பாவனை ஆரம்பமான போது, இம்மாவில் சரியான முறையில் உணவு தயாரிக்கத் தெரியாது தமது புத்திக் கெட்டிய வரை ஏதோ சரிக்கட்டி உண்டவர்கள் வயிற்றுக் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டனர்; இந்த மாவிலிருந்து உணவு வகைகள் தயாரிக்கும் மாதிரிப் பயிற்சிகள் கிராமங்கள் தோறும் அரசின் உதவியுடன் சமூக சேவாசங்கங்களால் செய்து காட்டப்பட்டன. படிப்படியாகக் குறித்த மாப்பாவனை கூடி வந்து இன்று எமது உணவில் முதலாம் இடத்தைப் பிடித்துக் கொண்டது. மேலும்; தேநீர்ப்பழக்கம் - முன்னர் கலியாண வீடு, புதுமனை குடிபுகல், வீடுவேய்ச்சல் போன்ற விசேட வைபவங்கட்கும், தோட்டத்தில் குளைத்தாழ்வை, பேண் கட்டல் சூடு மிதி போன்ற விசேட வேலை நாட்களுக்கு மாத்திரமேதான் தேநீர் - சீனியுடன் கலந்து அல்லது பனங்கட்டி சர்க்கரையுடன் பாவிக்கப்பட்டன. உலக மகாயுத்தந்தினை அடுத்து இலங்கை தேயிலைப் பிரசார சபையார் யாழ் கிராமங்கள் தோறும் தேநீர்க் கூடங்களமைத்துத் தங்கியிருந்து தயாரித்த தேநீர் காலை மாலை வேளைகளில் தினம் இரண்டு தரம் வீடுகள் தோறும் கொண்டு வந்து இலவசமாகக் கொடுத்தனர். இந்த வகையில் எமது கிராமத்தில் கோப்பாய்க் கோட்டை உள்வளவு வீடொன்றிலிருந்து தயாரித்து எமது கிராம மக்கட்குக் கொடுக்கப்பட்டது. சுமார் ஒரு வருடத்தில் தேநீர்ச் சபையாரின் முயற்சி முடிந்தது. மக்கள் தேநீருக்கு நன்கு பழக்கப்பட்டு விட்டனர், கிராமத்திலுள்ள வீதிகள் சந்திகள் மாத்திரமல்ல ஒழுங்கைகளிலும் தேநீர்க்கடைகள் மாத்திரமல்ல வீடுகள் தோறும் காலையெழுந்தவுடன் தேநீர். களைப்படைந்தவுடன் தேநீர், வந்தவர்களை உபசரிக்க தேநீர், சுப அசுப காரியங்கட்கெல்லாம் தேநீர் என்று தேநீர்ப்பாவனை முதலாம் இடத்தைப் பிடித்துக் கொண்டது. நீர் கருக்கி மோர் பெருக்கி உண்டகாலம் மறைந்து விட்டது. இன்று மருந்துக்குக் கூட மோர் வாங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. கடையில் சாமான்கள் வாங்கும் போது மா அரிசியையடுத்து தேயிலை சீனி தான் வாங்கப்படுகிறது. விவசாயிகள் வீடுகள் தோறும் இருந்த மோர்ப் பானைகள் இடத்தை இன்று தேநீர்க்கேற்றில்கள் பிடித்துக் கொண்டன. பாலுக்குப்பதில் பால் மாப்பைக்கற்றுக்கள் போத்தல்கள் பாவனைக்கு வந்துள்ளன. தினை, சாமை, வரகு, குறுத்தச்சாமை, கொள்ளு முதலிய சிறுதானிய வகைகளை இன்றைய சிறுபிள்ளைகட்குப் பார்வைக்குத் தானும் காட்ட முடியாதுள்ளது. இரண்டாவது மகாயுத்த காலம் நமது கிராம மக்களிடையே ஓர் பெரிய உணவுப் புரட்சியை உண்டாக்கியுள்ளதெனில் மிகையாகாது.



## பிள்ளைகட்குப் பெயரிடல்

நமது மூதாதையர் தம்பிள்ளைகட்கு தெய்வப் பெயர்களையே வைத்தனர். நாமகரணஞ் செய்தல் அரைஞாண்தரித்தல், காது குத்துதல், ஏடு தொடக்குதல் போன்றவற்றிக்கு சோதிடரைக் கொண்டு நாள் வைப்பித்து குரு அல்லது குடும்பத்திலுள்ள பெரியவர்கள் ஆசீர்வாதத்துடனே செய்யப்படும்.

பிள்ளைகட்குப் பெயரிடும் போது சோமன், சங்கரன், சதாசிவன் என்றவாறு சிவப்பெயர்களையும் கணபதி, விநாயகன், விக்கினேஸ்வரன் என்றும் முருகன், வேலன், கந்தசாமி என்றும் வைரவன் வீரபத்திரன் என்றும் ஆண் பிள்ளைகட்குப் பெயரிட்டனர். வயதேறினால் மரியாதைக்கு அர் விகுதி சேர்ந்து சோமர், கணபதியார், முருகர் என்றிவ்வாறழைப்பர். சற்றுநீட்டி சோமசேகரப், கணபதிப்பிள்ளை, முருகமூர்த்தி என்றும் பெயரிட்டனர். பெண்பிள்ளைகட்கு உமையம்மா, மீனாட்சி, வள்ளி, தெய்வானை, இலட்சுமி, சரஸ்வதி என்றும் கண்ணகி, சீதாதேவி, தமயந்தி என்றும் தருமன், அர்ச்சுனன். சகாதேவன் என்று காவிய நாயகர்களின் பெயர்களையும், நமது பூர்வீக நாகர்களது பெயர்களான நாகநாதன், நாகராசா, நாகம்மா, நாகபூஷணி எனும் பெயர்களையும் இட்டழைத்தனர் பல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் பெயரைச் சொல்லி அழைக்கும் போது இறைவன் பெயரை உச்சரித்ததாகவும் அழைத்ததான பலனும் பெறலாம். அறிந்தோ அறியாமலோ - தெரிந்தோ தெரியாமலோ இறைவன் பெயரை உச்சரிப்பதனால் சிவனருள் கைகூடும் என்று சிவராத்திரி புராணத்தில் அங்குலன் கதை அறுதியிட்டுச் சொல்கின்றது. விவசாயிகள் விடியற்புறம் எழுந்து தோட்ட வேலைகட்கு - இறைப்புக்குச் செல்ல ஆயத்தமாகும் போது சங்கரா, விநாயகா, வேலா, இராமா என்று பிள்ளைகளை நித்திரையால் எழுப்பும் போது கூவியழைப்பது ஆண்டவன் பெயரை உச்சரிப்பதாகவும் இரவி

ருட்டு வேளைகளில் விஷ செந்துக்களால் கூட எவ்வித விக்கினங்களும் வராது காப்பாற்றும் என்ற நம்பிக்கை. பின்னால் முத்து, இரத்தினம் பவளம், செல்வம் என்றவாறான பெயர்களும் கருத்து விளங்காத பிறமொழி வடமொழிப் பெயர்களும் சூட்டப்படுகின்றது சிந்தனைக்குரியதாகும் இன்றைய பெயர்கள்.

## நாட்டாசாரம்

எமது கிராமத்தில் விவசாய மக்களிடையே அனுட்டானத்திலிருந்த நாட்டாசாரங்கள் - ஒழுக்காற்று முறைகளில் 1920 காலப்பகுதியில் எனது சிறுபராயத்திலிருந்து அறிந்தவை இவை. சரி - பிழை என்பதற்காக வல்ல-முன்னர் இப்படியிருந்தன என்று அறிந்து கொள்வதற்காகவே எழுதுகிறேன். பின்னர் விஞ்ஞான அணுகு முறைகளாலும் நாட்டு நிலைமைகள் சீரினாலும், இவற்றுள் சில மாற்றமடைந்தன. சில மறைந்தன காரணமறிந்து கைவிடப்பட்டன போக ஏனையவை இன்று வரை தொடர்கின்றன. வேம்பினை இராசபயிர் என்பர். இதன் இலை, பூ, காய் யாவும் பயன்பட்டன. வெப்பு நோய் - தொற்று நோய்களை அம்மன் நோய் என்பர், வீட்டிலுள்ள ஒருவருக்கு குறித்த நோயொன்று கண்டால் படலையில் அல்லது வீட்டு வாசல் முகப்புக்கூரையில் ஒரு பிடி வேப்பிலையைச் சொருகி விடுவர். மற்றவர்கட்குத் தற்பாதுகாப்பிற்குத் தெரியப்படுத்தற்காக. வெள்ளி பூரணை விசேட நாட்களில் வீட்டைச் சுத்தமாக்கி மாலை வேளையில் வேப்பிலையைக் கருக்கித் தூபமிடுவர். தெய்வ அருள் சித்தியுடைய சாமியார்கள் வேம்பிலையால் அடித்து திருநீறிட்டுப் பார்வை பார்ப்பர். அந்தியேட்டி கிரியைகள் செய்து திரும்பும் போது படலையடியில் வைத்த தண்ணீரில் கால் கழுவி குறுக்கே போடப்பட்ட உலக்கையை எட்டிக்கடந்து, அப்பால் மூதாட்டிபொருவர் கொடுக்கும் வேப்பிலைகளைச் சப்பித்துப்பியபின்பே முற்றம் செல்லலாம் வேப்பம் பூவில் வடகம் செய்து உண்பர். இவை கிருமிநாசினி என்பது மூதறிஞர் கருத்து. வீட்டில் மண்ணெய் கை விளக்குடன் வேப்பநெய் விளக்கொன்றும் இருக்கும். சாமி படத்துக்கு வேப்பெண்ணெய் விளக்கு காட்டியே வழிபடுவர். வளவுகளில் அல்லது ஒழுங்கை முகப்பில் உள்ள வேப்ப மர நிழலில் ஒய்வு நேரங்களிலிருந்து வயோதிபர் உரையாடுவர்.

கும்பம் வைப்பதற்கு மாவிலை பிரதானம். சுபகாரியங்கட்கு மாவிலைகளை உட்பக்கம் தெரியமடித்து வாசலில் கட்டிய கயிறில் தொங்கவிடுவர். அசுப காரியங்கட்கு வெளிப்பக்கம் தெரிய மடித்துத் தூக்குவர். தோரணங்கட்டு ஓலைகளை வெட்டி இந்த வகையிலேயே மடித்து இடையில் மாவிலைகளையும் குத்தி நீளமான கயிற்றில் தொங்கக்கட்டுவர்.



அறுகம் புல்லுக்கும் விசேட இடமுண்டு. எந்த சுப, அசுப காரியங்களை ஆரம்பிக்கும் போதும் அறுகம் புல்குத்தி பிள்ளையார் பிடித்து வழி பட்டே ஆரம்பிப்பர். வறுமை மற்றும் காரணிகளால் குறித்த நேரத்தில் பிதிர்க்கடன் செய்ய முடியாத போது ஒருபிடி அறுகம் புல்லைப் பசுவுக்குக் கொடுத்து பிதிர்களை நினைத்து வழிபடுவர்.

நாள் கருமங்கள் செய்யும் போது தலைப்பு வாழையிலை பிரதானம். கும்பம் வைக்கும் போது வீட்டு வாசலுக்குத் தக நுனியிலையை இடப்பக்கம் பார்க்க வைப்பர். படையல், சாப்பாட்டிற்கும் இப்படியே தான் வைக்கப்படும். சுப காரியங்கட்கு படலையடியில் கதலி வாழை - பழக்குலை கட்டுவர். அசுப காரியங்கட்கு மொந்தன் குலை வாழை கட்டப்படும். வெளியே தொங்கும் தோரணம் மாவிலை குலை வாழை என்பன பார்த்து வீட்டில் நடந்த விசேட காரியம் எத்தன்மையது மங்கல காரியமா? அல்லவா என்பது தெரிந்து கொள்ளலாம்.

சுப அசுப முகூர்த்த பூசா காரியங்கள் எதற்கும் வெற்றிலை பிரதான இடத்தைப் பெறும். விவாக அறிவித்தலுக்குச் சிலர் வெற்றிலை வைத்தே சொல்வர். விவசாயிகளிடையே விவாகங்கள் பெரும்பாலும் 1920 காலப்பகுதியில் உறவு முறையிலேயே நடக்கும். வெளியூர்த் திருமணங்கள் மிகக்குறைவு, ஊர் மருத்துவிச்சி உதவியுடன் பிரசவங்கள் பெரும்பாலும் வீடுகளிலேயே நடக்கும். யாழ் அரசினர் ஆஸ்பத்திரியைத் தர்ம ஆஸ்பத்திரி என்பர். 1925 காலப்பகுதியில் பிரசவத்திற்கு அவ்விடம் போவது மிகக்குறைவு பெனசு விடாது. பொருளாதாரக் குறைவால் இணுவில், மானிப்பாய் ஆஸ்பத்திகட்குச் செல்வோரும் சொற்பமே, தேவையேற்படின் ஆயுள்வேத வைத்தியர் உதவி பெறப்படும். ஆண் குழந்தை பிறந்தவுடன் கூரை தட்டுவர். பெண் குழந்தையென்றால் அம்மி குழவி தட்டப்படும். கன்னிப் பிரசவத்திற்குக் கவனம் கூட. ஆண் குழந்தை பிறந்தவுடன் சுத்தப்படுத்தி புவியாளப் பிறந்தவரே வந்தீரோ என்றும் பெண் குழந்தையானால் அடுப்படி நாச்சியாரே வந்தீரோ என்றும் மருத்துவிச்சியார் வாழ்த்துவார் 1910 காலப்பகுதியில் ஆயுள் வேத டாக்டர் சின்னராசா பின் தொடர்ந்து டாக்டர் தியாகராசா கோப்பாய் வடக்கு கிராமத்தில் மருந்துச்சாலை திறந்து செயலாற்றினர். சுகாதாரத் தாதி லீலாநோனா சிங்கள அம்மாவும் பின் அருளம்மாவும் சேவையாற்றினர். கோப்பாய் ஆஸ்பத்திரி 1956-ல் ஆரம்பித்ததும் படிப்படியாக சகல பிரசவங்களும் அவ்விடமேதான்.

பிள்ளைகட்குப் பெரும்பாலும் குலதெய்வங்களின் பெயர்களே இடப்படும். துடக்குக் கழிவு முடிந்ததும் சுபவேளையில் குழந்தைகளை வழிபடும் கோயில் கொண்டு சென்று விசேட பூசைகள் செய்வித்து பெயரும் வைக்கப்படும் முதலாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது துடக்குமயிர் - தலைமயிர் வழிக்கப்படும். சோதிடரைக் கொண்டு சாதகமும் எழுதுவிக்கப்படும். சிறுமிகட்கு காது மூக்கு குத்தி, தோடு மூக்குமின்னி போடுவர். உடை, சிறு நிறத்துண்டு. சற்று வளர்ந்ததும் அரைச் சேலையும் சட்டையும் பெரியவளானால் சட்டையும் தாவணியும், படிக்கச் செல்பவர்கட்குப் பாடசாலை உடை, கூந்தல் நீளமாக வளர்த்துப் பின்னி விடுவர். சிறுவர்கள் அரைஞாண் தரித்தல் பிரதானம். சிறு துண்டு அல்லது சாரம் உடை, வாலிபரானால் வேட்டியும் சால்வையும் அல்லது துவாயும் கௌபீனம் கட்டாயம். படிக்கச் செல்பவர்கட்கு ஏற்ற பாடசாலை உடை, தலைமயிர் அளவாக விட்டு வெட்டப்படும், சிலர் குலாசாரப்படி மயிர் வளர்த்துக் குடுமி முடிவர். தலை முன் பக்கத்தை அரைவாசி மயிர் வெட்டுவித்து அல்லது வழிப்பித்துப் பின் பக்கத்தைக் குடும்பியாகக் கட்டுவர்களுமிருந்தனர். ஆண் பிள்ளைகளில் காது குத்தி தோடு போடுவர்களும் ஒரு சிலர். வயோதியர் சிலர் கடுக்கன் போட்டனர். தலை மயிர் வெட்டி மீசை வளர்த்த வாலிபர் சிலர் காணப்பட்டனர். சுமங்கலிகள் மாங்கல்யம் அணிந்தபடியே குங்குமப் பொட்டுமிடுவர். அமங்கலிகள் வெள்ளைச் சேலையை உடுப்பவர்களும் காணப்பட்டனர். பெண்கள் மாதவிலக்குக் காலங்களில் திண்ணையில் ஒரு பக்கத்தில் கரியால் வட்டமாகக் கோடு கீறி அதற்குள் அமைதியாக இருக்கவிடும் வழக்கமிருந்தது.

1619-ல் போத்துக்கேசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது இவ்விடம் அனைவரும் சைவர்களாகவே காணப்பட்டனர். சைவாலயங்கள் அனைத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கினர். ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்றில்லாது ஆலயப் பிரவேசத்திற்குத் தடை செய்யப்பட்டோர் சிலரை இலேசில் தமது சமயமாக்கினர். 1658ல் பறங்கியர் வந்தவுடன் சைவ வழிபாட்டைத் தடை செய்து சட்டமியற்றினர், வேவுகாரர் மூலம் வழிபடுவோரைக் கண்டு பிடித்து மொட்டையடித்தல், தண்டம், இராசகாய வேலை முதலிய தண்டனைகளை விதித்தனர். இதனால் பூரணை, அமாவாசை போன்ற விசேட காலங்களில் விரதமிருந்தோர் சாப்பிட்ட வாழையிலையை வேவுகாரருக்குப் பயந்து மடித்து கூரையுள் மறைவாகச் சொருகும் வழக்கமிருந்தது இப்படிச் செய்து வந்த எனது தாயார் உட்பட்ட வயோதிபர்கட்கு உரிய காரணங்களை விளக்கி, பெரியோர் வாயாலும் சொல்வித்து மிகு பிரயாசையின் பேரிலேயே கை விடச் செய்யப்பட்டது. பறங்கியர் தண்டனைகட்கு அஞ்சி அயலே கிணற்றடியில் அல்லது வெளியில் நிற்கும் பெரிய மரங்களடியில் கற்களையோ சிறு சூலங்களையோ மறைவாக வைத்து வழிபட்டனர். எமது கிராமத்திலுள்ள மகிழடி, இலுப்பையடி போன்ற ஆலயங்கள் முறைப்படி தூபிகட்டி கோயில்களாக்கப்பட்டுள்ளன. நாவலடி பலாவடி அரசடி பூவரசடி இடங்களில் சிறு கோயில் கட்டி வழிபாடு நடக்கிறது. தனக்கடி, வில்லையடி இடங்களில் முன்னர் வைக்கப்பட்ட கற்கள் மாத்திரமே இன்றும் வழிபாட்டிலுண்டு.



ஐயோ என்பது அவலக்குரல். கண்டபடி அவலக்குரல் எழுப்பக்கூடாது வீட்டில் தீப்பற்றல், கிணற்றுள் தவறி விழல், கள்வர் நுழைதல் அபாயகரமான காயங்கள் ஏற்படல் திடீர்மரணம் இவை போன்ற காத்திராப் பிரகாரமான அபாயங்கள் ஏற்பட்டால் மாத்திரமே அபாயக்குரல் ஐயோக்குரல் எழுப்புவர். சாதாரண போது ஐயோ என்றால் அருகிலிருக்கும் முதியவர்களால் வாயில் அடியும் ஏச்சும் விழும், இரவில் உறக்க நேரத்தில் யாராவது காலமாக நேரிட்டால் உடன் ஐயோ குரல் எழுப்புதல் இல்லை. விடியப்புறம் ஒரு ஆண்பிள்ளை மூன்று முறை கூக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்தே ஐயோ குரல் எழும். கூக்குரலின் பின்வரும் அவலக்குரலின் தன்மையை அயலவர் விளங்கிக் கொள்வர்.

சகுனம் பார்க்கும் வழக்கமிருந்தது. சுபகாரியங்கள் அல்லது தூரப்பிரயாணத்திற்கு சகுனம் பார்த்தே புறப்படுவார். ஒற்றைப் பார்ப்பார், இரட்டைச் சூத்திரர், அங்கவீனர், வெறும் பாத்திரங்கள், பிராணிகள் குறுக்கே போதல் ஒற்றைத் தும்மல் இவை கூடாதென்பது கருத்து, படலையடியில் தாயார் அல்லது சுமங்கலி நின்று பார்த்தே வழியனுப்புவார். நல்ல காரியத்துக்கு மூன்று பேர் செல்லக்கூடாது என்பது கருத்து, பெண்களுக்கு இடக்கண் தோள் துடிப்பதும் ஆண்களுக்கு வலம் துடிப்பதும் சுபகாரியங்கட்கு அறிகுறி, நல்லது நிகழப்போகிறதென்று சொல்வர், 1920-ல் காலப்பகுதியில் நெருப்புப் பெட்டி குறைவு, கைவிளக்குகளே பாவனையிலிருந்தன. விளக்கு ஒளி இலட்சுமி. பொழுதுபட்ட பின்பு அயல் வீட்டார் விளக்குக் கொளுத்த வந்தால் எரியும் தனது கைவிளக்கிலிருந்து வந்தவர் விளக்கைக் கொளுத்தியதும் தன் விளக்கை நூர்த்து வந்தவர் விளக்கில் கொளுத்திக் கொண்டே கொடுப்பர். இலட்சுமி வீட்டை விட்டுப் போய் விடும் என்ற நம்பிக்கையால் போலும்.

வெள்ளி, செவ்வாய் அல்லது அமாவாசை பூரணை ஜன்ம நட்சத்திரங்களில் வீட்டிலிருந்து பொருட்களை விற்கவே அல்லது கைமாறல், கடன், இரவலோ கொடுக்கக் கூடாதென்பதும், கொடுத்தால் திரும்பிவராது அல்லது இடைஞ்சல்களையுண்டாக்கும் என்ற நம்பிக்கையும் விவசாயிகளிடையே - வயோதிபரிடம் நிலவியது

போய்வா - மரபு வீட்டிற்கு வந்த விருந்தினர் அல்லது ஏனையோர் புறப்படும் போது வருகிறேன் அல்லது போய் வருகிறேன் என்று சொல்லியே செல்வதும் வீட்டுக்காரர் படலை வரை சென்று வாருங்கள் - போய் வாருங்கள் என்று கூறி வழியனுப்புவதும் மரபு போகிறேன்-போ என்பது அமங்கலமானது என்பது கருத்து. வீட்டிற்கு வந்த இரப்போரைக் கூட போ என்னாது போய் வா என்றே கூறியனுப்புவர். போகிறேன் என்பது இவ்வுலகைவிட்டுப் போகிறேன், சாகப்போகிறேன் என்ற கருத்தமையும் என்பதால் அப்படிக் கூறுவதனைத் தவிர்ப்பர் மஞ்சளும் ஓர் மங்கலப் பொருள். புதுமனை புகும்போது நாளுக்குக் கொண்டு போய் வைக்கும் பொருட்களுள் மஞ்சளும் இடம்பெறும் கோடிவஸ்திரம் தரிக்கும் போது தலைப்பொன்றில் மஞ்சள் பூசியே உடுக்கும் வழக்கமிருந்தது. கடன் கோடிபட்டும் புதன் கோடியுடு - என்பதும் புதுவஸ்திரம் தரிக்க வேண்டிய நாளைக் குறிக்கும் பழமொழி விசேட காலங்களில் மண் வீடுகள் சாணியால் மெழுகி மஞ்சளரைத்துத் தெளித்த பிறகே தான் சாம்பிராணி தூபமிடுவர். புதுவருடப்பிறப்பிற்கு முன் மண்சுவர்களை புது மண் கொண்டு மெழுகி மாவுடன் மஞ்சளும் கரைத்து அழகுபடச் சுவரில் தெளித்து விடுவர்.

புளி வருவாய்க்குரிய மரங்களிலொன்று தாவரங்களும் சுவாசிக்கின்றன பகலின் கரியமிலவாயுவை உட்கொண்டு பிராண வாயுவையும் இரவில் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவையும் வெளிவிடுகின்றன. மாறாக புளியமரம் இரவும் பகலும் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவையே வெளிவிடும். இதனாலேயே புளியமரங்களை வீட்டினருகில் வளரவிடுவதில்லை. புளியமரத்தின் பக்கமிருந்து வரும் காற்றும் வீட்டிற்குக் கூடாதென்பர். இதனாலேயே புளியமரங்களடியில் மக்கள் தங்கியிருந்து காலம் போக்குவதில்லை புளியமரங்களின் கீழ் அல்லது அருகில் புளிநிழல் விழும் வீட்டார் சுவாச சம்பந்தமான நோய்களால் பாதிப்புற்றிருத்தலை அவதானிக்கலாம். முதிர்ந்த பாரிய புளியமரத்திலிருந்தெழும் வாயுவினால் உண்டாகும் தீப்பற்றலை கொள்ளிவாய்ப் பேய் என்பர் பாரிய



முதிர்ந்த புளியமரங்களடிக்கு - காளிப்புளியடி போகாதீர் என்று சிறியவர்களை முதியோர் தடுப்பதுமுண்டு. எமது கிராமத்திற்குக் கிழக்கேயுள்ள உப்பாறுவற்றிச் சேறு மணக்கும் காலங்களில் எழும் இப்படியான வெளிச்சத் தொடர்கள் அந்தி வேளையில் காணப்பட்டதனை நாம் பார்த்துள்ளோம். மாலை கருகியதும் உரிய கடற்கரைப் பக்கம் செல்லவிடாது முதியோர் தடுப்பர்.

## தேசவழமைச் சட்டம்

1658-ல் ஒல்லாந்தர் ஆட்சி தொடங்கியது. யாழ்ப்பாணத்தாரிடையே நடைமுறையிலிருந்த சட்டமுறைகளைத் தொகுப்பித்து 16 12.1670-ல் தேசாதிபதியின் அங்கீகாரமும் பெற்று, தேசவழமைச் சட்டமாகியது. இது;

1) சொத்துரிமை பேணுதல்
2) சுவீகாரஞ் செய்தல்
3) காணி தோட்டம் முதலிய வைத்திருத்தல்
4) நன்கொடை
5) ஈடுகள் அடைவுகள்
6) வாடகை பற்றியது
7) கொள்வனவு விற்பனவு
8) ஆண் பெண் அடிமைகள்
9) வட்டிக்குக்கடன் கொடுத்தல்.

எனும் ஒன்பது பிரிவுகளாயிருந்தன. ஆரம்பத்தில் சமூக உறவுகளைச் சீர்செய்து ஆரியரால் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட பிராமணர், அரசர், வைசியர் சூத்திரர் எனும் அடிப்படையில் வேளாளரும் சூத்திரராகவே கருதப்பட்டனர். சற்சூத்திரர் அசற்சூத்திரர் என இருவேறாகக் கருதப்பட்டனர். கட்டுப்பாட்டு முறையில் பிராமணர் சைவக் குருக்கள் வேளாளர் அவர்களோடு உதவித் தொழில் முறையில் இணைக்கப்பட்டோரும், கட்டுப்பாடற்ற முறையில் வணிகர், உள்ளூர்க்கைவினைஞர்கள் சைவச் செட்டிமார், சேணியர், குயவர் முதலானோரும் காணப்பட்டனர். முன்னர் கட்டுப்பாடுள்ள குழுமத்தினர் இதனால் தங்களை விடுவித்துக் கொண்டனர் (இட்டம் போனவர்கள்)

மேலும் ஆறுமுகநாவலர் கல்வியமைப்பும் சமூக வட்டத்திற்குள்ளேயே இருந்தது, சேர் பொ. இராமநாதன், சமாசனம் சமபோசனம் என்பனவற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டுழைத்தார், சர்வசன வாக்குரிமையும் சமூகக் கட்டுப்பாடுகளற உதவி

யது. கிறீத்து இசுலாம் பௌத்தம் சமண மதங்களில் இல்லாத கட்டுப்பாடு கந்தபுராணக்கலாச்சாரம் உடையவர்களிடையேயிருந்து படிப்படியாக நீங்கியது குறித்த சட்டம் 1869-ல் ஆங்கிலராட்சியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமூகக் கட்டுப்பாடுகள் சம்பந்தமானவை நடைமுறைகளினால் தேவையற்றவையாகிவிட, சொத்துரிமைச் சட்டங்களே நடைமுறையிலிருந்தன.

தமிழ்க்கலாசாரம் கிறீத்தவர்களிடையேயும் கைக்கொள்ளப்பட்டு சந்தன குங்குமப் பொட்டு, பட்டு வேட்டி கட்டல் என்பன அனுட்டானத்திற்கு வந்தன. விவாகத்தின் போது மகள் பேரில் கொடுப்பது சீதனம், அன்புத் தொடர் காரணமாகக் கொடுப்பது நன்கொடை, பொது ஸ்தாபனங்கட்டுக் கொடுப்பது தருமசாதனம் கடன் பெற்றதற்குப் பொறுப்பாக ஈடு வைத்து மீட்கப்படும் வரை அதன் ஆட்சியும் வருமானம் ஈடு வாங்கியவருக்கே உரியதானது ஒற்றி, ஆண்டனுபவிப்பதற்குப் பிரதி வருடமும் கொடுப்பது குத்தகை, இவை காணி சம்பந்தமாக நடைமுறையிலிருந்தன. மேலும் ஈடு வைத்த தொகையிலும் கூட வட்டி அறவிடலாகாது. தனக்குப் பின் உரிமை சோல் விபரம் மரண சாதனம். பெற்றார் காலமானால் அவர்கள் பேரிலுள்ளவை சீதனம் கொடுத்தோர்க்குச் செல்லாது மற்றப் பிள்ளைகட்கே உரிமை, சந்ததியில்லாதவிடத்து மனைவி மறைந்தால் கணவன் வாழ் நாள் வரை மனைவியின் சொத்துக்களை ஆண்டனுபவிக்கலாம், விவாகமாகாதபிள்ளை மறைவுக்குப் பின் அவர் சொத்துரிமை சீதனம் பெற்றவர்கட்கும் பங்கு சேரும். தாய் காலமானால் அவர் சீதனம் தாய் வழிமுதுசமாகச் சீதனம் பெறாத பிள்ளைகட்கே சேரும் என்பவை நடைமுறையிலுள்ளன.

நமது கிராம மக்களினிடையே எழும் பிணக்குகளை குறித்த சுற்றாடலிலுள்ள முதியோர் அறிவறிந்தோர் சமரசமாகத் தீர்த்து வைப்பதும் மேலும் சில சமுதாயச் சங்கங்கள் நிறுவிய இணக்கச் சபைகளும் தேச வழமைக் கேற்பச் சீர் செய்து வைத்தன.

முக்குவச்சட்டம் - யாழ்ப்பாணத்திலுள்ள தேசவழமைச் சட்டம் போல மட்டக்களப்புத் தமிழரிடையே முக்குவச்சட்டம், முக்குவரையும் வேளாளரையும் பாதுகாக்கவிருந்தது. சிறைக்குடி எனும் உதவித்தொழிலாளர்கள் முக்குவருக்கு 7 குடிகள் வேளாளருக்கு 12 குடிகள் சீர்பாதருக்கு 13 குடிகள் இருந்தனர். யாழ்ப்பாணம் நிலப்பிரபுக்களைப் போலன்றி போடியார் என அழைக்கப்படும் நிலப்பிரபு உண்மையான விவசாயியாகவேயிருந்தார். 1970 அளவில் கொண்டு வரப்பட்ட காணியுரிமைச் சட்டத்தால் செய்கையாளர் கூடிய இலாபத்தை அடைந்தனர்,



# இடப் பெயர்கள்

ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து எம்மிடையே அவர்களது மொழிச் சொற்கள் சில இடம் பெற்றுள்ளன. பறங்கியர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் மற்றும் ஊர் குறிச்சி காணிப் பெயர்கள் பலவும் பேச்சிலும் எழுத்திலும் இடம் பெற்றுள்ளன.

அலுமாரி, அலவாங்கு, சப்பாத்து எனும் போத்துக்கீச சொற்களும் சால்வை கமிசு கழிசான் கதிரை வாங்கு கடதாசி பேனை தோம்பு தோணி கரத்தை போன்ற ஒல்லாந்த சொற்களும் இன்றும் நமது கிராமத்தவரால் பேசப்பட்டு வருகிறது. கார், வான், பஸ். சைக்கிள் அநேக ஆங்கிலச் சொற்கள் இன்றும் அனைவரது பேச்சு வழக்கிலுண்டு. குறித்தவற்றிற்குத் தூயதமிழ் சொற்கள் அறிமுகப்பட்டுள்ள போதிலும் சாதாரணமான பேச்சு வழக்கிற்கு இன்னும் வரவில்லை,

ஒல்லாந்தர் 138 வருடமாண்டனர். 1558-ல் மன்னாரையும் 1624-ல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினர். யாழ் கோட்டையை 1624-ல் ஆரம்பித்து 1632-ல் கட்டி முடித்தனர் 'கயிட்ஸ்' எனும் கடற் கோட்டையை ஊர்காவற்றுறையில் கடல் மலை மேல் கட்டினர். இவர்கள் இவ்வாறு அரசியலுக்கானவற்றுடன் தமது சமயத்தையும் பரப்பிய வரலாறு இந்நூலில் பிறிதோரிடத்துண்டு. பறங்கியர் தென்னிலங்கையை ஏற்கனவே பிடித்து அவ்விடம் தமது நாகரிகத்தை வளர்த்தனர். இன்றும் சில்வா பெர்ணாண்டோ சொய்சா என்று பெரிய இடத்துப் பெயர்களுமுண்டு. அது போனறு யாழ்ப்பாணத்திலும் சைவத்தையும் தமிழையும் மழுங்கடிக்கத்திட்டமிட்டனர். ஆரம்பக்கட்டமாக யாழ்ப்பாணத்திலுள்ள காணிகட்கு தோம்பு எழுதி வரியறவிட எண்ணி சிங்கள முதலிமாரை இவ்விடம் கொண்டு வந்து ஊர் குறிச்சி காணி அனைத்துப் பெயர்களும் எழுதும் போது வேற்று மொழிப் பெயர்களாகவே எழுதப்பட்டன. நல்லூர், திருநெல்வேலி, இருபாலை, நீர்வேலி போன்ற சில பெயர்கள் தவிர இணுவில், மட்டுவில் போன்று 'வில்' விகுதி சுன்னாகம் சூராவத்தை போன்று கம, வத்தை விகுதி பெற்ற பெயர்களும் அனைத்தும் கிராமத்தவர் விளங்காத வேற்றுமொழிப் பெயர்களே. இவை சம்பந்தமான விபரம் யாழ் வைபவகௌமுதி எனும் நூலில் விரிவாகக் காணலாம்.

எமது கோப்பாய்க் கிராமத்து குறிச்சி பெயர்களில் மடத்தடி கோட்டைவாய்க்கால் பிராமணரோடை நாவற்கட்டை சீரோடை அரசடி குமாரியோடை சங்குதோட்டம் உதயம்பனை

குளங்கரை நாவலடி குயவன்குழி என்பன தமிழ்ப்பெயராயுள் ளன. ஏனையவை சில யாழ்வையவகௌமுதியின்படி:

உந்துவத்தை — உந்து — உழுந்து, வத்தை — தோட்டம்
உழுந்துத் தோட்டம்

| | | |
|---|---|---|
| தலம்வத்தை | — தலம் | — பனை |
| தியர்வத்தை | — தியர் | — நல்ல தண்ணீர் |
| கம்பாவத்தை | — கம் | — கிராம |
| நொங்கியவத்தை | — நொங்கிய | — நொங்கு |
| யார்வத்தை | — யார் | — ஒருவகைப்புல் |

சோனெழு — சோன் — எருக்கலை, எழு — காடு
எருக்கலங்காடு

| | | |
|---|---|---|
| தெல்லுளுவை | — தெல் | — ஆசனிப்பலா |
| கொட்டனோலை | — கொட்டன் | — நரி |
| உயனை | — பூந்தோட்டம் | |
| பலானை | — வயல் | |

மற்றும் பத்தக்கச்சி, திம்பனை, இராதம்பு, கொத்தம்பை, கட்டுப்பிலானை, நொந்தாளி, அம்பியவளை, வலத்தை போன்ற குறிச்சி தோட்டப்பெயர்கள் கருத்தறிதல் வேண்டும் ஏறக்குறைய அனைத்துக் காணிப் பெயர்களும் வேற்று மொழிப் பெயர்களே ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இங்கு தமிழர் செல்வச் செழிப் புடன் வாழ்ந்து வந்தனர். யாழ் தமிழ்மன்னர் ஆட்சி நடை பெற்றது தூயதமிழ் பேசப்பட்டது சைவம் நிலைத்திருந்தது எத்தனையோ தமிழ் நூல்கள் வெளியாகின சங்ககாலத்தில் யாழ் தமிழ்ப்புலவர்களும் இடம் பெற்றிருந்தற்குச்சரித்திரமுண்டு போத்துக்கீசர் ஒல்லாந்தர் வருகையால் தமிழும் சைவமும் அருகின - கருகின. பின் வந்த ஆங்கிலேயராட்சியில் சமயசுதந்திரம் இடம்பெற்று தமிழும் சைவமும் முளைவிடத் தொடங்கின

பறங்கியர்களைப் பற்றி நமது சிறுபராயத்தில் வேடிக்கை யாகப் பாடிய இரு பாட்டுக்கள்

சுன்னாகம் சந்தையிலே பறங்கியர்
சுங்கானைப் போட்டு விட்டாராம்
பார்த் தெடுத்துத் தாறவர்க்கு
பறங்கியர் பாதிச்சுங்கான் கொடுப்பாராம்



என்ன பிடிக்கிறாய் அந்தோனி நானும்
எலிப்பிடிக்கிறன் சிஞ்சோ ரே
பொத்திப் பொத்திப்பிடி அந்தோனி அது
பிட்டுக் கொண்டோடுது சிஞ்சோரே

(சிஞ்சோரே என்பது நயினார் என்பதுபோல கீழானோர் மேலானோரை விளிக்கும் பறங்கிச் சொல்)

இன்றைய நிலையில் எமது காணிகள் குறிச்சிகள் ஊர்ப் பெயர்களும் அவற்றினூடே செல்லும் ஒழுங்கைகள் வீதிகளின் பெயர்களும் அவற்றின் முன்னைய நிலைத் தமிழ்ப் பெயர்களாக அல்லது தற்போதைய சூழ்நிலைக்குத்தக மக்கள் நாளும்பொழு தும்கூறும்போது கருத்து விளக்கம் தெரிந்தநிலையில் கூற - எழுத வகை செய்யப்பட வேண்டும். அன்பர்கள்-முன்னோடிகள்-பொது மக்கள் முன்னேற்ற தாபனங்கள் இவற்றினைக் கவனத்திற்கு எடுத்து ஆவன செய்ய முன்வருவார்களாக.

யாழ் - பெருநிலப்பரப்பிலுள்ள தமிழல்லாத ஊர்ப்பெயர் கள் போன்றனவற்றையும் இயலுமான வரை முன்னைய நிலைக் குக் கொண்டு வர அல்லது அவ்வவ் நிலத்தின் தன்மைகட்கும் இன்றைய சூழலுக்கும் ஏற்ற தமிழ்ப் பெயர்களிட யாழ்முழுவ தற்குமான சமாசங்கள் ஒன்றியங்கள் முன்வந்தாவன செய்தல் வேண்டும்

## உப்பாற்றுத் திட்டம்

1940 ம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் கடலேரித்திட்டம் சம்பந்தமான அறிக்கையொன்றினை கௌரவ ச. பாலசிங்கம் அவர்கள் வெளியிட்டார், இதில் மகாவலிகங்கையிலிருந்து. கட லுக்குப்போகும் மித மிஞ்சிய நீரை வடக்கே திருப்பி அநுராத புரிக்குக் கொண்டு வந்து அங்கிருந்து கனகராயன் ஆறுமூலம் ஆனையிறவுக் கடலுக்குக் கொண்டு வந்து உப்பாற்றின் இருபக் கங்களையும் (தொண்டமானாறு, அரியாலை) அடைத்து நன் னீராக்கு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1948 அளவில் - வெப் - என்பவரின் அறிக்கையொன்று வெளியானது இதில்;

1. உப்பாற்றின் இருமருங்குகளையும் கடல்நீர் உள்ளே வராமல் தடுத்தல்
2. நீரைத்தேக்குதல்
3. உவர்த்தன்மையுள்ள நிலத்துக்கு உரப்பசளையிட்டு உப உணவுப் பயிர்ச்செய்கை நிலமாக்குதல்

4. காற்றாடிகளைப் பாவித்து இடையில் உள்ள உவர்நீரைக் கடலுக்கு அனுப்புதல்

5. ஆழங்குறைந்ததும் அகலதுமானதுமான கிணறுகள் தோண்டி செய்கை நிலத்தை விருத்தி செய்தல்

ஆகிய இந்த ஐந்து அம்சத்திட்டங்களும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

இத்திட்டம் அமுல் நடத்தினால் உப்பாற்றின் இருமருங்கிலுமுள்ள செய்கை பண்ணப்படாத 3000 ஏக்கர் வரையிலான தரவை நிலங்கள் நன்செய்நிலமாக மாறும் என எதிர் பார்க்கப்பட்டது. இதனையொட்டிப் பொதுஸ்தாபனங்கள் பலவும் நேரிலும் பா, அ. மூலமும் விண்ணப்பித்தன.

1940-ல் கோப்பாய்ப்பகுதிக் காரியாதிகாரியாக விருந்த கி. முருகேசம்பிள்ளை அவர்கள் இது விஷயமாய்ப் பெரிதும் ஊக்கினார். அரசாங்கம் இத்திட்டத்தினை அமுல் செய்ய முன்வந்து கடல் நீர் உள்ளே வாராமலும் மிதமிஞ்சிய நீரை வெளியேற்றவுங்கருதி 1949-ல் பிரதமராயிருந்த டி. எஸ். சேனநாயகா அவர்களினால் தொண்டமானாறில் அத்திவாரமிடப்பட்டது. தொடர்ந்து பாலம் கட்டப்பட்டு இரும்புக் கதவுகளும் பொருத்தப்பட்டன. தெற்கே அரியாலையும் இது போன்று பாலங்கள் அமைக்கப்பட்டன. உரியவாறு காற்றாடி இயந்திரமும் பொருத்தப்பட்டது.

தொடர்ந்து உப்பாற்றின் கரையோரமாய் மேற்கே 20' × 5' உயரமான நீண்ட தொரு மண்வரம்பு அரியாலை, சுப்புதூ வரை கட்டப்பட்டது. கடல்நீர் உள்ளே வராமலும் மிதமிஞ்சிய மழை வெள்ளத்தினை வெளியேற்றவும் குறித்த மண்வரம்பில் இடையிடையே மதகுகள் கட்டப்பட்டு 2" முதிரைப்பலகைகளினாலான கதவுகளும் பூட்டப்பட்டன.

இதன் பலனாக கரணவாய்ப்பகுதி உவர் இல்லாத தரையாக மாறியது. ஆவரங்கால் தரவை தோட்ட நிலமானது. கடல்நீர் வயல்களை மூடுவதில்லை. முதல்திட்டத்திலேயே இவ்விதமான நன்மைகள் கிடைத்தன.

எனினும் உப்பாற்றில் தொண்டமானாற்றினை யொட்டிய பகுதியில் இறால் வளர்ப்பும் செம்மணி கரணவாய்ப் பகுதிகளில் உப்புவிளைவிப்பதும் பாதிப்படைந்தது. காலகாலத்தில் இறால் வளர்ப்போரின் தூண்டுதலினால் கண்காணிப்பு இல்லா நிலை உருவாக்கப்பட்டு தொண்டமானாறு பாலக்கதவுகள் திறந்து விடப்பட நேர்ந்தது, இதனால் மீண்டும் கடல் நீர் உள்ளே வர



வழி கோலப்பட்டது. மேலும் கடலருகு மண்மேடுகளில் கட்டப்பட்டிருந்த கதவுகளுக்குப் பொருத்தப்பட்ட இரண்டங்குல தடிப்புள்ள முதிரைப் பலகைகளும் சீரான நிர்வகித்தல் இல்லாமையால் பூட்டுக்கள் உடைக்கப்பட்டுக் களவாடப்பட்டன.

இத்திட்டம் சரி வர அமுல்படுத்தினால் பத்து வருடங்களில் குறித்த தரவை நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறும் எனவும் வயல் நிலங்களின் அடியிலுள்ள உவர் நீரும் காலா காலத்தில் நன்னீராக மாறிக் கூடிய பலனைப் பெறலாம்; என எதிர் பார்க்கப்பட்டதும் வீண்போனது. தாராளமாகக் கடல் நீர் உள்ளே வந்தது. மழை நீரும் கடல் நீரும் ஒன்றாகித் தேங்கி நின்றது. உப்பாற்றினையடுத்துக் கட்டப்பட்ட மண்வரம்பு முன் போல், குறித்த வெள்ளம் கெதியில் வடிந்து போதலைத் தாமதப்படுத்தியது.

மேலும் குறித்த தரவையிலும் அதனையொட்டியிருந்த வயல்களிலும் மேலூறும் உவர், மாரி கால மழை வெள்ளத்தால் கழுவப்பட்டுக் கடலுக்குச் செல்வதும் தாமதப்பட்டது. இதனால் நன்செய் நிலங்களாயிருந்த வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறின. பெரும் போகத்தில் செய்யப்பட்ட நெற்பயிர்களும் தொடர்ந்து செய்யப்பட்ட பயறு குரக்கன் சணல் முதலிய சிறுதானியப்பயிர்களும் ஓரளவு பயிராகி வளர்ந்த நிலையில் உவர் ஊறலால் நுனிகருகி நாசமாகின. இந்நிலை தொடர்ந்தும் இருந்ததனால் நன்செய் செய்நிலங்கள் பலவும் கைவிடப்பட்ட நிலையில் இன்று பாழடைந்து காணப்படுகின்றன. கோப்பாய் கிராமச்சங்க இடப்பரப்பில் மாத்திரம் 300 ஏக்கர் வரையிலான செய்கை நிலம் பாதிப்படைந்து கைவிடப்பட்டுள்ளது. செய்கை நிலம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் அருகிலிருந்த உவர்த்தரையை நன்னிலமாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உப்பாற்றுத்திட்டம் வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் நூர்ந்த கதையாய் முடிந்த பரிதாப நிலையை அடைந்துள்ளது.

இரண்டாம் மகாயுத்த காலத்தின் போது கோப்பாய் வடக்கு கிராமத்தில் யாழ் - பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறமாய் கைதடி மானிப்பாய் வீதியின் வடபுறமாய் உப்பாற்றின் மேற்குப் பகுதியிலிருந்த தரவை நிலத்தில் ஆகாய விமானத்தளமமைக்கும் முயற்சி 20 4.42 திங்கள் ஆரம்பமானது. இதற்காக உப்பாற்றங்கரையோரமாயிருந்த தாழை மரக்காடுகள் வேரோடு பிடுங்கப்பட்டு எரிக்கப்பட்டன. மேலும் கைதடி மானிப்பாய் வீதியில் இருமருங்கிலும் நெருக்கமாக வளர்க்கப்பட்டிருந்த பாரிய பூவரச மரங்கள் யாவும் தறிக்கப்பட்டுப் பெருவெளியாக்கப்பட்

டது, பரீட்சார்த்தமாக 13 5.42 புதன் மூதன்முதல் இறக்கப்
பட்ட விமானத்தின் சில்லுகள் எதிர்பாராத விதமாய்ப் பெய்த
பெருமழையால் புதைந்து விமானம் சேதமாகியது இதனால்
இவ்விடம் விமானத்தளம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டுப்
பலாலிக்குக் கொண்டு போகப்பட்டது. இந்த விமானத்தளம்
அமைக்கும் முயற்சியால் அழிக்கப்பட்ட தாழை மரங்கள் இயற்
கையன்னை தந்த உவறுறிஞ்சிகள் எனச் சொல்லப்பட்டது. கடல்
நீர் வற்றிய காலத்தில் வேகமாக வீசும் சோழகக் காற்றினால்
எழும் கடலடி மண்புழுதி மண்டலத்தைத் தடுக்கும் வீதியருகில்
நெருக்கமாக நின்ற பாரியபூவரசு மரங்கள் அனைத்தும் தறிக்
கப்பட்டதனால் உரிய உவர்ப்புழுதி தாராளமாக வயல்களில்
படிந்தது. இவை காரணமாகவும் உரிய நன்செய் வயல்களில்
உவர்த்தன்மை கூடக் காரணமாயது.

உப்பாற்றுத் திட்டத்தினைத் தொடர்ந்து முன்னெடுக்க
முனைந்த வேளைகளில் பாராளுமன்ற அங்கத்தவர் கை கொடுக்க
முன் வரவில்லை. கைவிடப்பட்ட விவசாய நிலங்கள் சார்பில்
கோப்பாய்ப் பா அங்கத்தவரும் இறால் வளர்ப்பு சம்பந்தமாய்
வல்வெட்டித்துறை பா. அங்கத்தவரும் கருத்து மோதல்கள். தற்
போதைய நிலையில் உப்பாற்றினை யொட்டிய நிலங்கள் என்றும்
எங்கட்கே உரியது இன்றைய நிலையில் வன்னிப் பிரதேசங்களுக்
குக் கூடுதலாகச் செல்வோம்: என்று கூறி அதற்கான உதவிகள்
செய்தவர்களுமுண்டு.

17.2.73-ல் வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம்
யாழ் மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களத் தலைவர்களை
அழைத்து விவசாயிகளின் இன்றைய பிரச்சினைகள் எனும் கருத்
தரங்கினை நடத்தியபோது யாழ் உதவியரசாங்க அதிபராயிருந்த
தி. முருகேசம்பிள்ளை அவர்கள்

> ''வெப்—திட்டத்தின்படி தொண்டமானாறிலும் அரி
> யாலையிலும் அடைக்கப்பட்டு சரிவர நிர்வகிக்க முடி
> யாமலிருப்பதனால் அதனைக் கைவிட்டு கோப்பாய்-
> கைதடி வீதிப்பாலத்தையும் வல்லைப்பாலத்தையும்
> அடைத்து, தற்போது உப்பாற்றின் அடிமட்டமாயுள்ள
> தரையைப் பதித்து நீர் சேமிப்பு இடங்களாக்கி முன்
> னைய திட்டத்தினை ஓரளவு தொடருதல் சாலச்
> சிறந்ததாகும் ''

எனக்கூறியதும் இருவேறு அபிப்பிராயங்களையொட்டி
எழுந்ததொன்றாகும்.

ஒல்லாந்து தேசத்தில் கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள
தரையை பாரிய அணைகட்டித் தடுத்து நவீனமயப்படுத்தி நன்



செய் நிலமாக உருவாக்கப்பட்டிருப்பது போல உப்பாற்றின்
கீழுள்ள தரையையும் கடல்நீர் உள்ளே வராமல் தடுத்து நன்
செய்நிலமாக்கலாம்; இடையிடை பதித்து ஆழமாக்கி நீர்த்தேக்
கங்களாகவும் மாற்றலாம்; என்பதும் ஆலோசிக்கப்பட்டதனை
யும் கொண்டு செயலாற்றலாம். இப்பாரிய திட்டத்திற்கு இன்
றைய நிலையில் அரசினை எதிர்பார்க்க முடியாது. வெளிநாட்டு
உதவி நிறுவனங்களின் உதவிக்கு விண்ணப்பித்துப் பெற்று நிறை
வேற்ற முயற்சிக்கலாம்.

அண்மையில் 1998 மார்கழியில அரசாங்க செயலகத்தில்
இது சம்பந்தமாய் நடந்த ஆலோசனையின் போது உப்பாற்றுத்
திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று விண்ணப்
பவர்களையும் இறால் வளர்ப்பு உப்பு விளைவித்தல் முதலியன
கூறுபவர்களையும் கூட்டி ஆலோசனை செய்து சமரச முடிபிற்கு
வருதல் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது; வரவேற்புக்
குரியதொன்றாகும்.

## உவர்நிலநெல் - மாதிரிச்செய்கை

கைவிடப்பட்ட உப்பாற்றுத் திட்டம் மீண்டும் முன்னெடுத்
துச் சீர் செய்யப்படும் வரையும் உப்பாற்றினையடுத்துச் செய்கை
நிலங்களாயிருந்து கைவிடப்பட்ட உவர் நிலங்களிற்கு ஏற்றதான
பயிர் வகைகள் ஆராயப்பட்டது. உவர் நிலங்களில் பயிராகும்
நெல்லினங்கள் பற்றிக் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டது.
யாழ் விவசாயப் பகுதியார் யாழ் - பருத்தித்துறை வீதி அச்சுவேலி
வீதி முச்சந்திக்குக் கிழக்குப்புறமாய் உவர் நிலமாதிரிச் செய்கை
யொன்று 1960-ல் ஆரம்பித்தனர். ஒரு இன நெல் மாத்திரமே
உண்டாக்கப்பட்டது, குறித்த இனநெல் இந்த உவர் நிலத்துக்கு
ஏற்புடைதாயில்லாததாலோ சீராக நிர்வகிக்கப்படாமையாலோ
சரிவரவில்லை, தொடர்ந்து இவ்விடத்தில் பயிராகக் கூடிய வேறு
இனநெற்கள் மாதிரிக்குச் செய்ய அரச உதவியெதுவும் கிடைக்கப்
படாமலேயே குறித்த திட்டம் கை விடப்பட்டது.

கோப்பாய் வடக்கு மத்தி விவசாயிகள் சம்மேளனத்தின்
விண்ணப்பத்தின் பேரில் 12.7.92-ல் கோப்பாய் உதவியரச அதி
பர் காரியாலயத்தில் யாழ் - சகல திணைக்களத் தலைவர்கள்
விவசாயிகள் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இன்றைய சூழ்
நிலையில் அரசையோ வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியோ
உடன் எதிர் பார்க்க முடியாது; உள்ளூர் நிறுவனங்களின் உதவி
பெற்று 93 - 94 பெரும் போகத்தில் கோப்பாயில் உவர் நில
மாதிரிச் செய்கையை ஆரம்பிக்கத் தீர்மானமாகியது. காடு

வளர்ப்பு, புல்வளர்ப்பு, நீர்த்தேக்கங்கள் என்பன சம்பந்தமா உரிய திணைக்களத் தலைவர்கள் திட்டங்கள் தயாரித்தாவன செய்யவும் தீர்மானிக்கப்பட்டன.

24.12.92-ல் யாழ் அரச செயலகத்தில் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த யாழ்-மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமாய் ஆராயப்பட்டன. விவசாயிகள் மீன்பிடியாளர் உப்பு விளைவிப்போர் சார்பிலும் பலர் சமுகமளித்திருந்தனர் நீண்டநேரம் கலந்துரையாடல் நடந்தன. உவர் நில மாதிரிச் செய்கை வரும் 93 காலபோகத்தில் செய்ய முடிபானது. பிரதி மாதமும் யாழ் வளாகத்தில் துணைவேந்தர் துரைராசா தலைமையில் விவசாய அபிவிருத்தி பொருளாதார சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும். 4.11.92, 10.12.92 நடந்த கூட்டங்கட்கு யாழ்-விவசாய திணைக்களத் தலைவர்கள், பொறியியலாளர்கள் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பொ. மே. கழகத்தார் என்போர் சமுகமளித்திருந்தனர், உப்பாற்றுத்திட்டம், காடு வளர்ப்பு, புல் வளர்ப்பு சம்பந்தமாய் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன, அரசாங்க வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி பெற்று முன்னெடுத்துச் செல்ல முடிபானது.

5.8.93-ல் மேலதிக அரச அதிபர் திருமதி போல் அம்மா தலைமையில் நடந்த திட்டமிடல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில்;

1) 1993 காலபோகத்தில் கோப்பாயில் கைவிடப்பட்ட நன்செய் நிலத்தில் 75 × 30 மீற்றர் இடத்தில் உவர் நில மாதிரிச் செய்கையை திட்டமிட்டபடி ஆரம்பிப்பதெனவும் இதற்கான செலவினத்தில் 30 ஆயிரம் ரூபாயை அரச செயலகமும் மிகுதி 17 ஆயிரம் ரூபாவை பொ. மே. கழகமும் கொடுப்பதெனவும் கமநலச்சேவை நிலையமும் விவசாயிகளும் மேற்தேவையான மனித வலு உதவிகளைச் செய்வதெனவும்.

2) குறித்த மாதிரிச் செய்கை வெற்றியளிக்கும் வரை தொடர்வதெனவும் தீர்மானமானது.

இதன்படி 22.9.93-ல் கோப்பாய் அரச செயலர் இ. இளங்கோ தலைமையில் பல்வேறு திணைக்களத் தலைவர் விவசாயிகளின் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்த போது குறித்தபடி 75' × 30' தயார்ப்படுத்தி வைத்திருந்த பாத்திகளில் தனித் தனி ஏச் 4, ஏ. ரி 353, 350 பிஜீ ரக உவர் நெற்கள் விதைக்கப்பட்டன. உரியவாறு கண்காணிப்புக்களும் நடந்தன. முன்னைய நுனிக்கருகல் எதுவுமின்றி இரு இனங்கள் நல்ல விளைச்சல் தந்தன. அறுவடை விழா வெற்றி விழாவாகக் கொண்டாடப்பட்டது. விவசாயிகளினிடையே ஓர் புத்துணர்ச்சியை ஊட்டியது. இதற்கான மனித சக்தியூக்கம் விவசாய சம்மேளனம், விசேடமாகத் தலைவர் செ. தம்பியையா முன் நின்று உழைத்தமை பாராட்டத்தக்கது 1993 - 94 காலப் போகத்தின் போது கோப்பாய் அரசசெயலர் திரு. கேதீஸ்வரன் அவர்கள் முயற்சியால் இது சம்பந்தமாய் முன்னைய திட்டத்தினைத் தொடர்ந்து 2 ஏக்கரில் விதைக்கப்பட்டது. அருகில் விவசாயிகளும் விதைத்தனர் பெரு வெற்றி கண்டது அரச உதவியுடன் இதற்கான உரம் விதை நெல் முதலியன சகாய விலையில் அளிக்கப்பட்டது. மேலும் காடு வளர்ப்புத்திட்டம் ஆரம்ப முயற்சியாக சவுக்கு மரம், பனை, விவசாய ஆராய்ச்சிப் பகுதியால் திருநெல்வேலியில் மேடையிடப்பட்ட கருவேல் நாற்று தாழை, பூவரசு என்பனவும் நடப்பட்டன. 95 - 96 கால போகத்திற்கு விதைப்பதற்கு விவசாயிகள் பலர் தாமாகவே முன் வந்து பெயர்களைப் பதிந்தனர். 10 ஏக்கர் வரை விதைக்கப்படவிருந்தது. எதிர் பாராத வகையில் இராணுவ குண்டடிகளால் அகதிகளாக வெளியேற நேரிட்டதால் யாவும் அவ்வளவில் நின்று விட்டது.



# கோயில்கள்

## வடகோவை சித்திர வேலாயுத சுவாமி கோயில்

1870-ம் ஆண்டளவில் கோப்பாய் வடக்கில் அம்பலம் வேலுப்பிள்ளை என்பவர் சிறந்த முருகபக்தராயிருந்தார். பிரதி வருடமும் இந்தியாவிற்குத் திருத்தல யாத்திரை செல்லும் போது திருச்செந்தூர் முருகனையும் தவறாது சென்று வணங்குவார். கந்தசஷ்டி விரதத்தை மிகவும் பக்தி பூர்வமாக அனுட்டித்து வந்தார். முருகப்பெருமானுக்கு தமக்கு உரியதான ஊரியாட்டி எனும் காணியில் ஓர் ஆலயமமைத்து வழிபாடு செய்யும் எண்ணங் கொண்டு. இந்தியாவில் ஓர் வேல் செய்வித்துக் கொண்டு வந்து அவ்வாறே செய்தார். அக்காலத்தில் கோப்பாய் வடக்கில் இராதப்பு எனும் குறிச்சியில் (தற்போதும் இக்காணி அம்மா வளவு எனவே அழைக்கப்படுகிறது) வசித்த அவரது குருவான வேதக்குட்டிக் குருக்கள் என்பவரது ஆலோசனையின் பெயரில் கோப்பாய் சந்திக்கு அருகாமையிலுள்ள அவருரிமையான உந்துவத்தை எனும் காணியில் தொடர்ந்து குறித்த வேலாயுதத்தை பிரதிஷ்டை செய்து வணக்கத் தீர்மானமாயது. அம்பலம் வேலு

டைய மைத்துனரான கந்தர் சின்னத்தம்பி முதலானோருடைய உதவியும் பெற்று குறித்த உந்துவத்தை எனும் காணியில் கோயிலமைத்து உரிய வேலாயுதம் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபாடும் தொடர்ந்து நடந்து வந்தது. வேதக்குட்டிக்குருக்களே பூஷகராயுமிருந்து வந்தார் 1895-ம் ஆண்டு மூலஸ்தானத்திலிருந்து அர்த்த மண்டபம் வரை வைரக்கல்லாலும் மிகுதி சாந்தினாலும் கட்டப்பட்டு 1897-ல் கும்பாபிஷேகமும் நடந்தேறியது. தொடர்ந்து திருப்பணி வேலைகளும் நடந்து வந்தன. கோயிலமைக்கத் திருவுளம் கொண்ட ஊரியாட்டி எனும் காணியை கோயிலுக்கே தருமசாதனமுஞ் செய்தார்.

குறித்த கோயிலையும் அதற்குரிய அசைவற்ற அசைவுள்ள சொத்துக்களையும், வேதசிவாகமப்படி கோயிலையும் பராபரித்து நல்ல நிலைபரத்தில் வைத்திருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆலய மண்டபத்தில் கோப்பாய் வடக்கிலுள்ள சைவ சமயிகளை 1913-ம் ஆண்டு ஆனி மாதம் 20ந் திகதி ஓர் மகா சபையாகக் கூட்டி ஆக வேண்டியவைகளை யோசித்து மேற்படி கோயிலைத் தக்கபடி பராபரித்து விருத்தி செய்யும் நோக்கமாய் வடகோவைச் சித்திர வேலாயுத சுவாமி கோயில் தருமபரிபாலன சபை உதயமானது. குறித்த பரிபாலனசபைக்கு வடகோவையெங்கும் பரவலாக பின்வரும்

21 பேரும் நிர்வாக சபையினராகவும்.

1. வேலு சின்னத்தம்பி
2. வைரவி சின்னத்தம்பி
3. வயிரமுத்து சின்னப்பா
4. பூதத்தம்பி அப்பாத்துரை
5. முருகர் பொன்னையா
6. ஆறுமுகம் நாகமுத்து
7. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
8. ஐயம்பிள்ளை முருகர்
9. சின்னத்தம்பி மார்க்கண்டு
10. முருகேசு வைரமுத்து
11. கார்த்திகேசு சடையர்
12. கார்த்திகேசு சுப்பிரமணியம்
13. அம்பலவாணர் சின்னத்தம்பி
14. வேலு சின்னத்தம்பி
15. கணபதிப்பிள்ளை கந்தையா
16 ஆறுமுகம் தில்லையம்பலம்
17. கதிர்காமர் செல்லப்பா
18. வேலு செல்லப்பா



19. கணபதியார் சண்முகம்
20. விசுவர் இளையதம்பி
21. ஆறுமுகம் கார்த்திகேசு

குறித்த நிர்வாகசபையினர் கோயிலையும் அதற்குரியவைகளையும் பராபரித்தற்கு உதவியாக

1 கந்தர் சின்னத்தம்பி 4. அம்பலம் வேலுப்பிள்ளை
2. வேலாயுதர் முருகேசு 5. அப்பாக்குட்டி காசிலிங்கம்
3. வீரகத்தியார் சதாசிவம்

எனும் ஐவரையும் பஞ்சகர்த்தாக்களாகவும் மேற்படி திகதியிலேயே நியமனமாகினர்.

குறித்த பஞ்சகர்த்தாக்கள் கோப்பாய் வடக்கு கந்தர் விசுவாசித்தம்பி என்பவரை மானேசராக அவர் சம்மதத்துடன் தீர்மானித்து அவரது கடமைகளையும் வரையறை செய்து நியமித்தனர்.

இதற்கு அத்தாட்சியாக 1913-ம் வருடம் ஐப்பசி மாதம் 16ந் திகதி இலக்கம் 173, பிரசித்த நொத்தாரிசு சி. கெங்காதரையர் முன்னிலையில் பஞ்சகர்த்தாக்களும் மனேசர்களும்.

க. இளையதம்பி சு. சிவகடாட்சக்குருக்கள்
வே. சின்னத்தம்பி வே. பரமசாமிக்குருக்கள்

சாட்சிகளும் ஒப்பமிட்டு ஓர் தருமசாதன உறுதிமுடிக்கப்பட்டது.

1916-ம் ஆண்டளவில் கோபுரவேலைகளும் தொடர்ந்து கொட்டகை வேலைகளும நடைபெற்று நித்திய நைமித்திக பூசைகளும் ஒழுங்காக நடைபெறத்தொடங்கின,

1925-ல் இராமு சின்னத்தம்பி என்பவரால் நேர்த்திக்கடனுக்காக வள்ளிதெய்வானை சமேதரான ஆறுமுகப்பெருமான் திருவுருவம் செய்யப் பெற்று பிரதிஷ்டை செய்யப்பட்டது பிரதி வருடமும் ஆறுமுகப்பெருமான் பிரதிஷ்டை செய்த நாளில் விழாச் செய்வதற்காக தமது பத்தக்கச்சி எனும் காணியில் ஒரு பகுதியையும் தரும நன்கொடையாக எழுதி வைத்தார் இந்தக் காலத்தில் வேதக்குட்டிக்குருக்களின் மகன் சபாரத்தினக்குருக்கள் பூசகராயிருந்தார். அவர் ஓர் பூரண பொலிவுள்ள பக்தி பூர்வமான குருக்களாகச் செயலாற்றியதனையும் வழிபடுவோர் அவர் கையால் திருநீறிட்டால் சுகம் வரும் என்ற பூரண நம்பிக்கையோடு செய்வித்ததனையும் நேரில் யான் அவதானிக்க முடிந்தது

தொடர்ந்து ஆலய பிரகார மூர்த்திகள் அடியார்களினால் செய்யப்பெற்று உரிய இடங்களில் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளன. இவ்வாலயத்தில் நித்திய நைமித்திக பூசைகளில் கந்த ஷட்டி விரதம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. 1926-ம் ஆண்டளவில் வராம்பத்தை சி. மயில்வாகனம் (ஆயுள் வேத வைத்தியர் கதிரேசு கந்தையா என்போர் பயன் சொல்ல, ஆலய தர்மகர்த்தாக்களான கந்தர் சின்னத்தம்பி, சின்னத்தம்பி மார்க்கண்டு என்போர் கந்தபுராணம் படிப்பதனையும் நேரில் அவதானித்துள்ளேன்.

1926-ம் ஆண்டு அட்ஷய வருடம் சித்திராபூரணையிலன்று மு. நாகலிங்கம் உபாத்தியார் அவர்களுடைய அழைப்பின் பேரில் ஆலயமுன்றலில் கூடிய சைவப்பெரியார்களையும் உபந்நியாசகர்களையும் பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் ஆசீர்வதித்துப் பிரசாதமும் கொடுத்து வாழ்த்தியதனைத் தொடர்ந்து கந்தர் சின்னத்தம்பி தலைமையில் நடந்த கூட்டத்தில் பிறந்ததுதான் சரவணபவானந்த வித்தியாசாலை என்பது இன்றுள்ள சிலரது ஞாபகத்திலாவது மறையாது.

ஆலய மானேசராகவிருந்து அருஞ்சேவையாற்றிய கந்தர் விநாசித்தம்பி அவர்களது மறைவுக்குப் பின் அவரது நெருங்கிய உறவினரான அம்பலவாணர் கார்த்திகேசு அவர்களும் அவருக்குப் பின் அம்பலவாணர் சீனிவாசகமும் தொடர்ந்து 1940 வரை மானேசர்களாகக் கடமையாற்றி வேண்டிய திருப்பணி வேலைகளையும் செய்வித்ததனோடு நித்திய நைமித்திக பூசைகளும ஒழுங்காக நடைபெற ஆவன செய்தனர். பிரதி வருடமும் கந்த புராணம், சித்திரபுத்திரனார் கதை படிப்பதும் படிப்பு முடிவில மகேஸ்வர பூசையும், சித்திரைக் கஞ்சியும் ஊர் மக்கள் உதவியுடன் தவறாது நடந்தன,

தொடர்ந்து 1940 றகுப்பின் சி.நாகலிங்கம், மு. நாகலிங்கம், நா. சிவக்கொழுந்து நா. அம்பலவாணர் என்போர் முகாமையாளர்களாக- திருப்பணிச் சபைத் தலைவர்களாக விருந்து ஆலயப்பரிபாலனம் சீர்பெறவும் நித்திய நைமித்திக பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் உதவினர்,

26. 3. 30-ல் தேர் செய்வதற்கான முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டதாயினும் உருப்பெறவில்லை. 10. 12. 50-ல் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரியப்பட்ட திருவாளர்கள் வ. கந்தையா வீ. மார்க்கண்டு, சி. விசுவலிங்கம் என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட தேர்த் திருப்பணிச் சபை சேவையாற்றி



அடித்தள வேலைகள் வரை செய்யப்பட்டன. மேற்கொண்டு மு. பரமலிங்கம், சி க. சுப்பிரமணியம், மு குமரையா என்போரைக் கொண்ட தேர்த் திருப்பணிச் சபை தொண்டாற்றி 1967-ல் குறித்த செய்லகைத் தேர்வேலைகளைப் பூர்த்தி செய்தது. மேலும் வகுப்புக்கலவரம் காரணமாக அனுரதபுரியிலிருந்து போய் வந்த வர்த்தகரான இ இராமலிங்கம் அவர்களது ஊக்கத்தினால் தேர்க்கொட்டகையும் செய்து பூர்த்தியாக்கப்பட்டு ஆலயம் பூரண பொலிவு பெற்றது. மேலும் குறித்த திருப்பணிச்சபை தன்முயற்சி நிறைவெய்தியதும் மிகுதிக் கையிருப்பாயிருந்த பணத்தை ஆலயத் திருச்சபையிடம் கையளித்தது.

முன்னைய ஸ்தாபகர்களால் 1897 லிலும் தொடர்ந்து 1930 லிலும் கும்பாபிஷேகம் நடைபெற்றதனைத் தொடர்ந்து 10, 12. 1960 புதன் கிழமை கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.

வே. சபாரத்தினக் குருக்களுக்குப் பின் அவரது பேரனார் சோ. சுப்பிரமணியக் குருக்கள் பூசகராகினார், இவரது சாந்த குணமும் நிறைந்த கல்வியும் சொல்லாற்றலும் ஊர்மக்களாலன்றி வெளிக் கல்வியுலகத்தாலும மதிக்கப்படும் அளவிற்கு உயர்ந்தது இதனால் இவருக்கு சித்தாந்த பானு பட்டம் வழங்கப்பட்ட போது பெருவிழா எடுத்து அழகிய மலரொன்றும் வெளியிடப்பட்டது.

குறித்த ஆலயத்தை மையமாக வைத்து மு. நாகலிங்கம் ஆசிரியர் பூரணைத் தினங்களிலும் மற்றும் விசேட தினங்களிலும் சைவப் பெரியார்களை அழைத்து உபந்நியாசம் கதாப்பிரசங்கள் என்பன செய்வித்து சைவ அறிவை வளர்க்கப் பேருதவி புரிந்தார், அவருக்குப்பின் பண்டிதர் எஸ். கந்தையா அவர்கள் தலைமையில் 1956-ல் உதயமான ஞான பண்டித சைவ இளைஞர் சங்கத்தார் அதே கைங்கரியங்களைத் தொடர்ந்து செய்வித்து வந்ததனோடு சிறுவர்களிடையே பேச்சு கட்டுரை மனனப் போட்டிகளை நடத்தி சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பேருதவி புரிந்து வருகின்றனர். அண்மையில் பொ. விக்கினேஸ்வரலிங்கம் தலைமையில் ஸ்தாபிதமான வடகோவை இந்து இளைஞர் சங்கத்தாரும் கொடி விற்பனை நன்கொடைகள் மூலம் வேண்டிய நிதியுதவிகள் பெற்று சமயம் கல்வி பொருளாதார உதவிகளிலும் செயலாற்றி வந்துள்ளனர்.

1968லிருந்து சீ. க. சுப்பிரமணியம், செ. நடேசன் பின் பொ. விக்கினேஸ்வரலிங்கம், மு நல்லையா, சி. கந்தையா என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட திருப்பணிச் சபை

செரிவாகிச் சிறப்புறச் செயலாற்றியது. பிள்ளையார் பிரகார மூர்த்தி மூலஸ்தானம் ஆறுமுகசுவாமி வசந்த மண்டபத் தூபி சிற்ப வேலைகள் தெற்கு மண்டப கொட்டகை வேலைகள் மிகுதி மண்டப வேலைகளுக்கான தூண்களும் நிறுவி 1986-ல் சிறப்பான வகையில் கும்பாபிஷேக விழாவையும் நடத்தியுள்ளனர்.

1980-ம் ஆண்டளவில் ஆலயத் தொண்டர்களிடையே உண்டான எழுச்சி காரணமாக முன்னாள் இருந்த பரிபாலன சபையைப் புதுப்பித்தல் உதயமானது. திரு. அ. கதிரவேலு என்பவரால் 1913 உறுதிப் பிரதி எடுத்து அப்போது நடந்து கொண்டிருந்த சி. க. சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிச் சபையிடம் கொடுக்கப்பட்டு மேற் கொண்டாவன செய்யுமாறு கேட்கப்பட்டது 11 6. 92-ல் நடை பெற்ற திருப்பணிச்சபையின் வருடாந்தக் கூட்டத்தின் முடிவிலேயே இது விஜயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. சமுகமாயிருந்த அடியார்களின் கேள்விப்படி உறுதி முழுவதும் வாசிக்கப்பட்டது.

உதவியரசாங்க அதிபரின் பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்த உரும்பராய் கிராமசேவையாளர் கிருஷ்ணராசா அவர்கள் தலைமையில் தொடந்து கூட்டம் நடை பெற்றது. கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் செ. செல்வரத்தினம் கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் மா. கருணைநாதன் இருவரும் சமுகமாயிருந்தனர்.

16. 10 1913 தருமசாதன உறுதிக்கு அமைவாக, பரிபாலன சபையொன்று நிறுவப்படல் வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேறியது குறித்த உறுதிக்கு அமைவாகப் பரிபாலனசபை அமைத்தற்கான யாப்பு விதிகள் தயாரிக்கப்பட்டு அடுத்துக் கூட்டப்படும் மகாசபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காகக் குறித்த திருப்பணிச் சபைத் தலைவர் செயலாளர் உட்பட ஆறுபேர் கொண்டதொரு உபசபையும் தெரிவானது உபசபை பல முறை கூடியாராய்ந்து தயாரித்த உபவிதிகள் அங்கத்தவர்களது பார்வைக்காக விளம்பரப்படுத்தப்பட்டது.

எந்த நல்ல காரியத்துக்கும் குறுக்கே நாலுபேர் நிற்பது இயல்பு அந்தரங்க சுத்தியோடு செய்யப்படும் எக்காரியமும் பூரணமாக நிறைவுறும் என்பதும் தெளிவு, கெதியில் குறித்த பரிபாலனசபை உருவாகி ஆலயம் சிறப்புற நடைபெற ஸ்ரீசித்திர வேலாயுதப் பெருமான் திருவருளைப் பலரும் வேண்டுதல் செய்தனர்.



மேலும் அமைதியான முறையில் தெரிவை நடத்துவதற்கு காவல்துறையின் உதவியும் கிடைத்தது. அடுத்து நடந்ததொரு பொதுக் கூட்டத்தில் முன்னைய விதிகளையும் அடக்கியதானதொரு யாப்பு விதியமைக்க பலவித ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டுத் தெளிவாக்கப்பட்டது.

தயாரித்த விதிகளின்படி முறைப்படி அங்கத்தவர்களைக் கொண்டதான பொதுக்கூட்டத்தில் பின்வரும் நிர்வாகசபையினர் தெரிவாகினர்.

| | | |
|---|---|---|
| 1) | தலைவர் | த. தருமராசா |
| 2) | உபதலைவர் | க. ஸ்ரீஸ்கந்தராசா |
| 3) | காரியதரிசி | ஐ. சிவலோகநாதன் |
| 4) | உபகாரியதரிசி | வே. சண்முகலிங்கம் |
| 5) | தனாதிகாரி | கா. திருக்கேஸ்வரன் |

நிர்வாகசபையினர்:

6 வே. செல்லத்துரை
7) க. மார்க்கண்டு
8) தி. சுப்பிரமணியம்
9) பொ. செல்வரத்தினம்
10) சி. க. தர்மலிங்கம்
11) செல்வி ந. பாக்கியம்
12) பொ. சுப்பிரமணியம்
13) செ. செல்வரத்தினம்
14) வி. அம்பலவாணர்
15) சு. பரமேஸ்வரன்

உள்ளிட்ட 15 பேர் கொண்ட நிர்வாகசபை சேவையாற்றுகிறது.

தற்போது ஆலயம் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகிறது. திருப்பணி வேலைகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

திருத்தகு கோவைதன்னில் திகழுமுந் துவத்தை மேனி
அருத்தியின் உயிர்கட்கென்றும் அருண்முகன் ஐந்தவான
கிருத்தியம் இயற்றிஞான கிரியையாம் சத்தியோடும்
கருத்தனாய் அமருஞ்சித்ர வேலவன்கழல்கள் போற்றி

## பலானை கண்ணகையம்மன் கோயில்

கோப்பாய் பலானை மருதபூமி இவ்விடமுள்ள மரமடர் சோலைகளிலொன்றாக நின்ற கூழாவடியில் ஆதிக் குடிகளாகிய நாகர்களால் ஆரம்பித்த நாகவழிபாடு இன்றும் தொடர்கின்றது. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் நாகம்மாள் நாகபூஷணி நாக தம்பிரான் வழிபாடுகள் இன்றும் தொடர்ந்து வருகின்றன. 1860 வருடங்கட்கு முன்னர் கி.பி.113-135 வரை இலங்கையையாண்ட கஜபாகு மன்னன் சோழநாடு சென்றிருந்த போது சேரன் செங் குட்டுவனால் சேரநாட்டு எல்லையிலுள்ள திருச்செழுங் குன்றில் முதன் முதல் கட்டப்பெற்ற கண்ணகி கோயில் கும்பாபிஷேகத் திற்கு சென்றதும், கண்ணகியை வழிபாடு செய்து கேட்டுப் பெற்ற வரத்தின்படி கண்ணகி சிலைகள் பலவும் கொண்டு வந்ததும். மாதகலுக்கு அணிந்தாயுள்ள திருவடி நிலையில் இறங்கி அனு ரதபுரிக்கு மூன்று அணிகளாக வழி கொண்டு செல்லும் போது தங்கிய பொருத்தமான இடங்களில் கண்ணகி சிலைகள் ஸ்தா பித்தாவன செய்து சென்றதும் ஆகிய வரலாறுகள் சேரன் செங் குட்டுவன் – எனும் நூல் கூறுகின்றது. அங்ஙனம் தாபித்த ஆல யங்களில் ஒன்றே நமது பலானை கண்ணகையம்மன் ஆலயமும் ஆகும்.

இவ்வாறு தாபித்த கண்ணகை ஆலயங்களுள் சில ஆரிய உந்துதல்களால் மனோன்மணி சிவகாமி பராசக்தி ஆலயங்களாக மாற்றப்பட்டன. எமது பலானை கண்ணகையம்மனையும் அண் மைக் காலத்தில் சிவகாமியாக்க எழுந்தருளியும் செய்வித்து சிவகாமி பேரில் ஊஞ்சற்பதிகமொன்று வெளியான போது தான நமது முதியவர்கள் விழிப்படைந்து தடுத்தனர். பிரச்சினைகள் வளர்ந்து விசாரணைகள் நடந்து ஆலயமும் பூட்டப்பட்டு கோட்டு வழக்குகளும் ஆரம்பமாகின.

18 - 03 - 74-ல் பாலஸ்தானம்.

08 - 08 - 74-ல் உதவியரசாங்க அதிபர் தி. முருகேசம்பிள்ளை அவர்கள் விசாரணையைத் தொடர்ந்து கா. மாணிக்கவாசகர் காரியாதிகாரி அவர்களினால் கோயிற்பொருட்கள் யாவும் இருப்பெடுக்கப்பட் டன.



20 - 12 - 74-ல் புத்தூர்க் கோட்டில் நடந்த ஞானச்சந்திரன் விசாரணையைத் தொடர்ந்து திரு. அம்பலவா ணர் ச. த. புத்தூர் தற்காலிக முகாமையாளராக நியமனம்.

19 - 03 - 75-ல் திரு: கமலநாதன் கி. வி. முகாமையாளராக நியமனம்.

27 - 03 - 75-ல் யாழ் நீதவான் கோடு விசாரணைகள் தொடர்ந்து நடந்தன. கோட்டாரின் தீர்மானப்படி ஓய்வு பெற்ற நீதவான் வி.எஸ்.குமாரசாமி(சுன்னாகம்) மேற்பார்வையில்.

01 - 07 - 75-ல் யாழ் - அரச செயலகத்தில் மூர்த்தி குழு விசா ரணை 3 நாள் விசாரணை, சீர்வராமையால் கோட்டார் அனுமதியுடன் ஈழகேசரி காரியாலயத் தில் சீனிவாசகம் விசாரணை.

04 - 07 - 75 தொடக்கம் யாழ் உயர் நீதி மன்ற விசாரணை (10 பேர் வழக்காளிகள்) ஆலய நிர்வாக சபை யினர் தலைவர் உட்பட 11 பேர் எதிரிகள்.

தொடர்ந்து கொழும்பு மேல் நீதி மன்று விசா ரணை தொடர்ந்து யாழ் மாவட்ட நீதிமன்றில் ந. செ 3 வழக்கு நிர்வாகசபையினர் 10 + 1ற்கு எதிராக 10 பேரால் வழக்கு தொடரப்பட்டது.

19 - 02 - 80, 08 - 03 - 80, 22 - 03 - 80 நீண்ட நேர விசாரணை களின் பின் பரிபாலன சபை விதிகள் தயாரிக்கப் பட்டு இரு பகுதியாரது அபிப்பிராயத்துக்கும் கொடுக்கப்பட்டு சிறு விளக்கங்களுடன் திருவாளர் கள் அட்வகேற் கனகநாயகம் சட்டத்தரணிகள் சோ. யோகேஸ்வரன், க. கேசவன் எதிர்தரப்பு சட்டமாணிகள் சோமசுந்தரம், தம்புத்துரை, கோடீஸ்வரன், சிதம்பரநாதன் ச. த என்போரும் வாதி பிரதிவாதிகள் அனைவர் சகிதம் ஆராய்வு.

01 - 04 - 80-ல் பாலகிருஷ்ணன் நீதவான் முன்னிலையில் சமா சமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சி. பொன் னையா ச. த. அவர்களைத் தற்காலிக முகாமை யாளராகநியமித்து நகல்விதிகட்கு அமைய கோ

பாய் வடக்கு தெற்கு இருபாலை எங்கும் கோயிலோடு சம்பந்தப்பட்டவர்களான அங்கத்தவர்களை நகல்விதிகட்கு அமையச் சேர்க்கப்பட்டு:

17 - 07 - 80-ல் 15 பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களால் தெரிவானது மு. பரமலிங்கம் தலைவரானார். பரிபாலனசபையிடம் ஆலய அசைவற்ற அசைவுள்ள சொத்துக்கள் யாவும் ஒப்படைக்கப்பட்டன. கண்ணகி ஆலயமாக எமது மூதாதையர் ஆவல்படி சீராக நடைபெறத் தொடங்கியது.

ஆலயத்தில் பண்டு தொட்டுப்படிக்கப்பட்டு வந்த கோவலனார் கதை 1974-ல் ஆலயம் பூட்டப்பட்டுச் செயலற்றிருந்த போது படியாது கை விடப்பட்டது. 1981-ல் மீண்டும் நித்திய பூசைகள் முறைப்படி ஆரம்பிக்கப்பட்ட போது குறித்த ஏடு படிக்கப்படவில்லை. (பிறிதோரிடத்தில் இதன் விரிவான குறிப்பு உண்டு) திருப்பணி வேலைகள் நடைபெற்றதால் தூபிச் சிற்ப வேலைகள் பற்றியும் பலபட ஆராயப்பட்டது, இவை சம்பந்தமாய் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள கண்ணகி ஆலயங்களைத்தரிசித்து தூபியில் பொருத்தமான சிற்பங்கள் செய்யவும், கோவலனார் கதை சம்பந்தமான வெளியீடுகள் ஆலய நடைமுறைகள் அறியவும் தீர்மானமாகி தலைவர் மு. பரமலிங்கம், உபதலைவர் பெ. க. கனகலிங்கம், காரியதரிசி தி. பொ. கந்தையா, தனாதிகாரி பொ. கந்தையா, தம்பு கந்தையா, க இ குமாரசாமி ஆறுபேர் கொண்ட உபசபை தெரிவானது

யாழ் - முதலாவது கண்ணகையாலயம் செட்டிபுலம் சென்றோம் சிறிய ஆலயம், நிவந்தங்களுண்டு. கையில் சிலம்பேந்திய கண்ணகை - அழகிய மூலமூர்த்தி கண்டோம் தொடர்ந்து அங்கணாக்கடவை சென்ற போது தூபியின் மேற்கில் பலாவளை கண்ணகையம்மன் முன்னாள் தூபியில் காணப்பட்டது போன்று கையில் சிலம்பேந்திய அழகிய கண்ணகை சிற்பம் காணப்பட்டது, பரம்பரைப் பூசாரி வழியினரே இன்றும் பூசகராயிருந்தார். தொடர்ந்து அச்செழு, ஊரெழு, மட்டுவில், வேலம்பிராய் கண்ணகியாலயங்கள் தரிசித்தோம். கச்சாய் சென்ற போது கோவலர் கதை ஏட்டுப்பிரதிகள் பார்வைக்குப் பெற முடிந்தது மறுநாள் தீவுப்பகுதியிலுள்ள ஆலயங்கள் தரிசித்தோம். புங்குடுதீவு சென்ற போது கையில் சிலம்பேந்திய அழகிய சிற்பங்கள் தூபியில் கண்டோம், அவ்விடம் மூன்று நாள் தொடர்ந்து நடந்த சிலப்பதிகார விழாவையொட்டி வெளியிட்ட கண்ணகி சரிதை நூலும் அறிந்தோம். மற்றும் புளியங்கூடல் அனலைதீவு ஆல



யங்களையும் தரிசித்துத் திரும்பினோம். அடுத்த வாரம் சுட்டிபுரம் சென்றோம், பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்தது. பரிபாலகர் அவர்கட்கு தம்பு. கந்தையா மிகவும் பரிச்சியமானவர், மூலமூர்த்தி தாமிரவிக்கிரகம் பழைய கோவிலும் மூர்த்தியும் டச்சுக்காரரால் அழிக்கப்பட்டது. ஆலய ஏட்டினைப் பார்க்க விரும்பினோம். மரநிழலில் மணலில் கம்பளம் விரிக்கப்பட்டு சிறு பீடம் வைத்து விரித்தபட்டின் மேல் பக்திபூர்வமாக ஏட்டினை வைத்தது கண்டு பரவசமடைந்தோம் ஏட்டினைப் பார்த்த போது அவ்வாலய வரலாற்றுடன் கண்ணகி சரிதை புராண பாணியில் அமைந்திருந்தது கண்டோம், தேவையான பகுதிகள் குறித்துக் கொண்டு வற்றாப்பளை சென்ற போது பழைய ஏட்டுப்பிரதி, கோயில் அமைப்பு பூசை முறைகள் பொங்கல் விபரங்களறிந்தோம். இத்தனைக்கும் உப தலைவருடைய ஊர்தியே பிரயாணத்திற்குப் பெரிதும் உதவியது. தலைவர் வடக்கு கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகராயும், உப தலைவர் வடமாகாண கலால் திணைக்கள உப ஆணையாளராகவும் இருந்தமையால் எங்கள் பிரயாணம் லேசு பெறவும் மூலமூர்த்திகள் ஏடுகள் பார்வையிடவும் அறிமுகங்கள் உதவியதெனலாம்.

அநுரதபுரி இசிறுமுனி விகாரை, கசபாகு தலைநகரில் ஸ்தாபித்து முதன்முதல் ஆடல்பாடல் நிறைந்த ஊர்வலம் — பெரகரா கொண்டாடிய இடம் - சென்றோம். சிங்கள புத்தவாதம் தலையெடுத்து வகுப்புக்கலவரங்கள நடந்து தமிழர் இடங்கள் அழிக்கப்பட்டு மறைக்கப்பட்டிருந்த காலம். புத்தர் பிறந்தது முதல் சமாதியடைந்தது வரையிலான சிற்பங்களுள்ள றூவான்வலி சமாதி முன் மண்டவாசலின் இரு பக்கங்களிலுமுள்ள காவல் தெய்யோ (விஷ்ணு) கதிர்காமத் தெய்யோ (முருகன்) சுமார் எட்டடி உயரமான அழகிய சிலைகள் இரும்பு சதுர வலையினுள் காவித்திரை போட்டு மறைக்கப்பட்டிருந்த காலம். யாழ்ப்பாணம் சந்தியருகே ஸ்தாபிக்கப்பட்ட எல்லாளன் சமாதி இடித்தளித்துக் கொண்டிருந்ததுமான காலம் இசிறுமுனி விகாரை முன் புத்தர் சிலை காணப்பட்டது. ஏற்கனவே அவ்விடமுள்ள ஒருவருக்கு அறிவித்திருந்தமையால் குடும்ப சகிதம் வந்து காத்திருந்தனர். மதிய வேளையில் கோயிலன்பர்கள் யாருமில்லாத போது விருந்தனர் திரை நீக்க பின்னால் கையில் சிலம் பேந்திய கண்ணகி விக்கிரகம் பார்த்தோம்.

தம்பளை விகாரை சென்று பார்த்து கண்டி சென்று பெரகராவின் போது வரும் பத்தினித் தெய்யோ விபரங்கள் கண்ணகி சம்பந்தப்பட்ட சிங்கள நூல்கள் விபரமும் அறிய முடிந்தது. கிழக்கிலங்கையிலே தான் தமிழும் சைவமும் வளர்க்கு

பெருவிழாவாக கண்ணகி வழிபாடு வேரூன்றியுள்ளது. தெற்கே பாணமை தொடக்கம் வடக்கே வாகரை வரை கண்ணகை ஆலயங்கள் பல உண்டு. வன்னியர்களாலும் பல சிங்கள அரசர்களாலும் இவ்வாலயங்கள் வளர்க்கப்பட்டன. - வைகாசித் திங்கள் வருவேன் - என்று கூறி வானுலகம் புக்க கண்ணகையின் வருடாந்த உற்சவம் வைகாசி வளர்பிறை சப்தமியுடன் ஆரம்பமாகி 10ம் நாள் குளிர்த்தியுடன் முடிவடையும் குளிர்த்திப் பாடல்கள் உள்ளத்தையும் குளிர்த்தி நீர் உடலேயும் குளிர்வடையச் செய்யும்.

இவற்றினைத் தொடர்ந்து அடுத்த வாரம் கூடிய பரிபாலன சபையில் தரிசித்த ஆலய விபரங்கள் விபரமாகக் கூறப்பட்டு ஆராயப்பட்டு பின்வருவன தீர்மானங்களாகின.

1. ஐம்பெருங் காப்பியங்களுள் முதலாவதான சிலப்பதிகாரக் கதைகளைத் தழுவிய சிற்பங்கள் தூபியில், சிறந்த சிற்பாசாரியார்களைக் கொண்டு செய்வித்து ஏகவர்ணம் தீட்டல்.

2. மகாமண்டப முகப்பிலிருந்த சித்திரங்களைச் சிற்பங்களாக்கல்:

3. சிலப்பதிகாரக் கதையைத் தழுவி கண்ணகி சரிதை; வரலாறு சுருக்கமாக எழுதி வெளியிடல்.

4. கண்ணகை எழுந்தருளி.

5. பத்து நாள் அலங்காரத் திருவிழா.

6. முன்னோர் கொள்கை சரி; இயந்திரம் வையாதே கும்பாபிஷேகம்,

7. ஏற்கனவே செய்யப்பெற்ற விநாயகர் சுப்பிரமணியர் விக்கிரகங்கட்கு - சிற்பாசாரியர்கள், அறிஞர்கள் சொல்லியபடி பிரகாரக் கோவில்கள் அமைத்தல்.

8. சிவகாமி கண்ணகையிலும் உயர்ந்த மூர்த்தி. கண்ணகி மூலமூர்த்தியாகவிருக்கும் போது சிவகாமியைப் பிரகார மூர்த்தியாக வைக்கப்படாது. சிவகாமிக்கு இக் கோயிலில் இடமில்லை. (இது சம்பந்தமான விபரங்கள் கும்பாபிஷேக மலரிலுமுண்டு.)

இத்தீர்மானங்கட்கு அமைவாகத் தொடர்ந்து திருப்பணி வேலைகளும் நடைபெற்று 31.1.86-ல் கும்பாபிஷேகமும் நடைபெற்று 40 நாள் மண்டலாபிஷேகமும் நடைபெற்று பூர்த்தி விழாவன்று அழகிய கும்பாபிஷேக மலரொன்றும் 19.3.86-ல் வெளியாக்கப்பட்டது.



மேலும்;

எமது ஆலயத்தில் இருபாலைச் சேனாராச முதலியார் அவர்களால் பாடப்பெற்ற கண்ணகை ஊஞ்சற்பதிகம் படிக்கப்பட்டு வந்தது. நாளாவட்டத்தில் குறித்த ஏட்டில் காப்பு வாழி எச்சரிக்கை பாாக்கு மங்களம் பகுதிகள் சிதைந்து போக 10 பாட்டுக்களே எஞ்சியிருந்தன. அவற்றிலும் 8-ம், 9-ம் பாட்டுக்களின் அழிந்த பகுதியை கோவை கந்தையா அவர்களைக் கொண்டு சீர் செய்வித்தது - என்று 23 3 1962-ல் க சிவகுமாரன் அவர்களால் அச்சிடுவித்த கோவையம்பதி கண்ணகி பேரிலூஞ்சல் - என்பதில் குறிக்கப்பட்டுள்ளது. எமது கும்பாபிஷேக மலரிலும் - கண்ணகி பேரில் ஊஞ்சற்பதிகம் - என்று குறிப்பிடாது கண்ணகி பேரில் ஊஞ்சல் - என்றே மலர்க்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிலையில் ஊஞ்சற்பதிகமொன்று இயற்றுவிக்கத் தீர்மானமாயது ஆசிரியமணி அ பஞ்சாட்சரம் அவர்கள் ஆலோசனை பெற்று பேராசிரியர் பண்டிதர். க. சச்சிதானந்தம் உதவியை நாடினோம். யுத்த காலச் சூழ நிலைகளால் சொந்த இடம் மாவிட்டபுரத்தை விட்டு இணுவிலில் தங்கியிருந்த வேளையில் பலவித கஷ்ட நிலையில் மறுத்தார் எங்கள் பணிவான வேண்டுகோளுக்கமைய இசைந்தார். இது சம்பந்தமாக அவர்களிடம் யானும் சி. நவரத்தினத்துடன் பலமுறை சென்றோம். அன்பர்கள் இ. இராசரத்தினம், சி. துரைராசா, தி. பொ கந்தையா ஆகிய சங்க பிரதான நிர்வாகிகளும் சென்று வேண்டினர். அவர்கட்கு ஏற்பட்ட சில கஷ்டங்களை அறிந்து மேற்கொண்டு வேண்டுதலைவிட்டோம் ஈற்றில் 15, 10. 94-ல் நாம் கேட்ட ஊஞ்சற்பதிகம் பதிவு தபாலில் எனக்குக் கிடைத்தது.

சிலப்பதிகாரக் கதைகளைத் தழுவி எமது கோப்பாய் கிராம வளங்களையும் அகப்படுத்தி மிகவும் உயர்ந்த நடையில் அழகு தமிழில் குறித்த ஊஞ்சற்பதிகம் யாக்கப்பட்டிருந்ததுகண்டு பேருவகை அடைந்தோம். பண்டிதர் ஐயா அவர்கள் பேருதவிக்கு நமது நிர்வாகம் அம்மன் அடியார்கள் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி நன்றி தெரிவிக்கிறோம். பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்களின் பாடல்களிலிருந்து;

கற்பென்னுங் கனலாவே தீயர்தீய
சொற்சீறந்த மணிவாயின் சுந்தரத்துக்
கற்பகமே கருணையுடன் கூழாவின்கீழ்
நிற்பவளே நிழலாறி அருள்வீர் அன்னாய்.

முடிமன்னர் கசபாகு முற்றுங் கோவில்
அடிகொண்டு அணிசெய்யக் கோப்பாய் வந்தாய்
படிகொண்டு சிலைகொண்டு பண்ணுங் கோயில்
இடமுண்டு என்னவந்தாய் எமையாட்கொள்வீர்;

இவ்வாலய வரலாறுள் 31. 1. 86-ல் கும்பாபிஷேக மலரி லும் கண்ணகி சரிதையும் வரலாறுகளும் எனும் நூலிலும் குறித்த ஊஞ்சற்பதிகமும் விரிவாக உண்டு.

## வெள்ளெருவை விநாயகர் கோயில்

தலவிருட்சம் வெள்ளெருக்கு தற்போதுமுள்ளது ஆலய வீதியின் மேற்கு பக்கத்தில் ஆலயத்தைச் சேர்ந்த அந்தணப் பெரு மக்கள் வீடுகளும், வடக்கு வீதியில் மேளகாரர் குடியிருப்புக்கள் இருந்ததனை எனது சிறுபராயத்தில் 1925 அளவில் அறிவேன். கோயில் பூசகராக பிரம்மஸ்ரீ கோ. நீலகண்டக் குருக்கள் இருந் தார்கள். இது அவர்களுடைய சொந்தக் கோயில். ஆகையால் நித்திய நைமித்திக பூசைகள் ஒழுங்காகவும் நேரந்தவறாமலும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

தொடர்ந்து அவரது மூத்தமகன் சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் பூசகராயிருந்து கோயில் கிருப்பணி வேலைகளையும் மக்கள் உதவியும் பெற்றுச் செய்து சிறப்புற நடத்தினார். இவர் அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆசிரியருமாயிருந்தார் தற்போது இவர் மகன் சோமாஸ்கந்தக் குருக்கள் பூசகராயுள்ளார். இவர் சகோதரர்கள் சுற்றாடலிலுள்ள கோயில்களில் பூசகராயுள்ளார் கள். அந்தணர்க்குரிய கண்ணொளிதோற்றப்பொலிவு ஒழுக்கமுள்ள வர்களாய் மற்றையோர் நன்மதிப்புக்குள்ளவர்களாயுமுளர். உள் வீதி திறந்தபடியுள்ளதால் பூசை நேரம் முடிந்து பகலில் செல் பவர்களும் உள் வீதிவலம் வந்து வணங்கும் வாய்ப்புமுண்டு.

நவராத்திரி, சிவராத்திரி, கஜமுகாசுரசங்காரம் போன்ற விசேடவிழாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன.



கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோயில், வெள்ளெ ருவைப் பிள்ளையார் கோயில், பலானை கண்ணகையம்மன் கோயில் மூன்றினதும் வழிபடுவோர் வசதிக்காக கொடியேற்று விழாக்கள் வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் வரும் பூரணை களில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும் ஒழுங்குகள் தொன்று தொட்டே நடைபெறுகின்றன.

நித்திய நைமித்திக பூசைகளோடு சமய வளர்ச்சியிலும் இன் றைய சூழ்நிலைகளில் சைவாலயங்கள் தவறாது ஈடுபடல் வேண் டும். இவ்வாலயத்தில் விசேட பூசைக் காலங்களில் தக்க உபந் நியாசகர்களை அழைத்து சைவப்பிரசங்கங்கள் செய்விக்கும் ஒழுங்குகள் தற்போதும் நடைபெற்றே வருகின்றன வேற்றுச் சமய இழுப்புக்கள் அதிகரித்துள்ள இன்றைய கால சூழ்நிலையில், இவ்வொழுங்குகள் பாராட்டுக்குரியனவாகும்.

எள்ளரிய சைவநெறியில் இனிதோங்க
இயல்புணராம் பரசமய இருள்கள் நீங்க
வெள்ளைமதி கவிகை யடியார்கள் தாங்க
வேதவொளி கீதவொலி மென்மேலோங்க
வள்ளுலகு பல்லியங்கம் முழவினோங்க
வளஞ்சொரியும் கோவை நகரத்தில் நாங்கள்
வெள்ளெருவை யெனும் தலம் சேர் விஜயராச
விநாயகரே வேளமுகவா வாடீரூஞ்சல்.

தெள்ளிய நான்மறை யுணர் அந்தணர்வாழி
தேவருலகம் வாழி பசுநிரைகள் வாழி
உள்ளுதொறும் முகில்கள் மழைபொழிந்து வாழி
உயர்ந்திடு செங்கோலரசர் பின்னோர் வாழி
பிள்ளைமதி சூடி அடியார்கள் வாழி பிறங்கிய
மெண்ணீறொடு தண்டிகையும் வாழி
வெள்ளெருவை யெனும் தலஞ் சேர் விஜயராச
விநாயகர் தம்மருளும் நிதம் வாழி வாழி.

## வடகோவைச் சக்கிராழ்வார் ஆலயம்

'சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல் வர் சிவபுரத்தில் உறைவர்' — என்கின்றது திருவாசகம் ஆலயத் தில் நடக்கும் நித்திய நைமித்திக பூசைகளின்போது தூபதீப அர்ச்சனை வழிபாடுகளைக் கண்களால் தரிசித்தும் உயர்வட மொழி மந்திரங்களைக் கேட்டும் வணங்கி அருளைப் பெறுகி றோம். உரிய பூசா காலங்களில் தமிழில் நடைபெறும் வழிபாடு

களால் பொருளுணர்ந்து கூடிய பக்தி மயப்பட்டு அருளைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வகையில் நமது வடகோவைச் சக்கிராழ்வார் ஆலயத்தில் தூய தமிழில் வழிபாடுகள் யாவும் ஆரம்பம் தொட்டு இன்று வரை தவறாது நடைபெற்று வருகிறது.

1940 காலப்பகுதியில் பறங்கித்தெரு பொன்னம்பலம் மாஸ்ரர். கோப்பாய் வடக்கு காளிகோவிலடியைச் சேர்ந்த அப்பாத்துரை இருவரும் அக்காலத்தில் பிரசித்தி பெற்ற 'றலிசைக்கிள்' களை வருவித்து கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள கடைகள் மூலம் வியாபாரம் செய்து வந்தனர். தென்னிந்தியா தூத்துக்குடி விருத்தகலை எனும் சிற்றூரிலிருந்து கொழும்பு வந்து தங்கியிருந்த நாராயண பக்தரான சாமியார் ஒருவரின் தொடர்பு அப்பாத்துரை அவர்கட்குக் கிடைத்தது அதனால் சாமியார் வந்து தங்கிச் சென்ற போது அன்பர்கள் வந்து சாமியாரிடம் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றதுண்டு.

அப்பாத்துரை அவர்களின் உறவினர் ஒருவராகிய, கொழும்பில் வசித்த திருமதி காசிலிங்கம் இரத்தினம்மாள் அவர்கள் தீராத நோய் வாய்ப்பட்டு வைத்தியர்களும் கைவிட்டு அவஸ்தைப்பட்டிருந்த போது சாமியாரை அழைத்து வந்தனர். நல்லாசிகூறி குடும்பத்தாருடன் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தார் படிப்படியாக இரத்தினம்மாள் சுகமடைந்தார். இதனால் இரத்தினம்மாள் குடும்பத்தினரும் நாராயண பக்தர்களாயினர் இவர் கோப்பாய் வந்தபோது அன்பர்கள் பலர் வந்து தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர்.

1942 யுத்த கால நெருக்கடியின் போது பலரும் கொழும்பை விட்டுத் தத்தம் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது சாமியாரும் வந்து இரத்தினம்மாளின் தந்தையான வேலுப்பிள்ளை வீட்டில் நிலையாகத் தங்கினார்.

எல்லாரும் அவரைச் சாமியார் என்றே அழைத்தனர். அவரது இயற்பெயர் ச. சவியார் என்பது ஆறரை அடி உயரமான ஆசானுபாகத் தோற்றம், கம்பீரமான பேச்சு, தூயதமிழில் வழிபாடுகளை அட்சரசுத்தியாய் உச்சரித்து வணங்குவதும் சொற்சித்தியும் உடையவராய் பலரது அன்புக்கு உரியவரானார். நினைத்த காரியங்களைச் சொல்லல், பிணியாளர்கட்கு நாமமிட்டுப் பார்வை பார்த்தல், விஷக்கடி வைத்தியம் என்பவற்றிலும் சித்தியுடையவராயிருந்தார், இவ்வாறு நாளும் பொழு



தும் சாமியாரைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்வோர் கூட்டம் பெருகியது. கொழும்புத் தொடர்புடையவர்களும் அயற் கிராமங்களிலுள்ளவர்களும் வந்து வழிபட்டு நாமந்தரித்துச் செல்வர். மேற்கொண்டு அன்பர்களது வேண்டுகோளின்படி கோப்பாயில் ஓர் ஆலயமமைக்கும் நோக்கம் உருவானது. நாராயண குரு அம்பிக்குரியவர்களான கோப்பாய் வடக்கு முருகேசு துரையப்பா, கதிரவேலு இளையதம்பி என்போர் குருவின் உள்ளக் கிடக்கையை நிறைவேற்ற முன் வந்தனர். இவர்களது முயற்சியாலும் திருவருள் வழிகாட்டுதலாலும் கோப்பாய் வடக்கு இராச வீதிக்கு மேற்குப்புறமாய் கொழுவியன் கலட்டி எனும் காணியில் வீரவாகு வேலுப்பிள்ளை, சதாசிவம் சிவக்கொழுந்து. கந்தையா பொன்னம்பலம், சின்னத்தம்பி இராசையா, மயில்வாகனம் கந்தையா, திருமதி சின்னையா இராசம்மா முதலிய பங்காளர்களாலும் அவர்களது நெருங்கிய உறவினர்களாலும் 12 பரப்பு வரையிலான காணி தருமசாதனம் செய்யப்பட்டது. மேலும் மூவரும் கிராமத்திலுள்ள சைவ அன்பர்கள் வீடுகள் தோறும் சென்று பணந்திரட்டியும் கட்டிடத்துக்கான பொருட்கள் சேகரித்தும் உரிய காணியில் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து மூலஸ்தானம் மகாமண்டபம் வரையிலான கட்டிடவேலைகளைப் பூர்த்தியாக்கி மூலஸ்தானத்தில் சக்கிராழ்வார் ஸ்தாபித்து எம்பெருமான் சோதியைத் தீபத்தில் ஏற்றி அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகின.

பூசா காலங்களில் பக்தர்கள் கூட்டம் பெருகி வந்தது வழிபாடுகள் பஜனைகள் கூட்டுப்பிரார்த்தனைகள் முடிந்து வீடு திரும்புவோர் நெற்றியில் நாமக்குறிகள் பளிச்சிடும் இவ்வாறு வந்து இஷ்டசித்திகளைப் பெறுவோர் ஆலயத்துக்கு வேண்டிய பொருட்களை உதவியும் திருப்பணி வேலைகளைத் தாமாகவே முன் வந்து செய்தும் உதவினர். அன்னுங்கையிலுள்ள பக்தர் ஒருவர் ஆலய முன் மண்டப வேலைகள் முழுவதனையும் தானே முன் வந்து செய்து உதவினார். இந்த வகையில் ஆலயம் புதுப் பொலிவுபெற்று வளர்ந்துள்ளது

சாமியார் 6 · 7 . 1969 புனர்பூஷ நட்சத்திரத்தில் சமாதியடைந்தார், அவரது பூதவுடல் ஆலய மூலஸ்தானத்துக்குப் பின்னாலுள்ள அரசமரத்தடியில் சமாதி வைக்கப்பட்டுள்ளது. சாமியாருக்குப் பின் அவர் சிஷ்யராயிருந்த குரும்பசிட்டி ஐயம்பிள்ளை சாமியார் பூஷா காரியங்களை நடத்தினர். இவரால் சக்கிராழ்வார் பேரிற் பாடிய திருவந்தாதியும் தேவி தோத்திரமும் எனும் நூல் 1974-ல் வெளியானது. சாமியாருக்குப் பின் இரத்தினம்மாவும் தொடர்ந்து பழனி (பொன்னுத்துரை) என்பவரும்

தொடர்ந்து உரிமையாளர்களும் ஆலய நிர்வாகிகளாக உள்ளனர். 10 8 85 தொடக்கம் கந்தையா தேவராசா அவர்கள் நிர்வாகப் பொறுப்பாளராகவும் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் இராசம்மா, கோப்பாய் இளையதம்பி செல்லத்துரை இருவரும் கூட்டுப் பிரார்த்தனைகளும் செய்து வருகிறார்கள்.

ஆவணி மூலத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி கிருஷ்ண ஜெயந்தியுடன் 10-ம் நாள் விழா பூர்த்தியாகும் அன்று தயிர் முட்டியடித்தல் சீனடி சிலம்படி நடப்பதும் பக்தர்கள் ஆடிப் பாடிப் பசனை செய்வதும் கண் கொள்ளாக் காட்சிகளாகும்.

செல்வச்சந்நிதி அன்னதானக் கந்தன் போல இவ்வாலயத்திலும் விழாக் காலங்களிலும் குறித்த வார நாட்களிலும் அன்னதானம் நடைபெறுவதும் தூயதமிழ்ப் பூசை வழிபாடுகளும், வழிபாடுகள் முடிந்து வீடு திரும்புவோர் நெற்றியில் காணப்படும் குறிகளும் இவ்வாலயத்திற் போல சுற்றாடலில் எங்கும் காண முடியாது.

இவ்வாலயம் சம்பந்தமாக குரும்பசிட்டி வை. நாகநாதர் அவர்கள் பாடி 1974-ல் வெளியிட்ட - வடகோவைசக்கிழாழ்வர் திருவந்தாதி எனும் வெளியீட்டிலிருந்து;

அருளும் பொருளும் அறியாத ஏழை அறிவிலிக்கு
இருளும் ஒளியும் இவையெனக் காட்டி
மருளும் படிக்கு வடகோவைதனில் வதிந்தருளும்
அருளாழி யேதிருச்சக்கரம் தாங்கிய சங்கரனே.

சாரங்கம் கொண்டிந்தச் சகமெலாம் காக்கும் தனி முதலே
பாரங்கமாக வுடையாயுன் பாதமலர் பிடித்தேன்
ஓரங்கமாக வடகோவை தனில் வதிந் தருளும்
சாரங்கனே திருச்சக்கரம் மேவிய சீதரனே.

**தேவி தோத்திரம்**

இலவுகாத்த கிளிபோல் இன்றுவரை காத்திருந்தேன்
சலம்மீதில் பூத்ததொரு தாமரையில் — விலகாமல்
என்றும் பொலிந்திருக்கும் எழிலரசியேயுனக்கு
என்றிரக்கம் என்மேல் வரும்.

**அரிகோவிந்தம் சிலவரிகள்**

மாயவனே மாதவனே — அரிகோவிந்தா
துளபமணி மாலையனே — ,,



பச்சைநிற மேனியனே — அரிகோவிந்தா
பாற்கடலில் பள்ளிகொண்டாய் — ,,
அச்சுதனே ஜெயராமா — ,,
ஆலிலையில் துயின்றவனே — ,,
சக்கரமும் சங்கும் கொண்டாய் — ,,
சித்தியெல்லாம் தந்திடுவாய் — ,,

(முன் பகுதியை எல்லாரும் படிக்க பின் பகுதியை ஒருவர் சொல்வார்)

1936 ல் குருநாதர் நாராயணமூர்த்தி பேரில் பாடிய ஒயில் கும்மியில் ஒரு பாடல்.

மண்டலமுழுதும் மாயவதாரா மனமோகன மங்கையவதாரா
மாமுனியை மயக்கி மகிழவைத்த காமவதாரா மகுடமுடிபுனைந்த
இரண்ணிய சம்ஹாரா மன்னுயிர்க் காதாரமாய் வந்த நரசிம்ஹ அவதாரா
மதம்கொண்ட பேர்களுக்கு திடம்கொண்ட மனுவவதாரா
அப்பனே கருடன் மீதேறி வந்தாதரித் தாண்டருள்வாயே.

அண்மையில் அகதிகளாக வன்னிப்பகுதிக்குச் சென்ற நம் அன்பர்கள் அவலங்களைப் போக்க நமதாலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றன, இவ்வாலயத்திலும் தமிழர்ச்சனை வழிபாடுகளோடு சாயிபாபா பக்தர்கள் கூட்டமும் சேர்ந்து பக்தி பூர்வமாகச் செய்த கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகள் அனைவர் மனதையும் உருக வைத்தது.

வழிபடுவோர்க்கு கருத்து விளங்காத ஆரிய மந்திரங்களைச் சொல்லி நடைபெறும் பூசைகளை விட்டு தூய இன் தமிழில் பூசை செய்ய குன்றக்குடி அடிகளார் தி. மு. கழகத்தார் தாய்த்திருநாட்டில் தமிழில் அர்ச்சனைகட்கு ஆவன செய்துள்ளனர். தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தமிழ் வழிபாட்டிற்கான நூல்களை வெளியிட்டுமுள்ளது நமக்கும் தூண்டுதலாக அமையட்டும்.

## வடகோவை செல்வ விநாயகர் ஆலயம்

இவ்வாலயம் வடகோவையில் பருத்தித்துறை வீதியருகே மேற்குப் புறமாய் அமைந்துள்ளது. இதனை மாயத்தலைப் பிள்ளையார் என்றே ஊரவர்கள் கூறுவதுண்டு இவ்வாலயத்துக்கு அருகே தான் 1925 காலப்பகுதியில் பிராமணக் குடியிருப்புக்கள் மிக நெருக்கமாக அமைந்திருந்தன. இந்த இடத்தின் மேற்குப் புறமாயமைந்துள்ள வேளாண்மை செய்பவர் குடியிருப்புக்கள் இன்றும் பிராமணரோடை என்றே வழங்கப்படுகிறது.

இவ்விநாயகராலயத்தோடு சபாபதி நாவலர் அதிகம் ஈடுபாடுடையவராயிருந்தார், செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை எனும் பிரபந்தம் இவ்விநாயகர் மேல் பாடப் பெற்றது. கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் 1960-ல் நடந்த சபாபதி நாவலர் நினைவு விழாவின் போது புலோலி பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை அவர்கள்;

"வீதியருகேயுள்ள செல்வவிநாயகர் முன் மண்டபத்திலிருந்தே சபாபதி நாவலர் சமய இலக்கியங்கள் கற்பிப்பது வழக்கம், தம்மைக்கண்டுரையாடவரும் அறிஞர்களுடன் நடக்கும் ஆரம்ப சம்பாஷணைகளில் திருப்தியேற்பட்டாலேதான் தான் அமர்ந்துள்ள புலித்தோல்களிலொன்றை எடுத்து வந்தவரை அமரச் செய்து சம்வாதங்கள் நடத்துவதும் அல்லாதவர்களைத் திருப்பியனுப்பும் சுவாவமுமுடையவர்; சபாபதி நாவலர் தமிழ் கெறுக்குப் பிடித்தவர்" — என்று கூறியது எனது ஞாபகத்திலுண்டு.

இவ்வாலயச் சுற்றாடலில் வாழ்ந்த பிரமணோத்தமர் ஒருவரால் சுமார் 150 வருடங்கட்கு முன் இக்கோயில் ஸ்தாபிக்கப்பட்டது. முன்னைய ஆலயம் சிதைவடைந்த நிலையில் அதன் வடபுறமாய் பிறிதொரு ஆலயம் மகாமண்டபம் வரை அமைக்கப்பட்டு 1988 அளவில் கும்பாபிஷேகமும் நடைபெற்றது இவ்வாலய ஸ்தாபகரின் வழி வந்த சிந்தாந்த பானு சோ. சுப்பிரமணியக் குருக்களே இன்றும் இதன் பரிபாலகராயுள்ளார்.

இவ்வாலய தென் கிழக்கு வீதியிலேயே சபாபதி நாவலர் வாசிகசாலையும் நடைபெற்று வருகிறது.

## மகிழடி வைரவ கோயில்

இரவு 12 மணிக்கு ஆனிமாதப் பொங்கலன்று கோப்பாய் நாற்சந்தியில் வேலம்பிராயிலிருந்து வந்த வள்ளுவப் பெருமக்கள் எழுப்பும் முழவொலி கிராமத்தையே அதிரவைக்கும். மக்கள் விழித்தெழுந்து மகிழடி வைரவ கோயில் பொங்கல் என்றறிந்து கொள்வர்

குறித்த ஆலய உக்கிரவைரவருக்குரிய இயந்திரம் பொங்கல் முடிந்ததும் அருகேயுள்ள பிள்ளையார் கோயிலில் வைக்கப்படுவதும் மறுபொங்கலன்று மீண்டும் எடுத்து சந்திக்குக் கொண்டு வரப்பட்டு மந்திரபாராயணத்துடனும் முழவொலியுடனும் கொண்டு போய் வைரவர் ஆலயத்துள் வைத்து பொங்கல் வழிபாடு செய்வதும் வழக்கத்திலிருந்து வந்துள்ளது. தமிழ், சமஸ்கிருத விற்பன்னராயும் பிராமணோத்தமராயும் வாழ்ந்த சிவகடாட்சக்குருக்கள் என்பவரே இவ்வாலயப் பூசகராயும் பரிபாலகராயுமிருந்ததனை 1925 காலப்பகுதியளவில் யானறிவேன். இவருக்கு சுப்பிரமணி ஐயர் (திருக்கணித பஞ்சாங்ககணிதர்) முத்துச்சாமி ஐயர் என இருபுதல்வர். தந்தைக்குப்பின் இளையவர் பரிபாலகராயும் பூசகராயுமிருந்து வந்தார். ஆசிரியசேவையாற்ற தென்னிலங்கை செல்ல நேரிட்டபோது கோயிலையும் உரியவற்றையும் அயலேயுள்ள சில வழிபடுவோரிடம் ஒப்படைத்துச் சென்றார்.



சில காலங்களால் கோயில் பூஜா காரியங்கள் ஒழுங்காக நடைபெறாத நிலை உருவானது. இதனைச்சகிக்காத அயலேயுள்ள வழிபடுவோர் தம்பு செல்லையா அவர்கள் தலைமையில் குழந்தைவேலு ஸ்கந்த ராசா, கதிரவேலு, கந்தசாமி, சண்முகம் குணசிங்கம் ஆகியவர்கள் ஒன்று கூடி சீர்செய்ய முயன்றனர். இது சம்பந்தமாய் என்னுடன் கலந்தாலோசிக்க வந்தனர். எனது உடன் மாணவர் முத்துச்சாமிஐயாவுடன் கடிதத் தொடர்புகள் நடந்தன. ஆலய ஸ்தாபர்களில் ஒருவரான நொத்தாரிசு கெங்காதரையா மருமகன் ந. கந்தசாமி ஐயா (திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பேராசிரியர்) அவர்களுடனும் பலமுறை சென்று கலந்தாலோசித்தோம். சிலமாதங்களில் கோண்டாவிலிலுள்ள ந. கந்தசாமி ஐயா வீட்டில் முத்துச்சாமி ஐயா சகிதம் கலந்தாலோசித்து வேண்டியன செய்து 21. 7. 1982-ல் குறித்த ஆலய மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில்,

வே. தணிகாசலம் — தலைவர்
த. செல்லையா — உபதலைவர்
ச. குலசிங்கம் — செயலாளர்
க. தம்பியையா — தனாதிகாரி ஆகவும் 15 பேர்

கொண்டதொரு நிர்வாகசபை தெரிவாகி

1 சிவகடாட்சக்குருக்கள் முத்துசாமிஐயர்
2 வலிகிழக்கு உதவி யரசாங்க அதிபர்
3 கோப்பாய் வடக்கு கிராமசேவையாளர்
4 இளையதம்பி குமாரசாமி
5 நடராசக்குருக்கள் சந்தசுவாமிஐயர் எனும் ஐவரடங்கிய ஆலோசனைச் சபையும் நியமனமானது தொடர்ந்து இதற்கமைய இல 12309 / 13. 8 82 திறஸ்தி நியமனமும் தருமசாதனமும் உறுதி நொத்தாரிசு சி.கனகரத்தினம் முகதாவில் முடிக்கப்பட்டு முறைப்படி உரியசபையிடம் பரிபாலனம் ஒப்புவிக்கப்பட்டது.

குறித்த உறுதியிற் கண்டுள்ளபடி ஆலயபரிபாலனத்திற்குரிய யாப்புவிதிகள் உருவாக்சப்பட்டு பொது அங்கத்தவர் ஆலோசனைக் குழுவினர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு எற்றுக்கொள்ளப்பட்டு அதற்கமைய ஆலயபரிபாலனம் நடைபெற்று வருகிறது. காலத்துக்குக் காலம் வேண்டிய திருப்பணி வேலைகள் யாவும் செய்யப்பட்டு அசைவற்ற அசைவுள்ள சொத்துக்கள் யாவும் நன்கு பரிபாலிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடந்தேறியுள்ளது.

ஆலயத்துக்குச் சொந்தமான வடக்கருகிலுள்ள ஆதனம் அரசகேள்விப்படி நெசவுசாலையமைக்கக் கொடுக்கப்பட்டது. வேலைகள் கெதியாகப் பூர்த்தியாகி நெசவு வேலைகளும் சீராக நடை பெற்றன அரசின் பாரமுகமான கொள்கைகளால் இவ்வாறான நெசவுசாலைகள் கைவிடப்படும் நிலையுருவானது இந்த நெசவுசாலையும் மூடப்பட்டு கட்டிடங்களும் அகற்றப்பட்ட போது தம்புசெல்லையா உள்ளிட்டோர் தலையிட்டு காணிக்குரிய குத்தகைக்காசைத் தந்தாலே யொழிய இரண்டு அறைகளைக் கொண்டகந்தோரை அகற்றவிடோம் எனத்தடுத்தனர். குறித்த இரண்டு அறைகளும் தற்போது கோயிற் பாவிப்பிலுண்டு.

1995 இராணுவ நடவடிக்கைகளால் கோயில் சேதமடைந்து பூசையின்றியிருந்தது. 1996-ல் நிலைமைகள் ஓரளவு சீரடைந்ததும் கட்டிடவேலைகள் புனரமைக்கப்பட்டு வழமைபோல் அபிஷேக ஆராதனைகளும் ஆனி உத்திரப் பொங்கலும் வழமைபோல் நடைபெறுகின்றன. தற்போது பிரதான நிர்வாகிகளாக அ. கந்தசாமி, சு. சிவபாதம், ச. தனபாலசிங்கம் கொண்ட நிர்வாகசபை நன்கு செயலாற்றுகிறது. திருப்பணி வேலைகளும் தொடர்ந்து நடை பெறுகின்றன.

## அடைப்பந்தாளி வைரவ கோயில்

எனது சிறுபராயத்தில் கந்தர் சின்னத்தம்பியும் அவர் தமையன் கந்தையாவும் இதன் மேற்பார்வையாளர்களாக இருந்தார்கள் தனக்குப் போன்ற தொரு பாரிய விருட்சம் அதற்கு முன்னரே தலவிருட்சமாயிருந்ததனையும் அறிவேன். பொங்கல் விழாக்கள் அதனடியில் நடைபெற்றன. தினமும் மாலையில் சுமார் 80 வயதிற்கு மேல் மதிக்கத்தக்க சீனியப்பா என்பவர் வந்து வழிபாடு செய்வதும் கையில் விபூதி யெடுத்து ஏதோ மௌனமாக வழிபாடு செய்து அடியார்கட்கு திருநீறிட்டு பார்வை பார்ப்பதும் யன் கண்டதுண்டு. குறித்த தலவிருட்சம் பாரிய புயலின் போது அடியோடு சரிந்த போது அகற்றிவிட்டு அயலே நின்ற பலா மரத்தைத்தல விருட்சமாகக் கொண்டு வழிபடல் தற்போது நடைபெறுகிறது மூலஸ்தானம் மகா மண்டபம் கட்டப்பட்டாலும் தற்போதும்



பலாவடியில் சட்டப்பட்ட சிறிய மண்டபத்திலேயே சூலம் தாபிக்கப்பட்டு வழிபாடுகள் நடை பெறுகின்றன. மிகவும் புதுமையான வைரவர் என்ற நம்பிக்கை வழிபடுவோரிடையேயுண்டு. தாமாகவே மலர் சாத்தி மாலையிட்டு, பட்டும் சாத்தி வழிபடுவதனை தினமும் அவதானிக்கக் கூடியதாகயுள்ளது.

உள்ளேயிருக்கும் விளக்கில் எண்ணெயூற்றியும், தீபத்தில் கற்பூரமிட்டும் தீபமேற்றி தாமாகவே வழிபடல் காணலாம். இம்மாதிரியான வழிபாடு தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென்பதுவே வழிபடுவோரதும் அனைவரதும் பெருவிருப்பாகும் சின்னத்தம்பி பூபாலசிங்கம் அவர்களே மேற்பார்வையாளராகச் சேவையாற்றி வந்தார். இதற்குரியதான சிறியளவு நிதி கோப்பாய் கிராம வங்கியில் சேமத்திலிடப்பட்டுள்ளது. அவரது விருப்பத்தின் பேரிலேயே ஓர் தற்காலிக பரிபாலன சபையாக்கப்பட்டு பரிபாலன சபை விதிகளும் ஆக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சபைக்கும்;

தலைவர் சி. பூபாலசிங்கம்
உப தலைவர் ந. சிவகடாட்சம்
காரியதரிசி ஆ. குணானந்தன்
தனாதிகாரி க. நல்லவரோதயம் என்போர்

உட்பட 15பேர் கொண்ட நிர்வாக சபை தெரியப்பட்டு செயலாற்றி வருகிறது.

வெள்ளிக்கிழமைகள் தோறும் சாயந்தர வேளைகளில் பெண்கள் சிறுவர் சேர்ந்து பஜனை வழிபாடுகளும் விசேட தினங்களில் பொங்கல் வழிபாடுகளும் கிழமை தோறும் தவறாது நடை பெறுவதும் பிரசாதம் தாராளமாக வழங்கப்படுவதும் காணக் கூடியதாயுள்ளது. தற்போதைய இராணுவ நிலைமை சீர்வந்தவுடன் முன் மண்டப வேலைகள் தாமாகவே முன் வந்து பூர்த்தியாக்க அடியார்கள் தயாராக விருப்பதாயும் நிர்வாகம் தெரிவித்தது. 22.2.97 ஆம் மாசி மகப் பொங்கல் தொடக்கம் தமிழில் அர்ச்சனை வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளது,

# பெரியார்கள்

## இருபாலைச் சேனாதிராய முதலியார்

கோப்பாயைச் சேர்ந்த இருபாலைச் சேனாதிராய முதலியார் செல்வமும் அதிகாரமும் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த நெல்லை நாத முதலியாருடைய புத்திரர். கி.பி. 1750 — 1840-ல் வாழ்ந்தவர். கூழைக்கைத் தம்பிரான், மாதகல் சிற்றம்பல முதலியார் என்போரின் மாணவர், இலக்கண இலக்கியத்திலும் கவி பாடுவதிலும் பேரறிவுடைய வித்தகக் கவிஞராகத் திகழ்ந்தார். ஒரு முறை கேட்டதனை சிறிதும் தவறாது அப்படியே ஒப்புவிக்கும் அபார ஞாபக சக்தியுடையவராய் பலரதும் பாராட்டுதல்களையும் பெற்றவர். தமிழில் அகராதி செய்தவருள் முதல்வர். அக்காலத்தில் குருகுலக்கல்வி பெறும் வித்தியா பீடங்களுள் ஒன்றாக இருபாலையும் விளங்கியது. நல்லூர் ஆறுமுக நாவலர் (கி. பி 1822-1879) தெல்லிப்பளை அம்பலவாண பண்டிதர் (கி. பி 1814-1879) நல்லூர் சரவண முத்துப்புலவர் (கி. பி. 1849) என்போர் இவரின் நன்மாணாக்கர்களாவர். தமது ஆசிரியர் ஞாபகார்த்தமாக ஆறுமுகநாவலரால் கோப்பாயில் ஸ்தாபிக்கப்பட்ட நாவலர் பாடசாலை இன்றும் சிறப்புற நடைபெறுகிறது.

நல்லூர்க்கந்தனில் அபார பக்தி கொண்டவர். நல்லையந்தாதி, நல்லை வெண்பா நல்லைக்குறவஞ்சி, நீராவிக் கலிவெண்பா முதலிய பல பிரபந்தங்கள் இவரால் இயற்றப்பட்டன. இவரியற்றிய நல்லைக்குறவஞ்சியில் சிலேடைக் கருத்தமைந்த ஒரு செய்யுள்;

திருவாரும் நல்லை நகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோடு இன்புற்றார் அம்மானை
இருவாலைக் குயத்தியரோடு இன்புற்றார் ஆமாயின்
தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை
தருவார் காண் சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை

இருவாலைக்குயத்தியரோடு சம்பந்தம் வைத்திருக்கின்ற திருவாரும் நல்லைநகர்ப் பெருமானார் சாறு வைக்க சட்டியும்



குடமும் தருவாரோ? என்பது வெளிப்படைக் கருத்து சட்டித் திதியிலே கும்ப மாதத்திலே (கும்பம் - மாசி மாதம், தற்போது ஆடியில் நடைபெறும் கொடியேற்றுவிழா முன்னர் மாசியில் நடைபெற்றது) இரண்டு வாலைப் பெண்களாகிய வள்ளி தெய்வானையுடன் தொடர்புடைய செவ்வேற் பெருமானார் திருவிழாவின் போது அருள் பாலிப்பார்; என்பது மறு கருத்து.

இன்றும் இவரது குடும்பத்தாரைப் பழ வீட்டார் என்றே அழைக்கின்றனர். கோப்பாய் பலானை கண்ணகையம்மன் கோயில் இவர்களது பரிபாலனத்திலேயே இருந்து வந்தது ஊரார் வேள்விக்கு இசைந்து குறித்த குடும்பத்தைச் சேர்ந்த திரு ம. இரத்தினசிங்கம் சட்டத்தரணி அவர்களால் 1926-ல் உறுதி முடித்து ஊர் பொதுவாக்கப்பட்டது இன்றும் இவரது குடும்பத்தினரே குறித்த ஆலய தீர்த்தத் திருவிழாவைச் செய்து வருகின்றனர். இந்த பலானை கண்ணகையம்மன் பேரில் சேனாதிராய முதலியார் அவர்களால் பாடப்பட்ட ஊஞ்சற்பதிகம் சிதைவடைந்த போதிலும் எஞ்சியுள்ளவை ஊஞ்சலின் போது பாடப்பெற்று வருகிறது. அவற்றுள் ஒரு பாடல்;

கனகநவரத்தின மணிமௌலி மின்ன
கவின் கொள் நெற்றிச் சுட்டி இளங்கதிர்கள் காலப்
பனகமணிக் குண்டலங்கள் பகலை வெல்ல
பணித்தரளத் தொடை நிலவின் பரப்பையென்ன
அனக விடைக் கிரங்கியமே கலைகள் ஆர்ப்ப
அடியவரை அஞ்சேல் எனச் சிலம்பும் ஆர்ப்ப
தினகர மண்டலமளவும் மதில் சூழ் கோவைத்
தேவி திருக்கண்ணகையே ஆடீர் ஊஞ்சல்.

இவர் வழித் தோன்றலாக பண்டிதர் வித்தகம் கந்தையா பிள்ளை திகழ்ந்தார். சேனாதிராய முதலியார் காலமான போது உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் அவர்கள் பாடலொன்று;

நாநா திராவிடமும் நன்னிலக்க ணாறுறச் செய்
சேனா திராசனையோ செத்த தென்றீர் — வானாதி
பொன்னிலத்து முண்மை பகனூ றுரைப் பதற்காய்
இந்நிலத்தை விட்டெடுத்த தே.

# வடகோவை வித்துவான் சபாபதிநாவலர்

எமது கோப்பாய் கிராமத்துக்கு பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்களில் வடகோவைச் சபாபதி நாவலர் முதன்மையானவர் எனல் மிகையாகாது. 1848-ல் பிறந்த இவரது பெற்றார் சைவப்பெருங்குடி மக்கள் வழிவந்த வடகோவைச் சுயம்பு நாதபிள்ளையும் தெய்வயானை என்பவருமாவர்.

ஆரம்பத்தில் வடகோவை பிரம்மஸ்ரீ ஜெகந்நாதையர் அவர்களிடமும் தொடர்ந்து நீர்வேலி சிவசங்கர பண்டிதர் அவர்களிடமும் முறையாகக் கல்வி பயின்று இளமையிலேயே தமிழ் மொழி நிரம்பப் பெற்றவரானார். தம்மைப் பீடித்த குன்மம் நோய் காரணமாக நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் தங்கியிருந்து தரிசனஞ்செய்து குணமானார் நல்லூர் சுப்பிரமணிய பதிகம்-என்பதும் பாடியருளினார். இவரது கல்வியாற்றலை நல்லூர் ஆறுமுகநாவலர் கண்டு தமது சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமைத் தமிழ்ப் போதகாசிரியராக நியமிக்க, அவ்விடம் சில காலம் தொடர்ந்து சேவையாற்றினார். பின் திருவாவடுதுறையையடைந்து 16வது சந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளின் அருளுபதேசம் பெற்று 12 வருடம் ஞானநூல்களை முறையாகப் பயின்று ஆதீனவித்துவானுமாகினார். தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் மிக்கவராகி, இவர் சிதம்பரத்திலும் சென்னையின் பல பாகங்களிலும் பெரும் பிரசங்கங்கள் செய்து அறிஞருலகத்தின் பாராட்டுதல்களையும் பெற்றார் சுப்பிரமணிய யோகீந்தரர் அவர்களால் நாவலர்பட்டமும ஞானசம்பந்த தேசிக சுவாமிகளால் மகாவித்துவான் பட்டமும் அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். சர்வரூபமாக விளங்கும திராவிடமாபாடியத்தை அதிதீவிரபக்குவமுடைய இவரிடம் ஆதீனத்தார் கொடுத்துக் கௌரவித்து வைத்திருந்தார்கள்.

இவர் 893 செய்யுட்களை உள்ளடக்கிய சிதம்பர சபாநாதபுராணம் எனும் நூலை இயற்றி 1885-ல் வெளியிட்டார், மேலும் சிவகர்ணாமிர்தம் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் யேசுமத சங்கற்ப நிராகரணம் திருச்சிற்றம்பல யமகவந்தாதி, மாவையந்தாதி, வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டைமணிமாலை, திராவிடப்பிரகாசிகை முதலிய இருபது நூல் வரை இயற்றியருளினார். சிவஞானமுனிவர் திராவிடமாபாடியம் போன்று நாவலரவர்களால் இயற்றப்பெற்ற அறிவுக் களஞ்சியமான திராவிடப் பிரகாசிகை அறிஞர் பலராலும் பாராட்டுப் பெற்ற பெருநூலானது. 1899-ல் இவரியற்றிய இந்நூலையொட்டி வழிநூல்கள் பலவும பின்னால் வெளியாகின. இந்நூல் பண்டித பரீட்சைக்கும், லண்டன், இலங்கை பி, ஏ. பரீட்சைகட்கும் பாட நூலாகவும் அமைந்துள்ளது. இந்நூல் தொடர்ந்து பல பதிப்புக்கள் வெளியாகின. திராவிடப்பிரகாசிகையின் தற்சிறப்புப்பாயிரச் செய்யுள்;



மன்னுமாமுதற் கடவுளை மனத்திடை நிறுவி
என்னை யோர்பொருளாக கொண்டான் குரவனை இறைஞ்சி
இன்னமாண் திராவிடப் பிரகாசிகை யென்னுந்
தன்னை நேர் தருந் தமிழ் வரலாறு சொற்றுவனால்

நாவலர் யாழ்ப்பாணம் வந்தபோது தமது சொந்தமான சுழிபுரம் சரவணமுத்து தம்பதிகளின் புத்திரியை விவாகஞ் செய்து சில காலம் இல்வாழ்க்கை நடத்தி மீண்டும் தமிழ் நாடு சென்றார்.

இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி மகாராசா தலைமையில் சிதம்பரத்தில் பல தமிழ்ப் பிரசங்கள் செய்து அவரின் பெருமதிப்பிற்குரியவாகி பரிசம் வரிசைகளும் பட்டமும் பெற்றார். அவர் அளித்த பொருளுதவி இடவசதி என்பன பெற்று சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் வீதியில் சிதம்பரம் சித்தாந்த வித்தியாநுபாலன இயந்திரசாலை 1891-ல் நிறுவி ஞானாமிர்தம் சுதேசவர்த்தமானி எனும் மாதப் பத்திரிகையையும் வெளியிட்டு முறையாக நடத்தினார். தொடர்ந்து 35 வருடங்கள் சென்னையில் வசித்தபோது மேலும் பல அரிய நூல்களும் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்தன. திருமந்திரம் - பல ஏட்டுப் பிரதிகளையும் பரிசோதித்து கூடிய வரையில் சுத்தப் பிரதியாக வெளியாக்கினார். சுழிபுரம் பறாளை விநாயகர் பள்ளுப் பிரபந்தம் 1-ம் பதிப்பாக இவ்விடமே அச்சிட்டு 1889-ல் வெளியாகியது. பல பீடாதிபதிகளதும் அறிஞர்களதும் பாராட்டுதல்களையும் பெற்று சைவ சூளாமணி, நாவலரேறு முதலிய விருதுகளையும் பெற்றார்.

சிதம்பரத்திலும் சென்னையிலும் யாழ்ப்பாணத்திலுமிருந்து வந்து நாவலரிடம் கல்வி பயின்று தேறிய மாணவர் பலர் பிற்காலத்தில் பேரறிஞர்களாக விளங்கினர் மயிலை சிங்காரவேலு, திருமயிலை பாலசுந்தர முதலியார், சிதம்பரம் சோமசுந்தர முதலியார் முதலிய பேரறிஞர்களோடு, யாழ்ப்பாணம் மாதகல் கார்த்திகேசபிள்ளை, சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர் வதிரி சி. வை. தாமோதரம்பிள்ளை, மாவை வே. விசுவநாதபிள்ளை முதலிய பெரும் புலவர்களும் அடங்குவர்.

இவர் சிதம்பரத்தில், தங்கியிருக்கையில் 1903 சோபகிருது ஆனி அபரபக்க பஞ்சமி அவிட்ட நட்சத்திரத்தில் சிவானந்தப் பெரு

வாழ்வு எய்தினார். நாவலர் அவர்கள் உத்தரக் கிரியைகள் நடைபெற்ற போது ஆதீனத்தாரனுப்பிய பீதாம்பரம் மாலை பரிவட்டம் முதலான சாத்தப்பட்டன.

*யாழ்ப்பாணத்து பெருநகரைச் சார்ந்தொரு*
*வடகோவைப் பதியனாகிய சபாபதிநாவலன்*

என்று சாமிநாதையரும்

*பக்தியின் மிக்கவர் வாழும்*
*வடகோவை நீடமுற வந்து*
*வடகோவைப் போல் வயங்கிய சபாபதி*

என்று சுவாமிநாதபண்டிதரும்

*சிவஞான யோகிகளின் தவச்செல்வாய் விளங்கிய*
*எங்கள் வித்வசேகர நாவலர் அவர்கள்*

திருச்சிற்றம்பலவன் திருவடி நீழலையடைந்தார்.

1) சபாபதி நாவலர் ஞாபகச்சின்னமாக சபாபதி நாவலர் நந்தவனமமைக்க அவர் மருகர் அப்பாபிள்ளை சிவகுருநாதன் அவர்கள் உபகரிப்பாக நொத்தாரிசு சி. செங்காதரையரால் இல 10967 — 2.1.1938 எழுதிய நன்கொடை உறுதியும்;

2) நாவலர் அவர்கள் ஞாபக மண்டபம் நிறுவி அவர் செய்த நூல்களை வெளியிட - நிலைத்து நிற்க - நூல் நிலையமாக என்றும் நின்று நிலவ ரூபா 1000/- நன்கொடையுடன் அ. சிவகுருநாதன் அவர்கள் நொத்தாரிசு இ. ஆறுமுகம் அவர்களால் 17160 — 21.1 1948 எழுதிய தருமசாதன நன்கொடையும்;

3) சிதம்பரத்தில் நாவலர் வசித்த வீடும் அச்சுக்கூடம் என்பனவும் எழுதிய தருமசாதனங்கள் உண்டு.

இவை பற்றிய விரிவான குறிப்புக்கள் திருமயிலை சோமசுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதி வடகோவை அ. சிவகுருநாதன் அவர்களால் சென்னை வித்தியானுபாலன இயந்திரசாலையில் பதிப்பித்த 1935-ல் அச்சான வரலாற்று நூலில் விரிவாகவுண்டு.

கோப்பாய் செல்வ விநாயகர் ஆலய வீதியில் சபாபதி நாவலர் சனசமூக நிலைய ஆதரவில் 1959-ல் நிறுவப்பட்ட சபாபதி நாவலர் வாசிகசாலை நடைபெற்று வருகிறது.



1960 ஆனி 5ம் 6ந் திகதிகளில் கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோயில் முன்றிலில் சபாபதி நாவலர் நினைவு விழா மிகச்சிறப்பாக நடந்தது. பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, பண்டிதை ச. அமிர்தாம்பிகை வித்துவான் வேந்தனார் முதலான பேரறிஞர்கள் சொற்பெருக்காற்றினர். திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சு. தண்டபாணி தேசிகர் அவர்களும் விசேட விருந்தினராகச் சமுகந் தந்து இரு நாட்களும் சொன்மாரி பொழிந்தார்.

*(இடையில் ஓர் பதற்றம்: தண்டபாணி தேசிகரையாவுடன் தொடர்பு கொண்டு யாவும் பூர்த்தி. அழகுற அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள். ஐயாவை அழைத்து வர முதல் நாள் பலாலிக்கு; விமானத்தில் ஐயா வரவில்லை ஏக்கம். திருச்சி விமான நிலையத்துடன் தெலிபோன் தொடர்பு "விமான நிலையத்தில் நிற்கிறேன்; இலங்கை வர விசா கிடைக்கவில்லை." விமான நிலையத்திலேயே தங்கியிருங்கள் ஆவன செய்கிறோம்; பெரிய தபாற்கந்தோர் சென்று சேர், கந்தையா வைத்தியநாதனுடன் தெலிபோன் தொடர்பு. சற்று நில்லுங்கள்; அவ்விடச் செய்தி அரை மணி நேரத்தில் 'யாவும் சீர், அடுத்த விமானத்தில் வருகிறார' "யாவரும் குதூகலம். தொடர்ந்து யாவும் சுமுகமாக நடைபெற்றன )*

"இலங்கையிலுள்ள தமிழறிஞர்கள் அத்தனை பேரையும் பயன்படுத்தியது; தமிழ் நாடு. ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், தில்லைநாதப்புலவர், சுவாமிநாத பண்டிதர் அம்பலவாண நாவலர் முதலான பேரறிஞர்கள் பிறந்தது இந்த ஞானபூமியாக விருப்பினும் அவர்கள் பயன் தந்தது நம் தமிழ் நாட்டிற்கேயாகும்" என்று 5.6 60 பெருவிழாவின் போது தண்டபாணி தேசிகர் குறிப்பிட்டது என்றும் நினைவு கூரத்தக்கதாகும். கோப்பாய் என்றும் காணாத பேரறிஞர்கள் கூட்டம் சமூகமளித்தது கிராமத்திற்குப் பெருமையளிப்பதொன்றாகும்.

யாழ்ப்பாணத்தின் பிரதான ஆலயங்களைத் தரிசிக்கும் ஒழுங்குகள் செய்திருந்தோம். நயினாதீவு நாகம்மாள் மூலஸ்தான சுயம்புலிங்கத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

## தென்கோவை வித்தகம் கந்தையா பண்டிதர்

இருபாலைச் சேனாதிராய முதலியாரது தந்தை தெல்லிப்பளை பேரறிஞர் நெல்லைநாத முதலியார். இவர்கள் வழியிலானவர்கள் கந்தரோடையிலுமிருந்தனர். கந்தரோடை சபாபதிப் பிள்ளைக்கும் இருபாலைச் சேனாதிராய முதலியார் பேத்தி காமாட்சியம்மைக்கும் 25. 6. 1980-ல் பிறந்தவரே நமது வித்தகம் கந்தையா அவர்கள். ஆரம்பக்கல்வியை கோப்பாய் C. M. S. பாடசாலையிலும் தொடர்ந்து சுண்டிக்குளி பரியோவான் கல்லூரியிலும் படித்தவர் மேற்கொண்டு யாழ்ப்பாணத்தில் அக்கால வித்தியா பீடங்களிலொன்றாய் விளங்கிய இருபாலையில் சின்னப்பா பிள்ளை. உதயபானு பத்திராதிபர் சரவணமுத்து என்போரிடம் தமிழ் சமய நூல்களை முறையாகப் படித்தார் தொடர்ந்து சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் இலக்கண இலக்கிய நூல்களையும் படித்த போது வித்துவான் கணேசையர் இவரது சக மாணவராயிருந்தார்.

யாழ்- கோட்டில் மொழி பெயர்ப்பாளராயிருந்த தென்கோவை விசுவநாத முதலியார் வழி வந்த செல்லம்மாளை விவாகஞ் செய்தார் அன்பர்களது கேள்விப்படி மட்டக்களப்பு சென்று தலைமையாசிரியராகப் பத்து வருடங்கள் சேவையாற்றினார். பின்பு கொழும்பு ஆங்கில ஆசிரிய கலாசாலையில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகச் சேவையாற்றிய காலத்தில் பண்டிதர் சு. மயில்வாகனன் (மறை மலையடிகள்) சகாராக்கல்லூரி முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி பயிற்சி முடித்து வெளியேறிய போதும் தொடர்ந்து பயின்று பேரறிஞர்களாகவும் விளங்கியதோடு குரு பக்தியுடையவர்களாயுமிருந்தனர். சமய இலக்கியப் பிரசங்கங்கள் செய்தும் சமயக் கட்டுரைகள் எழுதியும் பலரதும் பாராட்டுதல்களுக்கு உள்ளானார் பின்னர் ஆசிரிய கலாசாலை விட்டு கொழும்பு கல்விப் பணிமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் சேவையாற்றினார்

1925-ல் இந்தியா சென்று திருக்கழுக் குன்றத்திலும் தொடர்ந்து புதுச்சேரியிலும் தங்கினார். பி. வி ரமண சாஸ்திரிகள், உ. வே. சாமிநாதையர், கல்யாண சுந்தர முதலியார் போன்ற அறிஞப் பெரு மக்களுடைய தொடர்புகள் அரவிந்தர் போன்ற பெரியார்களது அறிமுகங்கள் ஏற்பட்டன. நந்தி வெளியீட்டு மன்றத்திருந்து சுத்த சாதகம், உண்மை நிலை முதலிய நூல்களை வெளியிட்டு அறிஞர் உலகத்தின் பெருமதிப்பினை பெற்றார். இவரது வித்தகம் சஞ்சிகை ஆழமான சமயக் கருத்துக்களைக் கொண்டதாய் வெளிவந்து ஆன்மீகப் பெரியார்கள் பலரதும் பாராட்டுதல்களுக்குள்ளானது. புதுவையில் தங்கியிருந்த போது ஓர் ஆன்மீக நாதரின் குருவுபதேசம் பெற்றதாகவும் அவரைப் பற்றி பயபக்தியுடன் குறிப்பாகச் சொன்னாலும் குருநாதர் கேள்விப்படி அவர் பெயரை வெளியிட விரும்பவில்லை.



இவர் தாயகம் திரும்பி தென்கோவை தமதில்லைத்தில் வாழ்ந்தார். சமய ஆர்வலர்கள் இவரிடம் வந்து நீண்ட நேரம் சம்பாசித்துச் செல்வர். சில மாலை வேளைகளில் எமது கிளுவானை வீதியால் கடற்கரையோரம் உலாவச் சென்று திரும்புவார். இவருடன் இடையிடை யானும் செல்லும் பாக்கியம் கிடைத்தது. உயர்ந்த சமயக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே வருவார்.

கடைசி நாட்களில் தன்னிலைமையறிந்து நண்பர்கட்குச் சூசமாகச் சொல்லியிருந்தார் 25. 6. 80 இவர் பிரிவு சாதாரண நிலையில் நடந்தது அமைதியான பேச்சும் சிறந்த பேச்சு வன்மையுமுடைய பேரறிஞர்.

கிளுவானை வீதி முடிவில் தெற்குப் புறமாய் கந்தப்பொடியர் வீடு என்று சொல்லப்படும் இவர் வீட்டிலிருந்து தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு கொடியேற்றுச் சாமான்கள் பெரிய குத்து விளக்குகளுட்பட வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுவதும் திருவிழா முடிந்ததும் திருப்பிக் கொண்டு வரப்படுவதும் வழக்கத்திலிருந்தது தெரியும்.

புதுச்சேரி இராமநாதபுரம் சமஸ்தானத்திலிருந்ததாகச் சொல்லப்படும் இவரது பெரிய அளவிலான எண்ணெய் வண்ணமுடைய படமொன்று இந்தியா சுதந்திரமடைந்து சமஸ்தானங்கள் செயலிழந்த போது உறவினரையழைத்துக் கொடுக்கப்பட்டது அது கந்தரோடையில் இவரது உறவினர் நடராசா ஆசிரியர் (1970 அளவில் பா. ம. அபேட்சகாக நின்ற துரைராசா சகோதரர்) வீட்டிற்கு யான் சென்ற போது அவர் வீட்டில் வைத்து நன்கு பேணப்பட்டிருந்ததனைப் பார்த்துள்ளேன்.

## இந்து போட் சு. இராசரத்தினம் அவர்கள்

1505-ல் இவ்விடம் வந்த போர்த்துக்கீசர் சைவாலயங்களை அழித்தும், 1658 ல் வந்த ஒல்லாந்தர் மறைவிடங்களில் கற்கள் சூலங்கள் வைத்து வழிபடுவோரைத் தண்டித்தும் 1796-ல் வந்த ஆங்கிலேயர் பாடசாலையமைக்க கல்வியுடன் சமயத்தையும் ஊட்டியும், வெளியாயிருந்த காணிகளில் குடியிருப்புக்களையேற்படுத்

தியும் நாகரிகமான வகையில் தமது சமயத்தை வளர்த்தனர். மேலும் மேற்கல்வியைத் தொடர சமயம் கட்டாயமாயிருந்தது. பெண்களும் மேற்கல்வியைத் தொடர வாய்ப்பளித்து விவாகத் தொடர்புகளை ஏற்படுத்தியும் சமயம் வளர்க்கப்பட்டது. உத்தியோக வாய்ப்புக்கள் கொடுத்தும் வளர்த்தனர்.

நமது நாவலர் பாடசாலையில் நடந்ததொரு நாவலர் நினைவு நாட்கூட்டத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பேசும் போது;

போத்துக்கீசர் சுளையிருக்கத் தோலை விழுங்கினர்.
ஒல்லாந்தர் தோலிருக்கச் சுளையை விழுங்கினர்.
ஆங்கிலேயர் தோலையும் சுளையையும் விழுங்கினர்

என்று நயமாகக் கூறியதும் நினைவு கூரத்தக்கது

([illegible])

பிற்காலத்தில் இந்த வகையில் கிறிஸ்தவக் கல்லூரிகளில் உயர் வகுப்புப் படித்தவர்களில் தப்பியவர்களில் நாவலர் பெருமான், காரைதீவு அருணாசலம் உபாத்தியாயர், கோப்பாய் சு. இராசரத்தினம் என்போர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

சமயத்தின் அடிப்படை இன்று கல்வியிலேயே பெரிதும் தங்கியுள்ளது – என்ற முடிபிற்கு நாவலர் வந்து வண்ணார்பண்ணையிலும் கோப்பாயிலும் தொடர்ந்து சிதம்பரத்திலும் சைவப் பாடசாலைகளை நிறுவி தமிழும் சைவமும் வளர அத்திவாரமிட்டார். அவர் உந்துதலால் அவர் மறைவிற்குப் பின் 9.12.1923-ல் ஸ்தாபிக்கப்பட்டதே சைவ வித்தியா விருத்திச் சங்கமாகும். அதன் ஆரம்ப தலைவர்கள் பொன். இராமநாதன். வை. துரைசாமி என்போர் சங்க ஆதரவில் சில சைவப் பாடசாலைகளையமைத்தனர். தொடர்ந்து தலைவராகப் பதவியேற்ற சு. இராசரத்தினம் அவர்கள் முதன் முதல் நிறுவப்பட்ட மாதகல் விக்கினேஸ்வர வித்தியாசாலை என்பனவற்றைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் – மிஷன் பாடசாலைகட்கு அண்மையிலும் சைவப் பாடசாலைகளை மிக வேகமாக ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்திற்கு அப்பால் வவுனியா, முல்லைத்தீவு, முந்தல், வதுளை முதலாமிடங்களிலும் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இந்த வகையில் செங்குந்தா சேணியதெரு துவிபாஷா பாடசாலைகளும் அடங்கும்.



எதுவித பாடசாலைகளுமில்லாதிருந்த நமது கோப்பாய் வடக்கில் 1926-ல் பிறந்ததுதான் நமது சரவணபவானந்த வித்தியாசாலை. அதன் வரலாறு இந்நூலின் பிறிதோரிடத்திலுண்டு. 200 ற்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவிய பெருமை இவர்க்குண்டு.

இந்த துணிகரமான காரியங்களை முன்னின்று செய்த பெரியார் இந்து போட் இராசரத்தினம் அவர்கள் நமது கோப்பாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர்; என்பதும், அவர் பிறந்து வளர்ந்த இல்லம் நாவலர் பாடசாலைக்கு வடபுறமாயுள்ள நாவலடி ஒழுங்கையருகில் 150 யார் தொலைவில் உள்ளது என்பதும் நம்மில் பலரும் அறியார். இவரது தந்தை மயிலிட்டி கதிரேசு சுப்பிரமணியம். தாய் கோப்பாய் சிவகாமிப்பிள்ளை இவர்கட்கு கதிரேச, இராமநாதன், இராசரத்தினம் என்று மூன்று புதல்வர்களும் பரமநாயகம் என்ற புதல்வியும். கடைசிப் புதல்வர் இராசரத்தினம் 4.7.1884-ல் பிறந்தார். இவர் பிறந்த வீட்டில் இவரது சகோதரியின் சந்ததியார் இன்றுளர்.

இராசரத்தினம் அவர்கள் ஆரம்பக் கல்வியை ஆசான் சின்னத்தம்பி அவர்களிடம் கற்றார். தொடர்ந்து மேற்கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் பெற்றார். கல்வியோடு இவரது விளையாட்டுத் திறமையையும் சீர் தூக்கிய அதிபர்;

அன்பினிலழைத்து உபகாரவேதனம் அளித்து
அபகாரமாக கிறீஸ்தவப் பெண்ணை மணம்புரியும்
நிபந்தனையும் கேட்டார்.

"நல்லை நாவலன் பெருநெறி இலட்சியமாக" மறுத்து, இந்தியா சென்று கல்கத்தாவில் சட்டம் பயின்று நியாயவாதிப் பட்டம் பெற்றார். இலங்கை மீண்டு நியாயவாதி சேவை செய்த போது "லீகல்டைஜெஸ்ற்" – என்ற சட்ட நூலையும் எழுதினார். பின் நீதிபதியாகச் சேவை செய்யும் வாய்ப்பும் கிடைத்தது.

இவர் அச்சுவேலி இளையதம்பி செல்லம்மை என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு மூன்று புத்திரர்களையும் நான்கு புத்திரிகளையும் பெற்று நயம்பட வாழ்க்கை நடாத்தினார். தமது புத்திரிகள் சைவப் பாடசாலையிலேயே கல்வி பெற வேண்டும் எனும் நோக்கில் சேணியதெரு துவிபாஷா பாடசாலையிலேயே படிக்க வைத்தார்.

தொடங்கிய பாடசாலைகட்கு விகிதாசாரத்துக்குத் தக பயிற்சியாசிரியர் இல்லாத குறை நிலவியது. புறச்சமயக் கலாசாலைகளில் மதம்மாறிப் பயின்றோர் மீண்டும் முன்னைய வழிக்குத் திரும்பி வந்த போது இராசரத்தினம் அவர்கள் தமது பாடசாலைகளில் இடங் கொடுத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பிரதி வருடமும் 40 பேர் பயிற்சி பெற்று வெளியேறிய போதும் பயிற்சி பெற்ற ஆசிரியர் போதாமை தொடர்ந்தது. இதனையுணர்ந்து இராசரத்தினமவர்கள் திருநெல்வேலியில் 1930-ல் ஆசிரிய கலாசாலையை ஸ்தாபித்தார். மயிலிட்டி சி. சுவாமிநாதன் அதிபராக பேராசிரியர்கள் பொ. கைலாசபதி. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை, ந கந்தசாமி ஐயர் போன்ற அறிஞர் பெருமக்களை நியமித்து திருநீற்றினொளி விளங்கு சைவாசிரியர்களாக வெளியேறச் செய்தார்,

கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் தோன்றியமையால் பெண் பிள்ளைகளும் கூடுதலாகச் சேர்ந்தனர் மாணவியர் விகிதாசாரத்துக்குத் தக பயிற்சியாசிரியைகள் நியமனம் வித்தியாபதியாரால் வற்புறுத்தப் பட்டது இதனால் திருநெல்வேலியிலேயே 1948-ல் மகளிர் பயிற்சிக் கலாசாலையும் ஆரம்பிக்கப் பட்டது. மேலும், அநாதைப் பிள்ளைகள் பிறமத இல்லங்களில் சேர்க்கப்பட்டு மத மாற்றஞ் செய்யப்படும் அவல நிலையையுணர்ந்து 1932-ல் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையருகில் அநாதையில்லம் ஆரம்பிக்கப்பட்டது, இந்த இல்லச் சிறுவர் அருகேயுள்ள முத்துத்தம்பி வித்தியாசாலையில் படித்து அருகு பயிற்சிக்கலாசாலையில் பயின்று வெளியேறி சை. வி. வி. சங்கப் பாடசாலைகளில் நியமனம் பெற்று காவிய பாடசாலைகளில் பண்டிதர்களாகவும், பின் பட்டதாரிகளுமாகி பேரும்புகழும் பெற்று வாழ்ந்தவர்கள் பலர்.

1960-ல் இலங்கையிலுள்ள பாடசாலைகள் யாவும் கல்வி மந்திரி கன்னங்கரா திட்டப்படி சுவீகரிக்கப்பட்டுத் தேசியப் பாடசாலைகள் ஆக்கப்பட்டன. பிறமதத்தவர்கள் தமது ஓரிரு கல்லூரிகளைத் தேசிய மயப்படுத்தவிடாது தாமாகவே நடத்த முன்வந்த போது 80% ற்கு மேற்பட்ட இந்துக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் யா / இந்துக் கல்லூரியையும் அவ்வாறு நடத்தும் நோக்கில் நடந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு நமது இந்து போட் இராசரத்தினம் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். சமுகமாயிருந்த பெற்றார் பழைய மாணவர் நியாயவாதிகள் பலரும் இந்துக்கல்லூரியை தனியார் மயமாக நடத்த வேண்டு



மெனவும் தாங்கள் வேண்டிய உதவிகள் செய்வதாகவும் வாக்களித்தனர். யாதும் பேசாது அவதானித்துக் கொண்டிருந்த இராசரத்னத்தின் அபிப்பிராயத்தையறியத் தலைவர் தூண்டினார்

''மறு சமயத்தார்க்கு வெளி நாட்டு நிறுவனங்கள் ஆசிரியர்களாயுள்ள குருமார் வேறும் வருமானங்கள் கிடைக்கலாம். அவர்கள் தனியாக நடத்தலாம். எங்கட்கு அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் உண்டா? என்று சிந்திக்க வேண்டும். தற்போது வாக்களிப்பவர்கள் தொடர்ந்து எவ்வளவு காலம் கொடுக்க முடியும். ஆழமாகச் சிந்தியுங்கள். தீர்மானித்து எடுத்து நடத்திகை விடும் நிலையுருவாகலாம். தென்பகுதி பெரும்பான்மையருடன் சாதி, பாஷையால் வேறுப்பட்டாலும் சமய இணைப்பு ஓரளவுண்டு. புத்தர் எங்கள் கடவுளரையும் வணங்குகிறார்கள். சமய பேத மேற்பட இடமிராது. சிந்தித்து முடிவு செய்தல் நல்லது'' என்று அமைதியாகக் கூறினார்.

அனுபவம் பேசுகிறது - என்று மீளாய்வு செய்யப் பின் போடப்பட்டது.

1960-ல் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்ட பின்பும் அநாதையில்லத்திற்கு தினமும் மாலை வேலைகளில் சமுகமளித்து மேற்பார்வை செய்து பாதுகாத்து வந்த இராசரத்தினம் அவர்கள் எதிர்பாராத விதமாய் 12 . 3 66-ல் மறைந்தார். நாவலர் பெருமான் சனவை நனவாக்கிக் காவலராகவிருந்த பெரியார் ஞாபகார்த்தமாக ஓர் நிதியம் உண்டாக்கும் நோக்கில் 1970 காலப்பகுதியில் யாழ் மாநகரசபை இந்து விடுதியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு அன்பர்கள் பலரும் சமுகளித்து அபிப்பிராயங்கள் பரிமாறப்பட்டன. நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த காரளசிங்கம் தலைவர், அதேயிடத்தைச் சேர்ந்த இளைய தம்பி உபாத்தியாயர் காரியதரிசியாகக் கொண்ட 15 பேரடங்கிய செயற் குழுவும் தெரியப்பட்டது சில காலத்துள் செயலாளர் காலமாக தொடர்ந்து நடந்த யுத்த பயங்கர கெடுபிடிகளால் செயற்படாத நிலையேற்பட்டது

நமது இந்து போட் இராசரத்தினம் பற்றி தாங்கள் எழுதிய வரலாற்று நூலொன்று தங்கள் வசம் இருப்பதாக அறிகிறேன். அச்சிட்டு வெளிப்படுத்துகிறேன்; தாருங்கள்; என்று மல்லாகத்தைச் சேர்ந்தவரும் பிரபல சங்கத்தலைவரும் முன்னோடியுமான அன்பர் வாங்கிச் சென்றார். இதுவரை வெளிவரவில்லை அதனை மீளப்

பெற்று அச்சிடல் நல்லது'' — என்று பண்மொழிப் புலவர்
க. சி. குலரத்தினம் அவர்கள், மறைவுக்குச் சில வாரங்கட்கு முன்
னர் யான் அவரில்லம் சென்றபோது கவலையுடன் என்னிடம்
கூறினார்.

இது விஷயமாய் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியா
சாலையில் 1994-ல் நடந்த இராசரத்தினம் நினைவுக் கூட்டத்
தின் முடிவில் கூட்ட அமைப்பாளர்களிடம் விபரமாகக் கூறி
னேன். கிடைக்குமா? வெளிவருமா?

## சேர் கந்தையா வைத்தியநாதன்

அரசாங்க அமைப்பில் மணியகாரன் உடையார் விதானை
முறையிருந்த போது கோப்பாய்ப் பகுதியில் 1900 அளவில் கந்
தையா உடையார் சேவையாற்றினார். இவருக்கு வைத்திய
நாதனும் இரு புத்திரிகளும் உளர்.

வைத்தியநாதன் ஆரம்பக் கல்வியை CMS கோப்பாய்
ஆங்கில பாடசாலையிலும் தொடர்ந்து பரியோவான கல்லூரி
யிலும் பின் கொழும்பிலும் கற்று CCS பட்டதாரியானார்.
லண்டனில் 1921—23 படித்து MBBS பரீட்சையிலும் திறமைச்
சித்தியடைந்தார். இவர் ஓர் பலகலை வல்லுனர்.

1931-ல் டொனமூர்த் திட்டச் சிபார்சுப்படி சட்ட நிரூபண
சபை கலைக்கப்பட்டு அரசாங்க சபை ஆரம்பமானது. மக்க
ளால் தெரிவு செய்யப்பட்ட 50 பிரதிநிதிகளும் அரசநியமன
அங்கத்தவர்கள் 8, அரச உத்தியோகத்தர் 3 உட்பட 61 பேர்
கொண்ட சபை சேவையாற்றியது அரச சேவையிலிருந்த கந்
தையா வைத்தியநாதனும் நியமன அங்கத்தவரானார். அரசாங்க
சபை அங்கத்தவரான இவர் கைத்தொழில் வீடமைப்பு மந்திரி
யுமானார்.

இவர் மந்திரியாராகவிருந்த போது நமது பகுதிக்கு ஆற்
றிய சேவைகள் இவரது ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்
றன. 1944-ல் நன்கொடையளிக்கப்பட்ட காணியில் ஆஸ்பத்திரி
கட்டுவிக்க நாம் செய்த பிரயத்தனங்கள் யாவும் பின்னடிக்கப்
பட்டு வந்தன. நமது கிராமத்துப் பெரியவர்கள் இவரைப் பேட்டி
கண்டு முறையிட்டதன்பேறாக இவரது இடைவிடாமுயற்சியால்
நமது கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரி 1954-ல் அத்திவாரமிடப்



பட்டு விரைவில் பூரணமடைந்தது. நமது கிராமத்தின் வரப்
பிரசாத நாயகனாகவிருந்த இவரைக் கொண்டே ஆஸ்பத்திரி
18.1.1956-ல் கோலாகலமான வைபவங்களினூடே திறந்து
வைக்கப்பட்டது. (இது சம்பந்தமான விபரம் இந்நூலின் பிறி
தோரிடத்திலுண்டு) மேலும் நீர்வேலி கந்தசாமி கோயிலடி
பாலர் நிலையமும் விடுதியும் நிறுவியது, மண்வீதியாக பற்றை
மண்டிக்கிடந்த இராச வீதி செப்பனிடப்பட்டு பூரணமாக்கப்பட்
டது என்பன போன்ற பல காரியங்கள் இவரது முயற்சியால்
இவ்விடம் நிறைவேறின.

இவரது முன்னோரால் ஆரம்பிக்கப்பட்ட இருபாலை வீர
பத்திர கோயில் பூரண பொலிவு பெற்று நித்திய நைமித்திய
விழாக்கள் முறைப்படி நடக்கப் பெரிதும் உதவினார். இச்சுற்
றாடலிலுள்ள கோயில்களில் எவற்றிலுமில்லாதவாறு பிரதி வருட
மும் விசேட தினங்களில் சைவ பிரசங்கங்கள் விழாக்கள் நடை
பெற்று வந்ததனை நாமறிவோம்.

இவர் ஓய்வு பெற்ற பின்பு இவரது சைவப்பணி திருக்
கேதீஸ்வரம் வரை தொடர்ந்தது திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்
சபையின் தலைவராகி இவர் செய்த பெருமுயற்சிகட்கு சைவ
உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது.

மாதோட்டத்தில் தேன் பொந்தொன்று உண்டு. கண்டு
பிடிப்பது சைவ மக்களின் கடமை; என்று நாவலரால் போற்றப்
பட்ட திருக்கேதீஸ்வர ஆலயம் 2000 வருடங்கட்கு முற்பட்டதும்
8-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரால்;

அங்கத்துறு நோய்கள் அடியார்கள் மேல் ஒழித்தருளி
வங்கம்மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம் செய்மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீஸ் வரத்தானே.

என்று பதிகம் பாடப் பெற்றதும்

நத்தார்படை ஞானன் பசுவேறி நனைகவிழ்வாய்
மத்தம் மதயானை உரிபோர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பணிவான் திருக்கேதீஸ்வரத்தானே,

என்று சுந்தரரால் பதிகம் பாடப் பெற்றதுமான திருக்கே
தீஸ்வரம் 1505-ல் வந்த போத்துக்கீசரால் இடித்துத் தரைமட்ட
மாக்கப்பட்டது, கோயில் இருந்த இடமே தெரியாது காடுமண்டி

யது. இதனால்தான் நமது நாவலர் மாதோட்டத்தில் தேன் பொந்தொன்றுண்டு தேடிக்கண்டு பிடிப்பது சைவ மக்கள் கடமை என்று கூறும் பரிதாபநிலையேற்பட்டது.

1520-ல் மன்னார் பிரதேசமும் மாதோட்டமும் புதிதாக மதம்மாறிய கத்தோலிக்க மக்களைக் கொண்டதாக விருந்தது தொடர்ந்து நடந்த பல யுத்தங்களின் பின்பு யாழ்ப்பாணமும் போத்துக்கீசர் வசமாயிற்று. 1617-ல் யாழ்ப்பாணம் இராசதானியும் சைவாலயங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. பல வழிகளாலும் சமய மாற்றங்கள் நடைபெற்றன.

நாவலர் பெருமான் 7-ம், 8-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சுந்தரர், சம்பந்தரால் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்களை வெளியிட்டார். தொடர்ந்து 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் – புராணத்தையும் வெளியிட்டார். இவற்றில் கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் என்பனவற்றின் இன்றைய அவல நிலையையும் வெளிப்படுத்தினார். சைவ உலகத்தில் இதனால் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது நாவலர் பெருமான் 1879-ல் சிவபதமடைந்தார். பலரது கவனமும் நாவலர் பணியைத் தொடர முனைந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பசுபதிச் செட்டியார் உள்ளிட்ட பெரியார்களின் இடைவிடா முயற்சியால் திருக்கேதீஸ்வரம் புனருத்தாரசபை நிறுவப்பட்டது. திருக்கேதீஸ்வரம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும் நிறுவப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 19.10.40-ல் மேற்படி சபை கொழும்பில் புனரமைக்கப்பட்டது சேர் கந்தையா வைத்தியநாதன் உப தலைவராகத் தெரியப்பட்டார். ஆலயம் பூரண பொலிவுடைய தாக்கப்பட்டு 1952-ல் மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைக்கண்டு மனம் பொறாத நிலையில் சுற்றாலிலுள்ள கத்தோலிக்கர் உள்ளே புகுந்து திருக்கேதீஸ்வரத்தை முற்றுகையிடும் நிலையில் கோயிலுக்கு அண்மித்த இடங்களில் பிற சமயக் குடியேற்றங்கள் ஏற்படுத்த முனைந்தார்கள். திருக்கேதீஸ்வரம் சந்தியில் அரசின் உத்தரவு பெறாது குகைக்கோயிலைக் கட்டினர். பாலாவிக் குளத்தை அசுத்தப்படுத்தும் நோக்கில் அதன் வரம்பில் ஏழைக்குடியானவர்களைக் குடி இருத்தும் முயற்சிகளும் நடந்தன. மேலும் அவ்விடமுள்ள சைவரல்லாத உதவியரசாங்க அதிபர் உதவியுடன் இந்து மக்கள் வசிக்கும் மானிகைத்திடல் சேத்துக்குளம் போன்ற பகுதிகளில் பழி வாங்கல்கள் ஆரம்பமாகின திருக்கேதீஸ்வரத்துக்கு மாறாக இந்து மக்களினிடையே துவேஷ அபிப்பிராயங்கள் உண்டாக்கும் முயற்சிகளும் நடந்தன. அரச காணிகளில் குடியேறிய இந்துக்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன. வழக்குகள் ஆரம்பமாகின.



மேற்காட்டிய சம்பவங்களால் இந்துக்களிடையேயும் கத்தோலிக்க மக்களிடையேயும் உண்டான மோசமான நிலைமைகளைச் சமன் செய்ய திருக்கேதீஸ்வரப் புனருத்தாரண சபைத் தலைவரும், அகில இலங்கை இந்து மகாசபைத் தலைவருமாயிருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலையிட்டு நிலப்பகுதித் தலைவருக்கும் பொது ஸ்தாபனங்கட்கும் மனுச் செய்து நிலைமையைச் சீராக்க முனைந்தார். யாழ்ப்பாணம் மேற்றிராணியார் C. எமிலியானுப்பிள்ளை அவர்கட்கும் க. வைத்தியநாதன் அவர்கட்குமிடையே சுமுகமான நிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று 30.1.64-ல் சமரச ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்திடப் பெற்றது. இரு பெரியார்களின் முயற்சியைப் பலரும் மெச்சினர் இந்தப் பேச்சு வார்த்தைகளில் வவுனியா காரியாதிகாரியாகவிருந்த திரு. முருகேசம்பிள்ளை அவர்களும் பெரிதும் பங்காற்றினார். இவையாவும் க. வை அவர்களால் எழுதி வெளியிட்ட கத்தோலிக்க இயக்கமும் திருக்கேதீஸ்வரமும் என்ற நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாதோட்டத்திலுள்ள அதிமேட்டுப் பிரதேசத்திலேயே எமது பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ளது. 1957 டிசெம்பரில் ஏற்பட்ட பெரு மழையால் மன்னார்ப் பிரதேசம் பிரளய கால வெள்ளம் போல் தாக்கப்பட்டது. கோயிலின் நாலா புறங்களிலுமுள்ள மக்கள் கேதீஸ்வரத்தையே அடைந்து கோயில் மடங்கள் தோறும் தங்கினர். வந்தவர்கட்கு ஆலயமும் சூழவுள்ள மடங்களும் இயலுமான வரை உண்டியும் உறைவிடமும் கொடுத்தன இது போது கொழும்பிலிருந்த க. வைக்கு இது விஷயம் தெலிபோனில் தெரிவிக்கப்பட்டது. உணவுப் பற்றாக்குறைபற்றியும் கூறப்பட்டது. அங்கிருந்து குடும்பத்துடன் தமது மோட்டார் வண்டியில் உயிராபத்தான பிரயாணஞ் செய்து தொடர்ந்து ஜீப்பிலும் கால் நடையாகவும் கோயிலையடைந்து செய்த தொண்டுகள் அனப்பில கொழும்பிலிருந்து லொறிகள் மூலம் கொண்டு வரப்பட்ட உணவுப் பண்டங்களை வண்டில்களிலும் சுமையாகவும் கோயில் சேரச் செய்தார். சாதி சமய பேதம் பாராது அங்கிருந்த அனைத்து மக்களாலும் காக்க வந்த தெய்வம் போல போற்றப்பட்டார்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணியே தமது சேவையாகக் கருதி அவ்விடம் ஒரு சிறு வீடமைத்து – கொட்டில் - எனப் பெயரிட்டு குடும்பத்துடன் அவ்விடமே வாழ்ந்தார். பிரதி வருடமும் நடைபெறும் வருடாந்த விழாக்களில் பிரதானமாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிகள் ஒவ்வொன்றையும் பொறுப்பேற்று நடத்தும் ஒழுங்குகள் செய்தார், நவராத்திரி, சிவராத்திரி போன்ற

பூசா காலங்களில் சைவ அறிஞர்கள் சங்கீத வித்துவான்கள் உள்ளிட்ட பலரையும் அழைத்து சமய அறிவையும் ஊட்டச் செய்தார். இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சைவப் பெருமக்கட்கும் தமிழ் நாட்டுச் சைவப் பெரியார்கட்கும் திருக்கேதீஸ்வரம் யாத்திரை ஸ்தலமானது. சிவராத்திரி விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்து பரப்பியது. இலங்கை மாத்திரமல்ல கேட்கக்கூடிய மறு நாட்டு அனைத்துச் சைவ மக்கட்கும் இது ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது.

இவர் காலமான போது இவரது அஸ்தி ஊர்வலமாக யாழ் கொண்டு வரப்பட்ட போது பிரதான சந்திகள் தோறும் சைவாபிமானிகள் திரண்டு உரிய முறைப்படி அஞ்சலி செலுத்தினர். எமது கோப்பாய் சந்தியில் திரளாக மக்கள் கூடி மாலையணிவித்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தி யாழ் நகர மண்டபம் வரை நடைபவனியாகச் சென்றனர். அஞ்சலிக்காக நகர மண்டபத்தில் ஒரு பகல் வைக்கப்பட்டு பின் கீரிமலைக்கு வாகன பவனிகளுடன் கொண்டு சென்று பெருஞ் சனத்திரள் மத்தியில் அஸ்தி கடலுடன் சங்கமமாகியது,

## குருமணி வே. சிதம்பரப்பிள்ளை

இவர் 1878-ல் துன்னாலையில் பிறந்தவர். பருத்தித்துறை மிஷன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பெற்று உடுப்பிட்டி சிவசம்பு புலவரது குருகுலத்தில் சேர்ந்து தமிழாற்றல் திறம்படப் பெற்றவர். மேற்கொண்டு வேம்படி பயிற்சிக் கல்லூரியில் பயின்று நல்லூர் மிஷன் பாடசாலையில் 13 வருடங்கள் தலைமையாசிரியராக விளங்கியவர். 1908-ல் கோப்பாய் வடக்கு செல்லமுத்து ஆசிரியையத் திருமணஞ் செய்தார். அக்காலத்தில் கல்வியங்காட்டில் இவரிடம் பயின்ற மாணவர் கேள்விக்கிசைய ஞானபாஸ்கரோதய சங்கம் பிரதி வருடம் கலை விழாக்களை வைக்கவும், யாழ்ப்பாணத்தில் பலராலும் பாராட்டுப் பெற்ற சங்கமாக வழிநடத்தி கல்வியங்காட்டின் நற்பெயருக்கு உழைத்தமையையிட்டு இன்றும் சிரம் தாழ்த்தி வணக்கஞ் செய்வர்.

இக்காலத்தில் கோப்பாய் வடக்கில் ஓர் திண்ணைப் பாடசாலை மாத்திரமேயிருந்தது. சிறுவர் அயலேயுள்ள மிஷன் பாடசாலைக்குச் சென்று ஆரம்பக்கல்வியை மாத்திரமே பெற முடிந்தது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாரால் 1926-ல்



ஆரம்பிக்கப்பட்ட சரவணபவானந்த வித்தியாசாலைக்கு ஊர் மக்கள் பலரது வேண்டுதலின்படி தலைமையாசிரியராக வே. சி. வந்தார்.

இவர் ஓர் வரகவி; பல்கலை வல்லுனர். இவரிடம் பயின்ற மாணவர் ஆசிரியர்களாகவும் பண்டிதர்களாகவும் கவிஞர்களாகவும் விளங்கினர். பண்டிதர் இ. நவரத்தினம் கவிஞர்கள் க. சி. வி, சாரதா, சி. சுந்தரலிங்கம் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர் இவருடைய நான்கு மக்களிலும் இருவரில் இவரது வித்துவததன்மை பிரதிபலித்தது,

வித்தியாசாலை ஆரம்பமான போது அயலேயுள்ள மிஷன் பாடசாலையில் படித்த மாணவர் பலர் இப்பாடசாலைக்கு வரத் தொடங்கினர். இதனால் கண்டன உரைகள் வாதப் பிரதி வாதங்கள் புனை பெயரில் பிரசுரங்களும் வெளியாகின. சரவணபவானந்த சார்பில் வே. சியும் எதிர் தரப்பில் ஓர் பிரபலமான வரகவியும் பிரசுரங்கள் எழுதி கவிபாடி வசைபாடி சொல்லடிபட்டனர். சைவத்தை இழிவுபடுத்தி மோசமாகக்கண்டித்து பெயர் போடாது புனை பெயரில் வெளியானதொரு பிரசுரத்தைக் கண்டித்து வே. சி. பாடியவற்றுள்;

''பேடிமகனே பிணங்கிளறு நாய்ப்பயலே
மூடமதி புனைந்த முட்டாளே — விடையும்
வெண்ணாவீட்டுக் கழுதாய் நீ யார்க்கு
விடைசொல்வதியம்பு''

''உன்றன் பெயருமிலை உன்றகப்பன் நாமமிலை
துன்று நரிக்குட்டிபோல் துள்ளுகிறாய்
...... ...................
உந்தன் மாதா கரவொழுக்கமோ காண்'' — இப்படிப்பல

வே சி. அவர்கள் கோலாட்டம், சினடி சிலம்படி, நாடகம் இவை யாவும் பாடசாலை மாணவர்க்கு மாத்திரமன்றி அயலேயுள்ள வாலிபர்கட்கும் நன்கு பழக்கி சிவராத்திரியிலன்று விடியும் வரை பாடசாலை அயலே நிறுவப்பட்ட பல வசதிகளும் கொண்ட மேடையில் அங்குலன் நாடகம் வேறும் பிரதி வருடமும் நடத்திப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். பாடசாலை உயர்தர மாணவர்கட்கு கோலாட்டம் பழக்கி நவராத்திரி காலங்களில் வீடு தோறும் சென்று கட்டிடத்துக்கான நிதிகளும் சேர்த்துக் கொடுத்தவர்.

கோலாட்டத்தினை ஆரம்பிக்கும் பிள்ளையார் கோலாட்டத்துக்குரிய இவரது பாடல்:

பல்லவி

வாருங்கள் தோழரே மகிழ்வுடனே
வந்தனை செய்வோம் எங்கடனே

அநுபல்லவி

ஆனந்தமாய்க்கவி பாடிடுவோமே
ஆட்டத்துடன் அடித்து — வாருங்கள்

சரணம்

1) சீருடன் சதிசுதிலயம் காட்டி திறலுடன் எழில்பெறத் தடிநீட்டி
பாருளோர் பார்த்திட அடிதீட்டி பண்புடன் ஆடுவோம்
பதம்காட்டி ...

2) எட்டுணை காலடிபிசகாமல் எழுவகை இசைகளும் தவறாமல்
தட்டிடு தடிகளும் முறியாமல் தாளமும் தவறக் கால் போடாமல்...

3) மாசரவணபவன் பதம்தேடி மலர்க்கரம் தாங்கிய தடிசாடி
வாழ்சிதம்பரப்பிள்ளை கவிபாடி வாய்த்திடும் கோலாட்டம்
அடிப்போமே வாருங்கள்...

பக்கவாத்தியங்களுடன் இயைந்து வே, சி. தாளம் போட, எட்டு மாணவர் கோலாட்டமடிப்பர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பாடசாலைகள் சம்பந்தமான மத்திய விழாக்களில் கோப்பாய் சரவணபவானந்த வே. சிக்கும், குரும்பசிட்டி சன்மார்க்க பரமானந்த உபாத்தியாயருக்கும் இடையிலேயே கோலாட்டம் சம்பந்தமான போட்டிகள் நிகழும்.

இவரது கமத்தொழிற் கோலாட்டம் பிரசித்தமானது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலை விழாக்களில் முதற்பரிசிலும் பெற்றது.

சேர் பி. இராமநாதனது பரந்தன் கமத்தில் நடந்தவொரு பெருவிழாவிற்கு ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் விசேட அழைப்பின் பேரில் 2.2.1938-ல் சென்று பிரதம விருந்தினராக வந்த தேசாதிபதி கோல்டிகொற் அவரது விசேட பாராட்டுதல்களையும் பெற்றது. அதற்குரியபாடல்;



கிருஷிகர் தொழிலிணைப் பாரீர் — மனக்
கிளர்ச்சியாய் அதன்முறை தேரீர்
எருவினை வயலினிற்கொட்டி — மிக
ஏராளமாயதில் தட்டி — கிருஷிகர்

வானத்தின் மழையினைப்பார்த்து — நல்ல
வரம்புகள் உழுமுன் சேர்ந்து
ஊனங்கொள் எருதுகள் பூட்டி — நனி
உழுதுபுல்லாயின வாட்டி
கிருஷிகர் தொழிலினைப் பாரீர்
மிகக் கிளர்ச்சியாய் அதன்முறை தேரீர்

மணலென வயலினை ஆக்கி
மணிநிறை விதைகளைத் தேக்கி
குணமுள்ள கலப்பைகள் கொண்டு — அங்கு
கோலமென் நிலவுழவாக்கி —

பயிர்நெரி தழைகளைப் பறித்து — தூரப்
பாங்குடன் எறிந்தவை ஒறுத்து
நயமுள பைங்கூழை அரிந்து — இடை
நாட்டிட உசிதமாய் முரித்து —

பன்றிகள் வந்தன அண்ணா — எங்கள்
பயிரினை அழித்திட ஒண்ணா
கன்றியே வளைந்துயிர் உண்ணா
கர்ச்சனை கொண்டுயில் உயிர் நண்ணா —

அரிவியை விரைவுடன் அறுத்து — நிரை
ஆதவன் கரத்தினில் விரித்து
மருவிய பிடிகளாய்ச் சேர்த்து — போரை
மாகெதியாகவே குவித்து

போரினைப் பிரித்தவர் தணித்து — நல்ல
பொலிவுள்ள எருதுகள் பிணைத்து
சீருடன் வலம்வர வளைத்து — அங்கு
செம்மையாய் உதறுவர் விரித்து —

தக்கநெல் தூற்றிடுந்தன்மை — இங்கு
சாலவே காட்டுவம் நன்மை
மிக்கவர் நற்குல்லங்கள் கொண்டு — மணி
வேறு ஆக்கிடுவோம் தொன்மை...

தூசிலா நெல்லதை அகற்றி — கூடை
சொரிந்துள்ளே அதனைத்தள்ளி
தேசிலாச் சிதம்பரப்பிள்ளை — நனி
சொல்லிய கவி நலன் திண்மை — கிருஷிகா.

இவரால் பாடப்பட்ட ஈர்வாணி பின்னுதல் சங்கிலிக்கயிறு பின்னுதல் முதலிய கோலாட்டங்களும் பிரசித்தமானவை எட்டு மாணவர் சேர்ந்தே குறித்த கோலாட்டம் விளையாடுவர் இக் கோலாட்டங்களின் போது பாட்டின் கருத்திற்கமைய அபிநய முறையிலேயே அடிப்பர், பன்றிகள் வந்தன அண்ணா எனும் போது பன்றியுருவம் தாங்கிய ஒருவர் உள்நுழைவதும், துவக் குப்போல தடிகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு வட்ட மிட்டுச் சுற்றியடிப்பதும், - கர்ச்சனை கொண்டுயிர் உண்ணா- எனும்போது வெளியே தயாராக வைத்திருந்த வெடிச் சத்தம் கேட்பதும் அது நேரம் வாத்தியங்கள் முழக்கமிடுவதும், விழுந்து துடிக்கும் பன்றியை வெளியே தூக்கிக் கொண்டு போய் போட்டு விட்டு ஆட்டம் தொடர்வதும், சூடுமிதிக்கும் போது வளைப்பவர் பொலிபொலி என்று கூறி வளைப்பதும் நெல் தூற்றுதல் ஆட் டத்தின் போது வாதராயா பொலி என்று சப்தமிடலும் கண் ணுக்கும் செவிக்கும் இன்பந்தரும் காட்சிகளாக அமையும்.

ஈர்வாணி பின்னுதல் கோலாட்டத்தின் போது மேலே தூக் கப்பட்ட வட்டப்பலகையில் துளையிட்டு மாட்டிய கயிறுகளின் மறுமுனைகள் 8 பேரதும் வலக்கைத் தடியில் மாட்டியபடியே விளையாடுவர். பின்னல் முடிந்து ஒரு நிமிஷம் தரிக்கும் போது பின்னிய ஈர்வாணியைப் பார்த்து சபையினரின் கைதட்டல் ஆரவாரம் நடக்கும் தொடர்ந்து குலைக்கப்படும். இப்படியே தான் சங்கிலிப்பின்னல் கோலாட்டமும் நடக்கும் இன்று அவரிடம் பயின்ற விளையாட்டுவீரர் இரண்டு பேரே ஜீவியவந்தராக உளர். குறித்த விளையாட்டு வீரர் மூலம் இக்கலைகளை அழிந்தொழி யாது புதுப்பித்தல் கலையார்வமுள்ள சங்கங்களின் பிரதான கடமையாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் காந்தியவாதி நா. பொன் னையா அவர்களால் ஆரம்பமாகி பல தசாப் தங்களாக பிரசுர மாகி வந்த ஈழகேசரி தேசீய இதழ் ஆரம்ப வேளையில் அதனை வாழ்த்தி வே. சியின் வாழ்த்துப்பாடல்;

''சுன்னாகஞ்சேர் சங்கானையின் மாதகலா
நன்னாயகம் கட்டுவன் கந்தரோடை நலமருள
இன்னாவகற்றிடுமீழ கேசரிப் பொன்னையவித்தக நீள்தமிழை
துன்னாலை வாசன் சிதம்பரத்தோன் துதித்தனனே''

இப்பாடல் ஈழகேசரியின் ஆரம்ப வேளையில் பிரசுர மானது. மேலும் ஞானபாஸ்கரோதய தொடர்பு காலத்தில் நல் லூர் கந்தன் கீர்த்தனை, பத்தினித் தெய்வம் பராக்கு வல்லை ஞானம்பிகைக்கும்மி கலிகால விபத்து, காவடிச்சிந்து பராபரக் கும்மி முதலிய நூல்கள் இவரால் வெளியிடப்பட்டவைவாக நினை வஞ்சலி மூலமும் அறியக் கூடியதாயுள்ளது. நல்லூர் தேரிலன்று வீதியில் இவரும் பயின்ற சிலரும் சேர்ந்து படித்ததனையும் மக் கள் பணங்கொடுத்து வாங்கியதனையும் யான் நேரில் பார்த் துள்ளேன்.



1992 கோப்பாய் சரவணபவானந்தாவில் நடந்த விழா வொன்றின் போது பல்கலைப் புலவர் க, சி. குலரத்தினம் ஐயா அவர்கள் தமது பேச்சினிடையே, ''சிதம்பரப்பிள்ளை உபாத்தி யாயரது சில நூல்கள் தஞ்சை பழைய சுவடிகள் நூலகத்தி லிருப்பது கண்டு அகமகிழ்ந்தேன்'' — என்று குறிப்பிட்டார். கலை ஆர்வலர்கள் மகாநாடுகளுக்கு இந்தியா செல்லும் அறி ஞர் பெருமக்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவோர் இவற் றைத் தேடி பிரதிபண்ணி வந்து மறு பிரசுரம் செய்ய முன் வர வேண்டும்.

1928 கிராமச்சங்கத் தேர்தலின் போது சட்டத்தரணிகள் இருவர் கட்சிரீதியான போட்டி நடந்தது. ஒரு பகுதி படுதோல்வி யடைந்தது. அப்போது வே சி. பாடியது;

மந்திரி சின்னர் பட்டார் மாப்பிளைக் குருக்கள் பட்டார்
சந்தியில் காத்திபட்டார் சபாபதி ஐயரும் பட்டார்
பொந்தியுஸ் பிலாத்துப்பட்டார் போர்ச்சின்னப்பரும் பட்டார்
பிந்திய பேயரெல்லாம் பிதற்றியே திரிகிறோமே.

என்று மறை பெயர்களிட்டு ஹாஸ்யமாகப்பாடினார் சிறுவர்கட்கு நல்லதொரு வாய்ப்பாட்டு, துள்ளித்துள்ளிப்பாவேது கண்டு வென்றவர்களும் தோற்றவர்களும் ஒருங்கு சேர்ந்து பாட் டின் நயம் சுவைத்து ஒருங்கு சேர்ந்து சிரித்ததனை நேரில் பார்த்துள்ளேன். இவர்கள் பாடிய பராபரக்கும்மியில் ஒரு பாட்டு

தட்டியுண்ணும் செட்டியிடம் தண்டுபவர் இங்கிருந்தால்
மட்டியென்றே மதிப்பேன் பராபரமே.

மற்றும் கோமாளிக் கூத்திற்குரிய பாடலொன்று;

என் பெண்டாட்டி நல்லவளையா — ஆமாம்
என் பெண்டாட்டி நல்லவளையா
உண்டி கொடென்றால் உலக்கை யெடுப்பாள்
ஓடோடத் துரத்தி ஓங்கியடிப்பாள் — (என்)
கண்ட கடையெல்லாம் கணக்கின்றித் தின்பாள்
கதையேதும் சொன்னால் காலாலுமுதைப்பாள் — (என்)

மதுபான விலக்கு சம்பந்தமான வாக்கெடுப்பு 1925-ல் நடந்து தவறணைகள் மூடப்பட்டன. இதனை எதிர்த்து கிருஷ்ணன் கேள்விப்படி வேலன் என்பவர் எழுதி வெளியிட்ட ஞானாம்பிகைக் கும்மியில் — உண்டவனை அகற்ற வேண்டுமேயல்லாது கள்ளை அகற்றக்கூடாது எனக் காணப்பட்டது. இந்த வாதத்தை எதிர்த்து வே. சி

காவடி வேலன் கரிதுணை வேலன் களவொழுக்கம்
தாவடி வேலன் தனந்தண்டும் வேலன் தவவொழுக்கம்
பாவடி வேலன் பனித்தீனை வேலன் பாழ்வடியார்
மேவடி வேலன் வினையகத்தான் எனும் வேலனே.

மாயக் கிருஷ்ணன் வெண்ணெய் எடுக்கப்போய்
மாதர்களாலே அவமானப் பட்டனன்
நீயும் அவர்தம் கையானதால் பதிநீத்து
அவண் சென்று ... உறைக்கே.

இவர் பாடியதான பிறிதொரு பாடல்;

பெண்டாட்டி கத்தியால் வெட்டிய போதவர்
பித்துக் கொண்டு வெட்டினான் என்று
சம்புறு தாயங்கள் சாற்றியுன் மானத்தை
சல்லிக்கு விற்றனை தோளுறைக்கே.

## எஸ். ஆர். கனகசபை, வின்சர் ஆர்ட் கிளப்

இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலய பூசகர்களாக சைவக் குருமாரே இன்று வரை உளர். இவர் வழி வந்த சப்பையருக்கு இரு புதல்வர். இளையவரே எஸ். ஆர். கனகசபை அவர்கள் இவர் 1930 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சித்திர பாட போதனாசிரியராக விருந்ததோடு வட பகுதி சித்திர பாட வித்தியாதரிசியுமாயிருந்தார். புன்னகை தவழும் வசீகரத் தோற்றமுடையவர். அக்கால ஆசிரியர்களாலும் கல்லூரி உயர்தர மாணவர்களாலும் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தென்கிழக்குப் பக்கமாய் அமைந்துள்ள சித்திர பாட போதனா கூடத்தில் 9.10 1938-ல் சித்திர பாட ஆசிரியர்களது பொதுக் கூட்டமொன்று ஆரம்பமானது, அன்று தொடக்கம் சித்திர பாட விடுறை கால வகுப்புக்கள் ஆரம்பமாகின. எஸ் ஆர் கனகசபை



அவர்களே பிரதம போதனாசிரியராயிருந்தார். பிரதி சனிக்கிழமை தோறும் வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெற்று வந்தன.

20 10.40 சனிக்கிழமை இவ்விடத்திலேயே யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து கல்லூரிகளினதும் உயர்தரபாடசாலைகளினதும் சித்திரப்பாட ஆசிரியர்களது கூட்டம். யாழ்-சென்ற்யோண்ஸ் கல்லூரி சொலமன், அவர் சகோதரர் ஹாட்லிக் கல்லூரி சொலமன், யாழ் இந்து - சண்முகநாதன், கொக்குவில் இந்து - கிருஷ்ணர். ஸ்ரான்லி - கனகசபை வேம்படி மகளிர் கல்லூரி சித்திர ஆசிரியை என்போருடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற எஸ். ஆர் கேயின் பழைய மாணவர்களான உரும்பராய் கனகசபாபதி, இருபாலை - இராசையா, கோப்பாய் - க. இ. குமாரசாமி கோப்பாய் பெண் பாடசாலை சித்திர ஆசிரியை பத்மாவதி என்போர் உட்பட 45 பேர் வரை ஆண்களும், பெண்களுமாகச் சமுகமளித்திருந்தனர். வடமாநில வித்தியாதிபதி லொறாஜ் அவர்களும் பிரதம விருந்தினராகச் சமுகமளித்திருந்த கூட்டத்தில் உதயமானதுதான் 'வின்சர் ஆர்ட் கிளப்' ஆரம்பத்தில் வந்தவர்கள் அனைவரையும் எஸ். ஆர். கே அறிமுகப்படுத்திய போது சிரிப்பொலிகள் கை தட்டல்கள் நடந்தன. என்னைக் குறித்துப் பேசும் போது, குமாரசுவாமி முற்போக்கான காரியங்களில் ஆர்வமுள்ளவர்; நொத்தாரிசுக்கு விண்ணப்பித்துள்ளார்; கலியாணத்துக்கும் அப்ளிக்கேசன் போட்டுள்ளார்'' என்று நகைபடக் கூறியது என் ஞாபகத்திலுண்டு.


பின்னர் தேர்வின் போது தலைவராக எஸ், ஆர். கனகசபை அவர்களும். காரியதரிசியாக கொக்குவில் கிருஷ்ணர் அவர்களும் கொண்ட நிர்வாகசபை தெரிவானது. அன்று தொடக்கம் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சித்திர போதனா கூடத்திலேயே சித்திர பாட வகுப்புக்கள் பிரிவு பிரிவாக நடைபெற்றன.

பிரதி வருடமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சித்திரப் பொருட்காட்சி நடைபெற்று வந்தது. கழக ஆசிரியர்களதும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் முதலானோரதும் சித்திரங்களும் கைப்பணிப் பொருட்கள் சிலவும் காட்சியில் இடம் பெறும். இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும். விரிவுரைகளும் நடைபெறும். இது அக்கால பாடசாலை மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் பெருவிருந்தாக அமைந்திருந்த தெனலாம். யாழ் - உள்ள அனைத்துப் பாடசாலைகளும் காட்சி பார்க்க வருவர். தெரிவான சித்திரங்கட்கு பாராட்டுப் பத்திரங்களும் பரிசில்களும் வழங்குவதும் வழக்கம் குறித்த பொருட்காட்சி நாளா வட்டத்தில் யாழ் நகரையண்டிய பரமேஸ்வரா,

யாழ் - இந்து, வேம்படிக் கல்லூரிகளிலும் நடைபெற்று வந்தன? சில சிறப்புச் சித்திரங்கள் தென்னிலங்கையிலும் நடைபெறும் சித் திரக் காட்சிகட்கு அனுப்பப்பட்டுப் பரிசில்கள் பெற்ற யலவுண்டு. 17.5.1946 தொடக்கம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடந்த உல கத் தமிழ் விழாவில் போது அவ்விடம் நடந்த காட்சியில் வைக் கப்பட்ட வின்சர் சித்திரக் கழக சித்திரங்கள் வெளி நாட்டவர் களாலும் பாராட்டுப் பெற்றதுமுண்டு.

குறித்த முயற்சியினால் அக்காலத்தில் சித்திர பாடம் யாழ் கல்லூரிகளிடையே உயர்தர வகுப்பு மாணவர்களாலும் விரும் பிக் கற்குமொரு பாடமாகவிருந்தது.

கழக அங்கத்தவர்கள் தேவையான இடங்களில் விடுமுறை கால வகுப்புக்கள் நடத்தியும் சித்திரம் கற்பித்தனர். யான் ஏழாலை மகா வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி களில் நடைபெற்ற விடுமுறை கால வகுப்புக்களிற்குச் சென்று படிப்பித்துள்ளேன். இந்நிலை 1960 பாடசாலைகள் சுவீகரிப்புக் குச் சில ஆண்டுகள் பின்னரும் தொடர்ந்திருந்தது.





# வாசிகசாலை

## கோப்பாய் வடக்கு அம்பாள் சனசமூக நிலையமும் இலக்ஷ்மி வாசிகசாலையும்

கோப்பாய் வடக்கு வாலிபர் சங்கம் 1930-ல் ஆரம்பித்துச் சிறந்த வகையில் நடந்து வந்தது. 1936-ம் ஆண்டு கைதடி-மானிப்பாய் வீதியருகில் தெற்குப் பக்கமாய் வை. இளையதம்பி உபாத்தியாயருடைய காணியில் வீதியருகில், வாலிபர் சங்கத் தால் ஓர் தற்காலிக கட்டிடமமைத்து வாசிகசாலையும் ஓர் சிறு நூல் நிலையமும் ஆரம்பித்து நடத்தி வந்தனர். சி செல்வராசா எம். எஸ். இராசசிங்கம் இ. குமாரசாமி என்போர் பிரதான நிர்வாகிகளாக இருந்தனர். பின்னர் கந்தசாமி கோயிலடி தெற்கு வீதியில் திரு. ச. கதிரேசு அவர்கள் பேருதவியுடன் கட்டப்பட்ட தற்காலிக கட்டிடத்திற்கு இடம் மாறியது. அதுவும் காலகட் டத்தில் இடம் மாற்ற வேண்டிய நிலை உருவானது. சரவண பவானந்தவித்தியாசாலைக்கு கைதடி-மானிப்பாய் வீதியிலிருந்து செல்லும் ஒழுங்கைக்கு நேர் வடபுறமாய் சி. பொன்னையா அவர்கள் காணியில் சற்றுப் பெரியதும் உறுதியானதுமான தற் காலிக கட்டிடம் நிறுவி 1942 வரை குறித்த வாலிபர் சங்க வாசிகசாலை சிறந்த வகையில் நடைபெற்று வந்தது. 1948-ல் சனசமூக இயக்கங்கள் ஆரம்பமான போது குறித்த இடப்பரப் பில் கோப்பாய் வடக்கு சனசமூக சேவாசங்கம் ஆரம்பிக்கப் பட்டது இது பின்னர் கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

கோப்பாய் வடக்கில் வீதியருகில் அப்பிளானை ஒழுங்கை முகப்பில் ஓர் பெரிய வேப்பமரம் நின்றது. விவசாயிகள் தோட்ட வேலைகள் இல்லாத ஓய்வுநேரங்களிலும் விசேடமாக விவசாய வேலைகள் முடிந்து வீடு திரும்பிய மாலை நேரங்களிலும் குறித்த வேம்படியிலிருந்து நானாவித புதினங்களையும் ஏனைய விஷயங்களையும் கலந்துரையாடிப் பொழுது போக்குவர் பத்திரிகைகள் வானொலிகள் இல்லாத காலமது. வேம்படிச் சூழல் விளைக் கெட்டான் வேம்படி என அக்கால கட்டத்தில் எல்லாராலும் சொல்லப்பட்டது. கனகன்புளியடி அரசடி என்ற மரப்பெயரால் அழைக்கப்பட்ட வேறு இடங்கள் போல குறித்த அம்பிலானை ஒழுங்கை முடிபருகில் தான் எனது வீடு இருந்தது.

குறித்த வேம்படியை அண்மித்த இடமொன்றில் ஓர் வாசிகசாலை நிறுவவேண்டுமென எமது சனசமூக நிலைய நிர்வாகிகள் விரும்பினர் சனசமூக நிலைய இயக்கம் தலை தூக்க வாலிபர் சங்கம் நின்றது. வீதியருகில் காணிக்கேடுபர் படலம் ஆரம்பமான போது அப்பிளானை கந்தர் செல்லத்துரை அவர்கள் தனது காணியின் வீதியருகு முகப்பை நன்கொடை தர முன் வந்தார். அவரது காணியின் முகப்பில் கட்டிடமமைத்தால் அவரது மிகுதிக் காணிக்குச் செல்ல முடியாத ஒடுக்கமான இடமாகக் காணப்பட்டது. இந்தச்சமயத்தில் இராம வீரகத்தி அவர்கள் மலாயாவில் இருக்கும் தமது உறவினருக்கு எங்களை எழுதும்படியும் அவரது காணியின் கிழக்குப் புறமாக ஓரளவு காணியைக் கொடுக்குமாறு தானும் எழுதுவதாகவும் கூறினார்கள் இரு பகுதியாரது கடிதங்களும் குறிக்க ஆ வைரமுத்து அவர்கட்குக் கிடைத்கதும் அவர் மலாயா கோலக்கஞ்சார் எனும் இடத்திலிருந்து 6 2 51-ல் எழுதிய கடிதத்தில்;

அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்தினருக்கு; 'நீங்கள் விரும்பியபடி ஓர் நிலையான வாசிகசாலை கட்டுவதற்கு எனது வீட்டுக்கு அருகாமையில் கிழக்குப் புறமாக வேண்டுமானவற்றை எடுத்துக்கட்டலாம், அப்படி எடுக்கும் நிலத்தை எனது முழு மனதுடன் தருமசாதனம் எழுதிக்கொடுப்பேன், இப்படிப்பட்ட தர்மகாரியத்துக்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தை நினைந்து ஆனந்தமடைகிறேன்' எனக் குறிப்பிட்டிருந்தார்,

குறித்த நிலத்தில் கிழக்குப்புறமாக ஒரு பரப்பு வரை இ. வீரகத்தி அவர்கள் அளந்துவிட்டார்கள், குறித்த கட்டிடத்தில் கட்டிட வேலைகள் ஆரம்பமாகின, 8.1.5?-ல் குறிக்க பெரியார் வைரமுத்து அவர்கள் எழுதிய கடிதத்தில் - அன்புள்ள இ. குமாரசாமி அவர்கட்கு உங்கள் 24,11,51 கடிதம் கிடைக்கப்பெற்றேன், தங்கள் முயற்சி மேலும் மேலும் ஓங்கி வளர எம்பிரானைப் பிரார்த்திக்கின்றேன்....



என்று எழுதி ரூபா 200/= அவரது வதிரி நண்பர் மூலம் அனுப்பி மேலும் வேண்டும் போதெல்லாம் உதவி செய்யக் காத்திருக்கின்றேன் எனவும் அன்புடன் எழுதியிருந்தார்கள். அப்போதய நிலையில் அவரது அன்புக் கடிதமும் ரூபா 200/= நன்கொடையும் எமது அங்கத்தவர்களை ஊக்கியது. அங்கத்தவர்கள் பெரும்பாலும் மாணவர்களும் வாலிபர்களுமாயிருந்தனர். அத்திவாரக்கட்டு ஈரந்தாங்கும் படை (DPC) வரை முடிந்தது. அவ்வளவிற்கும் மண் நிரப்ப ரூபா 300/= கேட்கப்பட்டது. நிர்வாகிகளின் தீவிர முயற்சியாலும் விவசாயிகளான ஊர்ப் பெரியார்களின் உதவியாலும் எட்டு வண்டில் வரை ஒழுங்கு செய்து ஓரிரவிலேயே குறித்த அத்திவார மட்டம் அம்மன்கோயிலடி ஒழுங்கை மணலாலும் மண்ணாலும் நிரப்பப்பட்டு அயலிலுள்ள பள்ளமும் நிரப்பப்பட்டு முடிந்தது. இதனை முன்னின்று ஊக்கியவர் திரு. அ. ஜெயரத்தினம் அவர்கள்.

நன்கொடையாளர் ஆ. வைரமுத்து அவர்கள் இ.வீரகத்தி அவர்கட்கு எழுதிய கடிதத்தில் அன்புள்ள 'குஞ்சிக்கு ''இன்னொரு விஷயம் இவ் வாசிகசாலைக்கு இலக்ஷிமி வாசிகசாலை என்று பெயர் வைத்தால் எனது மனதிற்குச் சற்றே சாந்தியுண்டாகும் என்று திருமதியை ஞாபகத்தில் வைத்துக் குறிப்பிட்டு ஆகையால் கல்விக்காக யான் எதையுஞ் செய்ய வாஞ்சையுடையேன்'' எனவும் குறிப்பிட்டிருந்தார்கள். பெரியார்களின் நன்கொடையும் கட்டிடப் பொருட்கள் அன்பளிப்பு, வாலிபர்களின் சிரமதான மூலம் கட்டிடம் விரைவில் பூர்த்தியானது. குறித்த வாசிகசாலைக்கு அருகிலுள்ள சின்னப்பு சுப்பிரமணியம் அவர்களது பொருளுதவியும் பணம் அன்பு ஊக்கம் இந்த நேரத்தில் கூடியளவு கை கொடுத்துதவியது. எனக் குறிப்பிடல் கட்டாயமாகும். மேலும் கோப்பாய் வடக்கு கால்பந்து விளையாட்டுக் கழகத்தால் 26.12,50-ல் நடத்தப்பட்ட சங்கீத விழா மிகுதிக் காசு ஓர் சுமுகமான கலந்துரையாடலின் பேரில் அ.இராசரத்தினம் அவர்கள் மூலம் வாசிகசாலைக்கு வழங்கப்பட்டது. இந்த நிதி குறித்த கட்டிட அத்திவார வேலைகட்குப் பெரிதும் உதவியாக விருந்தது. ஊர் மக்கள் பலரும் வேண்டிய நிதியுதவியோடு பொருள்களாகவும் சிரமதான மூலமும் உதவி செய் செய்தனர். கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்தன.

சிறந்த தமிழறிஞரான சு நடேசபிள்ளை அவர்களால் 14 09 52-ல் கோலாகலமான வகையில் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவின் போது வட பகுதி தலத்தாபன உதவியதிகாரி கனகநாயகம் சூரிய தமாரன் - கோப்பாய், யாழ் கலா நிலையம் கலைப்புலவர் க நவரத்தினம். காந்தியவாதி முதலியார் செ. சின்னத்தம்பி - அராலி முதலிய பேரறிஞர்களது வாழ்த்துரை

களும் இடம் பெற்றன. அன்று கோப்பாய் வடக்குக் கிராமமே திரண்டு குதூகலித்தது. கோப்பாய் வடக்கு கிராம சரித்திரத்தில் பொறித்து வைக்க வேண்டிய பொன்னான நாளாகும். ஆரம்பம் தொடக்கம் அ. ஜெயரத்தினம் உபதலைவர். சி. மதியாபரணம் காரியதரிசி, அ. இராசரத்தினம் தனாதிகாரி, க. இ. குமாரசாமி தலைவராகக் கொண்ட நிர்வாகசபை செயலாற்றி வந்தது. மேலும் வாசிகசாலையில் சிறு நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு கலைக்களைஞ்சியம் தொகுதிகள் போன்ற பெரியார்களது அன்பளிப்பு நூல்களும் கொண்டதாக அமைந்திருந்தது. பெரியார்களால் தொடர்ந்து வழங்கப்பட்ட போதிய தளபாடங்கள் தினப்பத்திரிகைகள் என்பனவும் அன்பளிப்புக்களாகப் பெரியார்களால் வழங்கப்பட்டு வாசிகசாலை சிறந்தவகையில் நடைபெற்று மேலதிகாரிகளின் பாராட்டையும் பெறவும் உதவின.

ஆ. வைரமுத்து அவர்கள் யாழ் – வந்தபோது பிரசித்த நொத்தாரிசு சி. செங்காதரஐயர் முகதாவில் இல: 1715- உடைய 1954 ஆடி 31-ம் திகதி கொண்ட தருமசாதன நன்கொடை உறுதி ஒரு பரப்பு 2 குழிக்கு எழுதித் தரப்பட்டது. குறிக்க வாசிகசாலைக்கு அவரது விருப்பத்தின்படியே பெயர் வைக்கப்பட்டதற்கு ஓர் ஆண்டுக்கூட்டமொன்றில் அவரால் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வேம்படி முதியோர் கூட்டம் வாசிகசாலை முன் மண்டபத்தில் அமர்ந்திருக்க வாசிக்கத் தெரிந்த ஒருவர் தினசரிகளை உரைத்துப் படிக்க முன்னால் அமர்ந்திருக்கும் வாசிக்கத் தெரியாதோர் கேட்டுக்கொண்டிருப்பர். வினைகெட்டான் வேம்படிக் கூட்டமும் குறைந்தது மாதங்கள் தோறும் கூட்டங்கள், பிரசங்கங்கள், உரியநாட்களில் சமயவிழாக்கள் வருடமொருமுறை பேச்சுப்போட்டி, விளையாட்டுப் போட்டிகளும் வருடாந்த விழாக்களும் தவறாது நடந்து வந்தன. இவை கிராம முன்னேற்றத்திற்குப் பேருதவி புரிந்தன.

பலிநிறுத்தம், மதுஒழிப்பு, தொண்டர்படை முதலான சமூகத்தொண்டுகளிலும் எமது நிலையம் காலத்துக்குக் காலம் தலையிட்டு வேண்டியன செய்து வந்தது. ஆண்டவன் சந்நிதியில் ஆடு கோழிகளைப் பலியிடும் அநியாயச் செயல்களை நீக்க வேண்டுமென உரும்பராய் இந்துக் கல்லூரியாசிரியரும் காந்தியவாதியுமான மார்க்கண்டன் தலைமையில் முதலியார் செ. சின்னத்தம்பி, வித்துவான் எம். சபாரத்தினம், வித்துவான் வேந்தனார் போன்ற பெரியார்களை அழைத்து உபந்நியாசங்கள் செய்வித்தும் சோமசுந்தரப் புலவரது பாடலை அச்சிட்டு பாடசாலை மாணவர் மூலம் விநியோகித்தும் சாயந்தர வேளை



களில் இதற்கான பாடலை மார்க்கண்டன் தலைமையில் பஜனைக் கோஷ்டி கிராமத்தின் பல பாகங்களிலும், பாடியும் பிரசாரங்கள் நடத்தன:

21 04 55-ல் வெளிவந்த வீரகேசரியில் "மரவரி முறை காரணமாக மூலை முடுக்கெங்கும் கள்ளு விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் மற்றைப் பாகத்திலுமில்லாத மரவரி முறை யாழ்ப்பாணத்தில் புகுத்தப்பட்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்" என்று கோப்பாய் அம்பாள் சனசமூகநிலையத்தின் வருடாந்த விழாவொன்றில் தலைவர் குறிப்பிட்டார்கள். மேலும் "இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஆடு கோழிகளை ஆலயத்தில் பலியிடும், அசுரத்தன்மை ஒழியவேண்டும் எனவும் தலைவர் குறிப்பிட்டார்" என வெளிவந்தது, காலத்துக்குக் காலம் திருமார்க்கண்டன் அவர்கள் உதவியுடன் இவை சம்பந்தமான பாட்டு, பேச்சுப் போட்டிகளும் வைக்கப்பட்டன. 04.02 56-ல் நிலைய மண்டபத்தில் பிரதம சிகிச்சைப்பயிற்சி வகுப்பும் இரவு அது சம்பந்தமான பொருட்காட்சியும் இடம்பெற்றன. மேலும் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளிப்பட்ட படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. இந்த வகையில் எமது நிலையம் கிராமாபிவிருத்திப் பகுதியாலும், மற்றும் அரச நிறுவனங்களாலும் பாராட்டுப்பெற்று சம்பவத்திரட்டுப் புத்தகத்திலும் குறிக்கப்பட்டுள்ளன.

கிராமத்தில் தோட்டங்களில் வாழைக்குலைகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் களவுபோய்க் கொண்டிருந்த வேளை கோப்பாய் வடக்கு கி. மு. ச. உதவியுடன் தொண்டர் படையமைத்து கோப்பாய்ப் பொலிஸார் கோப்பாய் வடக்கு விதானையார் சி. ஆறுமுகம் இவர்களுடன் இரவில் 'ரோந்து' வரச் செயற்பட்டதும், மூன்று முறை கள்வர் கையும் மெய்யுமாகப் பிடித்து விசாரணை நடத்தி எச்சரிக்கப்பட்டதும் இதனால் இராக்களவுகள் அருகிப் போனதும் கிராம விதானையாருக்கு வருடாந்த விழாவில் பாராட்டப்பட்டதும் உண்டு.

09.03.57-ல் நடைபெற்ற யாழ் – சனசமூக நிலையங்களின் வருடாந்தக் கூட்டத்தில் எமது சங்கம் அதன் அங்கத்துவ சங்கங்கள் 153-ல் பாராட்டுப் பெற்ற சங்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்டுப் பத்திரமும் பரிசிலும் அளிக்கப்பட்டது. நிலைய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும் தொடர்ந்து அ. இராசலிங்கம், து. இரத்தினசிங்கம், வ. ச. செல்வரத்தினம் ஆகிய உற்சாகமுள்ள காரியதரிசிகள் ஒருவர்பின் ஒருவராக 1963 வரை சிறம்படச் செயலாற்றி வந்ததே சங்கம் மேலதிகாரிகளாலும் கிராமத்தவர்களாலும் பராட்டுப் பெறக் காரணமாக அமைந்தது.

(தொடரும்)    31 . 7  65

## கந்தசாமி கோயிலடி வாசிகசாலை

1936-ல் எமது கிராம முன்னேற்றச்சங்க இயக்கம் ஆரம்பமானது சங்கம் பதிவு செய்யப்பட்டது. கந்தசாமி கோயில் வீதியில் 2.4.40-ல் ஓர் விளையாட்டிடம் நிறுவி வாசிகசாலையொன்றும் ஆரம்பித்து நடத்தியது. யாழ் - பருத்தித்துறை வீதியில் நடைபெற்று வந்த சந்தை 1942 அளவில் செயலிழந்திருந்தமையால், கோப்பாய் வடக்கு வாலிபர் சங்கத்துடன் சேர்ந்து அரச உதவியும் பெற்று சந்தைக் கட்டிடத்தில் வாசிகசாலையொன்றமைத்து ஓர் கைப்பந்தாட்ட விளையாட்டிடமும் நிறுவி நன்கு நடத்தினர். கி. மு. சங்கத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த வானொலிப் பெட்டியும் அவ்விடமே வைக்கப்பட்டது. எம். எஸ். இராசசிங்கம், அ. சி. துரைராசா, அ. சி. செல்வராசா, எஸ். அரியரத்தினம் - துரைரத்தினம் சகோதரர்கள் க. செல்லத்துரை, மு. குமாரய்யா, என்போர் முன்னோடிகளாயிருந்து நடத்தினர். பல கழகங்களோடும் நடைபெற்ற விளையாட்டு, கைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பலரது பாராட்டுக்களும் கிடைத்தன. யாழ் முழுவதற்குமான கைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது.

தொடர்ந்து கோப்பாய் நாற்சந்தியின் வடகிழக்குப் புறமாயுள்ள முடிக்குரிய நிலத்திலேதான் சந்தை நிறுவுதல் நல்லது எனத் தீர்மானிக்கப்பட்டது. சுன்னாகம் - சாவகச்சேரிச் சந்தைகட்கு இடைப்பட்டதாய், குறித்த இரு இடங்கட்கும் பஸ் போக்குவரத்தும் உள்ளதாய் இருந்தமையும் கிராமச் சங்கத்தினதும், தலைவராயிருந்த ச. சுப்பிரமணியம் அவர்கள் ஆதரவும் கிடைத்தமையும் வாய்ப்பாகவிருந்தன. சந்தைக்கான ஆரம்ப வேலைகளும் செய்யப்பட்டன. நிலையான கட்டிடமமைக்க உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு முறைப்படி விண்ணப்பமும் அனுப்பப்பட்டது. இது சமயம் குறித்த நிலம் தமக்குரியதென உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கப்பட்டது. குறித்த இடத்தில் கிராமச் சங்க ஆதரவுடன் சந்தைக்கான தற்காலிக கட்டிடம், பொதுக் கிணறு என்பனவும் கிராம முன்னேற்றச் சங்கத்தின் [illegible] வண்டில் பாதுகாப்பிற்குரிய கட்டிடமும் என்பன முன்னரே அமைக்கப்பட்டிருந்ததும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டதால் உரிய முறையீடு கைவிடப்பட்டது. குறித்த சந்தைக் கட்டிடத்திற்கான உதவிப்பணம் அனுமதி கிடைத்திருந்தமையால் நிதி வருடமுடிவிற்குள் கட்டிட வேலைகள் முடிக்க வேண்டுமென்பதாலும், விசாரணை முடிவுகள் கொழும்பு சென்று அதற்கிடையில் பதில் கிடைப்பதில் தாமதமேற்படலாமெனக் கருதியதாலும் உரிய பொறுப்பதிகாரியாயிருந்த J. S. ஆனந்தம் அவர்கள் பழைய இடத்திலேயே வரைபடத்தின்படி கட்டிட வேலைகளைத் துரிதப்படுத்திப் பூர்த்தியாக்கினார். திறப்பு விழாவும் நடந்து சந்தை முறைப்படி நடந்தது.



இதுவேளை சனசமூக நிலைய இயக்கம் ஆரம்பமாகி கோப்பாய் வடக்கு சனசமூக நிலையமும் பதிவு பெற்றது. கி. மு. சங்கம் இரண்டும் இணைந்து சீனிவாசகம். கந்தையா அவர்கள் உதவியுடன் கந்தசாமி கோயில் வீதியில் தற்போதைய நிலமும் பெறப்பட்டு கிராம மக்களிடம் பெற்ற நிதி பொருள் உதவிகளுடன் கட்டிட வேலைகள் துரிதகதியில் நிறைவேறின. பூ. க. இராசரத்தினம் சி. க. சுப்பிரமணியம் என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட சனசமூக நிலையம் மு. குமரையா, காரியதரிசி சி. க. சுப்பிரமணியம் தனாதிகாரி, க. இ. குமாரசாமி தலைவர் என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட கி. மு. சங்கம் இரண்டினதும் செயற்பாடுகளுடனுமே கட்டிடம் விரைவில் நிறைவேறியது. கி. மு. சங்க மனுவின் பேரில் அரச நன்கொடையும் பெற்றே கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டது. இரண்டு அறைகளும் முன் மண்டபமும் கொண்டதாகக் குறித்த கட்டிடம் அமைத்துள்ளது. சனசமூக நிலையத்தாரால் முன் மண்டபத்தில் வாசிகசாலை தொடர்ந்து நடைபெறுகிறது. கிழக்குப்பக்க அறை கி. மு. சங்கப் பாவிப்பிலும் மேற்கு அறை சனசமூக நிலையப் பாவிப்பிலும் தற்போதும் இருந்து வருகிறது.

(தொடரும்) 1.9.1965

## வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய வாசிகசாலை

1950 ல் சனசமூக இயக்கம் ஆரம்பித்த காலத்தில் கோப்பாய் வடக்கு கி. மு. சங்க ஆதரவுடன் ஆரம்பமான நான்கு நிலையங்களில் இதுவுமொன்று: இந்த நிலையத்துக்கு முன்னோடிகளாக ஆசிரியர் க. முருகேசு (கி. மு. ச. தனாதிகாரி) அன்பர்கள் ச. சின்னையா ஆசிரியர், திரு. சி. வெ. சுப்பிரமணியம் என்போர் பிரதான நிர்வாகிகளாக இருந்தனர். கட்டிடமமைத்தற்கான காணி பெறுவதில் சிரமமிருந்த போது து. தனபாலசிங்கம் அவர்கள் உதவியினால் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வீதியில் போதிய நிலம் கிடைத்ததனால் கட்டிட வேலைகள்

விரைவில் பூர்த்தியாகின அயலவர்களிடமிருந்து இயலுமான பண உதவி பொருளுதவிகளோடு சரீர உதவிகளும் கிடைத்தமையே விரைவில் பூர்த்தியாகக் காரணமாக அமைந்தது.

30 5 69 வெள்ளிக்கிழமை மாலை நிலையத் தலைவர் சி. வெ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் திறப்பு விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சுற்றாடலிலுள்ள மக்கள் தங்கள் வீட்டுச் சுயகாரியம் போல குதூகலத்துடன் யாவும் செய்தனர். ஆலயத்தில் நடந்த பூசையின் பின் படம் கொண்டு வரப்பட்டு யாழ் உதவியரசாங்க அதிபர் கி. முருகேசம்பிள்ளை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. சி. கதிரவேலுபிள்ளை கோப்பாய் பா உ. நாமகள் படத்தை திரை நீக்கஞ் செய்து வைக்க பிரம்மஸ்ரீ நீ. சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் ஆசியுரை கூற விழா பல பெரியார்கள் வாழ்த்துக்களுடன் பின்னிரவு வரை சமூக நாடகமொன்றும் நடைபெற்று விழா இனிது நிறைவேறுயது

19.7.69-ல் க. வேலாயுதபிள்ளை அவர்கள் கேள்விப்படி மனுச் செய்து கி. மு. சங்க மூலம் அரசின் உதவியும் பெறப்பட்டது. தொடர்ந்து மு. வைத்தியலிங்கம் செயலாளராகவிருந்த போது 1-ம் ஆண்டு நிறைவு விழாவில் நடிகமணி வைரமுத்து அவர்களின் கோஷ்டியினரால், மயானத்தில் மன்னன் - என்ற சமூக நாடகத்துக்கு என்றுமில்லாதவாறும் மக்கள் வடக்கு வீதி நிறைந்து வழியக் காணப்பட்டனர்.

குறித்த நிலையத்தார் கேள்விப்படி வலி - கிழக்கு ப நோ. கூ. சங்கத்தார் இச்சுற்றாடலில் கிளையொன்று ஆரம்பிக்கத் தீர்மானித்த போது அதற்கான கட்டடமமைக்க நிலமோ - கட்டிடமே பெற முடியாதிருந்தது. நிலையத்தார் தமது கட்டடத் தொடிலணைத்து விஸ்தரித்து உதவிய இடத்தில் பண்டகசாலைக் கிளையொன்று தொடர்ந்து நன்கு நடைபெற்று வருகிறது.

மேலும் குறித்த கட்டிடத்தில் பாலர் பாடசாலையும் வாசிகசாலையும் நடப்பது இரு துறைக்கும் இடைஞ்சலாக இருந்த போது அயலேயுள்ள ஆலய தண்ணீர்ப்பந்தல் கட்டடத்துக்கு பாலர் பாடசாலை இட மாற்றம் பெற்று நன்கு நடைபெறுகிறது.

நிலையத்தின் ஆரம்பகர்த்தாகவிருந்த க முருகேசு ஆசிரியர் அவர்கள் காலமான போது 27.10.70-ல் நினைவஞ்சலிக் கூட்டமொன்று நிலையத்தில் நடைபெற்று கிராமச்சங்கத் தலைவராயிருந்த கி. பரமானந்தராசா அவர்களால் அவரது படமும் திரை நீக்கஞ் செய்து வைக்கப்பட்டது.

(தொடரும்)



# சபாபதி நாவலர் வாசிகசாலை

வடகோவை வராம்பத்தையில் சி. ஆறுமுகம் முதலிய முன்னோடிகள் சேர்ந்து ஓர் சிறிய அளவிலான தற்காலிக வாசிகசாலையமைத்து நடத்தி வந்தனர். சன சமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது வராம்பத்தை சனசமூக நிலையமும் பதிவானது. பொது வேலைகளிலும் சிரமதானப் பணிகளிலும் குறித்த நிலையம் ஈடுபட்டது. சபாபதி நாவலர் பிறந்த இப்பகுதியில் அவர் பெயரால் ஓர் நிலையான கட்டிடமமைக்கத் தீர்மானமாயது, அதற்கான இடமொன்று தேடிய போது சபாபதி நாவலரோடு பெருந் தொடர்புடையதாயிருந்து வடகோவை செல்வ விநாயகர் கோயிலில் அதன் பரிபாலகராயிருந்த பிரம்ம ஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் உதவியை நாடினர். அவர் ஆசீர்வதித்து ஆலயத்தின் தெற்கு வீதியில் ஓர் இடத்தில் அதற்கான நிலத்தையும் ஒதுக்கிக் காட்டினார்.

குறித்த நிலையத்தார் அயலவர்களிடம் சேர்த்த பணம் பொருள்கள் உதவி கொண்டும் கிராம முன்னேற்றச்சங்கத்தினூடாக விண்ணப்பித்து உரிய அரச உதவியும் பெற்றும் கட்டிட வேலைகள் பூர்த்தியாகி 1959-ல் வாசிகசாலைத் திறப்பு விழாவும் நடைபெற்றது. வாசிகசாலை நன்கு நடைபெற்றதால் பிரதான வீதியாகில் அமைந்திருந்ததால் வெளியூர் அன்டர்களும் தங்கி வாசித்துச் செல்லும் வழக்கமுண்டானது ஆரம்ப நிர்வாகிகள் மறைந்தும் இடம் மாறியும் சென்றமை காரணமாக ஓர் தொய்வு நிலையேற்பட்டது, வெளியிடத்திலிருந்து வந்த அகதி ஒருவர் தங்கும் நிலையும் உருவாகிக் கட்டிடம் அசிங்கிதமாக்கப்பட்டது, பிந்திய நிர்வாகிகள் அக்கறைக் குறைவாயிருந்தனர் வீதிக்குக் கிழக்குப் புறமாய் அதே நேரிலமைந்த சிறிய கடையொன்று செயலிலந்திருந்ததால் வாசிகசாலை அதில் சிறுக ஆரம்பமாகி நடைபெற்றது.

முன்னைய வாசிகசாலை நடைபெறாமையாலும் அகதி தங்கியிருந்தமையாலும் 1972-ல் காணி உரிமையாளர் வாசிகசாலையை அழித்து வீதியைச் செப்பனிட முயற்சிகள் நடந்து கூரையோடுகள் பிரித்து இறக்கிக் கொண்டிருக்கும் போது தற்செயலாக அவ்வழியால் வந்த ஆரம்பத்திற்குதவிய கி. மு. ச. நிர்வாகியொருவர் கண்டு நயமாக—பயமாகவும் கூறி கட்டிடம் பிரித்தழிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இது விஷயம் அதனயல் வாலிபரும், கோப்பாய் கிராம வங்கி முகாமையாளுமாயிருந்த மு. இளங்கோ அவர்கட்கு அறிவிக்கப்பட்டு, அவர்களது முயற்சியால் மறுநாள் காலை வாசிகசாலை ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவரான ச. முத்துவேற்பிள்ளை; கி. மு. ச. தலைவர் க. இ. குமாரசாமி, ஞானபண்டித சைவ இளைஞர் சங்கத் தலைவர் வே. கந்தையா அவர்கள் சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களைப் பேட்டி கண்டு விண்ணப்பித்து சீர் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. புதிய நிர்வாக சபையொன்று தெரிவாகி சீர்பெற நடைபெற்று வருகிறது.

சபாபதி நாவலர் மண்டபம் நிறுவி அவர் செய்த நூல்கள் வெளியிட - நிலைத்து நிற்க அவர் மருகர் சிவகுருநாதன் எழுதி 17160 21.01.48 தருமசாதன நன்கொடையுறுதிப்படி நாவலர் உறவினர் ஒருவர் முயற்சிப்பது அறிய முடிகிறது

## கோப்பாய் வடக்கு பாலர் விடுதியும் சமூக சேவாசங்கமும்

கோப்பாய் வடக்கு மங்கையர் கழகம் 1954-ல் ஆரம்பமானது தலைவர் செல்வி குணரத்தினம் ஞானமணி

காரியதரிசி ,, றோசி இராசமலர்

தனாதிகாரி ,, இராசநாயகி செல்லையா

என்போரைப் பிரதான நிர்வாகிகளாக 9 பேர் கொண்ட நிர்வாகசபை செயலாற்றியது. சீனிவாசகம் கந்தையாவும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் நன்கொடையளித்த காணியில் ஓர் தற்காலிக கட்டிடம் நிறுவி தையல் வேலை பொம்மை செய்தல் பீடி வேலை என்பன தொடங்கி பல பெண்பிள்ளைகட்கு வேலை வாய்ப்பளித்தனர். கூட்டங்களும் பொருட் காட்சிகளும் வைத்து மங்கையர் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தனர். குறித்த காணியில் 70' × 20' கொண்ட நிலையான கட்டிடமும் காரியாலயம் அமைத்து மேலும் 15 நெசவு கைத்தறிகள் கொண்ட நிலையமாக்கி 25 பெண் பிள்ளைகட்கு வேலைவாய்ப்பளித்தனர். உற்பத்திப் பொருட்கள் சிறு கைத்தொழில் இலாகா கந்தவனம் அவர்கள் உதவியுடன் உடனுக்குடன் விற்பனையாகின. நெசவுப் பொருட்களுக்கு உள்ளூரிலேயே கிராக்கி.



அக்காலத்தில் அரச ஆதரவுடன் மின் தறியமைக்கும் திட்டமிருந்தது. குறித்த காணியில் யாழ் - மாநகரசபைப் பொறியியலாளர் சி. கனகராசா - கோப்பாய் அவர்கள் திட்டமிட்டபடி மலாயா பென்சனியர் சி. பொன்னையா அவர்கள் முதலுதவியும், மேலும் மலாயா அன்பர்கள் உதவி, ஊரவர் உதவியிடன் 80' × 25' அடி கொண்ட கட்டிடம் விரைவில் நிறுவப்பட்டது. மின் தறியமைக்கும் முயற்சிகள் விரைந்து நடைபெற்றன, எதிர்பாராத விதமாக 1957-ல் ஏற்பட்ட பெரும் புயல் மழையின் போது புதிய கட்டிடத்தின் கூரை தூக்கி வீசப்பட்டு கட்டிடமும் பெருஞ் சேதமடைந்தது.

இதே வேளை 1958 வகுப்புக் கலவரத்தின் போது அநுரதபுரியில் பெருஞ் செல்வாக்குடன் வாழ்ந்த இ. இராமலிங்கம் அவர்கள் அகதியாக கோப்பாய் வந்து ஓர் வியாபார நிலையத்தை நன்கு நடத்தினார். சி. பொன்னையா அவர்கள் மீண்டும் செய்த பேருதவியுடன், மேலும் அவர் மூலம் மலாயா அன்பர்களிடமும் ஊரவர்களிடமும் சேர்த்த பண உதவி கொண்டு இ. இராமலிங்கம் அவர்கள் பெருமுயற்சியில் குறித்த கட்டிடம் ஓரளவு திருத்தியமைக்கப்பட்டது இதே வேளை புதிய மின் தறியமைக்கும் திட்டம் கூட்டுறவுச் சமாசங்களிடமே கொடுக்கப்படும் என அரசின் கொள்கை மாறியது. இது மங்கையர் கழகத்தாரை உற்சாகமிழக்கச் செய்தது, கட்டிடம் சிலகாலம் செயலற்றிருந்தது. 1963 காலப்பகுதியில் திருமதி ம. சுப்பிரமணியம் - தலைவர், உபதலைவர் திருமதி அ. ஜெயரத்தினம் காரியதரிசி செல்வி க. அற்புதமலர். தனாதிகாரி செல்வி சசிவஞானம் என்போர் உள்ளிட்ட மாதர் சங்க நிர்வாகிகள் தெரிவாகினர் முன்னைய வேலைகள் பழைய கட்டிடத்தில் தொடர்ந்து நடைபெற்றன. புதிய கட்டிடத்தில் வேறு ஏதாவது தொடங்கி நடத்த யோசித்தனர், அக்கால கட்டத்தில் கி. மு. ச மேற்பார்வையாளராக விருந்த அ. ஜெயரத்தினம் அவர்களது வழி நடத்தலால் குறித்த கட்டிடத்தில் அக்கால அரச கொள்கைக்கு இணங்க பாலர் விடுதி நடத்தத் திட்டமிடப்பட்டு அரச அங்கீகாரமும் பெறப்பட்டது. பாடசாலை செல்லும் வயதடையாத 3-5 வயதுடைய பாலர் 75 பேர் வரை சேர்க்கப்பட்டு திருமதி மேதர் அவர்கள் பிரதம மேற்பார்வையில் நன்கு நடைபெற்றது. மேலதிகாரிகளது பாராட்டையும் பெற்றது. மாதர் சங்கத்தார் எவ்வித குறைபாடுமின்றித் தொடர்ந்து நடத்தினர். இந்த வகையில் கோப்பாய், நீர்வேலி குருநகர், பாசையூர் ஆகிய நான்கு இடங்களிலும் மாத்திரமே தான் பாலர் விடுதிகள் இன்று வரை நடைபெறுகின்றன. காலை 8 மணிக்கு பெற்றார் பாலரைக் கொண்டு வந்து நிலையத்தி சேர்ப்பர். தேநீர் உதவி நிலையங்களால் வழங்

கும் போஷாக்குறைவு, மதிய போசனம் என்பன கொடுக்கப்பட்டு, சீருடையும் வழங்கப்பட்டு நன்கு நடைபெற்றது. அரசாங்கம் ஒரு பாலருக்கு 10 ரூபா வீதம் உதவிப் பணம் வழங்கியது. மேற்கொண்டு அங்கத்தவர்கள் உதவிப்பணம் விழாக்கள் வைத்து பிரவேசப் பணம் மூலம் திரட்டும் நிதி, என்பனவும் சேர்த்து நடத்தப்பட்டது. 1, 4, 69-ல் உதவியரசாங்க அதிபர் ச. ரத்தினம் சிறுவர் பராமரிப்பு நிலைய அதிகாரி சிவசிதம்பரம் என்போர் வந்து பார்வையிட்டுப் பாராட்டுத் தெரிவித்தனர்; பிரதி வருடமும் போதிய பாலர் வந்து சேர்ந்தனர். நிதி நிலைமை காரணமாக 50 பாலர் வரை மாத்திரமே சேர்க்க மட்டுப்படுத்தப்பட்டது. பொருட்களின் விலையேற்றத்தால் வரவின் மிஞ்சிய செலவு ஏற்பட்டது. உதவிப் பணத்தை கூட்டித் தருமாறு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. குறித்த மாதர் சங்கத்துக்கு உதவியாக ஓர் உபசபையும் தெரிவு செய்யப்பட்டது. இதே நேரத்தில் பராபரிப்பாளர் இராமலிங்கம் அவர்கள் நிலையத்தை விட்டு வெளியேறினார். மாதர் சங்கமும் உபசபையும் தொடர்ந்து நடத்தியது. வராமலிருந்த 3 மாத உதவிப்பணமும் வந்து சேர்ந்தது. இதில் ஒரு மாதப்பணத்தை அடுத்து வரும் செலவுக்காக வைத்துக் கொண்டு மிகுதியை இராமலிங்கம் அவர்களுடைய முற்பணத்துக்குக் கொடுக்க முற்பட்ட போது பிணக்கொன்று உண்டானது. செ. நடேசன் மூலம் இணக்கஞ் செய்து அவருடைய முழுக்காசும் கொடுக்கப்பட்டு சீர் செய்யப்பட்டது. திருவாளர்கள் வ. கந்தப்பிள்ளை, மு. நல்லையா, சீ. க. சுப்பிரமணியம், க. இ. குமாரசாமி, அ. ஜெயரத்தினம் என்போரால் முற்பணம் உதவப்பட்டு தொடர்ந்து தொய்வேற்படாது சீராக நடத்தப்பட்டது. மாதர் சங்கத்தார் மனந்தளர்ந்த நிலையில் திரு. அ. ஜெயரத்தினம் அவர்களது பகீரத முயற்சியால் 28,6 71 திங்கள் 3 மணிக்கு சரவணபவானந்த வித்தியாசாலையில் பெற்றார் பல்வேறு சங்கப் பிரதிநிதிகள் அன்பர்கள் சேர்ந்த பொதுக்கூட்டத்தில் கோப்பாய் வடக்கு சமூக சேவாசங்கம் உதயமானது. அதன்,

தலைவர் — க. இ. குமாரசாமி

உபதலைவர் — அ. ஜெயரத்தினம்

காரியதரிசி — மு, நல்லையா

தனாதிகாரி — செல்வி ச. சிவஞானம் உள்ளிட்ட நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். பிரதம மேற்பார்வையாளராக விருந்த திருமதி மேதர் அம்மா விலக அவ்விடத்திற்கு செல்விகள் கா. பாக்கியம், அ. மகேஸ்வரி என்போர் ஒருவர்பின் ஒருவராகச்சேவையாற்றினர், பின் 18,7,75-ல்



திருமதி துரைராசா நளாயினி நியமனமானார். முன்னைய உதவியாளர் இருவரும் தொடர்ந்து சேவையாற்றி வந்தனர். நளாயினி அவர்கள் பாலர் மேற்பார்வைப் பயிற்சி பெற்றவர்; ஆண்டு தோறும் பெற்றார் தினவிழா, கலைவிழா, பரிசளிப்பு விழா என்பன நடத்துவதற்குப் பேருதவியாயிருந்தார். ஒவ்வொரு விழாக்களுக்கும் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள மேற்பார்வையதிகாரிகளாயிருந்த மாணிக்க நடராசா, செல்வி சண்முகம் என்போர் பிரதம விருந்தினர்களாக வந்து பாராட்டுத் தெரிவித்ததுடன் யாழ்ப்பாணத்தின் சிறந்த பாலர் விடுதி என சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும் பதிந்துள்ளனர். நளாயினி அவர்கள் வெளிநாடு செல்ல நேரிட்ட போது பெற்றார், ஊர்ப் பெருமக்களடங்கிய சபையினர் பெரிய பாராட்டுக் கூட்டம் வைத்து கையுறையும் வழங்கினர். மேல், செல்வி கிருபா சுப்பிரமணியம் அவர்கள் நியமனமானார். வழமை போல் செல்வி செல்லத்துரை, திருமதி இரத்தினம் என்போர் உதவியாளர்கள். பாலர் விடுதியருகே மூடப்பட்ட நிலையிலிருந்த நெசவு நிலையக் கட்டிடத்தில் நடைபெற்ற 5 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்கள் நிலையமும் பாலர் விடுதியுடன் இணைக்கப்பட்டது. பாலர் தொகை கூடிய போதும் அரச உதவிப் பணம் முன்னைய தொகை மாணவருக்கே தான் கிடைத்தது. சிறுவர் நிலையம் பெற்றாரிடமிருந்து பெற்ற சிறிது உதவிப் பணம் தொடர்ந்தும் பெறப்பட்டது. பிறநாட்டு உதவி நிறுவனங்களிடமிருந்து பால்மா போஷாக் குணவு என்பனவும் பெற்று சீர் பெற நடத்தப்பட்டது. ஆண்டு தோறும் பெற்றார் தினவிழா என்பன வைத்து திணைக்கள மேலதிகாரிகளின் பாராட்டும் பெறப்பட்டு சமுகந்தந்த பிரதம விருந்தினரால் கிருபா சேவையும் பாராட்டப்பட்டது இவர் பெற்றார் எல்லோராலாலும் நன்கு அறியப்பட்டவானபடியால் ஓர் சுமுகமான நிலையில் திறம்பட நடக்க உதவியானது. காரியதரிசி மு. நல்லையா அவர்கள் முயற்சியால் ஓரளவு நிதி மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு சேமநிதியிலிடப்பட்டது. இவர் சரவணபவானந்த வித்தியசாலை அசிரியராகச் சேவையாற்றியமை பக்கத்திலிருந்த பாலர் விடுதிக்குப் பெரிதும் உதவியாயிருந்தது. இதே வேளை நீண்ட காலம் தனாதிகாரியாகச் சேவையாற்றிய திருமதி சிவஞானம் அவர்கள் காலமானார். இவரில்லம் பாலர் நிலையத்துக்கு அருகேயிருந்தமை அவர் மேற்பார்வை பாலர் நிலையம் நன்கு நடக்க உதவியது. அவரிழப்பு நிலையத்திற்குப் பெரிய நட்டம்.

மேற்கொண்டு தனாதிகாரியாக க. மார்க்கண்டு ஆசிரியர் நியமனமானார். அரச உதவிப்பணம் ரூபா 10/= விருந்து 15/= ஆக உயர்த்தப்பட்டது. புத்தூர் மக்கள் வங்கியிலிருந்த சேமக்

கணக்கு கோப்பாய் கிராம வங்கிக்கு மாற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் புதியதொரு கட்டிடமமைக்கத் திட்டமிடப்பட்டு உரிய வளவில் மீதியாயிருந்த ஒரு பரப்புக் காணி சி. கந்தையாவும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் அவர்களிடமிருந்து தரும நன்கொடையாகப் பெறப்பட்டது. நொத்தாரிஸ் சி. சனகரத்தினம் அவர்களால் 11429 இலக்க 22.12.1979 திகதி நன்கொடை உறுதி முடிக்கப்பட்டது.

(1983-ல் நெருக்கடி நிலை வந்தபோது இலங்கை ராணுவம் செய்த அட்டூழியங்கள் பல தொடர்ந்து அமைதி காக்க வந்த இந்திய ராணுவம் செய்த அட்டூழியங்கள் எதிர்பாராத பயங்கரமானவை 1987 ஐப்பசி அளவில் இந்திய ராணுவத்தால் எமது கிராம நிலை மிக மோசமடைந்தது. கோப்பாய் சந்தியில் இந்திய ராணுவத்திற்கும் போராளிகட்குமிடையில் கடும் மோதல் செல்லடி. 2.10.87-ல் கிராமத்திலுள்ள அனைவரையும் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது, அனைவரும் வெளியேற நேரிட்ட போதும் வயோதிபர் பிணியாளர் செல்ல முடியாத நிலையில் தங்கியோர் செல்லடியாலும் பட்டினியாலும் காலஞ் செல்ல நேரிட்டது. நமதூரிலிருந்து அகதிகளாக வெளியேறியோர் நீர்வேலி, அச்சுவேலி, மட்டுவில், சாவகச்சேரி, கச்சாய் இறுதியாகச் சென்று அலைந்து திரிந்து திரும்பியவர்களை ராணுவம் தலையிட்டு நல்லூர் வரை வரிசையில் நடக்கச் செய்து அவ்விடமே விடுதலையாக்கினர், கோப்பாய்க் கிராம மக்களும் கோப்பாயூடாக கொண்டு சென்றே விடப்பட்டனர். 1987 கார்த்திகை பிற்பகுதியில் அகதிகளாகக் கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்பட்டவர்கள் படிப்படியாகவே திரும்பினர். இடிபட்ட வீடுகள், எரிந்த வேலிகள், பொருட்கள் யாவும் களவாடப்பட்டு காலியான வீடு, எலும்புக் கூடுகள் இவையே கண்ட கோரக் காட்சிகள் வந்தவர்கட்கு உணவு இல்லை. மாற்ற உடையில்லை. வைத்திய வசதி இல்லை. இப்படிப் பரிதாபம் அங்கவீனமுற்றோர் பலர். கோரம் சொல்லுந்தரமல்ல)

அகதியாக வெளியேறிய நமது காரியதரிசி நல்லையா அவர்கள் பாடசாலையிலுள்ள பிரதான கோர்வைகளையும், பாலர் நிலையத்தின் சில முக்கிய பதிவேடுகளையும் எடுத்துச் சென்று தமது வீட்டில் பத்திரமான இடத்தில் வைத்து விட்டுப் புறப்படும் போது இந்தியராணுவச் சூட்டிற்கு இலக்கானார். சூட்டுக் காயத்துடன் மறைந்து மறைந்து நீர்வேலி சென்று அங்கிருந்த நண்பர் உதவியோடு புத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டபோது இரத்தப் பெருக்கால் வைத்திய வசதியின்றிக் காலமான பரிதாப நிலை பேற்பட்டது. இவரிழப்பு எமது



சங்கத்திற்கு — பாலர் நிலையத்துக்கு ஈடு செய்ய முடியாததொன்று, இவரிடத்துற்கு நிர்வாக சபையிலிருந்து நீண்ட காலம் அவருக்குப் பக்கத் துணையாயிருந்த சி.க.சுப்பிரமணியம் ஆசிரியர் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பெற்றார். (22.11.87-ல் திரும்பி வந்த நாம் கண்ட அகோரக் காட்சிகளுடன் பாலர் நிலையத்தைப் பார்வையிடச் சென்றோம். கூரை செல்லடிகளால் ஓட்டை. உடைந்த மேசைகளும் கதிரைகளும் சிதறிக் கிடந்தன. தளபாடங்கள் அடித்துடைக்கப்பட்டு விறகாகவும் எரிக்கப்பட்டிருந்ததும் காணக் கூடியதாயிருந்தது. பின்னால் ஓரளவு நிலைமை சீரான போதும் இந்தியராணுவ நடமாட்டம் குறைந்தபாடில்லை, எனினும் பாலர் விடுதி ஆரம்பிக்கப்பட்ட போதும் வரவு மிகக் குறைவு, மூடப்பட்டிருந்த பாடசாலை திறக்கப்பட்டதும் பாடசாலை மாணவர்களோடு வந்து பாடசாலை விடும் போது மாணவர்களுடன் எமது நிலையப் பாலர்களும் சென்று விடும் நிலை தொடர்ந்தது.)

ஓட்டை ஒடிசலாகவிருந்த கட்டிடத்தை திருத்த வேண்டிய அவசியமுண்டானது. கட்டிடத்துக்கு மேலும் தூண்கள் நிறுவப்பட்டு அலுமினியம் சீற்றுக்குப்பதில் 'அஸ்பெற்றோ சீற்'றினால் வேயப்பட்டது. முன் சேமநிதியிலிடப்பட்ட காசும் எடுக்கப்பட்டு ஓரளவு கட்டிடம் உறுதியாக்கப்பட்டது. கிழக்குக் கம்பிவேலி சேதமடைந்திருந்தமையால் அகற்றப்பட்டு மதில் கட்டப்பட்டது இது விஷயமாய் தனாதிகாரி க.மார்க்கண்டு, காரியதரிசி சி க. சுப்பிரமணியம் இருவரது முயற்சியும் போற்றப்பட வேண்டியவை. சிறுவர் பராபரிப்பு நிலையத்துக்கு உதவிக்கு நாமனுப்பியமனுக்கள் உரிய சிபார்சுடன் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டபோதும் கவனிக்கப்படவில்லை.

பாலரைப் பராமரித்தற்குரிய உணவுப் பொருட்களின் விலை விஷம் 'போல் ஏறியது, 8/= ரூபாவிற்ற 1 கிலோ அரிசி 32/= ற்கு உயர்ந்தது. மற்றும் பொருட்களின் விலைகளும் இதே ரீதியில் கூடின, ரூபா 15 = லிருந்து உதவிப் பணத்தைக் கூட்டித் தருமாறு விண்ணப்பித்ததும், கவனிக்கப்படவில்லை; இந்த நிலையில் உள்ளூர் பொதுஸ்தாபனங்களின் உதவியை நாடினோம், பெற்றோர் நலன் விரும்பிகளிடமிருந்து மாதந்தோறும் சிறிது உதவிப்பணம் சேர்க்கப்பட்டு மேற்பார்வையாளர் வேதனங்கள் சீர்செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள், சர்வோதயம் தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், உள்ளூரன்பர்கள் ஸ்தாபனங்கள் என்பவற்றிடமிருந்து பால்மா, போஷாக்குணவு அன்பளிப்பு என்பன பெற்று பாலர் உணவுகளும் ஓரளவு சீர் செய்யப்பட்டு வருகிறது. பிரதம மேற்பார்வையாளராக செல்வி

பரமசாமி, உதவி மேற்பார்வையாளராக செல்வி ஆ. பரமேஸ்வரி, உதவியாளராக திருமதி நடராசா பரமேஸ்வரி சேவையாற்றுகின்றனர்.

காரியதரிசி சீ. க. சுப்பிரமணியம் அவர்கள் 1994-ல் அமரராகிவிட்டார். உதவி நிறுவனங்களிடமிருந்து வேண்டியன பெற இவரது சேவை முக்கியமாயிருந்தது. இவருக்கான அஞ்சலிக் கூட்டமொன்று பாலர் நிலையத்தில் நடத்தப்பட்டது. பிரதான நிர்வாகிகள் ஒருவர் பின் ஒருவராக மறைந்துவிட்டமையாலும் இளைப்பாறி வயோதிபம் அடைந்த நிலையில் பாலர் நிலைய மேற்பார்வையை இளம் ஆட்களின் கையில் ஒப்படைக்கும் நோக்கில் கூட்டங்கட்குச் சமுகமளியாதவரிடங்கட்கு மூவரைத் தெரிவு செய்து அவர்கட்கு அன்புடன் அறிவிக்கப்பட்டது. குறித்த மூவரில் ஒருவராவது ஏற்றுக்கொண்டு கூட்டங்கட்கு வரவேயில்லை பழைய நிர்வாக சபையே தொடர்கிறது, புதியவர்கள் பொறுப்பேற்கப்பயம்,

சமூகசேவா சங்கத்தின்வேலை பாலர் விடுதி மேற்பார்வையுடன் நிற்கவில்லை. இராசவீதிக்கு மின்சாரம் பெறுவதில் விஷேடமாக காரியதரிசி மு. நல்லையா அவர்கள் சேவை அளப்பரியது, சுன்னாகம் மின்நிலையப் பொறியியலாளர் ச. குகதாசன் அவர்கள் இராசவீதி மின்னிலையம் ஆரம்ப விழாவின் போது சமூகசேவா சங்கத்துக்கும் விஷேடமாக செயலாளர் மு. நல்லையா அவர்கட்கும் நன்றி தெரிவித்துப் பாராட்டியது எமது ஞாபகத்திலுண்டு.

சென்ற நெருக்கடி காலத்தின்போது இராசவீதி குண்டும் குழியுமாகக் காணப்பட்டது திலாவரையிலிருந்து யாழ் மாநகர சபைக்கு குழாய்மூலம் நீரெடுக்க-குழாய் தாழ்க்க வெட்டிய அகழி மேலும் வீதியை மோசமாக்கியது. இது விஷயமாய் சி. வெ சுப்பிரமணியம், செ. தம்பிையயா பொ. விக்கினேஸ்வரலிங்கம் க. இ. குமாரசாமி என்போர் உரிய பொறியியலாளரைப் பேட்டி கண்டு மனு சமர்ப்பித்தோம். குறித்த காரியாலயத்தில் நமதூர்ப் பெரியார் பிறைசூடி அவர்கள் பிரதான செயலாளராகச் சேவையாற்றினார். பெரிதும் உதவினார். உடன் நிவாரண வேலைகள் செய்ய நிதி யொதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ந்து நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம் சென்று முறையிட்டோம். உடன் நிலையான வீதியாக இருபாலை வீதியிலிருந்து ஆரம்பித்து வடக்கே முடியும் வரையும் செப்பமான வீதியாக்கப்பட்டு 30.03.90-ல் பூர்த்தியாகி பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. இது எமது சங்கத்திற்குக் கிடைத்த பெரிய சாதனையாகும். பிறைசூடி அவர்களது மறைமுக உதவி போற்றத்தக்கது.



இன்று குறித்த சமூகசேவா சங்க நிர்வாக சபையில்

தலைவர் க. இ. குமாரசாமி

உபதலைவர் அ. ஜெயரத்தினம்

காரியதரிசி பொ. விக்கினேஸ்வரலிங்கம்

தனாதிகாரி க. மார்க்கண்டு

நிர்வாகசபையினர்; செ. தம்பிையயா, இ. இராசரத்தினம், கா. பரமநாதன், செ. செல்வரத்தினம்

தற்போது பாலர் விடுதியில் 40 ஆண் 49 பெண் பாலர் வரவுண்டு.


1995 ஐப்பசியில் யாவரும் வெளியேறி 1996 வைகாசியில் திரும்பிய பிறகு பாலர் விடுதி மீளவும் நடைபெறுகிறது 52 பாலர் வரையே சமுகம் முன்னைய நிர்வாகிகள் சிலர் இன்றும் திரும்பவில்லை. அண்மையில் நடந்த தேர்தலில் தலைவர் காரியதரிசியுடன் சி. கதிர்காமநாதன் தனாதிகாரி, இ. அரசபிள்ளை உப செயலாளர், செ. தம்பிையயா உபதலைவர், பொ சுப்பிரமணியம், க. சின்னத்துரை நிர்வாக சபையினர் தெரிவாகியுள்ளனர்.

பிரதம மேற்பார்வையாளர் ஆ. பரமேஸ்வரி, உதவி மேற்பார்வையாளர் சி அம்ர்தா, உதவியாளர் திருமதி அரசபிள்ளை என்போர் சேவையாற்றுகின்றனர்.

## வள்ளியம்மன் சனசமூக நிலைய வாசிகசாலை

கோப்பாய் வடக்கு அரசடி வீதியிலுள்ள நூற்றிற்கு மேற்பட்ட குடும்பங்கட்கு ஓர் வாசிகசாலை கட்ட நிலம் நிதியுதவி இல்லாத குறை நிலவியது. கோப்பாய் பேரறிஞர் அ. வி. மயில்வாகனம் ஆயுள்வேத வைத்தியர் பேராசிரியர் அ. வி இராசரத்தினம் இவர்களது தாயார் திருமதி விசுவநாதர் வள்ளியம்மை காலமான போது அவரது ஞாபகார்த்தமாக இவ்வீதியிலுள்ள அவர்களது காணியில் ஓர் வாசிகசாலை கட்டி வள்ளியம்மை ஞாபகார்த்த வாசிகசாலை என நாமமிட்டுக் கையளிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் குறித்த வாசிகசாலைக்கு வேண்டிய பத்திரிகைகள், சஞ்சிகைகளும் அன்பளிப்பாக வாங்கிக் கொடுக்கப்பட்டன, இது 1959-ல் வள்ளியம்மன் சனசமூக நிலையமாகவும் பதிவு பெற்று சீராக நடைபெற்று வருகிறது நிலையத்தார் முயற்சியால் இவ் விடத்தில் ஓர் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நன்கு நடைபெற்று வருவது இப்பகுதி மக்கட்குப் பெரும் வரப் பிரசாதமாக உள்ளதெனலாம். பிரதி வருடமும் கலைமகள் விழா முதலியனவும் கொண்டாடப்பட்டு வருகின்றன.





# ஆஸ்பத்திரி

## கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரி

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒவ்வோர் கிராம ஆஸ் பத்திரி கட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கோப்பாய்த் தொகுதியில் ஓர் ஆஸ்பத்திரி நிறுவுதற்கு யாராவது ஏற்ற போதிய காணி கொடுக்க முன் வந்தால் நல்லது...'' இவ்வாறு 1946 ஏப் ரல் மாதத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடந்த தொரு கிராமச்சங்கத் தலைவர் மகாநாட்டில் அப்போதைய சுகாதார வைத்திய அதிகாரி (M. O. H.) யாகவிருந்த திரு. துரை ராசா அவர்கள் குறிப்பிட்டார்கள். அக்கூட்டத்தில் சமுகமாயி ருந்த கோப்பாய்க் கிராமச் சங்கத் தலைவர் திரு. ச. சுப்பிரமணி யம் நியாயதுரந்தரர் அவர்கள் யான் உள்ளிட்ட கிராமச்சங்க அங்கத்தவர்களைத் தமது வீட்டிற்கு அழைத்து இதுவிஷயத்தைத் தெரிவித்தார், அடுத்து 07.06.46-ல் நடந்த கோப்பாய் வடக்கு வாலிபர் சங்க வருடாந்த விழாவொன்றின் போது இது விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. நாம் இது விஷயமாய்த்தீவிர முயற்சி செய் தோம். கோப்பாய் வடக்கில் தாளாங்கலட்டி எனும் இடத்தில் மூன்று ஏக்கர் காணியை ஆஸ்பத்திரிக்காகத் தருவதாக 28.06.1946-ல் கோப்பாய் வடக்கு விவசாயிகளான ஆறுமுகம் நாகமுத்து, சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை, வயிரமுத்து அம்பலவாணர், அவர் சகோதரர் வயிரமுத்து ஆறுமுகம் ஆகிய பெரியார்கள் தங்கட்குரிய 70 பரப்பில் வடக்குப் பக்கமாக 3 ஏக்கர் காணியை மனமுவந்து வாக்களித்துச் சம்மதக் கடிதமும் தந்தார்கள். குறித்த கடிதத்தை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்து அவர்கள் ஒப்புதலுடன் சண்முகம் சுப்பிரமணியம் சட்டத்தரணி அவர் களால் இலக்கம் - 2738—09.10 46 நன்கொடை உறுதி எழுதி வடமாகாண அதிபர் ஏற்றுக் கொண்டமைக்கான கைச்சாத்தும்

பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதன்படி 78 பரப்பில் 48 பரப்பு நன்கொடையளிக்கப்பட்டது. மிகுதி தெற்கு எல்லையும் கிழக்குப் புறம் 40 அடி நிலமும் இதன் மிகுதியாதனங்களாகும்.

இது விஷயமாய் மேற்கொண்டு கௌரவ சுகாதார அமைச்சருக்கு அப்போதைய நமது பகுதி அரசாங்கசபையங்கத்தவராயிருந்த திரு. சு. நடேசபிள்ளை அவர்களூடாக 1.11.46-ல் விரிவான மனுவொன்றையனுப்பினோம். நடேசபிள்ளை அவர்களுடன் பலமுறை கடித மூலம் நேரிலும் தொடர்பு கொண்டோம். மேற்கொண்டு சுகாதார மந்திரி ஜோர்டீஸ் டிசில்வா அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்த போது சு. நடேசபிள்ளை அவர்களுடன் வாலிபர் சங்கத்தின் பிரதான நிர்வாகிகளான திருவாளர்கள் A. C, செல்வராசா தலைவர், M, S இராசசிங்கம், க, இ. குமாரசாமி ஆகிய மூவரும் திருவாளர்கள் சாவை சின்னப்பா, வே. சிதம்பரப்பிள்ளை தலைமையாசிரியர்களுடன் காங்கேசன்துறை வாடி வீட்டில் பேட்டி கண்டு பேசினோம். அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றித் தருவதாக வாக்களிக்கப்பட்டது. எனினும் உரியவாறு நிறைவேறவில்லை. பின் தள்ளப்பட்டுக் கொண்டே வந்தது. கிராம ஆஸ்பத்திரிகட்டும் திட்டம் கைவிடப்பட்டு மத்திய மருந்துச்சாலையும் பிரசவ விடுதியும் கட்டுவதெனக் கொள்கை மாற்ற முண்டானது. எதுவாயிருந்தாலும் ம் மலர்கள் நன்கொடை கொடுத்த காணியில் அரசாங்கம் இத்தேவைக்குப் பயன்படுத்தினால் போதும் – என வடகோவை வாலிபர் சங்கத்தாரின் முயற்சியும் தொடர்ந்து கொண்டே வந்தது.

பின்னர் கோப்பாய் பாராளுமன்ற அங்கத்தவரான திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் மூலம் தொடர்ந்து முயற்சித்தோம். 1949 - 50 நிதியாண்டில் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் - எனவாக்களிக்கப்பட்டது 11.11.49-ல் அப்போதைய சுகாதாரப் பகுதி நிரந்தரக் காரியதரிசி S. W. கன்னங்கரா அவர்கள் இது விஷயமாய் வரும் நிதியாண்டில் கவனிக்கப்படும்-எனக் கடித மூலம் தெரிவித்தார். பின்னர் நிதி நெருக்கடி காரணம் காட்டி கை விடப்பட்டது. 1950-ல் சுகாதார மந்திரியாராக விருந்த C, W. பண்டாரநாயகா அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது கு.வன்னியசிங்கம் – பா. உ அவர்களுடன் சென்று யாழ் நகர சபை மண்டபத்தில் பேட்டி கண்டு வாலிபர் சங்கத்தார் விரிவான மனுவொன்றைச் சமர்ப்பித்தோம், இது விஷயமாய் வரும் நிதியாண்டில் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும் என நேரில் வாக்களிக்கப்பட்டது, நிறைவேறவில்லை, வன்னியசிங்கம் பா. அ. அவர்களிடம் சென்ற போது – கோப்பாய்க் கெனத்திட்டமிட்டிருந்த ஆஸ்பத்திரியை சாவகச்சேரிப் பிரதிநிதி வே. குமாரசாமி



அவர்கள் கைதடிக்கு மாற்றி விட்டார். யான் எதிர்க்கட்சியிலிருப்பதனால் அரசாங்கத்தைக் கொண்டு எதுவும் செய்விக்க முடியாமலிருக்கின்றது" – என திரு. வன்னியசிங்கம் அவர்கள் எமக்குக் குறிப்பிட்டார்கள். மேற்கொண்டு இது விஷயமாய் திரு. வே. குமாரசாமி அவர்களுடன் தொடர்பு கொள்ள திரு. வன்னியசிங்கம் அவர்களது சம்மதத்தைப் பெற்றோம்.

குறித்த ஆஸ்பத்திரி சம்பந்தமாய் தொடக்கத்திலிருந்து விபரமாகத் தயாரித்த மனு ஒன்றுடன் 27.1 52-ல் கோப்பாய் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் க. இ. குமாரசாமி காரியதரிசி மு. குமாரையா கோப்பாய் வடக்கு வாலிபர் சங்கத் தலைவர் A. C. செல்வராசா, சுருட்டுத் தொழிலாளர் சங்க நிர்வாகத்தர் வீ சி. கந்தையா எல்போர் சாவகச்சேரி பா. உ. வே. குமாரசாமி அவர்களது வீட்டில் அப்போதைய சுகாதார மந்திரி M. D. பண்டா அவர்களைச் சந்தித்து விரிவானதொரு மனு சமர்ப்பித்தோம். நீண்டதொரு உரையாடல் நடந்தது. வே. குமாரசாமி அவர்கள் இது விஷயமாய் மிக வற்புறுத்தினார். அடுத்து வரும் நிதியாண்டில் இதற்கான பணம் ஒதுக்கீடு செய்து தருவதாக வாக்களிக்கப்பட்டது. இந்தப் பேட்டி சம்பந்தமாக தினகரன் பத்திரிகையில் விரிவானதொரு செய்தி வெளியானதும் கோப்பாய் - சாவகச்சேரிப் பிரதிநிதி கட்சிக் கிடையில் பத்திரிகை மூலம் பெரும் வாதப் பிரதிவாதங்களுண்டாயின. எனினும் திரு. குமாரசாமி அவர்கள் இது விஷயமாய் சுகாதார மந்திரியவர்களுடனும், பிரதமருடனும் மேற்கொண்டு உரையாடி எழுத்து மூலமாக விபரம் தெரிவித்தார். மேலும், அடுத்த நிதியாண்டில் இதற்கு வேண்டிய நிதியொதுக்கீடு செய்து தருவதாக 22.11.52 கடித மூலம் வாக்களிக்கப்பட்டு மேற்கொண்டு வேண்டிய மதிப்பீடு விரைந்து செய்யுமாறு யாழ் பகிரங்க வேலைப் பகுதியாருக்கு P. W. D. எழுதிய கடிதப் பிரதியும் எமக்குக் கிடைத்தது, எனினும் அடுத்த நிதியாண்டில் போதிய நிதிவசதியில்லை. என்று காரணங்காட்டி இந்த வகைத் திட்டங்கள் யாவும் கை விடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

உரிய காலக்கெடு முடிந்ததால் முன்னைய வர்த்தமானி அறிவித்தலின்படி சுவீகரித்தது காலாவதியாகி விட்டது. வந்தது வாதப்பிரதி வாதங்கள். இந்த நேரத்தில் உரும்பராயிலுள்ள உயர் அரசாங்க பதவி வகித்த சில பெரியார்கள் உரும்பராய் கண்ணகையம்மன் கோயிலுக்குக் கிழக்குப் புறமாய் 18 பரப்பு வரையிலான காணி பெற்று மேலும் தேவையான காணி தரமுன் வருவதாயும் அவ்விடத்தில் ஆஸ்பத்திரியைக் கட்டுவிக்கப் பெரு முயற்சி செய்தனர். கோப்பாய் பூதர் மடத்துக்கு மேற்குப் புற

மாய் போதிய அரச நிலமுண்டு அவ்விடமே புதிய ஆஸ்பத்திரி நிறுவ உகந்தது; என நீர்வேலியிலுள்ள ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் சிலர் தீவிரமாக முயற்சித்தனர். நீர்வேலி வடக்கு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வீதியின் கிழக்குப் புறமாய் உள்ள குளத்தருகே இரண்டு ஏக்கர் வரையிலான நிலத்தை நன்கொடையளிக்க முன்வந்து அவ்விடமுள்ள சமூக சேவையாளர் ஒருவருடன் கொழும்பு வரை சென்று பேட்டி கண்டு கருமமாற்றினர். அச்சுவேலிச் சந்தைக்கு அண்மையில் ஆஸ்பத்திரி கட்டுவதற்குப் போதிய காணி தருவதாக வாக்களித்து அவ்விடமுள்ள அரசியல் செல்வாக்குள்ள சிலரும் தீவிரமாக முயற்சித்தனர்.

இது வேளை உயர் அரசாங்க பதவி வகித்த தி. முருகேசம்பிள்ளை அவர்கள் கோப்பாய் பழைய கோட்டை வளவிலுள்ள வீடொன்றிலிருந்தார். அவரிடம் சென்று எமது கடந்த கால முயற்சிகளையும் நடந்த கடிதப் போக்குவரத்துக் கோர்வைகளையும் காட்டி விபரமாக வேதனையுடன் முறையிட்டோம்.

இது சம்பந்தமான வாதப் பிரதி வாதங்களையெல்லாம் விசாரித்து அறிக்கையிட கொழும்பிலிருந்து சுகாதாரப் பகுதியார் குழுவொன்று யாழ் வந்தது. குறித்த இடங்களையெல்லாம் பார்வையிட்டது. இடவசதி, நல்ல தண்ணீர் வசதி என்பன சம்பந்தமாக அறிக்கையிட்டது. கோப்பாய் வடக்கில் முன்னர் நன்கொடையளித்த காணியே ஆஸ்பத்திரி கட்ட மிகவும் பொருத்தமானது எனச் சிபார்சு செய்யப்பட்டது. எமது பகீரதப் பிரயத்தனங்கள் பெரும் ஆபத்திலிருந்து தப்பியது.

மீண்டும், நன்கொடையளித்த காணி உரிமையாளர் சட்டப்படி உறுதி முடித்துக் கொடுக்க வேண்டிய நியதி ஏற்பட்டபோது உரிய காணியை மீளவும் நன்கொடை உறுதி முடித்துக் கொடுத்தனர். இது விஷயம் வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு உரிய காணியிலும் அண்மையிலுள்ள பொது இடங்களிலும் உரிய பிரதிகள் மக்கள் பார்வைக்காக ஒட்டப்பட்டன. எனினும் தொடர்ந்து வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் பா. உறுப்பினருமான ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களை இது விஷயமாய்ப் பேட்டி கண்டு மேற்கொண்டு வேண்டியன செய்து தருமாறு கேட்டோம். இது விஷயமாய் பா. ம. காரியதரிசி, சுகாதார அமைச்சர் என்போருடன் தொடர்பு கொண்டு எமக்கு 14 3.52, 22.3,52 கடிதங்கள் மூலம் தெரிவித்தார். அமைச்சிலிருந்து 13.11.52, 22.12.52 கடிதங்கள் மூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டன. நிதி நெருக்கடிக் காரணமாக ஆஸ்பத்திரி புதிய கட்டிடங்கள் நிறுவுவது யாவும் பின்



போடப்பட்டுள்ளன; - எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது. இரண்டு வருடங்கள் சென்றன எமது முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் எமது ஊர்ப் பெரியாரும் கைத்தொழில் வீடமைப்பு மந்திரியாக விருந்த வருமாகிய சேர் கந்தையா வைத்தியநாதன் உதவியை 1954-ல் நாடினோம். அவர் திருக்கேதீஸ்வரம் திருப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலப் பகுதியது. அது போது மன்னார் கிராமாபிவிருத்தி அதிகாரியாக விருந்த அ. ஜெயரத்தினம் அவர்கள் இது விஷயமாய் சேர் க வை உடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பெரிதும் உதவினார்கள். சேர் க. வை ஏற்பாட்டின்படி கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் கோப்பாய் விவசாயிகள் சங்க கூட்ட மண்டபத்தில் 20 6.54-ல் அப்போதைய சுகாதார மந்திரியாராக விருந்த E. A. நுகவல அவர்களை கோப்பாய் நாற்சந்தியிலிருந்து ஆடம்பரமான ஊர் வலத்துடன் அழைத்து வந்து பெரியதொரு வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது. அப்போது காணி உபகரிக்கப்பட்டு எட்டு வருடங்களாக நாம் செய்த முயற்சிகளும், வாக்களிப்புக்களும் நிதி நெருக்கடி காரணங்காட்டி காலத்துக்குக் காலம் பின் போடப்பட்டு வந்த விபரங்களும் கூறி உடனுதவி கோரினோம். தலைமை வகித்த சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் 'இந்த நாட்டில் வடக்குத் தெற்குப் பிரச்சினையொன்று உருவாகி வருவதனால் இரு சாகியத்தாரிடத்திலும் பரஸ்பர நல்லுறவு வளர்வது அவசியமாகி விட்டது. இந்த நல்ல முயற்சியில் சரித்திரகாலம் தொடக்கம் தமிழர்களுடன் தொடர்புடைய கண்டியர்களின் வழித் தோன்றலான திரு. நுகவல அவர்கள் ஈடுபடுவாரென எதிர் பார்க்கின்றேன்'' - எனக் கூறி எமது கோரிக்கையை வற்புறுத்தினார்.

மந்திரி நுகவல அவர்கள் பதில் தெரிவித்துப் பேசுகையில் ''யான் வட பகுதிக்கு வரும் போதெல்லாம் அன்பினால் எம்மை ஆட்கொண்டு விடுகிறீர்கள் அது மாதிரி நாங்களும் எங்கள் தமிழ்ச் சகோதரர்களுடன் நேசமாகவே வாழ விரும்புகிறோம். அனைவரினதும் ஒத்துழைப்பின்றி இந்நாடு முன்னேற முடியாது. கையொரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால் ஐந்து விரல்களின் ஒத்துழைப்பும் தேவை'' - என்றார். தொடர்ந்து பேசுகையில் ''இங்கு ஓர் ஆஸ்பத்திரி கட்ட இவ்வளவு சுணக்கமேற்பட்டது; எனக்குத் துக்கத்தைத் தருகிறது கடந்த நிதி வருடத்தில் ஏழு ஆஸ்பத்திரிகள் கட்டத்திட்டமிட்டிருந்தும் நிதி நெருக்கடி காரணமாகக் கைவிடப்பட்டன, அப்படிக் கைவிட்ட ஆஸ்

பத்திரிகளில் உங்கள் ஆஸ்பத்திரியும் ஒன்றாயிருக்கலாம். உங் கள் மனுவில் பிரசவ விடுதியும் மருந்துச்சாலையும் அமைத்துத் தரும்படி கேட்டுள்ளீர்கள் கடவுள் கேட்ட வரம் தருவான். யான். நீங்கள் கேட்டதிலும் கூடுதலாக சகல வசதிகளும் கொண்ட ஆஸ் பத்திரி விரைவிலமைத்தர ஆவன செய்வேன். அடுத்த நிதியாண் டில் இதற்கான பணம் தவறாது ஒதுக்கப்படும்'' — என வாக் களித்தார்கள்.

கௌரவ அமைச்சர் வாக்களித்தபடி மேற்கொண்டு வேண் டியன — விரைந்து செய்து தந்தார்கள். நமது கிராம முன்னேற் றச் சங்கத்துடன் அப்போதைய கிராமச் சங்கத் தலைவராயிருந்த நா. அருளம்பலம் அவர்களும் சேர்ந்து சேர் க. வை. உடன் அடிக் கடி தொடர்பு கொண்டு வேண்டியன செய்தோம். 20 8.54-ல் 696-ம் இலக்க அரசாங்க வர்த்தமானி மூலம் நன்கொடைக் காணியை கிழக்குப் புறமாக 40 அடி காணி அடியுடையவர்கட் காக விட்டு 2 ஏ 1 ரூ. 28 ச போ என அளந்து கண்டபடி விளம் பரப்படுத்தி அரசாங்கம் முறையாக ஏற்றுக் கொண்டது. ஆஸ் பத்திரிக் கட்டடத்திற்கான படங்களும் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு களும் செய்யப்பட்டு யாவும் ஒழுங்காக நிறைவேறின.

தொடர்ந்து வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதம அமைச்சர் சேர் யோன் கொத்தலாவலை அவர்களால் 16.10.1954-ல் எமது கேள்விப்படி கோப்பாய் அரசினர் ஆஸ் பத்திரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அத்தருணம் நீண்ட காலம் எமது கோரிக்கைகள் பின் தள்ளப்பட்டு வந்த சம்பவங்களையும் சுட்டிக்காட்டி யான் பேசியதனை அறிந்து பிரதமர் 'இவ் ஆஸ் பத்திரிக் கட்டடத்திற்கு முதன்மை கொடுத்து விரைவில் நிறை வேற்றுவதற்காவன செய்யவும்'' — என அப்போது சமுகமா யிருந்த 'தமது உத்தியோகத்தர்களுக்குக் கட்டளையிட்டதனை அவதானித்த கூட்டத்தில் சமுகமாயிருந்த பெருந்தொகையான மக்கள் பலத்த கரகோஷம் செய்து தமது நீண்ட நாள் ஆர்வம் நிறைவேறியதனை வெளிப்படுத்தினர்.

பிற்பகுதியில் இவ் ஆஸ்பத்திரியின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவி செய்த சேர் க. வைத்தியநாதனை திருவாளர்கள் நா. அரு ளம்பலம், மூ. குமரையா, க. இ. குமாரசாமி, அ. ஜெபரத்தினம், கூட்டுறவுச் சங்க மனேச்சராயிருந்த சி. கந்தையா என்போர் கொண்ட குழு பேட்டி கண்டு மேற்கொண்டு வேண்டியன விரைந்து செய்து தருமாறு கேட்டோம். கெதியில் ஆவனஞ் செய்து தரு வதாக வாக்களித்ததோடு தொடர்ந்து இது விஜயமாய் அடி



கடி எமக்கு கொழும்பிலிருந்து தெலிபோன் மூலம் நடைபெறு வனபற்றி அறிவித்து வந்தார்கள், 22.1.55-ல் அவர் எமக்கு எழுதிய கடிதத்தில் ''ஆஸ்பத்திரிக்கான கட்டடமமைக்க கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. சுமார் ஒரு மாதத்துள் கட் டிட வேலைகள் ஒப்பந்தத்தில் விடப்படும்; இதனோடு சம்பந் தப்பட்ட யாவும் தயாராயிருக்கின்றன; என்பதனை அறிவித் துக்கொள்கின்றேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்கள். குறிப்பிட்ட படியே கட்டிட வேலைகள் ஆரம்பமாகி விரைந்து செய்யப்பட் டன,

கட்டிட வேலைகள் பூரணமாகி ஆஸ்பத்திரி திறப்பு விழா அண்மித்தது. இவ் ஆஸ்பத்திரியை விரைந்து கட்டி முடிக்க உறுதுணையாக விருந்தவரும் அப்போதைய 'கைத்தொழில் வீடமைப்பு சமூக சேவா மந்திரியாயிருந்தவரும் எமதூர்ப் பெரி யாருமாகிய சேர் க. வையையே இவ் ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்குமாறு கேட்க வேண்டுமென எமது கிராம முன்னேற்றச் சங்கம் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர் மானிக்கப்பட்டது,

18.1.1956 புதன் பி. ப 5.30 மணிக்கு கோப்பாய் சந்தி யிலிருந்து பிரமாண்டமான ஊர்வலத்துடன் சேர் க. வைத்திய நாதன் அவர்களை அழைத்து வந்தோம், விழா ஆரம்பமாகிய தும் உரிய நிலத்தை நன்கொடையளித்த பெரியார்கட்கு ஆசீர் வாதம் நடைபெற்றது, யாழ்-மாவட்டத்திலுள்ள சகல திணைக் களங்களிலுள்ள பெரியார்களுடன் கோப்பாய் முன் எப்போதும் கண்டிராத பெரியதொரு பகிரங்கக் கூட்டமாக நடைபெற்றது. நீண்ட காலப் பிரயத்தனமொன்று நிறைவேறியதில் அனைவர் முகங்களிலும் ஆனந்தம் தாண்டவமாடியது பத்து வருடங்கட்கு மேலாகத் தொடர்பு எமது பெரு முயற்சி நமது பெரியார் சேர் க, வையின் தளராத முயற்சியால் கை கூடியதனையிட்டு வட மாகாண அதிபர் திரு. ஸ்ரீகாந்தா உள்ளிட்ட பல பேச்சாளர் களும் சேர் க. வைக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டிப் பேசி னர்.

ஆஸ்பத்திரி தொடங்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாக ஒரு உதவி வைத்திய அதிகாரி (A, M, P ) யுடனேயே இயங்கியது. உரியபடி டாக்டர்கள், தாதிமார்கள் நியமிக்கப்படாமையைச் சுட்டிக்காட்டி 24.4 57-ல் அமைச்சருக்கு மனுச் செய்து சேர் க. வை உதவியை நாடினோம் அவர் உதவியால் மேற்கொண்டு வேண்டியன செய்யப்பட்டு PERIHERAL UNITற்கான சகல வசதி களும் செய்யப்பட்டன. படிப்படியாக ஆஸ்பத்திரி வளர்ச்சி யடைந்து ஒரு D. M. O, 2 A. M. P, 60 படுக்கைகள் கொண்ட

தான வளர்ச்சியடைந்தது. மேற்கொண்டு இரண்டாவது கட்டிடத் தொடருக்கும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது.

27.7.67-ல் ஐக்கிய தேசியக் கட்சியரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் M. D ஜெயவர்த்தனா அவர்கள் தமது நிரந்தரக் காரியதரிசி கு. பாலசிங்கம் அவர்கள் சகிதம் யாழ்ப்பாணம் வந்த போது இந்த 2-வது கட்டிடத்துக்கு அத்திவாரக்கல் நாட்டுவித்தோம். குறித்த வைபவத்தையிட்டு நடந்த விழாவிற்கு தலைமையுரையில் இந்த ஆஸ்பத்தியின் வரலாற்றைக்கூறி, போதிய கட்டிட, கட்டில் வசதியில்லாமையால் கூடுதலான நோயாளிகள் விறாந்தைகளில் நிலத்தில் படுத்திருக்கும் அவல நிலைமைகளைச் சுட்டிக்காட்டிப் பேசினேன். அமைச்சர் அவர்களின் நிரந்தரக் காரியதரிசி எமதூர் மருமகன். (அதிகார் நாகநாதனில் மகன் கனகநாயகத்தின் மருகன்) என்ற தொடர்பு முறையும் சுட்டிக் காட்டிப்பேசப்பட்டது கௌரவ அமைச்சர் அவர்கள்தொடர்ந்து பேசும்போது 'எனது நிரந்தரக் காரியதரிசி கு. பாலசிங்கம் உங்கள் கிராமத்து மருமகன் எனத் தலைவர் குறிப்பிட்டுப் பேசினார். அவருக்காக வேனும் உங்கள் கோரிக்கைகளின் ஒரு பகுதியை யாவது செய்து தர வேண்டியுள்ளது. தற்போது யான் அத்திவாரமிட்ட தங்குமிட கட்டிடத்தின் அளவை மேலும் இரட்டித்து – நீட்டிச் செய்து முடிக்கத் தீர்மானித்து இங்கு சமூகமளித்திருக்கும் எனது காரியதரிசிக்குத் தற்போது கட்டளையிட்டுள்ளேன்'' எனப் பலத்த கரகோசத்தினிடையே தெரிவித்தார். குறித்த இரண்டாவது 120 அடி நீளமான படுக்கை வசதிகள் கொண்ட கட்டிடம் பூர்த்தியடைய இரண்டு வருடங்கட்கு மேல் சென்றது.

குறித்த புதிய கட்டிடத்தை அப்போதைய சுகாதார அமைச்சர் ஈ, எல். சேனநாயகா அவர்களைக் கொண்டு திறப்பித்தற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்படிருந்தன. 2,9.1970 திறப்பு விழா திகதியன்று அமைச்சர் சமுகமளிக்க முடியாதிருந்த போது அவரது நிரந்தரக் காரியதரிசி கு. பாலசிங்கம் அவர்களை அனுப்பியிருந்தது மிகவும் பொருத்தமாக அமைந்தது. குறித்த திறப்பு விழாவின் போது கொடுத்த மனுவில் ''எமது ஆஸ்பத்திரி 65000 மக்களைக் கொண்ட கோப்பாய்த் தொகுதிக்காக அமைந்துள்ளது தினமும் 150 – 300 வெளி நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். உரிய கட்டிடங்கள் யாவும் நிறைந்து சில காலம் நோயாளிகள் நிலத்திலும் படுக்க நேரிடுகிறது போதிய நில வசதிகளுண்டு. ஆரம்ப காலத்தில் திட்டமிட்டபடி - வரை படத்தில் உள்ளபடி இன்னும் பாலர்க்கான தங்குமிட சிகிச்சையிடம் பூர்த்தியாக்கபடாத குறையுண்டு. மற்றும் தாதிமார் பற்றாக் குறை



முதலியன பற்றி பல முறை முறையிட்டும் பயனில்லை;'' - என விபரமானதொருமனு தயாரிக்கப்பட்டு கி. மு. சங்கத்தாரால் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கொண்டு படிப்படியாகச் செய்து தரப்படும்; என வாக்களிக்கப்பட்டது. (15.10,72)

நாட்டு நிலைமைகளாலும் அரசியல்ப் போக்குகளினாலும் முன்னர் திட்டமிடப்பட்டுள்ள கட்டிடங்களமைக்க நிதி நிலைமை முதலிய சாட்டுக்கள் சொல்லிக் கவனிக்கப்படவில்லை. 1983-ல் ஆரம்பமான யுத்த காலக் கெடுபிடிகளின் பின்னர் குண்டுத் தாக்குதல்களினால் கட்டிடங்கள் சேதமடைந்தன. இரு முறை அண்மையில் குண்டுகள் விழுந்ததால் கட்டிடம் தப்பியது. சுன்னாகம் மின் நிலையம் குண்டடியால் அழிக்கப்பட்ட பின்பு மின் சாரமில்லாக் குறை நீண்ட காலமாக நிலவி வருகிறது. ஆஸ்பத்திரிக்குத் தேவையான தண்ணீர் வசதியில்லாது பெருஞ்சிரமமடைந்தனர். அண்மையில் நீர்றைக்கும் இயந்திரமொன்று பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்படுகிறது. வெளிச்ச வசதியில்லாத நிலை தொடர்ந்து கொண்டே வருகிறது. வைத்தியசாலைக்கென ஓர் அபிவிருத்திச் சபை தெரியப்பட்டு பிரதம வைத்திய அதிகாரி தலைமையில் பொதுசனப் பிரதிநிதிகளிலிருந்து இரண்டு உபதலைவர், காரியதரிசி, உபகாரியதரிசி, தனாதிகாரி கொண்ட சபை சேவையாற்றுகிறது.

வைத்தியசாலைக்கு 1946-ல் காணி நன்கொடையளித்த நால்வரது பெயர் பொறித்த நினைவுக்கல்லும், வைத்தியசாலைக்கு அத்திவாரமிட்ட சேர் கந்தையா வைத்தியநாதன் நினைவுக்கல்லும் பதித்தற்கான உத்தரவிற்கு மனுச் செய்யப்பட்டது. காணி அன்பளிப்புச் செய்தவர்கள் சம்பந்தமாய் மேலும் ஆட்கள் பெயர் சேர்க்க வேண்டும் என்று எதிர்ப்பொன்று தெரிவிக்கப்பட்டது. நடைபெற்ற விசாரணையில் முன்னைய நன்கொடையுறுதிகள் அரச வர்த்தமானிப் பிரசுரம் என்பனவும் பார்வையிடப்பட்டு குறித்த ஆட்சேபம் நியாயமற்றதெனத் தீர்ப்பளிக்கபட்டது.

மேலும் குறித்த நன்கொடையுறுதியின் படி கிழக்கும் தெற்கும் இதன் மிகுதியாதனங்கள். வைத்தியசாலையின் தேவைக்கு கிழக்குக் காணியை மதிப்பீட்டு விலைக்கு வாங்க உரிய ஆவணங்களுடன் மனுச் செய்யப்பட்டிருந்தது. தற்போது காணி கொள்வனவு செய்யும் திட்டம் கை விடப்பட்டுள்ளது; என்று கூறியளவில் உண்டு. மேற்கொண்டு ஆஸ்பத்திரி சம்பந்தமான விபரங்களறிய அபிவிருத்திச் சபைச் செயலாளருடன் கொண்ட தொடர்புகள் கைகூடவில்லை.

வைத்தியசாலையின் பிரதம அதிகாரிகளாக D M.Oக்கள் இருந்து வந்துள்ளார்கள். அவருக்கு உதவியாக A,M Pக்கள்

சேவையாற்றியும் வந்துள்ளார்கள். சில வேளைகளில் D.M.O இல்லாத போது சேவையிலிருக்கும் பல் டாக்டர் தொடர்பு அதிகாரியாக மேலிடத்துடன் சேவையாற்றிய சந்தர்ப்பங்களுண்டு.

நீண்ட காலமாகச் சேவையாற்றிய தகுதியான அனுபவம் A. M. Pக்கள் இது விஜயமாய் 1992-ல் பிரதமர் பிரேமதாசா அவர்கட்கு மனுப்பண்ணியமை நியாயமென ஏற்கப்பட்டு சேவை கூடியோர் R. H. Oக்களாக நியமிக்கப்பட்டு வைத்தியசாலையின் பிரதம அதிகாரியாகவும் செயற்படும் நியதியுண்டானது.

தற்போது வைத்தியசாலையின் பிரதம பொறுப்பு வைத்திய அதிகாரியாக S. சிவபாலன் அவர்களும், திருமதி J. முத்துத்தம்பி, திருமதி P. சிவலோகநாதன், செல்வி M. வசந்தமாலா ஆகிய வைத்திய அதிகாரிகளும் பல் டாக்டர் V. இலட்சுமணகுமார் ஆகிய ஐவரும் திறம்படச் சேவையாற்றி வருகின்றனர். இன்று அகோர செல்லடிகளால் அகதிகளாக வந்தோர் தொகை அதிகரிக்க வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் தொகையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது வரும் நோயாளிகளை அன்புடன் அணுகி பரிசோதித்து ஏற்ற முறையில் வைத்தியம் நடைபெறுவதால் வைத்திய அதிகாரிகள் ஐவரும் அனைவரது பாராட்டுக்கும் உரியவர்களாக விளங்குகின்றனர்.

10.9.95-ல் வைத்தியசாலையிலுள்ள விளம்பரப் பலகையில் குறிக்கப்பட்டுள்ள பின்வரும் வைத்திய அதிகாரிகள் அட்டவணை பிரதம வைத்திய அதிகாரி S. சிவபாலன் அவர்கள் மூலம் பெறப்பட்டது. அட்டவணையிலுள்ளவர்கட்கு முன்பிருந்த வைத்திய அதிகாரிகள் விபரங்களோ சேவைக் கால விபரங்களோ பெற முடியவில்லை. (1.9.95)

### வைத்தியசாலை விளம்பரப் பலகையில் உள்ளபடி சேவையாற்றிய வைத்திய பொறுப்பு அதிகாரிகள்

| | |
|---|---|
| S. சபாரத்தினம் | S. சண்முகலிங்கம் |
| K. D. ஜோக்கிம்பிள்ளை | M. கதிர்காமநாதன் |
| S. மகாதேவா | V. விபுலேந்திரா |
| A. E. யோசேப் | செல்வி S. புத்திரசிங்கம் |
| S. குணரத்தினம் | M. அருள்லிங்கம் |
| R. சேனாதிராசா | செல்வி N. பத்மநாதன் |
| S. பாஸ்கரநாதன் | M. அன்பழகன் |
| B. இராசரத்தினம் | P. நவரத்தினராசா |
| V. R. நல்லையா | A. M. செபஸ்ரியாம்பிள்ளை |
| M. நடராசா | M. நல்லைநாதன் |
| R. St E. தம்பாபிள்ளை | S. சிவபாலன் |
| K. பகேசன் | (21.9.95) |



1987-ற்குப் பின் இரண்டு முறை குண்டடிகளால் சேதமடைந்து திருத்தப்பட்டது. மீண்டும் 1995-ல் கட்டிடம் முற்றாக ராணுவத்தாக்குகளால் சேதமடைந்து தளபாட உபகரணங்கள் யாவும் சேதமடைந்தும் சூறையாடப்பட்டும் 1996-ல் திரும்பிய போது காணப்பட்டது. அவ்விடம் தொழிற்பட முடியாத நிலையில் அயலிலுள்ள வீடொன்றில் ஒரு உதவி வைத்திய அதிகாரியுடன் மாத்திரம் நடைபெற்றது. அபிவிருத்திச் சபையாரின் விண்ணப்பங்களையடுத்து கட்டிடம் சீராக்கப்பட்டு 1997 ஆரம்பத்திலிருந்து வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு ஒரு வைத்திய அதிகாரியுடன் மாத்திரமே நடைபெறுகிறது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும் 23.3.97-ல் புனரமைக்கப்பட்டு திருமதி P. சிவலோகநாதன் தலைவர், க. இ. குமாரசாமி, வைத்திய கலாநிதி வை. தியாகராசா உபதலைவர்கள் பொ. விக்கினேஸ்வரலிங்கம் செயலாளர் தி. அரசபிள்ளை உபசெயலாளர் செ. செல்வரத்தினம் பொருளாளர் கொண்ட நிர்வாக சபை செயலாற்றுகிறது. முன்னர் திட்டமிடப்பட்டபடி பாலர் சிகிச்சை நிலையம், சுகாதாரக் கந்தோர் கட்டவும், முழுநேர வைத்தியசாலையாக நடக்கவும், ஆஸ்பத்திரியின் தேவைக்காக இதன் மிருதிக்காணி கிழக்கேயும்; தெற்கேயுமுள்ளவற்றை வாங்கவும் விண்ணப்பிக்கத் தீர்மானங்களாகின.

## கசரோக வைத்தியசாலை

யாழ்ப்பாணத்தில் வைத்தியத்துறையில் சேவையாற்றிய மிறிசிலீவ் - என்ற ஆங்கிலேயரால் 5-ம் ஜோட்ஸ் மன்னரின் நேரடி உத்தரவு பெற்று காங்கேசன்துறையில் கசரோக வைத்தியசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. சில வருடங்கள் தொடர்ந்து நடைபெற்றது. 1932-ல் இலங்கை அரசால் யாழ்ப்பாணம் புத்தளம் வெரிசறை மயிலிட்டி இடங்களில் கசரோக ஆஸ்பத்திரிகள் தொடங்கப்பட்டன. சில காலத்தில் றாகம், புத்தளம் வைத்தியசாலைகள் மூடப்பட்டன. மயிலிட்டி வைத்தியசாலை இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய போது சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் 1991 ஒக்டோபர் மாதம் வரை பகுதி வைத்தியசாலையாக நடத்தப்பட்டது மேற்கொண்டு ராணுவ தாக்குதல்கள் காரணமாக 1993 நவம்பர் 10-ல் கோப்பாய் ஆஸ்பத்திரியில் ஆண்களுக்கான தங்குமிடத்தின் ஒரு பகுதியில் ஆண்களுக்குரிய கசரோகிகள் பகுதியும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் ஒரு பகுதியில் பெண்கள் கசரோகிகள் பகுதியும் நடத்தப்படுகின்றன. கசரோக வைத்தியசாலையின் தலைமையலுவலகம்

யாழ் அரசினர் வைத்தியசாலைக்குத் தென் புறமாய் மணிக் கூட்டு வீதியினருகில் டாக்டர் கு. மகேசன் தலைமையில் நடைபெறுகிறது. கோப்பாய் கசரோகிகள் பகுதிக்கு டாக்டர் சிவகுமாரன் R.M.P பொறுப்பதிகாரியாகச் சேவையாற்றுகிறார். திருமதி S. ஜெயசோதி தாதி உத்தியோகத்தராகவும் 4 ஆண் பரிசாரகர் 5 தொழிலாளர் சேவையாற்றுகிறார்கள். போதிய கட்டில் வசதியில்லாததால் கட்டில் வெளியாகும் வரை நிலத்தில் படுப்போர் தொகையும் உண்டு இரண்டு மாதம் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டுமென்பது சட்டாயம் (25 9.95)

## கோப்பாய் வடக்கு சிவபூமி

சபாபதி நாவலர் அவர்களால் சைவபூமி என அழைக்கப்பட்ட (கைதடி – மானிப்பாய் வீதி, உப்பாறு நீர்வேலி, உரும்பராய் இடைப்பட்ட இன்றைய) கோப்பாய் வடக்கு இன்றும் சைவ பூமியாகவேயுள்ளது.

வாரம்பத்தையின் தெற்குப்புறமாய் பிராமணக் குடியிருப்புக்கள் நெருக்கமாயிருந்தன. அவர்கள் சிவபூசை வழிபாடு செய்வதற்கு வசதியாக தங்கள் மத்தியில் ஆலயங்களை நிறுவினர். இந்தவகையில் கேணிபடி வைரவர், செல்வவிநாயகர் மகிழடி வைரவர் மிதியத்தனை வைரவர் மற்றும் ஆலயங்கள் அமைந்துள்ளன. மிதியத்தனை வைரவ கோயில் பூசகராயிருந்த கார்த்திகேசுக் குருக்கள் அவர்கள் மகன் சிறந்த புராண படன உரைகாரரும் சிவப் பொலிவும் உடையவராயிருந்து பிற்காலத்தில் மலாயா சென்று சைவமும், தமிழும் வளர்த்த ஐயாத்துரைக் குருக்கள் அவர் சகோதரர் சுப்பையாக் குருக்கள் என்போர் சந்ததியினரும் மகிழடி வைரவ கோயில் பூசகர் சிவகடாட்சக் குருக்கள், மகன் முத்துச்சாமிக் குருக்கள், மருத்துவர் நொத்தாரிசு கெங்காதர ஐயர் விஷகடி வைத்தியர் அப்பையர், நல்லூர் பிரதம பூசகராயிருந்தவரும் சைவ மக்கள் பலராலும் அறியப்பட்டவருமாகிய முத்துக் குருக்கள், அவர் தந்தை வைரவநாதக் குருக்கள் வழி வந்தவர்கள், அருணாசலக் குருக்கள் வழி வந்தவர்கள் யாவரும் இச்சுற்றாடலில் வசித்தவர்களாவர், இதன் பக்கத்தேயுள்ள குறிச்சி இன்றும் பிராமணரோடை என்றேயழைக்கப்படுகிறது.

ஊரியாட்டி எனும் காணியில் அம்பலம்வேலர் வேல் தாபித்து வழிபட்டு வந்த போது தான் கண்ட கனவைக்கூறி உந்துவத்தை எனும் காணியில் இன்றைய சித்திர வேலாயுத சுவாமி கோயில் தாபிக்க காலாயிருந்தவரும், இன்றைய இரா



தம்பு கிணற்றடியின் வடபுறமாய் இன்றும் அம்மா வளவு என அழைக்கப்படும் காணியில் குடியிருந்தவருமாகிய வேதக்குட்டிக் குருக்களும், நமதூர்ப் பேரறிஞர் அ. வி. மயில்வாகனம் அவர்களது சமஸ்கிருதக்குருவான மதுரை ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் அவர்களும், யாழ்ப்பாணத்தில் ஆடி அமாவாசையில் நீராடிப் பிதிர்க் கடன் செய்யும் கீரிமலை போன்று – இராமபிரான் இலங்கை வந்த போது வில்லூண்டித் தோண்டியதாகச் சொல்லப்படும் - மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற மாமாங்கம் தீர்த்தக்குளத்தடி பிள்ளையார் ஆலய பரம்பரைப் பூசகர்கள் இரத்தினக் குருக்கள் அவர்களும் அவர் மகன் அண்மையில் காலஞ் சென்ற பூரணானந்தக் குருக்கள் அவர்கள் முதலிய பிராமணோத்தமர்கள் ஒழுக்க சீலர்களாயிருந்து சைவம் வளர்த்த பூமியிது,

சபாபதி நாவலர் அவர்களும், அவருக்குப் பின் திண்ணைப் பாடசாலையமைத்து நிகண்டு இலக்கியம் புராணம் என்பன கற்பித்த முருகேசு உபாத்தியாயர், சிறந்த சைவ ஒழுக்க சீலரும் உரும்பராய் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசானாயிருந்து எத்தனையோ பிரசித்தமானமாணவமணிகளைத் தோற்றுவித்தவரும், எமதூரில் சைவமும், தமிழும் வளர்க்கத் தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றி வருமாகிய மு. நாகலிங்கம் ஆசிரியர் அவர்களும் பிறந்து வளர்ந்து அருஞ் சேவையாற்றிய பூமியிது

சரவணபவானந்த வித்தியசாலைக்குரிய காணி தரும சாதனம் செய்த மூவரில் சின்னத்தம்பி பொன்னையாவினோடு சேர்ந்த முருகர் கந்தர், சின்னத்தம்பி மார்க்கண்டு என்பவர்களும் மேலும் வித்தியாசாலை விஸ்தரிப்பிற்கான காணியளித்த நாகலிங்கம் அம்பலவாணர் ஆசிரியர் அவர்களும், கோப்பாய் வடக்கு மாதர் சங்கம், பாலர் விடுதி என்பனவற்றிற்கு வேண்டிய காணி நன்கொடையளித்த சீனிவாசகம் கந்தையா அவர்களும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு தாமாகவே முன் வந்து மூன்று ஏக்கர் காணியைத் தரும சாதனஞ் செய்த ஆறுமுகம் நாகமுத்து, சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை, உடன் வைரமுத்து அம்பலவாணர் வைரமுத்து ஆறுமுகம் என்பர்களும் சித்திர வேலாயுத சுவாமி கோயில் ஆறுமுக சுவாமி விக்கிரகம் தாபித்ததனோடு பிரதி வருடமும் ஸ்தாபித்த நாள் விழாவிற்கான ஒழுங்குகள் செய்த இராமு சின்னத்தம்பி ஆகிய தர்மசீலர்கள் வாழ்ந்த பூமியிது.

கோப்பாய் விவசாயிகள் சங்கக் கட்டிடம் அத்திவாரமிடயாவும் செய்யப்பட்டுக் குளம்பிய நிலையில் செய்வதறியாது தத்தளித்த போது தாமாக முன் வந்து வேண்டிய 8 பரப்பு 15 குழி

காணியை நன்கொடையளித்த திருவாளர்கள் சு. கந்தப்பிள்ளை. வ. சின்னப்பா, சி. வல்லிபுரம், சி. சுப்பிரமணியம், திருமதி அ. கதிரவேலு ஆகிய பேரன்பர்கள் அவதரித்த பூமியிது. கோப்பாயில் வந்து குடிகொண்ட நாராயண பக்தரான சாமியார் ஓர் ஆலயம் நிறுவ விண்ணப்பித்த போது தமதுரிமையான கொழுவியன் கலட்டியில் வேண்டிய காணியைத் தருமசாதனஞ் செய்த வீரவாகு வேலுப்பிள்ளை, சதாசிவம் சிவக்கொழுந்து, கந்தையா பொன்னம்பலம், சின்னத்தம்பி இராசையா, "மயில்வாகனம் கந்தையா, திருமதி சின்னையா இராசம்மா, பங்காளர்கள் பத்திமான்கள் வாழ்ந்த பூமியிது.

மலாயா சென்று வைத்தியத்துறையில் அருஞ்சேவையாற்றி ஓய்வு பெற்று இவ்விடம் திரும்பிய போது சரவணபவானந்த வித்தியாசாலைக்குப் போதிய இடவசதியில்லாத நெருக்கடி ஏற்பட்ட போது 80 × 20 அடி கொண்ட கிழக்குக் கட்டிடத்தைத் தாது செலவிலேயே நிறுவிக் கொடுத்தவரும், கோப்பாய் வடக்கு மாதர் சங்கம்-நெசவு மின்தறிநிலையமமைக்க ஆரம்பித்த கட்டடக் கொட்டகை வேலை முழுவதனையும் செய்ய நிதியுதவியளித்தவரும், கந்தசாமி கோயில் வெளி மண்டபக் கூரை வேலைக்கு வேண்டிய நிதியுதவி செய்தவரும், பிரயாணத்திற்கு உகந்த காலமல்ல என்று அவரது சோதிடர் தடுத்த போதும் பிள்ளைகளின் வற்புறுத்தல் அழைப்பின் பேரில் மலாயா சென்ற போது விமானத்தில் பிரிய நேரிட்ட தருமசீலர் டாக்டர் சி. பொன்னையா அவர்களும்;

கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோயில் தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராயிருந்து தேர் வேலைகளைப் பூர்த்தி செய்து தேரோட வைத்தவரும், யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு நீதி மன்றங்களிலும் வருடக்கணக்கில் நடைபெற்ற விசாரணைகக்கெல்லாம் தலைமை தாங்கி நின்று தனது நேரத்தையும் பணத்தையும் செலவளித்தவரும் கோட்டாரின தீர்ப்பின்படி ஸ்தாபிக்கப்பட்ட பலானை கண்ணகையம்மன் கோயில் பரிபாலன சபைக்கு முதல் தலைவராயிருந்து வேண்டிய திருப்பணி வேலைகளைத் திட்டமிட்டுச் செய்தவரும் இணக்கச் சபையில் ஆரம்பத் தலைவராயிருந்தவரும் வடக்கு கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகராயிருந்து ஓய்வு பெற்றவருமாகிய மு. பரமலிங்கம் அவர்கள்;

சித்திர வேலாயுத சுவாமி கோயில் திருப்பணிச் சபை, மற்றும் சமூக சேவா சங்கம், கி. மு. சங்கம், சனசமூக நிலையம் முதலிய பொதுஸ்தாபனங்களின் பிரதான நிர்வாகியாக விருந்து



சேவையாற்றி அன்பர் என நண்பர்களால் அழைக்கப்பட்ட சி. க. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள்;

கோப்பாய் வடக்கு சமூக சேவா சங்கச் செயலாளராக விருந்த போது இராசவீதி மின்சாரம் கிடைப்பதற்கு பெரு முயற்சி செய்து ஆரம்பதினத்தன்று பொறியியலாளர் சிவதாசன் அவர்களால் பராட்டப் பெற்றவரும், குண்டடிபட்ட பாலர் விடுதிக் கட்டிடமமைக்க அன்பருடன் சேர்ந்து பெருஞ் சேவையாற்றியவரும் 1987-ல் அகதியாக வெளியேறிய போதும், வந்து சரவணபவானந்த வெள்ளி விழா மலர், மற்றும் பாடசாலைக் கோர்வைகளை எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்துத் திரும்பும் போது அகால மரணமடைய நேரிட்ட மூ. நல்லையா அதிபர் அவர்கள் போன்ற சமூக நலன்விரும்பிகள் வாழ்ந்து அருஞ் சேவையாற்றிய பூமியிது,

சித்திர வேலாயுத சுவாமி கோயில் முதல் பரிபாலன சபையில் மானேசராயிருந்த கந்தர் விநாசித்தம்பி, தொடர்ந்து அப்பதவியை வகித்த அம்பலவாணர் கார்த்திகேசு அவர் தம்பி சீனிவாசகம் பலானை கண்ணகை பரிபாலன சபையின் முதல் மானேசராயிருந்தவரும் குளிர்த்திதண்ட லுக்குச் சிவலையர் வெளிக்கிட்டு விட்டார் - மழை வரப் போகது - என்று சொன்னவர்கள் வாக்குப் பொய்யாது, கண்ணகைத் தாய் அருள் மழை சொரிந்து மெய்ப்பிக்க நடந்த பக்தரான முருகேசு வைரமுத்து அவர்களும் தொடர்ந்து திருப்பணிகள் ஆற்றிய தப்பு சுப்பிரமணியம் அவர்களும், நமது ஆலயம் என்றும் தொடர்ந்து கண்ணகையம்மன் ஆலயமாகவே இருக்க வேண்டும் - என்று சொல்லாலும் செயலாலும் நிலைநாட்டிய வீரவாகு கந்தையா அவர்களும்;

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி தமிழ்ப் பேராசானாயிருந்து மேற்பர வகுப்பு மாணவர்கட்கு சாயந்தர வேளைகளிலும் விடுதலை நாட்களிலும் வகுப்புக்கள் நடத்தி முழுச்சித்தி பெற வைத்து, பல மாணவமணிகளை உருவாக்கியவரும், ஞானபண்டித சைவ இளைஞர் சங்கம் ஸ்தாபித்து நமது கிராம மாணவரிடையே தமிழ், சமயம் சம்பந்தப்பட்ட பல போட்டிகள் வைத்து மாணவர் முன்னேற்றத்துக்குப் பெருந்தொண்டாற்றிய பண்டிதர் சி. கந்தையா அவர்களும், நமது கிராம வித்தியாசாலையில் தலைமையாசானாயிருந்து பெருஞ் சேவையாற்றியதனோடு கோலாட்டம் சீனடி சிலம்படி கவியியற்றல் சிவராத்திரி நாடகம் முதலிய நுண்கலைகளை வளர்த்து மாணவ உலகாலும் வித்தியா பகுதியாராலும் பாராட்டப் பெற்ற குருமணி வே. சிதம்பரப்பிள்ளை போன்ற அறிஞர்கள் அருஞ் சேவையாற்றிய இடமிது.

கோப்பாய் வடக்கிலுள்ள கோயில்கள், வித்தியாசாலைகள், சனசமூக நிலையங்கள் வைத்தியசாலை கூட்டுறவுச் சங்ககள் அமைத்த இடப்பரப்பு முழுவதும் தர்மசீலர்களால் நன்கொடையளிக்கப்பட்ட காணிகளிலேயே ஸ்தாபிதமாகியுள்ளமை இக்கிராம மக்களின் தார்மீகக் கொள்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறதெனலாம்.

இவ்வாறு பிராமணோத்தமர்கள் சிவபூசகர்கள் தர்மசீலர்கள் திருப்பணித் தொண்டர்கள் நல்லறிஞர்கள் வாழ்ந்து வழிகாட்டிய மகிமையினாலோ – அவர்கள் ஆன்ம வழிகாட்டலாலோ தெய்வத் திருவருளினால் இன்றைய கோப்பாய் வடக்கு இடப்பரப்பிலுள்ள பெரிய சிறிய கோயில்கள் அனைத்தும் சைவக் கோயில்களாகவே மிளிர்கின்றன. இன்றும் இவ்விடப் பரப்பில் வசிக்கின்ற 787 குடும்பங்களைச் சேர்ந்த 2481 பேரில் ஒன்று தவிர மற்றனைவரும் சைவர்களாகவே மிளிர்கின்றமை இப்பூமிக்குண்டு சபாபதிநாவலர் வாய்வந்த சைவபூமி இன்றும் சிவபூமியாகவே மிளிர்கின்றது. (31.7.95)

## வயோதிபர்களது அனுபவ வார்த்தைகளை உதாசீனம் செய்தலாகா

இராச வீதியிலுள்ள தோட்ட வீட்டில் யானும் மனைவியும் இருக்கிறோம். கிணற்றுள் 5 – 6 அடி நீளமுள்ள ஒரு சாதி நாகபாம்பு. எடுக்கப் பலவிதம் எத்தனித்தும் முடியவில்லை, மொத்தமான பராக் கயிற்றைக் கட்டி விட்டோம். கயிறு வழி பாம்பு ஏறி இரவில் தப்பிவிட்டது. பின் அதனைக் காணவில்லை. சில மாதங்களாயின.

தென்னை மரங்கட்கு கிடங்கு வெட்டி குளை கஞ்சல் தாட்டு உரம் போடும் வேலை நடக்கிறது. வாழைக்குள் சருகு கூட்டும் போது பாம்பு என்ற அவலக்குரல் கேட்கிறது. அவ்விடம் போகிறேன். முன் கிணற்றுள் இருந்த பாம்பாயிருக்கலாம். படமெடுத்துத் தன்னைக் காட்டி விட்டு சருகுள் மறைகிறது. கற்கிழுவந் தடியெடுப்பித்து அடித்தேன்.. கற்கிழுவந் தடி பட்டதும் பாம்பின் வேகம் குறைந்து படமெடுத்து நிலத்தில் முட்டி விட்டு மீண்டும் சருகுள் மறைகிறது. வந்தவர்கள் பயந்து தூரத்தே நின்றனர். வழமை போல் அடித்துத் தாட்டுவிட்டேன்



சற்றுப் பிந்தி வந்து இவற்றை விசாரித்தறிந்து அவதானித்த வயோதிபர் ஒருவர் - உபாத்தியாயர் ''சாதி நாகம் அடித்திருக்கவே கூடாது. வளையம் போட்டுப் பிடித்துக் கொண்டு போய் அப்புறப் படுத்தியிருக்கலாம். சிங்கள ஆட்கள் சாதி நாகத்தைக் கண்டால் மலர் தூவி வணங்கியிருப்பர். நீர் செய்தது தவறு. நாகபாம்பை தலையில் அடித்திருக்க வேண்டும், நீர் அடித்தது தலையில் படாதபடியால் பின்னர் படமெடுத்து நிலத்துள் முட்டி சாபம் போடநேரிட்டது. சாபம் போட்ட நீரடித்த நாகத்தின் சோடி உம்மை அல்லது உமதாக்களைத் தாக்கலாம்; கவனமாயிரும்'' என்று எச்சரித்துச் சென்றார். இதனையறிந்த வேறொரு எனது உறவினரான வயோதிபர் – ''குமாரசாமி பெருந் தவறு செய்துவிட்டார், 17.11.90 சனி நேற்று மாதப் பிறப்பு, அமாவாசை. நல்ல நாளில் பாம்பை – அதுவும் சாதி நாகத்தை அடித்திருக்கவே கூடாது நாகம் ஆண்சாரை கொம்பேறி மூக்கனோடு இணையும்! கொம்பேறி அடித்தவரை அல்லது உறவினரைத் தாக்கலாம் கவனமாக இருக்கச் சொல்லவும்'' என்று தனது அனுபவக் கண் கொண்டு கூறியதும் எனது நெருங்கிய உறவினர் மூலம் தெரிவிக்கப்பட்டது. இவைகள் கிழட்டுக் கதைகள் என்று அநாதரவாகத் தோட்டத்திலுள்ள வீட்டில் தான் யானும் மனைவியும் இருந்தோம். இரவில் வீட்டுக்கு வெளியே செல்லப் பயந்ததில்லை. தோட்டத்தில் யான் பகல் இரவு பாராது உலாவ நேரிடுவதால் பாம்புகளைக் கண்டால் அடிப்பதுவே எனது வழக்கம்.

தோட்டத்தில் 17.11.90 நடந்தவற்றை எனது பழைய வீடு கிளுவானை சென்றதும் விபரமாகக் கூறினேன். அகிலன் உள்ளிட்ட பேரப்பிள்ளைகள் அனைவரும் கேட்டுக்கொண்டிருந்தனர். வீட்டிற்கு வந்த விவசாய அதிபர் ஒருவர் வவுனியாவில் நடந்த இப்படியான இரு சம்பவங்களைக் கூறி உறவினர்கள், சோடிப் பாம்பினால் தாக்கப்பட்ட வரலாறுகளும் கூறிய போதும் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். யான் அவர் கூறியதனைக் கேட்டதும் சிறிது பயப்பட நேர்ந்தது. கழிந்ததற்கு இரங்கிப் பிரயோசனமில்லை சோடிப்பாம்பு என்னைத் தாக்கலாம் என்பதனை எனது மகள் அரவிந்தா முற்றாக நம்பிவிட்டார் கண்ணகையம்மன் கோயில் புராதன கூழாவடி சென்று அடிக்கடி நாகதம்பிரானை வழிபட்டு வந்தது: அறிந்தேன்.

29.11.90 வியாழன் காலை - அம்மா! உங்கட்குக் காலில் பாம்பு கடித்ததாகக் கனாக் கண்டேன். - என்று அகிலன் கூறினான். குறித்த கனவு பாம்பு அடித்ததனைக் கேட்டுக் கொண்டிருந்ததன் பிரதிபலிப்பு – எனக் கருதி யாரும் பொருட்படுத்த

வில்லை, 29.11.90 வியாழன் காலை எனது மனைவி கிளுவானை பழைய வீடு வந்து விட்டார். பி.ப 1 மணிக்கு யானும் கிளுவானை வீடு வந்து விட்டேன். வழமை போல் மாலை கட்டி சாயிபாபா பூசைக்கு அகிலனுடன் பி.ப 5 செல்ல அரவிந் ஆயத்தமாக விருந்தார், பி.ப 3 மணியளவில் இன்று தோட்டத்தில் யாரு மில்லை; ஆகையால் சின்னையாவின் எலுமிச்சையிலுள்ள காய் கள் களவு போய்விடும்! எனக் கூறி அம்மா தோட்டம் புறப் படக் கிளம்பினார். அம்மா வெயில் தணியப் போகலாம் யான் போய்ப் பார்த்து வருகிறேன் - என்று கூறி அரவிந் தோட்ட விட்டிற்குப் போகப் புறப்பட்ட போது படலை வரை அம்மா வுடன் சென்ற அகிலன் - அம்மா! கண்ணுக்குள் பாம்பு தெரி கிறது - எனக்கூறினான் முந்திய கனவுபோல இதனையும் பொருட் படுத்தாது அரவிந் சென்றுவிட்டார்.

பி.ப 4 45 அளவில், - பவாவுக்குப் பாம்பு கடித்து விட் டது, உடன் வரட்டுமாம் - என ஒருவர் வந்து படலையில் நின்று அவலக்குரல் எழுப்பினார், பைசிக்கிளிலில் விரைந்தோம். அரவிந் மயங்கிய நிலையில் வீட்டு விறாந்யையில் பாயில் படுத்திருந்தார், அயலவர்கள் விறாந்தை நிறைய நின்றனர், பின் பக்கத்தால் வந்த பாம்பு கடித்த இடது காலில் ஆரம்ப சிகிச்சைகள் நடந் திருந்தன: நாடி யோட்டம் இருப்பதனை அவதானித்த யான் ஆஸ்பத்திரிக்கு உடன் கொண்டு போக வாகனம் ஏதாவது கொண்டு வாருங்கள் - என்று அலறினேன், யான் சொல்ல முன் னரே மூன்று திசைகளில் வாகனம் தேடிக் கொண்டு வர ஆட் கள் சென்றதறிந்தேன். யுத்த கால நெருக்கடியும் பீதியும், வாகனங்கள் இருந்தும் எரிபொருள் இல்லாமையால் தாமதப்படு வது அறிந்தேன். பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரி சென்றவர் அவ்விட முள்ள அம்புலன்ஸ் உதவி கேட்டபோது அம்புலன்ஸ் இவ்விட மிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவே மாத்திரம் தான் பாவிக்கலாம்! வேறிடத்துக்கு விட உத்தரவில்லை! எனக் கூறப்பட்டது, இடையில் இரத்தோட்டம் தளர்வுற்ற நிலை கண்டு இந்திரா நெஞ்சைத் தேய்த்த போது பக்கத்திலிருந்த ஆஸ்பத் திரி மருத்துவமாது ஒருவர் விஷமேறுவது துரிதப்படலாம்! என்று கூறித் தடுத்து விட்டார் அவர் கூறியது தவறு என்று பின் னால் உணர்ந்தோம். பி.ப 5.15 அளவில் சிறிய லொறி யொன்று கொண்டு வரப்பட்டது; யாழ் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு கொண்டு போனோம். விபரம் கூறினோம் பரி சோதித்து விட்டு மௌனமானார். இரத்தோட்டம் தடைகாரண மாகவே மரணம் நிகழ்ந்துள்ளது! மேற்கொண்டு எதுவும் செய் யக் கூடிய நிலையில் லயென்றார். புலம்பினோம், இடையில்



வந்த நண்பர் ஒருவரை கொட்டடிக்கு விஷகடி வைத்தியர் சிற் றம்பலத்திடம் அனுப்பிய போது அவர் கொழும்பு சென்று விட் டதாக வந்து சொன்னார். இடையில் டாக்டர் ச. சிவகுமாரன் வந்த போது அழுகையுடன் முறையிட்டோம். டாக்டர் சரியாகத் தான் சொல்லியிருப்பார் - என்று ஆறுதல் கூறனார் கெஞ்சலுக்கு இரங்கிய நிலையில் நாடி பார்த்து விட்டு முன் கூறியதனையே உறுதிப்படுத்தினார். ஆறுதல் கூறிக் கொண்டிருந்தவர் மெது வாகச் சென்று கண்ணைத் திறந்து பார்த்து விட்டு முன் கூறிய தனையே மீண்டும் கூறினார். (கருவிழிகள் மேல் அல்லது கீழ் சொருகியிருந்தால் நம்பிக்கை வைக்கலாம். உள்ளபடியே கரு விழி நேரே இருந்தால் சிகிச்சையில்லை - என்ற விபரம் பின்னர் அறிந்தோம்) கொழும்புக்கு உறவினர்களுக்கு அறிவிக்க தெலி போன் தொடர்பு கொள்ள முயற்சித்த போது ராணுவ கெடு பிடிகளால் முடியாத நிலையையும் விளக்கி வீடு செல்லுதல் நல்ல தென்று ஆலோசனையும் கூறினார். வைற்கௌஸ் - அம்புலன் சில் வீடு கொண்டு வந்தோம். மறுநாள் வெள்ளிக்கிழமை இறுதிக் கிரியைகள் நடந்தன, வழமையான உப்பாற்றங்கரைமயானத் துக்குக் கொண்டு போக விமானக்குண்டடி பயத்தினால் கிட்ட வுள்ள இராச வீதியருகில் இராசாத்தி சுடலையில் தகனக் கிரியை கள் நடைபெற்றன.

கடித்த கொம்பேறி தகனக் கிரியை முடியும் வரையும் பக் கத்திலுள்ள மரத்தில் ஏறிப்பட்டுப் போட்டிருக்கும் தகனம் முடிந்த பிறகே இறங்கிச் செல்லும் - என்று முதியவர் கூற்றைக் கேட்டு குறித்த இடத்திற்கு மறுநாள் 30.11.90 வெள்ளி காலை வந்தவர்கள் பக்கத்தில் நின்ற மலேசியா மரமொன்றில் மேலே உயரத்தில் கொப்பில் சுற்றிக் கொண்டு பாம்பொன்று இருப்பதனைக் கண்டனர் எறிந்தனர். அது விரைந்து இறங்கி அரவிந்படுத்திருந்த விறாந்தைக்கே ஓடியது. ஆறடி நீளமான கொம்பேறி மூக்கன். அடித்தனர். அருகேயுள்ள மயானத்தில்-தக னக்கிரியைகள் நடக்கவிருக்கும் மயானத்தில் ஆலமரத்தில் தூக்கி யிருந்தனர், தகனக் கிரியைகட்காக நாம் சென்ற போது விபர மறிந்தோம் நாங்கள் அக்கினி மூட்டியதும் நின்ற வயோதிபர் சிலர் தூக்கியிருந்த பாம்பை சுள்ளிகள் கஞ்சல் போட்டு அதன் மேல் போட்டு எரித்தனர்.


பழையவர்கள் வயோதிபர் சொன்ன அனுபவ வார்த்தை கள் பெத்தவும் சரி - என்று தற்போது தான் அனைவரும் புரிந்து கொண்டனர். மகன் அகிலன் தெய்வீகமாகக் கூறியதனை பொருட் படுத்தாதது தவறு என்று பச்சாத் தாபப்படவும் நேர்ந்தது.

1) 25,11.91 அகிலனுடன் மூன்று மாத லீவில் லண்டனுக்கு
சகோதரிகளிடம் செல்ல சகல ஒழுங்குகளும் செய்து யாழ்
ஸ்ரேஷன் சென்ற போது அத்திகதிக்குரிய யாழ் - கொழும்பு
பிரயாணம் ராணுவ பயங்கர நிலைமைகளால் தடைப்
பட்டு 5.12.91ற்கு பின் போட்டதால் திரும்பி வந்தனர்.

2) மேலும் அரவிந். சிவப்புக் கரை போட்ட வெள்ளைச் சேலை
கட்டிக் கொண்டு லோகேஸ் இல்லாது ஊர் வலமாகச்
செல்வது போல் கனாக்கண்டு 15.11,90 லண்டனிலுள்ள
சகோதரி வசந்தி கொழும்பிலிருந்த சகோதரனுடன் தெலி
போன் தொடர்பு கொண்டு சுகம் விசாரித்தறிந்தது.

3) அரவிந்தாவுடன் மிகப்பற்றுதலுடைய அவுஸ்திரேலியா சென்
றிருந்த சோமு மாமி இரண்டு கிழமைக்கு முன்னர் அர
விந்தாவுக்குப் பாம்பு கடித்து விட்டதாகக் கனாக்கண்டு
அடுத்த நாள் கொழும்பிலிருந்த அவர் சகோதரன் மூலம்
தெலிபோனில் சுகம் விசாரித்தறிந்தது - இவை கடித மூலம்
பிந்தியே அறிந்தோம்.

4) அரவிந்தாவுக்குப் பாம்பு தீண்டிய அதே நேரம் லண்டனி
லுள்ள அவர் சகோதரி கிரிஜகுமாரி தாங்க முடியாத நேர,
உடலெரிவு இவற்றால் கஷ்டப்பட்டு கந்தோரிலிருந்து வீடு
சென்றதும், அவ்வீட்டில் தூக்கத்திலிருந்த மைத்துனர்
ஜெயம் - தன்னைப் பாம்பு தீண்டியதாகக் கனாக்கண்டு
அலறியெழுந்து ஆரவாரப்பட்டதும் 29 11.90 வியாழன்
கொழும்பில் தமது சகோதரி வீட்டில் தங்கியிருந்த மைத்
துனர் சிவானந்தன் - அக்கா இடது காலில் பாம்பு கடித்து
விட்டது என்று நித்திரையிலிருந்து பதறியெழுந்து கூறி
யதும் ஆகிய இவைகள் பின்னால் கடித மூலம் அறிய நேரிட்
டன. - இவை சிந்தனைக்குரியவை.





## கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

எமதூர் வாலிபர்கள் கிராமத்தின் வெளியான இடங்களில் சுதேச விளையாட்டுக்கள் தொடர்ந்து கைப்பந்து, உதைபந்து முதலியனவும் தொடர்ந்து விளையாட்டுப் போட்டி என்பனவும் நடத்தி வந்தனர். நிலையானதொரு விளையாட்டிடமமைக்கும் நோக்கமாகவும், அப்படியமைத்தால் அரச உதவி பெற வாய்ப்பு ஏற்படும் என்பதாலும் 11.6,78-ல் கோப்பாயிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் என்பனவற்றை இணைக்கும் நோக்கமாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் வாலிபர்களின் பொதுக்கூட்டமொன்று கூட்டப்பெற்றது மு. பரமலிங்கம், க. இ. குமாரசாமி, அ. சங்கரப்பிள்ளை, மு. நல்லையா, J.S.S. ஆனந்தம் எனும் பெரியார்களின் அறிவுரைகளைத் தொடர்ந்து கோப்பாய் விளையாட்டுக் கழகம் உதயமானது.

தலைவர் செ. கோபாலசிங்கம்

காரியதரிசி இ. இராசசேகரம்

தனாதிகாரி ஆ. சிவகுமாரன் என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட நிர்வாக சபை உருவானது. கழக போஷகராயிருந்த க. இ. குமாரசாமி அவர்களது உதவியோடு நிலையானதொரு விளையாட்டிடமமைக்க முயற்சிக்கப்பட்டது.

சிதம்பரம் செவ்வாய்க்கிழமை மடத்துக்குச் சேர்ந்த கோப்பாய் வடக்கு பண்டார வளவு எனும் காணி 20 பரப்பையும் கோப்பாய் வடக்கு சிகரெற் புகையிலைச் சங்கத்தார் இல 2080- 1.5.1955 சி. கனகரத்தினம் நொத்தாரிசு அவர்களால் 42 வருடக்குத்தகைக்கு எடுத்து சிகரெற் போறணைகள் ஒன்பதும் கட்டிடங்களும் நிறுவி நடத்தி வந்தனர். குறித்த சங்கத்தின் தொழிற்பாடு 1974 அளவில் செயலாற்றிருந்ததாயினும் அவர்கள் பராபரிப்பிலேயே குறித்த காணி இருந்து வந்தது எமது தேவையைக் குறித்த சங்கத்தாரிடம் கூறி அவர்கள் பூரண சம்மதத்துடன் குறித்த சிதம்பரபுண்ணியம் காணி பரிபாலன சபைத் தலைவர் இ. இராமலிங்கம் (மாதகல்), செ. நடராசா - காரியதரிசி (நீர்வேலி) இவர்களிடம் சங்கப் போஷகர் அவர்களுடன் பல நாட்கள் திரிந்து அவர்கள் சம்மதம் பெறப்பட்டது அக்கால விளையாட்டுக் கழகங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் அவர்களது ஆலோசனையின் பேரில் அரச உதவி பெறல் இலகு என்பதாலும் கோப்பாய் கிராமச்சங்க விசேட ஆணையாளர் J.S.

ஆனந்தம் அவர்களது ஆலோசனையுடனும் இல. 10352-18.2 79 நொத்தாரிசு க. சச்சிதானந்தம் அவர்களால் 50 வருடத்துக்கு குத்தகை உறுதி எழுதி முடிக்கப்பட்டது.

மேலும் பரிபாலன சபையாரதும் சங்கத்தாரதும் அனுமதி பெற்று பற்றைகள் வெட்டி, பனைகள் தறித்து காணியைத் துப்புரவாக்கி திருத்தங்களும் செய்து குறித்த காலம் தொடக்கம் எமது விளையாட்டிடமாகத் தொடர்ந்து பாவிக்கப்பட்டு வருகிறது.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலைக்கு விளையாட்டிடமில்லாக்குறையிருந்ததால் கழக அனுமதியுடன் குறித்த இடம் பாவித்து வருகின்றனர். குறித்த காணி எல்லையில் அத்துமீறல் நடக்கத் தொடங்கியதால் குறித்த விளையாட்டிடத்துக்கு நிலையான எல்லையமைக்க - மதில் கட்ட திட்டமிடப்பட்டது. சிகரெற் புகையிலைச் சங்கத்தார் அனுமதியுடன் செயலற்றுக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த போறணைக் கற்களைப் பிரித்து எல்லை மதில் கட்ட முற்பட்டோம். சங்கத்துக்கு ஓர் காரியாலயமமைக்க உதவிக்கும் விண்ணப்பித்தோம் அத்திவாரமும் இடப்பட்டது. அப்போது கோப்பாய்த் தொகுதிக்கு பொதுவானதொரு விளையாட்டிடம் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. விளையாட்டுத் திணைக்கள மேலதிகாரிகள் எமது விளையாட்டுத் திடலைப் பார்வையிட்டும், கோப்பாய்த் தொகுதிக்குப் பொதுவாக நடை பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் எப்போதும் எமது கழகம் முன்னணி வகித்தமையையிட்டும் எமது இடத்தையே தெரிந்து.

## விளையாட்டரங்கம், வலிகாமம் கிழக்கு

எனும் பெயர்ப்பலகையும் தாபிக்கப்பட்டு நடந்து வந்தது.

சென்ற 1987 வன்செயல்களை அண்மித்த முன்னைய மாதங்களில் போராளிகளால் சிறிது தடங்கல் ஏற்பட்டது. விளையாட்டிடத்தின் தென் மேற்குப் பக்கமாக ஓர் கட்டிடம் நிறுவ ஆரம்பிக்கப்பட்டது. எமது போஷகரும் எமது கழகத்தின் நலன் விரும்பிய பெரியார்களும் உடன் சென்று போராளிகள் தலைவரை அணுகி எமது நிலையை விளக்கினோம் விளையாட்டிடம் தொடர அவர் அனுமதி கிடைத்தது. தொடர்ந்து நடந்த வன்செயல்கள் காலத்தில் எமது தொழிற்பாடுகள் தளர்ந்ததாலும், கழகப்பிரதான நிர்வாகிகள் வெளிநாடுகள் செல்ல நேரிட்டதாலும் சிறிது காலம் செயலற்றிருந்தது.



1990 - 91 கோப்பாய் கிராம சபை வேலைத்திட்டமமைக்க உள்ளூராட்சி உதவியாணையாளர் சமுகத்தில் நடந்ததொரு கூட்டத்தில் நிறுவப்பட்ட உப சபையாரும் எமது விளையாட்டிடத்தையே விஸ்தரிப்பதற்கான சிபார்சும் செய்யப்பட்டதறிந்தோம்.

28 4.90-ல் நடைபெற்ற ஸ்ரார் விளையாட்டுக் கழகப் பொதுக் கூட்டத்தில்,

தலைவர் சு. குகதாசன்

செயலாளர் செ. ரஞ்சநாதன்

பொருளாளர் தி. சரவணபவன் உட்பட்ட 18 பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவானது முன்பு தடைப்பட்ட மதில் கட்டுவதற்கும் வேறும் விளையாட்டுத்திடலுக்கான வேலைகள் ஆரம்பிப்பதற்கும் நிதிசேகரிக்க ஆயத்தங்கள் செய்து நிர்வாக சபையில் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன, இந்த நிலையில் மீண்டும் - மறு அறிவித்தல் வரை வேலைகள் தொடங்காமலிருக்குமாறு போராளிகளால் 10.5.90-ல் மீண்டும் பணிக்கப்பட்டது.

எமது கிராம இடப்பரப்பில் மத்தியில் இவ்விடம் அமைந்துள்ளதாலும், எமது விளையாட்டிடத்தைத் திணைக்களத்தார் ஏற்கனவே அங்கீகரித்துள்ளதாலும் கோப்பாய்க் கிராமசபை - உபசபை 1990 - 91 வேலைத் திட்டத்தில் எமது விளையாட்டத்தையே விஸ்தரிப்பதற்காவன செய்யத் திட்டமிட்டு அங்கீகரித்து உள்ளூராட்சியுதவியாணையாளருக்கு மனுச் செய்துள்ளதாலும் இவ்விடத்தைக் கைவிட்டால் எமது கிராமத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட பலருக்கும் மத்தியான இடத்தில் வேறு விளையாட்டிடமமைத்தற்கான காணி பெற முடியாதென்பதாலும், விசேடமாக எமது விளையாட்டிடத்துக்கு அண்மையிலுள்ள 600றகு மேற்பட்ட மாணவர்கள், சுமார் 28 ஆசிரியர்கள் 10-ம் வகுப்பு வரையுள்ள சரவணபவானந்த வித்தியாசாலைக்கு இவ்விளையாட்டிடம இல்லாதொழிந்தால் விளையாட்டுத்துறையை கற்பிக்க முடியாமற் போகுமென்பதாலும்;

எமது விளையாட்டிடத்தை - ஆரம்ப கர்த்தாக்களும், எமக்கு உதவி செய்ய வந்த பெரியார்களும் நாமும் பல நாட்கள் அலைந்து திரிந்து பெரும் பிரயாசையின் பேரில் எடுத்த இடத்தைத் தொடர்ந்து நடத்த விடுமாறு 31.5.90-ல் விண்ணப்பிக்கப்பட்டது. இதனையொட்டி போராளிகள் தலைவரை பிரதான நிர்வாகிகளும் போஷகரும் சென்று விண்ணப்பித்ததன் பேரில், அவர்கள் கேட்டபடி கழகத்தின் வரலாறு முழுவதும்

எழுதிக் கொடுக்கப்பட்டது. ஈற்றில் ஸ்ரார் விளையாட்டுக் கழ
கமும் வித்தியாசாலையின் பாவிப்புக்குமாக பூரண அனுமதி அளிக்
கப்பட்டது.

மேற்கொண்டு சில மாதங்களால் யாருடைய அனுமதியு
மில்லாமல் பிறிதொரு சிறிய ஆலயம் உருவாகி மைதானப் பாவிப்
புக்கும் இடைஞ்சலாக கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. ஆல
யம் உருவாக்கியதான அம்மா உருவாடிச் சாத்திரமும் சொல
லத் தலைப்பட்டதனால் சில மக்கள் அவர் வயப்பட்டனர் இத
னால் பிரச்சினைகள் வளர்ந்தன. போர்க்கால நீதிமன்ற விரா
ரணைகளும் மேல் விசாரணைகளும் நடைபெற்றன. வித்தியா
சாலை முறையீட்டின் பேரில் வித்தியாபகுதி உதவியுடன் விசா
ரணைகளும் நடைபெற்றன. இறுதிக் கட்டத்தில் கோயில் என்
பதால் விளையாட்டுக் கழகத்தாரையும் தலையிடாது பெற்
றார் தடுத்தனர், தொடர்ந்து தலைமையாசிரியர், போஷகர்
தலையீடுகளால் மேல் விசாரணைகள் இரண்டு தவணையில்
நடைபெற்றது. இதுவேளை அடாத்துக்காரர் தூண்டுதல்களால்
எச்சரிக்கைகளும் திட்டுதல்களும் கூட நடைபெற்றன. இறுதி
யில் நியாயம் வென்றது. சாமியம்மாவும் வெளியேறினார். விளை
யாட்டிடத்துக்குச் சார்பாய் தீர்ப்பளிக்கப்பட்டு பொலிஸார் உத
வியுடன் உடனின்று மைதானம் சீர் செய்யப்பட்டு விளையாட்
டுப் போட்டிகள் மைதானத்திலேயே நடைபெறுகின்றன. சைவ
மக்களானபடியால் ஆரம்பத்தின் போது வைரவ கோயிலில்
பிரார்த்தனை வழிபாடுகளைத் தொடர்ந்தே விளையாட்டுப்
போட்டிகள் நடைபெறுகின்றன.

முன்னைய தீர்மானத்தின்படி எல்லைகள் உறுதிப்படுத்தப்
படவேண்டியதும், விளையாட்டிடத்துக்கான காரியாலயம் ஒன்று
அமைக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். இன்றைய அன்
பர்கள் இது விஷயத்தைக் கவனத்திற்கெடுத்துத் தொழிற்படு
வார்களாக.

இவ் விளையாட்டு மைதானத்திற்கு இடைஞ்சலாக தென்
மேற்கில் சிறு கட்டிடமும், தோட்டமும், தொடர்ந்து சிறுவர்
பாடசாலைக் கெனக் கொட்டில், எல்லைக் காணியில் அத்து
மீறல்கள், கிணறு. அதேத்து சாமியம்மாவின் கோயில், மன்று
கள் விசாரணைகள் இவற்றோடு தி டுக்கள், எச்சரிக்கைகள்,
கழக நிர்வாகிகளை பெற்றார் தடுத்தல் இத்தனையும் கடந்து
இம் மைதானம் நிலைப்பதற்கு வித்தியாசாலை அதிபர், தி.
அரசபிள்ளை ஆகியோரின் உதவி என்றும் நினைவிற் கொள்ள
வேண்டியதாகும்.



# கோப்பாய் கிராமச்சங்கம் - பிரதேசசபை

1796-ல் இலங்கை வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் படிப்படியாக சனநாயக அணுகுமுறைகள் உண்டாகின. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் ஆட்சியில் பங்குபெறும் முறைகளும் உண்டாகின. 1927-ல் சேர் ஹென்றி ஹியூகிளிபோட் தேசாதிபதி காலத்தில் இராச உத்தியோகம் பார்த்து வந்த பொலிஸ் விதானைமார் வேதன நியமனம் பெற்றனர். தலைவரி நீக்கப்பட்டு அகற்குப்பதில் கிராமச்சங்க ஏற்பாடுகள் உண்டாக்கப்பட்டன. இந்த வகையில் 1926-ல் கோப்பாய் அரசினர் சாதனா பாடசாலை முன்றிலில் பி.ப 4.00 மணிக்கு வடமராட்சி - வலிகிழக்குப்பகுதி வேலுப்பிள்ளை மணியகாரன் (கரவெட்டி) தலைமையில் முதலாவது கிராமச்சங்கத் தேர்தல் நடைபெற்றதனை அப்பாடசாலை மாணவனாக இருந்த யான் நேரில் அவதானித்துள்ளேன். கோப்பாய் முழுவதிலுமிருந்து திரளகக் கூடியிருந்த வாக்குரிமைக்குத் தகுதியான வாக்காளப் பெருமக்களால் கிராமச்சங்கத்திற்கான அங்கத்தவர்கள் பெயர்கள் முன்வைக்கப்பட்டு கையுயர்த்தி சம்மதவாக்குகள் பெறப்பட்டு பின்வரும் பன்னிரண்டு அங்கத்தவர்களும். அவர்களால் தலைவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

1. ஆர். எஸ். வீ. முத்துத்தம்பி
2 E. மயில்வாகனம்
3. S, V. சிதம்பரப்பிள்ளை
4. க இளையதம்பி
5. வீ சரவணமுத்து
6 க. வைத்தியலிங்கம்
7. V. சின்னத்தம்பி
8. M. சேனாதிராசா
9. V. தாமோதரம்பிள்ளை
10. V. முத்துக்குமாரு
11. E. பொன்னையா
12. K. முத்து மயில்வாகனம்

தலைவர்: ம. இரத்தினசிங்கம் - நியாயதுரந்தரர்.

முதன் முதல் சனநாயக முறையில் பங்குபற்றியதில் மக்களுக்குள் ஆரவாரமும் குதூகலமும் கரை புரண்டோடியதையும் பார்த்தேன். மாதமொருமுறை சனிக்கிழமைகளிலே சாதனா பாடசாலையிலேயே கூட்டங்கள் நடைபெற்றன. அரசகொடை, கிராமவரி போன்றனவற்றின் வருமானத்தையொட்டி வருடமொருமுறை உள்ளூர் பராமரிப்புச் செலவினங்கள் திட்டமிடப்பட்டு அரச அங்கீகாரத்துடன் ஒப்பந்த முறையில் செய்யப்பட்டன. பாதைகள் திருத்தம், சிறுநீர்ப்பாசனவசதிகள் செய்தல் முத

லானவற்றில் ஈடுபட்டதனால் மக்கள் நன்மதிப்புக் கிடைத்தது. மூன்று வருடத்துக்கொருமுறை தேர்தல் நடைபெறும் ஒழுங்கிருந்தது.

பின்னால், கோப்பாய் கிராமச் சங்க இடப்பரப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | வராம்பத்தை | 6. | இருபாலை |
| 2 | இலகடி | 7: | கோப்பாய் தெற்கு |
| 3. | தியர்வத்தை | 8. | கட்டப்பிராய் |
| 4, | நாவலடி | 9. | நாயன்மார்கட்டு |
| 5. | பழந்தெரு | 10. | கல்வியங்காடு |

ஆகிய பத்துவட்டாரங்களாக்கப்பட்டு, தேர்தல்கள் வட்டார ரீதியாக நடைபெற்றன. அங்கத்தவர்கள் கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களாவது இருக்கவேண்டுமென்பது கட்டாய விதியாயிருந்தது; 1932 அங்கத்தவர் தேர்தலில் கோப்பாய் வடக்கு அங்கத்தவர் ஒருவர் மேல்கொண்டுவரப்பட்டு எழுதுவித்து உறுதியாக்கப்பட்ட பின்னரேதான் அவர் அங்கத்துவம் ஏற்கப்பட்டது.

தலைவர் இரத்தினசிங்கம் சிவில் நியாயதுரந்தராயிருந்த படியால் காணிப்பிரச்சினைகளை நன்கு விளக்கிச் சமரசமாகப் பல முறையீடுகளைத் தீர்த்து வைத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். இதனாலவர் தொடர்ந்து 1935 வரை மூன்று முறை தலைவராகும் வாய்ப்பு ஏற்பட்டது.

1935-ல் நடந்த தேர்தலில் நியாயதுரந்தரர் ச. சுப்பிரமணியம் தலைவரானார். இவரும் தொடர்ந்து 1938 1944-ல் தேர்தல்களிலும் தலைவரானார். கிராமச் சங்கத்திற்கு நிலையானதொரு கட்டிடமைக்க உளங்கொண்டு தமது தாயார் திருமதி பரமநாயகம் சண்முகம் அவர்கள் பெயரால் தற்போதைய கிராமச் சங்கக் கட்டிடமுள்ள காணியை நன்கொடையாகக் கொடுப்பித்தார். அரச உதவி பெற்று உள்ளூராட்சி உதவியாணையாளராகவிருந்த கோப்பாய் அதிகாரி நாகநாதர் கனகநாயகம் மகன் சூரியகுமாரன் அவர்களால் அத்திவாரமிடப்பட்ட கட்டிடம் 1.4.48-ல் திறப்பு விழாவும் நன்கு நடைபெற்றது.

கோப்பாய் நாற்சந்திக்கு அருகாமையிலுள்ள காணியை நன்கொடையளித்து தற்காலிக கட்டிடம் நிறுவி சந்தையை ஆரம்பித்து வைத்தார். கோப்பாய்க்கென அரச உதவியுடன்



செய்விக்கப்பட்ட மையவண்டிலுக்கான நிலையானதொரு சிறிய கட்டிடமமைக்க குறித்த சந்தைக்கு விடப்பட்ட காணியில் கிழக்குப் புறமாய் உரிய நிலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. இன்று வரை மையவண்டில் பாதுகாப்பாக உரிய இடத்தில் விடப்படுவது பாவனையாளர் பலருக்கும் வசதியாயமைந்துள்ளது. கோப்பாய் அரசினர் ஆஸ்பத்தி நிறுவ இவரது ஆரம்ப முயற்சிகளே பெரிதும் உதவின. (குறித்த விபரம் இந்நூலில் பிறிதோரிடத்தில் உண்டு)

26.8.1927-ல் வந்த றோயல் கொம்மிஷன் சிபாரிசுப்படியான டொனமூர்த்திட்டம் 1931-ல் வெளியானது. இதன்படி 19.4.31-ல் சட்ட நிரூபண சபை கலைக்கப்பட்டு 13.6,31-ல் அரசாங்க சபைத் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| வாக்காளரால் தெரிவு செய்யப்பட்ட | 50 பிரதிநிதிகள் |
| அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட | 8 பிரதிநிதிகள் |
| அரச உத்தியோகத்தர் | 3 பேர் - 61 பேர் |

கொண்ட அரசாங்கசபை செயலாற்றத் தொடங்கியது. சமூக ரீதியான சம ஆசனம் சம போசனம், அரசினர் ஆசிரியர் போன்று உதவி நன்கொடை பெறும் ஆசிரியர்கட்கும் உபகாரவேதனம் போன்றன கல்வியுலகிலும் ஆரம்பிக்கப்பட்டன. பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டு 16.11 31-ல் நடந்த தேர்தலின் போது திருமதி அடெலின்மொலமுறே முதலாவது அரசாங்க சபை பெண் அங்கத்தவராகவும் தெரிவானார் இவற்றால் கிராமங்களிடையேயும் சமூக ரீதியான பல மாற்றங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து உள்ளூர் அரசியல் நிலைகளிலும் மேலும் மாற்றங்கள் உண்டாயின யாழ் - மாவட்டத்தில்;

I பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி முதலான நகரசபைகள் - 4 உம்

II சுன்னாகம், நெல்லியடி, பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மானிப்பாய், உரும்பராய் முதலான பட்டினசபைகள் - 9 உம்

III கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி கைதடி, மட்டுவில், கொக்குவில் முதலான கிராமசபைகள் · 49 உம்

தொடங்கிச் சேவையாற்றின, எமது கோப்பாய் கிராமச் சங்க இடப்பரப்பில் பிரதானமான சந்தை வருமானம் கூடிய

வியாபார நிலையங்கள் போன்றவை இல்லாமையால் வருமானம் குறைவு அதனால் கிராமசபையாகவே தொடர்ந்தும் நடைபெற்று வந்தது கிராமசபையினர் இணக்க முறை செய்தலில் பெரிதும் உதவினர் காணிப்பிரச்சினைகள் எல்லைத் தகராறுகள் போன்றனவற்றை தலைவர் உள்ளிட்ட குழுக்கள் உரிய இடம் சென்று விசாரித்து இரு பகுதியினரையும் சமரசப்படுத்தித் தீர்த்து வைத்தனர் இது மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. சிறு பிணக்குகளுக்கும் நீதிமன்றம் போய் பல தவணைகள் அலைந்து திரிந்து நேரத்தையும் வீணடித்துச் சட்டத்தரணிகட்கு பல தவணைகட்கு வேதனமும் கொடுத்து தமக்குள் குரோதங்களை வளர்த்துக் கொள்ளாத சமாதான வாழ்வு பெற இம்முயற்சி உதவியது. இம்முயற்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைக்கும் அங்கத்தவர்களையும் தலைவர்களையும் மக்கள் நன்கு மதித்து நடந்தனர்

மேலும் கிராமச் சங்கத்தின் பெரும்பணிகளிலொன்றாக பெரு நன்மை விளைத்துள்ள தொன்று சுத்திகரிப்பு வேலையாகும். 1920 அளவில் மக்கள் காலைக்கடன்களை வெளியான இடங்களில் பற்றைமறைவுகளில் குளக்கரைகளிலும் அதிகாலையில் கழித்தனர். இதனால் தொற்று நோய்கள் இலேசாகப் பரவவும் கொழுக்குப் புழுவியாதி போன்றனவற்றாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கிராமசபைகள் ஆரம்ப காலத்தில் 1930 காலப் பகுதியில் அரசின் கட்டாயத்தின் பேரிலும் சுகாதாரப் பகுதியாரின் அறிவுறுத்தலின் பேரிலும் குளிக்கற்கூசுகள் கண்டிப்பாகக் கட்டப்பட்டுப் பாவிக்கப்பட்டன இதிலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்கில் வாளிக்கற்கூசு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கோப்பாய் கிராமசபை இதனை சுகாதார பரிசோதகர்கள் உதவியுடன் நன்கு செய்தது 10ற்கு மேல் தொழிலாளர்களும் வண்டிகளும் இருந்தமையால் சீர்பட நடந்தது. குறித்த தொழிலாளர்கட்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அரசின் புதிய நடைமுறையில் சல அடைப்புக் கற்கூசு முறை வந்த பிறகு சுத்திகரிப்புத் தொழிலாளர் நடைமுறை அருகியது. அரசியலில் அரசாங்க சபை கலைக்கப்பட்டு பாராளுமன்ற முறை ஆரம்பித்த போது தொகுதிகள் மேலும் 50 லிருந்து 75 வரை கூடி வந்துள்ளன. இது போன்று கிராம சபை வட்டாரங்களும் 10 விருந்து கூட்டி பின்வரும் 15 வட்டாரங்களாயின.



| | | |
|---|---|---|
| வராம்பத்தை | நாவலடி | மடத்தடி |
| இலகடி | கொங்கமை | கோப்பாய் தெற்கு |
| அரசடி | வீரபத்திர கோயிலடி | கட்டப்பிராய் |
| கோயில் வட்டாரம் | இருபாலை கிழக்கு | கல்வியங்காடு |
| பிள்ளையார் கோவிலடி | இருபாலை | நாயன்மார்கட்டு |

பெரும்பாலும் கிராமச்சங்க அங்கத்தவர் போட்டியில்லாமலே தெரிவு செய்யப்பட்டு வந்தனர். கிராமச்சங்கத் தலைவராக விரும்புவோர், தமக்குச் சாதகமான அங்கத்தவர்களைச் சேர்க்கும் நோக்கிலான போட்டிகள் சிலவும் நடைபெற்றன. பாராளுமன்றத் தேர்தல் முறை வந்த பின்னர் பாராளுமன்றத் தேர்தல்களில் கட்சி முறையான தேர்தல் ஆரம்பமான போது இவ்விடம் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசு ரீதியான தேர்தல்கள் போட்டிகள் நிலவின. கிராமச் சங்க தேர்தலிலும் அரசியல் நுழைந்து போட்டிகள் ஏற்பட்டன. இந்த வகையில் தலைவர் ரீதியாக ஓரளவு அரசியல் நிலவியதெனலாம். 31.12.79 உடன் கிராமச் சங்க நடைமுறை கலைக்கப்பட்டு 1980 விருந்து அபிவிருத்திச் சபை முறை நடைமுறைக்கு வந்தது 1926 விருந்து கிராமச் சங்கத் தலைவராயிருந்தவர்களும் அவர்கள் காலப் பகுதியும்

| | தலைவர் | காலப்பகுதி |
|---|---|---|
| திரு. | ம. இரத்தினசிங்கம் | 1926 - 32, 41 - 44 |
| | ச. சுப்பிரமணியம் | 3,9.35 - 41, 44 - 47 |
| | அ. ஆறுமுகம் | ... |
| | நா. அருளம்பலம் | 8.11.52 – 56 63 |
| | பொ. திருஞானசம்பந்தர் | 10 8.63 – |
| | த. சின்னத்துரை | |
| | ... | |
| | கே, வி எஸ், சண்முகநாதன் | 8.1.64 - 68 |

தி. பரமானந்தராசா 16.11,69 விருந்து – 1979 முடிய கிராமச் சங்கத்தின் தற்போது கிடைத்த ஆவணங்களிலிருந்து தலைவர்களாயிருந்தவர்களின் கால அட்டவணை விபரமாகப் பெற முடியவில்லை. மேலும் 1947 - 52, 1956 - 63 காலத்துக்குரிய கூட்ட வரலாற்றுக் குறிப்புக்களும் காரியாலயத்தில் இல்லை கிடைத்தன கொண்டே ஓரளவு குறிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கு, இருபாலை, நாயன்மார்கட்டு மயானங்களில் மடங்கள் நிறுவப்பட்டு நன்கு நிர்வாகிக்கப்பட்டு வந்துள்ளன. மேலும் கோப்பாய் வடக்கு, இருபாலைச் சந்தியிடங்களில் தற்காலிக கட்டிடங்கள் நிறுவப்பட்டு சந்தைகள் நடத்தப்பட்டன. மேலும் குளங்கள் நீர்ப்பாசன வாய்க்கால்கள் புதுக்கல், புதிய பாதைகள் திறத்தல், அகழ்வித்தல், செப்பனிடல் போன்ற காரியங்களிலும் பிரதி வருடமும் நிதியொதுக்கீடு செய்து பராபரித்து வரப்பட்டுள்ளது. சுகாதாரப் பகுதியாருடைய உதவியுடன் கிணற்று நீர் சுத்தம், பொதுக்கிணறுகள் அமைத்துக் கொடுத்துப் பராபரித்தல் ஆகிய வேலைகளும் நன்கு நடைபெற்றன

தி. பரமானந்தராசா தலைவராயிருந்த போது இடையில் இந்தியா சென்றிருந்தார். அவ்விடம் அவதானித்து வந்ததனையொட்டி;

'கோப்பாய் கிராமசபை வரவேற்கிறது' - என்று பொறிக்கப்பட்ட பெரிய பலகைகள்.

1. நாயன்மார்கட்டு - செம்மணி எல்லையில்
2. கோப்பாய் - நீர்வேலி (எல்லையில் - பூதர்) மடத்தடியில்
3. கோப்பாய் - உரும்பராய் எல்லையில், குமாரிபோடை தோட்டத்திற்கு அருகு வீதியில்.
4. நல்லூர் - கோப்பாய் எல்லையில் வில்லுமதவடியில் நாட்டினார் நமது கிராமத்திற் கூடாகப் பிரயாணஞ் செய்யும் வெளியூர் அன்பர்கள், யாரையும் கேட்காது கோப்பாய் இடப்பரப்பைக் கடந்து செல்ல இரு பக்கமும் துலாம்பரமாக எழுதித் தூக்கிய பலகை பெரிதும் உதவியது. இது பலரதும் பாராட்டைப் பெற்றுக் கொடுத்தது.

கோப்பாய் இடப்பரப்பில் நிலையானதொரு விளையாட்டிடமில்லாக்குறை நீண்ட காலம் நிலவியது. கோப்பாய் வடக்கு, கல்வியங்காடு இரு இடங்களிலும் நிலங்கள் தெரியப்பட்டன. வசதியான முடிக்குரிய நிலமாயிருந்ததால் ஞானபாஸ்கரோதய உதவியுடன் கல்வியங்காட்டில் உரிய விளையாட்டிடம் அமைக்கப்பட்டு இரு பக்கங்களிலும் உரிய பெயர்ப் பலகைகளும் நாட்டப்பட்டன. இது பரமானந்தராசாவின் நினைவுச் சின்னமாக இன்றும் விளங்குகிறது.

அரசியல் மாற்றங்கள் ஆளுங்கட்சி மாற்றங்கள் ஏற்படும் போது உள்ளூர் அரசியலிலும் தாக்கங்கள் ஏற்படுவது இயல்பு.



பாராளுமன்றத்தில் சர்வவல்லமையுடைய ஜனாதிபதி முறை ஏற்பட்டது போன்று உள்ளூர் அரசியலிலும் தாக்கங்கள் ஏற்பட்டன. 1.12.79-ல் கிராமச் சங்க நடைமுறை நீக்கப்பட்டு மாவட்ட அதிபரின் கீழ் அதிகாரசபை முறை ஏற்படுத்தப்பட்டது. இந்த வகையில் யாழ் மாவட்டத்தில் 54 அதிகாரசபைகள் ஏற்படுத்தப்பட்டன. கோப்பாய் சபைக்கு J. S. S. ஆனந்தம் அவர்கள் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கிராமசபைக் காரியங்களைச் சிறப்படையச் செய்ததன்றி கோப்பாயில் நிலையானதொரு சந்தை நிறுவுவதற்காக விண்ணப்பித்து அரசின் உதவியும் பெற்றார். புதிய இடத்தில் நிறுவுதற்கான முயற்சிகள் நடந்த போது சிலர் ஆட்சேரித்து மனுச்செய்தனர். உரிய விசாரணை முடிந்து தீர்ப்பு அளிக்கும் வரை காத்திராமல் - காத்திருந்தால் ஒதுக்கிய காசு காலங்கடந்து பயனற்றதாகவும் போகலாம் - என்பதால் பழைய சந்தையிடத்திலேயே கட்டடம் நிறுவப்பட்டு சந்தை நடந்து வருகிறது. 1983 அளவில் நாற்சந்திக்கும் பூதர் மடத்துக்குமிடையில் ராணுவம் நிலை கொண்டிருந்தது. சனங்கள் வடக்கு நோக்கி அகதிகளாக ஓடினர். பல கட்டிடங்கள் சேதமடைந்தன. இதே நேரம் இராச வீதிச் சந்தியில் நிலை கொண்டிருந்த இந்திய ராணுவத்தால் கமத்தொழிற் சேவை நிலையக் கட்டிடம் முற்றாக நாசமாக்கப்பட்டது. 1990 மார்கழி 31 உடன் இந்திய ராணுவம் முற்றாக வெளியேறிய போது குறித்த சந்தைக் கட்டிடம் ஓரளவு சிரமைக்கப்பட்ட போதும் அவ்விடம் சந்தை நடைபெறும் சூழ்நிலை இருக்கவில்லை. உரிய கட்டிடத்தில் விவசாயத்திணைக்களமும் கமத்தொழிற் சேவை நிலையமும் இன்று வரை நடைபெற்று வருகின்றன.

யுத்த கால நெருக்கடிகள் ஓரளவு தணிந்த பிறகு கிராமசபைக் கட்டிடத்திலேயே அதிகார சபை நடைபெற்று வழமையான காரியங்களைச் செய்து வந்தனர். மேற்கொண்டு அரசியல் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு மாகாண சபைகள் ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது. உள்ளூராட்சி முறைகளிலிருந்து வந்த அதிகார சபை நீக்கப்பட்டு 1.6.89லிருந்து பிரதேச முறை கொண்டு வரப்பட்டது. இந்த வகையில் யாழ்-பிரதேசத்தில் தொகுதிகட்கொன்றாக 13 சபைகளில் வலி-கிழக்கு பிரதேச சபையும் ஒன்றாகியது. இதில் கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, உரும்பராய், ஊரெழு ஐந்து அதிகார சபைகள் இணைக்கப்பட்டு நீர்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு நடக்கிறது. குறித்த ஐந்து பிரிவுகட்கும் ஐந்து பொறுப்பதிகாரிகளுனர். கோப்பாய் பிரதேச செயலர் கேதீஸ்வரன் அவர்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகவும் மு. க. குண

பாலசிங்கம் அவர்கள் பிரதேசசபைச் செயலாளராகவும் உளர் கோப்பாய்ப் பிரதேசத்துக்குப் பொறுப்பதிகாரியாக செல்லையா குகதாசன் அவர்கள் திறம்படச் சேவையாற்றுகிறார். பிரதம விகிதர் யே. ஞானப்பிரகாசம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் இ. பரமேஸ்வரன், பொதுசனத் தொடர்பு அதிகாரி ச. கந்த இராசேஸ்வரன் உள்ளிட்ட 24 பணியாளர்கள் சேவையாற்று கிறார்கள். இவர்கள் அனைவரும் அரச ஊழியர்; வருமானம்: ஆதன வரி மதிப்பீட்டில் 6%, வாகனவரிகள் — பைசிக்கிள் 5/=, வண்டில் வரி, சந்தை வரி என்பன வியாபார நிலையங்களினி ருந்து ரூபா 25/= லிருந்து 750/= வரை களியாட்டவிழா வரியு முண்டு

மின் வினியோகம் 1962-ல் நாவலடி, இருபாலைச்சந்தி, இரு இடங்களிலும் மின் உபநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு சிராக நடைபெற்று வந்தது, பின்னர் இராச வீதிச் சந்தியிலும் ஒரு உப நிலயம் ஸ்தாபிதமானது, 1987 குண்டடியால் இராச வீதி மின் சார நிலையம் ராணுவத்தால் அழிக்கப்பட்ட பின் கிராமம் முழு வதும் இருள் மண்டிக்கிடக்கிறது, (1.1.95)



# வித்தியாசாலைகள்

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

1801-ல் ஆங்கிலேயர் வருகையைத் தொடர்ந்து ஆங்கிலேய, அமெரிக்க, மெதெடிஸ்த மிஷனருமாரும் வந்தனர். யாழ்ப்பாணம் வந்தவர்கள் ஆலயங்களை நிறுவி அயலில் ஆங்கில பாடசாலைகளும், தொடர்ந்து சுதேச பாடசாலைகளையும் நிறுவிக் கல்வி வளர்ச்சியிலும் ஈடுபட்டனர். 1841-ல் வருகை தந்த ஜே. ரி. யோன்ஸ் எனும் ஆங்கிலப் பாதிரியார் நல்லூரில் ஆலயமும் சுண்டிக் குளியில் சென்ற்யோன்ஸ் கல்லூரியும் ஸ்தாபித்தார். தொடர்ந்து நல்லூரில் நிறுவப் பட்ட பெண்கள் கல்லூரி சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. மேலும் பாதிரிமாரால் கோயிற் பற்றுக்கள் தோறும் ஆலயங்களும் பாடசாலைகளும் நிறுவப்பட்டன.

கோப்பாய் பாதிரியார் வளவில் சென்ற்மேரிஸ் தேவாலயமும் அதன் அருகில் C. M. S. ஆங்கிலப் பாடசாலையும் நிறுவப்பட்டன. மேலும் சுதேசிகளின் அடிப்படைக் கல்வியை வளர்க்கும் நோக்கமாய் குறித்த பாதிரியார் வளவின் தென் மேற்குப் புறத்தில் ஆரம்பப் பாடசாலையும் நிறுவப்பட்டது.

இலங்கையில் ஆங்கில மொழியாசிரியர்க்கான பயிற்சியளிக்க கொழும்பில் கல்லூரியொன்று நிறுவப்பட்டது போன்று, சுதேச மொழியாசிரியருக்கான பயிற்சியளிக்கும் நோக்கில் குறித்த பாதிரியார் வளவில் ஐக்கிய போதனா பயிற்சிக் கல்லூரியொன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

## கோப்பாய் C. M. S. ஆங்கிலப் பாடசாலை

தற்போதுள்ள கிறிஸ்தவக் கல்லூரியின் 125 ஞாபகார்த்த மண்டபம் அமைந்துள்ள இடத்தில் முன்னையC. M S

ஆங்கில பாடசாலையிருந்தது. J. S. C. வரை படித்துச் சித்தி
யடைந்தவர்கள் அரச கருமமொழி ஆங்கிலமாக விருந்தமையால்
அரசாங்க லிகிதர்களாகச் சேர வாய்ப்பிருந்தது. மேலும்
தொடர்ந்து படிக்க விரும்பியோர் சென்ற் யோன்ஸ் கல்லூரிக்கு
அல்லது அயலிலேயுள்ள நகரப் புறக் கல்லூரியொன்றுக்குச்
சென்று S S C, வரை படிப்பர். இப்பாடசாலையில் அயற் கிரா
மங்களிலிருந்தும் வந்து பலர் படித்தனர். வசதி படைத்தவர்
களின் பிள்ளைகள் தான் சம்பளம் கட்டிப் படிக்க முடிந்தது
1920 காலப் பகுதியில் கோப்பாய்க் கிளுவானையைச் சேர்ந்த
இரத்தினாதிக்கம் என்பவரே தலைமையாசிரியராக விருந்ததாகவும்
இவரது குடும்பத்தினரே அக்காலத்தில் CMS பாடசாலைகளின்
முகாமையாளர்களாக விருந்ததாகவும் அறியக் கூடியதாயுள்ளது
இவருக்குப் பின் 1924 காலப்பகுதியில் இருபாலையைச் சேர்ந்த
ஜே. பி செல்லையா தலைமையாசிரியரானார். இவரது பீடு
நடையும் தூயதோற்றப் பொலிவும் மட்டான பேச்சும் குற்ற
மிழைத்த மாணவருக்குக் கொடுக்கும் உறுத்தலும் மாணவர்
களைக் கீழ்ப்படியவும் பின் பற்றவும் வைத்தன, 300 மாணவர்
வரை படித்தனர். காலை 9 — 4 இரு நேரப் பாடசாலையாக
நடைபெற்றது. மாலை வேளைகளில் சைப்பந்தாட்டம் பிரதான
மாக நடைபெறும். உதவியாசிரியர்களாக சங்கரப்பிள்ளை (நுணா
வில்) இரத்தினவரதர் (நுணாவில்) J. இரத்தினம் (வாணி) திரு.
திருமதி உவில்லியம் குடும்பத்தார் நீண்ட காலம் சேவையாற்றி
னர். இது சென்ற்யோன்ஸ் கல்லூரிக்கு ஆதார பாடசாலை
யாகவே நடைபெற்றது.

## கோப்பாய் C.M.S ஆரம்ப பாடசாலை

மேற்குறிந்த CMS ஆரம்ப பாடசாலையில் 1920 அளவில்
யான் படித்தேன். இப் பாடசாலையில் 5-ம் வகுப்பு வரை கற்பிக்
கப்பட்டது. 250 மாணவர் வரை அப்போது படித்தனர். கோப்
பாய் வடக்கைச் சேர்ந்த சாவை சின்னப்பா உபாத்தியாயரே
தலைமையாசிரியராக விருந்தார். கணிதம் வாசிப்பு எழுத்து கிறீஸ்
தவம் என்பனவே படிப்பிக்கப்பட்டன. திருமதிகள் சின்னப்பிள்ளை
சின்னப்பா, முத்துப்பிள்ளை (தெல்லிப்பழை) எனும் ஆசிரியை
களும் பீதாம்பரம் — ஏழாலை, வைத்திலிங்கம் - ஏழாலை எனும்
ஆசிரியர்களும் படிப்பித்தனர். அனைவரும் கிறீஸ்த ஆசிரியர்
களே சிலேற்றும் பென்சிலுமே படிப்பு உபகரணங்களாயிருந்தன.
அரிவரி தொடங்கும் போது மணலில் கையைப் பிடித்து எழுத



ஆசிரியை கற்பிப்பார். இவ்வாறு 30 எழுத்துக்களும் எழுதிப்படிக்
கப்படும். எழுத்துப் பழகிய பின்பே சிலேற்று. சமயபாடப்
பரீட்சைகளில் சித்தியடைதோருக்கு சாரம், சட்டை பரிசாகக்
கொடுக்கப்படும். கூடுதலான வீதமாக ஆண்பிள்ளைகளே படித்
தனர். 5-ம் வகுப்புச் சித்தியடைவோர் சிலர் ஆங்கிலப் பாட
சாலைக்குச் செல்வர், அப்பாலுள்ள நாவலர் பாடசாலைக்கும்
சிலர் செல்வர். பலரது படிப்பு 5-ம் வகுப்புடன் முடிந்து சுருட்டு
வேலைக்கு அல்லது பெற்றோருக்கு உதவியாக தோட்டம் செல்
வர்.

கரும்பலகையில் கணக்கு எழுதியதும், பார்த்து சிலேற்றில்
எழுதிச் செய்து அடிக்கப்படும். சரி பிழை போடப்படும் பிழை
விட்டவர்கள் பெரியசாய்ப்பு மேசையின் கீழ் குனிய விட்டு முது
கில் விட்ட பிழை ஒவ்வொன்றுக்கும் பொன்னொச்சித் தடியால்
அடி. அயலிலேயுள்ள தாளாங்கலட்டியில் பொன்னொச்சி மரங்
கள் நன்றாக வளர்ந்திருந்தன. இரத்தக் கசிவும் ஏற்படும். வீடு
சென்று காட்டினால் கல்வியெனும் பயிருக்கு கண்ணீர் தேவை
தான் என்பதோடு முடிந்து விடும் இது அக்காலச் சாதாரண
வழக்கம் ஆசிரியைகள் தண்டிப்பதில்லை. தண்டித்தாலும் கையை
நீட்டச் செய்து உள்ளங் கையில் குற்றங் கட்கு அடிப்பர். அடிக்குப்
பயம் பாடசாலை செல்லாது வீட்டில் நின்றால் பெற்றோருக்குப்
பயம். ஆகையால் பாடசாலை புறப்பட்டு இடையில் ஒழிப்பவர்
களுமுண்டு. ஒழிப்பவர்களை ஆசிரியர்களை விட்டுத் தேடிப் பிடிப்
பதுமுண்டு பாடசாலையின் மாணவர் சராசரி வருகை வீதம்
அக்காலத்தில் பிரதானமானது (அதற்குத் தகவே அரச உத
விப் பணம் கிடைக்கும்) இன்று இப்படி அடி விழுந்தால்...

## கோப்பாய் ஐக்கிய போதனா வித்தியாசாலை

ஆங்கிலப் பாடசாலை - ஆதார பாடசாலை இரண்டிற்கும்
நடுவில் (தற்போதய நவரத்தினராசா விளையாட்டிடத்துக்கு மேற்
குப் பக்கமாய்) போதனா வித்தியாசாலை எனும் ஆசிரிய பயிற்
சிக் கலாசாலை நடந்தது. 1920 அளவில் யா/காரைதீவு திரு.
இளையதம்பி உபாத்தியாயர் அதிபராகவும், திரு. ஜேம்ஸ் உதவி
யதிபராகவுமிருந்தனர். உதவிப்பேராசனாக கோவிந்தபிள்ளை
(புலோலி) என்பவரிருந்தார். இவர் வேட்டி சால்வை வெள்ளை
யங்கி முக்குறி கொண்ட சைவத் தோற்றமாகவே காட்சியளித்த
னையும் பார்த்துள்ளேன். அயலேயுள்ள ஆரம்பப் பாடசாலை
இப் போதனாலயத்தின் சாதனா பாடசாலையாகவிருந்தது.

பாதிரியார் வளவில் அங்கு பயிலும் கிறீஸ்தவ மாணவர் கட்கு விடுதி வசதியிருந்தது. ஆரம்பத்தில் சைவ மாணவர்களும் அங்கேயே தங்கிப் படிக்க நேர்ந்தது. குறித்த வித்தியாசாலைக்கு தெற்குப் புறமாய் 200 யார் தொலைவிலுள்ள நாவலடியில் சைவப் பெரியார் சிவசுப்பிரமணியம் (கோப்பாய் பா. உ. கதிர வேற்பிள்ளை தந்தையார்) அவர்களது வீட்டில் சில சைவப் பெரி யார்கள் பெரு முயற்சியால் சிலகாலத்தின்பின் சைவவிடுதி நடை பெற்றது. 1924-ல் குறித்த போதனா வித்தியாசாலையிடத்தில் பெண்களுக்கான விடுதிப் பாடசாலை நடத்தும் ஒழுங்கால் போத னாசாலை தெல்லிப்பழைக்கு மாற்றப்பட்டது குறித்த போத னாபாடசாலையில் பயிற்சி பெறுவோரில் கூடிய வீதமானோர் கிறீஸ்தவர்களாகவோ அல்லது பயிற்சிக்காக கிறீஸ்தவ சமயத் திற்கு மாற்றப்பட்டவர்களாகவோ இருந்தனர்.

## கோப்பாய் C M S பெண்கள் பாடசாலை

ஐக்கிய போதனா வித்தியாசாலைக் கட்டிடம் பழமையா வது. செங்கற்களாலான சுவர், பழைய கால பீலியோட்டு வேய்ச் சல் சுமார் 5000 ச.அடி பரப்பளவுடையது. இந்த இடத்தில் பெண்கள் பாடசாலை ஆரம்பமானதும் கிராமத்திலும் அயற் கிராமங்களிலுமிருந்து வந்து கூடுதலான மாணவிகள் படித்தனர். அநாதை மாணவிகளும் தங்கியிருந்து படிக்க வசதியாக விடுதி வசதிகளும் உண்டாக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் களான விற்னியம்மாவும் தொடர்ந்து உவெஸ்லியம்மாவும் அதி பர்களாகவிருந்தனர். பின்பு ஹட்சின்ஸ் அம்மையார் அதிபரா னார், இவர் ஓர் சிறந்த ஆசிரியையும் நிர்வாகியும், இவர் காலத்தில் 500றக்கு மேற்பட்ட மாணவியர் படித்தனர் S S C வகுப்பு வரையும் இருந்தது விடுதியில் 200 மாணவியருக்கு மேல் தங்கியிருந்து படிக்கத்தக்க கட்டிட வசதிகளும் செய்யப்பட்டன. பிறிதாக தையல் வகுப்புக்களும் நடத்தப்பட்டன. திருமதி கன கம்மா சிறந்த விடுதி மேற்பார்வையாளராக விருந்தார் திருமதி முத்தாச்சி டானியல் சிறந்த தலைமையாசிரியராகச் சேவையாற் றினார், இவ்விடமே பெண்களுக்கான ஆசிரிய பயிற்சிக் கல்லூரி யும் ஆரம்பிக்கப்பட்டதால் பல கிறீஸ்தவ பயிற்றியாசிரியைகள் இவ்விடமிருந்து வெளியேறினர் திருமதி முத்தாச்சியம்மையார் முழு நேரத்தையும் S S C கற்பித்தலிலேயே ஈடுபடுத்தியதால்



இவ்விடம் பலர் S S C சித்தியடைந்து பயிற்சியாசிரியராக வெளி யேறும் வாய்ப்புக் கூடியது. இவரது காலம் பெண் பாடசாலை யின் பொற்கால மெனல் மிகையாகாது.

> " எனக்கு புத்திரர் இல்லா விட்டாலும் எனது மாணவச்
> செல்வங்களை இன்று நன்னிலையில் காணும்
> பெரும் பாக்கியமுடையேன் " —

என்று அவரது பிரியாவிடை வைபவத்தின் போது ஆனந்தக் கண்ணீருடன் கூறி நன்றி தெரிவித்தார்.

குறித்த பெண்கள் பாடசாலையின் விடுதி மாணவர், ஆசிரி யைகள் அதிபருடன் பிரதி ஞாயிறு தோறும் வீதி வழியாக தூய வெண்ணிற ஆடைகளுடன் பிற்பகலில் 4 மணியளவில் இரண்டு நிரையாகவும் ஒழுங்காகவும் அண்மையிலுள்ள கடற்கரை சென்று தங்கி பி. ப. 6 வரையில் திரும்பி வருவதும் பாடசாலை காலத் தில் நடை பெறுவதுண்டு. இடையிடை ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயகுரு, ஹட்ன்ஸ் அம்மையார் உள்ளிட்ட ஆசிரியைகள் 15-25 பேர்வரை கிராமத்தின் சனநடமாட்டம் கூடிய பகுதி கட்குச் சென்று கிழமைக் கொருதரம் மாலை வேளைகளில் மரநிழல்களில் ஜெபக்கூட்டங்கள் நடத்துவதும் வழக்கத்திலிருந் தது. கோப்பாய் வடக்கு வினைக்கெட்டான் வேம்படி இந்த இடங்களில் பிரதானமானது.

## இணைந்த கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி

1. 1 1945-ல் கோப்பாய் C M S ஆங்கில பாடசாலை C M S பெண்கள் பாடசாலை கோப்பாய் மத்தியகலவன் சாதனா பாடசாலை மூன்றும் இணைந்து கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி யானது.

இதன் முதலாவது அதிபராக ஜீ எஸ். செல்லையா அவர் கள் நியமனமானார். இவர் ஓர் ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியர் சென்ற் யோன்ஸ் கல்லூரி உதவியாசிரியராகப் பல வருடங்கள் சேவையாற்றியவர். இவருடைய காலத்தில் பேரும் புகழும் பெற்று கல்லூரி பெரு வளர்ச்சியடைந்தது. பெற்றார் சங்கம் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் பூரண ஒத்துழைப்பும் இவருக் குக் கிடைத்தது இதுகாறும் சென்ற் யோன்ஸ் கல்லூரிக்கு ஆதார பாடசாலையாயிருந்த நிலைமை மாறி தனித் தன்மை

யுடன் தொழிற்பட்டது. இவரது காலத்தில் SSC சித்தி வீதங்களும் கூடி கைப்பந்தாட்டம் முதலிய புற வேலைகளிலும் சிறப்புற மிளிர்ந்தது. வார்தா அரியநாயகத்தின் சொந்த மைத்துனர் என்ற குடும்பப் பெருமையும் இவர் பலராலும் அறியப்பட வழி வகுத்தது. சென்ற் யோண்ஸ் அதிபராக 1976 — 85-ல் சேவையாற்றி பேரும் புகழும் பெற்ற ஆனந்தராசா இவரது சிரேஷ்ட புதல்வராவர். 30.4.51 வரை இவரது சேவை கல்லூரிக்குக் கிடைத்தது.

## கிறீஸ்தவ கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் சங்கம்

1955 காலப்பகுதியில் கிறீஸ்தவ கல்லூரியின் நிலையில் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் வீழ்ச்சியும் முகாமையாளர்கு இதன் வளர்ச்சியில் அக்கறையற்ற நிலையும் காணப்பட்டது. நிலையான அதிபர் இடையில் சில காலம் நியமனமில்லை. 1951-56 காலப் பகுதியில் கல்லூரியில் சேர்க்கப்பட்ட வசதிக்கட்டணம், ஹட்சின்ஸ் ஞாபகார்த்த நிதி கொழும்பு பழைய மாணவர் சங்கம் உதவிய பணம் இவை யேதும் கல்வி வளர்ச்சிக்காக இக்கல்லூரிக்குக் செலவழிக்கப்படவில்லை போதனா மொழி தமிழான போதும் தமிழில் கற்பிக்க முடியாத ஆசிரியர்களையிட்டு உயர்தர வகுப்பு மாணவர் செய்த கிளர்ச்சிகளும் உதாசீனம் செய்யப் பட்டன. மாணவர், பெற்றார் செய்த முறையீடுகள் கவனித்தாவண செய்யவில்லை இக்குறைபாடுகளை நிவர்த்திக்க பெற்றார் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்கக் கொழும்பு கிளை யாவும் சேர்ந்து சுதந்திரமாக இயங்கக்கூடிய வகையில் பெற்றார் சங்கம் ஒன்று நிறுவி ஆவன செய்யத் தீர்மானித்தனர். ஆரம்பக் கூட்டம் கல்லூரியில் நடத்த இடம் கேட்ட போது மறுக்கப்பட்டது கோப்பாய் கிராமச் சங்க மண்டபத்தில் 15. 4. 57-ல் கிராமச் சங்கத் தலைவர் நா. அருளம்பலம் தலைமையில் நடை பெற்ற போது கல்லூரி சம்பந்தமான சங்கப் பிரதிநிதிகள் பெற்றார் நலன் விரும்பிகள் சமுகமளித்திருந்தனர் கல்லூரியின் இன்றைய வீழ்க்காடு பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடிய பின்பு, கல்லூரியின் நலன்களைக் கவனித்து மேற்கொண்டாவன செய்ய பெற்றார் சங்கம் ஒன்றமைக்கத் தீர்மானமாயனது.



தலைவர் — சு. நாகலிங்கம் ஆசிரியர்
உபதலைவர்கள் — டாக்டர் எஸ். அருட்பிரகாசம்
நா. அருளம்பலம் - கி.ச. தலைவர்
வீ. மார்க்கண்டு - ஆசிரியர்
இணைச் செயலாளர்கள் — மு குமரையா
க. இ. குமாரசாமி
நிர்வாக சபையினர் — D. T. லூதர்
M. S. சுப்பிரமணியம்
கோ. வைத்தியலிங்கம்
M. S. இராசலிங்கம்
(கொழும்பு ப. மா. ச)

என்போர் தெரிவாகினர். கொழும்புக்கிளை சகல ஒத்துழைப்பையும் தரத் தீர்மானித்துள்ள விபரம் M. S. இராசலிங்கம் கூறி வரவேற்றார்.

தொடர்ந்து கல்லூரியின் அவசிய தேவைகள் சம்பந்தமான மனு தயாரித்து புதிய முகாமையாளர் J. R. வேதவனம் அவர்கட்கு அனுப்பி கொழும்புக் கிளை உதவியுடன் பேட்டி கண்டு பேசவும் தக்க ஓர் அதிபரை விரைவில் நியமனம் செய்வதற்கு ஆவன செய்யவும் தீர்மானமாயது தலைவர் சு. நாகலிங்கம் கொழும்புச் கிளைத் தலைவர் M.S, இராசலிங்கம், காரியதரிசி டானியல் ஜெயரத்தினம் மூவரும் முகாமையாளர் J R. வேதவனம் அவர்களை கொழும்பில் பேட்டி கண்டு ஆவனசெய்யவும் தீர்மானமாயது அதன்படி 22 5.57-ல் பேட்டி கண்டு கலந்துரையாடியமையால் சிலகாலமாக நிலவிய பல குறைபாடுகள் நிவர்த்தியாகின. மேலும் நுகவொடை சென்ற் யோண்ஸ் கல்லூரி அதிபரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான E. C. A நவரத்தினராசா அவர்களை நேரில் சந்தித்து உரையாடி சில நிபந்தனைகளுடன் இக்கல்லூரி அதிபராக வரவும் சம்மதம் பெற்றனர்.

## E. C. A. நவரத்தினராசா

1957-ல் அதிபராகப் பதவியேற்றார். தமது உடனாசிரியர்களாயிருந்த பண்டிதர் ச. விசுவநாதன் - அராலி, திரு. அரியபூஷணம் - மானிப்பாய், இருவரும் உடன் வந்தனர். எதிர்பார்ப்

புக்கள் படிப்படியாக நிறைவேறி சர்வகலாசாலைப் புகுமுக வகுப்புக்கள் 13 : 8 என்றவாறு தொடர்ந்து சித்திவீதங் களும் கூடினர் மாணவர் தொகையும் கூடியதால் போதிய கட் டிடமில்லாக் குறை நிலவியது. பெற்றார் பழைய மாணவர் உதவிகள் தாராளமாகக் கிடைத்தன. வடபுறமாய் 'ஹட்சினஸ் புளொக்' நிறுவப்பட்டது. பாக்கியம் ஞாபகார்த்த மண்டபம் நிறுவப்பட்டு கந்தோர், வாசிகசாலை வசதிகளும் செய்யப் பட்டன.

வடபுறமாய் 300யார் தொலைவில் அமைந்திருந்த விளை யாட்டிடம் செல்லும் மாணவர் இடையிலுள்ள தோட்டத்தில் செய்த குளப்படிகளால் பாதை தடைப்பட்டது இனிமேல் மாண வர் தொல்லை உங்கட்கு இல்லாமல் செய்யத் தீர்மானித்து விட்டேன் என்று தோட்டக்காரருக்கு வாக்களித்துச் சமாதான மாக அனுப்பினார். மேற்கொண்டு செய்வன பற்றி யாருட னும் யோசித்ததாய்த் தெரியாது. எதிர் பாராத வகையில் தானே தீர்மானித்தபடி குறித்த பாதிரியார் வளவில் மக்கியிலமைந் திருந்த தோட்டப்பயிர்கள் வாழை முதலியன யாவும் அடியோடு அழிக்கப்பட்டன. மக்கியிலமைந்திருந்த கிணறுகள் மூடப் பட் டன. அருகிருந்த கற்பார்களும் தகர்க்கப்பட்டு இன்றைய (நவ ரத்தினராசா) விளையாட்டிடம் திடீரென உருவானது. 1960 காலப்பகுதியில் கல்வியுலகிலும் பெரியமாற்றம், பாடசாலைகள் யாவும் தேசியமயமாக்கப்பட்டன. இதுவும் அவரது தீவிர கல்வி வளர்ச்சிப் பாதைக்கு உந்து சக்தியாக அமைந்ததெனலாம். இவர் குடும்பமாகக் கல்லூரியிலேயே தங்கியிருந்து முழுநேரத் தையும் கல்விக்காகவே அர்ப்பணித்தார் எனல் மிகையாகாது.

கல்வியிலன்றி விளையாட்டு முதலிய போட்டிகளிலும் கிறீஸ்தவக்கல்லூரி சிறந்து விளங்கி பலரதும் பாராட்டையும் பெற்றது இலங்கையில் கூடைப்பந்தாட்டத்தில் நமது கல்லூரி முதலிடத்தைப் பெறக் காரணமாக உழைத்த செல்வி நவரத் தினசிங்கம் யாழ் ஸ்ரேஷனடி தமகில்லத்தில் ஜீவிய வந்தராக (1.7.95) இன்றும் சுகமாகவுள்ளார். பழைய மாணவிகள் சென்று சுகம் விசாரித்து ஆசிபெற்று வருவதனை யானறிவேன்.

நமது அதிபர் பிற்பகுதியில் அவர் சமயக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தால் நோய்வாய்ப்பட்ட போதும் மருந்துண் ணவும் மறுத்தார் படுக்கையிலிருந்த போது அவரது நண்பர்கள் பழைய மாணவர் வேண்டுகோள்களும் மறுக்கப்பட்டன. அவரது பிரிய நண்பரான டாக்டர் ஒருவர் உடம்பைப் பரிசோதனை செய்யப்பரிந்து கேட்ட போதும் மறுக்கப்பட்டது. அவர் பிரிவு



கல்லூரிக்குப் பேரிழப்பாக முடிந்தது. நவரத்தினராசா காலம் கல்லூரியின் அதி உச்சக்காலம் எனல் மிகையாகாது.

## ஈ. கே. சண்முகநாதன்

கல்லூரியின் உதவியாசிரியராயிருந்த போது பூமிசாஸ்திரம் சமூகவியல் பாடங்களை சர்வ கலாசாலைப் புகுமுக வகுப்பிற் குப் படிப்பித்து நூறு வீதம் சித்தியடையச் செய்த பெருமை இவரைச் சாரும். இவரது மாணவர் பலர் பட்டதாரிகளாகினர். 28 12.63 — 31 5.71 சேவையின் பின் யாழ் மத்திய கல்லூரி அதிபராகி, கல்விச் சேவையில் சித்தியடைந்து உதவி வித்தியாதி பதியாக தலைமைக்கந்தோரிலும் சேவையாற்றினார். தமது மாணவர்களை மேலும் ஊக்கி அவர்கட்கு ஏற்ற இடங்களில் அமர்த்துவதற்கு வித்தியா சேவைக் காலத்திலும் பேருதவி புரிந் தார். சிறந்த சமூக சேவையாளராகவும் கூட்டுறவாளராகவும் விளங்கினார். நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலை வராகவிருந்து சேவையாற்றியமை நீர்வேலி சமூக சேவாசங்கத் தலைவராகவிருந்து அவ்விடத்தில் பாலர் விடுதிக்கட்டிடத் தொடர் அமைந்தமை, கோப்பாய் மத்தி கிளையின் தலை வராகவிருந்து இன்று மொத்த வியாபாரக் கிளையாக விளங் கும் விசாலமான கட்டிடமமைத்தமை என்றும் இவர் பெயரை நிலை நாட்டுவனவாகும்.

இவருக்குப் பின் எம். கார்த்திகேசன் அவர்கள் சிறிது காலம் சேவையாற்றினார். தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவரான சே. கந்தசாமி அவர்கள் சிறிது காலம் அதி பராகச் சேவையாற்றி வெளிநாடு சென்றுவிட்டார்

## C. சிவநேசன்

இவர் திட்டமிட்டுக் காரியங்களைச் செய்வதில் வல்லவர் கல்லூரியின் 125 வது ஆண்டு நிறைவையொட்டிய கட்டிடம் இவர் பெரு முயற்சியாலேயே கட்டப்பட்டது. அறிவொளி மலரும் வெளியானது குறித்த கட்டிடம் பிரதான வீதி வரை நீட்ட இவர் செய்த பகீரத முயற்சிகள் கை கூடியிருந்தால் கட்டிடம்

மேலுர் சிறப்பாயமைந்திருக்கும். நவரத்தினராசா கட்டிட நிதி
யொதுக்கீடு E. K. சண்முகநாதன் காலத்திலாரம்பமாகி இவர்
காலத்திலேயே நிறைவு பெற்றது. 1990-லிருந்து கனடாவில்
வசிக்கிறார். அவ்விடம் வதியும் பழைய மாணவர்களைச் சேர்ந்து
ஓர் சங்கம் அமைந்துள்ளதாகவும் நிலைமை சீரடைந்தால்
குறித்த சங்கம் கல்லூரிக்கு உதவ முன் வரும் எனவும் திருமதி
செல்வி செல்லையா ஆசிரியை மூலம் அறிந்தோம்.

தொடர்ந்து S, செல்வரத்தினம் அவர்கள் சிறிது கா ம்
அதிபராகவிருந்து வெளிநாடு சென்று விட்டார். அவர் பின்
பூ. க. இராசரத்தினம் அவர்கள் அதிபராகச் சேவையாற்றி
னார். இவர் காலம் 84 — 91 இந்திய ராணுவ கொந்தளிப்
பான காலம் ஆகையால் இவர் செயல்திட்டம் எவற்றையும்
நிறைவேற்ற முடியாத காலமாயிருந்தது.

## த. முத்துக்குமாரசாமி

பழைய மாணவர், பெற்றார் சங்கத்தாரின் வேண்டுதலின்
பேரில் இவர் 1991-ல் அதிபராகச் சேவை பெற்ற சில காலத்
திலேயே மறுமலர்ச்சி காணப்படுகிறது. இடித்தழிக்சப்பட்ட
கட்டிடங்கள் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. 10-ம் வகுப்புச் சித்தி
யடைந்ததும் நகர்ப் பகுதிக் கல்லூரிகட்குத் தாவும் நிலை மாறி
யுள்ளது. மிகப் பழைய கட்டிடமான - ஐக்கிய போதனா வித்
தியாசாலை நடந்ததுமான கட்டிடம் முற்றாக எடுக்கப்பட்டு
அவ் விடத்தில் புதிய கட்டிடமமைக்கும் முயற்சிகள்
கைகூட இன்றைய சூழ்நிலைகளால் ஆரம்பமாக
வில்லை. ஊக்கமுள்ள பழைய மாணவர் சங்கச் செயலாளர்
கு. தங்கவடிவேல் அவர்கள் செயற்பாட்டுடன் பரிசளிப்பு, வறிய
பிள்ளைகட்கு உதவி, பாடசாலை அபிவிருத்தி என்பவற்றிற்
கான கல்வி நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது திருமதி சண்
முகநாதனைத் தலைவியாக திரு. சற்குணசிங்கம் பபி அவர்
களை காரியதரிசியாகக் கொண்டதொரு பழைய மாணவர் சங்
கம் லண்டனில் நன்கு செயலாற்றுகிறது. சி சிவநேசன் அவர்
கள் கனடாவில் பழைய மாணவர் சங்கமொன்று ஆரம்பிக்கும்
முயற்சிகள் நடைபெறுவதாகவும் அறியப்படுகிறது. இவர்காலத்
தில் கல்வியுடன் பாடசாலையும் புதுப்பொலிவு பெறும் என்ற
எதிர்பார்ப்பு 1994 க. பொ. த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்



மூலமும் வெளிப்பட்டுள்ளது. நல்லோருக்குச் சென்றவிடமெல்
லாம் சிறப்பு - 1995-ல் சூழ் நிலைகளால் வெளியேறி கொழும்பு
சென்ற போது இவரைப் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பற்றிக்
கொண்டது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் திட்டமிடல் பணிப்பாள
ராகச் சேவையாற்றிய ந. சிவகடாட்சம் அவர்கள் அன்பர்கள்
வேண்டுகோளுக்கிசைந்து அதிபராகச் சேவை பெற்றுள்ளார்.

### அதிபர்கள் சேவைக் காலம்

#### கல்லூரி விளம்பரப் பலகையில் உள்ளபடி

| அதிபர்கள் | காலம் |
|---|---|
| ஜீ. எஸ். செல்லையா | 01.01.45 — 31 07.57 |
| ஏ. டபிள்யூ. இராசசேகரம் | 01,05 57 — 31,07,57 |
| ஏ. சி. எ. நவரத்தினராசா | 01.09.57 — 21.12.63 |
| ஏ. கே. சண்முகநாதன் | 25.12.63 — 31.05 71 |
| எம். கார்த்திகேசன் | 01.06 71 — 31.12.71 |
| எஸ். கந்தசாமி | 01.09.73 — 26.12 74 |
| சி. சிவநேசன் | 01.01.75 — 06.10.80 |
| எஸ். செல்வரத்தினம் | 07 10.80 — 27.10,83 |
| பூ. க இராசரத்தினம் | 21.03.84 — 07.01.91 |
| த. முத்துக்குமாரசாமி | 08.01.91 — 27.01.96 |
| ந, சிவகடாட்சம் | 19.08 1996 தொடக்கம் |

## கோப்பாய் சாதனா பாடசாலை

கோப்பாய் ஆசிரியகலாசாலை ஆரம்பமானபோது அத
னோடு தொடர்புடையதான சாதனாபாடசாலையும் அருகில்
தொடங்க அரசினால் திட்டமிடப்பட்டது. சிங்கள ஒப்பந்தக்
காரரால் சாதனா பாடசாலைக்கான கட்டிட வேலைகள் H வடி
வில் விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு ஆரம்பமானது யாழ்

1924-ல் இப்பாடசாலையில் 5-ம் வகுப்பில் சேர்ந்தேன். அப்போது கரும்பராய் ஞானரத்தின உபாத்தியாயர் தலைமையாசிரியராயிருந்தார் (கட்டப்பிராய் பொ. நடராசா) நீர்வேலி வ. நடராசா என்போர் உதவியாசிரியர்களாக விருந்தனர் கோயில்தெரு திருமதி நாகம்மா கனகரத்தினம் உதவியாசிரியையாக நியமனமாகி பாலர் வகுப்புக்களைத் திறம்பட நடத்தினார். யாழ்-பருத்தித்துறை வீதியருகில் கட்டப்பிராயில் நடைபெற்று வந்த மிஷன் பாடசாலை மாணவர்கள் இப்பாடசாலைக்கு வந்தமையால் அப்பாடசாலை மூடப்பட்டது. குறித்த H கட்டிடத்தோடு சேர்ந்ததாக தலைமையாசிரியர் தங்கு வீடும் விடுதியும் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் 8-ம் வகுப்பு வரை நடைபெற்றதாயினும் அடுத்த வருடங்களில் ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. புலோலி பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை கல்லாறு வே. சாமித்தம்பி என்போர் மேலும் ஆசிரியர்களாகினர் புகுமுக வகுப்பிற்கு குடா நாட்டின் வேறு பாகங்களிலிருந்தும் மன்னார், மட்டக்களப்பு முதலான இடங்களிலிருந்தும், மேலும் முஸ்லீம் மாணவர்களும் வந்து சேர்ந்தனர். புதுமுக வகுப்பில் படித்தோரில் கூடுதலானோர் ஆசிரிய கலாசாலைக்குத் தெரியப்பட்டனர் வெளியிட மாணவர்கள் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து படித்தனர்.

1928 ல் காரைநகர் துரையப்பா உபாத்தியாயர் தலைமையாசிரியராக வந்தார். இவரோடு பொன். கிருஷ்ணபிள்ளை, வே. சாமித்தம்பி என்போரும் விடுதியிலேயே தங்கியிருந்து படிப்பித்தனர். பாடசாலை நேர மொழிந்த வேளைகளிலும் J. S C, S. S. C, ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்பு என்பவற்றிற்கு மாலை நேர வகுப்புக்கள், நடத்தி சித்தி வீதங்கள் கூடப் பெரிதும் உதவினர்.

ஆசிரிய கலாசாலை மாணவர்கள் கற்பித்தலுக்கான பயிற்சி பெற தவணையில் 3 கிழமை சாதனா பாடசாலைக்கு வருவர். அவர்கள் கற்பித்தலைக் கண்காணித்து வழி நடத்த ஆசிரிய கலாசாலைப் போதனாசிரியர்களும் சமுகமளிப்பர். குறித்த பயிற்சி காலை 9–12 நடக்கும். இதனாலும் சாதனா பாடசாலையின் கல்வித்தரம் மேம்பாடடைய வழி வசதியேற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய் சாதனா பாடசாலையிலிருந்தும், கரவெட்டி சித்தமணியகாரருடைய பாடசாலையிலிருந்தும் காரைநகர் அருணாசலம் உபாத்தியாயரைச் சேர்ந்த பாடசாலையிலிருந்துமே கூடுதலான மாணவர் தெரிவாகி பயிற்சி பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனாலேயே அக்காலத்தில் இம்



மூன்று கிராமத்திலும் பயிற்சி பெற்ற ஆசிரியர் கூடுதலாக இருந்தனரென்னலாம்.

1928-ல் யான் பாடசாலை விடுகைத் தராதரபத்திர வகுப்பில் (SCHOOL LEVING CERTICATE) சித்தியடைந்தேன். தொடர்ந்து ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்புச் சித்தியடைந்த போதும் ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்திற்கு 17 வயது பூர்த்தியடைய வேண்டுமென்பது அக்காலக் கல்விப் பிரமாணம். 1929-ம் ஆண்டு வித்தியா பகுதியாரால் பிரகடனப்படுத்தப்பட்ட பிறிலிம் (PRELIMINARY EXAMINATION) வகுப்பொன்றை என் போன்ற 17 வயது பூர்த்தியடையாத மாணவர்க்காக துரையப்பா உபாத்தியாயர் ஆரம்பித்தார். 14 மாணவர்கள் குறித்த வகுப்பில் படித்தோம். தலைமையாசிரியரோடு மற்றைய இரு உயர்தர வகுப்பு ஆசிரியர்களும் அந்தி நேர வகுப்புக்களும் கூட நடத்தினர். பரீட்சை அண்மித்ததும் அனைவரும் விடுதியிலேயே தங்கியிருந்து படித்தோம். பரீட்சையில் 13 பேர் சித்தியடைந்தனர். குறித்த எமது குருநாதர்களது ஆசிரிய தெய்வீக சேவைகளை நினைந்து அவர்கள் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்ற சந்தர்ப்பங்களுமுண்டு அக்காலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர், சேவைக் காலத்தராதரப் பத்திரமுடைய ஆசிரியர், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர், என்ற மூவகையினரோடு பிறிலிம் ஆசிரியர் என நாலாவது வகை ஆசிரியரும் நியமனமாகினர்.

கோப்பாய் C M S ஆரம்ப பாடசாலையில் 4-ம் வகுப்பு வரை படித்து தொடர்ந்து C M S ஆங்கில பாடசாலையில் சிறிது காலம் படித்து, கோப்பாய் சாதனா பாடசாலையில் பிறிலிம் பரீட்சையில் சித்தியடைந்து 1930 புரட்டாதி 15ந் திகதி ஆசிரியனாக நியமனம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. என்போன்று பிறிலிம் சித்தியடைந்தவர் பலர் ஆசிரியர்களாகினர். வயது சரிவந்தோர், ஆசிரிய கலாசாலைப் பயிற்சியிலும் சேர்ந்தனர்.

1931-ல் துரையப்பா உபாத்தியாயர் ஓய்வு பெற அல்வாய் கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையாசிரியராகினார். இவர் கண்டிப்பான பேர்வழி - சிறந்த தலைமையாசிரியர் மாத்திரமல்ல முப்பொழுதும் திருமேனி தீண்டும் சைவ பக்தருமாயிருந்தார் சிறந்த கதாப்பிரசங்கியும். விசேட பூஜா காலங்களில் சுற்றாடலிலுள்ள ஆலயங்களில் - விசேடமாக சேர் கந்தையா வைத்தியநாதனது இருபாலை வீரபத்திரர் கோயிலில் பிரசங்கள் கதாப்பிரசங்கள் நிகழ்த்தி கிராமத்திலும் சைவமும், தமிழும் கமழப் பெரிதும் உதவினார், சுற்றாடலிலுள்ள கோயில்களிலும் பார்க்க சிவராத்திரி விழாவிலன்று இவரது பிரசங்கத்தைக் கேட்க

16

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆரம்பம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1923-ல் ஆரம்பமானது. சேர். பி. இராமநாதன் மருதனாமடத்தில் பெண்கள் கல்லூரியும், திருநெல்வேலியில் ஆண்களுக்காக பரமேஸ்வராக் கல்லூரியும் நிறு வியது போன்று, இந்து சர்வகலாசாலை அமைக்கும் நோக்கில் கோப்பாயில் நூறு ஏக்கருக்கு மேற்பட்ட காணியை வாங்கி, சத் தியபாமாத் தோட்டம் எனப்பெயரிட்டு இதன் பராமரிப்புக்காக பரந்தன் கமத்தில் பலஏக்கர் கொண்ட விளை நிலத்தையொதுக்கி அக்கமத்தின் வருமானத்திலிருந்து இத்தோட்டத்தைப் பரிபாலித் தற்கான ஒழுங்குகளும் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மிஷனறிமாரால் நிறுவப்பட்ட ஆசிரிய பயிற்சிக் கூடங்களில் அவர்கள் சமயமும் முக்கிய இடம் வகித் தமையாலும், கொழும்பு ஆசிரியகலாசாலை சென்று தமிழாசி ரியபயிற்சி பெற வசதி எல்லாருக்கும் கிடையாதபடியாலும் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசிரியர் கலாசாலை நிறுவவேண்டிய அவ சியம்பற்றி காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர், கோப்பாய் மு. சுவாமிநாதன் ஆகிய முன்னோடிகள் சிலர் சட்டசபையங் கத்தவராயிருந்த சேர் பி. இராமநாதனிடம் முறையிட்டனர். அவரது முயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசிரியகலாசாலை நிறுவ அரசு ஒப்புக்கொண்டது. அதுவேளை சத்தியபாமாத் தோட்டத்தின் தென்கிழக்குப்பக்கமாக ஆசிரிய கலாசாலை கட்ட வேண்டிய காணியை அரசுக்குக்கையளித்து அக்கால தருமசாதன வழக்கப்படி நிறுவும் ஆசிரிய கலாசாலை தொடர்ந்து நடை பெறத் தவறின் குறித்த காணி அடியுடையவருக்குச் சேரும்; எனும் நிபந்தனை விதித்திருந்தார். குறித்த காணியில் ஆசிரிய கலாசாலை நிறுவும் வேலைகள் 1921-ல் அரசினால் விரைந்து செய்யப்பட்டன. சிங்கள ஒப்பந்தக்காரர் கூடாரமடித்திருந்து துரிதமாக வேலைகள் செய்து முடிக்கப்பட்டன, இதேகாலப் பகு தியில் இக்காணியின் தென்புறமாய் சாதனா பாடசாலையொன் றும் நிறுவப்பட்டது. இவ்வாசிரிய கலாசாலையாரம்பம் தமிழ் மக்கட்கு விசேஷடமாகச் சைவத்தமிழ் மக்கட்கு ஓர் வரப்பிர சாதமாய் அமைந்தது.



## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்

யான் கோப்பாய் அரசினர் சாதனா பாடசாலையில் 1925-ல் படித்தபோது அருகில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையும் நடைபெற்றது. ஆசிரிய மாணவர் கற்கை நெறி பயில முற்பகல் சாதனா பாடசாலைக்கு வருவதும் கற்பித்தலை மேற்பார்வையிடக் குறித்த பாடங்களுக்குரிய பேராசிரியர்கள் சமுகமாயிருப்பதும் இடையிடை அதிபர் கண்காணிப்பு நடை பெறுவதும் இருந்தது

பின் 1932 லிருந்து யான் இரண்டு வருடங்கள் குறித்த ஆசிரிய கலாசாலை மாணவனாயிருந்தேன். ஒவ்வொரு வகுப்பி லும் 40 மாணவர் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த மாணவர்களில் குறைந்த தொகையினராக மட்டக்களப்பு, மன் னார், நாவாந்துறையிடங்களிருந்து வந்த முஸ்லீம் மாணவர் களும் பயின்றனர். வெண்மை உடை கட்டாயம், நீண்டகையு டைய வெள்ளை நாஷனலும் குறியில்லாத வெண்மை வேட்டி யுமாக எல்லாருக்கும் ஒரேவித உடை கட்டாயம். முஸ்லீம் மாண வர் வெள்ளை நாஷனலும் வெள்ளை சாரமும் அணிவர். அனை வரும் விடுதியிலேயே தங்கியிருந்து கற்றல் வேண்டுமென்பதும் கட்டாயம், சைவஉணவு பிரார்த்தனைகூடம் சாப்பாட்டறை. விடுதி இவற்றைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்களும் அதி பரும் இரவிலும் கூட அரவப்படாது வருவர்

மல்லாகம் A, பொன்னையா அதிபர் கரவெட்டி S, K. இராசசிங்கம் உபஅதிபர் நீண்ட மேலங்கியும் நீண்ட காற்சட்டை யும் வெள்ளை தலைப்பாகையும் அதிபர் உடை. உளநூல், கற்கை நெறி, பாட ஆசிரியர்களுமிருந்தனர். உடுவில் மோசெஸ் முருகேசு ஆரம்பகணிதம், சுகாதாரம். பண்டிதர் வே. மகாலிங்கசிவம் தமிழ்ப்பாஷை, இலக்கியம். மட்டக்களப்பு வைரமுத்து பூமி சாஸ்திரம், சரித்திரம், S. R. கனகசபை-வித்தியாதரிசி, வரைதல், சுண்டிக்குளி S. பரம் - வித்தியாதரிசி - சங்கீதம், இவர்கள் பாட ஆசிரியர்களாயிருந்ததோடு குறித்த பாடங்களின் கற்கை நெறிப் பாடங்கட்குரிய ஆயத்தக் குறிப்புக்கள். உபகரணங்கள் என்பன வற்றை பேராசிரியர்கட்குக் காட்டி முன் அனுமதி பெறல் வேண் டும்; என்பதும் நியதி. மேலும் மரவேலை, கைவேலைப் பாடங் கட்கு டேவிட் தம்பையா - யாழ்ப்பாணம், எஸ். சின்னத்தம்பி - மாவிட்டபுரம் என்போரும், தேகப்பயிற்சி, விளையாட்டு என்பன வற்றிற்கு சின்னக்கோன் - வித்தியாதரிசியும் போதனாசிரியர் களாயிருந்தனர்.

காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை கண்டிப்பு. மேலும் சைவமாணவர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை தோறும் அதிகாலைப் பூசைக்கு நல்லூருக்கும் முஸ்லீம் மாணவர் பெரியகடை பள்ளிவாசலுக்கும் செல்வர். கண்காணிப்புமுண்டு. 18 - 40 வயதுடையவர்களான மாணவர்களில் விவாகமானவர் களும், மலாயாவிலிருந்து கட்டாயலீவில் வந்தவர்களும் படித் தனர்.

## ஆ. ஈ. சண்முகரத்தினம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இரண்டாவது அதிப ராக வண்ணார்பண்ணை சண்முகரத்தினம் அவர்கள் நியமன மானார். நாவலர் பாடசாலை, யாழ் இந்துக் கல்லூரி, கண்டி றினிறிற்றிக் கல்லூரி என்பவற்றில் படித்தவர். கொழும்புத்துறை அர்ச்சூசையப்பர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, றோயல் கல்லூரி என்பவற்றில் படிப்பித்தவர். இவரிடம் படித்தவர்களில் ஜீ ஜீ. பொன்னம்பலம், செனெற்றர் நடேசன், பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி W. A. D. சில்வா, நீதியரசர் சான்சொனி J. R. ஜெயவர்த்தனா என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1936-ல் ஆசிரிய கலாசாலைகட்குப் பொறுப்பாகவிருந்த W. R. உவாட்சன் தமது மாணாக்கராகிய சண்முகரத்தினத்தை கோப்பாய் ஆசிரிய கலாசாலையதிபராக நியமித்தார். இக்காலப் பகுதியில் போட்டிப் பரீட்சை மூலமே பயிற்சிக்குரியவர்கள் தெரி வாகினர். குறைந்தது இரண்டொரு கிறீஸ்தவர்களும், ஒரு முஸ் லீம் மாணவருமாவது தெரியப்படல் வேண்டும்; என்பது நியதி. கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுக்கு உதாரண புரு ஷராக சண்முகரத்தினம் அவர்கள் சேவை அமைந்திருந்தது. இவை அவரிடம் பயின்ற மாணவர்களிலும் பிரதிபலித்தன. இந்தச் சிறந்த பண்பியல்புகள் ஆசிரிய கலாசாலை அதிபர் விடு தியில் தங்கியிருந்த காலை அவர்களது புதல்வர்களிலும் காணக் கூடியதாயிருந்தது.

இவருடன் உப அதிபராயிருந்த மட்டக்களப்பு வைரமுத்து உடுவில் மோசெஸ் முருகேசு, அரியாலை சோமசுந்தரம் பண்டி தர்கள் வே. மகாலிங்கசிவம், கா. பொ. இரத்தினம், சோ. இளமுருகன், இராசு ஐயனார் போன்ற சிறந்த பேராசிரியர்களும் சேவையாற்றினர்.



பத்தியுள்ளம் படைத்த சக்தி உபாசகர், ஆன்மீகச் சைவத் தொண்டர்களையும், இலக்கியவாதிகளையும் வேண்டிய வேளை களில் கலாசாலைக்கு அழைப்பர். தக்கவர்களைக் கொண்டு பண் ணிசை வகுப்புகளும் நடத்தினார். கலாசாலையில் அழகிய பூந் தோட்டங்களையும் அமைத்திருந்தார். இவர்காலத்தில் பயிற்சி பெற்றோர் சிறந்த முன்மாதிரியான ஆசிரியர்களாகவும் தமிழ் சைவப் பற்றுள்ளவர்களாகவும் விளங்கினர்; எனல் மிகையா காது.

1945-ல் பெண்களுக்கெனத் தொடங்கவிருந்த மகளிர் ஆசிரிய கலாசாலை கோப்பாய்க்கு வரவிருந்த வேளை போதிய இட வசதியில்லாக்குறை சுட்டிக்காட்டப்பட்டபோது திருநெல் வேலி ஆசிரிய கலாசாலை வளவினுள் குறித்த அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையும் தற்காலிகமாகத் தொடங்கப்பட்டது. யேற்கொண்டு 16.05.1946-ல் குறித்த மகளிர் ஆசிரிய கலா சாலை கோப்பாய்க்கு மாற்றப்பட்டு, கோப்பாயில் நடந்த ஆண் களுக்கான பயிற்சிக்கலாசாலை பலாலிக்கு மாற்றமடைந்தது. இம்மாற்றம் அதிபருக்கு மனத்தாங்கலை உண்டாக்கியிருந்த தெனலாம். இவர் பலாலியில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது 19.11.48-ல் அதிபர் விடுதியிலேயே காலமானார். இவ ரிழப்பு அவ்வேளை பயிற்சி பெற்ற மாணவர்கட்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக முடிந்ததனை நினைந்து வருந்தினர்.

## தமிழர் ஆசிரிய கலாசாலைகள்

ஆங்கிலாட்சியில் ஆரம்ப காலங்களில் இலங்கையின் பல பாகங்களிலும் தேவாலயங்களை நிறுவி அரசகருமங்கட்கு உதவி யாக அயலில் ஆங்கிலக் கல்லூரிகளையும் நிறுவி அவற்றிற்கு அதிபர்களாக ஆங்கிலேயரையும் நியமித்தனர். ஆங்கில மொழி யாசிரியர் தேவைக்காக கொழும்பில் ஆசிரிய கலாசாலையும் நிறுவப்பட்டது.

சுதேசிகளின் ஆரம்பக் கல்வியை வளர்க்கும் நோக்கில் 1801-ல் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட 170 பாடசாலைகளில் 47 பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிதமாகின. போதிய நிதி வசதியில்லை; என்ற சாட்டின் பேரில் இவையனைத்தும் 1805-ல் கைவிடப்பட்டன. தொடர்ந்து மிஷனறிமார் சுதேச பாடசாலை களை நிறுவ அரசு ஊக்கியது. இலங்கை வந்த அமெரிக்கன்

மிஷன் சேட்சுமிஷன் மெதடிஸ்த மிஷனறிமாரால் யாழ்ப்பாணத்
தில் கோயிற்பற்றுக்கள் தோறும் தேவாலயங்கள் நிறுவி அவற்
றின் அயலில் சுதேச பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

போத்துக்கீசர் ஆட்சியைத் தொடர்ந்து கரைநாடுகளில்
கத்தோலிக்க தேவாலயங்கள் நிறுவப்பட்டு ஆங்கிலக் கல்லூரி
களை நிறுவி, சுதேச பாடசாலைகளையும் ஸ்தாபித்தனர்.

சுதேச மொழியாசிரியர் பயிற்சிக்காக மிஷனறிமார் ஆங்
காங்கே பயிற்சிக் கலாசாலைகளையும் ஸ்தாபித்தனர்.

இந்த வகையில் கோப்பாயில் ஐக்கிய போதனா பயிற்சிக்
கலாசாலை சேட்சு மிஷனறிமாரால் ஆரம்பிக்கப்பட்டது. இது
போல் தெல்லிப்பளையிலும் உடுவிலிலும் முறையே அமெரிக்கன்
மிஷன் ஆண், பெண் பயிற்சிக் கலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்
டன. கொழும்புத்துறை, இளவாலையிடங்களில் கத்தோலிக்க
ஆசிரியருக்கான ஆண், பெண் பயிற்சிக் கலாசாலைகள் நடந்தன.
பின்னர் கோப்பாய் ஐக்கிய போதனா பயிற்சிக் கலாசாலை நல்
லூருக்கு மாற்றப்பட்டு ஆண்களுக்கும் பெண்களுக்குமான பயிற்சி
யிடமாக மாறியது. இதேகாலப்பகுதியில் மருதனாமடத்தில்
பெண்களுக்கான ஆசிரிய கலாசாலையும் கோப்பாயில் அரசினர்
ஆசிரிய கலாசாலையும் நடைபெற்றன. திருநெல்வேலியில் சைவ
வித்தியாவிருத்திச் சங்கத்தாரால் ஆண்களுக்கான ஆசிரிய கலா
சாலை 1927-ல் ஆரம்பமானது. 1946-ல் இது இருபாலாருக்கு
மான கலாசாலையாக்கப்பட்டது.

இரண்டாவது மகா யுத்த காலத்தில் இராணுவ முகா
மாகயிருந்து கைவிடப்பட்ட பலாலி கட்டிடப்பகுதிகட்கு கோப்
பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை 1947-ல் மாற்றப்பட்டு கோப்
பாயிடத்துக்கு, திருநெல்வேலியில் 1946-ல் ஆரம்பித்து தற்காலி
கமாக நடைபெற்ற அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை மாறி
யது, கொழும்பு ஆசிரிய கலாசாலையில் நடைபெற்று வந்த
விசேட பயிற்சிகள் தமிழ் பயிலுனர்க்காக 1957-ல் பலாலிக்கு
மாற்றப்பட்டது இதனால் பலாலி 2-ம் தரப்பயிற்சிக் கல்லூரி
யாக மாறியது. அதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று
வந்த ஆசிரிய கலாசாலைகள் அனைத்தும் ஆரம்ப பயிற்சிக்
கலாசாலைகளாக மாறின

நாகரிகமான வகையில் மத மாற்றம் நடைபெறுவதற்கு
லெ ஆசிரிய கலாசாலைகள் துணை போகின்றன என்ற எண்ணம்
1940 அளவிலிருந்து வளர்ந்து வந்தது. இது நன்கு கவனிக்கப்
பட்டதனால் சைவ முன்னோடிகளதும், வித்தியாதிபதி கதிர்காம



நாதனதும் பெருமுயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஓர் அரசினர்
மகளிர் ஆசிரிய கலாசாலை தொடங்க 1946-ல் தீர்மானமாயது.
இலங்கையில் இலவச கல்வித் திட்டத்திற்கும் வழிவகுத்தது இந்த
ஆண்டேயாகும்.

## கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தரால் ஆரம்பித்து நடை
பெற்றுக் கொண்டிருந்த திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையின்
ஒரு பகுதியில் குறித்த அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை 30
மாணவியருடன் 1946-ல் ஆரம்பமானது, திருநெல்வேலி மு. பால
சுந்தரம் ச த அவர்களின் சகோதரி செல்வி ஞானம் முருகேசு
அவர்கள் இவர் உடுவில் மகளிர் கல்லூரியிலும் பின் ஸ்ரான்லி
மகா வித்தியாலயத்திலும் பட்டதாரி ஆசிரியையாகக் கடமை
யாற்றியவர், இவர் தற்காலிக அதிபராக நியமனம் பெற்றார்.
பேராசிரியையாக நயினாதீவு செல்வி சந்தனநங்கை கந்தப்பு
அவர்கள் நியமனமானார் மேற்குறித்த அரசினர் மகளிர் ஆசி
ரிய கலாசாலையும் பேராசிரியர்களும் ஒரு வருடத்தால் 1946-ல்
கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையிடத்துக்கு மாற்றப்
பட்டு நிரந்தமானதொரு இடத்தில் நடைபெறத் தொடங்கியது.
தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவியர்
வரத்தொடங்கினர். இனத்தால் வேறுபட்டாலும் மொழியால்
ஒன்றுபட்ட முஸ்லீம் மாணவியரும் முதன் முதலாகப் பயிற்சி
பெறச் சேர்ந்தனர் பயிற்சியில் சேரும் போது மாணவியர்,

"கழக பாரம்பரியத்தையும் மேன்மையயும் காத்து சமய
இனவேறுபாடின்றி கல்விப்பணிக்கு எம்மை
அர்ப்பணிக்கிறோம்"

என்ற வாக்குறுதி செய்வதும் ஆரம்பிக்கப்பட்டது. செல்வி
ஞானம் முருகேசு அம்மையார் தொடர்ந்து நிரந்தர அதிபரானா
னார். இக்காலப் பகுதியில் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்
கலைக் கழகம் வரை சுயமொழியில் எல்லாப் பாடங்களும் கற்
பிக்கும் கொள்கை ஏற்பட்டமையால் இக்கலாசாலையுழைப்பும்
விரிவடைந்தது. மாணவியர் கற்பித்தல் நெறிப்பயிற்சி பெற
சாதனா பாடசாலையுடன் அயலேயிருந்த பாடசாலைகட்கும்
சென்றனர்.

எதிர் கால நற்பிரசைகளைப் பெற பாடபோதனைகளோடு சமய நெறிகளும் மாணவர்கட்கு ஊட்டப்பட வேண்டுமென்பதனைப் போதித்ததனோடு சாதனையிலும் வாழ்ந்து காட்டிய அம்மையார் 15 வருட சேவையின் பின் ஓய்வு பெற்றார்.

## திருமதி ஆனந்தகுமாரசாமி

செல்வி ரதிலட்சுமி நடேசசுந்தரம்பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. படித்தவர். 1949 லிருந்து மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் 5 வருடமும் தொடர்ந்து கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையிலும் 1960 வரையும் சேவையாற்றியவர். இக்காலப் பகுதியில் விவாகமாகி திருமதி ஆனந்தக் குமாரசாமி ஆனார், 1961 – 62-ல் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்க பல்கலைக் கழகத்தில் எம். எஸ். ஸி பட்டமும் பெற்றவர். 1962-63-ல் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகிச் சென்ற இவர் திரும்பி 1.1.63 லிருந்து 13.1.85 வரை அதிபராக கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையில் தொடர்ந்து 22 வருடங்கள் சேவையாற்றினார்.

1962-ல் தனியார் துறைப் பயிற்சிக் கூடங்களாயிருந்த நல்லூர் ஐக்கிய ஆசிரிய கழகம், மற்றும் திருநெல்வேலி, கொழும்புத்துறை ஆசிரிய கழகங்களும் கோப்பாய் ம. ஆசிரிய கலாசாலையுடனிணைக்கப்பட்டு மாணவியரும், பேராசிரியர்களும் இவ்விடம் வந்தனர்.

பல்வேறு வகைப்பட்டவர்களும் ஒன்றாயிணைந்த காலப் பகுதியில் அம்மையார் திறம்பட நடத்தி கல்விப் பெரியார்களதும் சமயத் தலைவர்களதும் அரசினதும் நன்மதிப்பைப் பெற்றார்.

1972-ல் புதிய கல்வித்திட்டம் சிபார்சு செய்யப்பட்டது அதற்கேற்ப 1973 ஜனவரியிலிருந்து புதிய கல்வித்திட்டமும நடைமுறைக்கு வந்தது. 7-ம் வகுப்பிலிருந்து ஆரம்பித்து தேசிய கல்விப் பொதுத் தாரதர பரீட்சைக்குப் புதிய பாடத்திட்டத்தின் படி 9 பாடங்கட்கு மாணவர் தோன்ற வேண்டிய நிலை கட்டாயமானது. அதற்குத்தக கல்வியூட்டலுக்குரிய ஆசிரியர்க்கான பயிற்சியளிக்கும் நிலையுருவானது. 1980 ல் கலவன் கல்லூரியானது மன்றங்களின் ஆண்களும், பெண்களும் இடம் பெற்றவர், மனையியல் பாட நெறியோடு இசை நடனம் சித்திரம்



ஆகிய நுண்கலைகளுக்கான – புதிய பாடத்திட்டத்திற்கான பல கற்கை நெறிகளும் ஆரம்பமாகின. சில பெண் பயிற்சியாளர்கள் கலாசாலை விடுதியில் பெண் விடுதி மேற் பார்வையாளரின் அனுசரணையுடன் தங்கியிருந்து படித்தனர். ஆண்களுக்கு விடுதிவசதியில்லை.

இல்ல விளையாட்டுப் போட்டிகள், முத்தமிழ் விழா, கைப்பந்தாட்டம் போட்டிகள், சமய விழாக்கள், சமயச்சுற்றுலாக்கள் என்பன பிரதி வருடமும் நடைபெற்று வந்தன.

சத்தோலிக்க மாணவருக்கான செபகூடம், மனையியல் ஆய்வு கூடம், சப்தகம், கலைக்கூடம், யோகமண்டபம் கிருஷ்ணை படிப்பகம், திறந்த வெளியரங்கு என்பனவும் ஸ்தாபிதமாகின.

தோற்றப் பொலிவுடனான அமைதியான போக்கு, தூய வாழ்க்கை. கருத்தமைந்த பேச்சு என்பன ஒருங்கமைந்த அம்மையாரின் வழி நடத்தலில், தலை சிறந்த பேராசிரியர்கள் உதவியுடன் 22 வருடங்கள் திறம்பட நடத்தினார் குறித்த ஆசிரிய கலாசாலை வரலாற்றில் இவர் நாமம் என்றும் நின்று நிலைக்கும.

## ஆசிரிய கலாசாலைக்கு வந்த இரு தத்துக்கள்

1954-ல் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவானோரில் 14 தமிழ் மாணவியரை நிறுத்தி அவ்விடங்கட்கு 14 முஸ்லீம் மாணவியரைச் சேர்த்தனர். இது விஷயமாய் சில மாணவியரின் பெற்றாரான ஆசிரியர் சிலர் அக்கால் ஆசிரிய தொழிற்சங்கமாயிருந்த அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் கவனத்திற்கு விண்ணப்பித்தனர், சங்கத்தின் தீவிர தொழிற்பாட்டால் 30.04.54 வெள்ளி காலை கொழும்பில் மந்திரி காரியாலயத்தில் பேட்டி கண்டு மனுசமர்ப்பித்து குறித்த பிழையை நிவர்த்தியாக்கக் கேட்கப்பட்டது. நிரந்தரக் காரியதரிசியால் நிறுத்தப்பட்ட 14 மாணவியரும் மீண்டும் பயிற்சிக்குச் சேர ஒழுங்கானது. பாஷை பால் ஒன்று பட்டாலும் சமய வழிபாடு உணவு ஆசார முறைகள் இவற்றால் மாறுபட்ட இரு சாகியத்தைச் சேர்ந்த மாணவியர் ஒரு பயிற்சிக் கூடத்தில் ஒன்றாக வாழ்ந்து பயிற்சி பெறுவதில் உள்ள சிக்கலை அரசு உணர்ந்து முஸ்லீம் மாணவியர் பயிற்சிக்காக அட்டாளைச் சேனையில் பிறிதொரு பயிற்சிக் கூடம் இதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது.

1962 ல் இக்கலாசாலைக்கு மூடுவிழா ஆபத்தொன்று வந்தது. அப்போது வடமாநில வித்தியாதிபதியாக வ. உ. சோம சேகரம் பணியாற்றினார். ஆசிரிய கலாசாலையை பலாலிக்கு மாற்றி கோப்பாய் ஆ. க. இடத்தில் வித்தியாகந்தோரை மாற்ற முடிபாகியது, இது சம்பந்தமாய் அறிந்த விபரங்களுடன் குறித்த ஆ. க. பேராசிரியைகளான செல்வி சந்தன நங்கை கந்தப்பு திருமதி ஜெ. தெ. பெரரா இருவரும் அகில இலங்கைத் தமிழா சிரியர் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். விரிவான தொரு எதிர்ப்பு மனு தயாரிக்கப்பட்டு சங்கம் வித்தியாதிபதிக்கு அனுப்பியது இதில் சேர். பி. இராமநாதன் தரும சாத னத்தில் 'ஆசிரிய கலாசாலை நடைபெறாத காலம் அடியுடைய வருக்கு உரிய ஆதனம் சேரக்கடவது' என்பதும் சுட்டிக்காட்டப் பட்டது.

மேற்கொண்டு பேராசிரியைகள் இருவருடனும் சங்கத்தின் காரியதரிசியாயிருந்த யானும் அப்போதைய கோப்பாய் பாராளு மன்ற அங்கத்தவராயிருந்த மு. பாலசுந்தரம் அவர்கட்கு மனு வின் பிரதியும் கொடுத்து முறையிட்டோம். உடன் வித்தியாதி பதி துரைசிங்கத்துடன் தெலிபோனில் தொடர்பு தமது ஒயற் கையான தொனி வேகத்தில் பேச்சு, எனது தொகுதியில் என்னை யறியாது 'நீண்ட பாரம்பரியமுடையதொரு கலாசாலையை மூடி வித்தியா கந்தோராக்க சூழ்ச்சி (?) இராமநாதன் தருமசாதன நிபந்தனை, மேலும் மனுவில் குறிப்பிட்ட விஷயங்களைச் சுட் டிக்காட்டி 45 நிமிஷங்கள் வரை காரசாரமான சம்பாஷணை நடைபெற்றது. நாம் மூவரும் அருகே கேட்டுக் கொண்டிருக்கி றோம் துரைசிங்கம் அவர்கள் கல்வி மந்திரியுடனும் கலந்தா லோசிப்பதற்காக தெலிபோன் சம்பாஷணையை அனுமதியுடன் இடை நிறுத்தினார்.

சில நிமிஷங்களால் "குறித்த மாற்ற விஷயம் கைவிடப் படுகிறது. உடன் வடமாநில கல்வியதிபதிக்கு அனுப்பும் கடிதப் பிரதி அதிபருக்கும், பா. ம. அங்கத்தவருக்கும் அனுப்பி வைக் கப்படுகிறது'' என்ற நல்ல செய்தி கிடைத்தது. வந்ததொரு பேராபத்திலிருந்து கலாசாலை தப்பியது. இது விஷயமாய் தீவிர மாக முயற்சித்த பேராசிரியைகள் செல்வி சந்தன நங்கை கந்தப்பு, திருமதி ஜெ. தெ. பெரரா இவர்களை, குறித்த கலாசாலையும், கலாசாலையோடு சம்பந்தமுடைய ஆசிரிய உலகும் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளது மு. பாலசுந்தரம் பா உ அவர்கள் நியா யங்கண்டு எடுத்த காரியமெதிலும் தோற்றதில்லை என்ற அபிப் பிராயம் இது விஷயத்திலும் நிதர்சனமாகியது.



## செல்வி கந்தப்பு சின்னப்பு

இவர் நல்லூரில் திறம்படச் சேவையாற்றியதொரு ஆசி ரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். எம். எஸ். ஸி பட்டதாரி ஆரம் பத்தில் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியாசிரியையாக இருந்தவர். 1959-ல் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் 1975 தொடக் கம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் விரிவுரையாளராகச் சேவையாற்றி, தொடந்து துணை அதிபரானார். 1985-ல் உயர்ச்சி பெற்றார். 1986-ல் பலாலி ஆசிரிய கலாசாலைக்குப் பக்கத்தில் ராணுவம் வந்தமையால் குறித்த ஆசிரிய கலாசாலை கோப்புாய்க்கு மாறியது முன்னர் சாதனா பாடசாலையாயிருந்த கோப்பாய் மகா வித்தியாலயத்தில் வகுப்புக்கள் நடைபெற்றன. வந்த பெண் பயிலுனர் சிலர் ஆசிரிய கலாசாலை விடுதியில் தங் கினர். பலாலிக்கந்தோர் அதிபர் இல்லத்தில் இயங்கியது. இவ ரது சேவைக் காலத்தில் அருகருகே இரு பயிற்சிக் கலாசாலைகள் இயங்கும் சந்தர்ப்பமுண்டானது, வெளி மாவட்ட ஆசிரிய பயி லுனர்களை இராணுவப் பிரச்சினைக் காலத்தில் தாய்மையுள் ளத்துடன் உபசரித்துப் பாதுகாத்தார். இவரது திறம்பட்ட நிர் வாகமும் தண்ணளியான போக்கும் ஆசிரியர்கள் கல்வித்திணைக் களத்தலைவர்கள் பலரதும் பாராட்டுதல்களுக்குள்ளானது. 1989-ல் 36 வருட ஆசிரிய சேவையின் பின் ஓய்வு பெற்றார்

குறித்த பலலி ஆசிரிய கலாசாலை 1990 தொடக்கம் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையிருந்த இடத்தில் நடைபெறு கிறது

## வை. கா. சிவப்பிரகாசம்

இவரை வைகாசி என்று சுருக்கமாக அழைப்பர். எம். ஏ. பட்டதாரி. இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கல்லூரிகளில் கடமையாற்றி 1980-ல் இக்கலாசாலையின் விரிவுரையாளராக நியமனமானார். 1983 ல் தரம் I ற்கு உயர்த்தப்பட்டதுடன் 1989 – 93 இக்கலாசாலையின் அதிபராகச் சேவையாற்றினார்

## திருமதி சி. இராமநாதன்

இவர் ஓர் B. Sc. பட்டதாரி 1967-ல் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகி 1993 டிசெம்பரில் அதிபரானார், இடையில் புலமைப் பரிசில் பெற்று 1976 – 77 காலப் பகுதியில் பிரான்ஸ் சென்று விசேட பயிற்சி பெற்றுத் திரும்பியது மேலும் இவரது சேவைக்குமெரு கட்டியதெனலாம்.

1994-ல் இவ்விடம் பயிற்சி பெறும் 270 பேரில் 108 பேர் ஆரம்பக்கல்வி பயிற்சி நெறி பெறுகின்றனர். கலா பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் இந்து சமயப்பயிற்சி 50 பேரும் காரைசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையில் தமிழ்ப் பயிற்சியும், மனையியல் பொருளியல் பயிற்சி திருமதி வேலுப்பிள்ளை தலைமையிலும் மேலும் நுண்கலைப் பயிற்சிகளும் நன்கு நடைபெறுகின்றன. தற்போதைய போர்க் காலச் சூழ் நிலையில் தங்குமிட வசதிகள் நன்கு பேணப்பட முடியாததனால் 21 பேர் மாத்திரமே கலாசாலை விடுதியில் தங்குகின்றனர்.. குறித்த பயிற்சி நெறிகள் வடமாகாணம் முழுவதற்கும் இதுவொன்றேயுளது.

## கோப்பாய் சரவணபுவானந்த வித்தியாசாலை

1926-ல் ஆண்டுக் காலப் பகுதியில் கோப்பாய் வடக்கு கலட்டிக் கந்தசுவாமி கோயிலில் ஆண்டு தோறும் சித்திராப் பூரணையையடுத்து, கந்தபுராணப் படிப்பு நடைபெறும். கோப்பாய் வடக்கு கந்தர் சின்னத்தம்பி, சின்னத்தம்பி மார்க்கண்டு என்போர் புராணம் படிப்பதும் அவ்வூர் பிரான்பத்தை ஆயுள்வேத வைத்தியர்கள் சி. மயில்வாகனம், திரு. கந்தையா என்போர் பயன் சொல்லுவதும் வழக்கமாயிருந்தது

கோப்பாய் வடக்கு அப்பிளானை ஒழுங்கை முகப்பில் நின்ற பாரிய வேப்ப மரத்தின் கீழ் அயலேயுள்ள விவசாயப் பெருமக்கள் ஒய்வு நேரங்களில் ஒன்று கூடி கிராம, வெளிநாட்டுப் புதினங்களையும், புராண இதிகாசக் கதைகளையும் தெரிந்தவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டிருப்பதும் வழக்கம்,



பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கோப்பாய் சி. எம். எஸ் பெண்கள் பாடசாலையதிபர் வெள்ளைக்கார அம்மாவும் ஆசிரியர்களும் அயலேயுள்ள சென்றமேரிஸ் தேவாலய குருவும், உள்ளிட்ட கூட்டத்தார் மேற் குறித்த வேம்படியில் தேவ ஆராதனைக் கூட்டங்கள் வைப்பதும், அயலேயுள்ள சிறுவர்கள் வயோதியர்கள் கூடி நின்று கேட்பதும் நடந்து வந்தது.

கோப்பாயில் திண்ணைப் பாடசாலையமைத்து நிகண்டு புராணம் இதிகாசம் முதலியன கற்பித்து வந்த முருகேசு உபாத்தியர் மகன் நாகலிங்கம் அவர்கள் உரும்பராய் ஆங்கில பாடசாலையில் ஆங்கில ஆசிரியராயிருந்தார். பகிரங்கப் பரீட்சையை அண்டிய நாட்களிலும் விடுதலை நாட்களிலும் மாலை வேலைகளிலும் இலவச வகுப்புக்கள் வைத்து பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்வது அக்கால நலன் விரும்பி ஆசிரியர்களது வழக்கம்.

அன்றொரு நாள் வேப்ப மரத்தடியில் பிரசங்கம் முடிந்து பாதிரிமார்கள் சென்றதும் அவ்விடத்தில் கூடியிருந்த முதியவர்கள் கலந்துரையாடலின் போது கோப்பாய் வடக்கில் எமது சிறுவர்கள் சைவச் சூழலில் கல்வி பெறுவதற்கு ஓர் சைவப் பாடசாலை வேண்டும்; என்பது அன்றைய பிரதான பேச்சாயிருந்ததும், குறித்த வேம்படியையடுத்த வீட்டுக்காரனும் கந்தபுராணப் படிப்புக்காரனுமாகிய சின்னத்தம்பி மார்க்கண்டு முதலிய பெரியவர்கள் இது விஷயமாய் தீவிரமாய் ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் மாலை நேர இலவச வகுப்பை முடித்துக் கொண்டு வந்த நாகலிங்க உபாத்தியாயரை இடைமறித்து இருத்தி, ''தம்பி எங்கட்கு ஓர் சைவப் பாடசாலை வேண்டும்'' என்று சின்னத்தம்பி மார்க்கண்டு, வீரபாகு கந்தையா, கணபதியார் கந்தையா, முதலிய அங்கிருந்த முதியவர்கள் கேட்டதும் அயல்வாசியாகிய அவ்விடம் நின்ற சிறுவனாகிய யான் அறிந்ததொன்று

மேற்கொண்டு நாகலிங்க உபாத்தியாயருடைய தீவிர முயற்சியால் கோப்பாய் வடக்கு சித்திரவேலாயுத சுவாமி கோயில் முன் வீதியில் 1926 அக்ஷய வருடம் சித்திரா பூரணையையடுத்த தொரு வெள்ளிக்கிழமை மாலை ஏழு மணியளவில் சைவப் பாடசாலையமைக்கும் நோக்கமானதொரு பகிரங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, அப்போது கிராமத்திலுள்ள சைவப்

பெரியார்கள் அனைவரும் சமுகமளித்திருந்தனர். எனது தகப்ப
னாருடன் யானும் குறித்த கூட்டத்திற்குச் சென்றிருந்தேன்.
சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயலாளரும் கோப்பாயைப்
பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய ஸ்ரீமான் சு. இராசரத்தி
னம், வட்டுக்கோட்டை எம். எஸ். இராசரத்தினம் நியாயவாதி
கள் இருவரும் விசேட அழைப்பின் பேரில் சமுகமளித்திருந்
தனர். ஆலய பூசை முடிந்ததும் பிரம்மஸ்ரீ சபாரத்தினக் குருக்
கள் அவர்கள் பிரசாதம் வழங்கி அனைவரையும் ஆசீர்வதித்
தார். எமதூரில் ஓர் சைவப் பாடசாலை இன்று வரை இல்லாத
குறைபாட்டால் நமது சைவச் சிறார்கள் படும் இன்னல்களை
விரிவாக மு நாகலிங்கம் ஆசிரியர் எடுத்துக் கூறினார் பல
முதியவர்களும் தொடர்ந்து இது விஷயமாய்த் தமது ஆவலைத்
தெரிவித்து சமுகமளித்திருக்கும் இரு பெரியார்களையும் மேற்
கொண்டு இது விஷயமாய் ஆவன செய்து தருமாறும் வேண்
டினர்.

பிரதம விருந்தினர்கள் பாடசாலை ஆரம்பிப்பதற்கான
வழிவகைகளைக் கூறியபின், காணி உதவி கட்டிடமும் தந்தால்
சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆசிரியர்களை நியமித்து மேற்
கொண்டு வேண்டியன செய்து தரும்; என வாக்களித்தனர். அப்
போது அவ்விடத்தில் சமுகமாயிருந்த திருவாளர்கள் சி. மார்க்
கண்டு, க. முத்தையா, வீ கந்தையா, க இளையதம்பி,
மு. வைரமுத்து, பூ. சின்னப்பா, இ. இளையதம்பி, சி. பொன்
னையா, சி. முருகேசு, வீ. சி. கந்தையா என்போர் ஊர் மக்
கள் உதவியுடன் வேண்டியன செய்து தருவதாக வாக்களித்த
னர், திருவாளர் முருகர் கந்தரும் சி. பொன்னையா, சி. மார்க்
கண்டு சகோதரர்கள் இருவரும் தங்கட்குச் சொந்தமான மயிலி
யோடை எனும் காணியில் மூன்று பரப்பு நன்கொடையாகத்
தருவதாக வாக்களித்தனர். பணஞ் சேர்த்தும் பனைகள் தறித்
தும் 1500 ச. அடி கொண்ட நிலையானதொரு கட்டிடம் அமைக்
கத்திட்டமிடப்பட்டது.

உரிய கட்டிடம் பூர்த்தியாகும் வரையும் காத்திராமல் உட
னடியாகத் தற்காலிகமாக ஓர் கட்டிடத்தில் ஆரம்பிக்கலாமா?
என்று கலந்தாலோசிக்கப்பட்ட போது மு நாகலிங்கம் அவர்கள்
தமது தலைவாசல் கட்டிடத்தையும், தற்காலிக கொட்டிலமைக்க
அதனோடு சேர்ந்த முன் காணியையும் உடன் தருவதாக வாக்
களித்தார். ஊரவர்களின் உற்சாகம் கரைபுரண்டோடியது. அக்
கூட்டத்திற்கு 12 வயதுச் சிறுவனாயிருந்த யானும் என்போன்ற



வர் சிலரும் சமுகமாயிருந்தோம். அயலேயுள்ள சி. எம். எஸ்
தமிழ்ப் பாடசாலையிலும் படித்துக் கொண்டிருந்த என் போன்ற
மாணவர்க்குப் பேரானந்தம்.

குறித்த கால கட்டத்தில் முருகேசு உபாத்தியாயரால்
நடத்தப்பட்டு வந்த திண்ணைப் பாடசாலையும், மிஷனறிமாரு
டைய ஆதரவுடன் திருமதி நாகமுத்து உபாத்தியாயருடைய
வீட்டில் நடந்த திண்ணைப் பாடசாலையும் மூடப்பட்ட நிலையில்
சி. எம். எஸ் ஆங்கிலப் பாடசாலையிலும், அதனைச் சார்ந்
திருந்த 1 – 5 வகுப்புக்களையுடைய தமிழ்ப் பாடசாலையிலும்
எமதூர் மாணவர் கல்வி பயின்றனர். சைவப்பற்று மிக்க பெற்
றார் தமது வளர்ந்த பிள்ளைகளை கோப்பாய் வடக்கு வல்லிபுர
உபாத்தியாயருடன் அப்பால் உள்ள நாவலர் பாடசாலைக்கு
அனுப்பினர். மிகக் குறைந்த சில மாணவர்களே இருபாலை
சாதனா பாடசாலையில் கற்றனர் பாடசாலைக்குச் செல்லக்
கூடிய மாணவர்களில் குறைந்த வீதமானோரே படித்தனர்.
பெரும்பாலும் பெண் பிள்ளைகளை மிஷன் பாடசாலைக்கோ –
தூர இடங்கட்கோ அனுப்பிப் படிப்பிக்கப் பெற்றார் விரும்பா
திருந்தனர். படித்த மாணவர்களில் பலரது கல்வியும் ஆரம்ப
பாடசாலையுடன் நின்றிருந்தது மேற் கல்வியைத் தொடர
விரும்பினோர் சமயம் மாற வேண்டியுமிருந்தது. அநேகமான சிறு
வர்கள் பெற்றோருடைய கமத்தொழிலிலும் அக்காலத்தில் வரு
வாய்க்குரிய தொழிலாயிருந்த சுருட்டு வேலையிலும் ஈடுபட்ட
னர். திருவெம்பாவை போன்ற விசேட பூசா காலங்களில் ஆல
யத்துக்கு அதிகாலை பூசைக்குச் சென்று விபூதி சந்தனம் தரித்த
மாணவர் மிஷன் பாடசாலைக்குச் செல்லும்போது முற்றாக
அழித்தே செல்ல வேண்டிய நிலையிருந்த என் போன்ற மாண
வர்கள் அன்று அடைந்த ஆனந்தம் அளப்பரியது கூட்ட முடி
வில் மேற்கொண்ட காரியங்களைச் செய்ய க. சின்னத்தம்பி
தலைமையில் ஓர் தற்காலிக நிர்வாக சபையும் தெரிவானது.

கூட்டம் முடிந்த சில நாட்களில் நாகலிங்க உபாத்தியாயர்
அவர்களுடைய தலைவாசலுக்குத் தென் புறமாய் 1000 ச அடி
வரை பரப்புடைய ஓர் தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்
டது. 1926 புரட்டாதி விஜய தசமியிலின்று பாடசாலை தொடங்
குவதற்கானவை விரைவாக நிறைவேறின. என் போன்ற சிறு
வர்களுடன் சங்கு ஊதி சேமக்கலம் அடித்து விஜய தசமிக்குப்
பாடசாலையாரம்பித்தலையும் ஏடு தொடக்குவதனையும் ஊர்
முழுவதும் அறிவித்தோம், பாடசாலை தொடங்கிய நேரம் ஊரே
திரண்டது, சரஸ்வதி பூசை முடிந்ததும் இரண்டு நிரையில் சிறு
வர்கள் இருத்தப்பட்டு ஏடு தொடக்கும் வைபவம் நிறைவேறி

யது, அனைத்தும் சைவ மயம். ஆரம்பத்தில் கோப்பாய் தெற்கு
கற்பகப் பிள்ளையார் கோவிலடி வேதாரணியக் குருக்கள், அவர்
களும் மற்றும் க. இளையதம்பி, செல்வி வைரமுத்து செல்லம்மா
என்போரும் ஆசிரியர்களாயிருந்தனர். 11.11.1926 லன்று இரு
பாலை இரத்தின சபாபதிக் குருக்கள் தலைமையாசிரியராகவும்,
திரு. செல்லையா - முகமாலை, திருமதி பார்வதிப்பிள்ளை என்
போரும் நியமனமாகி ஆறு ஆசிரியர்களுடன் நாளொருமேனி
யாகப் பாடசாலை வளர்ந்து வந்தது. நமதூரில் சைவச் சூழ
லில் கல்வியைப் பெறும் வாய்ப்பேற்பட்டதில் முதியவர்கட்கு ஓர்
பெருமிதம் சிறுவர்கட்கு ஆனந்தம்.

பாடசாலைக்கு வேண்டிய தளபாட வசதிகளை ஊர் மக்
கள் தாமாகவே முன் வந்து செய்துதவினர். அரசின் ஆரம்ப
உத்தரவும் எமது பாடசாலைக்குக் கிடைத்தது. சைவ வித்தியா
விருத்திச் சங்கச் செயலாளர் உள்ளிட்ட பல பெரியார்களும்
பாடசாலைக்கு அடிக்கடி வந்து உற்சாகப்படுத்தினர்.

மேற்கொண்டு பாடசாலைக்கு வேண்டியன செய்வதற்கு
உதவியாக ஓர் மகாசபை தெரிவு செய்ய வேண்டும் என்ற
சை. வி. வி. சங்கத்தின் ஆலோசனைப்படி 9.3.1927-ல் ஊர்
மக்கள் கூடி சைவ அனுட்டான பூதிமானான கந்தர் சின்னத்
தம்பி அவர்கள் தலைவராகவும், மு. நாகலிங்கம் ஆசிரியர் காரிய
தரிசியாகவும், சி பொன்னையா தனாதிகாரியாகவும், சு. இராச
ரத்தினம் அவர்களை பாதுகாவலராகவும் கொண்டதொரு செயற்
குழுவும் தெரிவாகின.

மகாசபை நன்கு தொழிற்பட்டது. நன்கொடையளிக்கப்
பட்ட மயிலியோடை எனும் காணி பற்றைகள் வெட்டப்பட்டுத்
துப்புரவு செய்யப்பட்டது. 1500 ச. அடி பரப்புடைய (சுற்
போதைய கட்டிடத் தொடரில் தெற்கு) கட்டிடத்திற்கான ஆயத்
தங்கள் வேகமாக நடைபெற்றன. ஊரில் பணத்திரட்டியும், பனை
கள் தறித்தும் சிரமதான வேலைகள் மூலமும் பிடியரிசி மூலம
சேர்த்த பணமும் கொண்டு பூர்த்தியான நிலையில் 1928 விஜய
தசமியிலன்று கட்டிடப் பிரவேசமும் சைவாசார முறைப்படி
நடைபெற்றது. கட்டிட ஆரம்பம் தொடக்கம் ஸ்ரீமான் சு. இராச
ரத்தினம் அடிக்கடி வந்து உற்சாகப்படுத்திச் சென்றதும் கட்டிட
வேலைகள் விரைவாகப் பூர்த்தியாக உதவியது. பெற்றாரும்
மாணவர்களும் இராசரத்தினம் அவர்களை இறை தூதர் போலக்
கருதி பெருமதிப்புச் செய்தனர்.



சை. வி. சங்கம் மேலும் வேண்டிய ஆசிரியர்களையும்
தளபாடங்களையும் உதவியது. சை. வி. ச. காரியதரிசியும்,
குறித்த பாடசாலைகளின் வித்தியாதரிசியுமான செ. மயில்வாக
னம் அடிக்கடி வந்து பார்வையிட்டு குறைபாடுகளை நிவர்த்தி
செய்தார். 1.9.1928-ல் வே சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலை
மையாசிரியராக நியமனமானார். அரசாங்க உதவிப்பணம் பெறு
வதற்கான பதிவு பெறுவதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் நிய
மனம் வற்புறுத்தப்பட்டது. முதலாவது பயிற்சி பெற்ற உதவி
யாசிரியராக 1930 புரட்டாதியில் சி. விசுவலிங்கம் அவர்கள்
நியமனமானார். முன் என்றுமில்லாதவாறு பெண் பிள்ளைகளும்
வந்து அரைவாசித் தொகையினராகச் சேர்ந்தனர். இதனால்
பயிற்சி பெற்ற உதவியாசிரியை நியமனமும் வற்புறுத்தப்பட்டது.
பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் அயலேயுள்ள கிறீஸ்தவ பாட
சாலை உதவியாசிரியையாக இருந்த செல்வி சின்னாச்சிப்பிள்ளை
சிதம்பரப்பிள்ளை மதம் மாற்றப்பட்டு இப்பாடசாலையின் முத
லாவது பயிற்சி பெற்ற உதவியாசிரியையானார். உதவி நன்
கொடை பெறும் பாடசாலையாக 1932-ல் அங்கீகாரமானது.
எஸ். எஸ். சி (9-ம் வகுப்பு) வைப்பதற்கான உத்தரவும் கிடைக்
கப்பெற்று புதுப் பொலிவுடன் உயர்தர பாடசாலையானது.

ஆரம்ப பாடசாலைப் படிப்புடன் முடித்துக் கொண்டு பிற
வேலைகட்குச் சென்ற மாணவர்கள் கூட மீண்டும் இப்பாட
சாலையில் வந்து சேர்ந்து எஸ். எஸ். சி சித்தியடைந்து சைவ
ஆசிரிய கலாசாலை சென்று பயிற்சி பெற்று ஆசிரியர்களாகப்
பணி புரிந்தோரும் உண்டு.

சைவச் சூழலில் தமது பிள்ளைகட்கு கற்பிக்கும் வாய்ப்
பினையெண்ணி உவகை கொண்ட பெற்றார் மிஷன் பாடசாலை
யில் படித்த தமது பிள்ளைகளின் பாடசாலை விடுகைப் பத்திரம்
எடுக்க முயன்றனர். வந்தது மோதல். வாதப் பிரதிவாதங்கள்.
புனை பெயரில் கண்டன வெளியீடுகள். வித்தியா பகுதியாருக்கு
மனுக்களும் தொடர்ந்து விசாரணைகளும் பலப்பல. எனினும்
பல மாணவர் விடுகைப் பத்திரம் பெற்று வந்து சேர்ந்தனர். இத
னால் வளர்ந்த மனஸ்தாபம் காரணமாக பாடசாலை சார்பில்
வே. சி. அவர்களும் எதிராக வேறும் வரகவி யொருவரும் கவி
பாடி, வசைபாடி சொல்லடிபட்ட சம்பவங்கள் பல. வே. சிதம்
பரம்பிள்ளை அவர்கள் 1938 புரட்டாதியில் ஓய்வு பெற ஆசிரிய
மணி ம. வைத்தியலிங்கம் - உடுப்பிட்டி அவர்கள் தலைமை
யாசிரியரானார் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பேராசிரிய
ராக இருந்து அனுபவமிக்க ஒருவர். அவரது தலைமை இப்பாட
சாலையின் பொற்காலம் எனலாம். பாடசாலை வளர்ச்சி கண்டு

அயற் கிராமங்களிலுமிருந்தும் பல மாணவர் வந்து 9-ம் வகுப்புச் சித்தியடைந்து ஆசிரியர்களாகவும் வேறு துறைகளிலும் கடமையாற்றியுள்ளனர். மாணவர் தொகை கூடிய போது போதிய கட்டிடமில்லாக்குறை. கிழக்குப் புறமாயுள்ள தற்காலிக் கட்டிடத்தை எடுத்துவிட்டு 1500 ச. அடி வரை கொண்ட நிரந்தர கட்டிடமொன்றை நமதூர்ப் பெரியாரும் மலேயா வைத்தியத் துறையில் சேவையாற்றியவருமான டாக்டர் சி. பொன்னையா அவர்கள் தமது முழுப் பொறுப்பில் கட்டி உபகரித்தார்கள்.

மேற் கொண்டும் மாணவர் தொகை கூடியதால் வடபுறமாயுள்ள நிலத்தில் ஒன்றரைப் பரப்பு சின்னத்தம்பி பொன்னையா அவர்கள் வாங்கி சை. வி. சங்கத்திற்கு உபகரித்தார், ம. வைத்தியலிங்கம் அவர்கள் சை, வி. வி. சங்க நிர்வாகசபையிலும் இடம் பெற்றமையாலும் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவராயிருந்து பெரும் புகழும் பெற்றிருந்தமையாலும் அவரது தீவிர முயற்சியால் மேலும் 1800 ச. அடி வரை பரப்புக் கொண்ட கட்டிடத் தொடரில் வடபுறக் கட்டிடம் சை. வி. வி. சங்கத்தாரால் விரைவில் உருவாக்கப்பட்டது; மேலும் குறித்தநன் கொடைக் காணிகட்கு வடபுறமாயுள்ள ஆறு பரப்புக் கொண்ட காணி சங்கம் வாங்கி விளையாட்டிடமாக்க உதவியது. ஸ்தல மானேசராக சின்னத்தம்பி பொன்னையா அவர்கள் நியமிக்கப் பட்டார்;

1962-ல் பிரதான பாடமாக பன்ன வேலை கற்பித்தல் வேண்டுமென்பது வித்தியா பகுதியாரின் தீர்மானமானது அதற்கான கட்டிடமமைக்க நிலமில்லாதிருந்த போது திரு. நா. அம்பலவாணர் ஆசிரியரால் பாடசாலை ஒழுங்கையில் மேற்கு அருகிலுள்ள சுமார் ஆறு பரப்புக் காணி நன்கொடையளிக்கப்பட்டது. இரண்டு பன்ன வேலையாசிரியைகளும் நியமனமாகி 3-9 வகுப்பு மாணவர்க்குப் பன்ன வேலை கற்பிக்கப்பட்டது.

ஆசிரியமணி ம. வை. ஓய்வு பெற சிரேஷ்ட உதவியாசிரியராகவிருந்த சி. விசுவலிங்கம் அவர்கள் 16.7.1962-ல் பதில் தலைமையாசிரியராகி 30.5.63 வரை சேவையாற்றினார். பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதியது. தொடர்ந்து காரைநகர் க. நல்லதம்பி அவர்கள் தலைமையாசிரியராக மாற்றம் பெற்று வந்து சில மாதங்கள் சேவையாற்றினார்

தொடர்ந்து திருநெல்வேலி ஆ. க. பேராசிரியராகவிருந்த பண்டிதர் ஆ. சின்னத்துரை - இடைக்காடு, 1-1-64-ல் தலைமையாசிரியரானார், இவர் காலத்தில் வழமைப் பிரகாரம் மாலை



நேர வகுப்புக்கள் வைத்து உயர்தரப் பரீட்சைகட்கான ஆயத்தங்கள் நன்கு செய்யப்பட்டமையால் எஸ். எஸ், சி. சித்தி வீதங்களும் கூடுதலாகவிருந்தன. அதிகாலை வந்து மாலை இருட்டும் வரை தமது நேரத்தை படிப்பித்தலிலும் பாடசாலைப் புற வேலைகளிலும் செலவழித்தார்,

க. இ. குமாரசாமி இப்பாடசாலைத் தலைமையாசிரியராக 1.1.68-ல் மாற்றம் பெற்று வந்து 31.12.70 வரை சேவையாற்றி ஓய்வு பெற நேர்ந்தது. வடக்கு கிழக்கு கட்டிடங்களின் கோப்பிய வேலைகள் பழுதடைந்திருந்தன. இவை முற்றாகத் திருத்தியமைக்கப்பட்டன. அப்போதைய கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் மு. பா: உதவியுடன் பாடசாலைக் கந்தோரும் மனையியல் கூடமும் சேர்ந்த கட்டிடமமைக்கப்பட்டது. மேற் கொண்டு பழைய மாணவர் சங்கத்தார் உதவியுடன் குருமணி வே. சிதம்பரப்பிள்ளை திறந்த வெளியரங்கும் அமைக்கப்பட்டு பிரதி வருடமும் பெற்றாராசிரியர் சங்க வருடாந்த விழாக்கள் பொதுக் கூட்டங்கள் குறித்த அரங்கில் நடத்தற்கான வாய்ப் பேற்படுத்தப்பட்டது. வருடந்தோறும் நடைபெற்று வந்த விளையாட்டுப் போட்டி நடத்துவதற்கு பாடசாலைக்குரிய காணி போதாமையால் வடபுறமாயுள்ள தனியார் காணியொன்றில் தற்காலிகமாகக் குறித்த போட்டி நடத்தப்பட்டது. குறித்த காணி உரிமையாளர் சம்மதத்துடன் உரிய காணி வாங்க உரிய முறைப்படி அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தும் இரு முறையும் நிதியுதவி கிடைக்கவில்லை வித்தியாசாலையின் விளையாட்டுப் போட்டிக்கும் உதவுமுகமாக கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு நீண்ட காலக் குத்தகைக்கு ஓர் விளையாட்டிடம் பெறப்பட்டுள்ளது.

1,1,1971-ல் குருமணி வே. சிதம்பரப்பிள்ளை அவர்களது மகன் வே. சி. சுந்தரசிங்கம் தலைமையாசிரியரானார். இவர் காலத்தில் விஞ்ஞான கூடம், பாலர் கூடம் என்பன நிறுவப்பட்டன. அரசினரின் புதிய கல்வித் திட்டத்திற்கமைய விவசாயம் கட்டாய பாடமான போது பாடசாலையின் வடபுறமாயிருந்த சிறு விளையாட்டிடமும் தோட்டமாகியது. இந்த நிலையும் பாடசாலைக்கு ஓர் விளையாட்டிடத் தேவையையதிகரிக்கச் செய்தது.

இப்பாடசாலையின் பழைய மாணவருள் ஒருவரான மு. நல்லையா அவர்கள் 1,1,79-ல் அதிபரானார். இவர் காலத்தில் பாடசாலையின் தேவைகள் பல பூர்த்தியாக்கப்பட்டு தரத்திலும் சிறப்படைந்தது. மகா வித்தியாலயமாக்கும் முயற்சிகளும் ஆரம்பித்தன. வித்தியாலயத்தின் மேற்குக் காணியில் நிலை

யான இரு கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தார் பழைய மாணவர் சங்கத்தார் முயற்சியால் வைர விழா கொண்டாடுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு மலருக்கான சில கட்டுரைகளும் பெறப்பட்டன. பழைய மாணவர் சங்கத்தாரின் முயற்சியால் வைர விழா ஞாபகார்தக் கட்டிட வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன, முதலாவதான தெற்கு மண்டபம் முழுவதும் மறுசீரமைக்கப்பட்டு நிலையானதொரு கட்டிடமாக்கப்பட்டது. குறித்த கட்டிடத்தில் 1927-ல் அத்திவாரக்கல் நாட்டிய சைவ வித்தியா விருத்திச் சங்க மானேசர் சு. இராசரத்தினம் அவர்கள் நினைவுக்கல் பதிக்கவும் கட்டிடத்தில் படம் திறந்து வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது,

இந்த நிலையில் 10.10.87 தொடக்கம் நமது கிராமத்தில் நடந்த மோசமான செல்லடிக்குப் பயந்தும், கிராமத்தை விட்டு உடன் வெளியேறுமாறு கூறிய இராணுக் கட்டளைக்குப் பயந்தும் எல்லோரோடும் சேர்ந்து பல கிராமங்கட்கும் அகதிகளாக அலைந்து திரிந்து கொண்டிருந்த வேளையில் வித்தியாசாலையின் பிரதான கோர்வைகளுடன் வைர விழாச் சம்பந்தமான கோர்வைகளையும் எடுத்து பத்திரமாக வீட்டில் வைத்து விட்டு வருவதாகச் சொல்லி வந்தவர் திரும்பவில்லை. உரிய கோர்வைகள் வீட்டில் வைத்து விட்டுத் திரும்பும் போது இந்தியராணுவ குண்டடிபட்டு அகால மரணமடைய நேரிட்டது (தொடரும்)

(வெள்ளி விழா மலருக்கென எழுதியது)

## சரவணபவானந்த வித்தியாசாலை — விளையாட்டிடம்

எமது பாடசாலைக்கு விளையாட்டிடமில்லாக்குறை நீண்ட காலமாக நிலவிவந்தது, ஆரம்பத்தில் பாடசாலை வளவில் வடபுறமாகவுள்ள காணியே விளையாட்டிடமாகவிருந்தது. நாளடைவில் கட்டிடங்கள் கிணறு விவசாய பாடத்திற்கான தோட்டம் என்பனவற்றிற்கு எடுக்கப்பட்டதால் விளையாட்டிடம் சுருங்கியது உயர்தரப் பாடசாலையால் விளையாட்டுப் போட்டிகள் நடத்த வேண்டிய அவசியமிருந்தது. வடக்கேயுள்ள தனியார் காணிகளை சிறிது காலம் பாவித்தோம். முந்தல் எனும் காணி அரச வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டு எடுக்கப்பட்டு மூன்று வருடங்கள் விளையாட்டிடமாயிருந்தது. குறித்த காணி உறுதி உரிமையாளரால் எடுக்கப்பட்டு மு. பாலசுந்தரம் நியாயவாதி மூலம் முறையிடப்பட்ட போது கைவிடப்பட்டது.



தொடர்ந்து பாடசாலை வடக்கு அருகுக் காணியை அரச உதவியுடன் வாங்கி பாடசாலை மிகுதிக் காணியுடன் சேர்த்து விளையாட்டிடமாக்க முயற்சி நடந்தது உரிய முறைப்படி இரு முறை முயற்சித்தும் கைகூடவில்லை, உரிமையாளர் வேறு பேருக்கு விற்று விட்டார். பாடசாலைக்கு அண்மையிலுள்ள சிதம்பரபுண்ணியம் காணி கோப்பாய் வடக்கு சிகரெற் புகையிலைச் சங்கம் 50 வருடக் குத்தகைக்கு எடுத்து நடத்தியது. சங்கம் செயலிழந்ததால் 12.8.79 ல் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 50 வருடக் குத்தகைக்கு எடுத்தது கோப்பாய் கிராம சபை விசேட ஆணையாளர், கழகம் அனுசரணையுடன் பாடசாலை விளையாட்டிடமாகப் பாவித்தது. 600 ற்கு மேற்பட்ட மாணவர் 32 ஆசிரியர்கள் உள்ள எமது உயர்தர பாடசாலையும் விளையாட்டிடமாகப் பாவிக்க எழுத்து மூலமான அனுமதி பெற்று கல்வித் திணைக்களம் உள்ளூராட்சி மன்றம் என்பனவற்றின் அங்கீகாரத்துடன் 1980 தொடக்கம் விளையாட்டிடமாகப் பாவிக்கப்பட்டு வந்தது.

1987-ல் இவ்விடத்தில் தனியார் ஒருவர் பாலர் பாடசாலையமைக்க எடுத்த முயற்சி விசாரணையின் பின் கைவிடப்பட்டது, குறித்த காணியில் எல்லாரும் வணங்கும் வைரவ கோயிலொன்றுண்டு. யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திலமைந்துள்ள வைரவ கோயில் போல ஆரம்ப வேளைகளில் மாணவர் ஆசிரியர் இதில் வழிபடுவர் குறித்த ஆலயத்தை விட அருகில் சுமார் 5 அடி அளவுகள் கொண்ட சிறிய கோயில் நிறுவி அம்மா ஒருவர் உருவாடி, விளையாட்டிட நடுவில் கிணறும் தோண்டப்பட்டது. இது சம்பந்தமாய் 1.4.93 ல் கச்சேரி நீதிமன்று விசாரணையின் பின் காவல் துறையும் நின்று கிணறு மூடப்பட்டது, குறித்த மாணவர் வருவதற்கு வசதியாக வட புறமாயுள்ள ப. நோ. கூ. ச. காணியில் 12' பாதையும் பெறப்பட்டுள்ளது 1993 விளையாட்டுப் போட்டியில் சிறிது தடங்கல் ஏற்பட்டபோதும் அயலேயுள்ள தனியார் காணியையும் உபயோகித்து போட்டி நடந்தேறியது, 1994-ல் விளையாட்டுப் போட்டிக்கான சகல ஆயத்தங்களும் செய்த போதும் இடையில் போடப்பட்ட வேலியொன்று தடையாக விருந்தது கல்வி மேம்பாட்டுத்துறைக்கு விபரமாக அதிபராலும், விளையாட்டுத்துறைக்கு கழகத்தாராலும் விண்ணப்பிக்கப்பட்டன. கல்வி மேம்பாட்டுத்துறை இளங்குமரன் அவர்கள் நன்கு விசாரித்த பின் காவல்துறையின் தலைமையாளர் அனுசரணையுடன் வேண்டியவ செய்து இப்பகுதிக்குரிய சுன்னாகம் தலைவர் உரியவர்களுடன் மாலை 6 மணிக்கு எல்லார் முன்னிலையிலும் உரிய வேலியை வெட்டி அப்புறப்படுத்தி ஆவன

செய்ததால் மறுநாள் உரிய போட்டி சுமுகமாக நடைபெற்றது. நீதிமன்று அழைப்பாணையின் பேரில் யான் மூன்று முறை சென்று குறித்த விளையாட்டிடம் பாடசாலைப் பாவிப்பிலிருந்தது இருக்க வேண்டியது என்று ஆதாரங்களுடன் சாட்சியமளித்துள்ளேன். நா. சண்முகரத்தினம் அதிபருடன் நீதிமன்றத் தலைவர் உள்ளிட்டோருடனும் கல்வித் திணைக்களத் தலைவர்களுடனும் சென்று முறையீடு செய்திருந்தோம். ச. நவரத்தினம் ஆசிரியர். தி. அரசபிள்ளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பேரில் சமுகமளித்து பெரும் பணியாற்றினர், சீரான நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த விளையாட்டிடத்தை நன்னிலையில் வைத்திருக்க பழைய மாணவர் – விசேடமாக பெற்றார் தமது பிள்ளைகளின் நலன் கருதியாவது கவனத்துடனிருக்க வேண்டும். பராதீனமானவிருந்தால் எதிர் காலச் சந்ததி திட்டும்.

மேலும் குறித்த விளையாட்டிடம் சம்பந்தமாய் முயற்சித்த அதிபர் திருமதி கனகராசா அவர்கள், பல இன்னல்பட்டும் மனந்தளராது பின் வாங்காது முயற்சித்த ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தார். அபாயச்சங்கு ஒலித்தபோதும் பின் வாங்காது என்னையும் அழைத்துச் சென்று சுமுக நிலையேற்படுத்திய அதிபர் நா. சண்முகரத்தினம் அவர்கள். இவர்கட்கு வித்தியாசாலை மாணவர், பழைய மாணவர், பெற்றார் நன்றி பாராட்டும் கடமைப்பாடுடையர்.

## சரவணபவானந்த வித்தியாசாலை

| தலைமையாசிரியர் | | சேவைக்காலம் |
|---|---|---|
| வேதாரணியக் குருக்கள் | கோப்பாய் தெற்கு | 1920 புரட்.—மார். |
| இரத்தினசபாபதிக் குருக்கள் | கோப்பாய் தெற்கு | 01-01-27—01-09-28 |
| குருமணி வே. சிதம்பரம்பிள்ளை | ,, | 02-09-28—30-09-38 |
| ஆசிரமணி ம. வைத்திலிங்கம் | உரும்பிட்டி | 01-10-38—16-07-62 |
| சி. வீசுவலிங்கம் | | 01-08-62—30-12 63 |
| பண்டிதர் ஆ. சின்னத்துரை | இடைக்காடு | 01-01-64—30-12-67 |
| க. இ. குமாரசாமி | | 01-01-68—31-12-70 |
| வே. சி. சுந்தரசிங்கம் | | 01-01-71— 78 |
| மு. நல்லையா | | 01-01-79— |



## கோப்பாய் நாவலர் வித்தியாசாலை

1872 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் திண்ணைப் பாடசாலைகளே நடைபெற்று வந்தன. பெரும்பாலும் ஆண் பிள்ளைகளே படித்தனர். ஆரம்பத்தில் அரிவரி எழுத்துக்கள் மண்ணிலும், பின் ஓலைச் சட்டங்களில் எழுத்தாணி கொண்டு எழுதியே படித்தனர். நிகண்டு, புராணம் கணக்கு என்பனவே பெரும்பாலும் கற்பிக்கப்பட்டன. வாய் மொழிப்பாடமே கூடுதல் எழுதத் தெரிந்தவர் தொகை – படிப்பு வீதம் மிகக்குறைவு. கையெழுத்துப் போடத் தெரிந்தவர்கட்கு நன்கு மதிப்பு. அதிகமானோர் சாதனங்கட்குக் கைப் பெருவிரலடையாளமே இடுவர்.

ஆறுமுக நாவலர் அவர்களால் வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் சைவ வித்தியாசாலைகள் நிறுவியது போன்று தமது குருவாகிய இருபாலைச் சேனாதிராச முதலியாரது ஞாபகார்த்தமாக கோப்பாயிலும் சைவப் பிரகாச வித்தியாசாலையொன்றை ஸ்தாபித்தார். ஆரம்ப வகுப்புக்களுக்குப் பின்னர் சமயம், இலக்கியம், கணிதம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆண்பிள்ளைகளே படித்தனர். நாவலருடைய மாணாக்கரே ஆசிரியர்களுமாயிருந்தனர், நாவலருக்குப் பின் அவர் மருகர் த கைலாசபிள்ளை அவர்கள் மானேசராயிருந்தார். பின் கோப்பாய் மு. சுவாமிநாதன் தலைமையில் இப்பாடசாலை நடந்தது.

ஆண் பிள்ளைகள் பாடசாலையில் பெண் பிள்ளைகளையும் சேர்ந்து படிக்க பெற்றார் விரும்பாத காலப் பகுதியது. ஆகையால் மு. சுவாமிநாதன் அவர்கள் பெண் மாணவியர் படித்தற்காக சபையார் பொது மக்கள் உதவியுடன் பிறிதொரு கட்டிடம் நிறுவி, சரஸ்வதி வித்தியாசாலையை ஆரம்பித்தார். மாணவியர் படிப்படியாகக் கூடி நன்கு நடைபெற்றது. 1930 அளவில் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங் காரணமாகவும் சைவப் பிரகாச வித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாசாலை இரண்டும் இணைக்கப்பட்டு கோப்பாய் மத்திய கலவன் சைவ வித்தியாசாலை எனப் பெயருமிட்டு சுவாமிநாதன் அவர்கள் மேற்பார்வையின் கீழேயே நடைபெற்றது. நீர்வேலி க. கார்த்திகேய ஐயர் தலைமையாசிரியராகவும் திருவாளர்கள் மு வேலாயுதபிள்ளை, பே. தம்பையா, பொ. மண்டலகேசரம், சு. முருகேசு என்போரும் திருமதி சரஸ்வதி குமாரசாமி, வி. செல்லம்மா, செல்லம் தம்பாபிள்ளை என்போரும் உதவியாசிரியர்களாகவும் இருந்தனர். பாலர் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ் சி. வரை நடைபெற்

றன. உயர் வகுப்புச் சித்தியடைந்தோர் ஆசிரிய கலாசாலை சென்று ஆசிரியரானோர் பலர். அயற் கிராமங்களிலிருந்தும் பலர் வந்து படித்துப் பயன் பெற்றனர்.

கோப்பாயைச் சேர்ந்த திருமதி சின்னாச்சிப்பிள்ளை வைரமுத்து கழுத்துறை பன்ன வேலைப் பயிற்சிக் கலாசாலை சென்று பயிற்சி முடித்துத் திரும்பினார், குறித்த வளவில் மேற்குப் புறமாய் பன்ன வேலைக்கெனக் கட்டிடமொன்று நிறுவப்பட்டது, பன்ன வேலையை கட்டாய பாடமாக அரசு அங்கீகரித்துமிருந்தது, பாடசாலைப் பெண் பிள்ளைகள் 3-ம் வகுப்பிலிருந்து ஒரு பாடமாகக் கற்றனர். எஸ். எஸ். சி. சித்தியடைந்த பெண் பிள்ளைகள் முழு நேரமாக விருந்தும் படித்தனர். பன்ன வேலைக்கைத்தொழிற் பாட வித்தியாதரிசியான தோமஸ் என்பவர் வருடந்தோறும் வந்து பரீட்சிப்பார். இறுதி வகுப்பில் சித்தியடைந்தோர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள வித்தியாசாலைகளில் பன்ன வேலை ஆசிரியைகளாக நியமனம் பெற்றனர். இந்த வகையில் சுமார் 75ற்குக் கூடியோர் ஆசிரியைகளாயினர்.

திரு. மு. சுவாமிநாதனால் குறித்த பன்ன வேலைக் கட்டிடத்தருகே பிறிதொரு கட்டிடமமைத்து நெசவு வேலையும் தொடங்கப்பட்டது. வி. கனகசபை அவர்கள் நெசவு ஆசிரியராகச் சேவையாற்றினர். பாடசாலையை விட்டு வெளியேறிய எஸ். எஸ். சி. சித்தியடைந்த மாணவர்களும் இப்பாடசாலையில் படித்துப் பயன் பெற்றனர்,

வித்தியாசாலை மாணவர் தொகை கூடியது. போதிய கட்டிடமில்லாக் குறை நிலவியது. பாடசாலையோடு சேர்ந்த மேற்கு வளவில் சுமார் 2500 ச. அடி கொண்டதொரு உறுதியான கட்டிடமொன்று டாக்டர் B. S. சுப்பிரமணியம் அவர்கள் பேருதவியால் உருவானது. இக்கட்டிடத்தில் கூரை வேலைகட்கு பாடசாலையாசிரியர்கள் தாமாகவே முன் வந்து பேருதவி புரிந்தனர். கட்டிட வேலைகள் பூர்த்தியானதும் யாழ் மாவட்ட அரச அதிபர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் திறந்து வைத்து உரையாற்றுகையில் பேருதவி புரிந்த டாக்டருக்கும் ஆசிரியர்கட்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்துப் பேசியமை வீரகேசரியிலும் வெளியானது. 400ற்கு மேற்பட்ட மாணவர் படித்தனர். இப் பாடசாலையின் கிழக்குப் புறமாயிருந்த சிதம்பர புண்ணியம் காணி இப்பாடசாலைக்கு விளையாட்டிடமாக விருந்தது. 1960-ல் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்ட போது மேற்குப் புறமாய் புதிதாயமைக்கப்பட்ட கட்டிடம் சேர்க்கப்படவில்லை. அது மானேசர்க் குரியதான கட்டிடமாகவே கருதப்பட்டு புறம்பாக வேலி




போடப்பட்டு மானேச்சர் உரித்தாளர்களின் மேற்பார்வையிலிருந்தது. 1987 அளவில் குறித்த கட்டிடம் உரித்தாளர்களினால் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

1970 அளவில் நாவலர் பெருமானால் அமைக்கப்பட்ட முதல் கட்டிடம் உருமாறாது புனரமைக்கப்பட்டது. குறித்த கட்டிடத்தில் நடந்த, பழைய மாணவர் சங்கத்தாரால் கொண்டாடப்பட்ட நாவலர் நூற்றாண்டு விழா ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் ஆரம்பமானது, பிரதம பேச்சாளராக வந்திருந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது பேச்சையாரம்பிக்கும் போது எழுந்ததும், குனிந்து நிலத்தை இரு கைகளாலும் தொட்டு கண்ணிலொற்றி 'நாவலரையா கால் பட்ட மண் தூசுக்கு வணக்கம்' என முதற்கண் கூறியதும் திரண்டிருந்த மக்களனைவரும் புளகாங்கிதமடைந்து பேருவகை கொண்டனர்.

1980 தொடக்கம் பழைய மாணவர் சங்கத்தின் பிரதான நிர்வாகிகளாயிருந்த திருவாளர்கள் மூ. சிவசுப்பிரமணியம், சி. தம்பித்துரை என்போர் முயற்சியால் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் ஆலோசனையின் பேரில் வித்தியாசாலை முன்றிலில் நாவலர் சிலை நிறுவும் பெரும் பணியாரம்பமாகி பூர்த்தியாக்கப்பட்டு கோலாகலமான முறையில் திறப்பு விழாவும் நடைபெற்றது.

நீண்ட காலம் தலைமையாசிரியராக விருந்த திரு. சு. கார்த்திகேசு ஐயர் 1965-ல் ஓய்வு பெற்றார். தொடர்ந்து மு. வேலாயுதபிள்ளை எஸ். வல்லிபுரம், சு. கனகசபை என்போர் தலைமையாசிரியர்களாகச் சேவையாற்றினர். 1.3.91 தொடக்கம் த. குணசேகரம் அவர்கள் அதிபராகச் சேவையாற்றுகிறார். தற்போது 5-ம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சை, விளையாட்டுப் போட்டி என்பனவற்றில் பெற்றாரதும் கல்விப் பகுதியாரதும் நன்மதிப்பையும் பெற்று முன் மாதிரியாகத் திகழ்கிறது. 1960-ல் பாடசாலைகள் சுவீகரிப்பின் பின் பாடசாலையில் நடைபெற்ற பன்ன வேலை முதலான விசேட பயிற்சிகள் நின்றன. பின்னர் 1972-ல் தேசியக் கல்வித் திட்டப்படி புனரமைக்கப்பட்ட போது இப்பாடசாலையும் இடை நிலைப் பாடசாலையானது.

| பாடசாலைகள் | மாணவர் | ஆசிரியர் | ஆரம்பம் | ஆரம்பித்தவர் |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவக் கல்லூரி | 1113 | 38 | 1831 | CMS மிஷன் |
| நாவலர் வித். | 664 | 18 | 1872 | ஆறுமுகநாவலர் |
| சரவணபவானந்த வித். | 534 | 23 | 1926 | சை. வி. வி. சங்கம் |
| மகா வித்தியாலயம் | 469 | 17 | 1923 | அரசினர் |
| கந்தவேள் வித். | 176 | 04 | 1954 | க. கந்தையா ஆசி. |
| கோப். வடக்கு றோ. க. | 142 | 04 | 1936 | றோ. க. மிஷன் |
| இருபாலை சி. சி. | 120 | 07 | 1850 | CMS மிஷன் |
| கோ. தெற்கு றோ. க. | 120 | 04 | 1956 | றோ. க. மிஷன் |
| கோ. வடக்கு சி. சி. | 49 | 02 | 1929 | சாலவ. சின்னப்பா |
| பூதர்மடம் அர. த. க. | 40 | 01 | 1958 | சி. சண்முகம் |





# கோப்பாய் மணியகாரன் அரச செயலகம்

1925 காலப் பகுதியில் கிராம ரீதியாக விதானைமார், கோயிற்பற்றுக்கு உடையார் பெரும் பிரிவுகட்கு மணியகாரன் என்ற ரீதியில் ஆட்சிமுறை நிலவியது. மாகாண அதிபர் தேசாதிபதி என்போர் இவர்கட்கு மேல் கோப்பாய் வடக்கிற்கு அ. காசிலிங்கம் விதானையார், கோப்பாய் தெற்கிற்கு கந்தா விதானையார், இவர்கட்குமேல் கோப்பாய் கோயிற்பற்றுக்கு அப்புத்துரை உடையார், வடமராட்சி - வலிகிழக்குப் பெரும் பிரிவுகட்கு கரவெட்டி வேலுப்பிள்ளை மணியகாரன் என்போர் சேவையாற்றினர். இவர்கள் விசேட வைபவங்களின் போது வெள்ளையுடுப்புக்களும் தலைப்பாகையும் அணிதல் கட்டாயவிதி, நீளமான காற்சட்டை முழங்கால் வரை நீண்ட மேலங்கி, தலைப்பாகை அகலமான மீசை, கடுமையான பேச்சு இவையே குறித்த வேலுப்பிள்ளை மணியகாரனது தோற்றம். இவர்கள் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பதனோடு மக்களிடையேயுண்டாகும் பிணக்குகளைத் தீர்க்கும் நீதிபதிகளுமாயிருந்தனர். இவர்கள் போன்றார் பெருமையை இன்றும் நம்மிடையே யான்... மணியகாரன் வம்சம் என்று கூறிப் பெருமையையடைபவர்களைக் காணலாம். வேலுப்பிள்ளை மணியகாரனைத் தொடர்ந்து கோப்பாய் தம்பிப்பிள்ளை மணியகாரனும் இதே ரீதியில் சேவையாற்றி மக்கள் பெருமதிப்புக் குரியவராக வாழ்ந்தார்.

கிராம மக்கள் தொழில் கருதியும் பாதுகாப்புக் கருதியும் குறிச்சி ரீதியாகக் கூட்டங் கூட்டமாகவே வாழ்ந்து வந்தனர். சாதி சமய பாகுபாடுகளும் கட்டுக் கோப்புகளும் வலுப் பெற்றி

குந்தன. இவர்கள் மத்தியில் பெரிய ஆலயங்களில் வருடாந்த
விழாக்களும் குடியிருப்புக் குறிச்சிகளில் உள்ள அண்ணமார் காளி
வைரவ கோயில்களில் வருடாந்தப் பொங்கல்களும் இடம் பெற்
றன. பொதுவாக மக்களிடையே சாதித்தியமிடுக்கு நிலவியது.

இந்த விதமான வாழ்க்கை முறையை விட சில கிராமங்
களில் சண்டியன்மாரும் அவர்களுக்குப் பின்னால் ஒரு ஆதர
வாளர் கூட்டமும் காணப்பட்டது. இவர்கள் பெரிய ஆலயங்
களில் நடைபெறும் மேளக்கச்சேரியின் போதும். சின்னமேளம்
என்னும் சதிர்க் கச்சேரி நடக்கும் போதும் சவாரி மாட்டு
வண்டிற் போட்டிகள் நடக்கும் போதும் முன்னணியில் நின்று
தங்களைப் பகிரங்கப்படுத்திக் கொள்வர். இந்தச் சண்டியர் கூட்
டத்தை விட பெயருக்கு முன்னால் அவர்கள் ஊர்ப் பெயர்களுஞ்
சேர்ந்த கந்தசாமி (வல்வெட்டித்துறை), இராசா (புலோலி).
துரையன் (சங்கானை), நாகலிங்கம் (கைதடி). சண்முகம் (அழுக்
கடை) போன்ற நாட்டாண்மைக்காரரும் இருந்தனர். தென்னிந்
தியாவில் தற்போது சந்தனக் கடத்தல் மன்னன் பெயர் அடி
படுவது போல இவர்கள் பெயரும் இக்கால கட்டத்தில் ஓரளவு
பலராலும் அறியப்பட்டுப் புழக்கத்திலிருந்தன. கிராம மக்கள்
இந்த வகையினருக்குப் பயத்தினால் மரியாதை காட்டினர் அரச
உத்தியோகத்தர்களும் இவர்களைக் கண்டால் பெயரை உரக்கச்
சொல்லி மரியாதை செய்வது போல் பாசாங்கு காட்டியனுப்பு
வர். பன்றி வழியில் குறுக்கிடும் போது அகளிலும் பல நூறு
மடங்கு பெலமும், பருப்பமுடைய யானை தான் வழி விலகிச்
செல்லல் இயல்பு, மாகரத்தயானை வழி விலகிச் செல்லல் சூகரத்
துக் கஞ்சியோ சொல் - என்கின்றது பாடலொன்று.

இந்த வித ஆட்சி முறை நீங்கி டொனமூர் அரசியல் தி-
டத்தின்படி 1931 அளவில் காரியாதிகாரி முறை ஏற்பட்டது. ஒவ்
வொரு பெரும் பிரிவுக்கும் ஒவ்வொருவர் நியமனமானார். கல்
வித் திறமையும் ஓரளவு குடும்பப் பெருமையும் நோக்கி நியமிக்
கப்பட்ட மணியகாரன் முறைமாறி கல்வித் தகமையுடன் உரிய
பரீட்சையிலும் சித்தியடைந்தவர்கள் நியமனமாகினர். இந்த
வகையில் வலிகிழக்கில் நியமனமான முதல் காரியாதிகாரி தெய்
வேந்திரம்பிள்ளை அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்தவர்.
சிரித்த முகம் தண்ணளியான பேச்சு பிரச்சினைகள் அதிகார
தோரணையின்றி ஆறுதலாகப் பேசி சமரசப்படுத்தியனுப்பும்
போக்கு இவருக்குக் கை வந்ததொன்று. இதனால் இவர் பெரு
மதிப்புக்குரியவரானதுடன் காரியாதிகாரி முறைக்கும் பெரு வர
வேற்புக் கிடைத்தது. பூதர்மடம் ஒழுங்கையிலுள்ள நொத்தாரிசு
ஆறுமுகம் வீடு இவர் காரியாலயமாக அமைந்திருந்தது.



தொடர்ந்து இ. முருகேசம்பிள்ளை அவர்கள் காரியாதி
காரியாக நியமனம் பெற்றார். தற்போது அரச செயலகம் நடக்
குமிடத்திற்கு காரியாலயம் மாறியது. கந்தோருக்கு அண்மை
யிலுள்ள பழைய கோட்டை வளவிலுள்ள வீடொன்றின் இவர்
இருப்பிடம் அமைந்திருந்தது. இதனால் முழு நேர ஊழியனாகச்
செயலாற்ற வாய்ப்புக் கிடைத்தது. சாயந்தர வேளைகளில் கை
யில் பிரம்புடன் கிராமம் கிராமமாகக் கால் நடையாகச் சென்று
மக்களுடன் சம்பாசித்து குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி
செய்யும் பழக்கம் இவரிடமிருந்தது. முறையீடுகளை நயமாக
வும் பயமாக மிரட்டியும் இரு பகுதியாரையும் சமரசஞ் செய்த
காணி வழக்குகள், ஆலயத் தகராறுகள் குடும்பப் பிரச்சினைகள்
பல. கோப்பாய், அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிகள் உப்பாற்
றுத் திட்டம் என்பன இவர் செய்த பொதுச் சேவைகள் இன்
றும் இவரது ஞாபகச் சின்னங்களாக உள்ளன. 1949-ல் பிரத
மர் டி. எஸ் சேனநாயகாவிற்கு மனுச் செய்து யாழ் வருகை
தந்த போது தொண்டமானாறு கடலிடைப் பாலத்துக்கு அத்தி
வாரமிட்டது இவரது பெரு முயற்சியெனலாம்.

காலத்துக்குக் காலம் பல்வேறு திணைக்களத் தலைவர்கள்
அரசியல்த் தலைவர்களையும் சமூகத் தொண்டர்களையும்
அழைத்து பொருளாதார விவசாய கருத்தரங்குகள் வைத்து
எமது தொகுதியில் செய்த ஆக்க வேலைகள் பல. இவர் இட
மாற்றம் பெற்றுச் சென்ற போது நீர்வேலி அத்தியாரில் நடை
பெற்ற சேவை நலம் பாராட்டு விழா இப்பகுதியில் இன்று வரை
நடைபெறாததொன்று. இவர் யாழ் அரச செயலக உதவியதிப
ராக விருந்த போது 1971-ல் நீர்வேலி பல் நோ: கூ. சங்கத்தில்
ஒரு முழு நாள் கருத்தரங்கு வைத்து திட்டமிட்ட ஆக்கப்பணி
கள் பல. வவுனியா உதவியரசாங்க அதிபராயிருந்த போதும்
சேர் கந்தையா வைத்தியநாதனுடனிணைந்து திருக்கேதீஸ்வரம்
வாழ் இந்துப் பெருமக்கட்குச் செய்த பணிகள் பற்றி சேர் க. வை.
வெளியிட்ட வரலாற்று நூலில் விரிவாகவுண்டு இவர் பிறப்பிடம்
துன்னாலை தக்கோரும் நில நன்மை துன்னாலையின் மிடுக்குந்
தனமும் இவர் சேவைக்குப் பெரிதும் உதவியதெனலாம்.

ச. ஸ்ரீநிவாசன் - உடுவிலைச் சேர்ந்தவர் நாடெங்கிரியர் கி. மு.
சங்கங்கள் சொந்தக் கட்டிடங்கள் வாசிகசாலைகள் நிறுவப் பெரி
தும் ஊக்கியவர். 5.10.57-ல் சரவணபவானந்த வித்தியாசாலை
யில் ஒரு முழுநாள் சம்மேளனமும் ஆய்வரங்கும் நடத்தி பல ஆக்
கப் பணிகட்கும் வித்திட்டவர். அரசின் உதவி பெற்றுக் கொடுத்து
பல கி. மு சங்கங்கள் மைப வண்டில்களையும் அதன் பாதுகாப்
பிற்காக நிலையான கட்டிடங்களையும் நிறுவியவற்றுள் எமது
கிராமத்திலுமுள்ளது. யுத்தகால நெருக்கடியிலிருந்து மேலும்

பெரிய துணையாக விருந்து வருகிறது, 'விஷ்வஹிந்து பரிஷத்-'
உடுவில்கிளைக்கு தலைவராயிருந்த போது கிளிநொச்சியில் 154-க்
கட்டையடியில் வகுப்புக் கலவரத்தால் மலைநாட்டிலிருந்து இடம்
பெயர்ந்து வந்து குடியேறிய மக்களினால் அவ்விடமிருந்து
கொண்டு வரப்பட்ட விக்கிரகத்தை தாபித்துக் கட்டப்பட்டு
சைவாலயம் அயலேயுள்ள கிறிஸ்தவ மார்திரிமாரால் இடித்தழிக்
கப்பட்ட போது இரண்டு ''வான்''களில் 100 பேர் வரை சென்று
இலங்கைக் கிளையில் சார்பில் "எதிர்ப்புக் கூட்டம் வைத்துத் தங்
கியிருந்து ஆலயம் நிலை பெறுதற்கான யாவும் செய்த
தோடமையாது முல்லைத்தீவுக் கோட்டில் அது சம்பந்தமாக
வைத்திருந்த வழக்குகளுக்கு எவ்வித வேதனமும் பெறாது சக
நியாயவாதி திரு. சோமசுந்தரம் அவர்களுடன் சென்று வழக்
குகளைத் தள்ளுபடியாக்கச் செய்த சேவை அவ்விடத்திய சைவ
மக்கட்குச் செய்த பெருஞ் சேவையாகும். 1958 வகுப்புக் கல
வரம் காரணமாக தென்னிலங்கைக்குச் சுருட்டு அனுப்ப முடி
யாத போது கோப்பாயில் ஜெமினி பீடி உற்பத்திக்குப் பெரிதும்
பக்க பலமாக விருந்தார்.

சாவகச்சேரி ஜே. ரி. சபாபதிப்பிள்ளை அமைதியானவர். நேரத்தை
யைச் சேர்ந்தவராயிருந்தாலும் தமது பெரும் பகுதி
இவ்விடமேயிருந்து திறம்படச் சேவையாற்றியவர். மாதர் சங்
கங்களையும் கி. மு. சங்கங்களையும் உசார்ப்படுத்தி நெசவு, பன்
னம் முதலிய பல வேறு சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க
ஊக்கியதோடு 8 4.59-ல் நீர்வேலி அத்தியாரில் கலை கைப்பணி
விவசாயப் பொருட்காட்சியையும் தொடர்ந்து கலை விழாவும்
நடத்தி இப் பகுதி மக்களால் நன்கு கவரப்பட்டவராயிருந்தார்.
1936-ல் ஆரம்பித்த கி. மு. சங்கங்கள் 1951-ல் ஆரம்பித்த சன
சமூக நிலையங்கள் இவர் காலத்தில் புத்துயிர் பெற்று பேச்சு கட்
டுரைப் போட்டிகள் ஆண்டு விழாக்கள், கலையரங்குகள் வைத்து
நன்கு தொழிற்பட ஊக்கிய பெருமையும் இவர்க்குரியதாகும்.

வ. கந்தப்பிள்ளை – இவர் கோப்பாயைச் சேர்ந்தவர்.
அரச சேவையிருந்து உயர்ந்து 1943-ல் வவனியா காரியாதிகாரி
யாகச் சேவையேற்றவர். 1947 – 52 மாந்தைப் பகுதியில் சேவை
யாற்றிய போது திருக்கேதீஸ்வரத் திருப்பணிகளில் ஈடுபாடு
கொண்டுழைத்தவர். 1969-ல் கோப்பாய்ப் பகுதிக்கு இடமாற்
றம் பெற்று சேவையாற்றிய போது அரச திட்ட மாற்றத்தின்
படி உதவியரசாங்க அதிபராகி 1976 வரை பணியாற்றியவர்.
கோப்பாய்த் தொகுதியில் பரவலாக குடியேற்றத் திட்டங்கள்



சிறந்த வெளிமறியற்சாலை, கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள், சிறந்த வெளியரங்குகள் முதலிய ஆக்க பூர்வமான திட்டங்கள் பலவும் நிறைவேற உழைத்தவர்.

## அரசியல் மாற்றங்கள்

இலங்கையரசின் பாராளுமன்ற ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் 1960 லிருந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்தன. இக் காலப் பகுதியில் வடக்கே குறிப்பாக, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளும் அரசில் அங்கம் வகித்து மந்திரி சபையிலும் இடம் பெற்றனர். ஸ்ரீமான்கள் கு. வன்னியசிங்கம், எம். பாலசுந்தரம், சி. கதிரவேற்பிள்ளை என்போர் கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராகவும் சேவையாற்றினர். இடதுசாரிப் பா. உ. அவ என். எம் பெரேரா, பீற்றர் கெனமன், பிலிப் குணவர்த்தனா என்போரும் கூட்டாட்சியில் இடம் பெற்றனர். இதனால் அடி மட்டத்திலுள்ள வறிய மக்களுக்கான பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் கோப்பாய்த் தொகுதியின் உதவியரசாங்க அதிபர்களாயிருந்தவர்களும் பா. அ. உதவியுடன் இப்பகுதியிலுள்ள சமூக சேவையிலுள்ள சங்கங்கள் சமாசங்களை அமைத்து மக்கள் தேவைகளையறிந்து மனுக்கள் சமர்ப்பித்து செயற்பட்டதனால் பல ஆக்க பூர்வமான பின்வரும் திட்டங்களும் அரசின் உதவியுடன் நிறைவேறின. இவற்றிற்கு ஆதாரமாக கோப்பாய், உரும்பிராய் ஊரெழு. அச்சுவேலி இடங்களின் வறிதே கிடந்த மக்களுக்குரிய நிலங்கள் பயன்படுத்தப்பட்டன. அச்சுவேலியின் மேற்குப் புறமாய் ஏராளமான கலட்டி நிலங்கள் இருந்தமையால் அக்கால பெருஞ் செல்வந்தரும், செல்வாக்குப் பெற்றவருமான அச்சுவேலியைச் சேர்ந்த சிற்றம்பலம் ஹாட்டினர் பெரு முயற்சியில் இப்பகுதியில் பெரிய வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டுள்ளன.

## அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை

வேதாரணிய சேயோன் காலத்தில் இதற்காக 76 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது, சென்ற் திரேசாவுக்கு செல்வநாயகபுரத்துக்கு அண்மையில் இது அமைந்திருந்தது. அச்சுவேலி சிற்றம்

பலம் ஹார்டினர் அவர்கள் தூண்டுதல்களும் செல்வாக்கும்
அடிக்கடி நடைபெற்ற வகுப்புக் கலவரங்களும் காரணமாக
கொழும்பிலிருந்த பெரிய வர்த்தகப் பிரமுகர்களும் கைத்தொழில்
அதிபர்களும் இவ்விடத்தில் பாரிய கட்டிடங்கள் நிறுவி தொழிற்
சாலைகளை ஆரம்பித்தனர். தெல்லிப்பளை அன்பர் ஒருவரால்
சகல விதமான 'பெயின்ற்' வகைகளும் உற்பத்தியாக்கப்பட்டன
அலுமினியம் தொழிற்சாலை, பழரசம் அடைத்தல், கட்டிடப்
பொருட் கூட்டுத்தாபனத்தின் பாரிய தொழிற்சாலை முதலிய
14 தொழில்கள் இவ்விடம் ஆரம்பமாகின. ஏராளமானவர்
கள் இவ்விடங்களில் வேலை கொள்ளப்பட்டனர். அரசின் மறை
முக செயல்களால் வீழ்ந்திருந்த யாழ் - பொருளாதார பலம் மீண்
டும் தலையெடுக்க மேலும் இம்முயற்சிகள் பெரிதும் உதவின.
1983-ல் ஆரம்பித்த யுத்த காலக் கெடுபிடிகளால் இவை யாவும்
இராணுவத்தால் அழிக்கப்பட்டு கட்டிடங்கள் யாவும் நிர்மூல
மாக்கப்பட்டு தற்போது 1983 அளவில் இப்பால் போராளிகளும்
அப்பால் ராணுவமும் உள்ளதொரு பயங்கர சூன்யப் பிரதேச
மாகப் பரிதாபமான நிலையில் இவ்விடங்கள் காட்சியளிக்கின்
றன மீண்டும் இது உருப்பெற்று எம்மவர் பொருளாதார வளத்
துக்குப் பெருந்துணை புரியும் நாளை...

## பட்டு நூல் தொழிற்சாலை

கிராமிய விருத்தி இலாகாவால் திருநெல்வேலியில் இதற்
கான செடி வளர்க்கப்பட்டு, பட்டுப்பூச்சிகள் வளர்த்து நூல்
எடுக்கப்பட்டது, தொடர்ந்து புத்தூருக்கு மாற்றப்பட்டுச் சில
காலம் தொழிற்பட்டது. பின் கைத்தொழிற் பேட்டை ஆரம்பித்
ததும் இவ்விடத்துக்கு மாற்றப்பட்டு நூல் எடுக்கப்பட்டது. அர
சின் ஊக்கக் குறைவினாலும் இறக்குமதிப்பட்டுக்களோடு போட்
டியிடும் நிலையிலும் இது கைவிடப்பட்டது.

## பாலியக் குற்றவாளிகள் பாடசாலை

அப்போது இலங்கையிலமைந்திருந்த இரண்டிலிது வொன்
றாகும், ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்தது. கைத்தொழிற்
பேட்டையிலுள்ள பட்டு நூற்தொழிற்சாலையிடத்துக்கு இது
மாற்றப்பட்டது. 18 வயதிற்குக் குறைந்தவர்கள் இவ்விடம்
பாராமரிக்கப்பட்டனர் கோட்டில் விசாரணை நடந்து பால்



யக்குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கட்டவர்கள் இவ்விடம் அனுப்
பப்பட்டனர். 200ற்கு மேற்பட்ட பால்யர்கள் இவ்விடமிருந்த
னர். தாய் தந்தையரை இழந்து அனாரதரவான நிலையி
லுள்ளவர்களான களவு முதலிய குற்றங்களில் அகப்பட்டுக் குற்
றவாளிகளான பிள்ளைகளே இவ்விடம் அனுப்பப்பட்டனர்.
பல்வேறு சமயங்களையும் சேர்ந்த தமிழ் சிங்கள, முஸ்லீம்
பிள்ளைகளிருந்தனர். சுன்னாகத்தைச் சேர்ந்த் பாலசிங்கம்
அவர்கள் பிரதம மேற் பார்வையாளராகவும் உடுத்துறை கந்
தப்பு ஆசிரியர் உட்படப் பலரது கண்காணிப்பில் 'இப்பாலர்கள்
கண்காணிப்பு மிகவும் சீராக நடைபெற்றது.

## அச்சுவேலி செல்வநாயகபுரம்

திருச்செல்வம் அவர்கள் பா. அ. இருந்த காலம் தொடங்
கப்பட்டது. தோப்பு குடியேற்றத் திட்டத்திற்கு மேற்கே ஓட்ட
கப்புலம் வரை 108 வீடுகள் கட்டப்பட்டு சகல வசதிகளும்
செய்யப்பட்டுக் குடியேற்றப்பட்டனர்.

## தோப்பு குடியேற்றத்திட்டம்

முருகேசம்பிள்ளை காலத்தில் இதற்கான திட்டமிடப்பட்
டது. வேதாரணியசேயோன் காலத்தில் குறித்த காணிகள் எல்
லையிடப்பட்டு ஆட்சிப்படுத்தப்பட்டன. 250 குடும்பங்களைக்
குடியமர்த்தத் திட்டமிடப்பட்டு மத்தியதர வகுப்பாருக்கு ஒரு
ஏக்கர் வீதமும், பின்னால் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ்
½ ஏக்கர், ¼ ஏக்கர் வீதமும் 50 குடியிருப்புக்கான வழங்கப்பட்
டன. மிகுதியும் திட்டமிட்டபடி செயற்படுத்தப்பட்டன,

## நிலாவரைத் திட்டம்

யாழ்ப்பாணத்தில் வற்றாத நீரூற்றுக்களில் இது பிரதான
மானது. 1948-ல் பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்
பட்டு பரீட்சார்த்தமாக இறைத்த போது நீர்மட்டம் குறைய
வில்லை. தி. முருகேசம்பிள்ளை அவர்களது முயற்சியால் இந்த
நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தத் திட்டமிடப்பட்டு டி. எஸ்.
ஜெனநாயகா யாழ்ப்பாணத்திற்கு வந்த போது ஆரம்பித்து வைக்
கப்பட்டது. ஆரம்பத்தில் மேற்கு நோக்கி ஈவினை வரையும்.

தொடர்ந்து தெற்கு நோக்கிச் சிறுப்பிட்டி வரையும் செயற்
படுத்தப்பட்டது. கீழ் நீர் மிதக்க மிதக்க உப்புத்தன்மையிருந்
தமையால் பயிர்கள் கருகின. வாழைக்கு மாத்திரம் இறைக்கப்
பட்டு நாளடைவில் அதுவும் கைவிடப்பட்டது. யாழ் - மாநகர
சபைக்கு திருநெல்வேலிக் கிணற்றிலிருந்து எடுக்கும் நீர் போதா
மையால் நிலாவரையிலிருந்து பெறத்திட்டமிடப்பட்டு கோப்
பாய் இராச வீதிச் சந்தி வரை குழாயமைக்கப்பட்டது. 1983-ல்
இராச வீதிச் சந்தியில் நிலை கொண்டிருந்த ராணுவ கெடுபிடி
களால் மேன் முயற்சி நிறுத்தப்பட்டது. ராணுவத்தால் சுடப்
பட்டவர்களை இவ்விடம் அமைந்திருந்த குழாய் தாழ்க்கக் கிண்
டப்பட்டிருந்த அகழிகளில் போட்டு மூடினர். பின்னர் குறித்த
வேலைகள் ஆரம்பித்த போது பல எலும்புக் கூடுகள் வெளிப்
பட்டன. இன்றைய நிலையில் குறித்த வேலைத்திட்டம் தொடர
வுள்ளது.

## பொக்கணைக் குடியேற்றத் திட்டம்

தொகுதிவாரியான குடியேற்றத் திட்டத்தில் ஆரம்பிக்
கதில் 10 வீடுகளும் தொடர்ந்து கிராமவிருத்தித் திட்டத்தின்
கீழ் 40 வீடுகளும் நிறைவேறின. மிகுதியாயிருந்த காணிகளும்
காணியற்றவர்கள் குடியிருப்புக்கட்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

## உரும்பராய் யோகபுரம்

சுய வீட்மைப்புத் திட்டத்தின் கீழ் 1959-ல் இது ஆரம்பிக்
கப்பட்டது. பாதை, விளையாட்டிடம், வாசிகசாலை, பாட
சாலை, வழிபாட்டிடம் என்பனவற்றிற்கான நிலங்கள் ஒதுக்கப்
பட்ட பின்பு குடியிருப்பாளர்கட்கு இரண்டு பரப்பு வீதம் அளந்து
எல்லையிடப்பட்டது. கட்டிடத்திற்கான சகல பொருட்களும்
அரசினால் வழங்கப்பட்டன. மேற்கொண்டு சுய முயற்சியால்
பூர்த்தியாக்கப்பட்டன. வறிய காணியற்ற அவ்விடத்து மக்கட்கு
இது ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது. சிலர் தமக்கு அளந்து
விடப்பட்ட நிலத்தில் தாமாகவே கொட்டில் கட்டி குடியமர்ந்
தனர். இந்த வகையில் 70 வீடுகள் ஆரம்பமாகின. இவ்விடத்
தில் அமைந்துள்ள அண்ணமார் கோயில் தூய்மை பெற்று சைவம்
மணக்க விளங்குகின்றது. மூதாட்டியொருவர் இதன் பக்தி பூர்வ
மான பூசகாரயுள்ளார். அயலிடங்களிலிருந்தும் இவ்விடம் வந்து
வழிபாடு செய்கின்றனர்.



## செல்வநாயகபுரம்

யோகபுரத்தின் தென் பக்கமாய் இதே வகையில் 60 வீடு
கள் அமைந்துள்ளன. இவர்களும் யோகபுரம் குடியேற்றத் திட்
டத்தினருக்கு நெருங்கிய உறவினர்.

## கோப்பாய் தேர்தல் தொகுதிப்பண்ணை

1960-ல் இதற்கான நிலம் ஒதுக்கப்பட்டது. தேர்ந்தெடு
கப்பட்ட குடியிருப்பாளர்கட்கு செய்கைக்கான நிலமாக 8 பரப்பும்
குடியிருப்புக்கட்காக 2 பரப்பு வீதம் கொடுக்கப்பட்டது. சுய
முயற்சியாலேயே வீடுகள் கட்டி கிணறு வெட்டி நிலந்திருத்தி
வாழ்கின்றனர். இச்சுற்றாடலிலுள்ள 20 வாலிபர் இவ்விடம்
நிலம் பெற்று காணி திருத்தி கிணறு வெட்டி வீடு கட்டி நன்கு
வாழ்கின்றனர். இது மு. பாலசுந்தரம் பா. அ. கால முயற்சி
யாகும்

## திறந்த வெளி மறியற்சாலை

கோப்பாய் தெற்கிலுள்ள சிங்கம் கண்டி - எனும் இடத்
திலுள்ள சுமார் 30 ஏக்கர் வரை காணியெடுக்கப்பட்டது. ஸ்ரீ
காந்தா மாகாண அதிபராயிருந்த போது வ. கந்தப்பிள்ளை
காரியாதிகாரி அவர்களால் இக்காணி அளப்பித்து எல்லையிடப்
பட்டது. பல வேறு சமயங்களைச் சேர்ந்த 250க்கு மேற்பட்ட குற்ற
வாளிகள் தங்க வைக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தில் உரும்பரா
யைச் சேர்ந்த கந்தையா தங்கராசா என்பவர் மேற்பார்வை அத்
தியட்சகராகச் சேவையாற்றினார். விவசாயம் கைத்தொழில்
முதலிய பல்வேறு தொழில்களிலும் அதற்கான நிபுணர் உதவி
யுடன் செற்பாடுகள் நடைபெற்றன, சைவ, புத்த, கிறீஸ்து,
முஸ்லீம் ஆலயங்களுமிருந்தன. காலை மாலை நேர வழிபாடு
களுடன் வெளியிலிருந்து வரும் சமயப் பெரியார்களது போத
னைகளும் நடைபெற்றன. ஆலயங்களில் உரிய நேரங்களில் அவ்
வச் சமய விழாக்களும் நடைபெற்றன. சாதாரண சுகவீனமுற்
றவர்களை நிரைப்படுத்தி கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு அழைத்
துச் செல்வர். வெள்ளை அரைக்காற்சட்டை மேல் அரைக்கை
வெள்ளைச்சட்டை, மிகவும் கட்டையாக வெட்டப்பட்ட மயிர்
இவ்வாறு காட்சியளித்தனர், யுத்த கால நெருக்கடியாரம்பித்த
போது குறித்த மறியற்சாலை மூடப்பட்டது. 1983 லிருந்து இந்

திய ராணுவ குண்டடி செல்லடிகளால் குறித்த சாலை இடித்
தழிக்கப்பட்டது. நாசமாக்கப்பட்டது. 1990 முடிவில் இந்திய
ராணுவம் இராச வீதிச் சந்தியை விட்டு வெளியேறிய போது இடி
பாடுகளுக் கிடையிலிருந்த தளபாடங்கள் விக்கிரகங்கள் யாவும்
கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டு பரிதாபமான நிலையில்
காட்சியளித்தது

பின்னர் 1990 தொடக்கம் செப்பமிடப்பட்டு தமிழீழப்
போரில் வீரமரணமடைந்த மாவீரர் துயிலும் மயானமாக்கப்
பட்டு சீரான வகையில் பராபரிக்கப்படுகிறது.

## வாதரவத்தை குடி தண்ணீர்திட்டம்

இப்பகுதி மக்கள் பெண்கள் அயலிடங்கட்குச் சென்று குடங்
களில் குடி நீர் கொண்டு மார்பிலும் தலையிலும் சுமந்து செல்
லும் நிலையிருந்தது. இக்குறைபாட்டினைப் போக்க புத்தூர்
மழுவராயர் சத்திரத்திலுள்ள வற்றாத கிணற்றிலிருந்து குழாய
மைத்து நீரெடுக்கும் திட்டம் 1965 அளவில் ஆரம்பித்து வைக்
கப்பட்டது இப்பகுதி மக்கட்குப் பெரும் வரப்பிரசாதமாக
அமைந்ததெனலாம்.

## வ. சொக்கலிங்கம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர். சொக்கன்
என்று சுருக்கமாக அழைக்கப்பட்டவர். நிறைந்த சமயம் அறி
வும் ஆர்வமும் உடையவர். இவ்விடத்தில் பல ஆலயங்களில்
விசேட பூசா காலங்களில் சைவ மணங்கமழச் சொற் பெருக்
காற்றி மக்கள் பாராட்டுக்குரியவராக விளங்கினார். சொல்லின்
செல்வன் என்ற பட்டமும் வழங்கப்பட்டது. ஆலயங்களுக்குச்
சென்று வழிபாடு முடிந்ததும் மக்கள் குறைகளறிந்து ஆவன
செய்த தொண்டுள்ளம் படைத்தவராக விளங்கினார். இளைப்
பாறி சட்டத்தரணியான பின்பும் இவ்விடம் அழைக்கப்பட்டு
ஆண்டு விழாக்களிலும் ஆலயங்களிலும் பிரசங்கங்கள் நடத்தி
னார்.

## கா. மாணிக்கவாசகர்

இவர் கோப்பாயைப் புக்ககமாகக் கொண்
டவர். கோப்பாய் பலானை கண்ணகையம்மன் கோயி
லில் பூசகருடன் மேலிட உத்தரவுடன் இருப்பு எடுப்பதில்



தகராறுண்டான போது வடமராட்சிக் காரியாதிகாரியாக விருந்
தார். உரிய கோப்பாய் அதிகாரி மறுத்த போது அவரை லீவில்
நிற்கச் செய்து அவரிடத்துக்கு கா.மாவை தற்காலிகமாக அனுப்பி
அரச செயலகம் சீர் செய்தது. சரியானதைச் செய்வதில் பின்னிற்
கார்.

வலி - கிழக்கு தென்பகுதி ப நோ. கூ. சங்கம் வீழ்ச்சிய
டைந்த போது கோப்பாய் உதவியரசாங்க அதிபராயிருந்த
இவர் மேலிட உத்தரவுடன் 1977-ல் ஐவர் குழு கொண்ட நிய
மன குழுவிற்குத் தலைமை தாங்கி புனரமைத்து அங்கத்தவர
தும் கூட்டுறவாளர்களதும் பாராட்டுப் பெற்றார். பின்னால்
யாழ் - அரச அதிபராயிருந்த போது 28.04.1991-ல் ஏற்பட்ட
பெரும் புயலால் முன் எக்காலத்திலும் இல்லாதவாறு வாழைத்
தோட்டங்கள் யாவும் அடியோடு சர்வ நாசமாகின. வலிகிழக்கு
கோப்பாய்த் தொகுதிதான் யாழ்ப்பாணத்தில் வாழை 90% மேல்
பயிராகும் இடமாகும். விவசாயிகள் சங்கங்கள் பலவும் நேரிலும்
கோப்பாய் உதவியரசர் ஊடாகவும் மனுக்கள் செய்தனர். எமது
விவசாயிகள் சங்கம் இது சம்பந்தமாய் அரச அதிபரையும் சமூக
சேவா உத்தியோகத்தர் செல்வி சிவசிதம்பரம் அம்மாவையும்
பேட்டி கண்டு பல தடவை முறையிட்டோம். ச,சே.பகுதி அதிபர்,
அரச அதிபர் கொழும்பில் நிற்கும் போதெல்லாம் எமது
நினைவூட்டுக்களை தெலிபோனில் அறிவித்தார். ஈற்றில் 55
இலட்சம் ரூபா புயலழிவு நிவாரணமாகக் கிடைத்தது. பலர் பத்
திரிகைகள் மூலமும் நேரிலும் பாராட்டுத் தெரிவித்தனர்.

## கே. கிட்ணர்

நல்லூரில் சேவையாற்றினார். பிரதானமாக
உரும்பராய் கமத்தொழிற் சேவா நிலையம் நன்கு தொழிற்பட
பெரிதும் உதவினார். மக்களோடு நன்கு பழகி வேண்டியன
உடனுக்குடன் செய்து கொடுத்தார். தொடர்ந்து முருகேச
பிள்ளை வடமராட்சி என்போர் சேவையாற்றினர். இவர்கள்
காலம் ராணுவ நெருக்கடிமிக்க காலம். அரச உதவியெதுவும்
பெற முடியாத நிலையில் சமூக நலத்திட்டங்கள் எதுவும் செய்ய
முடியாத நிலை நிலவியது.


## திரு. இளங்கோ

யாழ் வளாகத்தில் பொரு, மே. கழக அன்பர்கள் முயற்சி
யால் நடந்த கருத்தரங்கு, விவசாய ஆலோசனைக் கூட்டங்கள்
இவற்றைத் தொடர்ந்து கோப்பாய் வடக்கு - மத்தி விவசாயி

கள் சம்மேளனத்தினால் உவர்நில மீட்புப்பணி வேலை உவர்நில
நெற்செய்கை 1993-ல் கோப்பாய் வடக்கு கோட்டை வாய்க்
காலுக்கு கிழக்கு வயல் வெளியில் ஆரம்பிக்கப்பட்டு நற்பலன்
கண்டது 01.10 93-ல் நியமனமான கோப்பாய் உதவியரச அதி
பர் திரு. இளங்கோ அவர்களைப் பிரதமவிருந்தினராகக்
கொண்டு மிக விமரிசையாக அறுவடை விழா கொண்டாடப்
பட்டது இது இப்பகுதி விவசாயிகட்கு உற்சாகமளித்தது.
இவர் குறுகிய காலத்தில் மாற்றப்பட்டுள்ளார்.

## கேதீஸ்வரன்

இவர் 1,11.93-ல் கோப்பாய்க்கு வந்த போது
உதவியரசாங்க அதிபர் முறை போய் கோப்பாய் அரச
செயலர் முறை வந்தது. இவ்விடத்திற்கு கூட்டுறவு. கணக்குத்
துறை முதலானபல அரச பகுதிகள் மாற்றப்பட்டன இட
நெருக்கடி நிலவியதால் பக்கத்து வீடும் பாவனையிலுண்டு உவர்
நில நெற்செய்கை இவரது ஒத்தாசையுடனும் சென்ற 1994-ல்
வருடத்தில் கூடுதலாக மக்களும் தாமாகவே முன் வந்து செய்த
னர். அறுவடை விழா மிகவும் கோலாகலமான வகையில் கேதீஸ்
வரனைப் பிரதம விருந்தினராகக் கொண்டு 1994 மாசியில் நடை
பெற்றது. பல ஆக்க பூர்வமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன
வன நடைபெறுகின்றன. 1995 உவர் நில நெற்செய்கை மீ
றும் திட்டங்கட்கு போதிய நிதி யொதுக்கீடு இவர் திட்டத்தில்
செய்யப்பட்டும் இராணுவ நெருக்கடியால் நிறைவேற்ற முடியா
துள்ளது. (31.10,95)





கள் இது விஷயமாய் ஊக்கி உரும்பராய் கமநலச் சேவை நிலைய இடப்பரப்பில் ஆரம்ப வேலையாக கோப்பாய் வடக்கு - மத்தி, உரும்பராய் இரு விவசாய சம்மேளனங்களும் முறைப்படி பதி வாகின.

தற்போது (01.01.95-ல் ) வலி கிழக்குத் தென் பகுதிக் குரிய உரும்பராய் கமநலச் சேவை நிலையத்தில்

பொது சனப் பிரதிநிதிகளாக — 5பேர்
அரச உத்தியோகத்தர் — 5பேர் ஆக பின்

வரும் 10 பேர் கொண்ட நிர்வாகசபை நல்ல வகையில் சேவை யாற்றிவருகிறது.

| | | |
|---|---|---|
| தலைவர் | செ. ஐயாத்துரை | |
| உப தலைவர் | தி. சுப்பிரமணியம் | |
| நிர்வாகசபை | மு. வீரசிங்கம் | — ஊரெழு |
| | சி. தர்மலிங்கம் | — கோப்பாய் |
| | சி. நமசிவாயம் | — நீர்வேலி |

அரச உத்தியோகத்தர்

| | |
|---|---|
| க. கேதீஸ்வரன் | — கோப்பாய் பிரதேசசெயலர் |
| சோ. பரமசிவராசா | — பெரும்பாக உத்தியோகத்தர் |
| கா. பரநிருபசிங்கம் | — கூட்டுறவு |
| N. இராசையா | — விவசாய போதனாசிரியர் |
| த. குணரத்தினம் | — தொழில் நுட்ப உத்தியோகத்தர் |

மேலும் கிராம ரீதியாக இந்த இடப்பரப்பில் நிறுவப்பட்ட விவசாய சம்மேளனங்களில் கோப்பாய் வடக்கு - மத்தி சம்மேள னம் திறம்படச் செயலாற்றி மேலதிகாரிகளின் பாராட்டையும் பெற்றுள்ளது. (23.01.95)

# அகில உலக இந்து மாமன்றம்

## (விஷ்வ ஹிந்து பரிஷத்)

### இலங்கைக் கிளை – கோப்பாய் பிரதேசகுழு

உலகில் 80 தேசங்களில் பரந்து வாழும் 60 கோடி இந்துக்களை ஒன்றிணைத்து சமய சமூகத்துறைகளில் முன்னேறவும், காலத்துக்கு ஒவ்வாத பழைய சம்பிரதாயங்களை மாற்றியமைத்துப் புத்துயிரளிக்கவும் 1964-ல் விஷ்வஹிந்து பரிஷத் ஆரம்பிக்கப்பட்டது, 22 தேசங்களில் 3000 வரை கிளைகளை உடையதாகவுள்ள இதன் தலைமையலுவலகம் புதுடில்லியில் அமைந்துள்ளது.

21.7.79-ல் இதன் இலங்கைக் கிளை நல்லையாதீனத்தில் ஆரம்பிக்கப்பட்டு வை.யோகேந்திரா துரைச்சாமி அவர்கள் தலைமையில் செயற்பட்டு வருகிறது. இலங்கையில் இந்து சமயிகள் பரந்து வாழும் இடங்கள் தோறும் கிளைக் குழுக்கள் ஆரம்பிக்கத் திட்டமிட்டு ஆவன செய்யத் தொடங்கியது. 9.12.81-ல் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவாலயத்தில் அதன் தேவஸ்தானத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் முதன் முதலாவதாகக் காங்கேசன்துறைக் கிளை ஆரம்பமாகி இயங்கத் தொடங்கியது.

3.1.82-ல் கோப்பாய்ப் பிரதேசக் குழு நிறுவும் நோக்கமாய் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சமாச மண்டபத்தில் கோப்பாய்ப் பிரதேசக் குழுவிற்கான கூட்டத்திற்கு பெரிய ஆலலங்களின் பரிபாலன சபைப் பிரதிநிதிகள் சமயப் பெரியார்கள் இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதிகள் பலரும் சமுகமளித்திருந்



தனர். திருஞானசம்பந்தராதீன சோமசுந்தர பாமாச்சாரிய சுவாமிகள், விஷ்வஹிந்து இலங்கைக் கிளைத் தலைவர் யோகேந்திரா துரைச்சாமி, அதன் செயலாளர் இ. சபாலிங்கம் (யாழ்-இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்) பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே. எஸ். மகேசன், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் போன்ற பெரியார்கள் பலரும் சமுகந்தந்து, இலங்கையின் இன்றைய நிலையில் இந்து மாமன்றம் செய்ய வேண்டிய பணிகளை விபரமாக எடுத்துக் கூறி, கோப்பாய்ப் பிரதேசக் குழு நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினர் கிளை நிறுவுகன் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதன் பின் பின்வருவோரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்டு!

| | |
|---|---|
| தலைவர் | – க. இ. குமாரசாமி |
| உபதலைவர் | – அ. வி. மயில்வாகனம் |
| காரியதரிசி | – மு. வைத்திலிங்கம் ஆசிரியர் அச்சுவேலி |
| உபகாரியதரிசி | – அ. ஜெயரத்தினம் (கோப்பாய்) |
| தனாதிகாரி | – ந. குமரேசபசுபதி (இடைக்காடு) |

என்போர் உள்ளிட்ட 21 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. தொடர்ந்து எமது இடப்பரப்பில் பல பரிபாலன சபையினர் ஆதரவுடன் இலங்கைக் கிளையின் பிரதான நிர்வாகிகளையும் அழைத்து பிரசாரக் கூட்டங்களை எமது கிளைக்குழு நடத்தியது. எமது கிளையின் பிரதான நிர்வாகிகள் மூவரும் இலங்கைக் கிளையின் நிர்வாக சபையுறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர். குறித்த இலங்கைக் கிளையின் போஷகராக நல்லையாதீன முதல்வர் இருந்து வருகிறார் கே. எஸ் வேல்முருகு பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேலும் சைவ வித்தியாதரிசகர் எஸ். மகேசன், அ. வி. மயில்வாகனம், அ. ஜெயரத்தினம், காந்தீயம் சி. கா. வேலாயுதபிள்ளை, மற்றைய கிளைக்குழுக்களின் பிரதான நிர்வாகிகள் என்போர் நிர்வாக சபையில் இடம் பெற்றிருந்தனர். கூட்டங்கள் பெரும்பாலும் நல்லையாதீனத்திலேயே நடைபெற்று வந்தன. மாதந்தோறும் நிர்வாக சபை கூடி பல முன்னேற்றகரமான காரியங்களைச் செய்து வந்தது.

இலங்கைக் கிளைக்கு ஓர் இந்து கலாசார விடுதியுடன் கூடிய மண்டபம் அமைக்க ஒரு கோடி ரூபாவில் திட்டமிடப்பட்டு யாழ் முத்திரைச் சந்தைக்கு கிழக்குப் புறமாய் யாழ் யமுனா ஏரி வளவு பழைய இராசதானிக்கோட்டை வளவுக்குத் தெற்குப் புற

மாய் சுமார் 50 அடி அகல வீதி வடக்கு கிழக்கு எல்லையாக உள்ள 6 பரப்புக் காணி அரசாங்கத்திடமிருந்து நீண்ட காலக் குத்தகைக்கு எடுக்கப்பட்டது. பிரதி வருடமும் அரசாங்கத்துக்கு அனுப்பப்படும் குத்தகைக் காசோலைகள் சில மறைமுகமான சூழ்ச்சி காரணமாக ஏற்றுக் கொள்ளப்படாது திருப்பியனுப்பப் பட்டன. இக்காணியில் இந்து விடுதியமைப்பது சிலரின் விருப்ப வீனத்தினால் எழுந்த தூண்டுதலாயிருக்கலாம்.

குறித்த இடம் யாழ் மாநகர சபைக்கு பூங்கா அமைக்க வுள்ள இடம்; இதனை விட்டால் வேறு இடம் கிடையாது என்ற நொண்டிச்சாட்டுக்களையும் அரசுக்குச் சொல்லி எதிர்த்தனர்.

இதே காலப்பகுதியில் திருக்கேதீஸ்வரத்தில் புனித தீர்த்த மான பாலாவிக்கருகில் கத்தோலிக்க தங்கு விடுதி நிறுவி அதன் கழிவு நீர் பாலாவியுடன் கலக்கும் அவல நிலையும் உருவாகி யிருந்தது.

மேலும் 30.1.64-ல் திருக்கேதீஸ்வர பரிபாலன சபைத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதனுக்கும் பிஷப் எமிலி யானுஸ் பிள்ளைக்கும் இடையில் ஏற்பட்ட கனவான் ஒப்பந் தத்தை மீறி திருக்கேதீஸ்வரச் சந்தியில் அமைந்துள்ள குகைக் கோயிலைப் பெருப்பிக்கும் சூழ்நிலையும் உருவானது.

இவற்றையிட்டு 3.5.82-ல் மேற்படி முத்திரைச் சந்தைக் காணியில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்த வைரவ சுவாமி முன்றிலில் உலக இந்து மாமன்ற இலங்கைக் கிளையின் மாபெரும் எதிர்ப்புக் கூட்டம் நல்லையாதீன முதல்வர் தலைமையில் நடை பெற்றது. யாழ்ப்பாணத்தின் பிரதான சைவ மகா சபைகளின் தலைவர்கள் சட்டத்தரணிகள் ஆலய நிர்வாகிகள் பத்திரிகை யாளர்கள் கிளைக் குழுத் தலைவர்கள் பலரும் சமுகமளித்துப் பேருரைகளாற்றினர், மேற் குறித்த விஷயங்கள் சம்பந்தமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து எமது கோப்பாய்க் கிளைக்குழு 7 5.82-ல் கோப்பாய் ஞானபண்டித சைவ இளைஞர் சங்க ஆத ரவில் சி. க. சுப்பிரமணியம் ஆசிரியர் தலைமையில் சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் கூடிய பொதுக் கூட்டத்தில் திருக் கேதீஸ்வர விவகாரங்கள், நல்லூரில் இந்து கலாசார மண்டபம் நிறுவுதல் சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பிய பிரதிகள் இலங்கைக் கிளைக்கும் அனுப்பப்பட்டன. குறித்த கூட்டத்திற்கு இலங்கைக் கிளை நிர்வாகிகளும் பல சைவப் பெரியார்களும் விசேட அமைப்பின் பேரில் சமுகமளித்



திருந்தனர். தொடர்ந்து 14.5.82-ல் கோப்பாய் மகிழடி வைரவ சுவாமி கோயிலும் 17.5.82-ல் அச்சுவேலி சந்தைக்கு அருகாமையில் உள்ள வைரவர் கோயிலில், ஆசிரியர் மு. வைத் திலிங்கம் அவர்கள் தலைமையிலும், 19.5,82-ல் நீர்வேலி இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் பிரம்மஸ்ரீ சு. இராசேந்திரக் குருக் கள் தலைமையிலும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தி தீர்மானங் கள் நிறைவேற்றி இந்து விவகார அமைச்சிற்கு அனுப்பப்பட் டன. இதே போன்று 9.5.82-ல் வேலணை நால்வர் மடத்தி லுள்ள தேவஸ்தானத்தில் ப. கதிரவேலு J P. U M. தலைமை யிலும் 29.5 82-ல் புங்குடு பெருங்காடு தேவஸ்தானத்தில் பிரம் மஸ்ரீ சி. நாகேந்திரக் குருக்கள் தலைமையிலும் பல பெரியார் களின் அறிவுரைகளைக் தொடர்ந்து கிளைகள் நிறுவப்பட்ட தோடு மேற் குறித்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு அனுப் பப்பட்டன. இவை போலவே மற்றைய கிளைக் குழுக்களும் சைவ ஸ்தாபனங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றி எதிர்ப்புத் தெரிவித்து அறிவித்தன.

இவைகள் ஓரளவு தணிய, வேறு கோணத்திலிருந்து புதிய தொரு எதிர்ப்புத் தோன்றியது, முத்திரைச் சந்தையில் கலாசார விடுதி நிறுவ இடமளிப்பதானால் நல்லூர் சங்கிலி தோப்பின் மகிமை குறைந்து விடும்; அமைச்சர் தேவநாயகம் கண்டனம்; ஜனாதிபதியிடம் நேரில் ஆட்சேபனை தெரிவிப்பு; எனவும்; அமைச்சர் தேவநாயகம் அமிர், சிவா சந்திப்பு – அதன் மகிமை யைக் குறைக்க இடமளியோம்; எனவும் பெரிய தலையங்கங் களுடன் வீரகேசரியிலும், வேறு தினசரிகளிலும் செய்திகள் வெளி வந்தன.

உண்மையில் சங்கிலி தோப்பு இப்போது வண்ணார்பண் ணைச் சிவன் கோயில் காணியாகவுள்ளது. இக்காணியில் பலர் குத்தகைக்கு எடுத்து எத்தனையோ கடைகள் தொழிற்சாலை கள் தனியார் வீடுகள் பொது ஸ்தாபனங்கள் மோட்டார் இயந் திரம் கழுவும் நிலையங்கள் அமைக்கப்பட்ட போது யாருந்தடை செய்யவில்லை. குறித்த சங்கிலி தோப்பிற்கு வெளியில் தெற்குப் புறமாயுள்ள காணியைத் தாண்டி ஐம்பதாம் வீதிக்கும் அப்பால் இந்து கலாசார விடுதியமைப்பது சங்கிலி தோப்பின் மகிமை யைக் கெடுத்து விடும்; என்பது நொண்டிச்சாட்டு. சமய அரசி யல் குரோதங்கள் காரணமாகவே எழுந்த எதிர்ப்பிது. பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை இடித்தழித்து அதன் அத்தி வாரத்தின் மேல் வேறு சமய ஆலயமமைக்க செய்திகளும், உரிய ஆலயத்தின் வடகிழக்கு மதிலுக்கு வெளியே தற்போதைய வித்தியாகந்தோரிடத்தின் தென் பக்கமாய் மூடப்பட்ட நிலை யிலிருந்த கிணற்றின் மேற்கட்டுச் சுவரையும், உரிய இணறிருந்

இடத்தையும் ஆராய்ந்த வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் இரு வர் படம் பிடித்ததோடு குறித்த கிணறு முன்னைய தீர்த்தக் கிணறாயிருக்கலாம் என்றபிப்பிராயம் தெரிவித்ததும். சிலரின் கவனத்தை ஈர்த்தன. இந்த இடத்தில் முன்னர் வித்தியா கந் தோர் கட்ட நிதியொதுக்கீடு செய்து திட்டமிட்ட வேளை சில போலி வேடதாரிகள் கை மேலோங்கியதனால் அது கைவிடப் பட்டதும் பலரும் அறிவர். இது சம்பந்தமாய் எனது கட்டுரை யொன்றும் பத்திரிகையில் வெளியாகியது.

இவை சம்பந்தமாய் இந்து மகாசபை இலங்கைக் கிளை யின் 16 04 83 வருடாந்தக் கூட்டத்தில் விரிவானதொரு கண் டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மேலும் இந்து சமய சம் பந்தமான பல குறைபாடுகள் பற்றிய தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன. இவை சம்பந்தமான செய்திகள் 02.05 83 வீரகேசரி, 24.05 83 தினபதி நாளிதழ்களிலும் வெளியாகியிருந் தன. மேலும் குறித்த தீர்மானங்கள் சம்பந்தமாகப் பிரதான நிர்வாகிகள் கௌரவ இந்து அமைச்சரையும் ஜனாதிபதியையும் பேட்டி கண்டு விளக்கியதன் பேரில் உத்தரவும் கிடைத்தது. சூழ்ச்சிகள் அடங்கின.

1987 இனக்கலவரத்தால் மலையகத்திலிருந்து அகதிகளாக வெளியேறியவர்கள் கிளிநொச்சியிலுள்ள காட்டுப் பிரதேசங் களில் 2000 இந்துக் குடும்பங்கள் வரை குடியேறினர், கண்டி வீதி 154-ம் கட்டையடியில் குடியேறியவர்கள் தங்கள் மதவழி பாட்டிற்காகக் கொட்டிலமைத்து அதில் சிவலிங்கம் ஸ்தாபித்து 1978 சிவராத்திரியிலன்று தொடக்கம் வழிபாடு தொடங்கினர். அவ்விடத்திற்கு சைவ வேள்புரம் எனவும் பெயர் சூட்டினர். அண்மையிலிருந்த மறு சமயத்தாரைத் தூண்டி குறித்த சைவால யத்திற்குத்தீயிடச் செய்து சிவலிங்கத்தையும் அழித்தனர். மீண் டும் குறித்த சிறு ஆலயம் புனர்மைக்கப்பட்டு வழமை போல் வழி பாடுகள் செய்யப்பட்டன, இதனைப் பொறுக்க முடியாத மறு சமயத்தார் 1981 நடுப்பகுதியில் இவ்வாலயத்திற்கு அண்மை யில் பிற சமய ஆலயமொன்றைக் கட்டி இந்துக்களை உபத்திர வப்படுத்தினர். குறித்த சிவாலயக் கொட்டகை மீண்டும் தீயிடப் பட்டது, மேலும் குறித்த காணியில் வேற்றுச் சமயத்தவரை அத்துமீறிக் குடியேறவும் செய்தனர்.

இது விஷயங்களை விபரமாக அகில இலங்கைக் காந்திய சேவாசங்கம் சி. கா. வேலாயுதபிள்ளை, கிளிநொச்சி விஷ்வ ஹிந்து பரிஷத் கிளைத் தலைவரும், "அவ்விட சைவச் சிறுவர் இல் லந் தலைவருமாகிய வே. கதிரவேலு அவர்களும் இலங்கைக் கிளைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.



''கிளிநொச்சியில் இந்து மதத்தவருக்குப் பேராபத்து பாது காப்புக் கூட்டம் 1 - 20.6.82'' என்று தலையங்கமிட்ட அறிக்கை யின் பேரில் யாழ்ப்பாணத்திலிருந்து நிர்வாகிகள் சைவ ஸ்தாப னங்கள், வி. ஹி. ப. கிளைக் குழுவினர், சட்டத்தரணிகள், தொண்டர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இரண்டு பேருந்து களில் சென்று அவ்விடம் உள்ளவர்களுஞ் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனையும் கண்டனக் கூட்டமும் நடத்தினர். இனக்கல வரத்தால் தவிக்கும் மலையக அகதிகளை மதம் மாற்றலாமா? புனித சிவலிங்கத்தை உடைத்தெறிந்து கோயில் மண்டபத்தை யும் எரிக்கலாமா? ஆசை வார்த்தைகள் சொல்லி, பொய் பிரசாரங் கள் சொல்லி பாமரரை மதம் மாற்றலாமா? என்றவாறான சுலோகங்களும் கூட்ட இடத்தில் காணப்பட்டன. இப்படியான ஓர் எதிர்ப்பை எதிர்தரப்பினர் எதிர்பார்க்கவில்லை. குறித்த ஆலய முதல்வர் உட்பட்டோர் எமது கிளையின் சில பிரதிநிதி களுடன் கலந்துரையாடி சமரசஞ் செய்து கொண்டனர். காந் தீயம் வேலாயுதபிள்ளையும் (உருத்திரபுரம்) வே. கதிரவேலு வும் அண்மையிலிருப்பதால் - குறித்த ஆலயத்தின் பாதுகாவலர் களாக இருக்கவும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறவும் வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. மேற்கொண்டு தேவை யான உதவிகளைச் செய்ய யோகேந்திரா துரைச்சாமி, செய லாளர் இ. சபாலிங்கம், சட்டத்தரணிகள் சோமசுந்தரம் (சைவ பரிபாலன சபைத் தலைவர்) ஸ்ரீநிவாசன் காரியாதிகாரி என் போர் கொண்ட உபசபையும் தெரிவானது.

குறித்த சமயத்தவர்களால், சிவாலயத்தின் முன்னோடிகள் சிலர்மேல் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட சில வழக்குகளிற்கு சட்டத்தரணிகள் சோமசுந்தரம், ஸ்ரீநிவாசன் இருவரும் எவ்வித சன்மானமும் பெறாது தங்கள் செலவில் சென்று வாதாடி குறித்த சிவாலய முன்னோடிகளை நிரபராதி களாக விடுவித்தனர். இதுவும் சைவ மக்கட்கு உற்சாகத்தையும் மற்றவர்கட்கு பின்னடைவையும் கொடுத்ததெனலாம்.

சென்ற யுத்த கால ராணுவ வன்செயல்கள் காரணமாகவும் இவ்விடத்திய அசம்பாவித சூழ் நிலைகளாலும் பிரதான நிர் வாகிகள் சிலர் வெளிநாடு செல்ல நேரிட்டதாலும் கொழும்பு சென்றதாலும் இலங்கைக் கிளை தொழிற்படாத நிலையுரு வானது, கிளைக்குழுக்களும் தொழிற்படாத நிலை தொடர் கிறது.

# இந்து சமயப் பேரவை
## (ஆரம்பம்)

விவிலிய வேதம், திருக்குறள், சைவ சிந்தாந்தம் ஒப்பாய்வு-
என்ற நூலொன்று டாக்டர் மு. தெய்வநாயகம் என்பவரால்
எழுதப்பட்டு 1985-ல் சென்னையில் பதிப்பிக்கப்பட்டு இந்தியா
வில் வெளியாகியது. இந்தியா சென்றிருந்த ஊரெழு அன்பர்
ஒருவர் மூலம் உரும்பராய் கிராம சேவையாளர் எஸ் கிருஷ்ண
ராசா அவர்கட்குக் கிடைத்தது. அதிலுள்ள சைவ தூஷணை
கள், முரண்பாடுகள் கண்டு கொதிப்படைந்து கோப்பாய் ச. பஞ்
சாட்சர சர்மா பண்டிதர் பார்வைக்குக் கொடுத்தார். சைவப்
பெரியாரும் அறிஞருமாகிய கோப்பாய் அ. வி. மயில்வாகனம்
அவர்களுடன் சேர்ந்து பார்த்து மிக மோசமான பகுதிகளை
அடிக்கோடிட்டு வைத்திருந்தனர். 13.7.91-ல் சர்மா அவர்
களிடம் சென்றிருந்த என்னுடன் இது விஷயமாய் கலந்தாலோ
சித்த போது குறிக்க நூலை வாங்கி அடிக்கோடிட்ட பகுதிகளில்
16 இடங்களைத் தெரிந்தெடுத்து வேண்டிய பிரதிகள் எடுக்கப்
பட்டது. கோப்பாய் சி. நவரத்தினம் பண்டிதமணி நூல் வெளி
யீட்டுச் சபைச் செயலாளர் அ. பஞ்சாட்சரம், உரும்பராய்
சைவச் சிறுவர் இல்லச் செயலாளர் செ. ஐயாத்துரை ஆசிரியர்,
சி. சத்திகிரீபன் (ஏழாலை) பண்டிதர் மு. கந்தையா. காந்தியம்
சி. கா. வேலாயுதபிள்ளை. பல்கலைப் புலவர் க. சி குலரத்தி
னம் என்பவர்களைச் சந்தித்து குறித்த வெளியீடு சம்பந்தமாய்
கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன. மேலும் நமதூரிலும், மற்
றும் கிராமங்களிலும் இன்றைய சூழ்நிலைகளால் நலிந்தவர்
கட்கு மறைமுகமாய் உண்டியும் உடையும் கொடுத்து வேகமாக
நடைபெறும் சமய மாற்றங்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டன.
இவை சம்பந்தமாய் நல்லூர் ஆதீனத்தில் ஓர் ஆலோசனைக் கூட்
டம் நடத்தவும் அதற்கானவை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.



மேற்கொண்டு துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் 31.8.91-ல் சி. நவரத்தினம் அவர்களுடன் சென்று சகல விபரங்களும் கூறி உரிய புத்தகத்திலிருந்து தெரிந்தெடுத்தச் சிட்ட பிரதியும் கொடுத்தோம். பார்வையிட்ட பின் மேற்கொண்டு வேண்டியனவும் கூறி, நாம் கூட்டவிருந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்படக் குறித்திருந்தோர் அட்டவணையையும் பார்த்து மேற்கொண்டும் சில விலாசங்களையும் தந்து, குறித்த கூட்டத்தை ஆதீனத்தில் கூட்டுமாறும் தெரிவித்தார்.

18.9.91-ல் நல்லூர் ஆதீனம் சென்று சுவாமிகளிடம் சகல விபரங்களும் கூறி ஆலோசனை கேட்டோம். மேலும் இன்றுள்ள வேறு இன்னல் பற்றியும் கூறி வரவேற்றார். நல்லூர் ஆதீனத் தில் கூடியபோதாய ஆசியும் பெறப்பட்டது.

மேற்கொண்டு சி. நவரத்தினம், அ. பஞ்சாட்சரம் என் போருடன் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள பெரியார் கள் சைவச் சங்கங்கள் குருமார் பேராசிரியர்களிடம் சென்று ஆலோசிக்கப்பட்டது. 19.8.91 திங்கள் பேராசிரியர் சி. க. சிற்றம் பலம் அவர்களிடம் சென்று விபரங்கள் கூறி ஆலோசிக்க போது பெரிதும் வரவேற்றார். உடன் இந்துநாகரிகத்துறைப் பீடாதி பதி கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் அழைத்துச் சென்று அறி முகப்படுத்தி கலந்தாலோசிக்கச் சென்றார். பீடாதிபதியிடம் நாம் சென்ற போது பேராசிரியை கலைவாணி இராமநாதன். விரிவுரையாளர் திரு அ. மகாலிங்கம் அவர்களுமிருந்தனர். நாம் மேலும் விபரங்கள் கூறி குறித்த நாலிலிருந்து தெரிந் தெடுத்து தயாரித்து வைத்திருந்த பிரதியும் கொடுத்தோம். பேராசிரியை பிரதியைப் பார்த்துக் கோபமடைந்து இது விஷ யமாய் இந்தியாவிலுள்ள சில பெரியார்களுடன் தொடர்பு கொள்வதாயும் கூறினார். அ. மகாலிங்கம் அவர்கள் இன்று வேகமாக நடக்கும் சமய மாற்றங்கள் பற்றி நியாயவாதி சி. நாக ராசா அவர்கள் தெரிவிக்க முறையீடு பற்றியும் கூறி எமது முயற்சியை வரவேற்றார். பீடாதிபதியுடன் நீண்ட நேரம் கலந் தாலோசனையுடன் பேரவையுண்டாக்கல் உறுதியாக்கப்பட்டது.

மேற்கொண்டு பேராசிரியர் சிவலிங்கராஜா அச்சு வேலி ஜோதிட நா. முத்தையா, அ. இ. இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன், வித்தியாதரிசகர், திரு. மகேசன் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சைவச் சங்கங்கள், குருமார் மற்றும் பெரியார்களுடனும் தொடர்ந்து பல நாட்கள் சென்று ஆலோசித்தோம்.

20.10.91 ஞாயிறு நல்லையாதீனத்தில் ஆதீன முதல்வர் குரு மகாசந்நிதானம் தலைமையில் அ. பஞ்சாட்சரம், க. இ. குமாரசாமி இருவரையும் அழைப்பாளராகக் கொண்டதொரு ஆரம்ப ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 59 பிரதிநிதிகள் பெரியார்கள் சமுகமளித்திருந்தனர். குரு மகாசந்நிதானம் இன்று நம்மிடையேயுள்ள குறைபாடுகள் பற்றி விரிவானதொரு உரை யாற்றி பேரவையுண்டாக்குதலை வரவேற்றுப் பேசினார். இன்று வேகமாக நடக்கும் சமய மாற்றங்கள், அநாதைச் சிறுவர்களைப் பராமரிக்கப் போதிய சைவ இல்லங்களில்லாமை முதலிய குறை பாடுகள் பற்றியும் தெரிவித்தனர். மேலும் 20 3.85-ல் வெளி யான தூஷணை நூல் பற்றியும் ஆராயப்பட்டது. 5000 வரு டங்கட்கு முன்னர் வாழ்ந்த இராவணன் சிவலிங்க வழிபாடு பற்றி இராமாயணம் கூறுகின்றது. கிறீஸ்தவத்திற்கு முற்பட்ட சிவலிங்க வழிபாடு கிறீஸ்தவத்திற்குப் பிந்தியது மேற்கிலிருந்து வந்த அகஸ்தஸ்தான் அகத்தியர். போன்று குறித்த நூலிலுள்ள ஒவ்வாத கருத்துக்கள் பற்றியும் கூறப்பட்டது. தற்போது கத் தோலிக்க சமயத்தார் நடத்தும் சித்தாந்த வகுப்பிற்குச் சென்ற சைவப் பெரியார் இருவர் - குங்குமம் போதும் விபூதியும் சந்த னமும் வேண்டாம் என்ற கருத்துத் தெரிவித்ததும். நம்மிடையே பெருந்தொண்டாற்றிய சைவ ஸ்தாபனங்கள் உறக்க நிலை யிலுள்ள நிலையை மாற்ற ஊக்குவிக்க வேண்டுமென்றும் நம் மிடையேயுள்ள இந்து சாதனத்தைப் பயன்படுத்தி சைவப் பிர சாரங்கள் செய்யத் தூண்டுவது பற்றியும் மேலும் தெரிவிக்கப் பட்டன.

மேலும் சாத்தானின் கீதங்கள் பாடிய கொம்மியூனிக்கும் பிரசுரித்தவருக்கும் இஸ்லாமிய அரசொன்று மரண தண்டனை விதித்ததும் தலைமறைவானவரில் வெளியீட்டாளர் யப்பானில் மேன்மாடியில் தங்கியிருந்த போது கொலை செய்வித்ததும் சுட்டிக்காட்டி இன்று சைவத்தைப் பற்றி யாரும் என்னவும் பேசலாம்; என்ற நிலைமாற மூபற்சிக்க வேண்டும்! என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. பலரும் அபிப்பிராயம் தெரிவித்துப் பேசிய பின்பு ''முறைப்படி அங்கத்தவர்களைச் சேர்த்து விரிவான தொரு பொதுக் கூட்டத்திணைக் கூட்டி சைவ சித்தாந்தப் பேரவை யொன்று உருவாக்கப்படல் வேண்டும்'' - எனும் தீர் மானம் ஏகமனதாய் நிறை வேறியது.

*இதனிடையில் யாழ் வித்தியாலயத்தில் நடைபெற்றதொரு பொதுக் கூட்டத்தில் ''இன்று சிலர் சமய விஷயங்களைப் பெரிதுபடுத்தி பேசி வருகின்றதாக அறிகிறோம் இன்றைய சூழ் நிலையில் அப்படிச் செய்வது சரியல்ல'' - என எச்*



*சரிக்கை விடப்பட்டது. வளாகத்தில் கைலாசபதியரங்கில் நடந்தபிறிதொரு கூட்டத்திலிது விஷயமாய் இங்கு சில பெரியார்கள் - என மீண்டும் வற்புறுத்தப்பட்டு சுட்டி பேசப் பட்டதாகவும் அறிந்தோம்.*

அமைக்கவிருக்கும் சைவ சித்தாந்தப் பேரவைக்கு பிரதான நிர்வாகிகளாக நாம் கருதும் - எம்மையூக்கிய சில பெரியார் களிடம் சென்று அவர்கள் சம்மதம் ஓரளவறிய 18.11.91-ல் மீண்டும் சென்றோம். சில காரணங்கள் கூறிப் பின்னடித்த போது தான், முன்னர் விட்ட எச்சரிக்கையை உணர்ந்தோம். 20.11.91ற்கு அழைப்பு அனுப்பியாய் விட்டது திகைத்தோம் 19.11 91 பி.ப 5ற்கு திரும்பும் போது பிரிந்து செல்லுமிடத் தில் மல்லாகம் சந்தியில் அ. பஞ்சாட்சரம், சி. சத்திகிரீவன், சி. நவரத்தினம், யான் நால்வரும் நின்று தீவிரமாய் ஆலோ சித்தோம். காரியதரிசியாக்க வற்புறுத்திச் சம்மதம் பெற்றோம். தலைவராக ஆத்மஜோதி நா. முத்தையா இடம் சென்று சம் மதம் பெற முடிபு, பிறிதொருவர் ஊர்தியில் பி. 8 அளவில் சென்று நடந்தன கூறி எமது பழமையினால் வற்புறுத்தி அவர் சம்மதம் பெறப்பட்டது. குறித்தபடி 20.11.91-ல் ஆதீனத்தில் சோமசுந்தர பரமாச்சாரியார் தலைமையில் 58 பேர் சமுகம். விசேட அழைப்பின் பேரில் வந்த சு. இராசேந்திரக் குருக்கள் ஆசியைத் தொடர்ந்து தலைமையுரையின் பின் பேராசிரியர்கள், முன்னோடிகள் பலரும் இன்றைய தேவைகளை - இன்னல்களைக் கூறி இவைகளை களைய ஓர் பேரவையின் அவசியத்தைக் கூறி னர். சைவ சித்தாந்தப் பேரவை ஒன்று இன்று உதயமாக வேண் டும் அதற்கான விதிகள் ஆக்கவும் அங்கத்தவர்களைச் சேர்க்க வும் இடைக்கால சபையொன்று தெரியப்படல் வேண்டும் - எனும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. அதற்கமைய;

| | | |
|---|---|---|
| *தலைவர்* | - *ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்* | |
| *காரியதரிசி* | - *சி. சத்திகிரீபன்* | ,, |
| *தனாதிகாரி* | - *சைவப்புலவர் வ, கந்தசாமி-என்போர்* | |

உட்பட முன்னோடிகளும் சேர்ந்த 15 பேரடங்கிய நிர்வாக சபை தெரிவானது.

தொடர்ந்த நிர்வாக சபையில் இரு வேறு அபிப்பிராயங் கள் தெரிவிக்கப்பட்டன:

I, *எதிர்காலத்தில் உலகளாவிய ரீதியிலுள்ள இந்துச் சங் கங்களுடன் தொடர்பு கொள்ள இந்துப் பேரவை என இருந் ததே நல்லது,*

இந்தியாவிலுள்ள சார்
11. இந்து என்ற ஒரு சமயமில்லை. பொதுப் பெயரீது ஆறு
பான சமயங்களெல்லாவற்றிற்கும் உள்ளார் சித்தாந்தப்
முகநாவலர் இது பற்றி விளக்கியும்
பேரவை என்பதே பொருத்தமானது.

இந்துப் பேரவை என்ற அபிப்பிராயமே கூடினோரால்
ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாவலர் வழி வந்தவர்கட்கு இது
ஒப்புதலில்லை. இந்துப் பேரவை அமைக்கும் நோக்கில் 18.12.92
மீண்டும் ஆதீனத்தில் கூடி தயாரித்த உபவிதிகள் ஏற்றுக்
கொள்ளப்பட்டன. இதன்படி வருட சந்தா 100/= ஜீவிய சந்தா
500/= அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு 25.1.93 சனி நடந்த
பொதுக் கூட்டத்தில்.

| | |
|---|---|
| | ஆத்மஜோதி நா. முத்தையா |
| தலைவர் | ஆ. மகாலிங்கம் (உதவி அரசாங்க அதிபர்) |
| உபதலைவர் | சி. சத்திகிரீபன் (ஏழாலை) |
| காரியதரிசி | சி. நாகராசா (சட்டத்தரணி) |
| தனாதிகாரி | |

என்போர் உள்ளிட்ட நிர்வாக சபையும் தெரிவானது.

(31.7.93)

# பாகம் II

# கூட்டுறவு

பாகம் II


| | பக்கம் |
|---|---|
| கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம் | 01 |
| கோப்பாய் ஐக்கிய பண்டகசாலை | 06 |
| வலி - கிழக்கு கூ. ப. சமாசம் | 10 |
| கோப்பாய் வடக்கு விவசாயிகள் கூ. சங்கம் | 32 |
| வடபகுதி விவசாய வி. உ. கூ சங்கங்களின் சமாசம் | 41 |
| கோப்பாய் சிகரெற்புகையிலை உ. கூ. சங்கம் | 54 |
| யாழ்-சிகரெற் புகை. உற்பத்தியாளர் கூ. ச. சமாசம் | 58 |
| கோப்பாய் சுருட்டுத்தொழிலாளர் ஐ. சங்கம் | 64 |
| யாழ் - கூட்டுறவு மாகாண வங்கி | 74 |
| வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை | 83 |


# கோப்பாய் — கூட்டுறவு

## கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம்

1940-ல் கண்டிக்குளியிலுள்ள ஐக்கிய நாணய சங்கமொன்றில் றலி பைசிக்கிள் வாங்க 100 ரூபா கடன் பெறுவதற்கு நாம் மூவர் தனித்தனி விண்ணப்பித்தோம். இருவர்க்கும் கிடைத்தது. எனக்குக் கிடைக்கவில்லை. அது ஒரு சமயச் சார்பான அங்கத்தவர்களைக் கொண்ட சங்கம். யான் அச்சமயத்தரல்லன்; ஆகையால் எனக்குக் கிடைக்கவில்லை என்பது தெரிந்தது. அதனால் உந்தப்பட்டு அக்கால கூட்டுறவு முன்னோடிகளான மாதகல் தம்பர், இடைக்காடு தம்பிமுத்து, நீர்வேலி செ நடராசா இவர்களது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்று, எமது கிராமத்தில் உள்ள பல விவசாயிகளையும் பெரியார்களையும் கொண்டதொரு பொதுக் கூட்டம் 23.10.40-ல் சரவணபவானந்த வித்தியாசாலையில் கூட்டினேன். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை சிறந்தோங்கியிருந்த காலப்பகுதியது. குறித்த சபையின் கூட்டுறவு மேற்பார்வையாளராக நீர்வேலி காசிநாதன் அவர்களிருந்தார். அவருதவியும் பெறப்பட்டது. அப்பொழுது வடபகுதி ஐக்கிய சங்கங்களின் பதிவு காரியஸ்தராக C. இரகுநாதன் அவர்களும், பரிசோதகர்களாக R. C. S குக், F. A. சந்திரசேகரா என்போரும் சேவையாற்றினார். எமது முதலாவது கூட்டத்திற்கு விசேட அழைப்பின் பேரில் இரகுநாதன் அவர்களும் வந்திருந்தார். எமது கோரிக்கை கூறப்பட்டது. நீண்ட நேர கலந்துரையாடலின் பின் கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம் நிறுவத் தீர்மானமாயது. R S.எட்வேட்ஸ்

அவர்கள் தலைவர்; சாவை சின்னப்பா உபாத்தியாயர் காரியதரிசி, பொன்னுச்சாமி யேசுதாசன் தனாதிகாரி என்போர் கொண்ட நிர்வாக சபை தெரிவானது. அக்கால முறைப்படி சங்க உபவிதிகளை அங்கத்தவர் அனைவரும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்: அதற்கான நேர் வினா விடை பரீட்சை நடைபெற்றுத் திருப்தியடைந்த பின்னரே சங்கம் பதியப்படும். R.C.S.குக், F. A. சந்திரசேகரா, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை காசிநாதன் என்போர் வந்து அடிக்கடி கூட்டங்கள் வைத்து உபவிதிகளை ஒவ்வொன்றாக வாசித்து விளங்கப்படுத்தினர். மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதம் என்றால் என்ன? என்பதற்கான விபரம் F. A சந்திரசேகரா அவர்களால் விளங்கப்படுத்தப்பட்டது அங்கத்தவரில் எந்த ஒருவரும் பெறும் கடனுக்கு பிணைகாரர் மாத்திரமல்ல அங்கத்தவரனைவரும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்பு. சங்கக் கடன் தவணை தப்பி விட்டால்- ஆரம்ப நடவடிக்கைகளாலும் அறவிட முடியாத நிலை ஏற்பட்டால் - சங்கத்தின் தகுதியான எந்த ஒரு நபரிடமிருந்தும் முழுக் கடனையும் அறவிடலாம்; என விளக்கினார். கோப்பாய் முழுவதற்குமாக 1935-ல் ஆரம்பித்து நடந்த ஒரு சங்கம் தவணை தப்பியமையால் சில அங்கத்தவர்கள் உரிய கடன்கள் கட்டிய விபரம் முதிய அங்கத்தவர் சிலருக்குத் தெரிந்திருந்தது. இதனையறிந்திருந்த திரு. பொன்னுச்சாமி தமது ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார்: சில மாதங்கள் சென்று தலைவரும் விலகினார். அடுத்து 23.4 41-ல் நடந்த பொதுக் கூட்டத்தில்;

| | |
|---|---|
| தலைவர் | சாவை சின்னப்பா உபாத்தியாயர் |
| உபதலைவர் | அ. காசிலிங்கம் சிதாணையார் |
| காரியத்ரிசி | க. இ. குமாரசாமி |
| தனாதிகாரி | சீ. கந்தையா |

என்போர் கொண்ட நிர்வாக சபை தெரிவானது... பல கூட்டங்கள் நடந்தன. மீண்டும் இரகுநாதன் A.R. வந்து நடந்த பொதுக் கூட்டத்தில் பல கேள்விகள் கேட்கப்பட்டு விளங்கிக் கொண்டார்கள்; என்ற தீர்மானத்தின் பேரில் பதிவிற்கு அனுப்பப்பட்டது, 23.3.42 பதிவு தபாலில் J 330 – 18.3.42 பதியப்பட்டதான அறிவித்தல் கிடைத்தது, அங்கத்தவர் அனைவருக்கும் பேரானந்தம். தொடர்ந்து பதிவு காரியஸ்தர் சிபார்சுடன் விவசாயக் கடன்கள் கூட்டுறவு மாகாண வங்கியிலிருந்து எடுத்து 9% வட்டிக்குக் கொடுக்கப்பட்டன. வியாபாரிகளும் கடன் பெற்றனர். சங்கம் சிறந்த வகையில் சேவையாற்றியது. வேறும் சங்கங்கள் நிறுவ முன்வந்தனர்.



அப்போது கோப்பாய் வட்டாரப் பரிசோதகராயிருந்த நெ. தாமோதரம்பிள்ளை-வவுனியா, அவர்களும் உற்சாகமான கூட்டுறவு உத்தியோகத்தராயிருந்தார் கோப்பாய் நாற்சந்தியிலுள்ள க. வைத்திலிங்கம் அவர்களது வீடே கூட்டுறவுக் காரியாலயமாகவுமிருந்தது. வலி கிழக்கிலுள்ள 10 கிராமங்கட்கு 10 கூட்டுறவுப் பரிசோதகர்களும் சேவையாற்றினர். சி. நாகலிங்கம் - திருநெல்வேலி, க. சரவணமுத்து (பேபி) - சுன்னாகம், செ. விநாயகமூர்த்தி - அராலி, எஸ். கனகரத்தினம் - சுன்னாகம், உட்பட 10 பேர் உபபரிசோதகர்களாயிருந்தனர். (பின் உதவியாணையாளர் தலைமைக் காரியாலயப் பரிசோதகர்களாக இவர்களில் பலர் பதவியுயர்வு பெற்றனர்) எமது கிராமத்தில் குறித்த வட்டாரக் காரியாலயம் இருந்தமையால் கோப்பாய் கூட்டுறவியக்கம் நல்ல வழி காட்டலில் நடந்து அக்காலப் பகுதியில் கூட்டுறவுப் பகுதியாரதும். கூட்டுறவாளர்களதும் நன்மதிப்பைப் பெறப் பெரிதும் உதவியது. அத்துடன் சங்க விதிகளை நன்கு விளங்கிக் கொண்ட பின்பே பதியும் முறையிருந்ததால் அக்காலத்தில் கூட்டுறவியக்கம் பெரு வெற்றி கண்டது, காணி நிலமுள்ளோர் காணி உறுதியை வைத்து ஈடு அல்லது நோட்டு எழுதிக் கடன் பெறலாம், அற்ற வறியவர்கள். குத்தகை நிலங்களில் கமம் செய்வோர் கடன் பெற ஐக்கிய நாணய சங்க இயக்கம் வரப்பிரசாதமாயிருந்தது.

16.7-48-ல் அம்மன் கோயிலடி ஐக்கிய நாணய சங்கம் இலகடி ஐ. நா. சங்கம்

14.4.49-ல் சரஸ்வதி ஐ. நா. சங்கம்

29.8.52-ல் கந்தசாமி கோயிலடி ஐ. நா. சங்கம்

2.4.53-ல் கோப்பாய் வடக்கு மாதர் ஐ. நா. ச: எனும் ஐந்து சங்கங்களும் தொடர்ந்து நிறுவப்பட்டு நன்கு நடைபெற்றன. 1970 இச்சங்கங்கள் ஆறும் திறம்பட சேவையாற்றின. இரண்டு சங்கங்கள் A வகுப்பிற்கும் உயர்த்தப்பட்டன,

18.12.48-ல் கோ. வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் போஷகராக சாவை சின்னப்பா, சி. விசுவலிங்கம் – தலைவர் க. சங்கரப்பிள்ளை – காரியதரிசி, சீ, கந்தையா - தனாதிகாரி என்போரைக் கொண்ட நிர்வாக சபை சேவையாற்றியது.

பிரதி வருடமும் ஆடி மாதத்தில் யாழ் – றீகல் தியேட்டரில் நடைபெறும் கூட்டுறவாளர் மகா நாடுகளில் ஐ. நா. ச. பிரதிநிதிகளே கூடுதலானோர். 1942 காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டிற்கும் ஒரே மேற்பார்வைச் சபை.

இரண்டு மாகாணங்களிலிருந்தும் வரும் தமிழ், முஸ்லீம் பிரதி
நிதிகட்கும் இரண்டு நாள் தொடர்ந்து மகாநாடு நடைபெறும்.
கூட்டுறவுத் திணைக்கள மேலதிகாரிகள், மந்திரிமார், தேசாதி
பதி, வெளிநாட்டுக் கூட்டுறவுப் பெரியார்கள் உள்ளிட்ட பலரும்
காலத்துக்குக் காலம் விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்ட
சந்தர்ப்பங்கள் பலவுமிருந்தன.

1970 காலப் பகுதியில் பல நோக்குச் சங்கங்கள் ஆரம்பித்
தன. மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதத்தின் கீழ் இரண்டு
ஆட்பிணையுடன் மிளகாய் வெண்காயம், உருளைக் கிழங்கு முத
லிய உப உணவுப் பயிர்ச் செய்கைகட்கு காராளமாகக் கடன்
கள் கொடுக்கப்பட்டன. இவையே அக்காலக் காசுப் பயிர்களா
கவுமிருந்தமையால் அடுத்த வருடச் செய்கைக்கு முன் கடன்கள்
ஒழுங்காகக் கட்டப்பட்டு வந்தன: இதனால் ஐக்கிய நாணய சங்
கங்களின் தொழிற்பாடு அருகியும் ஸ்தம்பித்தும் நிலையுரு
வானது.

1983 - 84 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் பொருளா
தாரத்தை நசுக்கத் திட்டமிட்டுச் சதி செய்து வெளிநாட்டு
விதையுருளைக் கிழங்கை முற்றாகத் தடை செய்து தரமற்ற உள்
ளூர் நுவரெலியா விதையுருளைக் கிழங்கினை அரசாங்கம் எமது
விவசாயிகள் மேல் திணித்தது. யாழ் விவசாயப் பகுதியார்,
கூட்டுறவுப் பகுதியார், விவசாயிகள் எவ்வளவோ கூப்பாடு
போட்டும் கெஞ்சித்தும் செவிசாய்க்காது தொடர்ந்து சில வரு
டங்கள் முதலியையா இதே வழியையே கையாண்டார், இத
னால் 1986 அளவில் நல்ல வருவாயைத் தந்த உருளைக் கிழங்
குச் செய்கை முற்றாகக் கைவிடக் காலாயிருந்தது 1989 – 90
காலப் பகுதியில் அரசியல் நிலையில் ஏற்பட்ட பெருமாற்றங்
களாலும் விவசாயப் பகுதியாரின் மறைமுகமான தூண்டுதலா
லும் விவசாய சங்கங்களின் ஒலமிகுதியினாலும் முன்னர் போல்
வெளிநாட்டுக் கிழங்கு இறக்குமதி செய்து விநியோகிக்கப்பட்
டன.

பழைய சதி காலத்து விவசாயக் கடன்களை அறவிட முடி
யாத கடன்களாகக் கருதிக் கழித்து விடுமாறு கேட்கப்பட்டுள்
ளது, மேலும் தொடர்ந்து 87 - 88 காலப் பகுதிகளில் நடை
பெற்ற வன்செயல்களினால் செய்தபடியுள்ள தோட்டங்கள், வீடு,
விளைபொருட்கள் கால்நடைகள் அனைத்தையும் கை விட்டு
அகதிகளாக ஓடி பல மாதக் கணக்கில் அலைந்து திரிந்த வேளை
களில் பழைய விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வலு
வற்ற நிலையிலுள்ளார்கள், மேலும் குறித்த பல நோக்கச் சங்



கங்கள் செய்து வந்த வேலைகளையும் கமத்தொழிற் சேவைத்
திணைக்களம் செய்யும் நிலையுருவாகியுள்ளது. இதனாலும்
சங்கங்கள் கொடுத்த கடன்களை மீள அறவிட முடியாத நிலை
யுருவாகியுள்ளது. இக்காரணங்களால் குறித்த கடன்களை அற
விட முடியாத கடன்களாகக் கழித்து விடுமாறு கேட்க வேண்டி
யது, விவசாயி சங்கங்களதும் இன்றைய அரசியலாரதும் பொறுப்
பாகும்.

1974 காலப் பகுதியில் நன்கு இயக்கமவிருக்கும் ஐக்கிய
நாணய சங்கங்களின் பதிவுகளையழித்து உரிய மிகுதியிருப்புக்
களை CCD நிதியிலிடுமாறு ACCD மாருக்கு அறிவிக்கப்பட்
டது நமது திணைக்கள உத்தியோகத்தர் என் கேட்டால் எண்
ணெய் தருகிறேன்; என்ற வகையில் பல சங்கங்களின் தனாதி
காரிகள் வசமிருந்த புத்தகங்களையும் கையிருப்புக்காசையும் வாங்
கிக் கொண்டு போய் பதிவழிக்க ஆவன செய்தனர். எந்த விதமான
அறிவித்தலுமின்றி நிர்வாக சபையையோ பொதுக் கூட்டத்
தையோ கூடித் தீர்மானியாது, நசக்கிடாமல் பதிவழித்து விட்ட
பரிதாப நிலைமையுருவானது. 1911 தொடக்கம் யாழ்ப்பாணத்
தின் ஆணிவேராயிருந்த ஐ. நா. சங்கங்களின் கதியிதுவாயிற்று.

மட்டுப்படுத்தப்படாத ஐக்கிய நாணய சங்கட்குப் பதிலாக
சிக்கன சேமிப்பு கடனுதவி சங்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன. தற்
போது எமது கிராமத்தில் தப்பிப் பிழைத்த இரண்டு சங்கங்கள்
மாத்திரமே தமது பெயர்களை சிக்கன சேமிப்புச் சங்கமாக
மாற்றி இயங்குகின்றன.

# கோப்பாய் ஐக்கிய பண்டகசாலை

எமது கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கம் கிரா
மத்தில் ஓர் கூட்டுறவுப் பண்டகசாலை அமைக்க வேண்டுமென
17.6.42-ல் தீர்மானித்தது. இலங்கையில் இரண்டாவது யுத்த
காலத் தேவைகளை நோக்கி மற்றைய பண்டகசாலைகள்
அமைத்தற்கு முன்னரே கோப்பாய் ஐக்கிய பண்டகசாலை
30.7.42-ல் 135 இலக்கத்தில் பதிவாகியது அதன் தலைவராக
ச. சுப்பிரமணியம் - நியாயதுராந்தரர் அவர்களும் பொருளா
ளராக சி. கந்தையா அவர்களும், க. இ. குமாரசாமி காரிய
தரிசியாகவும் கொண்ட நிர்வாக சபை தெரிவானது. கோப்பாய்
நாற்சந்தியிலுள்ள சுப்பிரமணியம் அவர்கள் கட்டிடத்தில் அமைந்
திருந்த கடையில் 1942 ஆவணியில் பண்டகசாலை ஆரம்ப
மாகிய போது 125 அங்கத்தவர்கள் சேர்ந்தனர். கோப்பாய்
வடக்கு விதானையார் அ. காசிலிங்கம் அவர்களும் சி. கந்தையா
அவர்களும் விற்பனையில் ஆரம்பத்தில் பெருந் தொண்டாற்றி
னர். இரண்டு மாதங்களில் த. பொன்னுத்துரை அவர்கள்
மானேசராகக் கடமையேற்றார். சில காலத்தில் யுத்தம் தொடங்
கியதால் பங்கீட்டுப் பொருட்கள் சிறந்த வகையில் விநியோகிக்
கப்பட்டமையால் அங்கத்தவர் தொகை 250ற்கு மேல் அதி
கரித்தது. பிரதி வருடமும் லாபத்தில் நடந்து வந்ததால் அங்
கத்தவர்கட்கு பங்கு வட்டியும் லாபப்பங்கீடும் பிரதி வருடமும்
கொடுக்கப்பட்டது, பத்து வருடங்கட்கு மேலாக மிகவும் சிறப்
பாக நடந்து வந்தது. சங்கத்தின் பெறுமதி 16 ஆயிரம் ரூபா
வாக விருந்தது. 1950 வருடாந்தக் கூட்டத்தின் போது தீர்மானிக்
கப்பட்ட லாபப் பங்கீட்டுத் தொகையை அங்கத்தவர் பலரதும்
சம்மதத்துடன் கையெழுத்துப் பெற்று கோப்பாய் சித்திர வேலா
யுத சுவாமி கோயிலில் பிள்ளையார் பிரகாரமூர்த்தி கோயில்
அமைப்பதற்காக த. பொன்னுத்துரை, அ. காசிலிங்கம் என்
போரிடம் கையளிக்கப்பட்டது.



1952 வருடாந்தக் கூட்டத்தின் போது "நெடுகலும்
குறிக்கப்பட்டவர்களே சேவையாற்றாது மற்றவர்கட்கும் சேவை
செய்யச் சந்தர்ப்பம் கொடுத்தாலென்ன?". என்று பிரச்சினைப்
படுத்தப்பட்டது, அதன்படி புதியவர்களைக் கொண்ட நிர்வாக
சபை போட்டியின்றித் தெரிவானது. பிந்திய நிர்வாக காலத்
தில் முகாமையாளர்கள் அடுத்தடுத்து மாற்றமடைந்தனர். சங்
கத்தின் நிலை வரவர வீழ்ச்சியடைந்து கொண்டே வந்தது.
முகாமையாளர்கள் பிரதான நிர்வாகிகளின் உறவினர்களாகவு
மிருந்ததால் ஏற்பட்ட சோர்வுகள் அறவிட நடவடிக்கை எடுக்க
முடியாத நிலையுமிருந்தது. குறித்த காலப் பகுதியில் மானேசர்
களாயிருந்த இருவரிடமிருந்தும் முறையே ரூபா 3189/52,
3066/42 அறவிடப்பட்டு மிகுதி கழித்து விடப்பட்ட விபரம்
9.8.59-ல் வெளிப்படுத்தப்பட்ட கணக்கறிக்கையில் காட்டப்பட்
டிருந்தது. சங்கத்தின் பெறுமதி மிகவும் சுருங்கி வலிகாமம்
கிழக்கு ஐக்கிய பண்டகசாலைச் சமாசத்திலிருந்து பண்டகசாலைக்
கூப்பன் சாமான் முழுவதனையும் ஒரே முறையில் பெற்றுக்
கொள்ள முடியாத நிலை உருவாகி கிழமைக்கு இரண்டு தட
வைகள் பிரித்துப் பெறுவதற்கு சங்கத்தின் பொருளாதார நிலை
வீழ்ச்சியடைந்தது. இதனால் கூட்டுறவுதவியாணையாளரும், பக்
கத்திலுள்ள சுருட்டுச் சங்க அங்கத்தவர் சிலர் சின்னத்தம்பி
ஆறுமுகம் அவர்கள் தலைமையில் மனுச் செய்தும் பேட்டி கண்
டும் விண்ணப்பித்தனர். அதன்படி கூட்டுறவுச் சட்டம் அத்.
107-1(4) பிரிவின்படி யாழ் கூட்டுறவுதவியாணையாளர்
வெ. நடராசா அவர்கள் 29.10.1956-ல் கோப்பாய் சுருட்டுச்
சங்க மண்டபத்தில் பண்டகசாலை விசேட பொதுக் கூட்ட
மொன்றினைக் கூட்டியிருந்தார் இதன் அவல நிலைக்குக் காலா
யிருந்த நிர்வாகிகளில் ஒரு சாரார் "தொடர்ந்து இப்பண்டக
சாலை நடவாது; பயன்தராது, மூடிவிடலே புத்தியானது" -
என அபிப்பிராயம் தெரிவித்தனர். இப் பண்டகசாலையின் ஸ்தா
பக அங்கத்தவர்களும் - பிரதானமாக இளையதம்பி அம்பல
வாணர், தம்பையா வீரவாகு, சின்னத்தம்பி ஆறுமுகம் என்
போர் முன்னையவர்களைக் கடுமையான தொனியில் கண்டித்து
"பண்டகசாலையை மூடாது புனரமைப்புச் செய்து புதிய நிர்
வாக சபையொன்றினைத் தெரிந்து, நடைபெற ஆவன செய்து
தாருங்கள்" - என ஆணையாளரைத் தீர்மானம் மூலம் வேண்
டினர். சபையோரில் பெரும்பான்மையோர் அதனை ஆமோ
தித்து தீர்மானம் நிறைவேற்றினர். ஆணையாளரும் அதே அபிப்
பிராயத்தையே தெரிவித்து புதியதொரு நிர்வாக சபையைத்
தெரியுமாறு கேட்டார். முக்கிய நிர்வாக உறுப்பினர் பதவிகட்கு
ஒன்றன்பின் ஒன்றாகப் பல பெயர்கள் பிரேரிக்கப்பட்டும், கட
மையேற்க சம்மதமின்மை தெரிவிக்கப்பட்டன. ஈற்றில் த. வீர

வாகு, இ. அம்பலவாணர் சபையார், உதவியாணையாளர் வற்
புறுத்தல்களின் பேரிலேயே சம்மதித்தனர். சி. கந்தையா ஆசிரி
யர் அவர்கள் காரியதரிசியாகவும், சீ. க. சுப்பிரமணியம் ஆசிரி
யர் பொருளாளராகவும், க. இ. குமாரசாமி தலைவராகவும்
கொண்டதொரு புதிய நிர்வாக சபை தெரிவானது. தொடர்ந்து
சி. ஆறுமுகம் அவர்கள் நிர்வாக சபையின் வற்புறுத்தலின் பேரில்
மானேசராக நியமனம் ஏற்றார். பண்டகசாலை மீண்டும் புதுப்
பொலிவுடன் வளரலானது. ரூபா 1232/ நட்டத்துடன் விடப்
பட்ட பண்டகசாலை 1957 - 58-ல் ரூபா 1323/52, 1958/59-ல்
967/10 உம் லாபகரமாகப் பெற்று சங்கத்தின் பெறுமதியும் திட்
டக் கடதாசியின் படி 6255/50 ஆக உயர்ந்தது தொடர்ந்து;

23.8.59-ல் நடந்த வருடாந்தக் கூட்டத்திற்கு சமுகமளித்
திருந்த உதவியாணையாளர் வெ. நடராசா அவர்கள் பேசும்
போது "சுமார் இரண்டு வருடங்கட்கு முன்னர் மிகவும் பரிதாப
கரமான நிலையிலிருந்து அதிகாரிகளால் மூடும் தறுவாயிலிருந்த
இந்தக் கூட்டுறவு ஸ்தாபனம் தனது சிறந்த நிர்வாகத்தினால்
ஈராயிரம் ரூபாவுக்கு மேல் லாபகரமாகப் பெற்றுள்ளதனை அறி
யும் போது பெரும் மகிழ்ச்சியடைய வேண்டிய நிலையில் உள்
ளோம். இன்றைய இப் பண்டகசாலையின் நிர்வாகிகளின் திற
மையை நாம் பாராட்ட வேண்டும். இதன் சாதனை இதர சங்
கங்கட்கும் ஓர் எடுத்துக் காட்டாய் விளங்கட்டும்" - எனக்
குறிப்பிட்டது 26.8.59 தினகரன் பத்திரிகையிலும் வெளியானது.

காரியதரிசி, தனாதிகாரி என்போரது கண்ணியமான
சேவையினாலும், முகாமையாளர் சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்
களது அந்தரங்க சுத்தியான சேவையினாலும், அங்கத்தவர்கள்
கண்காணிப்பாலும் இப்பண்டகசாலை மீண்டும் புத்துயிர் பெற்று,
பண்டகசாலையின் மொத்தப் பெறுமதி 12385/21 ஆக உயர்ந்
தது. பற்றிய விபரம் 1.5.62-ல் நடந்த பொதுக் கூட்டத்திற்கு
சமர்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டி
ருந்தது. 14.5.62-ல் சி. ஆறுமுகம் அவர்கள் தமது சொந்தக்
காரணங்களையிட்டு விலகிக் கொள்ள, அவரின் கீழ் விற்பனை
யாளராயிருந்த செ. நடேசன் அவர்கள் மானேசராக நியமிக்
கப்பட்டார். 1.5.62-ல் நடந்த வருடாந்தக் கூட்டத்தின் போது
முன்னைய தலைவர், தனாதிகாரியுடன் க. இராசரத்தினம் ஆசிரி
யர் அவர்கள் செயலாளராக நியமனம் பெற்றார். 31.12.64-ல்
குறித்த சங்கத்தின் பெறுமதி 16839/02 ஆக வளர்ச்சி பெற்றது.

சங்கம் தனக்கென ஓர் நிலையான கட்டிடத்தை நிறுவத்
தீர்மானமாயது. தற்போதைய கட்டிடமுள்ள காணியை ரூபா
400/= ஆக கொள்வனவு செய்தது. குறித்த காணியில் ரூபா



25000/= பெறுமதி கொண்ட மேல் மாடி கொண்ட கட்டிடம
மைக்கவும் திட்டமிடப்பட்டது. சங்க நிதியிலிருந்து செலவழித்
தது போக, மிகுதி யாழ் - கூட்டுறவு மாகாண வங்கியிலிருந்து கட
னாகப் பெறவும் தீர்மானமாயது. மேற்கொண்டு வேண்டியவை
விரைந்து செய்யப்பட்டு கட்டிட வேலைக்கான ஒப்பந்தம் வலி
கிழக்கு ப. நோ. கூ. சங்கத்துடன் செய்யப்பட்டது.

நீர்வேலியைத் தாயகமாகக் கொண்டவரும், யாழ் மேற்கு
உதவியாணையாளராகச் சேவையாற்றிய வருமான கே. எஸ்.
பொன்னுத்துரை அவர்களால் 2.5.66-ல் எமது புதிய கட்டிடத்
துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டிட வேலைகள் உரிய
காலத்தில் சங்கத்தாரால் ஒழுங்காகச் செய்து முடிக்கப்பட்டன.

இலங்கையின் கூட்டுறவியக்கத்தின் முன்னோடிகளில் ஒரு
வராக விளங்கியவரும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை
யின் தலைவராகச் சேவையாற்றியவருமான, திரு. அர். அர்.
இராசரத்தினம் அவர்களால் 10.6.68 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 7
மணிக்கு எமது புதிய கட்டிடக் கதவைத் திறந்து வைத்த விழா மிக
வும் கோலாகலமான வகையில் கொண்டாடப்பட்டது.

சங்கம் புதிய கட்டிடத்தில் அதன் சேவைகளை விஸ்தரித்து
அங்கத்தவர்கட்கு மிகவும் திருப்தியான வகையில் சேவையாற்றி
வந்தது. சங்கத்தின் நற்சேவைக்கு - பாராட்டுதல்களுக்கு முகா
மையாளர் செ. நடேசன் அவர்களது நேர்மை முயற்சியும் அந்
தரங்க சுத்தியான சேவையும் பிரதான காரணமாயிருந்தது.

1971-ல் கூட்டுறவுத் திட்டத்தில் பெரும் மாற்றமேற்பட்
டது. வலிகிழக்கு தென்பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கங்கள், பண்டகசாலைகள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு சமா
சமாக்கப்பட்டது. சுவீகரிக்கும் போது காரியதரிசியாக க. இராச
ரத்தினம், பொருளாளராக சீ. க. சுப்பிரமணியம், தலைவராக
க. இ. குமாரசாமியும் கொண்ட 15 பேரடங்கிய நிர்வாக
சபையும், மானேசராக செ. நடேசன் அவர்களும் சேவையாற்
றினர். அப்போது சங்கத்தின் பெறுமதி ரூபா 20000/= திற்கு
மேல் வளர்ந்திருந்ததுடன் புதிய கட்டிடமும் ஒப்படைக்கப்பட்
டது.

# வலிகாமம் கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசம்

## வலி - கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

1942-ல் ஏற்பட்ட உலக மகா யுத்தத்தின் போது இலங்கையிலும் உணவு நெருக்கடி உண்டாயிற்று. பர்மா முதலிய நாடுகளிலிருந்து வரும் கப்பல்களை நம்பி அரிசிக்குக் காத்திருந்த காலப்பகுதியது. இலங்கையின் உணவுக் களஞ்சியங்களாயிருந்த வன்னிப் பிரதேச வயல் நிலங்களெல்லாம் அந்நியராட்சிக் காலத்தின் போது கவனிப்பாரற்று குளங்கள் தூர்ந்து காடுகளாயின. கார் உள்ள நிலங்களும் வானம் பார்த்த வயல்களாயிருந்தன. காத்த வேளாளராயினர்.

இதே காலப்பகுதியில் அபரிமிதமான நெல் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த வங்காள தேசத்திலேயே பல லட்சக் கணக்கானோர் பட்டினியால் மடிந்த செய்திகளும் கிடைத்தன, யுத்த காலமானபடியால் உற்பத்தி குறைந்ததாலும், விளைந்த நெல்லையும் சரியானபடி விநியோகிக்காது கொள்ளை லாபமடிக்கக் கருதியோர் பதுக்கல் செய்ததாலும் அவ்விடம் ஏற்பட்ட பட்டினிச் சாவு இலங்கையரசின் கண்ணையும் திறந்தது. உள்ளூர் உற்பத்தி குறைந்த இதே வேளையில் இறக்குமதியரிசியை பதுக்கல்காரர்கள், கொள்ளை வியாபாரிகள் கைக்குவிடாமல் எல்லாருக்கும் சமபங்கீடு செய்யும் முறை இலங்கையரசினால் வகுக்கப்பட்டது.

இலங்கையில் 1911-ல் ஆரம்பித்த கூட்டுறவியக்கம் பிரதானமாக ஐக்கிய நாணய சங்கம் வளர்ச்சியாகி 1943 அளவில் வலுப் பெற்றிருந்த காலப்பகுதியது இறக்குமதியரிசியை-மொத்த வியாபாரிகள் மூலம் தனி வியாபாரிகள் ஊடாக கூப்பன் முறையாரம்பித்து பங்கீடு நடந்தது. எனினும் இம்முறை திருப்திகர



மாகக் காணப்படாமையால் அவசர-அவசியமாக இலங்கை முழுவதும் 1944-ல் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்படி வலி கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட பண்டகசாலைகளுக்கு நீர்வேலியிலுள்ள சி. முருகேசு அவர்களுடைய மொத்த வியாபாரக் கடை மூலம் விநியோகம் நடைபெற்றது. நாளடைவில் பெரும் பிரிவுகள் தோறுமுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகள் சேர்ந்து பண்டகசாலை சமாசங்களையமைத்தன. இந்த வகையில் தோன்றியதே வலிகாமம் கிழக்கு கூட்டுறவு பண்டகசாலைகளின் சமாசமாகும். இது 25.9.44-ல் 877-ம் இலக்கத்தில் பதிவானது. நீர்வேலி நீ சி முருகேசு உபாத்தியாயர் உதவியுடன் சமாசத்தார் மொத்த வியாபாரியார் சி. முருகேசு அவர்களிடம் சென்று இணக்கம் பேசி அவரது கடையை நடத்திய கட்டிடத்தையும் வாங்கி சமாசத்தின் முதலாவது மொத்த வியாபார நிலையமாக்கினர்; குறித்த சமாசத்திற்கு

V. வீரசிங்கம் - அதிபர் - தலைவர் (அச்சுவேலி)
[illegible]. அருணாசலம் - ஆசிரியர் - காரியதரிசி (சிறுப்பிட்டி)
செ. நடராசா - தலைமையாசிரியர் - தனாதிகாரி

உட்பட ஒன்பது பேர் கொண்ட முதலாவது நிர்வாக சபையினர் சேவையாற்றினர். கல்வியங்காடு தொடக்கம் வளலாய் இறுதியாக நீண்ட பிரதேசமாக வலிகிழக்கு இருந்தமையால் நீர்வேலியிலும் வலிகிழக்கிலும் இரு கிளைகளை நிறுவி ஒரு நிர்வாகத்தின் கீழ் நடத்தினர். கிடைக்கும் சகல பொருட்களும் பங்கீட்டு முறையிலேயே கொடுபட்டன. இந்தச் சமபங்கீட்டுக் கூப்பன் முறையால் இலங்கையில் பட்டினிச்சாவு இல்லை; எனுமளவிற்கு இருந்தது. நீர்வேலியில் இளைப்பாறிய தில்லையம்பலம் அவர்களும் ஆவரங்காலில் செல்லத்துரை அவர்களும் மானேசர்களாக நியமனம் பெற்று நன்கு நடைபெற்றது. குறித்த நிர்வாகம் பிரதி வருடமும் சிறுச்சிறு மாற்றங்களுடன் தொடர்ந்து நடைபெற்றன. தலைவர் வீரசிங்கம் அவர்கள் சொந்தக் கருமம் நிமித்தம் கொழும்பில் தங்க வேண்டிய நிலையேற்பட்டமையால் 1.7.55-ல்

தலைவர் - சி. கனகசபாபதி கோப்பாய் தெற்கு
உபதலைவர் - தம்பி க. சிவகுரு ஆவரங்கால்
காரியதரிசி - நீ. சி. முருகேசு ஆசிரியர்
தனாதிகாரி - க. இ. குமாரசாமி

என்போருடன் திருவாளர்கள் சி. கனகசபை புத்தூர், நா. தம்பு ஊரெழு, மு. கந்தசாமி இடைக்காடு, சி பொன்னையா உரும்பராய், A. R. மனுவேற்பிள்ளை அச்சுவேலி எனும் 9 பேர்

கொண்ட நிர்வாக சபை செயலாற்றியது. 1955-ல் 2378235/= வியாபாரம் நடைபெற்று சுத்தலாபமாக 16932/= கிடைத்தது.

| | ஆரம்பத்தில் | | 1955-ல் | |
|---|---|---|---|---|
| | நீர்வேலி | ஆவரங்கால் | நீர்வேலி | ஆவரங்கால் |
| பலநோக்குச்சங்கங்கள் | 11 | 9 | 10 | 8 |
| பண்டகசாலைகள் | 14 | 8 | 19 | 9 |
| தனி வியாபாரிகள் | 11 | 11 | 11 | 9 |
| டெப்போக்கள் | — | 2 | — | — |

இருந்தன. ஒரு லொறி மாத்திரமே வேலை செய்தது. 26.8.56-ல் சம்பள நிர்ணய சபை வகுத்த திட்டத்தின்படியே

| | சம்பளம் | அலவன்ஸ் | பிணை |
|---|---|---|---|
| மானேசர் | 120—180 / 10 | 25/— | 2000/— |
| லிகிதர் | 100—160 / 7.50 | 15/— | 100/— |
| தொழிலாளிகள் | 130/— | 10/— | 100/— |

வேதனம் கொடுபட்டது. ஆ. சின்னத்துரை அவர்கள் - இருபாலை கொள்வளவு உத்தியோகத்தராகவிருந்தார்.

நீர்வேலி மானேசராயிருந்த தில்லையம்பலம் அவர்கள் விலக அவ்விடத்திற்கு பெ. கணேசலிங்கம் அவர்கள் - இருபாலை. நியமனமானார். ஆவரங்கால் செல்லத்துரை அவர்கள் விலக அவ்விடத்திற்கு கணேசலிங்கம் மாற்றப்பட்டு நீர்வேலிக்கு ஆ. சின்னத்துரை அவர்கள் - ஆவரங்கால், நியமனமானார். நிர்வாகம் நல்ல வகையில் செயற்பட்டமையாலும், விசேடமாகப் பணியாளர்கள் நேர்மை முயற்சியுடன் கண்ணியமாகக் கடமையாற்றியமையாலும் இக் காலப்பகுதியில் சிறந்த சமாசங்களிலொன்றாக வலிகிழக்கு ப. நோ. கூ. சமாசம் திகழ்ந்து பொது மக்களதும் கூட்டுறவுப் பகுதியாரதும் பாராட்டுதல்களைப் பெற்றது.

இக்காலப்பகுதியில் தமிழ் பல்கலைக் கழக இயக்கம் தீவிரமாகத் தொழிற்பட்டது. எமது சமாச ஆதரவில் கோப்பாய் கூட்டுறவுக் காரியாலயத்திலும் தொடர்ந்து நீர்வேலி, அச்சுவேலிப் பகுதிகளிலும் பேராசிரியர் சின்னத்தம்பி, சிரேஷ்ட கூட்டுறவுதவி



யாணையாளர் இ. இராசரத்தினம் என்போர் பிரசாரக் கூட்டங்கள் நடத்தினர். வலிகிழக்குப் பகுதிக்கென நிதி திரட்ட ஆரம்பிக்கப்பட்ட போது சங்க நிர்வாகிகள் பெரும் பங்கு கொண்டு நன்கொடையாகவும், மாதாந்த சந்தாவாகவும் தாராளமாக உதவி செய்தனர். திருமலையில் பல்கலைக் கழக இயக்கத்திற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றன. சில வருடங்களால் மேலிடத்திலிருந்து குறித்த பல்கலைக் கழக இயக்கம் கைவிடப்பட்டது.

1958-ல் க. சிவகுரு அவர்கள் தலைவர் மு. கந்தசாமி அவர்கள் காரியதரிசி, முகாந்திரம் S. சுப்பிரமணியம் - கோப்பாய், தனாதிகாரியாகக் கொண்ட நிர்வாகசபை சிறு மாற்றங்களுடன் செயலாற்றியது. தலைவர் அவர்கள் 20.1.60-லிலும் தனாதிகாரி அவர்கள் 8.5.60-லிலும் காலமாக நேரிட்டது. ஐந்து வருட இடைவெளியில் சங்கம் நன்கு வளர்ச்சியடைந்தது. CW 1922, 33 ஸ்ரீ 1706 இரண்டு லொறிகள் சேவையிலீடுபட்டன. தம்பி சிவகுரு அவர்கள் புத்தூரில் கிளைக்கட்டிடம் நிறுவ போதுமான காணியை முன்னரே தாமாகவே மனமுவந்து நன்கொடையளித்திருந்தார்.

தொடர்ந்து 30.1.60-ல் தலைவர் க. இ. குமாரசாமி உபதலைவர் சி. பொன்னையா-உரும்பராய், காரியதரிசி மு.கந்தசாமி - இடைக்காடு. நிர்வாக சபையினர்: பண்டிதர் செ. துரைசிங்கம் - நீர்வேலி, சி. கனகசபை - புத்தூர், க. இராமுப்பிள்ளை-ஊரெழு, வ. மாணிக்கம். சிறுப்பிட்டி, எஸ். கிறிஸ்தோப்தம்-அச்சுவேலி ஆகியோர்களுட்பட 9 பேர் கொண்ட நிர்வாக சபை சேவையாற்றியது

| | நீர்வேலி | அச்சுவேலி |
|---|---|---|
| கூப்பன் | 24807 | 22124 |
| பலநோக்குச் சங்கம் | 10 | 8 |
| பண்டகசாலை | 14 | 9 |
| தனி வியாபாரிகள் | 11 | 11 |

புத்தூரில் தம்பி சிவகுரு அவர்கள் நன்கொடையளித்த காணியில் புதிய கட்டிட வேலைகள் துரிதகதியில் நிறைவேறி கூட்டுறவுதவியாணையாளர் வெ. நடராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆவரங்கால் கிளை புத்தூருக்கு மாற்றப்பட்டது.

கே. எஸ். பொன்னுத்துரை கூட்டுறவுதவி ஆணையாளர் எமது நீர்வேலிக் கிளைக்கும் ஓர் புதிய கட்டிடமமைத்தல் சம்

பந்தயாய் தீவிரமாயூக்கினார். நீ. சி. முருகேசு உபாத்தியாய ருடைய பெருமுயற்சியால் சமாசத்துக்கருகேயுள்ள குருக்களது காணியில் 3 பரப்பு 10 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய் யப்பட்டது. குறித்த காணியில் 2 லட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவில் குறித்த கட்டிடம் அமைத்தற்கான மதிப்பீடு வரை படம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டு 25 6.61-ல் கட்டிட ஒப்பந்தமும் செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பமாகின. புதிய கட்டிட வேலைகள் முடியும் வரையும் சமாசத்தின் வடக் குப் புறமாயுள்ள தனியார் கட்டடத்தை வாடகைக்கு எடுத்துப் பாவிக்கப்பட்டது.

7.9.61-ல் நடந்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் - வலி கிழக்குப் பகுதிக்குத் தொடர்ந்தும் பச்சையரிசியே வினி யோகிக்கப்படுகிறது அரிசி குத்தும் ஆலை குறைவாக இருப் பதுவே இதற்குக் காரணம் எனக் கூறப்படுவதால் இச்சமா சம் அரிசி குத்தும் ஆலையொன்றை நிறுவ வேண்டும் என மு. கந்தசாமி அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

இது வரையும் யாழ் (C. W. E. ) கூட்டுறவு மொத்த ஸ்தா பன கிளையிலிருந்தே பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கொழும்பு கூ. மொ. ஸ். C. W E, விலைக்கும் யாழ் C. W. E. விலைக்குமிடையே அதிக வித்தியாசம் காணப்பட்டதனால் கொழும்பில் கொள்வனவு செய்து விற்கும் ஒழுங்குகளும் ஆரம் பிக்கப்பட்டன. மின்தறியாலையொன்று ஆரம்பிப்பதற்கு கோப் பாய் தெற்கில் 18 பரப்புக்காணி 18 ஆயிரம் ரூபாவுக்குக் கொள் வனவு செய்யப்பட்டது.

22.10.63 ல் நடந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சி. கனகசபாபதி அவர்கள் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப் பெற்றார் நிர்வாக சபை சிறு மாற்றங்களுடன் மீண்டும் செயலாற்றியது. கொழும்பு மொத்த விற்பனை நிலையத்தில் புடவைக் கொள்வனவும் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் சமாசம் கூடிய லாபமடையக் கூடியதாயிருந்தது.

14.12 63-ல் E. K. சண்முகநாதன் அவர்கள் தலைவரானார் இவருடைய காலத்தில் கட்டிட வேலைகள் துரித கதியில் நடை பெற்றன.

7.11 64-ல் நடந்த 20வது பொதுக் கூட்டத்தில் க.வீ. கனகசபாபதி-அச்சுவேலி அவர்கள் தலைவரானார். இவர் ஓய்வு பெற்றிருந்தமையால் முழு நேர சேவையாளராகச் சமாசத்தில்



காணப்படுவார். இக்காலத்தில் கொழும்பிலிருந்து மெல்லிய சாக்குகளில் கோதுமை மா வரத்தொடங்கியது. 8-10 இறாத்தல் வரையில் ஓர் மூடையில் தற்குறைவு காணப்படுவதாக முதலில் பேக்கரியாளர்கள் முறையிட்டனர். அவர்கள் முன்னிலையில் நிறுத்துப் பார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது. இது விஷயமாய்த் தலைவர் உள்ளிட்ட உபசபையினர் மேலதிகாரிகட்கு முறையிட் டனர். விசாரணையில் வருகிற மூட்டைகளைத்தானே உங்கட் குத் தருகிறோம் - எனச் சொல்லப்பட்டது இது சம்பந்தமாய் மேற்கொண்டு அரசாங்க அதிபர் ஊடாக மந்திரியாருக்கும் முறை யீடு செய்யப்பட்டது. மொத்த வியாபார நிலையத்திலேயே அர சாங்க உத்தியோகத்தார் உள்ளிட்ட பலர் முன்னிலையில் நிறுத்துப் பார்த்துக் குறைவு ஒப்புக் கொள்ளப்பட்டது. அன்றி லிருந்து சமாசம் மா எடுக்கும் போதும் கொடுக்கும் போதும் நிறுத்துக் கொடுக்கும் முறையேற்பட்டது இது சம்பந்தமாய் தனி யார் வியாபாரிகளும் மற்றைய சங்கத்தாரும் எமது சங்கத்துக் குப் பாராட்டுத் தெரிவித்தும், கடிதங்களும் எழுதியிருந்தனர்.

நீர்வேலி புதிய கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகி 10.12.66-ல் P E வீரமன் CCD அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. அவர் தமது பேச்சின் போது "கூட்டுறவியக்கத்தில் வட பகுதியில் இன்று வரை அரசியல் தலையீடு அறவேயில்லை என் பது எனக்கு நன்கு தெரியும். இதனால்தான் வடபகுதி கூட்டு றவியக்கத்தில் முன்னோடியாக விளங்குகிறது. உங்கள் வடபகுதி விவசாயிகள் சமாசம், கூட்டுறவு மாகாண வங்கி, வடபகுதி ஐ. மே. சபை, மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி போன்ற ஸ்தாப னங்கள் இலங்கையின் மறுபகுதியாருக்கு ஓர் எடுத்துக் காட்ட கவும், வெளிநாட்டார் இவ்விடம் வரும் போது பாராட்டுப் பெறு வதற்கும் உரிய இரகசியம் இதுவேயாகும்" - என யாழ் கூட்டுற வியக்கத்தை விதந்து பாராட்டிப் பேசினர்.

"யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களில் அமைக்கப்படும் சமாசக் கட்டிடங்கள் பலவும் போதிய இடப்பரப்பும் வசதியும் கொண்ட மாடிக் கட்டிடங்களாக அமைக்கப்பட்டு வருவது கே. எஸ். பொன்னுத்துரை அவர்களின் தூண்டுதல் காரண மாகவேயாகும்" - என அவரது சேவையைப் பேச்சாளர் பலரும் பாராட்டிப் பேசினர்.

16.2.67-ல் காலஞ்சென்ற முன்னாள் தலைவர்கள் க. சிவ குரு, சி. கனகசபாபதி என்போரது படங்களும் திறந்து வைக்கப் பட்டன நீர்வேலி மானேசராயிருந்த ஆ. சின்னத்துரை அவ

கள் ஓய்வு பெற அவரிடத்துக்கு புத்தூர் அம்பலவாணர் அவர்கள் மானேசரானார். இவர் சிறிது கால சேவையின் பின் சட்டத் துறை படிப்பிற்கு லீவு பெற்றுச் சென்று விட்டார்.

1957-ல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 1971-ல் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இணைக்கப்பட்டு இலங்கையில் 400 வரையிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக்கப்பட்டு ஒவ்வொரு சங்கத்திற்கும் நிர்வாகசபையினரும் நியமனமாகினர். எமது சங்கமும் வலிகிழக்கு - தென் பகுதி - வடபகுதி என இரு சங்கங்களாகப் பிரிக்கப்பட்டு நீர்வேலி, அச்சுவேலி முன்னைய இடங்களிலேயே செயலாற்றத் தொடங்கின. எமது வலிகிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் 9 விவசாயக் கிளைகளும் அங்கத்துவ சங்கங்களாகக் கணிக்கப்பட்டு கிளைக்குழுத் தேர்தல்களும் நடைபெற்றன, குறித்த கிளைக்குழுக்களின் அங்கத்தவர்கள் தங்களுக்குள் ஓர் தலைவர், உபதலைவர், காரியதரிசி உட்பட 9 பேரைத் தெரிவு செய்தனர். இக்கக் கிளைக்குழுவினர் அவ்வவ் விடப்பரப்பிலுள்ள நுகர்ச்சி விவசாய மற்றும் விற்பனை நிலையங்களை மேற்பார்வை செய்யவும் அறிக்கையிடவும் சங்கத்தின் பொதுச் சபைப் பிரதிநிதிகளாகச் சென்று பங்கு பெறவும் உரிமையுடையவர்களாயிருந்தனர். 31.5.71-ல் கூட்டுறவுப் பகுதியார் அப்போதைய விதிமாற்றங்கட்கு அமைய -

க. இ. குமாரசாமி தலைவர், S. N வடிவேலு உபதலைவர், இயக்குனர் குழு செ. நடராசா - நீர்வேலி, க. இராசரத்தினம் - கோப்பாய், மு. பூபாலசிங்கம் - நீர்வேலி, க. வைத்தியலிங்கம், மு. சிவபாதம் A. O, க. தவஞானம் - உரும்பிராய், இ. விசுவலிங்கம் CO சி. செல்லத்துரை - உரும்பிராய் முதலிய 10 பேரோடு, பொதுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட அ. சேனாராசா - உரும்பிராய், ச. குலோத்துங்க முதலி உளவெழு, மு. முருகேசு - நீர்வேலி வ. முத்துக் குமாரசாமி, த. பரமானந்தம் - அச்செழு, நீ. சி. ச. த - கோப்பாய் 5 பேரும் கொண்டதான 15 நிர்வாக சபையினர் செயலாற்றினர். குறித்த புனரமைப்புக்கு இயைய ந. குமரேசபதி அவர்கள் நிர்வாகக் காரியதரிசியாகவும் பொது முகாமையாளராகவும் சேவையாற்றினார். மேலும்;

செ. விநாயகமூர்த்தி - கணக்காளர், மு. சங்கரப்பிள்ளை - காசாளர், த. ஆனந்தவேல் - கொள்வனவு உத்தியோகத்தர் உள்ளிட்ட 72 பணியாளர்கள் சேவையாற்றினர்,

6.8.71-ல் கே. எஸ். பொன்னுத்துரை SACCD, D. செல்லக்கண்டு கூட்டுறவு மாகாண வங்கி முகாமையாளர், பொ. செல்



வரத்தினம் வடபகுதி ஐ. மே. சபைக் காரியதரிசி என்போரைக் கொண்ட கருத்தரங்கு முழுநாளும் நடைபெற்றது. அதன் முடிவில் வேலை நேரம்-9.00-6.00 இடைவேளை ஒரு மணித்தியாலம், சனி பிற்பகலும் ஞாயிறு முழுநாளும் விடுமுறை எனத் தீர்மானிக்கப்பட்டு இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது,

இக்காலத்தில் கோப்பாய் வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு கூட்டுறவாக்க அணையாளர் R.G.G. ஒல்கொட்குணசேகரா அவர்களால் 25.2.70-ல் அத்திவாரமிடப்பட்ட புதிய கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு 26.8.72-ல் திறப்பு விழாவும் நடைபெற்று கிராம வங்கியும் திறந்து வைக்கப்பட்டது. குறித்த சங்கத்தினால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட பீடி, தையல் வேலைகளை இச்சங்கமே தொடர்ந்து நடத்தவும் முடியாது. மேலும் பீடியிலைக் கோட்டாவைக் கூட்டியெடுத்து உரும்பராய், நீர்வேலியிடங்களிலும் பீடி சுற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. என். ம. எ. பி. சி. சமாசத்தைப் பின்பற்றி எமது சங்கமும் நான்கு கிராமச்சங்க இடப்பரப்புச் சந்திகட்கு அண்மையில் நான்கு உருளைக்கிழங்கு மாதிரி மேடைகள் போட்டு மேலும் உருளைக்கிழங்குச் செய்கையை ஊக்கியது. வடபகுதி விவசாயப் பகுதி அதிகாரியாகவிருந்த மாணிக்கவாசகர் அவர்கள் மக்களின் நன்மதிப்பைத் தக்க வகையில் பெற்ற ஒரு பெரியார் அவர்களால் எழுதப்பட்ட "நாட்டிற்கு நன்மை பயப்பன" எனும் நூல் என். ம. எ. பி. சி சமாசம் 5000 பிரதிகள் அச்சிட்டு கிளைகள் மூலம் விநியோகித்தது. குறித்த நூல் பிரதிகள் முடிந்துவிட்டன. இது விவசாயிகட்கு இன்றைய நிலையில் ஓர் வரப்பிரசாதமான நூல் என எமது சங்கம் கருதியதால் உரிமையாளர் அனுமதியுடன் 2000 பிரதிகளச்சிட்டு குறைந்த விலையில் ஒரு ரூபா வீதம் விற்பனை செய்தனர்.

முன்னைய நிர்வாக சபைக்காலம் இரண்டு வருடம் பூர்த்தியானமையால் 21.7.73-ல் இச்சங்கத்திற்கு மீண்டும் 9 பேர் கொண்ட அதிகார சபையங்கத்தவர்கள் நியமனமாகினர், க. இ. குமாரசாமி தலைவராகவும், சி. செல்லத்துரை உபதலைவராகவும் தெரிவாகினர்.

கிராம வங்கிக்கு செல்வி ஜெ. சுப்பிரமணியம், சீ. கந்தையா என்போர் மானேசராகவும் உதவியாளராகச் செயலாற்றினர். ஆயுததாரியாகக் காரில் வந்த ஒருவர் உட்புகுந்து நகைகளைக் கொள்ளையிட முயற்சித்தபோது சீ. க. அவர்களின் துணிகர முயற்சியால் முறியடிக்கப்பட்டது. இதற்காக ஓர்

பாராட்டு வைபவம் நடத்த சி. நாகலிங்கம் கூ. உ. ஆணையாளர்
சம்மதம் கேட்ட போது அப்போதைய சூழ் நிலைகளை விளங்கி
மறுக்கப்பட்டமையில் கைவிடப்பட்டது.

விவசாயிகட்குத் தேவையான கிருமிநாசினி வகைகள் பெற்
றோலியம் கூட்டுத்தாபனத்திலிருந்தே பெற வேண்டிய நிர்ப்பந்த
மிருந்தது. மீறினால் பெற்றோல் விற்பனை நிறுத்த வேண்டிய
நிலையுருவாகும். குறித்த கிருமி நாசினிகள் வெளியார் கிருமி
நாசினிகளிலும் பாவனை குறைவாகவுமிருந்தன. விவசாயிகள்
முறையீடுகள் அதிகரித்தன. வேண்டிய அதிகாரிகளுடன் சேர்ந்து
மனு தயாரித்து வடபிராந்தியப் பெற்றோல் விற்பனை தலைமை
யலுவலகம் அனுராதபுரிக்கு தலைவர் காரியதரிசி உள்ளிட்ட உப
சபையார் சென்று விவாதித்தோம். மேலும் மேலிடத்துக்கும்
மனுச் செய்து பேட்டிகண்டு பேசியதன் பலனாக உரிய கட்டுப்
பாடு நீக்கப்பட்டு வேண்டிய கிருமிநாசினிகள் வெளியாரிடமிருந்
தும் கொள்வனவு செய்யும் உரிமை பெறப்பட்டது. 10.7.73-ல்
உரும்பராய் கிழக்கு 8/5 கிளைக்கு வாங்கப்பட்ட ஒரு பரப்பில்
புதியகட்டிடம் அறுவி ஆலயகுரு யோசேப் சுவாமிகளால் திறந்து
வைக்கப்பட்டது உரும்பராய் MPCS தலைவராகவும் மானேசராக
வும் சேவையாற்றிய அ. சேனாராசா அவர்களது படம் அந் நிலை
யக்கட்டிடத்தில் கே. எஸ். பொன்னுத்துரை அவர்களினால் திறந்து
வைக்கப்பட்டது. கோப்பாய் தெற்கில் மின்கரியாலையமைக்க
வாங்கிய 18 பரப்பும் எமது சங்க இடப்பாப்பிலுள்ள கால் பை நோக்
கச் சங்கமாக்கியபின் சுவீகரிப்பு நடந்ததால் மதிப்பீட்டு விலைக்கு
மனுச் செய்திருந்தோம். ACCD அவர்கள் தூண்டுதலால் குலைப்
பாளர் வேறு ஒருசங்கத்திற்கு விற்பதற்கு முயற்சிப்பதனை அறிந்
தோம். தலைவர், செயலாளர், நீ. சி. முருகேசு மூவரும் நாக
லிங்கம் ACCD யைக்கண்டு முன் உரிமையாளரான எமக்கே
கிடைக்க ஆவன செய்து தருமாறு வற்புறுத்தினோம். சூழ்ச்சி
யினால் வேறுகைக்கு மாறி விட்டது. ஒரு கூட்டத்தில் நீ. சி. மு.
பலமாகக் கண்டித்துப் பேசிய போது மன்னிப்புக் கேட்டதுடன்
கைவிடப்பட்டது. இச்சங்கத்திற்கு சங்கக் கலைப்பினால் ஏற்பட்ட
எதிர்பாராத பெரிய நஷ்டமிதுவாகும். இருபாலைச் சந்தி மேல்
மாடிக் கட்டிடம் சங்கத்தினால் நிறுவப்பட்டு 7.2.73-ல் கிராம
சபைத் தலைவர் நா. அருளம்பலம் அவர்களால் திறந்து வைக்
கப்பட்டது. 6.4.73-ல் பணிப்பாளர் பிரதிநிதியொருவரும் சபைக்
குத் தெரிவு செய்ய உரிமை கிடைத்தது. அதன்படி சா. அரச
ரத்தினம் அவர்கள் தெரிவானார். 23.10.73-ல் நீர்வேலி சமா
சக் கட்டிடத்திலுள்ள மாதிரிக் கடையில் களவு போனது. சங்கத்
தில் நடைபெற்ற முதற்களவிது. பொலிசார் தீவிரமாக முயற்



சித்தனர் பெரும்பகுதி படிப்படியாக மீட்கப்பட்டது. இதனை
யடுத்து ஒவ்வொரு கிளையிலும் கூடிய - குறைந்த இருப்புத்திட்
டம் வகுத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

29.7.74-ல் பொதுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட
5 பேருடன், நியமனம் பெற்ற 10 பேருட்பட 15 பேர் கொண்ட
பின்வரும் நிர்வாக சபை தெரிவாகியது.

| | | |
|---|---|---|
| தலைவர் | கோ. வைத்திலிங்கம் | கோப்பாய் |
| உபதலைவர் | சி. செல்லத்துரை | உரும்பராய் |

கிருவாளர்கள் ச. குலோத்துங்க முதலி, நீ. சி. முருகேசு,
த. பரமானந்தம், எஸ். கதிரவேலு, சிவசுப்பிரமணியம் S. இரத்
தினசிங்கம் K. பாலசிங்கம், A. ஜெயரத்தினம், செ. தம்பிராசா,
ச. முத்துவேற்பிள்ளை, வ. முத்துக்குமாரசாமி, செ. சபாரத்தினம்,
நீ. சி. முருகேசு என்போர் நியமன அங்கத்தவராவர்.

கிளை முகாமையாளர்களை வேண்டிய போது குறிக்கப்
பட்ட காலத்திற் கொருமுறை மாற்றும் திட்டம் ஆரம்பமானது.
குறித்த மாற்றத் திட்டத்திற்கு நெறியாளர் குழுவிலுள்ள சிலர்
எதிர்ப்புத் தெரிவித்தனர். இது சம்பந்தமான நிர்வாக விஷயங்
களில் பொது முகாமையாளருக்கு ஆலோசனை கூறலாமே தவிர
மேற்கொண்டு தலையிடக் கூடாது என்ற வற்புறுத்தல் மேலிடத்
தின் ஆலோசனையுடன் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்
பட்டு நடைமுறை தொடங்கியது. முன்னர் செய்து கொண்ட
ஒழுங்கின்படி சட்டப்பிராய், உரும்பராய், நீர்வேலி சந்தி, கோப்
பாய் வடக்கு இடங்களில் கிளைகள் அமைக்க கட்டிடங்கட்கு
காணி வாங்கத் தீர்மானமாகின. தொடர்ந்தாவன செய்து கட்
டைப்பிராய், இருபாலை கிழக்கு, கரந்தன், கோப்பாய் வடக்கு
வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி கிளைகள் ஆரம்பிக்கப்
பட்டன. முன்னரே பெற்ற உத்தரவின்படி உரும்பராய் கிராம
வங்கி, நீர்வேலி கிராம வங்கிக் கிளைகளும் தொடங்கின. கோப்
பாய் வடக்கு சிவலிங்கராசா அவர்கள் நடத்திய 'பெற்றோல்
செட்' அரசாங்க உத்தரவுப்படி சுவீகரிக்கப்பட்டது. 14.8.76-ல்
உரும்பராய் கிராம வங்கி அடைவு நகை கொள்ளை முயற்சி
திருமதி ஜெ. சிவலோகநாதன், க. கணேசமூர்த்தி என்போரின்
தந்திரமான செயல்களால் முறியடிக்கப்பட்டது. இதனை நெறி
யாளர் குழு பாராட்டி அவர்கட்கு 3 மாதச் சம்பளம் வெகு
மானமாகக் கொடுக்கத் தீர்மானித்து விண்ணப்பித்த போது கூட்
டுறவு ஆணையாளரால் முன்பு போல் ஏற்றுக் கொள்ளப்பட
வில்லை 22.9.76-ல் உரும்பராய் விவசாயக் கிளையில் உபமொத்த

விற்பனைக் கிளை ஆரம்பமானது. இதே வேளை கோப்பாய்
வடக்கு நுகர்ச்சி விற்பனைக் கிளை மூன்றும் உரும்பராய் உப
மொத்த விற்பனை நிலையத்திலிருந்தே பொருட்களைப் பெற
வேண்டும் என, நெறியாளர் குழு தீர்மானித்து அறிவித்தது.
இது கோப்பாய் வடக்கு கிளைகளின் பலத்த எதிர்ப்பினால் கை
விடப்பட்டது.

எமது தலைவரே வலிகாமம் கிழக்கு சுமநலச் சேவை நிலை
யத்திற்கும் தலைவராயிருந்தார். உரவிற்பனையில் 22269.75
பற்றிய தொகை பிரச்சினை எழுந்தது. குறித்த கடனுக்கு யார்
'ஓடர்' போட்டது; என்று கூறிய முடியாமலும் அறவிட முடி
யாமலும் இருந்தது இதனோடு சம்பந்தப்பட்ட வேறு ஒரு நெறி
யாளர் குழு APC அங்கத்தவர் இது போன்ற வேறு பிரச்சினை
களிலும் சிக்கி மூளை சுகவீனம் - வைத்திய அத்தாட்சிப் பத்திரம்
காட்டி சேவையிலிருந்து விலகி விட்டார். நீண்ட இழுபறிக்குப்
பின் - இருவர் மறைவுக்கும் பின் 25.9.79-ல் பொதுக் கூட்டத்
தின் அங்கீகரத்துடன் விண்ணப்பித்து கழித்தெழுத விண்ணப்
பிக்கத் தீர்மானமாயது. சங்கத்தின் தேவையிலும் பார்க்க கூடு
தலாக ஆயிரம் பைசிக்கிள் வரை கொள்வனவு செய்யப்பட்டது.
விற்பனையில் தேக்க நிலை மேற்பட்டமையால் பணியாளர்கட்
குக் கடனாகக் கொடுக்கப்பட்டும் மேற்கொண்டு கடனறவிடுவ
தில் மந்திட்சத் தீர்ப்புக்கு மனுக்கள் செய்ய வேண்டிய நிலையும்
உருவானது. இந்த நிலையில் நிர்வாக மாற்றத்தால் 31 7 77-ல்
க. மாணிக்கவாசகர் - உதவியரசாங்க அதிபர் தலைமையில் K. S.
அழகரத்தினம் - இருபாலை, க. கனகலிங்கம் - இருபாலை, த மயில்
வாகனம் - நீர்வேலி, அ. சிவானந்தன் - உரும்பராய் ஐவர்
கொண்ட விசேட குழு நியமனமானது.

இச்சமயத்தில் வகுப்புக் கலவரங்கள் காரணமாக வெளி
யிடங்களிலிருந்து தஞ்சம்கோரி வந்தவர்களில் ஒரு பகுதியினர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.
குறித்த அகதிகட்கு 10 மூடை அரிசியுட்பட தேவையான பொருட்
கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன,

எமது பல கிளைகளிலும் கொள்ளைகள் நடந்தன. ஆவரங்
கால் மக்கள் வங்கி கொள்ளையடிக்சப்பட்டு அவர்கள் வந்த வாக
னம் கரந்தன் சந்தியில் அநாதரவாக விடப்பட்டிருந்தது. எமது
காசாளர் சங்கரப்பிள்ளை அவர்கள் விற்பனைக் காசை வங்கியில்
கட்டக்கொண்டு போன இரண்டு சந்தர்ப்பங்களில் தந்திரமாகத்
தப்பிச் சென்று விட்டார். இவை காரணமாக எமது கிராம வங்



கிக் கிளைகள் மூன்றும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டன.
இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தலைவர் திறம்படச்
சேவையாற்றிப் பாராட்டுப் பெற்றார். அகில இலங்கை ரீதியான
கூட்டுறவுப் போட்டியில் எமது சங்கம் 2-ம் இடத்தைப் பெற்று
10 ஆயிரம் ரூபா பரிசையும் பெற்றது, ந. குமரேசபசுபதி பொது
முகாமையாளர் அவர்கட்கு தரம் I I ஆளணித்திரட்டு உயர்வும்
கிடைத்தது.

விவசாயக் கிளைகள் இந்தச் சங்கத்தின் கிளைகளாக
இருந்த நிலைமைமாறி ஒவ்வொரு நுகர்ச்சிக் கிளைகளும் இச்
சங்கத்தின் கிளைகள் ஆக்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும்-
என்ற தீர்மானம் கல்வியங்காடு கிளைக் குழுத் தலைவர் ஐ வேலா
யுதர் அவர்களால் முன் மொழியப்பட்டு முன்னைய பொதுக்
கூட்டமொன்றில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த
போதிலும் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தப்படாமலிருந்
தது. இது மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும்
தேர்தல்கள் பழைய முறைப்படியே தான் நடந்தன. போதிய
அவகாசமில்லை; அங்கத்தவர் இடாப்பு புதிய முறைப்படி வரு
டாந்தக் கூட்டம் நடத்த அவகாசம் போதாது என்று சாட்டுக்
கூறி பழைய முறைப்படியேதான் தேர்தல்கள் நடைபெற்றன.

கா. மாணிக்கவாசகர் அவர்கள் 2.3.78-ல் உத்தியோக
மாற்றம் பெற்றுச் செல்ல நேரிட்டது.

22.3.78-ல் புதிய பணிப்பாளர்களாக வி. நடேசலிங்கம்,
மு. பரமலிங்கம், செ. சபாரத்தினம், வி. சின்னத்தம்பி, த. மயில்
வாகனம், த. பரமானந்தம், செ. பஞ்சலிங்கம், அ. சிவானந்
தன், எஸ். செல்லத்துரை, க. கனகலிங்கம் ஆகிய 10 பேரும்
கோப்பாய் பா. அ சி கதிரவேற்பிள்ளை சிபார்சுப்படி நியமன
மாகினர். வி. நடேசலிங்கம் தலைவராகவும் க. கனகலிங்கம்
உபதலைவராகவும் தெரிவாகினர் பணியாளர் குழுப் பிரதிநிதி
3 ஆறு பின் நிறுத்தப்பட்டது.

கோப்பாய் தெற்கில் ஓர் உபமொத்த விற்பனை நிலையம்
திறக்கும் தீர்மானம் நிறைவேறி கோப்பாய் தெற்கிலமைந்திருந்த
விவசாயக் கிளையில் ஆரம்பமாகியது. இருபாலை கிழக்கில் நிலை
யான கட்டிடமைத்தற்கான காணி வாங்க 10 ஆயிரம் ரூபா
வும், இருபாலை கிழக்கில் ஓர் செங்கட்டித் தொழிற்சாலை
யமைக்கவும் தீர்மானங்களாயின. பணியாளர்கட்கு வழமை
போல் ஒரு மாத சேவை அன்பளிப்புக் கொடுக்கப்பட்டது.
5.3.79-ல் வி. நடேசலிங்கம் தலைமையில் விசேட பொதுக்

கூட்டத்தில் பாதுகாப்புக் கருதி தலைமைக் கந்தோரிலாவது
மூடிய வங்கியைத் தொடங்க மேற்கொண்டு வேண்டியன செய்
யத் தீர்மானமாயது.

கடந்த காலத்தில் லொறிகள் மேற்பார்வையும் பதிவுகளும்
சீர் இல்லாமையால் நட்டத்தில் இயங்கி, பழையனவற்றை விற்று
புதிய லொறி வாங்கவும் யோசிக்கப்பட்டது. இது நேரத்தில்
ந. தியாகராசா அவர்களை லொறிகள் மேற்பார்வையாளராக
நியமித்தனர். ஐந்து லொறிகள் வேலை செய்தன. தற்போது
நிலைமை சீராகி லொறிகள் யாவும் லாபகரமாக இயங்குகின்
றன - எனக் குறித்த பொதுக் கூட்டத்தில் வ. ந: சபைக்கு அறி
வித்துப் பாராட்டுப் பெற்றார். சுன்னாகத்தில் கை விடப்பட்ட
நிலையிலிருந்த என் டி ஏ பி சி அரிசியாலையை இச் சங்கம் கை
யேற்று நடத்தவும், கோழித்தீன் தொழிற்சாலையொன்றும் அதே
யிடத்தில் ஆரம்பிக்கவும் தீர்மானங்களாயின.

9.11.79-ல் நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் உபவிதி
52 ''சங்கத்திற்கு ஓர் நெறியாளர் குழு இருக்க வேண்டும். இக்
குழுவிற்கு 15 உறுப்பினர்கட்கு மேல் இருத்தல் ஆகாது. இவர்
களில் 5 பேரைத் தெரிவு செய்ய பொதுச் சபைக்கு உரிமை
யுண்டு'' - என்பதற்குத் திருத்தப் பிரேரணையாக சங்கத்தின்
கருமங்களை நிர்வகிப்பதற்கு ஓர் இயக்குனர் சபையிருத்தல் வேண்
டும் அச்சபை ஏழு அங்கத்தவர்களை அடக்கியதாக இரகசிய
வாக்கெடுப்பின் மூலம் வருடந்தோறும் பொதுக் கூட்டத்திலோ
விசேட பொதுக் கூட்டத்திலோ தெரிந்தெடுத்தல் வேண்டும்''
எனும் திருத்தப்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

24 11.79-ல் க. கனகலிங்கம் தலைமையில் நடந்த விசேட
பொதுக் கூட்டத்தில் திருவாளர்கள் கு. பரமராசா, வ. நடேச
லிங்கம், த. மயில்வாகனம், செ. சபாரத்தினம், க. கனகலிங்கம்
என்போருடன் வே. சின்னத்தம்பி, சி. செல்லத்துரை என்போரும்
தெரியப்பட்டு 7 பேர் கொண்ட நெறியாளர் குழு சேவையாற்
றத் தொடங்கியது.

30.3.80-ல் நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் ஞானப்
பிரகாசம் ACCD அவர்களும் 44 பிரதிநிதிகளும் சமுகம். ''ஒவ்
வொரு விற்பனை நிலையமும் தனித்தனி கிளைகளாக்க
விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; கோப்பாய் மத்திய
கிளை அமைந்துள்ள காணியின் மேற்குப் புறமாக இரண்டு பரப்
புக் காணியை சிதம்பர புண்ணியம் பரிபாலன சபையுடன்



தொடர்பு கொண்டு வீரபத்திரசுவாமி கோயில் பரிபாலன சபைக்கு
கொடுக்க அனுமதி பெறல் வேண்டும்'' - எனும் தீர்மானங்கள்
நிறைவேறின.

14 9.80 நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் உரும்பராய்
மொத்த விற்பனை நிலையத்தை விஸ்தரிக்க தீர்மானமாயது.
''ஒவ்வொரு கிளை இடப்பரப்பிலும் அங்குள்ள கிளைகளால்வரும்
லாபத்தை அடிப்படையாக வைத்தே அந்த இடப்பரப்பில் கட்
டிடங்கள் என்பனவற்றைச் செய்தல் வேண்டும்'' என்பது த.மயில்
வாகனம் அவர்களால் பிரேரிக்கப்பட்டு க. இ. குமாரசாமி அவர்
களால் அனுமதிக்கப்பட்டு மீண்டும் ஏகமனதாக நிறைவேறியது.
இது யாவராலும் வரவேற்கப்பட்டது.

29.11.80-ல் வ. நடேசலிங்கம் தலைமையில் 81 பிரதி
நிதிகள் சமுகம். பல நோக்குச் சங்கங்கள் 8 ஆகவும் பண்டக
சாலைகள் 10 ஆகவும் இருந்தன தொடர்ந்து நடந்த நெறி
யாளர் குழுத் தேர்தலில் திருவாளர்கள் த. பரமானந்தம்,
செ.ஐயாத்துரை, வே.சின்னத்தம்பி. இ.இராசரத்தினம், செ.சபா
ரத்தினம், செ. சிவசம்புநாதன், மு. வீரசிங்கம் எனும் ஏழு
பேரும் கூடிய வாக்குகளால் தெரிவாகினர்

28.12.80-ல் செ. சபாரத்தினம் தலைமையில் நடந்த வரு
டாந்தப் பொதுக் கூட்டத்தில் ''பணியாளர்கட்குப் பதவியுயர்வு
கள் கொடுக்கும் போது அவர்களது சுய விபரக்கோர்வைகள்
மூலம் சென்றகால நிலைமைகளை ஆராய்ந்தே செய்யப்பட
வேண்டும் தேர்தல்களை நோக்கமாகக் கொண்டு செய்தால்,
பின்னால் சங்கத்திற்குப் பெரும் பாதிப்புண்டாகும்'' என வற்
புறுத்தப்பட்டது. மேலும் பிரதிக் கிளைகட்கும் விற்பனை உயர்
பட்டம் குறிக்கப்படல் வேண்டுமென்றும், தனித்தனி வியாபாரக்
கிளைகள் எண் பார்வை செய்து பின்பு குறித்த உயர் மட்டத்
திற்கு மேல் விற்பனை நடந்து வரும் லாபத்தில் ஊக்குவிப்புப்
போனஸ் 50% கொடுத்தல் வேண்டுமென்றும் இவ்வாறு நடை
முறைப்படுத்துவதால் நுகர்ச்சியாளர்கட்குத் தேவையான
பொருட்கள் கிடைக்கவும் கூடுதல் வியாபாரம் நடக்கவும் வழி
பிறக்கும்'' - என க. பரமலிங்கம், இ. இராசரத்தினம் என்
பவர்களது பிரேரணை வரவேற்புடன் ஏற்கப்பட்டது.

26.11.81-ல் செ. சபாரத்தினம் தலைமையில் நடந்த
பொதுக் கூட்டத்தில்,

''சங்கம்பதிவு செய்த திகதியிலிருந்து 6 மாதத்திற்குள்
கிளைக்குழுத் தேர்தல், கிளைக்குழுக் காலம் 3 வருடம்.

பொதுச் சபைக் காலம் முடிந்து 4 கிழமைக்குள் மீண்டும் தேர்தல், தலைமைச் சங்கப் பிரதிநிதிகளாக ஒவ்வொரு கிளையிலிருந்தும் அங்கத்தவர் தொகைக்கேற்ப 1 தொடக் கம் 9 வரையிலான பிரதிநிதிகள்

$$\frac{\text{கிளை உறுப்பினர்} \times 100}{\text{சங்க உறுப்பினர் மொத்தம்}}$$

என்ற ரீதியில் கிளைகளிலிருந்து பொதுச் சபைக்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர், கிளைக்குழுப் பிரதிநிதிக்கு அதிகாரப் பத்திரம், சாதாரண பொதுக் கூட்டங்கட்கு நிகழ்ச்சி நிரலுடன் 7 நாள் அறிவித்தல், இரகசிவாக்கெடுப்பு, கூட்டுறவாளர் கூட் டங்கட்கு மாத்திரம் 48 மணி நேர அறிவித்தல். நெறியாளர் குழு தமக்குள் தலைவர், ஒரு உபதலைவர் தெரிந்து 14 நாட் களுக்குள் ஆணையாளருக்கு விபாமனுப்புதல் வேண்டும் பிரதி வருடமும் 1/3 பங்கினர் இளைப்பாறுமிடங்கட்குத் தேர்வு. 3 வரு டங்களின் பின் 7 பேருக்குத் தேர்வு. இளைப்பாறுபவர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம்'' என்பன உபவிதி மாற்றங்களாகி தீர்மானங்களாகி ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கிளைகளில் பொருட்களின் விலையேற்றத்திற்கு நட வடிக்கை எடுத்தல் போல சந்தை விலைகட்குத்தக விலைகுறைப் பிற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் - என்பது பலராலும் வற்புறுத்தப்பட்டு தீர்மானமுமாகியது. இது விஷயமாய் விசேட கவனஞ் செலுத்தப்படுமெனத் தலைவரால் உறுதியளிக்கப்பட் டது. 6.6.81-ல் ஊரடங்குச் சட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் வேலை நேரம் 8.30 — 200 ஆக்கப்பட்டது. கிராம வங்கிகளின் நிலையான வைப்பு கோப்பாய் 429637/= உரும் பராய் 381250/= நீர்வேலி 221775/= எனக்காணப்பட்டது. சேமத்திற்கு வட்டியைக் கூட்டினால் எமது பணத்தை எமது தேவைக்கு அனுமதியுடன் பயன்படுத்தலாம். 3 மாதத்துக்கொரு முறை கணிக்கப்படும் வட்டி முறையை பிரதி மாதமும் கணித் தல் நல்லது என்பனவும் கவனத்திற்கெடுக்குமாறு வற்புறுத்தப் பட்டது.

6.3.83-ல் செ சபாரத்தினம் தலைமையில் நடந்த வரு டாந்தக் கூட்டத்தில் மகளிர் குழுக்கள் சம்பந்தமான சிறந்த சேவைக்கு திருமதி வேதவல்லி கந்தையாவுக்கு பாராட்டுத் தெரி விக்கப்பட்டது. கிராம வங்கிகள் அவ்வவ்விடங்களில் மீண்டும் தொடங்கிய விபரமும் அறிவிக்கப்பட்டது 85 பேர் சமூகம். நெறி



யாளர் குழுவிற்கு ஏழு ஏழு பேராக இரண்டு பிரேரணைகள், தொடர்ந்து இரகசியவாக்கெடுப்பு. இருவாளர்கள் நீ. சி. முரு கேசு, த. சரவணமுத்து, வே. சின்னத்தம்பி, இ. இராசரத்தி னம், ச. நவரத்தினம், க. சுப்பிரமணியம், வ. நடேசலிங்கம் என்போர் கூடுதலான வாக்குகள் பெற்று முறையே தெரிவாகி னர். தொடர்ந்து வ. நடேசலிங்கம் தலைவராகவும், நீ சி. முரு கேசு உபதலைவராகவும் தெரிவாகினர்.

6 7.83-ல். நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் 25'×80' கொண்ட இரண்டு தகரப்பந்தல்கள் கொள்வனவு செய்து வாட கைக்கு விடத் தீர்மானமாயது. பணியாளர்கள் நிர்வாகத்தில் ஈடுபடாது பணியாற்றுவதுதான் சங்கத்தின் வளர்ச்சிக்கு நல் லது - என்று சமுகமாயிருந்த ஞானப்பிரகாசம் ACCD வற்புறுத் திக் கூறினார்,

6.3.84-ல் நடந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வ. நடே சலிங்கம் ராஜினாமாச் செய்த இடத்திற்கு செ. சபாரத்தினம் ஒத்துத்தேர்தல் மூலம் தெரிவானது ஏற்கப்பட்டது. புதிய ACCD இக்பால் அவர்கள் சமுகமாயிருந்தார். புதிய கிளைகள் 9 நிறு வம் தீர்மானம், நெற்குற்றும் ஆலைக்கு 5 லட்சம் ஒதுக்கீடு, கோப்பாய் கிராம வங்கியோடும் சேர்ந்த சுருட்டுச் சங்கக் காணியை மதிப்பீட்டு விலைக்கு வாங்கல் எனும் தீர்மானங்கள் நிறைவேறின.

28.4.85 செ. ச. தலைமையில் நடந்த விசேட பொதுக் கூட்டத்தில் நெல் கொள்வனவுக்குச் சென்ற லொறி கிளிநொச்சி யில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டது பங்கு சேம விபரங்கள் ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் 6 மாதத் தவ ணைக்குள் அறிவிக்க வேண்டும் எனவும் தீர்மானமாயது.

20.4.86 வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமுகமளித் திருந்த கே. சண்முகலிங்கம் ACCD அவர்கள் - அகில இலங்கை யிலும் சிறந்த சங்கங்களிலொன்றாக நீர்வேலியும் கருதப்படு கிறது - பற்றிப் பாராட்டுத் தெரிவித்தார். 5 கிளைகளில் நடந்த காசுக் கொள்ளை 62673/44 என்பது அறிவிக்கப்பட்டது. இராச வீதியில் கோப்பாய் மத்தியில் உரம், கிருமிநாசினி, எரிபொருள் விற்பனையுடன் ஒரு கிளை திறக்கத் தீர்மானமாயது.

4.7.88-ல் தலைவர் செ. சபாரத்தினம் தலைமையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை க. பஞ்சலிங் கம் ACCD தலைமையில் விவாதிக்கப்பட்டது. சாதகமாயும் பாத கமாயும் பல அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. பின் சமரச

முயற்சிக்காக க. இ. குமாரசாமி கேள்விப்படி ஒத்தி வைக்கப்பட்டது. சிர்வராமையால் இரகசிய வாக்குக்கு விட்டும் தீர்மானம் நிறைவேறவில்லை.

4.12.88-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் திருவாளர்கள் சோ. குகதாசன், கா. தவராசா. செ. சபாரத்தினம், கா. செல்லத்துரை. ச. நவரத்தினம், சு. கிருஷ்ணராசா ஆகிய எழுவரும் நிர்வாக சபையினராக கூடிய வாக்குகள் பெற்று முறையே தெரிவாகினர் நியமன உறுப்பினர்களாக S. இராசரத்தினம். S. ஜெயபாலன் இருவரும் சமுகம். வ. நடேசலிங்கம் அவர்களின் மறைவுக்கு மௌன அஞ்சலி நடைபெற்றது, செ. சபாரத்தினம் - தலைவராகவும் சோ. குகதாசன் அவர்கள் உபதலைவராகவும் தெரியப்பட்டனர்,

செ. ச. தலைவராகவிருந்த 1980—89 காலப்பகுதி மிகப் பயங்கரமான காலம், இலங்கை ராணுவம் வடபகுதியில் பயங்கரகுண்டுத் தாக்குதல். அமைதி பேணி எங்களைகாக்க வந்த இந்திய ராணுவம் அதிலும் கூடிய அழிவு வேலைகள். எத்தனையோ ஆண், பெண், குழந்தைகள் பலி, கொள்ளையும் களவும் மலிவு, உள்ளூர் விடுதலையமைப்புக்களினிடையேயும் மோதல்கள். எத்தனையோ பெரியார்கள் செய்த சமரச முயற்சிகளும் படுதோல்வி, 1987 ஒக்டோபர் மத்தியில் வீடு வாசல்களை விட்டு அகதிகளாக எமது சங்க இடப்பரப்பு முழுவதும் வெளியேற்றம். வெளியேற முடியாதிருந்தோர் பட்டினிச்சாவும் இந்திய ராணுவத்தால் படுகொலையும். இது போது எமது சங்கத்திற்கு அளப்பரிய நஷ்டம். 42 கிளைகளிலும் ரூபா 1853953/= பெறுமதியான பொருட்கள் கொள்ளை; விமானக்குண்டுத் தாக்குதலினால் - செல்லடியினால் தலைமையலுவலகம் உட்பட கிளைகளுஞ் சேர்த்து 425000/= கட்டிடச் சேதம்; கட்டிடப் பொருட்கள் களவாடப்பட்டும், அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் ரூபா வரை 150000/= சேதம் இந்த வகையில் சங்கத்திற்கு ரூபா 2428953/70 அழிவேற்பட்டது, நிவாரணம் பெற முயற்சிக்கப்படுகிறது. இப்படி நமக்கு மாத்திரமல்ல வடபகுதியிலுள்ள பல பலநோக்குச் சங்கட்கும் இதே கதிதான். இலங்கை ராணுவம் செய்த அட்டூழியங்களைவிட நம்மைக் காக்க வந்த அமைதிப் படையினால் அடைந்த அனர்த்தங்கள் அளவிடைங்கா.

தலைவர் செ. சபாரத்தினம் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது ''எனக்குப் பூசப்பட்ட களங்கம் நீக்கப்பட்டு பரிசுத்தனாவுள்ளேன்; என்று ஆறுதலுடையேன்'' என்று சொல்லிச் சில நாட்களால் மறைந்து விட்டார்.



9.2.90-ல் ச. நவரத்தினம் தலைவராகத் தெரியப்பட்டு நடந்த பொதுக் கூட்டத்தில் நித்தியராஜ் ACCD அவர்கள சமுகம். நீர்வேலியில் தொழிற்பட்ட தயான் அரிசியாலை கைமாறும் கட்டமிருந்தது. முன்னாள் உபதலைவா சி. மகேந்திரன் இருபகுதியாரோடும் தொடர்பு கொண்டவராயிருந்தமையால் பெரிதும் உதவினார். ஆலையை 5 வருடக்குத்தகைக்கு எடுத்தல். ரூபா 2 லட்சம் முற்பண வைப்பு, மாதவாடகை 9000/= என்பனவற்றை உள்ளடக்கிய தீர்மானங்களை ஆராய்ந்து மேற்கொண்டாவன செய்ய த. பரமானந்தம், வே. சின்னததம்பி, க. இ. குமாரசாமி மூவரும் கொண்ட உபசபையும் தெரிவானது. குறித்த ஆலை கமலநாதனுக்குரிய லொறியை மதிப்பீட்டு விலை 7 லட்சத்து 70 ஆயிரத்துக்கு கொள்வனவு செய்யவும் தீர்மானமாகி மேற்கொண்டாவன செய்யப்பட்டு தற்போது லாபகரமாக நடக்கிறது.

1975 அளவில் வலோற்காரமாக எடுக்கப்பட்ட என். டி. ஏ., பி. சி. சமாசம், கூட்டுறவு மாகாண வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை ஆகிய மூன்று ஸ்தாபனங்களையும் மீண்டும் யாழ் - கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு மேற்கொண்டு வேண்டியன செய்து தர வேண்டும் - என்ற பிரேரணை க. இ. குமாரசாமி அவர்களால் முன்மொழியப்பட்டு ரி. பாலசுந்தரம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. இது சம்பந்தமாக விண்ணப்பிக்க விரைந்து ஆவன செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது;

1987 - 88 கொள்ளைகட்குப் பிறகு இரவில் பொதுச் சனங்கள் வெளியே நடமாடப்பயம். கள்வர் கூட்டம் எந்த விதமான முறையீடும் யாரிடமும் முறையிட முடியாத நிலை; இயக்க மோதல்கள் மாலை 6 மணிக்குப்பிறகு படலைகளைப் பூட்டி விட்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் நிலை; அயல் வீட்டில் ஓலச் சத்தம் கேட்டாலும் போக முடியாத பயங்கர நிலையும் இக்காலத்தில் நிலவியது இதனை வாய்ப்பாகக்கருதி சில கிளைகளில் இரண்டு மூன்று முறையும் கொள்ளையடிககப்பட்டன. அப்படியான கிளைகளை மூடி அயலிலுள்ள பாதுகாப்பான கிளைகளில் வைத்தே பொருட்கள் விற்பனை நடந்தது. இவற்றை பொதுச் சபை கருத்தில் கொண்டு இயக்குனர் குழு எடுத்த நடவடிக்கைகளை வரவேற்றது. மேலும இரண்டு வருடங்கள தொடர்ந்து நட்டத்திலியங்கும் கிளைகளை அயலேயுள்ள கிளைகளுடன் இணைத்து நடத்தவும் தீர்மானமாயது.

படிப்படியாக வெளியேறிய இராணுவம் 31.3.90 உடன் முற்றாக வெளியேறிய பிறகுதான் யாழ்ப்பாணத்தில் அமைதி

நிலவுகிறது. முன்னைய சுமுகமான நிலையும் உருவாகி வளர்கிறது.
எனினும் இலங்கையரசுக்கும் இன்றைய பிரதான இயக்கத்துக்கும்
மற்றைய இயக்கங்களுக்குமிடையே மீண்டும் மோதல்கள்
உருவாகலாமோ என்ற பயம் இத்துடன் அற்றுப் போகவில்லை.

9 2 90 பொதுக்கூட்ட ஆரம்பத்தின் போது எம்மத்தியில்
நீண்ட காலம் கூட்டுறவாளர்களாயிருந்து சேவையாற்றிய திரு
வாளர்கள் செ. நடராசா J P. நீ. சி, முருகேசு, பெ, க. சனக
லிங்கம் என்போர்க்கு மௌன அஞ்சலி செய்யப்பட்டது. அரிசி
யாலை 21.2 90 ஒப்பந்தப்படி கொள்வனவு செய்யப்பட்டதும்
4213568 லொறியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 31,5 90-ல்
அரிசியாலை சுத்தலாபம் ரூபா 99596/= என்பதும், நெற்களஞ்
சிய லாபம் ரூபா 150941 என்பதும் அறிவிக்கப்பட்டது. இதன்
மேற்பார்வையாளராகச் சேவையாற்றும் சி. கதிர்காமநாதன்
அவர்கட்கு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. நீண்ட காலக்
கோரிக்கையாகவிருந்த அரிசியாலை தொடங்கப்பட்டதும், லாபத்
தில் வேலை செய்வதும் அங்கத்தவர்கள் பாராட்டுதல்களுக்குள்
ளாகியது.

கிராம வங்கிகளும் ஆரம்ப காலத்தில் எதிர்பார்த்ததிலும்
பார்க்க சிறப்பட இயங்கி வருகின்றன. இடையில் ஏற்பட்ட அபா
யங்களிலிருந்தும் புத்தியாகத் தப்பி இவ்வங்கிகள் சேவையாற்றி
மக்கள் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளதால் இன்று சேமப்பண
மொத்தம் 2986960/= ஆக உயர்ந்துள்ளது.

ஒரு சங்கத்தின் முன்னேற்றத்துக்கு பணியாளர் நேர்மை
முயற்சி மாத்திரமல்லப் பணியாளர்களின் தூய்மையான சேவை
யும் பிரதானமாகும். எமது சங்கத்திற்கு இந்த வாய்ப்பு இருந்து
வருவதினாலேயே கூட்டுறவுப் பகுதியாரதும் பொது மக்களதும்
பாராட்டுதல்களையும் காலத்துக்குச் காலம் பெற்று வருகிறது.
தற்போது 109 பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர். பிர
தான பணியாளர்களும் நியமன திகதியும்.

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளரும் காரியதரிசியும் | க. இராசசேகரம் | 29.11.88 |
| உள்ளகக் கணக்காளர் | செ. தெய்வேந்திரன் | 23 04.91 |
| கணக்காளர் | சு. செல்வரத்தினம் | 20.08 88 |
| கொள்வனவு உத்தியோகத்தர் | சு. பாலசிங்கம் | 01.02 87 |
| பொது சனத் தொடர்பு உத்தியோகத்தர் | | |



| | | |
|---|---|---|
| காசாளர் | மு. சங்கரப்பிள்ளை | 01.04.72 |
| கடன் பகுதி முகாமையாளர் | ந. கணேசலிங்கம் | |
| மேற்பார்வையாளர்கள் | சு. மகாலிங்கம் | 01.02.87 |
| | சி. கதிர்காமநாதன் | 10.04.90 |
| களஞ்சியப் பொறுப்பாளர்கள் | சி. நாகேந்திரம் - நீர்வேலி | |
| | பூ. குலராசசிங்கம் - கோப்பாய் | |
| | செ. நடேசன் - உரும்பராய் | |

கிராம வங்கி முகாமையாளர்கள்:

ஆ. தர்மலிங்கம் - கோப்பாய்
க. முருகையா - நீர்வேலி
த. பொன்னம்பலம் - உரும்பராய்
க. சுந்தரலிங்கம் - உரும்பராய்
(தற்போது)

## வலி - கிழக்கு பண்டகசாலைச் சங்கங்களின் சமாசம்
இல J: 817 — 25.9.44

| திகதி | தலைவர் | காரியதரிசி |
|---|---|---|
| 25.09.43 | S. வீரசிங்கம் - அச்சுவேலி, | S. அருணாசலம் சிறுப்பிட்டி |
| 01.07.55 | சி. கனகசபாபதி-கோப்பாய், | நீ. சி. முருகேசு நீர்வேலி |
| 01.05.58 | க. சிவகுரு - ஆவரங்கால் | மு.கந்தசாமி-இடைக்காடு |
| 30.06.60 | க. இ. குமாரசாமி | மு. கந்தசாமி |
| 20.19.63 | சி. கனகசபாபதி-அச்சுவேலி | ,, |
| 14.12.63 | E. K. சண்முகநாதன்-கோப்பாய் | ,, |
| 07.11.64 | க. வீ. கனகசபாபதி-அச்சுவேலி | ,, |

### வலி - கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்

| | | |
|---|---|---|
| 29 05.71 — 31.05.71 | க. இராசரத்தினம் | |
| 01.06.71 — 20 08.74 | க. இ. குமாரசாமி | ந. குமரேசபசுபதி |
| 21.08.74 — 27.07.78 | கோ. வைத்திலிங்கம் | ,, |
| 28.08.77 — 16.03.78 | க. மாணிக்கவாசகர் | ,, |
| 22.03.78 — 21.11.80 | வ. நடேசலிங்கம் | நீ. சிவசுப்பிரமணிய ஐயர் |
| 22.11.80 — 05.03.83 | செ. சபாரத்தினம் | ,, |
| 06.03.83 — 05.03.84 | வ. நடேசலிங்கம் | ,, |
| 06.03.84 — 12.12.89 | செ. சபாரத்தினம் | க. இராசசேகரம் |
| 13.12.89 — 30.11.91 | சு. நவரத்தினம் (30.11.91) | ,, |

நீண்ட காலம் கூட்டுறவுத் தொடர்புடையவராயிருந்த
வே. சின்னத்தம்பி அவர்கள் தலைவர் திருமதி எஸ். மகேந்திரன்
அவர்கள் உபதலைவர் ஆக ஏழு பேர் கொண்ட நிர்வாகசபை
1.12.91 லிருந்து செயலாற்றியது. இலங்கை ராணுவ கெடுபிடி
கள் போக்குவரத்துத் தடை பொருளாதாரத் தடை என்பவற்
றால் சுயமாகச் செயலாற்ற முடியாத நிலையில் அரச அதிபர்
ஊடாக அரசு வழங்கப்படும் பொருட்களை "கூட்டுறவுச் சமாசங்
கள் மூலம் செய்ய முடிந்தது, சிறிய ஒதுக்கீட்டில் இருந்து ஓரளவு நெல் மாத்
திரமே பெற்று அரிசியாக்கி வினியோகிக்க எமது அரிசியாலை
பெரிதும் உதவியது. நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய் இடங்
களில் மூன்று உணவகங்கள் திறக்கவும், வெதுப்பகம் ஒன்று
உடன் ஆரம்பிக்கவும் தீர்மானங்களாயின. இராட்சத அரசின்
கண் மூடித்தனமான குண்டடிகளால் இவர் வீட்டிலிருக்கும்
போதே 22.5.94-ல் அகால மரணமானார். இவரது குடும்பத்
தில் இருவரும் பலியாகினர். இந்த அநீதியை எதிர்த்து யாழ்-கூட்
டுறவு மேற்பார்வைச் சபையார் ஆதரவில் 21.6.94-ல் கூட்டுற
வாளர் உள்ளிட்டோரின் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்
முன் எக்காலத்திலுமில்லாத பெரிய அளவில் நடந்தது.

இவருக்குப் பின் குறித்த பணிப்பாளர் சபையின் ஒருவரான
எஸ். செல்லையா – இருபாலை அவர்கள் தலைவராக நியமன
மானார். நீர்வேலியில் சுவையகம் திறக்கப்பட்டு, கோப்பாயில்
வெதுப்பகத்திற்கும் அத்திவாரமிடப்பட்டது. மிகக்குறுகிய காலத்
தில் 1.11.94-ல் இவர் காலமாக நேரிட்டது.

தொடர்ந்து நடந்த தேர்தலில் எழுவர் தெரிவாகி
திருவாளர்கள் சி. மகேந்திரன் - நீர்வேலி தலைவர், எஸ்.
குமாரசாமி - கோப்பாய் தெற்கு உபதலைவர், செல்வி
காட்சாயணி மகேந்திரன் – உரும்பிராய், பே. அருட்செல்
வம்–ஊரெழு, செ. தம்பிஐயா-கோப்பாய் வடக்கு, வே. இராச
துரை - கட்டப்பிராய், ச. தர்மலிங்கம் - அச்செழு ஏழு பேர்
கொண்ட பணியாளர் சபை திறம்படக் கடமையாற்றுகிறது.

அரசியல் அழுத்தங்கள் கூடி, சமரச பேச்சு வார்த்தை
களும் முறிந்து, பல விதமான தடைகளும் போடப்பட்டு சங்கங்
கள் சுயமாக இயங்க முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டன. இத
னால் பல பலநோக்குச் சங்கங்கள் நட்டத்திலியங்க ஆரம்பித்
தன. எமது புதிய பணிப்பாளர் சபை நீண்ட காலம் அனுட்டா
னத்திலிருந்து வந்த கொள்வனவுத் திட்ட முறைகளை திடீரென
மாற்றியமைத்து, புதிய முறையில் தெரிவாகும் பணிப்பாளர்



களுடன், பணியாளர்களும் சேர்ந்து சென்று உள்ளூர் வெளி
யூர் கொள்வனவுகளை இயலுமான வரை ஊக்கினர். சங்கத்
திற்கு தாராளமாக வேண்டிய சாமான்கள் வந்து சேர்ந்தன. சில
காலம் நட்டத்தில் ஓடியதால் பணியாளர் சம்பள வெட்டு, கிராம
வங்கி சேம வட்டி குறைப்பு என்பன ஆலோசனையிலிருந்தபடி
நிகழாது சங்கம் சீர் செய்யப்பட்டுள்ளது.

பணியாளர் சபையின் புதிய திட்டம் வெற்றிகண்டு கூட்டுற
வாளர்களும், நுகர்ச்சியாளர்களதும் பாராட்டுதல்களையும் பெற்
றுள்ளது நட்டம் என்ற நிலை போய் குறுகிய காலத்தில் பல
லட்சம் ரூபா லாபம் பெற்றுள்ளதாகவும் அறிகிறோம்.

(தொடரும் 1.4.95)

# கோப்பாய் வடக்கு விவசாயவிருத்தி விளைபொருள் விற்பனவு ஐக்கிய சங்கம்

1940 ஆண்டு காலப் பகுதியில்யாழ்ப்பாணத்தின் பொரு ளாதாரம் மோசமான வகையில் தாக்கமடைந்திருந்தது. யாழ்ப் பாணத்திலிருந்து படித்த வாலிபர் மலாயா போய் உத்தியோ கம் பார்ப்பது முன்னரே துண்டிக்கப்பட்டிருந்தது. எமது மக்க ளது சுருட்டு, புகையிலை. தென்னிலங்கை வியாபாரமும், நாடு சுதந்திரமடைந்ததும் உத்தியோக வாய்ப்புக்களும் அருகி வரத் தொடங்கின. மேலும் பல லட்சம் ரூபா வருமானத்தை யாழ்ப் பாணத்திற்கு ஈட்டிக்கொடுத்த மலையாளம் புகையிலை வியா பாரம் இக்காலப்பகுதியில் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. இந்த நிலையில் யாழ்-வருமானத்தைச் சீராக்கும் நிலைக்குப் பிரதான மாக யாழ். விவசாயிகளின் வருமானத்தைச் சீராக்கும் நிலைக் குக் கொண்டு வருவதற்கான வழிவகைகள் பற்றியாராயப்பட் டன. யாழ்ப்பாணத்தின் சுவாத்தியத்திற்கு ஏற்றதான காசுப் பயிர்கள் பற்றி ஆராயப்பட்டு பரீட்சார்த்தமாகப் பல இடங் களிலும் உபஉணவுப் பயிர் மாதிரிமேடைகள் தனிநபர்களாலும். பொது ஸ்தாபனங்களாலும், விவசாயப் பகுதியாலும் போடப் பட்டுப் பரீட்சிக்கப்பட்டபோது வெங்காயம் கூடுதலான பயன் தந்தது.மலையாளம் புகையிலைக்காகச் செற்புகையிலை செய் யவும் தீர்மானிக்கப்பட்டது. இவற்றை உற்பத்தியாக்குவதில் யாழ்ப்பாணத்தில் பொருளாதாரவளர்ச்சிக்கு மிகவும் உறுதுணை யாக விருந்தும் இலங்கையில் முன் மாதிரியாக எல்லோராலும் கணிக்கப்பட்டதுமான கூட்டுறவியக்கமே கைகொடுத்துதவுமெனக் கருதப்பட்டது.



இந்தவகையில் விவசாயப் பகுதியிலிருந்து ஓய்வு பெற்ற W. A குக் அவர்கள் தலைமையில், கூட்டுறவியக்கத்தின் முன் னோடிகளாயிருந்த பலரும் கூடி, விவசாய கூட்டுறவாளர் சங்கம் என்பதனை 6.3.1942-ல் ஆரம்பித்தனர். பிரதிவருடமும் பலலட் சம் ரூபா பெறுமதியான வெங்காயம் வெளிநாடுகளிலிருந்து இறக் குமதியானதால் வெங்காயச் செய்கையில் முதலில் நாட்டம் கொண்டு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் மாதிரி மேடை கள் போட்டுக் காட்டப்பட்டு அரசின் உதவியிடன் பெரும் பிர சாரமுஞ் செய்தனர். எதிர்பாராத பலன் காணப்பட்டது. ஆகை யால் கிளைச் சங்கங்களை ஆங்காங்கே ஸ்தாபித்தனர். இந்த வகையில் வலிகாமம் வடக்கு-கிழக்கு பகுதிகட்கென ஆரம்பிக்கப் பட்ட சங்கம் சுன்னாகம் புகையிரத ஸ்தானத்துக்கு அண்மை யில் களஞ்சியசாலையும் சங்கக்காரியாலமுங் கொண்ட மண்ட மமைத்து, செயலாற்றத் தொடங்கியது. வெங்காய உற்பத்தி யாழ் விவசாயிகட்கு அபரிமிதமான பலனைக் தரத்தொடங்கியதனால் உற்பத்தி கூடிய போது வலி—கிழக்குப் பகுதிக்கென பிறிதான தொரு சங்கமுண்டாக்கி, புத்தூரில் உள்ளதொரு தற்காலிகக் கட்டிடத்தில் செயலாற்றியது. இக்காலகட்டத்தில் முதலில் ஆரம் பமான சங்கத்திற்குப் பல கிளைச்சங்கங்கள் ஏற்பட்டமையால், வடபகுதி விவசாயவிருத்தி விளைபொருள் விற்பனவு ஐக்கிய சங் கங்களின் சமாசம் எனத் தனது (என் டி ஏ பி சி யூனியன்) பெயரை மாற்றிக் சிறந்தவகையில் சேவையாற்றியது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்தை உலரவிட்டுக் கூட்டில் போட் டுச் சாக்கிலிட்டுப் புகையிரதமூலமும் லொறிகள் மூலமும் தென் னிலங்கைக்கு அனுப்பிக்கொண்டிருந்தது. அனுப்பும் வெங்காயம் போக மேலதிகமானவற்றைக் கூடுகளிலிட்டுச் சேமித்துவைத்தே அனுப்பினர். பெருந்தொகையான கூடுகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. சேமித்து வைத்தல் கூடுகளிலிடல் சம்பந்தமான பயிற்சிபெற ஒருவரை வெளிநாட்டிற்கனுப்ப யோசிக்கப்பட்டது.

உரும்பராய் கிளை முகாமையாளராயிருந்த அ. சேனாதி ராசா அவர்களைச் சமாசம் இந்தியாவிற்கனுப்பியது. தமிழ் நாட் டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இவருக்கும் பெரிதும் உதவியா யிருந்தன. அவர் பயிற்சியின் பயனாக காட்டுத்தடிகளும் தென் னோலைகளும் கொண்டு வெங்காயம் சேமித்தற்கான பட்டடை கள் சமாசத்திலும் கிளைச்சங்கங்களிலும் அமைக்கப்பட்டன. அனுப்பும் வெங்காயம் போக மேலதிகமானவற்றை பட்டடை களில் சேமித்துவைத்து வருடம்முழுவதும் தென்னிலங்கை அனுப்ப வாய்ப்பேற்பட்டது. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் வெண் காயக் கூடுகள் பின்னத் தொடங்கினர். நெடுந்தீவு, உரும்பராய்,

கோப்பாய்ப் பகுதிகளில் கூடுதலாகக் கூடுகள் பின்னப்பட்டன.
இந்தவகையில் வயோதிபர்கட்கும் சிறுவர்கட்கும் துணைவருமான
மும் கிடைத்தன.

1948-ல் நடந்தவொரு சம்பவம் எமதூருலிருந்து இராமு
இளையதம்பி, அப்பா செல்லையா என்போர் தமது வெண்கா
யத்தை வண்டிகளில் புத்தூர் கொண்டுசென்றனர். எதிர்பாராத
விதமாய் அந்தக்கிழமை வெங்காய ஏற்றுமதி நிற்பாட்டவேண்
டியநிலை சமாசத்திற்கு ஏற்பட்டது. அன்று புத்தூர் வந்த வெண்
காயம் ஒருவரிடமும் எடுக்காது திருப்பியனுப்பும் நிலையுமுருவா
ன்து நேரம் பி.ப 5 மணி வரை இதனால் நிர்வாகிகட்கும் வெண்
காயம் கொண்டு வந்தவர்கட்கும் . பெரும் பிரச்சனைகள்
உண்டானது கொண்டுவந்த வெண்காயத்தைத் திருப்பிக் கொண்டு
போவதனால் ஏற்படும் சிரமத்தை அன்று நடைபெற்றுக் கொண்
டிருந்த நிர்வாகசபையின் போது பலரும் முறையிட்டனர். மேற்
கொண்டும் இப்படியான நிலைமை ஏற்படாதிருத்தற்கான வழி
முறைகள் ஆராயப்பட்டன. அன்றைய நிர்வாக சபையில் சமுகமா
யிருந்த என் போன்ற பலரதும் வற்புறுத்தலின் பேரில் சமுகமாயி
ருந்த கூட்டுறவுப் பகுதியாரதும் முன்னிலையில் கோப்பாய் உரும்
பராய், நீர்வேலி, அச்சுவேலி, இடைக்காடு முதலிய இடங்களில்
கிளைகள் ஆரம்பித்து அவ்வப்பகுதி வெங்காயங்களை அந்தக்
கிளைகளிலேயே எடுத்தனுப்புதற்கான ஒழுங்குகள் தீர்மானங்களா
கின, சமுகமாயிருந்த கூட்டுறவு உதவி ஆணையாளர் R.C.S.
க்கு, சமாசப் பிரதிகளாலும் இது விஷயம் ஒப்புதல் பெறப்பட்
டது இந்தவகையில் 1949 காலபோக வெண்காயத்தை எடுத்
தனுப்ப கோப்பாய் வடக்கு சின்னப்பா சுப்பிரமணியம் அவர்
களது வீடு ஒழுங்கு செய்யப்பட்டு மேற்கொண்டு வேண்டியன
செய்யப்பட்டன அவசியமான காலத்தின் போது சி சுப்பிரமணி
யம் அவர்கள் தாம் குடியிருந்த வீட்டைக்காலி செய்துதவியது
விவசாயிகள் அனைவரதும் பாராட்டுதல்களுக்குள்ளானது.

தொடர்ந்து எமது முயற்சியால் கோப்பாய் கிராமச்சங்
இடப்பரப்பிற்கென ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது கோப்பாய்
வடக்கு கிராமவிதானையார் சி. ஆறுமுகம் அவர்கள் காரியதரி
யாகவும் க. முருகேசு ஆசிரியர் தனாதிகாரியாகவும் க. இ குமார
சாமி தலைவராகவும் 9 பேர் கொண்ட நிர்வாகசபை செயலாற்
றத்தொடங்கியது கோப்பாய் வி. வி. வி. வி ஐக்கிய சங்கம் J 1055
இலக்கத்தில் 13.11.52-ல் பதிவாகியது சீ கந்தையா அவர்கள்
முகாமையாளராகச் சிறப்புறச் சேவையாற்றினார் முதலாம்
வருட அறிக்கையில் 1500 அந்தர் இந்திய விதை வெண்காயம்



வினியோகம் 6000 அந்தர் வெண்காயம் அங்கத்தவரிடமிருந்து எடுப்பு 990 புசல் விதை நெல் வினியோகம் 4 அங்கத்தவர்கட்கு இறைக்கும் இயந்திரங்கள் கடனாக 2 அங்கத்தவர்கட்குக் கிணறு வெட்டக்கடன் கட்டிட வசதியீனத்தினால் வேறுவகையான வியாபாரங்கள் செய்யாத போதும் முதல் வருடத்திலேயே ரூபா 8610/73 சுத்தலாபமாகப் காணப்பட்டது

கோப்பாய் கிராமசங்க இடப்பரப்பினுள் வெண்காயம் களஞ்சியப்படுத்தவும் காரியாலயமைத்தற்கான இடவசதிகள் கொண்டதொரு கட்டிடம் சங்கம் நிறுவத் தீர்மானமாயது இம் முயற்சியிற்குத் தேவையான காணியை நன்கொடையாகப் பெற யோசிக்கப்பட்டு கோப்பாய் தெற்கு சூசையப்பர் கோயிலடிக்கு வடபுறமாய் நாலுபரப்பு காணிபெற உரிமையாளரிடம் சம்மதம் பெறப்பட்டது கட்டிடமைக்க வேண்டிய முயற்சிகள் யாவும் செய்யப்பட்ட போது சில காரணங்கள் கூறி காணியுரிமையாளர் உறுதிமுடித்துத்தர மறுத்து விட்டார் நிர்வாக சபையினரின் தொடர் முயற்சியால் கோப்பாய் வடக்கில் சங்க அங்கத்துவ அன்பர்களான திருவாளர்கள் ச. கந்தப்பிள்ளை வ.சின்னப்பா, ஏ. வல்லிபுரம், சி. சுப்பிரமணியம், திருமதி அ. கதிர்வேலு என்போர் தாமாகவே முன்வந்து 8 பரப்பு 15 குழி கொண்ட காணியை நன்கொடையாக வழங்கினர் இக்காணியை நன்கொடையளித்தோர் முன் சம்மதித்து மறுத்தவர் போல பெரியதனவந்தரகளல்லர்; சாதாரணவிவசாயிகளே இந்தஇடத்தில் நாலு அறைகள் கூட்ட மண்டபம், களஞ்சியசாலை என்பன கொண்ட 4500 ச. அடி கட்டிடமைத்தற்கான திட்டமிட்டு, தனது சேமிப்புடன் ஐம்பதினாயிரம் ரூபா அரசாங்கத்திடமிருந்தும் கடன் பெறப்பட்டது குறித்த கட்டிடத்துக்கு அத்திவாரமிட அப்போது காணியபிவிருத்தியமைச்சில் ஆணையாளராகவிருந்த ம. ஸ்ரீகாந்தா அவர்களை அழைத்திருந்தோம் 22.3.52 பி.ப 6,15 ற்கு அடிக்கல் நாட்டப்பட்டது மேற்கொண்டு சங்கத்தின் துரித வளர்ச்சியினை அனைவரும் பாராட்டினர்.

நாட்டின் பிரதமரான டி. எஸ், சேனநாயகா அவர்கள் குதிரையிலிருந்து விழுந்து இறந்துவிட்டதான செய்தி கிடைத்தது; என்பதனை கூட்டமுடிவில் விழாநாயகரால் சபைக்குத் தெரிவிக்கப்பட்டது.

கே. எஸ். செல்லையா என்பவரிடம் ஒப்பந்த மூலம் கட்டிட வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. கட்டிட வேலைகள் துரிதகதியில் முடிந்தன. ஒப்பந்தகாரனுக்கும் சங்கத்திற்கும் இடையேயுண்டான சிறிய பிணக்கொன்று வடபகுதி கூட்டுறவு பதிவுகாரியஸ்தராயிருந்த ஆர். சி. எஸ். குக் அவர்கள் முயற்சியினால் சமரசமாகத்தீர்த்து வைக்கப்பட்டது. கட்டிட வேலைகள் யாவும் பூர்த்திய

டைத்தமையால் திறப்புவிழாவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்
டன. உணவு கூட்டுறவு மந்திரி காரியாலயப் பாராளுமன்றக் காரி
யதரிசியும் சாவகச்சேரி பா.உறுப்பினருமான வே. குமாரசாமி
அவர்களால் 26.6.53 வெள்ளிக்கிழமை மாலை எமது புதிய கட்டி
டம் திறந்து வைக்கப்பட்டது. பிரதான வீதியிலிருந்து மங்கல
வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டு மண்டபவாசலில் நாடா
வெட்டி சமயாசாரப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பமானது.
தொடர்ந்து நடந்த கூட்டத்தில் வே. கு. அவர்கள் பேசும்போது
"இலங்கையின் ஏனைய பாகங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில்
கூட்டுறவியக்கம் துரித கதியில் வளர்ந்துள்ளது. தமிழரின் அடிப்
படைத் தத்துவமான ஒற்றுமை நம்மவரிடையே செறிந்திருப்பதே
காரணமாகும். உங்கள் தலைவர் க'ரதுரையில் வெண்காயத்தின்
உத்தரவாத விலையைக்கூட்டுமாறும் அங்கத்தவர்கட்கு வேண்டிய
கடன்வசதிகளைக் குறைந்த வட்டியில் பெற ஆவன செய்யுமாறும்
கேட்டார். இதற்கான முயற்சிகளைக் கட்டாயம் செய்வேன். புதிய
கிணறுகள் வெட்ட அரசாங்கம் தயாராகவிருக்கின்ற இச்சந்தர்ப்
பத்தை நம்மவர் பயன்படுத்த வேண்டும். உலகத்தில் பிரதிவருட
மும் சனத்தொகை 1½ % கூடிவரும்போது இலங்கையின் பெருக்கம்
2½ வீதமாகவுள்ளது வன்னிப்பகுதியில் ஆரம்பித்துள்ள குடியேற்
றத்திட்டங்களில் நம்மவர் உடன்சென்று குடியேறி உணவுற்பத்
தியைப் பெருக்க உதவவேண்டும். காற்றுள்ள போதே தூற்றிக்
கொள்ள வேண்டும் யாழ்ப்பாணத்தில் வாழும் 5½ லட்சம் பேரும்
வெளியே வாழும் 75 லட்சம் பேருக்கும் வேண்டிய வெண்
காயத்தை உற்பத்தி செய்து அளிக்க முடியும். 400 லட்சம் ரூபா
பெறுமதியான இந்திய வெண்காயமும் 80 இலட்சம் ரூபா பெறு
மதியான பீடிப்புகையிலையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி
செய்யப்படுகிறது. அவற்றை நாம் யாழ்ப்பாணத்திலேயே உற்
பத்தியாக்கிக் கொடுக்க முன் வரவேண்டும் என்றும் குறிப்பிட்
டார்.

காரியாதிகாரி ய.செல்வரத்தினம்- கடலேரித்திட்ட வேலை
களைத் துரிதப்படுத்துவதற்கு ஆவன செய்து தருமாறு குறிப்பிட்
டார். காரியதரிசி சி. ஆறுமுகம் அவர்களும் தமது அறிக்கையில்
இது விஷயத்தினை வற்புறுத்தியிருந்தார். "யாழ் குடாநாட்
டினுள் இருக்கும் நிலம் பறிபோகாது; எந்தக்காலத்திலும் அதனை
நம்மவர்களே பயன்படுத்தலாம். தென்னிலங்கைக் குடியேற்றங்
கள் விரைந்து செய்யப்படும் போது நம்மவர்கள் குடாநாட்டிற்கு
வெளியே விசேடமாக வன்னிப் பகுதியில் குடியேறியாக வேண்



டும்" - என மீண்டும் விளக்கி உரையாற்றினார். ஈற்றில் இந்தச்
சங்கத்தின் சிறந்த சேவைக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

| சங்கத்தின் 3 வரு. வளர்ச்சியட்டவணை | 1950 | 1960 | 1970 |
| --- | --- | --- | --- |
| அங்கத்தவர் | 426 | 792 | 987 |
| வெண்காய உற்பத்தி | 4900 அ. | 8900 அ. | 15000 அ. |
| இறைக்கும் இயந்திரக்கடன் | 4 | 33 | — |
| வாளிச்சூத்திரம் | 2 | 8 | — |
| விதை உருளைக்கிழங்கு | | 407 அ. | 2250 அ. |

1970 காலப்பகுதியில் அரசாங்கத்தின் தாராள மனப்பான்
மையினால் எமது விவசாயிகள் என்றுமில்லாதவாறு பெருநன்
மையடைந்தனர். 1988 அளவில் ஐக்கிய தேசியக்கட்சியரசாங்
கம் வெளிநாட்டு விதைகிழங்குகளை நிற்பாட்டி தரங்குறைவான
உள்ளூர் நுவரேலியா விதைகிழங்குகளை வினியோகித்து மறை
முகமான செய்கைகளால் எமது விவசாயிகள் தொடர்ந்து
பெருநட்டமடையச்செய்தது. கூடிய விதமானோர் 1989 அளவில்
உருளைக்கிழங்குச் செய்கையை முற்றாகக் கைவிடநேர்ந்தது.

சென்ற அரசாங்க காலத்தில் ஆடி தொடக்கம் நவம்பர்
இறுதியாக வெண்காயத்திற்கு உத்தரவாத விலையாக ரூபா
20, 23, 25, 28, 31 சதங்களாக இறாத்தலுக்கு நிர்ணயிக்கப்
பட்டன. இதனால் அங்கத்தவர் விளைந்தவுடன் சங்கத்திற்குத்
தள்ளும் நெருக்கடி நிலைகள் மாறி, தாங்களாகவே பிடிகட்டி
இருப்பில் வைக்கத் தொடங்கினர். 1970 வரையில் கொழும்புச்
சந்தைக்கு தாமாகவே லொறிகளில் அனுப்பிப் பெருலாபம
டைந்தனர். இதனால் வெண்காயக்கூடு உற்பத்தியும் நின்றது.

பிலிப் குணவர்த்தனா அமைச்சராக வந்தபோது விவ
சாயவிருத்தி விற்பனவுச் சங்கங்கள் பல நோக்கக் கூட்டுறவுச்
சங்கங்களாக 1960 அளவில் மாற்றமடைந்ததனால் எமது சங்
கமும் உரம் கிருநாசினி, வாழைக்குலை, மாட்டுத்தீன், புடைவை
முதலிய பல்வேறு வியாபாரங்களையும் தொடங்கியது. விவ
சாயிகள் காசுப்பயிராக வெண்காயம் செய்த நிலைமைமாறி மீள
சாய் உருளைக்கிழங்குச் செய்கைகளிலும் பெருலாபமடைந்தனர்.

1950-ல் எமது கட்டிடக்காணியின் வடபுறமாய் 3 பரப்பு
12 குழி காணி கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் தெரு
வோரத்தில் 3 பரப்புக்காணி 10 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு
செய்யப்பட்டு அதில் கிராமவங்கி, பாதிரி விற்பனைக் கடை

கள், மணிலா சுருட்டுத் தொழில்களும் நடத்தவும் மற்றும்
வியாபார நிலையங்களும் நடத்த 4500 ச, அடி பரப்பளவுள்ள
இரண்டு மாடிக் கட்டிடமமைத்தற்கான சகல 'முயற்சிகளும்
செய்யப்பட்டன. குறித்தபடி அடிக்கல் நாட்டுவதற்
கான முயற்சிகள் செய்து கொண்டிருந்த போது 30.10.70-ல்
புதிய புனரமைப்பின் கீழ் வலிகாமம் தென்பகுதி ப. நோ. கூ.
சங்கமாக்கி அதனுடன் இணைக்கும் முயற்சிகள் நடந்தன.
இடப்பரப்பும் வியாபார சுழற்சி நிலையும் நோக்கிச் சங்கங்கள்
பதிவாகின, கோப்பாய் வடக்கு இடபரப்பு 10 சதுர மைல்
ஆக விஸ்தீரணமிருந்த போதிலும் எமது சங்கம் 1969-ல் ரூபா
962211/- உடன் விற்பனையுடன் லாபத்திலியங்கி வந்தது.
எமதூர் 3 பண்டகசாலைகளையும் சேர்க்கும் போது ரூபா
1210916/- ஆகக் காணப்பட்டது. மற்றும் ஏழு ஐக்கியநாணய
சங்கங்களும் சுருட்டுச் சங்கமும் கிராமத்தில் தொழிற்பட்டுக்
கொண்டிருந்தன. இவை நோக்கி அரச திட்டத்தின்படி விற்
பனை மொத்தத்தை நோக்கி எமது சங்க இடப்பரப்பை ஓர்
சங்கமாகப் பதிவு செய்துதருமாறு ஆணையாளருக்கும் அமைச்
சருக்கும் விரிவானதொரு மனு சமர்பித்து பேட்டி கண்டும்
கேட்டோம். புதிதாகச் சங்கங்கள் பதிவு செய்வது மட்டுப்படுத்
தப்பட்டாயிற்று. உங்கள் கோரிக்கை திட்டப்படி நியாயமா
னதே. மேற்கொண்டும் சங்கங்கள் உண்டானால் உங்கள் சங்கத்
திற்கு முதலிடம் தரப்படும் - என ஆணையாளரால் வாக்களிக்
களிக்கப்பட்டது எனினும் எமது புதிய கட்டிடமமைக்கும் முயற்
சிகள் தொடர்ந்தன: 25.12.70-ல் கூட்டுறவாணையாளர் திரு.
ஆர். ஜீ ஜீ ஒல்கொட் குணசேகர அவர்கள் குடும்ப சமேதர
ராக வந்து புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டினார். அதனை
யடுத்து நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் எமது
சங்கத்தின் தேவைகளையிட்டு ஓர் விரிவான மனு சமர்ப்பித்
தோம். அதில் குறிக்கப்பட்ட விஷயங்கள் பற்றி கூட்டுறவாணை
யாளர் அவர்கள், அமைச்சருக்கு வேண்டிய சிபார்சிகள் செய்து
அனுப்பியதோடு அதன் பிரதியை எமக்கும் அனுப்பிவைத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் எமது சங்கம் அரசாங்க வர்த்தமானிப்
பிரசுரப்படி வலிகிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்துடனி
ணைக்கப்பட்டது எமது சங்கத்தின் தலைவராகவிருந்தவரே
புதிய சங்கத்தின் தலைவராகவும் நியமனம் பெற்று 1971 - 74
நாலு வருடங்களுக்குத் தொடர்ந்தும் சேவையாற்றும் சந்தர்ப்
பமும் கிடைத்தது.



எமது புதிய கட்டிடத்திற்கான திட்டமிட்டபடியே கட்டிட
வேலைகள் யாவும் கூலி ஒப்பந்த முறைப்படியே பிரதம சங்கத்தி
னால் பூர்த்தியாக்கப்பட்டன. ஆரம்ப காலத்திட்டபடியே கிராம
வங்கி உடைகள் தயாரித்தல், பீடிவேலை, மாதிரிக்கடைகள்,
மணிலா சுருட்டுத் தயாரித்தல் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டு
இலாபகரமாக நடந்தன.

26.3.73-ல் பிரதமவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்த
மக்கள்வங்கி மானேசர் ஹெட்டியாராச்சி அவர்களினால் புதிய
கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. விசேட விருந்தினர்களாக
C.W.E தலைவர் கமகே கண்டி பல நோக்கக் கூ. ச. தலைவர் அபு
யவர்த்தனா, கலீல், சிரேஷ்ட கூட்டுறவாணையாளர் இ. இரா
சரத்தினம் என்போரும் சமூகமளித்திருந்தனர். அப்போது தலை
வர் க. இ. குமாரசாமி வாசித்தளித்த மனுவையொட்டி,

1. அடைவு பிடிக்கும் கடன் தொகையை கிராம வங்கிக்கு
15 ஆயிரத்திலிருந்து 2 லட்சமாக்கவும்,

2. மிளகாய்க் கடனை ஏக்கருக்கு 800/= லிருந்து
1200/= ஆக்கவும்,

3. எமது சங்கம் எரிபொருட்களை வட பிராந்தியக்
கூட்டுறவு நிலையம் அனுரதபுரிக் கிளையிலிருந்து நேரடியாகப்
பெற்று வினியோகிக்கும் உரிமையைப் பெறவும் வாக்களிக்கப்பட்
டது. (தொடர்ந்து இவை நடைமுறைக்கு வந்தன.)

கோப்பாய் சுருட்டுத் தொழிற் சங்கத்தாரின் பீடிக்கோட்
டாவை எமது சங்கத்திற்கு மாற்றி 1000 பீடிக்கு 5 ரூபா கூலி
யும் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மற்றைய நீர்வேலி, உரும்ப
ராய் சங்கக் கிளைகளிலும் பீடி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு லாப
கரமாக வேலை செய்ததோடு தென்னிலங்கைக்கும் அனுப்பப்பட்
டன. தொடர்ந்து எமது சங்கம் முன்னரே திட்டமிடப்பட்டி
ருந்தபடி தையற் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டு ஒரு
மேற்பார்வையாளரின் கீழ் 3 தையல் யந்திரங்களும் 12 பிள்ளை
களும் வேலை செய்தனர். செய்யப்பட்ட தையல் பொருட்கள்
பக்கத்தேயுள்ள மாதிரி விற்பனை நிலையத்தில் விற்பனையா
யின. இவ்விடம் செய்யப்பட்ட தையல் பொருட்களைக் கொண்
டதொரு காட்சி 19.10.73-ல் யாழ் - மாவட்ட அரசாங்க அதி
பர் விமல் அமரசேகர அவர்களினால் திறந்து வைக்கப்பட்டுப்
பாராட்டும் பெற்றது. ஆஸ்பத்திரிக்கு அண்மையில் இருப்பத
னால் அவ்விடம் தங்குவோரின் தேவைகட்கு வேண்டிய பொருட்
களுட்பட பிறிதான மாதிரிக் கடையில் விற்பனையாகி நல்ல
வகையில் நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து பயிற்சியாளர் ஒருவரை வரவழைத்து யாழ் நகரில் சமாசம் கொடுத்த பயிற்சி வகுப்பில் பயின்ற சி. பழனித்துரை என்பவரின் மேற்பார்வையின் கீழ் மணிலா சுருட்டுக்கள் தயாரிக்கப்பட்டு தென்னிலங்கைக்கும் அமெரிக்கா வுக்கும் அனுப்பப்பட்டது யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரா யிருந்த பங்கர் அவர்களின பாராட்டையும் பெற்றது

எமது கிராமத்திற்குத் தனியே ஒரு சங்கம் அமைக்கப்பட்டு கடந்த காலங்களில் அங்கத்தவர்கட்கு - பொதுவாக விவசாயி கட்கு இருந்த கூட்டுறவு வாய்ப்புக்கள் அரசியல் மாற்றங்களி னாலும் இடப்பரப்பு விஸ்தரிக்கப்பட்ட போது குறைந்துள்ள தனை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

### நிர்வாகிகள்

| | 26.6.53-ல் | 30.12.70-ல் |
|---|---|---|
| தலைவர் | க. இ. குமாரசாமி | க. இ. குமாரசாமி |
| காரியதரிசி | சி. ஆறுமுகம் | தீ. சுப்பிரமணியம் |
| தனாதிகாரி | க. முருகேசு | செ. முத்தையா |
| நிர்வாக சபையினர் | சா. ஏகாம்பரம் | மு. தம்பையா |
| | க. செல்லத்துரை | மா. நடராசா |
| | த. சதாசிவம் | ச. சிவக்கொழுந்து |
| | க. வைத்திலிங்கம் | ஆ. சங்கரப்பிள்ளை |
| | எஸ். தம்பிப்பிள்ளை | வே. கந்தையா |
| | செ. முத்தையா | செ. பரமலிங்கம் |
| | வ. பசுபதி | — |
| மானேசர் | சீ. கந்தையா | சீ. கந்தையா |
| உதவி மானேசர் | ச. வல்லிபுரம் | நா. முருகவேள் |
| | | ஐ. செல்வநாதன் |

| | R C S. க்கு |
|---|---|
| கூட்டுறவுதவியாணையாளர் | வெ. நடராசா |
| மேலதிக கூட்டுறவாணையாளர் | சீ. சண்முகராசா |
| கூட்டுறவுப் பரிசோதகர் | A. விஜயரத்தினம் |
| விவசாய போதனாசிரியர் | (31.7.72) |



# வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (என் டி ஏ பி சி)

வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தமது தொழிற்பரப்பு இடமாகக் கொண்டு விவசாய கூட்டுறவாளர் சங்கம் 1942-ல் ஆரம்பமானது, ஆரம்பத்தில் நெற்செய்கையில் அதிக நாட்டம் கொண்டுழைத்தது. அதிக உணவு பயிரிடுக - என்பதுவே அதன் தாரக மந்திரமாயிருந்தது. அரசினரின் 'தேசியத் திட்டங்கட்கு அமைவாக இச்சங்கம் கடமையாற்றியமையால் பல நூறு லட்சம் ரூபா இச்சங்கத்தினூடாக விவசாயிகட்குக் கடன் கொடுக்கப்பட்டது. பல கிளைச் சங்கங்களையும் ஆரம்பித்து அவற்றினூடாகவும் தனது சேவையைப் பரப்பியது. கிளைச் சங்கங்களின் எண்ணிக்கையும் தொழிற் பரப்பும் கூடியமையால் இச்சங்கம் வடபகுதிக்குள் மாத்திரம் தனது தொழிற் பரப்பைச் சுருக்கி 6.3.43-ல் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சமாசம் எனத் தனது பெயரை மாற்றிக் கொண்டது. முகாந்திரம் என் கிருஷ்ணர்—மூளாய், விவசாய உத்தியோகத்தராயிருந்து ஓய்வு பெற்ற டபிள்யூ. ஏ. குக் எனும் முன்னோடிப் பெரியார்கள் நெற் செய்கையோடு மிளகாய்ச் செய்கையும் ஊக்கினார். வலி கிழக்கு வடக்குப் பகுதிகட்கென ஒரு கிளை நிறுவப்பட்டு கன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் ஓர் கிளைக் கட்டிடத்தையும ஸ்தாபித்தது அவ்விடம் விவசாய விளைபொருட்களைச் சேமித்து தென்னிலங்கைக்கு புகையிரத மூலமனுப்பினர்: மேலும் இப்படியே வடபகுதியின் பல பாகங்களிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதே காலப் பகுதியில் பல லட்சம் ரூபா பெறுமதியான வெங்காயம் பிற நாடுகளிலிருந்து

இறக்குமதியாகின. யாழ்ப்பாணத்தில் அச்சமயம் பரீட்சார்த்
தமாக வெண்காயம் பயிரிடப்பட்ட போது நல்ல பலனைத்
தந்தது யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வெண்காயச்
செய்கையை ஊக்க பிரசாரக் கூட்டங்கள், மாதிரி மேடைகள்
மூலம் வேண்டிய முயற்சிகள் நடந்தன. இராச வீதியிலுள்ள
சந்திகட்கு அண்மையில் போட்ட மாதிரி மேடைகள் நல்ல
விளைவைத் தந்தமையால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்
தாமாகவே முன் வந்து செய்யத் தொடங்கினர், மலையாளம்
புகையிலை முற்றாகத் தடை செய்யப்பட்ட 1946 காலப் பகுதி
யது. மேலும் மலையாளம் புகையிலை செய்த மேட்டு நிலசெம்
மண் இடங்களில் செய்த சிகறெற் புகையிலை மணற் பாங்கான
தரைகளைப் போல நற்பலன் தரவில்லை, ஆகவே மேட்டு நில விவ
சாயிகள் வெண்காயச் செய்கையில் அதிக ஆர்வம் கொண்ட
னர். சமாசம் விதை வெண்காயம் வரவழைத்து கிளைகள்
மூலம் அங்கத்தவர்கட்கு விநியோகித்தது. பிரதான காசுப்
பயிராக வெண்காயம் முதலிடத்தைப் பிடித்தது இந்த நிலை
யில் யாழ் - பிரதான வீதியில் சமாசம் தனக்கென ஒரு கந்
தோரும் பண்டகசாலையும் நிறுவியது. விவசாய உணவு மந்திரி
யாயிருந்த O. E. குணதிலகா அவர்கள் குறித்த கட்டிடத்தை
14.11 53-ல் திறந்து வைத்துப் பேசுகையில் "ஒரு இயக்கத்தின்
முன்னேற்றம் அதன் ஊக்கத்திலேயே தங்கியிருக்கின்றது. இந்தச்
சமாசம் ஒரு திறமான பரிபாலனக் கட்டிடம் அமைத்த ஊக்க
முயற்சியை உன்னி உள மகிழ்கிறேன். நிர்வாகத்திற்கும் சமாசத்
திற்கும் எனது மனமார்ந்த ஆசி இதை இந்நாட்டின் ஏனைய
பகுதிகளும் பின் பற்றுவார்களாக" என்று பாராட்டினார்.
கூட்டுறவாணையாளர் குணசேனா டிசொய்சா அவர்களும் சமு
கமளித்துச் சமாசத்தின் நடைமுறைகளையும் யாழ் - கூட்டுறவி
யக்கத்தின் துரித வளர்ச்சி கண்டு உவகை தெரிவித்து வாயா
ரப் புகழ்ந்து பேசினார். அக்கால கட்டத்தில் இருந்த அதி
கார சபையினர்:

தலைவர் என். சீ. சிவஞானம் சட்டத்தரணி
உபதலைவர் K சுப்பிரமணியம் - வட்டுக்கோட்டை
காரியதரிசி முகாந்திரம் இ.பி. இராசையா வண்ணார்பண்ணை
தனாதிகாரி K, பொன்னம்பலம் (நியமனம்)

அதிகார சபையினர்
K. V. இராசையா க. த. கரைச்சி,
S. திருநாவுக்கரசு பண்டிதர் இணுவில், K. கந்
தையா அதிபர் நெடுந்தீவு. S. மகேசன்,



நவாலி, M. சின்னத்தம்பி அதிபர் மீசாலை,
மூ. வேலாயுதர் கீ. சே. சிறுப்பிட்டி
க. இ. குமாரசாமி கோப்பாய்

நியமன அங்கத்தவர்

A. S. நவரத்தினராசா CCS - AGA
D.S. சாண்டேஸ் நல்லூர் ஆசிரிய கலாசாலை
R C S க்கு கூட்டுறவுதவியாணையாளர்.

மேற்கொண்ட விபரங்களை இறப்பு விழாவிலன்று வெளியான 11-ம் ஆண்டு மலரில் விரிவாகக் காணலாம்.

அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வெண்காயம் ஏராளமாய் இறக்குமதியாகின, அந்நிய நாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிக்கக் கருதிய அரசாங்கம் இலங்கையில் வெண்காயச் செய்கையை ஊக்குவிக்கக் கருதி குறைந்த வட்டியில் கடனுதவி செய்தும், போதிய விதை வெண்காயத்தை இறக்குமதி செய்தும் உள்ளூரில் வெண்காயக் கூடுகள் பின்னை ஊக்கியும் ஆவன செய்தது. மாதா வீதம் உத்தரவாத விலையையும் கூட்டியது. செய்கை கூடியமையால் பெரும் பிரிவுகள் - பின்னர் கிராமச் சங்க இடப்பரப்புகள் தோறும் தேவையான இடங்களில் கிளைகளை நிறுவினர். (வலிகிழக்கில் நிறுவப்பட்ட 10, கிளைகள் இன்று வேறு தேவைகட்குப் பாவிக்கப்படுகின்றன) வெண்காயம் உலர விட்டு கூடுகளிலிட்டு சாக்குகளில் போட்டு நாளொன்றிற்கு 40 - 60 புகையிரதப் பெட்டிகளில் கொழும்புச் சந்தைக்கு அனுப்பப்பட்டன. இவை C.W.E. மூலம் விற்பனையாகின. மேலும் மெக்கிலவினைக்கு லொறிகள் மூலமும் அனுப்பப்பட்டன இதனால் அரசு எதிர்பார்த்தபடி இலங்கைக்குத் தேவையான வெண்காயம் யாழ்ப்பாணத்திலேயே உற்பத்தியானது. இந்திய வெண்காய இறக்குமதி முற்றாக நின்றது. கொழும்புச் சந்தையில் அனுப்பிய வெண்காயம் முழுவதும் விலைப்படாது தேக்கநிலையேற்பட்ட காலங்களில் சமாசம் அனுப்பத் தயாராக வைத்திருந்த வெண்காயம் ஓரிரு தினங்கள் பிந்தியனுப்பும் நிலையும் உருவாகியது. இதே வேளையில்தான் உரும்பராய் அ. சேனாதிராசா அவர்கள் இந்தியா சென்று அவ்விட கூட்டுறவுச் சங்கங்களின் வேண்டிய பயிற்சி பெற்று வந்தமை கைகொடுத் உதவியது.

சமாசம் தமது களஞ்சியசாலையில் மாதிரிப் பட்டடைகளை காட்டுத் தடிகள் கிடுகுகள் கொண்டமைத்து கூட்டிவிட்ட வெண்காயங்களைச் சேகரித்தது, மேற்கொண்டு பிடி கட்டிய வெண்காயங்களை வேறு மாதிரிப் பட்டடைகளில் இவ்வாறே வைத்துச் சேமித்துக் காட்டியது. இதனைப் பார்வையிட்ட

கிளைச் சங்கங்களும் தமது களஞ்சிய சாலைகளில் இவ்வாறே பட்டைகள் கட்டிச் சேமித்தன. இதனால் நெருக்கடி நிலை தளர்ந்து வருடம் முழுவதும் சேமித்த வெங்காயங்களை தேவை நோக்கி தென்னிலங்கைக்கு அனுப்பும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கத்தவர்களும் தமதிடங்களில் சிறுக இவ்வாறே பிடி கட்டி அவற்றை சுமார் 20 - 30 இறாத்தல் வரை கொண்ட பெரும் பிடிகளாக்கி தாழ்வாரங்களிலும் கொட்டில்களிலும் தூக்கி, தேவையான போது பிடிகளைக் குலைத்து கூந்தல்களையரிந்து சந்தைப் படுத்தவும் பழகிக் கொண்டனர்.

தென்னிலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சமாசத்தைத் தரிசித்த பெரியார்களும், பிரதிநிதிகளும் எழுதிய குறிப்புக்கள் சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும், விசேடமாக 14.11.53 மலரிலும் பரக்கக் காணலாம். சமாசத்தின் ஆரம்ப கால - தெற்கட்புறக் காரியாலயத் திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வந்த டி. எஸ். சேனநாயகா அவர்கள் எழுதிய குறிப்பு : ''எனது விஜயம் எனக்கே மிகவும் பயன் தரும் வகையில் அமைந்தது. இச்சமாசம் திறம்படக் கடமையாற்றியுள்ளது. கணக்கு முறைகள் புத்தகங்கள் யாவும் மிகத் திருப்திகரமாயிருந்தன'' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சர்வதேச தொழில் ஸ்தாபன அதிகாரி எழுதிய குறிப்பும் மற்றும் பெரியார்கள் வாழ்த்துரைகளும் காணலாம்.

இந்த நோக்கில் நிரந்தரக் காரியதரிசியாயிருந்த அம்ஸாப்பிள்ளை C.C.S அவர்களின் அளவுக்குமிஞ்சிய தலையீடு காரணமாக நா. க. சிவஞானம் தலைவர் உள்ளிட்ட அதிகார சபையினர் அனைவரும் 22.10.55-ல் ராஜினாமாச் செய்ய நேரிட்டது ஓர் துக்ககரமான சம்பவமாகும்.

பின் காலத்துக்குக் காலம் தெரிவான நிர்வாக சபைகளில் பெரும் மாற்றம் அரசியல் தலையீடுகளுமிருந்தன. பின் அரசினரால் நியமனம் பெற்ற நிர்வாக சபையே செயலாற்றியது சங்கத்தின் செயற்பாடுகளில் பெரிய தாக்கங்களுண்டானதை அங்கத்தவர் பலரும் கவனித்தனர். இது காரணமாக:

பின்னர் 5.11.62-ல் முதலியார் வை. மகேசன் நவாலி தலைவராகவும் சி. மார்க்கண்டு - கரவெட்டி காரியதரிசியாகவும், மு. கந்தசாமி - இடைக்காடு உபதலைவராகவும் இ. பொ. குமாரசாமி - கோண்டாவில், தனாதிகாரியாகவும், திருவாளர்கள் வே. இ. கந்தசாமி - கரவெட்டி, சு. கந்தையா ): P-மாதகல், க. இ. குமாரசாமி - கோப்பாய், இ. வேலாயுதம் - கைதடி, சி மயில்வாகனம் - மூளாய் நிர்வாக சபையினராகவும் தெரி [illegible] 1963-ல் யாழ்ப்பாணத்தில் 3 லட்சத்து 50 ஆயிரம்



அந்தர் வெங்காயம் உற்பத்தியானது. ஒரு கிழமைக்கு 7000 அந்தர் (60 புகையிரதப் பெட்டிகள்) C W Eக்கு புகையிரத மூலமும், மிகுதி லொறிகள் மூலமாகவும் இலங்கையின் பல பாகங்கட்கும் காலபோகத்தில் அனுப்பப்பட்டன. இதே நேரத்தில் 17.8.63-ல் அரசாங்கம் 11 கப்பல்களில் வெங்காயத்தையும் உருளைக் கிழங்கையும் இறக்குமதி செய்தது. யாழ் வெங்காயம் தொகையாக உற்பத்தி செய்த இதற்கு முன்னைய காலங்களிலும் இப்படி இரண்டு முறை நடந்தது. இது சம்பந்தமாய் மேலிடத்துக்கு சமாசம் மனுச் செய்தும் பேட்டி கண்டு பேசியும் கேட்டதுமுண்டு. இவை அரசியல் குரோதங்களினாலும் தமிழர் பொருளாதாரத்தில் பொறாமை கொண்டும் நடந்த சம்பவங்களாகும்.

இது காலை வார்தா அரியநாயகம் அவர்கள் முயற்சியால் நீர்வேலியில் 1960-ல் இரண்டு நாட்களாக சர்வோதய மகா நாடு நடந்தது. இலங்கைக் கிளைக்கு செயலாளராக சி.கா. வேலாயுதபிள்ளை தெரிவு செய்யப்பட்டதனால் பீகாரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகா நாட்டிற்கு அடுத்துச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. சி. க. வே. திரும்பும்போது ஓர் சிறு காந்தியப்பையில் கொண்டு வந்த உருளைக்கிழங்குகளை புன்னாலைக்கட்டுவனிலுள்ள அவர் நண்பரான ஆசிரியரொருவரிடம் நடக் கொடுத்தார். போட்டிருந்த புகையிலை நாற்று மேடைக்குத் தயார்ப்படுத்திய இடமொன்றில் நட்டார். ஏற்ற கார்த்திகை மாதமானபடியால் எதிர்பாராத நல்ல பலனைத் தந்தது. பல விவசாயிகள் - விவசாயப் பகுதியார் - சமாசத்தார் பலரும் சென்று பார்த்தனர். கார்த்திகை மாதத்தில் தோட்டத்தில் பயிரொன்றும் நாட்டுவதில்லை? நாட்டுவதும் மழைக்குக் கரைந்து விடும். நாட்டினாலும் மேற் கொண்டு நற்பலன் தராது என்பது விவசாயிகளின் அனுபவம். இக்காலத்துக்கு ஏற்ற பயிராக உருளைக்கிழங்கு இருக்குமா? என்பது பற்றி ஆராய மேற்படி சம்பவம் தூண்டியது. விவசாயப் பகுதியார் திருநெல்வேலி கமத்தொழிற் பாடசாலையிலும், சமாசத்தார் இராச வீதியில் சில இடங்களில் முன்னர் வெங்காய மாதிரி மேடைகள் போட்டது போன்று மாதிரி உருளைக்கிழங்கு மேடைகள் போட்டு முறைப்படி பராமரித்தனர். நற்பலன் கண்டது. பார்த்த விவசாயிகளை உருளைக்கிழங்குச் செய்கையில் நாட்டம் கொள்ளத் தூண்டியது.

''யாம் விவசாயிகட்கு வருவாய்க்குரிய வழியைக் காட்டினால் போதும் அவன் தானாகவே தொழிற்படத் தொடங்கி விடுவான்''.

சமாசம் வெங்காயச் செய்கைக்கு ஆரம்பத்தில் காட்டிய ஊக்கத்திலும் பார்க்க உருளைக் கிழங்குச் செய்கையில் அதிக நாட்டம் காட்டியது. ஒல்லாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து ஆர்க்கா, டிசிறி, கினிக்கா போன்ற இன விதையுருளைக் கிழங்குகளை வரவழைத்து அங்கத்துவ சங்கங்கள் மூலம் விவசாயிகட்கு விநியோகித்தது. அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறைந்த வட்டிக்கு இலேசான முறையில் தேவையான கடனுதவிகளைக் கொடுத்தது. உருளைக்கிழங்குச் செய்கை குறுகிய காலப் பயிர் மாத்திரமல்ல; கார்த்திகை மாத மழைக்கும் பனிக்குப் ஏற்ற பயிராகவும் காணப்பட்டது. பிரதி வருடமும் உருளைக்கிழங்குச் செய்கை கூடிக் கொண்டே வந்ததனைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1962 — 63-ல் | 2 | ஏக்கர் | 68-ல் | 524 | ஏக்கர் |
| 63 — 64-ல் | 5 | ,, | 69-ல் | 1300 | ,, |
| 65-ல் | 15 | ,, | 70-ல் | 1300 | ,, |
| 66-ல் | 70 | ,, | 71-ல் | 1500 | ,, |
| 67-ல் | 130 | ,, | | | |

5.11.68-ல் நா. த. சிவஞானம் மீண்டும் தலைவராக வந்தார், து. கணேஸ் நியமனக் காரியதரிசியாயிருந்தார். E. P. இராசையா முதலிய பழைய நிர்வாகிகள் மீண்டும் வந்து தெரிவாகினர், 1968-ல் 148 அங்கத்துவ சங்கங்களையும் அவற்றினூடாக இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட விவசாய அங்கத்தவர்களையும் கொண்டதாகச் சமாசம் நிலவியது வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய்ச் செய்கைகளோடு உரம் கிருமிநாசினி வகைகள் நீரிறைக்கும் இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள் முதலியவற்றிலும் தனது தொழிலை விஸ்தரித்தது. தென் கிழக்கு ஆசியாவிலிருந்து வந்த கூட்டுறவுப் பிரதிநிதி ஒருவர்

''குட்டி வத்திக்கான் போலுள்ளது'' – என்று பாராட்டியதும் குறிப்பிடத்தக்கது 1967, 1971 காலப்பகுதியில் பின்வரும் அட்டவணையிலிருந்து சங்கத்தின் தொழிற்பாட்டை ஓரளவு அறியலாம்,

| | வியாபாரம் | உரம் | நீரிறைக்கும் இயந்திரம் | உதிரிப்பாகங்கள் |
|---|---|---|---|---|
| 1967-ல் | 823338/88 | 66020.50, | 166533.50. | 366865.60 |
| 1971-ல் | 1195204/39 | 498573.10, | 155978.75, | 380205.74 |



1969-ல் மகாதேசாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட இலங்கை கூட்டுறவியக்கம் அரச ஆணைக்குழு சிபார்சு அறிக்கையில் 4 ; 51 ம் பந்தியில்;

''இப்பொருள்களின் உற்பத்தி வட மாகாணத்தில் பெரிதும் விருத்தியடைந்து, வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சமாசம் இதனைச் சந்தைப் படுத்துவதில் பெரிதும் பிரயோசனமான சேவை புரிந்துள்ளது. இச்சமாசத்திற்குக் கிடைத்துள்ள அனுபவத்தை தேசிய ரீதியில் பரப்புவதற்கு இச்சமாசத்தை தேசிய உணவுப் பொருள் சந்தைப் படுத்தும் மேற்பார்வைச் சபையாக மாற்றப்படுத்தல் வேண்டும். தலைமைக் காரியாலயத்தை யாழ்ப்பாணத்திலும் கிளை ஸ்தாபனங்களை தேவைப்படுமிடங்களிலும் ஆரம்பிக்க வேண்டும்; ஏனைய சந்தைப் படுத்தும் சபைகள் போல அமைதல் வேண்டும்'' - என்று பாராட்டி எழுதியுள்ளதனையும் நினைவு கூரலாம்.

16.11.69-ல் பிரதமர் டட்லி சேனநாயகா அவர்கள் உணவு கூட்டுறவு மந்திரி பண்டா சகிதம் காங்கேசன்துறை – துறைமுகக் கட்டிடத்துக்கு அத்திவாரக்கல் நாட்ட வந்த விஜயத்தின் போது சமாசத்திற்கும் வருகை தந்த சமயம் அவருக்கு அளிக்கப்பட்ட மனுவில்,

சென்ற வருடம் 180 லட்சம் ரூபா பெறுமதியான வெங்காயத்தை சேமிக்கற்காக முன்பு இந்தியாவிலிருந்து இறக்குமதியான கூடு முழுவதும் இச்சமாசத்தின் முயற்சியால் தற்போது உள்ளூரிலே உற்பத்தியாக்கப்பட்டு இந்திய இறக்குமதி முற்றாக நிற்பாட்டப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு 2620 அந்கர் மிளகாய் கொள்வனவு செய்து தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டது. மிளகாய் இறக்குமதிக் கட்டுப்பாடு வந்தமையால் 300 வீதம் செய்கை இடப்பரப்புக் கூடியுள்ளது. 3 லட்சம் ரூபா பெறுமதியான வாழைப்பழம் இலங்கையின் மருத்துவமனைகட்கு எமது சமாசம் விநியோகித்துள்ளது. பெருமளவில் 6.8.69-ல் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கு எம்மிடையே வசதியும் ஆர்வமுண்டு. விதை உருளைக்கிழங்குக் கட்டுப்பாடு இடையூறாகவிருப்பது வருந்தத்தக்கது'''

என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு இராப் போசன விருந்தின் போதும் தலைவர் சிவஞானம் அவர்களால் இது விஷயம் மேலும் விளக்கப்பட்டதும் நினைவு கூரத்தக்கது,

27.7.69-ல் சமாசக் காரியதரிசி து. கணேஸ் அவர்கள் யப்பானில் நடந்ததொரு சர்வதேச மகா நாட்டிற்குச் சென்று திரும்பி அங்கு விசேடமாகப் பயின்ற விஜயங்களை எமது சமாசத்திலும் நடைமுறைப்படுத்த உதவினார். சமாசத்தின் நடைமுறைகள் மிகவும் திருப்திகரமாக இருந்தமையால் நா. த. சிவஞானம், இ. பி. இராசையா உள்ளிட்ட அனைத்து அதிகார சபை அங்கத்தவர்களும் 8 8.70-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் என்றுமில்லாதவாறு போட்டியின்றித் தெரிவாகினர்.

1971 காலபோகத்தில் மாத்திரம் 30 ஆயிரம் அந்தர் வெண்காயத்தை C. W. E. கொழும்பிற்கும் மிகுதி 15 ஆயிரம் அந்தர் வெண்காயத்தை லொறிகள் மூலம் இலங்கையின் ஏனைய பாகங்கட்கும் அனுப்பியது. 16 ஆயிரம் அந்தர் மிளகாய் C W E ஊடாக விற்றது. இது இலங்கையின் மிளகாய்த் தேவையின் 50% ஆகும்,

இதனையடுத்த காலப்பகுதியில் பாராளுமன்றம் மாறிய போது சமாசம் இலாபகரமாகவும் தமது தொழில்களை விஸ்தரித்தும் யாழ் - விவசாயி பொருளாதார பலத்தில் வேகமாக வளர்ந்து வருவது பிடித்தமாயில்லாத காரியமாக அரசாங்கத்தின் மேலிடத்திலுள்ள சிலரால் கருதப்பட்டது இதே காலத்தில் தென்னிலங்கையில் ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த அகில இலங்கைச் சந்தைப்படுத்தும் சம்மேளனம் (மாக்பெட் லாபகரமாக நடைபெறாத நிலையில் தள்ளாடியது, அதற்கு மீண்டு கொடுக்க எமது சமாசத்தைச் சுவீகரிக்க மறைமுகமாக நடைபெறும் முயற்சி அறிய நேரிட்டது. மேலிடத்தின் கட்டளைப்படி யாழ் அரசாங்க செயலகத்தில் 21.10.71-ல் யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் கூட்டி

என் டி.ஏ பி.சி சமாசம் அவசியந்தானா அது செய்யும் காரியங்களைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்தாலென்ன?

என்பது பற்றிய ஆலோசனை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் காசுப்பயிர்களான உருளைக்கிழங்கு, வெண்காயம், மிளகாய்ச் செய்கைகளை அபிவிருத்தி செய்வற்கும் யாழ் - உற்பத்தியை தேவை நோக்கி மட்டுப்படுத்திச் சந்தைப் படுத்துவதற்கும் சமாசம் மிக அவசியம் தேவை

என எல்லாச் சங்கங்களும் ஏகோபித்து ஒரே குரலில் வற்புறுத்தின.



" சமாசம் தொடர்ந்து தனது பணியைச் செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் "

என்ற பிரேரணை ஏகமனதாகத் தீர்மானித்து. தொடர்ந்து அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அடுத்து சமாசத்தில் நடந்த கூட்டத்தில் சிரேஷ்ட உதவி யாணையாளர் க. சி. பொன்னுத்துரை அவர்களும் சமுகமாயிருந்த போது;

" ஆமாறு-சாமாறு சந்தியில் நிற்கிறோம் ஆளுங்கட்சி எம்.பி.க்களை அணுகுக: தலைவர்விரைந்து தொழிற்படுக"

என அங்கத்தவர் சிலரால் வற்புறுத்தப்பட்டது. தொடர்ந்து மனுக்கள் அனுப்பப்பட்டன. அப்போதிருந்த யாழ் - எம்பீக்களைச் சமாசத்திற்கு அழைத்து நடைமுறைகள் விளக்கப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டன. யாழ் கூட்டுறவியக்கம் நாளது வரை அரசியல்கலப்பில்லாது நடைபெறுவதும் தெளிவாக்கப்பட்டது. எனினும் கயிறு இறுகிக் கொண்டு வருவது அறியப்பட்டது. தொடர்ந்து 21 1 72-ல் தலைவர் நா. த. சிவஞானம், காரியதரிசி து. கணேஷ் இ பொ. குமாரசாமி, க. இ குமாரசாமி, கதிரவேலு ச. த. எனும் அதிகார சபை அங்கத்தவர்கள் யாழ் எம். பி. க்கள் சகிதம், குமாரசூரியர் மந்திரியாருடனும், மந்திரியார் இலங்கரத்தின அவர்களை அவர் காரியாலயத்தில் பேட்டி கண்டு பேசப்பட்டது.

1. சமாசத்தினைச் சுவீகரிக்க வேண்டாம்.
2. வீதையுருளைக் கிழங்கு 800 - 1000 தொன் இறக்குமதி
3. நீரிறைக்கும் இயந்திரங்கள் இறக்குமதி,
4. நாலு லொறிகள் வாங்க உத்தரவு
5. இரண்டு பெற்றோல் செற்றுக்கள் நடத்த அனுமதி என்பன கலந்து பேசப்பட்டு உத்தரவு கிடைத்தன.

சமாசத்திற்கு முன்னாலும் செம்மாதெருவிலும் நடத்தி வந்த பெற்றோல் நிலையங்கள் இலாபகரமாக இயங்கின. முன்னர் சுன்னாகத்தில் நடத்திய அரிசியாலையையும் சீர் செய்து திருப்திகரமாக நடந்தது. யாழ் கூட்டுறவுச் சங்கங்கட்கு லொறி மூலம் அரிசி விநியோகிக்கப்பட்டன. பழம் பதனிடும் தொழிற்சாலைக்கான திட்டம் வகுக்கப்பட்டு ஆரம்ப முயற்சிகள் தொடங்கின விளைவு காலத்தில் சந்தைப்படுத்துவது போக மேலதிகமான விளைவுகளைச் சமாசத்திலும் சேமித்தற்கான - முன்பே திட்டமிட்டபடி சமாசத்தின் பின் பகுதியில் வாங்கிய காணி

யில் 4 லட்சம் ரூபா திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட களஞ்சிய சாலை வேலைகள் துரிதமாக நடைபெற்றுப் பூர்த்தியடைந்தன. தேவையான நீரிறைக்கும் இயந்திரங்கள் இறக்குமதி செய்தத னோடு உதிரிப்பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டு இயந்திர சாதன திருத்தப்பிரிவும் ஆரம்பமானது.

31 12 72-ல் யாழ்-விவசாயப் பகுதி உதவியாணையாளரா யிருந்த மாணிக்கவாசகர் அவர்கள் உத்தியோகரீதியாக உள்ளன்போடு செயலாற்றிய பெரியாராயிருந்தார். அவரது வழிகாட்டல்களும் சமாசத்திற்குப் பேருதவி புரிந்து அவரால் எழுதப்பட்ட

''நாட்டிற்கு நலந்தருவன''

எனும் நூல் 5001 பிரதிகள் சமாசம் தன் செலவில் அச்சடித்து அங்கத்துவ சங்கங்கள் மூலம் தேவையான விவசாயிகட்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இந்நூலில் யாழ் - விவசாயச் செய்கையும், அத்தனை பயிர் வகைகள் பற்றிய செய்முறைகள் யாவும் விபரிக்கப்பட்டிருந்தமையால் இது யாழ்-விவசாயிகட்கு ஓர் வரப்பிரசாதமான நூலாக அமைந்திருந்தது.

அகில இலங்கை சந்தைப்படுத்தும் சம்மேளனத்திற்காக எமது சமாசத்தைச் சுவீகரிக்கும் முயற்சி மீண்டும் இரகசியமாகத் திட்டமிடப்படுவதறிந்தோம். 'மாக்பெட்' டைமூடுவதா? அல்லது அது நடைபெற வேண்டுமானால் என் டி ஏ பி சி சமாசத்தைச் சுவீகரிப்பதா? என்ற அளவிற்குச் சென்று விட்டதறிந்து 26.12 72-ல் கூட்டுறவு மந்திரியார் இலங்கரத்தினா அவர்களை தலைவர் உள்ளிட்ட குழு முன்னர் போல் வேண்டியவர்களுடன் பேட்டி கண்டு மனுவும் சமாப்பித்தோம். திருப்திகரமாயில்லை. மறு நாள் குமாரசூரியரைச் சந்தித்த போது ''சமாசக் கையிருப்புக்களைக் கிளைகள் பல வற்றிலும் பரவலாக வைத்திருக்கும் ஏற்பாடுகளை விரைந்து செய்வது நல்லது'' - எனக் குறிப்பாகப் புத்திமதி கூறினார். பிரதான உத்தியோகத்தரா யிருந்த மாக்பெட் மானேசர் - இலங்கரத்தினா அவர்கட்கு மிகவும் வேண்டியதொருவராக விருந்தார் - எனவும் அறிந்தோம்.

11.3.73-ல் நிதி மந்திரி என். எம். பெரரா அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தில், சமாசம் சம்பந்தமான கோரிக்கைகள் பல கோணங்களிலிருந்தும் பிரஸ்தாபிக்கப்பட்டன. எமது முயற்சிகள் மூன்று வருடங்கள் மாத்திரமே தாக்குப் பிடிக்க முடிந்தது. திடீரெனச் சமாசம் சுவீகரிக்கப்பட்டு 'மாக்பெட்' - உடனிணைக்கப்பட்டது இது யாழ் கூட்டுறவியக்கத்திற்கு பிரதானமாக யாழ்-விவசாயிகட்குச் செய்த தலையடியாகும். எமது முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போன நிலையில் யாழ் - விவசாயி அரசியலாரைத் திட்டும் நிலையேற்பட்டது.



தேவநாயகம் கூட்டுறவு விசாரணைச் சபை யாழ் - வந்த போது சமாசத்தின் பிரதான அதிகார சபை அங்கத்தவர்கள் ஒருங்கு சேர்ந்தும் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்தனி மனு சமர்ப்பித்தும் சாட்சியமளித்தன. கோப்பாய் விவசாயிகள் சங்கம் சார்பில் யான் தனித்து நீண்டதொரு சாட்சியமளித்தேன். நா. த. சிவஞானம் மொழி பெயர்ப்பாளராக உதவினார். தேவநாயகம் விசாரணைச் சபை நாம் கூறியவற்றை நிதானமாக ஆராய்ந்து;

''என்.டி.ஏ.பி.சி. சமாசத்தை மீண்டும் யாழ் - விவசாயிகளது கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டும்''

எனச் சிபார்சு செய்தது. அச்சிபார்சுப்படி செய்யப்படவில்லை அரசியல் சூழ்நிலைகள் வடக்கை வாழவிடாது நசுக்கும் நோக்கில் தொடங்கிய ஆரம்ப நிகழ்ச்சிகளிலிதுவுமொன்று எனக் கருதி மனம் வேகும் நிலை யாழ் - விவசாயிகளினிடையே ஆரம்பமானது.

பின்னர் சில காலத்தால்-தேவநாயகம் சிபார்சுப்படி எமது சமாசத்தை தற்போதைய பெறுமதி கணக்கிட்டுக் கொடுக்கும் ஒழுங்கு ஆலோசனையிலிருப்பதாக அறிந்தோம் எங்களிடம் பலாக்காரமாகப் பறித்தெடுத்து விட்ட, மீண்டு எங்கட்கு விலை பேசித்தரும் ஒழுங்கு ஒப்ப முடியாததென உணர்ந்தோம்.

தற்போது வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு ஆரம்பமாகி சுமூகமானதொரு நிலை தென்படுவதால், தேவநாயகம் விசாரணைச் சபை சிபார்சையொட்டி எமது கோரிக்கைகளை நிதர்சனமாகக் கேட்பதற்கான கட்டம் தோன்றியுள்ளது. சமாசம் சுவீகரிக்கப்பட்டு 17 வருடங்கள் வரை சென்று விட்டது. முன்னோடிகளாயிருந்த தலைவர் உட்படப் பல அதிகார சபையங்கத்தவர்கள் மறைந்து விட்டார்கள். இருப்பவர் சிலரும் வயோதிப நிலையில் சக்தியற்றவர்களாயுள்ளனர். எவர் எங்கே என்று தொடர்பு கொள்ள முடியாத விபரமறிய முடியாத நிலையுள்ளது. எது எப்படியிருந்தாலும் சமாசத்தோடு கடைசிக் காலத்தில் தொடர்புடையவனாயிருந்தவன்; என்ற வகையில் வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சிற்கும் கூட்டுறவாணையாளருக்கும், மனுச் செய்து, பிரதிகளை உள்ளிட்ட உத்தியோகத்தர்கட்கும், சம்பந்தப்பட்ட கூட்டுறவியக்கத்தோடு தொடர்புடைய உதவிகோரக் கூடியவர்கட்கும் என்னால் 16.2.90-ல் அனுப்பட்ட மனுவில், சமாசச் சம்பந்தப்பட்ட விபரங்கள் ஓரளவு கூறப்பட்டு,

1) தேவநாயகம் விசாரணைச் சபை சிபார்சுப்படி என்.டி.ஏ.பி. சமாசத்தை மீண்டும் யாழ் - விவசாயிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்குமாறும்;

2) பலவந்தமாகச் சுவீகரித்து எடுக்கும் போது இருந்த நிலையிலுள்ள அசைவுள்ள – அசைவற்ற சொத்துக்களின் பெறுமதியோடு பெற்றோல் நிலையம், சுன்னாகம் அரிசியாலை உள்ளிட்ட அனைத்தையும் திருப்பிக் கொடுக்குமாறும்;

3) பலாத்காரமாகப் பறித்தெடுத்த காலத்திலிருந்து நாளது வரை விவசாயிகள் கூ. சங்கங்கள் சார்பில் உரிய நஷ்டஈடு கிடைக்கச் செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம்:

என்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதனோடு அமையாது சூழ்நிலைகள் சரிவரும் போது உரியவர்களைப் பேட்டி கண்டு மேற்கொண்டு வேண்டியன செய்யவும் தீர்மானிக்கப்பட்டு ஆவன செய்யப்படுகின்றன.

இதனையடுத்து எமது மனுவின் பேரில், திருமலை அமைச்சிற்கு வருமாறு யாழ் கூட்டுறவு உதவியாணையாளர் திரு. நித்தியராஜ் அவர்கள் மூலம் அழைப்புக் கிடைத்தது. அப்போதைய இராணுவ பயங்கர நிலையும் பிரயாணச் சிக்கல்களும் மனதிற்கொண்டு எனது உடல் நலக்குறைவு காரணமாக அவ்விடம் வர முடியாமையை அறிவித்தேன்.

தொடர்ந்து 9.3.90 திரு. த. வேலாயுதபிள்ளை CCD அவர்கள் அமைச்சின் அறிவுறுத்தலின்படி வந்து எம்முடன் நீண்ட நேரம் கலந்துரையாடி விபரமான அறிக்கையொன்று தயாரித்துச் சென்றார். பின்:

30.8 90 திரு. சிவமகாராசா பா. உ அவர்களுடன் யாழ் விவசாயிக்கு வரப்பிரசாதமாயிருந்த என் டி ஏ பி சி சமாசத்தையும் கூட்டுறவு மாகாண வங்கியையும் மீளப்பெற இயலுமான வரை முயற்சித்து ஆவன செய்யவும் - எனக்கேட்டேன். அவர் கேள்விப்படி நித்தியராஜ் ACCD அவர்களைச் சந்தித்து, விரிவானதொரு அறிக்கை தயாரித்து பா. உ அவர்கட்கும், கூட்டுறவாணையாளர் வேலாயுதபிள்ளை அவர்கட்கும் அனுப்பப்பட்டன.



இரண்டு கிழமைகட்கு பின்னர் மீளத் தொடங்கப்படவுள்ள விவசாய சமாசத்திற்கு என்னைத் தலைவராக்க திரு. நித்தியராஜ் கூ. உ. ஆணையாளர் மூலம் கேட்ட போது எனது உடல்நலக்குறைவு காரணமாக மன்னிக்கும்படியும் வேறு பொருத்தமானதொரு பெயரைத் தெரிந்து அவர் சம்மதம் பெற்று அனுப்பும்படியும் வற்புறுத்தியும் ஆலோசனை கூறி இரண்டு பேரைச் சிபார்சு செய்தேன்.

சில நாட்களின் பின் முன்னைய சமாசப்பணியாளராகவிருந்த திரு. செல்வரத்தினம் அவர்கள் என்னிடம் வந்து சமாசம் சம்பந்தமான குறிப்புக்களும் ஆலோசனைகளும் பெற்றுச் சென்றார். மீளவும் ஒரு முறை வந்து கலந்தாலோசித்தார். தற்போது குறித்த சமாசம் அதே இடத்தில் முன் பங்கியில் மீள உருப்பெற்று நடைபெறத் தொடங்கியுள்ளது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். அது இழந்த அத்தனையும் பெற்று யாழ் விவசாயியின் பொருளாதாரபலத்திற்கு உறுதுணையாக விளங்குமென்பது எமது திடமான நம்பிக்கை.

நல்லவர்கள் நல்லபடி தொடங்கி நல்லபடி நடத்தியன இடையில் நசுங்கண்டாலும் மீள உருப்பெற்று நல்லபடி செயலாற்றும் - என்பது நியதி (31.7.94)

அகதிகளாக வெளியேறி 16.5.96-ல் தென்மராட்சியிலிருந்து திரும்பும் போது சமாசத்தைப் பார்வையிட்டேன். அண்மைக் காலம் குண்டடிகளால் மேற்கொண்டு சேதமில்லாதிருந்தது கண்டு உவகையடைந்தேன். மேல் விசாரித்த போது சமாசம் முற்றாக ஒப்படைக்காத நிலையும், மீண்டும் எடுக்கும் முயற்சியும் நடைபெறுவதாக அறிந்தேன். மேலும் விபரம் நேரில் விசாரித்தறிந்து பின்பு முன்னைய தொடர்புகளை ஞாபகப்படுத்தி, எமது சமாசத்தையும் வங்கியையும் திருப்பித் தருமாறு கூட்டுறவாணையாளர் திருமலை ஊடாக அமைச்சிற்கும் கூட்டுறவாணையாளருக்கும் புனர்வாழ்வு அதிகாரசபை உள்ளிட்டோருக்கும் 1.2.97-ல் மனுச் செய்யப்பட்டுள்ளது. இது பற்றி மற்றும் தொடர்புடைய சங்கங்களும் முறையிட்டுள்ளதாக அறிகிறேன். சமாசமும் கூ. மாகாண வங்கியும் மீளப் பெற்றாலே தான் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் – விசேடமாக விவசாயிகளின் பொருளாதாரம் புனர்வாழ்வு - புனரமைப்பு மீள உருப்பெறும். அண்மைக்காலத் தேர்தலையொட்டி வரவிருக்கும் அபேட்சகர்களிடமும் கட்சிகளிடமும் இது சம்பந்தமாக நினைவூட்டி விமோசனம் தேடுவது கூட்டுறவாளர்களதும் குறித்த சங்கங்களதும் தலையாய கடமையாகும்.

# கோப்பாய் வடக்கு சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

1947 காலப்பகுதி வரை யாழ். விவசாயியின் காசுப்பயிராக மலையாளம் புகையிலை இருந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் செம்மண் உள்ள தரைகளில் 1200 ஏக்கர் வரை குறித்த புகையிலை செய்து மலையாளத்திற்கு ஏற்றுமதியானது 1947-ல் ஏற்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி மலையாளம் புகையிலை ஏற்றுமதி பிரதி வருடமும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு காலடைவில் முற்றாக நிறுத்தும் ஒழுங்குண்டானது அதே காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் புகையிலையின் பெறுமதி ஒரு கோடி ரூபா, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யும் சிகரெற் புகையிலையின் பெறுமதி அதனிலும் கூடியது. குறித்த ஏற்றுமதித் தடையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பொருளாதாரத்தைச் சீர்செய்து சமாளிக்கும் நோக்கமாக யாழ்ப்பாணம் விவசாய போதனா பாடசாலையார் பரீட்சார்த்தமாக 1953-ல செய்யப்பட்ட சிகறெற் புகையிலை நற்பலன் தந்தது. அந்நியச் செலாவணியை மிச்சம்பிடிக்க உந்தப்பட்ட அரசாங்கமும் இலங்கையில் 3000 ஏக்கரில் சிகறெற் புகையிலைச் செய்கையை ஆரம்பிக்கத் திட்டமிட்டது. அதே திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் மலையாளம் புகையிலை செய்த 1200 ஏக்கரிலும் சிகறெற் புகையிலை செய்ய ஒதுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச்



சங்கங்கள் விவசாயப் பகுதியாரின் தூண்டுதலால் ஆரம்பிக்கப்பட்டன. கோப்பாய் சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் 08-09-55 இல் ஆரம்பமானது.

தலைவர் : க. இ. குமாரசாமி
உபதலைவர் : சி. வெ. சுப்பிரமணியம்
காரியதரிசி : வி. பொன்னம்பலம்
தனாதிகாரி : பொ. நீ. சம்பந்தர்

நிர்வாக சபையினராக திருவாளர்கள் த. சதாசிவம் - இருபாலை, சீ. கந்தையா, அ. சங்கரப்பிள்ளை, இ. பொன்னையா, என்போர் தெரிவாகிச் செயலாற்றியது. 112 பேர் அங்கத்தவராயினர். போறணைகள் கட்டக் காணி தேவைப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள சிதம்பரபுண்ணியம் காணிகளின் மேற்பார்வைத் தலைவர் இராமலிங்கம் உபாத்தியாயர் - மாதகல், செ. நடராசா உபா. - நீர்வேலி, வ. முத்துக்குமாரசாமி ச. த. கோப்பாய் என்போரை அணுகி கோப்பாய் வடக்கு கட்டுப்பிலானையிலுள்ள சிதம்பரம் செவ்வாய்க்கிழமை மடபரிபாலனத்திற்குரிய 16 பரப்புக் காணியை நீண்ட காலக் குத்தகைக்கு உறுதி முடித்து எடுக்கப்பட்டு அதில் 3 போறணைகள் கட்டி ஆரம்பத்தில் உலர்த்தப்பட்டன. 1955 லிருந்து செய்கை படிப்படியாகக் கூடி 1957-ல் அங்கத்தவர் 134.

போறணைகள் - 9
போட்ட நாற்று மேடை - 60
ஒத்த புகையிலை - 214488 இறா.
விற்றுவந்த காசு - 146736/50 ஆனது.

போறணை கட்ட 10 வருடத் தவணையில் மத்திய காலக் கடனும் செய்கைக்காக குறுகிய காலக் கடனும் அரசாங்கத்தாலும் உலர்த்திய புகையிலையை வாங்கும் இலங்கை சிகறெற் புகையிலைக் கொம்பனியாலும் C. T. C. கொடுக்கப்பட்டன. புகையிலை நாற்று மேடை போடல் உலர்த்தல் ஆகியனவற்றிற்கு உதவியாக அரசாங்கம் விவசாயப் போதனாசிரியர் (A.I.T), புகையிலை உலர்த்துபவர் என்போர்களை நியமித்தனர். புகையிலை விற்ற காசிலிருந்து பிரதி வருடமும் குறுகிய காலக் கடன்கள் கழித்தெடுக்கப்பட்டன. பெரும்பாலும் மணல் நில வயல்வெளியுள்ள இடங்களில் நடப்பட்ட உலர்த்திய புகையிலையிலும் பார்க்க செட்டுநில மலையாளம் புகையிலை செய்த இடங்களில் புகையிலைகள் தரம் குறைவாகக் காணப்பட்டது அவதானிக்க முடிந்தது.

1957-ல் ஏற்பட்ட பெரு மழையால் யாழ்ப்பாணத்து நாற்று மேடைகள் பழுதான போது தென்னிலங்கையிலிருந்து நாற்றுக்கள் தருவிக்கப்பட்டன. புகையிலை உலர்த்தும் காலத்திலும் பெருமழை பெய்தது. இதனாலும் உலர்த்திய புகையிலையின் தரம் குறைவு ஏற்பட்டு விலை வீழ்ச்சியும் உண்டானது. இது காரணமாகச் சமாசம் தலையிட்டு அவ் வருடக் குறுகிய காலக்கடன் கழிக்கப்படவில்லை. தொடர்ந்த முயற்சியால் புகையிலையின் விலையும் 25% ஆல் உயர்த்தப்பட்டது. [illegible]த்தில் இயங்கிய 12 சங்கங்கட்கு ஒதுக்கப்பட்ட 800 ஏக்கரில் எமது சங்கத்திற்கு 36 ஏக்கர் தரப்பட்டது. சிகரெற் புகையிலை உற்பத்தியாளரை ஊக்கப்படுத்த வேண்டியனவெல்லாம் அப்போ[illegible]தைக்கு அப்போது செய்து கொடுக்கப்பட்டன.

1960 காலப் பகுதியில் கோப்பாய் தெற்கு அங்கத்தவர் பிரிந்து கல்வியங்காட்டில் போறணைகள் கட்டிப் புறம்பாக நடத்தினர். எமது சங்கத்திற்கு த. சிவஞானம் அவர்கள் காரியதரிசியானார். வடபகுதி விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் எஸ். குணரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் வெ. நடராசா, எஸ். மனுவேற்பிள்ளை ஏ. ஜி. ரி. என்போர் சங்கங்களை மேற்பார்வை செய்து வழிநடத்தினர்.

1963-ல் நிர்வாக சபையில் அ. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், வே. செல்வரத்தினம் காரியதரிசியாகவும், செ. தம்பிராசா தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டு நன்கு செயற்பட்டது.

1965 காலப் பகுதியில் வெளிநாட்டு இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்ளூரில் மிளகாய், வெண்காயச் செய்கைகளை அரசூக்கிவித்து. என்டிஏ ரிசி சமாசமும் வேண்டியன செய்ததமையால் விவசாயிகள் பிரதானமாக மேட்டுநில விவசாயிகள் வெண்காயம், மிளகாய்ச் செய்கையில் நாட்டம் கொண்டு சிகரெற் புகையிலைச் செய்கையைப் படிப்படியாகக் குறைத்தனர். செம்மண் தரையில் முதலில் கைவிடப்பட்டு மணல் வயல்களை அண்டிய இடத்திலுள்ள சங்கங்கள் தொழிற்பட்டன. கடைசியாகச் செய்யப்பட்ட அராலி சி. பு. ச. காணிகளில் பம்பாய் வெண்காயச் செய்கையில் அதிக லாபம் காணப்பட்டமையால் அங்கும் முற்றாகக் கைவிடப்பட்டது.

குறித்த கோப்பாய் சி. பு. ச. காணி சங்கம் செயலிழந்ததால் கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. குறித்த விளையாட்டிடத்தை சரவணபவானந்த வித்தியாசாலையும் விளையாட்டிடமாகப் பாவித்து வருகிறது. எனினும் குறித்த சிகரெற் போறணைகள் இடித்தழிக்கப்படாத நிலையில் இன்றும் உண்டு. சங்கத்தின் அனுமதியுடன் இவற்றையிடித்து எல்லை மதில் கட்டும் ஆலோசனையிருப்பதாக அறிய முடிகிறது.



எது எப்படியிருந்த போதிலும் மலையாளம் புகையிலை ஏற்றுமதி முற்றாகத் தடை செய்யப்பட்டு விவசாயியின் பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து தத்தளித்த வேளையில் சிகரெற் புகையிலைச் செய்கை ஓரளவு கைகொடுத்து 20 வருடங்கள் வரை வைத்திருந்ததனை விவசாயிகள் என்றும் மறக்க முடியாது.

25—05—90

# யாழ்-சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

யாழ்ப்பாணத்தின் பிரதான காசுப் பயிராயிருந்த மலையாளம் புகையிலை ஏற்றுமதி 1950 காலப்பகுதியில் முற்றாகத் துண்டிக்கப்பட்ட போது மலையாளம் புகையிலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தார், சம்பந்தப்பட்ட விவசாயிகள் தொடர்புடைய வியாபாரிகள் என்போர்க்கு பெரும் நெருக்கடியான நிலைமையை உண்டாக்கியது. அரசுக்கும் கிடைத்த வெளிநாட்டுச் செலாவணிப் பாதிப்பும் ஏற்பட்டது.

இதே நேரத்தில் விவசாயத்தில் ஊக்கமுடைய முன்னோடிகளும் யாழ் விவசாயப்பகுதி உத்தியோகத்தர்களும் ஒன்று கூடி யோசித்து யாழ் சுவாத்தியத்திற்கு ஏற்றதான சிகறெற் புகையிலைச் செய்கையில் நாட்டங் கொண்டனர். அரசும் அந்நிய நாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிக்க நாட்டங் கொண்டு ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்து யாழ்ப்பாணத்தில் தொடங்கிய பரீட்சார்த்த செய்கைகள் வெற்றியளித்தன. யாழ் விவசாய அதிபராயிருந்த சி. கனகரத்தினம், கூட்டுறவுதவியாணையாளர் வெ. நடராசா, யாழ் — அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா போன்ற மேலுத்தியோகத்தர்களும் விவசாயிகள் சங்கங்களும் ஒன்று கூடி யாராய்ந்தனர். யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை, வேம்பிராய், கோப்பாய், நீர்வேலி, உடுவில், சங்கானை, உரும்பராய் முதலிய இடங்களிலும் பரீட்சார்த்தமாகச் செய்வித்தனர். மேலும் இவ்விடங்களில் இலங்கை சிகறெற் புகையிலைக் கொம்பனியார் உதவியுடன் சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டுச் செயலாற்றத் தொடங்கின. கொம்பனியார் சங்கங்கட்குத் தேவையான கடன்களைக் கொடுத்துதவினர். சிகறெற் நாற்று மேடைகள் ஆங்காங்கே போடப்பட்டன உலர்த்தற்கான போறணைகளும் கட்டப்பட்டு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விவசாயப் போதனாசிரியர்கள் உதவியுடன் புகையிலைகளும் உலர்த்தப்பட்டன. உலர்த்தப்பட்ட புகையிலை முழுவதையும் தெல்லிப்பளையில் கொம்பனியார் வாங்கினார். 1955-60 காலப்பகுதியில் உற்பத்தியாளர்கட்கும் சி.ரி சி (C.T C) கொம்பனியாருக்கும் இது உற்சாகத்தை ஊட்டியது.



சங்கங்கட்கு வேண்டிய - பயன்தரக் கூடிய காரியங்களை அரசாங்கத்திடமிருந்தும் சி.ரி சி கொம்பனியாளரிடமிருந்தும் பெற வேண்டியிருந்தாலும் ஒரு முகமாக முறையிட்டால் எளிதில் பயன் பெறலாமென எண்ணியதாலும், விசேடமாக தெல்லிப்பளை சிகறெற் புகையிலை சங்கத் தலைவர் வ. சுப்பிரமணியம், காரியதரிசி சண்முகநாதக்குருக்கள் என்போரது முயற்சியால் 10.3.55-ல் மல்லாகம் ஆங்கிலபாடசாலையில் ஏழு சங்கங்களின் பிரதிநிதிகளும் கூடி கலந்துபேசி, ஒரு சமாசம் நிறுவுதல் நல்லதென்ற முடிபிற்கு வந்தனர். பொதுவாக அப்போதிருந்த கஷ்டங்களை முறையிடுவதற்கு ஓர் தற்காலிக சபையும் தெரிவு செய்யப்பட்டது இதேவேளை சங்கங்கட்குத் தேவையான கடன்கள் முழுவதும் இலங்கைப் புகையிலைக் கொம்பனியாரே கொடுத்து முதல் புகையிலை கொடுத்தவுடன் உரிய கடன் முழுவதும் கழித்தெழுதப்பட்டன. மேலும் கொம்பனியார் தீர்மானிக்கும் விலைக்கே புகையிலை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமுமிருந்தது.

யாழ் கூட்டுறவுதவியாணையாளர் காரியாலயத்தில் 9.6.56-ல் ஏழு சங்கங்களின் பிரதி நிதிகளும் கூடினர். ஆணையாளர் வெ. நடராசா பிரதி நிதிகளை வரவேற்று, சமாசமாக இயங்கினால் உண்டாக்கக்கூடிய சாதகமான நிலைமைகளை விளக்கினார் கலந்துரையாடல்களின் பின் - உபவிதிகளும் நடைமுறைப் பிரமாணங்களும் ஆக்குவதற்காக வ. சுப்பிரமணியம் - தெல்லிப்பளை, க. இ. குமாரசாமி - கோப்பாய், பொ. கோவிந்தசாமி - கூட்டுறவுப் பரிசோதகர், கொண்ட உபகுழுவும் தெரிவானது 4.8.56-ல் மீண்டும் அதே இடத்திலேயே கூடி சமாச உபவிதிகளும், நடைமுறைப் பிரமாணங்களும் வேண்டிய திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ளப்பட்டதனோடு பின்வரும் நிர்வாகசபையும் தெரிவானது

| | | |
|---|---|---|
| தலைவர் | வ. சுப்பிரமணியம் தெல்லிப்பளை சி. பு. உ | தலைவர் |
| காரியதரிசி | க. இ குமாரசாமி கோப்பாய் | ,, |
| தனாதிகாரி | சி. பொன்னையா உரும்பராய் | ,, |
| நிர்வாகசபையினர் | நீ. சி. முருகேசு நீர்வேலி | ,, |
| | எஸ். சின்னத்தம்பி வேம்பிராய் | ,, |

மேற்கொண்டு சங்கங்களின் எண்ணிக்கை 7 லிருந்து 18 ஆகக் கூடியதனால் 3.11.56-ல் கூடிய பொதுக்கூட்டத்தில்

A.R. மனுவேற்பிள்ளை - பத்தைமேனி
அ. அம்பலவாணபிள்ளை - வரணி
க. நாகலிங்கம் - உரும்பராய்
இ. வேலாயுதர் - கைதடி

என்போர் உட்பட 9 பேர் கொண்டதாக நிர்வாகசபையாக விஸ்தரிக்கப்பட்டது.

சீ. பு. உ. ஐ. சங்க அங்கத்தவர்கள் அறிய வேண்டிய புகையிலை நாற்று மேடைபோடல் பசளையிடல் நிரைகை உரமிடல் உலர்த்தல் சம்பந்தமாய் கைக்கொள்ள வேண்டிய முறைகள், உலர்த்திய புகையிலையைத் தரம் பிரித்தல் முதலான விபரமடங்கிய, சபாநாகன் எ. ஐ. சீ. அவர்களால் எழுதப்பட்ட 40 பக்க புத்தகம் 3000 பிரதிகள் அச்சிட்டு அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அச்சிட்ட பிரதிகள் முடிந்தமையால் அங்கத்தவர் கேள்விக் கிசைந்து 2-ம் முறையும் அச்சிடப்பட்டது. மேலும் இலங்கை தொழிற்பிரிவின் வெளியீட்டுப் பிரிவினால் வெளியிட்ட 'சிகறெற் புகையிலை உண்டு பண்ணி உலர்த்துவதற்கோர் வழிகாட்டி' - எனும் பிரசுரி போதிய பிரதிகள் பெற்று சங்கங்கள் மூலம் அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

சீ. ரீ. சி கொம்பனியாரிடமிருந்து கடன் பெறுவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டமையால் கூட்டுறவு மாகாண வங்கியிடமிருந்து சங்கங்கள் கடன் பெற்று அங்கத்தவர்கட்குக் கொடுப்பதற்கான ஒழுங்குகளைச் சமாசம் செய்தது. மேலும் உரம் கிருமிநாசினிகள் உலர்த்துவதற்குத் தேவையான விறகுகள் என்பன பெறவும் இலகுவான வழிவகைகள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கு ஒதுக்கப்பட்ட 1200 ஏக்கரில் 800 ஏக்கரிலே தான் செய்யப்பட்டது. அதற்கான போறணை வசதிகள் செய்யப்பட்டன. அரசாங்கமும் ஒவ்வொரு சங்கங்கட்கும் உலர்த்துவதற்கான மனேசர்க்கு வேண்டிய பயிற்சியாளர்களைத் தாமாகவே நியமித்தனர். இந்த வகையில் 1958-ல் யாழ்ப்பாணத்தில் 42 சங்கங்கள் தொழிற்பட்டன.

சமாசமும் பிரதி வருடமும் சீ. ரீ. சி கொம்பனி உத்தியோகத்தர்களை வரவழைத்து வேண்டிய பயிற்சி வகுப்புக்கள் நடத்தியது. பழைய பாரம்பரியமான விவசாய முறைகளைக் கைவிட்டு புகையிலை விவசாயப் போதனாசிரியர்கள் கூறும் புத்திகளைக் கேட்டு உரிய முறைப்படி செயலாற்றினாலே தான் சிகறெற் புகையிலைச் செய்கையில் அதிக பலனைப் பெறமுடியும் - எனச் சமாசம்



அழித்த பயிற்சி வகுப்புகள் மூலம் வற்புறுத்தி வந்தது. மனையாளம் புகையிலை செய்து வந்த - விசேடமாகச் செம்மண் தோட்ட விவசாயிகள்; நிலத்திற்குப் பசளையேற்ற மாட்டுத்தொட்டில் வைத்து மூலப் பசளையாகப் பச்சைக்குழை தாராளமாகத் தாட்டுச் செய்தனர். இந்தப் பாரம்பரிய முறைப்படி சிகறெற் புகையிலை செய்தால் உலர்த்திய புகையிலை நிறைகூடும் - ஆனால் தரம் கறுப்படித்து மிகக் குறையும். பொதுவாக வயல் வெளிகளை அண்டிய மணல் செறிந்த இடங்களில் வழமைப் பரிகாரம் குறைந்த பசளையோடு செய்தவர்களே கூடுதலான லாபமீட்டினர். இதனாலேயே மேட்டுநில விவசாயிகட்கே பயிற்சி வகுப்புக்கள் கூடுதலாகத் தேவைப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் புகையிலைக்கு நாலு ரூபா இறக்குமதி வரி விதிக்கப்படுவது போல உள்ளூர் உற்பத்திக்கும் விதிக்கப்படும் வரியை ரத்துச் செய்யுமாறும் உள்ளூர் உற்பத்திக்கு ஓரளவு விலையைக் கூட்டித் தருமாறும் கேட்டு ஓரளவு நன்மையும் பெறப்பட்டது.

புகையிலை உலர்த்துதல் மேற் பார்வையாளர்களை புதிய சங்கங்கட்கு 4 வருடம் மாத்திரமே அரசாங்கம் நியமித்தது. 4 வருடம் முடிந்த சங்கங்களின் மானேசர்கட்குப் போதிய பயிற்சி சமாசம் கொடுத்துத் தாமாகவே உலர்த்த நேரிட்டது.

சிகறெற் புகையிலை தரப்படுத்தல் ஆரம்பத்தில் கொம்பனிக்குக் கண்டிக்கு அனுப்பப்பட்டு அங்கு தரம் பிரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அது திருப்தியில்லாதிருந்ததால் சமாசம் முறையிட்டு தெல்லிப்பழையில் சீ.ரீ. சி நிலையம் நிறுவப்பட்டு அங்கத்தவர் முன்னிலையில் தரம் பிரிக்கப்பட்டது. அதிலும் சில குறைபாடுகள் ஏற்பட்டமையால் நாளடைவில் சங்கங்களே தெரிவு செய்து தரப்படுத்திக் கொடுக்கும் முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. சங்கங்களும் கூடி வேலைகளும் கூடியமையால் யாழ் - 3 ம் குறுக்குத் தெருவில் 4-4-57-ல் சமாசக் காரியாலயம் திறக்கப்பட்டு தி. சுப்பிரமணியம் அவர்கள் மனேச்சராகவும் நியமனம் பெற்றார். பொதுவாக மாலை வேளைகளிலும் விடுமுறை வேளைகளிலும் பிரதான நிர்வாகிகள் காரியாலயம் செல்வதால் சங்கத்தார் உத்தியோகத்தர்கள் கொம்பனியார் இவர்கட்கு மிக வாய்ப்பாக விருந்தது.

1957-ல் பெய்த பெருமழையால் சிகறெற் புகையிலை நாற்று மேடைகள் நாசமானது. வயல் வெளியையண்டிய இடங்களில் செய்த புகையிலையும் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. யாழ் விவசாயிகள் தென்னிலங்கை விவசாயிகளிலும் பார்க்கக் கூடுதலான லாபமடைவதனை அரசாங்கமும் மாற்றாந்தாய் மனப்

பான்மையுடன் நோக்கியது. மற்றைய பொருட்களின் விலைகள் கூடி வாழ்க்கைச் செலவு கூடியமைக்கமைய சி.பு. விலையைக் கூட்டும் படி கேட்டும் சரிவரவில்லை. எனினும் யாழ் புகையிலைச் செய்கை 1968 வரையில் கூடிக் கொண்டே வந்தது. தென்னிலங் கையில் மானா வாரிச் செய்கைக்கும், ஆற்றுப் படுக்கைகளை அடுத்த நிலங்களில் செய்கைக்கும், யாழ் விவசாயி கிணறு மூலம் நீரப் பாய்ச்சிச் செய்வதற்கும் இடையில் உற்பத்திச் செலவுகளி லும் ஏற்ற - இறக்கம் காணப்பட்டது

27. 4. 69 ல் நடந்த வருடாந்தக் கூட்டத்தில்

| | | |
|---|---|---|
| தலைவர் | ஆ. சின்னத்துரை அராலி | சி.பு.ச. தலைவர் |
| உபதலைவர் | செ. பொன்னையா பச்சிலைப் பள்ளி | ,, தலைவர் |
| காரியதரிசி | க. இ. குமாரசாமி | |
| தனாதிகாரி | இ. வேலாயுதர் - கைதடி | ,, தலைவர் |

உள்ளிட்ட நிர்வாக சபை சிறு மாற்றங்களுடன் செயலாற் றியது.

இதே காலப் பகுதியில் 1969 என்ற ஏபி சமாசம் யாழ்- மலையாளம் புகையிலை செய்த தரைகளில் வெண்காயச் செய் கையை ஊக்கியது.

கால போகத்தில் ஆடி மாதத்தில் மாத்திரமே முதல் வருடங் களில் வெண்காயத்தைப் பயிரிட்டனர். பூமி நாசினி வகைகள், உரப் பாவிப்பு என்பனவற்றினால் வருடத்தில் இரண்டு போகமும் வெண் காயம் செய்யப்பட்டது. மலையாளப் புகையிலை காசுப் பயிருக்கு சிகறெற் புகையிலை மாறி அந்த இடத்தைத் வெண்காயம் பிடித் தது காலா காலத்தில் மழை காலம் தவிர்ந்த மற்றைய மாதங்க ளில் தொடர்ந்து வெண்காயச் செய்கை நடை பெற்றது வெண் காயம் பட்டடை கட்டிச் சேமித்தல், பிடி கட்டிச் சேமித்தல் முறை களும் அறிமுகப் படுத்தப் பட்டன. ஓரளவு மிளகாய்ச் செய்கை யும் கூடியக் காசுப் பயிரானது, இவற்றால் - விசேடமாகச் செம் மண் தரைகளில் சி. புகையிலைச் செய்கை படிப்படியாகக் குறைந்தது. வயல் வெளியை அண்டிய அராலி, இளவாலை, இயக்கச்சி, வரணி, பளை போன்ற இடங்களில் சி.பு. செய்கை முன்னர் போல் தொடர்ந்தும் நடந்து கொண்டே வந்தது. மேலும் காசுப் பயிராக உருளைக் கிழங்குச் செய்கையும் ஆரம்பிக்கப் பட்டு பெரு வெற்றி கண்டதும், இதனால் முதலில் செம்மண் தரைகளிலும் படிப் படியாக சிகறெற் புகையிலை செய்கை கை விடப்பட்டன கடைசியாக இச்செய்கை நடை பெற்ற அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கை ஆரம்பித்துக் கூடிய



பலன் கண்டமையால் அவ்விடமும் இச்செய்கை கை விடப்பட்டது இன்றும் குறித்த சில சிகறெற் புகையிலை செய்கையிடங்களில் போறணைகள் மொட்டைக் கோபுரங்கள் போல் காட்சியளிக் கின்றதனைப் பார்க்கக் கூடியதாகயுள்ளது.

1955 லிருந்து 1970 வரை யாழ் விவசாயிக்குக் காசுப் பயிராகக் கை கொடுத்துதவியது சிகறெற் புகையிலைச் செய் கையேயென்றும், விசேடமாக இதன் ஆரம்ப கர்த்தா தெல்லிப் பழை சி.பு.ச தலைவர் வ. சுப்பிரமணியம், கூட்டுறவுதவியா ணையாளர் வெ. நடராசா, யாழ் விவசாய உதவிப் பணிப்பாளர் சி. கனகரத்தினம், புகையிலை கிருஷிக போதனாசிரியர் சபா நாதன், கூட்டுறவுப் பரிசோதகர் பொ. கோவிந்தசாமி இவர்க ளது சேவைகளை - யாழ் பொருளாதாரம்,, வீழ்ந்திருந்த காலை யாழ் விவசாயிக்கு உர மூட்டிய சி. பு. சங்கங்களை விசேட மாக அவற்றின் சமாசப்பணியை யாழ் - விவசாயி என்றும் மறக்க முடியாது. (30.7.90)

# கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்

யாழ்ப்பாணத்தின் பிரதான குடிசைக் கைத்தொழிலாக சுருட்டுத் தொழில் நிலவியது. 1945 காலப்பகுதியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சுருட்டுத் தொழிலாளர் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் வேலை செய்து வந்துள்ளார்கள்; எனக் கணக்கிடப்பட்டது. இவ்விடம் உற்பத்தியாகும் பெரும்பகுதி சுருட்டுக்கள் பெரும்பாலும் தென்னிலங்கையிலேயே விற்பனையானது. அவ்விடமுள்ள பட்டினங்களிலும் கிராமப்புறங்களிலும் யாழ்ப்பாணத்தாரின் சுருட்டு. கிளைகாட்டுப் புகையிலை வியாபாரக் கடைகள் இருந்தன. மேலும் குறித்த கடைகளிலிருந்து எமது வாலிபர் சிலர் கோடாப் போட்ட சுருட்டுக்களைப் பெட்டிகளில் கட்டிக் கொண்டு போய் சிறு குக் கிராமங்களிலும் வழி வியாபாரம் செய்தும் வந்தனர். இக்காலப் பகுதியில் யாழ் - பொருள் வருவாய்க்கு சுருட்டு வியாபாரமும் ஒருகாலாயிருந்தது.

எமது கிராமத்தில் 200க்கு மேற்பட்ட சுருட்டுத் தொழிலாளர் அப்போதிருந்தனர். 1944 - வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினரும் முதுபெரும் கூட்டுறவாளராயிருந்தவருமான வீ. வீரசிங்கம் அவர்கள் - மானிப்பாய், ''யாழ்ப்பாணத்தில் சுருட்டுத்தொழில் வருங்காலத்தில் ஒரு வருமானத்திற்குரிய தொழிலாயிருக்க வேண்டுமானால் சுருட்டுத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஆங்காங்கே கூட்டுறவு முறையில் சங்கமமைத்து நல்ல தர சுருட்டுக்களை உற்பத்தியாக்கி விற்பனைக்கு விட வேண்டும். இன்று கண்டபடி எல்லாரும் சுருட்டு வேலைகளை ஆரம்பிக்கவும் கூடிய வருவாய் பெறுவதனையே நோக்கமாகக் கொண்டு, தரமற்ற சுருட்டுக்களைத் தயாரித்து விற்பனையாக்கும் முறையும் நீடிக்குமானால் சுருட்டின் இடத்தை சிகறெற்றும் பீடியும் கெதியில் பிடித்துவிடும்; சுருட்டு வேலை ஜீரணித்து விடும் — என அவர் எழுதிய கட்டுரையொன்று ஈழகேசரியில வெளியாகியிருந்தது. இக்கட்டுரையும் எமது கிராமத்தில் ஓர் சுருட்டுத் தொழிலாளர் சங்கமமைத்து ஆவன செய்ய உந்துசக்தியாகவிருந்தது. எமது கிராமத்தில் சுருட்டுத் தொழிற்சாலை எதுவும் பெரிய அளவில் இயங்கவுமில்லை. எமது கிராமத் தொழிலாளா காலை 8 மணிக்கு அயற்கிராமங்களிலுள்ள சுருட்டுத் தொழிற்சாலைகட்குப் போய் வேலை செய்துவிட்டு பி.ப. 6 மணி அளவில் திரும்புவது வழக்கமாயிருந்தது.



இவற்றையாராய்ந்து சுருட்டுத் தொழிலாளர் பலரும், முன்னோடிகள் சிலருமாக 100 பேர்வரை சேர்ந்து 5.1.46 சனிக்கிழமை பி.ப 7 மணியளவில் சரவணபவானந்த வித்தியாசாலையில் கூடினர். அன்று விசேடமாக வந்திருந்த வீ. வீரசிங்கம் கூட்டுறவாளர். ஆ. துரைராசசிங்கம் சு. தொழிலாளர் சங்கத் தலைவர் உள்ளிட்ட பேச்சாளர் பலரும் இது விஷயமாய்த் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தபின் ''கோப்பாயில் சுருட்டுத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும்'' - என்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

தொடர்ந்து பொ. சின்னத்தம்பி, வீ. சி. கந்தையா, செ. முத்தையா, அ. சங்கரப்பிள்ளை, M.S. இராசசிங்கம், க. இ. குமாரசாமி சுருட்டுத் தொழிலாளர் வீடுகள் தோறும் (அ. சங்கரப்பிள்ளை அவர்கள் அரிக்கன் லாம்புடன்) சென்று 110 அங்கத்தவர்கள் வரை சேர்க்கப்பட்டது. ஒரு தொழிலாளி வீட்டுக்குப் போய் அவரை அங்கத்தவராகச் சேர்ப்பதற்கு சம்பாஷித்ததைப் பக்கத்து வீட்டுக்காரன் கேட்டு ''சோதாரியிலை போவான்கள் வாறான்கள் படலையைக் கட்டடி'' என்று சொன்னதையும் கேட்டுவிட்டு அவரது வீடும் சென்று படலையை அவிழ்பித்து விஷயத்தை விளக்கி அவரையும் அங்கத்தவராகச் சேர்த்தோம். சுருட்டுத் தொழிலாளர் ஒற்றுமையாக ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் அக்காலத்திலிருந்தது. எது எப்படியிருந்த போது பங்கு பிரவேசப் பணங்கள் கட்டுவித்து அங்கத்தவர்களாக்கி 6.5.46 திங்கள் நடந்த பொதுக் கூட்டத்தில் கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் உதயமானது. அதன் நிர்வாகிகளாக

| | |
|---|---|
| தலைவர் | எம். எஸ். இராசசிங்கம் |
| காரியதரிசி | க. இ. குமாரசாமி |
| உபதலைவர் | பொ. சின்னத்தம்பி |
| தனாதிகாரி | செ. முத்தையா |

நிர்வாக சபையினர் ம. வேலுப்பிள்ளை, வ. செல்லையா
வி. கி. கந்தையா, சி. பொன்னையா
க. தம்பையா, வி. இளையதம்பி
சி. வெ. சுப்பிரமணியம் - என்போர் தெரி
வாகினர் சங்க உபவிதிகளும் ஏற்கப்படும் பதிவிற்கான பிரேரணையும் நிறைவேறியது. 9.8.46-ல் எம். எஸ். இராசசிங்கம் உத்தியோக மாற்றம் பெற்றுச் செல்ல, தொடர்ந்து க. இ. குமாரசாமி தலைவராகவும் எஸ். ஆர். இராசையா காரியதரிசியாகவும் தெரிவாகினர் தொடர்ந்து இல 1937-16.7.46-ல் சங்கம் பதிவானது

கோப்பாய் நாற்சந்தியில் இருந்த சின்னப்பா கடையை வருடம் 500/= வாடகைக்கு பொருந்தி 5.1.46-ல் ஒப்பந்தமெழுதிப் பெறப்பட்டிருந்தது. அ. சங்கரப்பிள்ளை அவர்களை மானேஜராக நியமித்து 9.7.46-ல் சுருட்டு வேலையாரம்பமானது. யாழ்- கூட்டுறவு மாகாண வங்கியில் கூட்டுறவுதவியாணையாளர் சிபார்சுடன் வேண்டிய கடனும் பெறப்பட்டது புகையிலை கொள்வனவு காரர்களாக செ. முத்தையா, வ செல்லையா சி பொன்னையா க. தம்பையா என்போர் நியமனமாகினர். 27.7.46-ல் முதன் முதல் முல்லைத்தீவுப் புகையிலை வெளியில் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து மட்டக்களப்பு, பச்சிலைப்பள்ளி உள்ளூர் சிவுகாம்பு புகையிலைகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

சின்னப்பு கடை வடக்கு வெளி விறாந்தை சுருட்டு வேலைக்கு இடம் போதாமலிருந்தமையால் 60'×20', 30'×20' அளவுள்ள இரு கொட்டில்கள் போடப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன. ஆரம்பத்தில் சுருட்டுக்குப் போடும் கோடா உரும்பராய் சுருட்டு முதலாளி தம்பையா அவர்களுடைய கோடா அடுப்பில் காய்ச்சித் தயாரிக்கப்பட்டது சுமார் இரண்டு வருடங்கட்குப் பிறகு கொழும்பு 'வாக்கேஸ் கொம்பனியில் மூன்று பெரிய கோடா சட்டிகள் வாங்கி சுருட்டுச்சங்க வளவிலேயே கோடா அடுப்புக்கள் கட்டி நீண்ட கால அனுபவமுடைய சுப்பையா என்பவரைக் கோடாத் தயாரிப்பாளராக நியமித்து சிறந்த வகையான கோடாத் தயாரிக்கப்பட்டது. கோடாத் தயாரித்தல் என்பது ஓர் தனிக்கலை. எமது சங்கத்தில் நல்லரகப்புகையிலைகளைக் கொண்டு உற்பத்திகள் தயாரிக்கப்



பட்டமையாலும், சிறந்த கோடாப் பூசப்பட்டமையாலும் உள்ளூரிலும் வெளியூரிலும் மானமாக விற்கப்பட்டன. 'ஓடர்'களுக்கு சுருட்டு முழுவதாக ஒரே முறையில் பெட்டிகளிலடுக்கி அனுப்ப முடியாத கிராக்கியும் ஏற்பட்டன. பின்வரும் நான்கு இனச்சுருட்டுக்கள் மட்டக்களப்பு பச்சிலைப் பள்ளி உள்ளூர் சிவுகாம்பு புகையிலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டன;

| இனம் | நிறை | விலை |
|---|---|---|
| ஐக்கிய சோதி | 14 | 32/= |
| ஐக்கிய சுடர் | 18 | 18/= |

இவையிரண்டும் உள்ளூர் சந்தைகளிலும் கொழும்பிலும் நன்கு விற்பனையாகின.

மேற்குறித்த புகையிலைகளோடு கண்டிப் புகையிலையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட;

| | | |
|---|---|---|
| ஐக்கிய லங்கா — பெரிது | 16 | 30/= |
| ஐக்கிய லங்கா — சிறிது | 18 | 26/= |

விலையுடையனவாயிருந்தன. இவற்றைக் கண்டி முதலிய சிங்கள நாட்டு வியாபாரிகள் விரும்பி வாங்கிச் சந்தைப்படுத்தினர்.

சுருட்டுத் தொழிலாளர் ஒற்றுமையாக ஒரு சங்கத்தை நடத்த மாட்டார்கள் - என்பது பொய்பிக்கப்பட்டு பல வருடங்கள் சிறந்த வகையில் நடைபெற்று கூட்டுறவாளர்களதும் திணைக்களத் தலைவர்களதும் பாராட்டையும் பெற்றது.

மேலும் 1946 கால கட்டத்திலிருந்து யாழ்ப்பாணம் என்டி ஏபிசி சமாசம் சிறப்பாகவும் முன்னோடியாகவும் நடைபெற்றது. நாங்கள் சுருட்டுத் தொழில் பிரசாரத்துக்கு அவர்கள் உதவியை நாடினோம். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்துக்கு உலர்த்திய கிளை காட்டு - தீன் புகையிலையும் சுருட்டுமே தென்னிலங்கையில் கிராமப் புறங்களிலுமுள்ள தமிழர் கடைகள் தோறும் விற்கப்பட்டு பெரும் உதவி செய்தன. மேலும் எமது சங்கம் ஆரம்ப நிலையிலுள்ள ஒரு சங்கமாதலால் எமது சங்கத்துக்கு உதவி செய்ய சமாசம் முன் வந்தது கூட்டுறவுப் பகுதியிலிருந்தவர்களும் எமது கோரிக்கையைச் சிபார்சு செய்தனர். சமாசம் எமது விண்ணப்பத்தையேற்று ஆவன செய்ய முன் வந்தது. 5.6.47 ஞாயிறு காலை சமாச மானேசராயிருந்த V.R முருகேசு (ஏழாலை) கோப்பாய் வட்டாரப் பரிசோதகர் நெ. தாமோ

தர்மபிள்ளை (வவுனியா) சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர்
க. இ. குமாரசாமி மூவரும் சமாசவாகனத்தில் புறப்பட்டு முதலில்
அநுராதபுரி திரு. கல்கொட AR அவர்களிடம் அறிமுகக்கடிதம்
பெற்றுக் கொண்டு அநுராதபுரி கூட்டுறவுச் சமாசம் சென்று அறி
முகக் கடிதம் கொடுத்து கலந்து பேசி முதல் ஓடர் பெற்றோம்.
அவ்விட விற்பனை இலாகாவிடமும் சென்று வேண்டிய ஒழுங்கு
கள் செய்யப்பட்டன. தொடர்ந்து 9.7.46 வியாழன் திரு. வீரமன்
CCD அவரிடம் சென்று அறிமுகக்கடிதம் பெற்று வம்பன்பிட்
டியா, கடுகஸ்தோட்டை. கல்கெதற கூட்டுறவுச் சங்கங்கள்
சென்று வேண்டிய ஓடர்கள் பெற்றோம். தொடர்ந்து குருநாகல்
அலுவிகார AR இடம் சென்று கடிதம் பெற்று வாரியப்பொல
பொல்காவலை, நாத்தாண்டியா, தண்டகமுவா சமாசங்களுக்கும்
சென்று விற்பனை ஒழுங்குகள் செய்யப்பட்டன.

குறித்த சமாச இடங்கட்குப் போகும் போது ஆங்காங்கே
உள்ள தமிழர் கடைகளிலும் விற்பனை யொழுங்குகள் செய்தோம்.
வவுனியா அப்துல்லா, நவீயளத்தென்ன சிவ சந்திரசேகரம்
மலே வீதி ஐயாத்துரை ஸ்ரோர்ஸ். நோறிஸ் றோட் லீலா
ஸ்ரோர்ஸ் எனும் இடங்களிலும் மாதிரிச் சுருட்டுக்கள் கொடுத்து
விற்பனை ஒழுங்குகள் செய்யப்பட்டன. இந்தப் பிரயாணத்தால்
என் டி ஏ பி.சி.சமாசம் எமது சங்கத்திற்குச் செய்த பேருதவி மறக்க
முடியாதொன்று. திரும்பியதும் படிப்படியாகச் சுருட்டுப் பெட்டி
கள் அனுப்பப்பட்டன. உரிய பணங்களும் ஒழுங்காகக் கிடைத்தன.
கூட்டுறவுச் சங்கங்கள் சுருட்டு விற்பனையில் அதற்குரிய மாதிரி
யாகக் கோடா பூசி விற்கும் அனுபவமில்லாமையால் பீடிகளை
விற்பது போலவே எமது சுருட்டுக்களையும் போத்தல்களில் போட்டு
விற்பதனால் வியாபாரம் சிறக்கவில்லை. பல சமாசங்கள் மீண்டும்
ஓடர் தரவில்லை: சில சமாசங்களும் தமிழர் கடைகளும் தொடர்ந்து
சுருட்டுக்கு ஓடர் தந்த வண்ணமிருந்தன. சங்கத்தால் ஓடர்களுக்கு
சுருட்டுச் கொடுக்க முடியாத நிலைமையேற்பட்டது. கூட்டுறவு
மாகாண வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்கள் பிரதி வருடமும்
புதுப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமுமிருந்தது. சுருட்டு வேலைக்கான
முதலீடு இல்லாத கஷ்டம் நிலவியது. ஆகையால்;

| | |
|---|---|
| புகையிலை இருப்பு வைப்பதற்கு | 65000/- |
| கட்டிடத்துக்கு | 20000/- |
| வியாபாரத்துக்கு | 15000/- |

ஒரு லட்சம் கடன் பெறுவதற்கு கைத்தொழில் இலாகாவிற்கு விண்
ணப்பித்தோம் திருவாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில்
இலாகா மந்திரியாயிருந்தாலும், எமது சங்கம் சிறுகைத்தொழில்



பகுதியிலிருந்து கைத்தொழிற்பகுதிக்கு மாற்றப்பட்டாலும் ரூபா
50000/= கடனாகப் பெறக்கூடிய லேசான வாய்ப்பு ஏற்பட்டது
இதனால் அகலக்கால் வைத்து அவலப்பட்ட நிலை ஓரளவு தணிந்
தது. கட்டிடத்துக்கான காணி பெறும் ஒழுங்கு செய்யப்பட்டது
உரிய கடன் தருவதாகவும் வாக்களிக்கப்பட்டது சுருட்டுச் சங்கக்
கொட்டில் போதாமையால் கட்டடவிறாந்தையிலுமிருந்து 80ற்கு
மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்கள் உதவிக்கு பழகும் சிறுவர்
களும் அமர்ந்தது வேலை செய்வதனை, கூட்டுறவும்பகுதியாரும்
யாழ் கூட்டுறவியக்கத்தைப் பார்வையிட வரும் வெளிநாட்டு அன்
பர்களும் பார்த்துப் பாராட்டு தெரிவித்ததோடு சம்பவத் திரட்
டுப் புத்தகத்திலும் எழுதியிருந்தனர்,

சங்கத்துக்கான நிலையான ஒருகட்டிடமமைக்க திருவா
ளர்கள் வே. சீனிவாசகம், க. வைத்திலிங்கம், மு.தெய்வானை,
மு. சின்னப்பிள்ளை என்போர் மனமுவந்து 3 பரப்பு 12 குழி
காணியை நன்கொடையளித்தனர் கட்டிடக்கடனுக்கு உரிய
வரைபடம், மதிப்பீடு என்பனவற்றுடன் விண்ணப்பித்தோம் உங்கள்
சங்கம் வியாபார ஸ்தலமாயிருப்பதனால் வீதியோரமாகக் காணி
தேடிக்கட்டுவது நல்லது - என கைத்தொழிற் பகுதி நிரந்தரக் காரிய
தரிசி திரு அழகரத்தினம் அவர்கள் யாழ் வந்தபோது நிலத்தைப்
பார்வையிட்டுச் சொன்னதனை ஏற்றோம் குறித்த 3 பரப்பு 12 குழி
கோப்பாய்வடக்கு விவசாயிகள் சங்கத்திற்குப் பக்கத்தேயிருந்தமை
யால் அதனை மதிப்பீட்டு விலைக்கு விவசாயிகள் சங்கத்துக்கு
விற்று விட்டு தற்போது கிராம வங்கியமைந்திருக்கும் காணி
யோடு சேர்த்து 3 பரப்பு வாங்கப்பட்டது உரிய முறைப்படி மீள
வும் கட்டிடக் கடனுக்கு விண்ணப்பித்தோம் அரசியற் சூழ் நிலை
மைகள் மாறியமையால் கட்டிடக்கடன் பெறுவதில் சிரமமுண்டா
னது எமது முயற்சி பகீரதப்பிரயத்தனத்தின் போதும் கைகூட
வில்லை எமது காணிகள் மேற்குப் புறமாக ஒன்றரைப்பரப்பை
பல நோக்கச் சங்கத்திற்கு விற்றோம் அப்பகுதியிலேயே பல
நோக்கக் கூ, சங்கத்தால குறித்த கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது
மிகுதிக்காணி கிழக்குப் புறமாக சங்கத்தின் பெயரிலிருந்தது.

வெளி நாடுகளிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் யாழ்
கூட்டுறவியக்கத்தைப் பார்க்க வருபவர்கள் மூளாய் கூட்டுறவாஸ்
பத்திரியையும் அதன் ஸ்தாபகர் முகாந்திரம் கிருஷ்ணரையும், நீர்
வேலி காமாட்சியம்மாள் கைத்தொழிற்சாலையையும் அதன் முன்
னோடி ஸ்தாபக அங்கத்தவர் தர்மலிங்கம் அவர்களையும் கோப்பாய்
ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தையும் கூட்டுறவுத் திணைக்
களத்தாருடன் வந்து தரிசித்தே செல்லும் வழக்கம் நிலவியது
வெளிநாட்டார் பல கோணங்களிலிருந்தும் படம் பிடித்தும் சம்ப

வத்திரட்டுப் புத்தகத்தில் பாராட்டி எழுதியுள் செல்வர்' இத்தொழிற்சாலையாரம்பித்தது கோப்பாய் சுருட்டுத் தொழிலாளருக்கு ஓர் வரப்பிரசாதமாகவும், கூட்டுறவியக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்கியது.

1957 ஜூனில் வகுப்புக் கலவரம். அரசாங்கம் பின்னாலிருந்து தூபமிட்டது முதல் அடித்து நொருக்கி உடைத்து எரியூட்டி கொள்ளையடித்து கொலைகளும் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தாரது தென்னிலங்கைக் கடைகளே-யாழ்ப்பாணத்தாரது பொருளாதாரத்தை நசுக்க - கொள்ளையிட்ட முதலாவது சதிவேலையாக அமைந்தது. இக்காலகட்டத்தில் கொழும்பு நாலாம் குறுக்குத்தெருவில் சங்கம் நடத்திய பெட்டிச் சுருட்டுக் கடையும் நிர்மூலமாக்கப்பட்டது. தென்னிலங்கை சுருட்டு வியாபாரம் முற்றாக நின்றது. உயிர் தப்பியோர் அகதிகளாக ஓடி வந்தனர் கப்பல்களிலும் புகையிரத மூலமும் இனிமேல் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒட்டி வாழும் நிலை சரிவராதென 1957-58 வகுப்புக் கலவரத்தால் முளை கொண்டெழும்பச் செய்தது.

1945 வரையில் இலங்கையில் தமிழர் - சிங்களவர் சாதி வேற்றுமை சிறிதுமின்றி ஒற்றுமையாக வாழ்ந்தனர். தமிழர் கொழும்பு நகரத்தில் நாட்டின் கிராமப் புறங்கள் பலவற்றிலும் வியாபார நிலையங்கள் சுருட்டு புகையிலைக்கடைகள் சாப்பாட்டுக்கடைகள் பலவும் நடத்தி வந்தனர். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பிரதான கடை வீதிகள் சந்தைகள் உள்ள இடங்களில் பாண் தொழிற்சாலைகள் பலவும் சிங்கள முதலாளிமாரால் நடத்தப்பட்டன. பெரியதனவந்தர், உத்தியோகத்தர்கட்கு சிங்களவர்களே நம்பிக்கையான கார்ச் சாரதிகளாக இருந்தனர். பலர் தூதிகளாகவுமிருந்தனர் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் உயர்தர வகுப்புக்களில் கற்ற பல சிங்கள மாணவர் பிற்காலத்தில் உயர் உத்தியோகங்களிலும் இருந்தனர். மந்திரி பதவிகளும் வகித்தவர்கள் பலருமுண்டு யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழி மூலம் நடை பெற்ற மகா வித்தியாலத்தில் பல தமிழ்ப்பிள்ளைகளும் உயர்தர வகுப்பு வரை கற்றனர். நகரத்தின் மத்தியில் நடை பெற்ற விகாரையில் தமிழர்களும் சென்று வழிபட்டனர். இந்த அன்னியோன்னிய நட்பு நிலை 1958 வகுப்புக் கலவரத்தால் தொலைந்தது.

1957-58 வகுப்புக் கலவரத்தின் போது எமது நாலாங் குறுக்குத்தெரு மனேசர் நாகநாதர் இரத்தினம் உட்படப் பலர் புகையிரத மூலம் வந்து நாவற்குழியில் இறங்கி கால் நடையாக வந்தனர். நடந்த விபரம் முழுவதும் கூறினார்கள். சற்று நேரத்தில் தெற்கு நோக்கி பாக்கியவாசம் வீடு சென்றதறிந்தோம். அவ்வீ



ட்டிலிருந்த சிங்களத் தாதியம்மா இப்பகுதி மக்களின் அன்புக்குரியவராகச் சேவையாற்றி விசேடமாகப் பெண்களின் நன்மதிப்புடன் வாழ்ந்தார். மகப்பேறு விஷயத்தில் கைவந்த அனுபவமுடைய தாதியம்மா சாதியால் சிங்களவராயும் சமயத்தால் சிறந்த சைவபத்தை. நல்லூர் சன்னதி பஜனைக் கோஷ்டிகளுடன் சேர்ந்து தாளம் போட்டு பாடுவார். இந்த அம்மா அந்த நேரம் வீட்டில் நின்றால் - என்றும் நினைக்கவே பயங்கரமாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் மிகுதியாயிருந்த சிங்கள மக்கள் அனைவரையும் அரச அதிபர் திரு. ம.ஸ்ரீகாந்தா அவர்கள் முதல் நாளே வாகனங்களில் ஏற்றி கச்சேரியில் வைத்திருந்து பத்திரமாக தென்னிலங்கையனுப்பியது பின்னால்தான் தெரிய வந்தது. யாழ்ப்பாணத்தின் பண்பாடு காப்பாற்றப்பட்டது

பின்னால் தொழிலாளர்கட்கு இயலுமான வரை வேலை வாய்ப்பளிக்க மாதத்தில் குறைந்தளவு நாட்களே வேலை நடந்தது. உள்ளூர் விற்பனை சுமாராக நடை பெற்றது. பீடித்தொழிலை ஆரம்பிக்க சிறுகைத்தொழில் இலாகாவிற்கு விண்ணப்பித்தோம். யாழ்ப்பாணத்தில் பீடித்தொழிலை ஆரம்பித்து மேலும் பீடித்தொழிலாளர் வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்க வேண்டாம் என 31-12.59-ல்பதில் கிடைத்தது. பின் பொருளாதார அபிவிருத்திச் சங்கத்திற்கு விண்ணப்பித்தோம். வடமாகாண அதிபர் எமது விண்ணப்பத்தைச் சிபார்சு செய்தனுப்பியிருந்தும் பதிலில்லை. எனவே சுருட்டுச்சங்க நிதியிலிருந்து ரூபா 2500/= எடுத்து பீடித்தொழிலை சிறு அளவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. வலிகிழக்குக் காரியாதிகாரி எஸ். ஸ்ரீநிவாசன் அவர்கள் பேருதவியால் எஸ். நடேசன் என்ற பீடிமாஸ்ரரைப் பெற்றோம். பீடியைப் பல முறை பதிவு செய்வதற்கு அனுப்பிய போதெல்லாம் சாட்டுக்காரணங்கள் சொல்லி ஒவ்வொரு முறையும் திருப்பியனுப்பப்பட்டன. லேபல் அடிக்க முடியாத நிலையில் உற்பத்தி செய்த பீடியை விற்க முடியாத நிலையேற்பட்டது. மிகுபிரயாசையின் பேரில் P கந்தையா எம்.பி. அவர்கள் பேருதவியுடன் இல. 19031-ல் ஜெமினி பீடி பதிவு செய்யப்பட்டது உடன் லேபல் அடித்து விற்பனைக்கு விடப்பட்ட போது முற்றாகக் கெதியில் விலைப்பட்டது பீடியிலைக் கோட்டாவும் உரிய முறைப்படி கிடைத்தது. பீடி சுற்றுவதில் கூடியளவு பெண்பிள்ளைகளே வேலை செய்தனர். பீடி வேலை 1974 வரை தொடர்ந்து நன்கு நடை பெற்றது சந்தியிலிருந்த தொழிற்சாலையிடம் பல நோக்கக் கூ.சங்கத்தின் கட்டிடத்தின் மேல் மாடிக்கு மாற்றப்பட்டது. இதனை விட யாழ்-மலையாளப் புகையிலைச் சங்கத்தார் கோடாப் போடாத மணிலாச் சுருட்டு வேலை பழகிய சி.பழனித்துரை என்பவரை எமக்குத் தந்துதவினர். அவருதவியுடன்

தயாரிக்கப்பட்ட மணிலாச் சுருட்டுக்கள் விற்பனையாகின. அக்கால் யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. பங்கர் அவர்கள் எமது சுருட்டுக்களைப் பாவித்து 'யான் இவ்விதமாக சுருட்டுக்களை வருடக் கணக்கில் தேடினேன்' எனப் பாராட்டியும் எழுதியுமிருந்தார். இச் சுருட்டுக்கள் அவர் உதவியுடன் பார்சல் மூலம் அமெரிக்காவுக்கும் அனுப்பப்பட்டன.

1957-58 வகுப்புக் கலவரத்தால் ஏற்பட்ட பெருமுதல் நஷ்டம், கடன் வருமதியான பல ஏஜன்சி கடைகளும் அழிக்கப்பட்டன. மேலும் தொடர்ந்து காலத்திற்குக் காலம் நடந்த கலகங்கள் அரசியல் சூறாவளிகள் பீடி சிகரெற் பாவிப்புக்கள் வர வரக் கூடியமை, கொள்ளையடிப்புக்களுக்கு நிவாரணம் பெற அனுப்பிய மனுக்கட்கு பதிலே கிடையாமை என்பனவற்றால் 1973-ற்கு மேல் சங்கத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையேற்பட்டது. 1970-ல் கூ.ப சங்கம் புனரமைக்கப்பட்டு வலிகிழக்கு தெ ப.ப நோ. கூ. சங்கமாக மாறியது. எமது பீடிக் கொட்டாவை ப நோ. கூ. சங்கம் கையேற்று 1973 வரை பீடி வேலையைத் தொடர்ந்து நடத்தியது.

1946—1970 வரை எமது சங்கப் பிரதான நிர்வாகிகள்

| | தலைவர் | காரியதரிசி | தனாதிகாரி | மானேசர் |
|---|---|---|---|---|
| 5.1.46 | M.S.இராசிங்கம் | க.இ.குமாரசாமி | S R.இராசையா | அ.சங்கரப்பிள்ளை |
| 17.8.46 | க.இ. குமாரசாமி | S.R.இராசையா | R,S.இராசையா | அ.சங்கரப்பிள்ளை |
| 30.7.48 | க.இ.குமாரசாமி | M.S.இராசிங்கம் | க. முருகேசு, | ,, |
| 10.3.51 | க.இ. குமாரசாமி | சி.பொன்னையா | — | வே. கனகசபை |
| 17.3.52 | க.இ. குமாரசாமி | வீ.சி.கந்தையா | — | வே. கனகசபை |
| 1.11.54 | க.இ. குமாரசாமி | ந. கனகசபை | — | வே. கனகசபை |
| 24 10.59 | M.S.இராசசிங்கம் | J.S ஆனந்தம் | — | வே, கனகசபை |
| 24.10.65 | செ. முத்தையா | சி.பொன்னையா | — | வே, கனகசபை |
| 28.5.73 | அ.சங்கரப்பிள்ளை | சி.பொன்னையா | — | வே,கனகசபை |



விகிதர்களாக ஆரம்பத்திலிருந்து நா. செல்லையா (துன்னாலை) அவர்களும் 1960 லிருந்து சி,வல்லிபுரம் (சுன்னாகம்) அவர்களும் சேவையாற்றினர்.

எமது சங்கம் செயலற்ற நிலை தொடர்ந்திருந்தால் பதிவழிக்கப்பட்டு சங்கத்தின் காணி விற்பனையாகி C.C.D, நிதியோடு சேர்க்கப்பட்டு விடும் எனக் கருதப்பட்டது. இதனால் பங்கு சேமம் என்பனவும் பெறமுடியாத நிலையேற்படும். ஆகையால் பெரியார்களின் ஆலோசனையுடன் 20.10.85-ல் சரவணபவானந்த வித்தியாசாலையில் கூடிய பொதுக் கூட்டத்திற்கு காலஞ் சென்றோரின் பின்னுருத்தாளரும் இடம் பெயர்ந்து போனவர்களை விட எஞ்சிய சங்கத்தவர்களும் சமுகமளித்திருந்தனர்: கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தர்களும் விசேட அழைப்பின் பேரில் சமுகமளித்திருந்தனர். கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர் மாற்றப்பட்டு முறைப்படி தெரிவு நடந்து தற்போது நடைபெற்று வருகிறது.

தலைவர் க இ. குமாரசாமி உபதலைவர் இ, இராசத்தினம், காரியதரிசி பொ. சுப்பிரமணியம் தனாதிகாரி கா. திருச்செல்வம் உபகாரியதரிசி த. சிவஞானம் உட்பட எழுபேர் கொண்ட நிர்வாக சபை செயலாற்றத் தொடங்கியது. குறித்த சுருட்டுச் சங்கக் காணி, ப நோ. கூ. சங்கத்திற்கு ரூபா 75 ஆயிரம் விலைக்கு விற்கப்பட்டு புதிய நிர்வாக சபை 1993-ல் தெரிவாகி;

ஐ. சிவலோகநாதன் தலைவர் இ. இராசத்தினம் உபதலைவர் பொ. சுப்பிரமணியம காரியதரிசி எஸ். கந்தப்பிள்ளை தனாதிகாரி உட்பட்ட எழுபேர் கொண்ட நிர்வாகசபை செயலாற்றுகிறது. அங்கத்தவர்க்குரிய பங்குகள் அவரவர் பெயரில் பதியப்பட்டு கிராமவங்கியில் மிகுதிப் பணம் இடப்பட்டிருக்கிறது. காலஞ் சென்றவர்களதும் வயோதிபர்களதும் பங்கு சேமங்கள் உரியவர்களுக்குக் கொடுக்கவும் தீர்மானமாயாகியது. (10.5.94)

# யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

இலங்கையில் 1911ம் ஆண்டளவில் கூட்டுறவியக்கம் ஆரம்பமானது பலமாகாணங்களிலும் ஐக்கிய நாணயசங்கங்கள் ஸ்தாபிதமாகின. இச்சங்கங்கட்கு அரசாங்கம் உள்ளூர் காணி அபிவிருத்தி நிதியிலிருந்து 5% வட்டிக்குக் கடன் கொடுத்தது. அங்கத்தவர்கட்குக்கொடுத்து 7% வட்டி அறவிடப்பட்டது. இந்தக் கடன் கொடுக்கும் முறையும் அறவிடும் முறையும் திருப்திகரமற்றிருந்தன. அக்கால கட்டத்தில் 1928ம் ஆண்டு கூட்டுறவுப் பரிசோதகராயிருந்த RCS குக் அவர்கள் கூட்டுறவுக்கலை பயிற்சி பெற தென்னிந்தியா சென்று திரும்பினார். அங்கே ஒவ்வொரு ஜில்லா தோறும் கூட்டுறவு வங்கிகள் இருப்பதனை அவதானித்தவர் யாழ்ப்பாணத்திலும் அப்படியானதொருவங்கியை உண்டாக்க வேண்டுமென உற்சாக மூட்டினார். அதுகாலை சிங்கப்பூரிலிருந்து உயர்ந்த உத்தியோகம் வகித்து இளைப்பாறி தாயகம் வந்த கேற் முதலியார் வி. பொன்னம்பலம் அவர்கள் தமது தாயகமாகிய உரும்பிராயில் ஓர் ஐக்கிய நாணய சங்கத்தை நிறுவித் திறம்பட நடத்தினார். அவர் தமது மோட்டார் வண்டியில் கொழும்பு செல்லும் போது, வழியில் கொழும்புக்கு புகை வண்டியில் செல்ல கைப்பெட்டியுடன் சென்ற RCS குக் அவர்களைக்கண்ட போது விபரம் விசாரித்து வலிந்தழைத்து தமது காரில் அழைத்துச் சென்றார், அப்போது இருவரிடையேயும்



நடந்த கருத்துப்பரிமாறல்களால்த்தான் யாழ்ப்பாணத்திலும் அப்படியானதொரு வங்கியமைக்கும் நோக்கம் கருக்கொண்டது. அக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் பிரதிவருடமும் ஆடிமாதத்தில் கூட்டுறவு மகாநாடுகூடி கூட்டுறவியக்கம் சம்பந்தமான பல்வேறு விஷயங்களைக்கலந்து பேசியும் தீர்மானங்கள் நிறைவேற்றியும் வந்தன. இந்த வகையில் 1928 ஜூலையில் யாழ்ப்பாணம் றீகல் படமண்டபத்தில் நடந்த கூட்டுவுவாளர் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு அமைவாக 27-4-29ல் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி ஸ்தாபிதமானது: தொடர்ந்து கூட்டுறவுச்சங்கங்கங்கள் பொதுஸ்தாபனங்கள் முன்னோடிகளான பெரியார்கள் பலர் இவ்வங்கியில் பங்குசேமம் இட்டனர். யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் அதிபராயிருந்த இளைப்பாறிய முகாந்திரம் என். முத்தையா அவர்கள் முதல் மனேசராக நியமனம் பெற்றார் திரு: முத்தையா அவர்கள் அக்காலத்தில் யாழ் காட்டுகந்தோருக்கு முன்னாலிருந்த தமதுவீட்டின் முன்பக்கத்தில் இரண்டு, அறைகளைக்கட்டி ரூபா 5000/= காசாய்பிணையும் கட்டி முகாமையாளராகப் பதவியேற்று வங்கியை நடத்தினார். அக்காலத்தில் கூட்டுறவுப்பதிவாளாயிருந்த சீ, இரகுநாதன் அவர்களும் இளம் பரிசோதகர்களான F. A. சந்திரசேகரா, R. C.. செல்வரசுந் இவர்களது தீவிர பிரசாரங்களும் வங்கிக்குப் போதியளவு சேமப்பணங்கள் கிடைக்கச் செய்தன, மேலும் அப்போதிருந்த அமெரிக்கன் மிஷனறிமார் இவ்வங்கியுடன் பெருந்தொடர்பு கொண்டு பலவிதமாயுமுதவினர் ஆரம்பத்தில் இதன்தலைவராக 4. A. உவாட் ஐயர் அவர்களும் உபதலைவர்களாக கேற்முதலியார் வி. பொன்னம்பலம் எஸ். சோமசுந்தரம் என்போரும் கௌரவகாரியதரிசியாக எஸ், சுப்பிரமணியம் அவர்களும் மேலும் மானேசிங் டிறெக்ராக அதிகர் நாகநாதன் அவர்களும் மேலும் A. E. கிளவ், D. C. அங்கிள்ற்றன், N. A. சுப்பையா, S. K. இராசசிங்கம் என்போர் கொண்ட நிர்வாகசபையினரும் சேவையாற்றினர். தினமும் பணம் அக்காலக் கச்சேரிச்சிறாப்பராயிருந்த விசுவலிங்கம் அவர்களது பொறுப்பில் கச்சேரியில் பாதுகாக்கப்பட்டு வந்தமை மக்களுக்கு வங்கியில் பெருநம்பிக்கையை ஊட்டியது, போதியளவு பணம் வங்கிக்கு வருமோ என்று ஆரம்பத்தில் ஐயப்பட்டமை நீங்கி திருமண ஒழுங்குகள் நிறைவேறும் போது வங்கிப் பத்திரங்களையே சீதனத்திற்கு அடைமானமாகக் கொடுக்கும் அளவுக்கு நம்பிக்கை வளர்ந்தது. கல்லூரி நிதிகள் சீதனப்பணங்களும் வங்கியில் சேமிக்கப்பட்டன

திரு: வி. பொன்னம்பலம் அவர்களும் கிளவ் அவர்களும் தமது செல்வாக்கை உபயோகித்து மலாயாவிலிருந்தும் பெருந்தொகை யான பணத்தைப் பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கையில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வங்கி படிப் படியாக வளர்ந்து வந்தது. முகாந்திரம் முத்தையாவுக்குப்பின் 1937ல் வங்காளநாட்டில் கணக்குத்துறையில் உத்தியோகத்த ராயிருந்து இளைப்பாறிய ஓாயி சுப்பிரமணியம் அவர்களும் 1950 அளவில் உடுவில் J. S. அரியரத்தினம் அவர்களும் 1965 லிருந்து இறுதிவரை திருநெல்வேலி D. செல்லக்கண்டு அவர்களும் முகாமையாளர்களாகக் கண்ணியமான வகையில், சேவையாற் றியமையும் வண்ணார்பண்ணை வெ. சுந்தரராசன் அவர்கள் பல வருடங்கள் கணக்காளராயிருந்து கூட்டுறவுத்திணைக்களம், வாடிக்கையாளர்களதும் பாராட்டைப்பெறச் சேவையாற்றிய தும் வங்கியின் வளர்ச்சிக்கும் பேருதவியாயிருந்தன.

1942ம் ஆண்டில் இலங்கையில் யப்பான் குண்டு விழுந்த போது தமதுகட்டிய பணங்களை அவசர அவசரமாக மற்றைய வங்கிகளிலிருந்து எடுத்தபோதிலும் எமது கூட்டுறவு வங்கியில் கட்டிய தமது சேமங்களை எடுக்காமல் விட்டது மாத்திரமல்ல. மேலும் பெருந்தொகையான பணங்களை இவ்வங்கியில் சேமித்த பெருமையுமுண்டு. 1946ல் தேவைநோக்கி இவ்வங்கியின் எல் லைப்பரப்பு மன்னார் முல்லைத்தீவு வரை விஸ்தரிக்கப்பட்டது. சகல கூட்டுறவுச்சங்கங்கள் யுத்தகாலத் தேவையொட்டித்தோன் றிய பண்டகசாலைகள், போக்குவரத்துச்சங்கங்கள், மூளாய் வைத்தியசாலை, மலையாளம் புகையிலை, வியாபாரச்சங்கம், கிராமவங்கிகள் கல்லுண்டாய் உப்பளம் போன்ற சகலகூட்டுறவு ஸ்தாபனங்கட்கும் இவ்வங்கியே போதிய கடனுதவிகளைச் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் 31 தனியங் கத்தவர்களையும் 104 சங்கங்களையும் உடையதாயிருந்த இவ் வங்கி 1970ல் தனியங்கத்தவர் தொகை 14 ஆகக்குறைய சங் கங்களின் எண்ணிக்கை 1270 ஆகக்கூடிவளர்ந்தது.

1954ல் எமதுவங்கி வெள்ளிவிழாவைச் சிறப்பானவகையில் கொண்டாடி அழகான ஓர்வெள்ளிவிழா மலரும் வெளியிட்டது. இதில் வங்கியின் வளர்ச்சிபற்றி விபரமாக அறியக்கூடியதாயுள் ளது.



எமது வங்கியின் வளர்ச்சிபற்றி 1968ல் வெளியீட்டில்

| | 1954 | 1967 |
|---|---|---|
| பங்கு | 108720/= | 240900/= |
| அடக்கப்பணம் | 328419/= | 663564/= |
| சேமம் | 5704137/= | 7657386/= |
| மொத்த கொடுக்கல் வாங்கல் | 57912972/= | 235993027/= |

காணப்பட்டது.

"பலகாலமாக ஐக்கிய இயக்கத்தில் ஈடுபட்டு அதில் ஆர்வ முடைய யான் வடமாகாணத்தின் நண்பர்களே இந்த இயக்கத் தில் முன்மாதிரிகாட்டி வளர்த்தவர்கள் என்பதனைக் கண் டேன். இந்தவங்கியின் அதிகாரசபையினர் சென்ற 25 வருட காலமாகச் செய்த சேவைக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட் டுள்ளேன்" — என மகாதேசாதிபதி சேர் ஒ இ. குணதிலகா அவர்களும்;

"இலங்கையின் கூட்டுறவுச்சேவைக்கு யாழ்ப்பாணமே முன் னணியில் நிற்கிறது இது இலங்கையின் முதல் வங்கியாக 25 வருடங்கட்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வங்கி இன்று வளர்ந்து 5 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பங்குப்பணமும் அடக்கப்பண மும் பெற்றிருப்பதறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்" — என்று இலங்கையின் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களும்;

மற்றும் பெரியார்களின் வாழ்த்துரைகளும் கட்டுரைகளும் முன்னோடிகளின் படங்களும் பெயரட்டவணைகளும் குறித்த 2.10.54 வெள்ளிவிழா மலரில் பார்க்கக்காணலாம்

இலங்கையில் தொடங்கிய யாழ்ப் பாணம், கண்டி கொழும்பு மட்டக்களப்பு, அனுராதபுரி, குருநாகல், ஊவா, காலி, சப்ர கமுவா முதலிய கூட்டுறவு வங்கிகட்கெல்லாம் எமது யாழ்வங் கியே முதன்மைபெற்று ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியதும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வடக்குநோக்கி வருபவர்கள் பலரதும் பாராட்டுப் பெற்றிருப்பதும் எமது வங்கியேயென்பது குறித்த மலரில் வெளியாகியுள்ள கட்டுரைகள் செய்திகள் வாழ்த் துக்களிலிருந்து மேலும் அறியக்கூடியதாயுள்ளது.

வங்கி தமது சேவையை விஸ்தரிக்கும் நோக்கமாக, பரந்தனிலும் மேற்கொண்டு சுன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, புத்தூர், சங்கானை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் கிளைகளை நடத்தியது.

சென்னையிலிருப்பது போன்ற ''சுப்பர்மாக்கற்'' யாழ்ப்பாணத்தில் நிறுவும் யோசனை பேராசிரியர் நேசையா அவர்களால் முன்வைக்கப்பட்டது. உபசபை தெரிவுசெய்து ஆராய்ந்து அவர் தீர்மானம் சிபார்சு செய்யப்பட்டு பொதுச்சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டது சுன்னாகம் சந்தைக்கு கிழக்குப் புறமாயுள்ள செட்டியாரது காணியை வாங்க 3.7,69ல் உபசபையினர் பார்வையிட்டு 18.7·69 காரியாதிகாரி மதிப்பீட்டுக்கு அனுப்பப்பட்டது. செட்டியாருடன் தொடர்பு கொண்டு உரிய காணி வாங்க முடியாது. 28.7.69 மதிப்பீட்டின்படி காணியை வாங்க பொதுச்சபை 48/16 வாக்குகளால் தீர்மானமாகியது. இந்தச்சமையத்தில் மக்கள்வங்கி எமது வங்கியை எடுப்பதற்கு முனைவதாக அறிந்தோம். மக்கள்வங்கி போன்ற வர்த்தக வங்கிகள் ஆதாயம் பெறுவதனையே நோக்கமாகக் கொண்டியங்குவன. எமதுவங்கி கூட்டுறவுச் சேவையே பிரதானமாகக் கொண்டு நடப்பது. ஒருசங்கம் தனக்குத்தேவையான கடனைக் பெறத்தீர்மானித்து கூட்டுறவுதவியாணையாளர் சிபார்சுடன் பெறுவதே வழக்கம். சில அவசிய தேவைகட்குத் தீர்மானித்தவுடன் கூட்டுறவுப்பகுதியாரின் சிபார்சை நேரில் சென்று பெற்று தொடர்ந்துகூட்டுறவுவங்கி நிர்வாகத்தைநேரில்சந்தித்து, கலந்து பேசி கடனை உடனுக்குடன் பெறக்கூடிய வாய்ப்புமிருந்தது. இப்படியான வசதிகளாலும் மக்கள் வங்கிச்சுவீகரிப்பை அங்கத்தவர் பலரும் எதிர்த்தனர் வங்கியைச் சுயமாக இயங்க விடும்படி பலரும் பா. அ. கட்கும் முறையிட்டனர். மேற்கொண்டு

20.10.68ல் யாழ்ப்பாணம் பா. உ. அனைவரையும் வங்கியின் அவசரக்கூட்டம் ஒன்றிற்கு அழைத்தோம். எமது வங்கியைத் தொடர்ந்து நடத்தவிடுமாறும் அடைவுபிடித்தற்கு மேலிடத்தின் அனுமதி பெறஉதவுமாறும் கேட்டு உரியமனுவும் கொடுத்தோம் வடபகுதியிலுள்ள பழம்பெரும் கூட்டுறவாளர்களால் ஆரம்பிக்



கப்பட்ட இவ்வங்கி சென்ற 40 வருடங்கட்கு மேலாக சிறப்புற நடக்கிறது. ஜனநாயக பாரம்பரியங்கட்கு இணங்க இந்த நாட்டின் கூட்டுறவுவங்கிகளே இயங்குகின்றன. தங்கள் பொருளாதார தேவைகளை நிறைவேற்ற உடனுக்குடன் கடன்பெறவும், தவணைதப்பியபோது கூட்டுறவுப்பகுதியாகும் மேற்பார்வைச் சபையினரும் தலையிட்டு கடன்களைத் திருப்பிக்கட்ட ஊக்குவித்தும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தியும் வங்கியின் நற்பெயரைக் காப்பாற்றி வருகின்றனர்; என்ற விபரங்களும் குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்களது முயற்சியால் வங்கியின் எல்லாக்கிளைகளிலும் அடைவு பிடிக்கும் சேவையாரம்பிக்கப்பட்டன. 1969ல் ரூபா 5784824/=ற்கு அடைவுகடன் கொடுக்கப்பட்டது, எனினும் அவர்கள் முயற்சி 1972வரை தாக்குப்பிடிக்க முடிந்தது.

மீண்டும் 3.11.70ல் கூ.மா வங்கியை மக்கள்வங்கியுடனிணைக்கத்தருமாறு கேட்கப்பட்டது. அப்போது 10.3.71ல் யாழ்ப்பாணத்தில் நிதிமந்திரி என். எம். பெரரா வருகை தந்தபோது நேரில் சந்தித்து எங்களைத் தனியே இயங்க விடுமாறு கேட்கப்பட்டது. ''உங்கள் வங்கி நன்றாக நடப்பதனை யான் நன்கு அறிவேன்; இலங்கையிலுள்ள எல்லா கூட்டுறவு வங்கிகளும் ஒரே சீராயில்லை. ஆகையால் எல்லாவற்றையும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரவே முடியும்; யோசிக்கிறேன்'' — என்றார்.

மேற்கொண்டு 1972ல் எடுப்பதற்கான முயற்சிகள் நடப்பதாக அறிந்தோம். யாழ்ப்பாணம் கூட்டுறவியக்கம் எவ்வித அரசியல் தலையீடுமின்றி நடந்தது. வங்கியை எடுப்பதற்குத தீர்மானித்து அரசியல் வர்ணம் பூசப்பட்டது. மேலும் அக்காலத்தில் இதன் தலைவராயிருந்த இ. இராசரத்தினம் அவர்கட்கும் அரசியல் கலர் வலிந்து பூசப்பட்டது. இதனை ஓரளவு அறிந்தோம். அப்போதைய கூட்டுறவாணையாளராயிருந்த ஒல்கொட் அவர்களை ரி. கே. இராசசேகரம் காரியதரிசி, சு. கந்தையா ஜே. பி வடபகுதி ஐ. மே. ச. தலைவர், க. இ. குமாரசாமி வங்கி ஆளும் இயக்குனர் யாவரும் அவரது கொழும்புக்காரியாலயத்தில் 2.12.72ல் பேட்டிகண்டு எமது முறையீட்டை விபரமாக விளக்கினோம். மிகவும் அனுதாபத்துடன் எங்கட்குச் சாதகமாக உரையாடிக்கொண்டிருந்தார். க. சி. பொன்னுத்துரை சிரேஷ்ட உதவியாளரும் உடனிருந்தார், அதுசமயம் ஆணையாளருக்கு ரெலிபோன் தொடர்பு ஒன்று வந்தது. உடன்

க. சி. பொன்னுத்துரையைத் தனியே அழைத்து "யாழ் கூட்டுறவு மாகாணவங்கியை உடன் சுவீகரிக்க அரச வர்த்தமானிக்கு விளம்பரமொன்று தயாரித்து அனுப்புமாறு கட்டளை வந்துள்ளது. யான் தயாரிக்கச் செல்கிறேன். மிகுதியை இவர்களோடு உரையாடுங்கள்'' — என்றுகூறி பேட்டியிடத்தை விட்டகன்றது; பின்னால் அறிந்தோம். இனி உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது எரிகிறவீட்டில் பிடுங்குகிறது தான் மிச்சம் ஆகையால் உங்கள் கோரிக்கைகளை அதற்குத் தகக் கேளுங்கள்'' — என்றார் க. சி. பொன்னுத்துரை. உடனே நாம்;

1) வங்கி நிதியை வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைக்குக் கொடுக்குமாறும்
2) எமது வங்கியின் புதிய கட்டிடமமைத்தற்கான காணியை (வீரசிங்கமண்டபத்திற்கு மேற்குப்புறமாயுள்ளது) தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் கூட்டுறவுக்கலாசாலைக்குக் கொடுக்குமாறும்

3) எமது பணியாளர்கள்மேல் எக்காரணங்கொண்டும் உடன் சிங்களத்திணிப்புச் செய்யக்கூடாது
4) எமது பணியாளர்களது கடந்த காலச்சேவையை அவர்களது சேவைக்காலத்தோடு எவ்வித நிபந்தனையுமின்றி தொடர்ந்து சேர்த்துக்கொள்ள வேண்டும்.
5) எமது தற்காலிகப்பணியாளர்களை நிரந்தரப்பணியாளர்களாக்க வேண்டும்

என்று ஐந்துநிபந்தனைகளையும் முன்வைத்தோம். க. சி. பொன்னுத்துரை ஒத்துக்கொண்டார். அரைமணி நேரத்தில் திரும்பி வந்த வந்த ஒல்கொட் அவர்களிடம் விபரம் கூறப்பட்டது. 2, 4, 5, ஒத்துக்கொள்ளப்பட்டது 1, 3 ஆலோசித்துப் பதில் தருவதாகச் சொல்லப்பட்டது. நாங்கள் புறப்பட்டு வந்து அன்றைய பேட்டியில் கேட்டவை ஒத்துக்கொண்டவை பற்றி விரிவானதொரு மனுதயாரித்து அனுப்பிவிட்டு, நமது நிபந்தனைகட்குரிய சம்மதத்தை வாய்ச்சொல்லில் இல்லாது எழுத்தில் பெற வேண்டும்; எனக்கருதினோம். எழுத்தினால் பதில் கிடைக்கும் வரையும் எமது 3ம் குறுக்குத்தெரு தலைமைவங்கிக்கு மேல் பூட்டுப் போட்டு முத்திரையிட உரிய ஆயத்தங்களுடன் யாழ்தேவி



யில் திரும்பி காலை தலைமை வங்கிக்குச் சென்றோம். வங்கியின் ஒரு பணியாளரும் அதிகாரசபை அங்கத்தவர் இருவரும் வங்கிப் படியிலிருந்து இறங்கிச் செல்வதனை அவதானித்தோம் ஏற்கனவே மறுப்பூட்டுப் போடப்பட்டு முத்திரையிடப்பட்டிருப்பதனை பார்த்து வேதனையடைந்தோம். 1961-ல் 'பெடரல்' வங்கிக்கு நடந்தது. 1972-ல் கூட்டுறவு வங்கிக்கு நடந்து விட்டது. தொடர்ந்து வந்த அரசியல் தலையீடுகள் சிங்களத் திணிப்பு, ஒருமொழி இருநாடு என்ற கிளர்ச்சி, தரப்படுத்தல், வகுப்புக் கலவரங்கள் என்பவற்றினால் தமிழ்ப்பகுதி கூட்டுறவியக்கத்தை மாத்திரமல்ல; எமது தமிழினத்தையே அரசு மறைமுகமாக நாகரிகமான வகையில் நசுக்கிக் கொண்டிருந்த காலகட்டம் தொடர்கிறது.

**1972 அதிகாரசபை அங்கத்தவர்**

| | | |
|---|---|---|
| தலைவர் | இ. இ. இராசரத்தினம் | |
| உபதலைவர் | ரி. கே. இராசசேகரம் | |
| காரியதரிசி | வே. சுப்பிரமணியம் | |
| ஆளும் இயக்குவர் | க. இ. குமாரசாமி | |
| அதிகார சபையினர் | ஆர். சி. எஸ். குக் | |
| | மு. கணபதிப்பிள்ளை | வலி - மேற்கு |
| | செ. நடராசா | வலி - கிழக்கு |
| | அ. ஜே. இராசதுரைசிங்கம் | யாழ்ப்பாணம் |
| | ஆ. சபாபதிப்பிள்ளை | தீவுப்பகுதி |
| | வே. சுப்பையா | தென்மராட்சி |
| | பி வீ. மனுவேற்பிள்ளை | முல்லைத்தீவு |
| | செ. பொன்னையா | பச்சிலைப்பள்ளி |
| | வை. வல்லிபுரம் | பூநகரி |
| | அ. சிவசுப்பிரமணியம் J P | கரைச்சி |
| | ப. ஆறுமுகம் | மாந்தை |
| | எம். கம்பமரக்கார் | மன்னார் |

16. 2. 90-ல் ஓரளவு அரசியல் சூழ்நிலைகள் மாறி வடகிழக்கு அமைச்சு உதயமாகியுள்ள இன்றைய நிலையில் 1972-ல எமது கூட்டுறவு வங்கிக்கு இழைக்கப்பட்ட இன்னலைப் போக்கும் உந்துசக்தியாக யான் தொழிற்பட எண்ணினேன். முன்னைய

1972 நிர்வாகத்திலிருந்த சிலர் மறைந்து விட்டனர். சிலர் வயோதிப நிலையில் தொழிற்பட சக்தியற்றிருந்தனர். இருப்பவர் சிலர் விலாசம் மாறி தொடர்பு கொள்ள முடியாதநிலை, மற்றும் சிலர் வெளிநாடு. இது விஷயமாய் எம்முடன் தொடர்ந்து செயலாற்ற வரக்கூடியவர்கள் அண்மையில் இல்லை. ஆகையால் கூட்டுறவுச் சங்கங்களிடம் மீண்டும் கூட்டுறவு மாகாண வங்கியை ஒப்படைக்க ஆவன செய்யுமாறு 16. 2. 90 வடக்கு கிழக்கு அமைச்சிற்கு விபரமாக அனுப்பிய மனுவின் பிரதியை கூட்டுறவு ஆணையாளர், மற்றும் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர், மற்றும் கூட்டுறவாளர் சிலருக்கும் இணை கடிதங்களுடன் அனுப்பினேன்;

1) யாழ் கூட்டுறவு மாகாண வங்கியை எட்டுக்கிளைகளோடும் யாழ் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க ஆவன செய்து தருமாறும்;

2) எமது வங்கியை எடுக்கும் போதிருந்த அசைவற்ற அசைவுள்ள சொத்துக்களை திருப்பித் தருவதற்கு வேண்டியன செய்து தருமாறும்;

மனுவில் கேட்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாய் பேட்டி காணவும் முயற்சிக்கப்பட்டது. என். டி. ஏ. பி சமரசம். கூ. மா. வ இரண்டினையும் திருப்பித்தருமாறு விபரங்களடங்கிய தனித்தனி மனுக்கள் அனுப்பினேன். 1990 ல் செல்வரத்தினம் தலைமையில நடந்த வீரசிங்கம் ஞாபகார்த்த விழாவுரையின் போதும் இது விஷயமாய் விபரமாய்க் குறிப்பிட்டேன். அவ்விடம் சமுகமாயிருந்த ஞானப்பிரகாசம் ACCD அவர்களும் இதனையாதரித்துப் பசினார். 30. 03. 90 ல் சிவமகாராசா பா. அ. அவர்களுடனும் ந்த இரு விஷயங்களையும் விரிவாகக் கலந்தாலோசனை நடைபெற்றது. மேற்கொண்டு அமைச்சிற்கு வருமாறு எழுதப்பட்ட போதும் அப்போதைய சூழ்நிலைகளால் செல்ல முடியாத நிலையேற்பட்டது. திரு. நித்தியராஜ் ACCD அவர்கள் உதவியுடன் ஓர் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டது.



# வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை

மக்களிடையே சமத்துவமான ஓர் சமுதாயத்தை உருவாக்கக்கூட்டுறவியக்கம் பெரிதும் உதவலாம் என 1771 - 1858 காலப்பகுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்த றொபேட் ஒவன் என்பவர் கருதினார். இன்று உலகளாவியதான கூட்டுறவியக்கம் 1844 ல் தொடங்கியது. பி. எச் கிறட்டன் என்பவர் 28 அங்கத்தவர்களுடன் ஓர் கடையைத் தொடங்கி தங்கட்கு இன்றியமையாத பொருட்களில் வியாபாரத்தை ஆரம்பித்து நடத்தினார். தொடர்ந்து இந்த இயக்கம் இங்கிலாந்திலும் உலகின் வேறு பாகங்களிலும் பரவியது. இதன் பிரதிபலிப்பாக அங்கிலேயர் அரசாட்சியில் இருந்த இலங்கையில் 1911 ல் கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டு தென்னிலங்கை மாத்தறைப் பகுதியிலுள்ள வெல்லப்படபத்து எனும் கிராமத்தில் 13. 11. 1911 ல் முதலாவது கூட்டுறவுச்சங்கம் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து 1918 - 19 காலப்பகுதியில் கூட்டுறவு சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் தொடர்ச்சியாக வெளியாகின. கூட்டுறவுச்சங்கங்களின் நன்மைகள் - எனும்பிரசுரம் காம்பெல் என்பவராலும், கூட்டுறவு கடனுதவி சங்கங்களை அமைப்பது-கல்வேர்ட் என்பவராலும் வெளிப்படுத்தப்பட்டன மேலும் கூட்டுறவுச் சட்டமும் கொள்கைகளும் என்ற நூலும் வெளியாகியது. கூட்டுறவியக்கம் வளர்ந்து 1945 ம் ஆண்டளவில் இலங்கையில் 1697 கடனுதவி சங்கங்கள் பதிவாகின. இவற்றால் விவசாயிகளும் தொழிலாளர்களும் பெரிதும் லாபமடைந்தனர். இவ்வாறுதோன்றிய கூட்டுறவுச் சங்கங்களிடையே தோன்றிய வேறுபாடுகள்

குறைந்து ஒற்றுமையை வளர்க்கவும் காலத்துக்குக் காலம் ஏற்படும் தடைகள் குறைகளை ஆராய்ந்து நல்ல தீர்வுகாணவும் இணைந்து அவற்றினிடையே ஓர் பேரவை உண்டாக்குதல் நல்லதென முன்னோடிகள் ஆலோசித்தனர். இதன் பேறாய் 1937ல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை உதயமானது. 212 சங்கங்கள் அதில் அங்கத்துவம் பெற்றன. இச்சபை—

1) கூட்டுறவுக்கொள்கைகளைப் பிரசாரஞ் செய்தல்
2) பதிவான கூட்டுறவுச் சங்கங்கட்கு வேண்டியனவற்றைச் கலடமாகக் கொள்வனவு செய்ய ஆவன செய்தல்
3) சங்கங்களை மேற்பார்வை செய்து கணக்குகளைப் பரிசோதித்து அறிக்கையிடல்
4) அங்கத்தவர்கள் பொதுமக்கள் பணியாளர்களினிடையே புத்தூக்க வகுப்புக்கள் கருத்தரங்குகள் நடத்தி கூட்டுறவுக் கல்வியை வளர்த்தல் ஆகியவைவற்றில் பெரிதும் உதவியது.

மேலும் கூட்டுறவுத்தின விழாக்களை பிரதி வருடமும் நடத்தி பாமர மக்களிடையேயும் கூட்டுறவு சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டு ரூபா பங்குப்பணம் செலுத்தி மேற்பார்வைச் சபையின் அங்கத்தவராயினர். வருடாந்த மகாநாடு பிரதிவருடமும் ஜூலை மாதத்தில் நடைபெறுவது வழக்கமாயிருந்தது. கூட்டுறவுச்சங்கங்களின் தொகைக்கேற்ப யாழ் - பெரும் பிரிவுகள் தோறும் உள்ள சங்கப்பிரதிநிதிகளில் 21 அதிகாரசபையங்கத்தவர் தெரிவாகினர். அவர்கள் கூடித் தங்களிடையே தலைவர், காரியதரிசி போன்ற நிர்வாகிகளைத் தெரிவு செய்வர். இந்த வகையில் முதல் தலைவராக மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வி. வீரசிங்கம் அவர்களும் காரியதரிசியாக வி. அருளம்பலம்- அரியாலை அவர்களும் தெரிவாகினர். பின்னால் அ. அருளம்பலம் ச. த — நீராவியடி அவர்கள் தொடர்ந்து சேவையாற்றினார். பிரதிவருடமும் குறித்த அதிகாரசபையினரில் மூன்றிலொரு பகுதியினர் இளைப்பாற அவ்விடங்கட்கு அவர்கள் அல்லது புதியவர்கள் தெரிவாவதும் வழக்கத்திலிருந்து வந்தது. வருடாந்த மகாநாடுகளுக்கு அங்கத்தவர்களன்றிப் பார்வையாளர்களும் அனுமதிக்கப்படுவர்,

1940ம் வருடம் ஓர் ஐக்கியநாணய சங்கம் அமைக்க விரும்பிய யான் யாழ் றீகல் படமாளிகையில் நடந்த மேற்பார்வைக் சபையின் வருடாந்த மகாநாட்டிற்குச் சென்றபோது தலைவராயிருந்த வி. வீரசிங்கம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்திய



தனையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவாளர்கள் மண்டபம் நிறைய இருந்ததனையும் குறித்த கூட்டுறவாளர்களிடையே குல்லா அணிந்த வடக்கு கிழக்கு மாகாண இஸ்லாமிய அன்பர்கள் கணிசமான தொகையினர் காணப்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது. வி. அருளம்பலம் - அரியாலை, நீராவியடி அ. அருளம்பலம் ச. த, மாதகல் தம்பர், மூளாய் கிருஷ்ணர் இடைக்காடு தம்பிமுத்து, நீர்வேலி நடராசா. முல்லைத்தீவு மிச்சேற்பிள்ளை என்பவர்கள் முன்வரிசையங்கத்தவர்களாயிருந்ததனையும் அவதானித்தேன். யான் இவர்களில் சில அங்கத்தவர்களிடம் படித்தே 23 3.42ல் கோப்பாய் வடக்கு ஐக்கிய நாணயசங்கமும். 20.7.1942ல் கோப்பாய் ஐக்கிய பண்டகசாலையும் நிறுவக்கூடியதாயிருந்தது நினைவு கூரத்தக்கது.

1942ம் ஆண்டு உலகமகா யுத்தத்தின் போது நெல்லுக் களஞ்சியம் எனப் பெயர்போன பர்மாவிலேயே பதுக்கல் காரணமாக பல ஆயிரக்கணக்கானோர் பசியால் மடியநேர்ந்தமை எமது அரசாங்கத்தையும் கூட்டுறவாளர்களையும் விழிப்படையச்செய்தது. கிடைக்கும் உணவுப் பொருட்களோடு இறக்குமதியாகும் உணவுப் பொருட்களையும் சமபங்கீடு செய்யும் நோக்கமாய் பண்டகசாலைச் சங்கங்கள் 1943ல் திடீரென ஆரம்பிக்கப்பட்டன. கூட்டுறவுபற்றி நன்றாகப் பயிலச்செய்து அறிவையூட்டிய பின்னரே பதிவு செய்யப்பெற்ற ஐக்கிய நாணய சங்கங்கள் போன்றில்லாமல் அவசரதேவை நோக்கி ஒரு ரூபா பங்குப்பணம் செலுத்தியவர்களிடையே கிராமத்தின் பிரிவுகள் தோறும் பதிவான இவ்வகைப் பண்டகசாலைச்சங்கங்களும் மேற்பார்வைச் சபையின் அங்கத்துவம் பெற்றன. மேலும் 1934ல் ஆரம்பிக்கப்பட்ட மலையாளம் புகையிலைச் சங்கத்தின் நடைமுறைகள் தடை செய்யப்பட்டதாலுண்டான பொருளாதார வீழ்ச்சியை ஈடுசெய்ய யாழ் விவசாயிகளினிடையே 1947லிருந்து தோன்றிய விவசாயவிருத்திவிற்பனவு ஐக்கியசங்கங்கள் சிகரெற்புகையிலை உற்பத்தியாளர் சங்கங்கள் முதலாளிகள் தரகர்கள் பிடியில் சிக்கித்தவித்த கடற்றொழிலாளர்களை ஈடேற்றக்கருதி ஸ்தாபிக்கப்பட்ட மீன்பிடி ஐக்கியசங்கங்கள், புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவும் மேற்பார்வைச் சபையில் அங்கத்துவம் பெற்றன. இவை போன்ற பல்வேறு வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் இதன் அங்கத்தவர்களாயினர் இந்த வகையில் 1951ல் 746 சங்கங்கள் அங்கத்துவம் பெற்று மேற்பார்வைச் சபையின் வேலைத்திட்டங்களும் விரிவாகின.

எண்பார்வை: அரசினரின் எதுவித தலையீடுமின்றி கூட்டுறவுச் சங்கங்களையும் மேற்பார்வை செய்து கணக்குகளையும் பரி

சோதித்து அறிக்கையிடும் முறை இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் நிலவியது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் கூட்டுற விலாகாவே இவ்வேலைகளைச் செய்தபோதிலும் வடபகுதியில் மேற்பார்வைச்சபையே இவ்வேலைகளைச் செய்துவந்தது. இதற் காக ஆரம்பத்தில் கூட்டுறவுச்சங்கங்களிடமிருந்து லாபத்தில் மூன்று விதம் அறவிடப்பட்டு வந்தது. இச்சபையினால் வேண்டிய பயிற்சி கொடுக்கப்பட்ட 117 உபபரிசோதகர்கள் 1957ல் இச் சபையின் கீழ் சேவையாற்றினர்.

வெளியீடுகள்; கூட்டுறவு பற்றிய கருத்துக்கள் வரலாறுகள் புதினங்கள் இவை வெளிவருதற்காக ஐக்கியதீபம் என்ற பெயரில் ஓர் சஞ்சிகையையும் வெளியிட்டனர். கூட்டுறவு சம்பந்தமாக அரசு ஆங்கிலத்தில் வெளிப்படுத்தும் அறிக்கைகள் சுற்று நிரு பங்கள் தமிழில் ஐக்கியதீபத்திலும் வெளியானது கூட்டுறவாளர் சட்குப் பெரிதும் உதவியாயிருந்தது. இதன் பத்திராதிபராக அ அருளம்பலம் ச. த. தொடர்ந்து பலவருடங்கள் சேவை யாற்றி 8 3.63ல் அவரது 50ம்வயதில் காலமானார். தொடர்ந்து. து. சினிவாசகம் வித்தியாலய ஆசிரியர் — பத்திராதிபராகச் சேவையாற்றினார். அ. அருளம்பலம் நினைவாக 1963 பங்குனி யில் ஐக்கிய தீபம் விசேட மலரொன்றும் வெளியானது குறிப் பிடத்தக்கது.

வடபகுதி கூட்டுறவியக்கம் பற்றி தென்னிலங்கை மக்களும் வெளிநாடுகளும் அறிந்து கொள்ள வேண்டும் — என்பதற்காக THE co - OPERETER — என்ற ஆங்கில இதழும் வெளியீடாக மலர்ந்தது. திருவாளர்கள் கு, நேசையா, ஹன்டி பேரின்பநாயகம் A, E தம்பர் என்போர் கொண்ட குழுவினால் 3000 பிரதிகள் வரை அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டன.

மேலும் பாமரமக்களிடையேயும் கூட்டுறவு சம்பந்தமான அறிவை வளர்ப்பதற்காக கூட்டுறவு அங்கத்துவ சங்கங்களி ணைந்து கூட்டுறவு சம்பந்தமான பிரசாரக்கூட்டங்கள் கருத்த ரங்குகள், கூட்டுறவு சம்பந்தமான நாடகங்கள் என்பனவும் பிரதி வருடமும் பல்வேறிடங்களிலும் நடத்தி வந்தது

காலந்தவறாது வருடாந்த மகாநாடுகளைக் கூட்டி சங்கங்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து இறுதியில் தீமானங் களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவார்கள். மூன்று வரு டங்கட்கு மேல் ஒருவர் நிர்வாகசபையில் அங்கத்தவராகவிருப் பது 1965 தொடக்கம் தடைப்படுத்தப்பட்டிருந்தது இது விஷ யமாய் 1965 மேற்பார்வைச்சபை வருடாந்த மகாநாட்டில் ஆராயப்பட்டு இம்முறை கூட்டுறவு வளர்ச்சிக்கு உகந்ததல்ல-



என்ற கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத் திற்கு அனுப்பித் தொடர்ந்து பேட்டி கண்டதன் பலனாகக் குறித்த தீர்மானம் கை விடப்பட்டது நினைவு கூரத்தக்க தொன்றாகும்.

வீரசிங்க மண்டபம்; வடபகுதிக் கூட்டுறவியக்கத்தின் பொதுக் கூட்டங்கள் வருடாந்த மகாநாடுகள் என்பன ஆரம்பத்திலிருந்து யாழ்- றீகல் படமாளிகை, யாழ்- மாநகரசபை மண்டபம் மத்திய கல்லூரி முதலிய இடங்களில் நடைபெற்று வந்தன கூட்டுறவாளர்க்கென- அதிலும் மேற்பார்வைச் சபைக்கென ஓர் கூட்ட மண்டபமும் அதற்கான காரியாலயமும் அமைக்க வேண்டும் - என 1962 வருடாந்த மகாநாட்டில் தீர்மானிக் கப்பட்டது. மேற்கொண்டு வேண்டியன விரைந்து செய்யப்பட்டு கூட்டுறவாணையாளர் அவர்களால் அத்திவாரமிடப்பட்டது. நான்கு மாடிகள் கொண்ட கட்டிடவேலைகள் ஆரம்பமாகி நடந்தன, சென்ற 25 வருடங்கட்கு மேலாகச் சேவையாற்றி கூட்டுறவுத் தந்தை- என தென்னிலங்கை மக்களாலும் போற் றப்பட்டவருமாகிய வி. வீரசிங்கம் அவர்கள் 5. 12. 1964 ல் அமர ராகினார். யாழ்- நகரமண்டபத்தில் 18. 12. 1964ல் உபதலை வர் க. இராசசேகரம் M A, அவர்கள் தலைமையில் நடந்த நினைவஞ்சலிக்கூட்டத்தில் அமைக்கப்படும் புதிய கட்டிடத் திற்கு வீரசிங்கம் ஞாபகார்த்த மண்டபம் - எனப்பெயரிட வேண்டும் என ஏகமனதாகத் தீர்மானமாகியது குறித்த கட்டிட வேலைகள் ஓரளவு பூர்த்தியாகி 27. 11, 68ல் கூட்டுறவாக்க ஆணையாளரும் தென்கிழக்காசியாவிற்கான பிராந்தியப்பணிப் பாளருமாகிய வீரமன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலை - கூட்டுறவுப்பணியாளர் கள் எவ்வளவு நேர்மை முயற்சியுடன் செயலாற்றினாலும் பணி யாளர்களின் நேர்மைமுயற்சியும் கூட்டுறவு அறிவுமே கூட்டுறவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாகும் பணியாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் அறிவைவளர்ப்பதற்காக கூட்டு றவுப்பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்க வேண்டுமென மேற்பார் வைச்சபை தீர்மானித்தது. 1952ல் யாழ் கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் கூட்டுறவாளர்களி னால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கூட்டுறவுக் கல்லூரி என்ற பெருமைக்குரியதாகும், ஆரம்பத்தில் பயிற்சி வகுப்பு, வா று திப் பயிற்சிவகுப்பு என இருவேறுவகையான வகுப்புக்கள் ஆரம் பிக்கப்பட்டு கூட்டுறவுத்தத்துவம் கூட்டுறவுச்சட்டம் விற்பனை முகாமைத்துவம் கணக்குப் பரிசோதனை முதலிய பாடங்கள், கற்பிக்கப்பட்டன; கூட்டுறவுச்சங்கங்கள் சீரான முறையில்,

கணக்குகள் வைத்திருப்பதற்கு உதவியாக சேகரக்கணக்காளர் பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவுசெய்து பயிற்சியின்பின் கூட்டுறவுச்சங்கங்கட்கு அனுப்பியது. மேலும் தபால் மூலம் பயிற்சி நெறியையும் ஆரம்பித்து நடத்தியது. மேலும் முகாமைத்துவம் சம்பந்தமான கைநூல்கள் தயாரித்தும் அங்கத்துவ சங்கங்கட்கு அனுப்பியது. இவ்வாறு கூட்டுறவுக் கல்லூரிப் பயிற்சிக் கல்லூரியில் காலத்துக்குக் காலம்.

| | சாதாரண பயிற்சி | உயர்பயிற்சி | |
|---|---|---|---|
| 1974ல் | 46 | 35 | |
| 1975ல் | 47 | 28 | |
| 1990 – 91 | 45 | 45 | தொகையினர் |

சித்திபெற்றமை குறிப்பிடத்தக்கது குறித்த கூட்டுறவுக் கல்லூரி யாழ் — கடற்கரை வீதியில் வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்றுவந்தது. இந்திய ராணுவ காலத்தில் இது மணிக்கூண்டு வீதிக்கு மாற்றப்பட்டு நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி பலாத்காரமாக எடுக்கப்பட்டபோது அதன் கட்டிடமமைக்கவெனவிருந்த வீரசிங்க மண்டபத்திற்கு மேற்குப் புறமாயுள்ள காணி வாடகைக் கட்டிடத்திலிருக்கும் கூட்டுறவுக் கலாசாலை அமைத்தற்காக 2. 12. 72 ல் கொடுக்க ஒழுங்கானதும் நினைவு கூரத்தக்கது. இ. இராசரத்தினம் அவர்கள் இக்கல்லூரிக்கு ஆரம்பகால அதிபராகவிருந்து 31, 12, 64 வரை சேவையாற்றினார் தொடர்ந்து சு. கந்தையா ஜே, பி — மாதகல் அவர்கள் அதிபராகி 26, 12, 70 வரை சேவையாற்றினார்

கூட்டுறவு அச்சகம் கூட்டுறவுச் சங்கங்கட்குத் தேவையான புத்தகங்கள், பதிவேடுகள் முதலியன ஒருசீராக அமைந்திருத்தல் நல்லதென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அச்சிட்டு சகாயவிலையில் கொடுப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்பார்வைச்சபை செய்து வந்தது. இதற்காக கூட்டுறவாளர்களினால் ஆரம்பித்து நடத்தப்பட்ட கூட்டுறவச்சகம் பெரிது துணைபோனது.

புலமைப்பரிசில்— கூட்டுறவுச்சங்கங்களின் வளர்ச்சி கருதி காலத்துக்குக்காலம் பணியாளர்கள் சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவ்விடத்திய கூட்டுறவுச்சங்கங்களின் விசேட அம்சங்களை இவ்விடம் நடைமுறைப்படுத்தவும் மேற்பார்வைச்சபை செய்து வந்தது இதற்கு ஐக்கியநாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக்கழகம் (UNESCO) உதவியும் கிடைத்தது. இந்தவகையில் அன்பர்கள் A. மகேஸ்வரன், ந. குமரேசபதி, எஸ். சண்முகசுந்தரம்



K. கணேசலிங்கம் என்போர் புலமைப்பரிசில்பெற்று வெளிநாடு சென்று வேண்டியபயிற்சி பெற்று இவ்விடத்திய கூட்டுறவுச் சங்கங்களினிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கப் பெரிதும் உதவினர்.

முகாமைத்துவப் பயிற்சிநெறியை நவீனமயப்படுத்தும் நோக்கமாக பலநோக்குச்சங்கங்களினிடையே அரசினால் குருநாகல், காலி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பிராந்தியக் கல்லூரிகள் நிறுவப்பட்டன, இவற்றை சுடா (SIDA) நிறுவனத்தின் இலங்கைக் கூட்டுறவுப் பேரவையும் இணைந்து நடத்துகின்றன யாழ்- பிராந்தியக்கல்லூரி ப. நோ. கூ. ச முகாமையாளர்களை அழைத்து விரிவுரைகள் நடத்தின, இவ்விதம் தாம்பெற்ற அறிவை தம் சங்கங்களில் பயிற்சியாளர்கள் பயன்படுத்துகிறார்களா? என்று விரிவுரையாளர்கள் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்குச் சென்று அவதானித்து பிரச்சினைகளைத் தீர்க்க உதவி வருகிறார்கள். மேலும் இயக்குனர் சபையை அணுகிக் கலந்துரையாடியும் தீர்வுகள் செய்யப்படுகின்றன. இதனாலும் சங்கங்கள் நன்மையடைகின்றன.

வடபகுதியில் பொருளாதார விருத்திக்கு பெருந்துணைபுரிந்த எமது மேற்பார்வைச்சபை இலங்கையின் ஏனைய பகுதிகளிலியங்கி வந்த மேற்பார்வைச் சபைகளோடும் சமாசங்களோடும் கட்டாயத்தின் பேரில் 1972ல் இணைக்கப்பட்டு இலங்கை கூட்டுறவுச் சம்மேளனமாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் திறம்பட இயங்கிவந்த வடபகுதி வி, வி வி. சங்கங்களின் சமாசம், கூட்டுறவு மாகாணவங்கி என்பனவற்றிற்கு நடந்ததுவே எமது மேற்பார்வைச் சபைக்கும் நடந்தது, காலத்துக்குக் காலம் ஏற்பட்ட சிங்கள அரசியல் தாக்கங்களினால் எமது கூட்டுறவு முன்னோடிகளின் பகீரத எதிர்ப்புக்களும் தோல்வியில் முடிந்தன. இவற்றால் இலங்கையில் முன்னோடியாக விளங்கிய வடபகுதி கூட்டுறவியக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

26. 7. 1972 ல் இணைக்கப்பட்ட மேற்குறித்த இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் தலைவராக இலங்கை நுகர்ச்சியாளர் சங்கங்களின் சமாசத் தலைவராகவிருந்த பி. டி. சில்வா அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதைத்தொடர்ந்து காலி தொடக்கம் யாழ்ப்பாணம் இறுதியாகவுள்ள 21 மாவட்டங்களிலுமுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் 102 பிரதிநிதிகளும் நுகர்ச்சியாளர் சமாசம் தெங்குப்பொருள் உற்பத்தியாளர் சங்கம், இலங்கை மீன்பிடி விற்பனைக் கூட்டுறவு சங்கம் என்பவற்றின் ஒவ்வொரு பிரதிநிதியுமாக 105 பிரதிநிதிகள் 17. 3. 73 ல் சேர்;

பிட்டியிலுள்ள 455 காலி வீதி கூட்டுறவில்லத்தில் கூட்டுறவாணையாளர் ஆர். வீ. இராசதுரை தலைமையில் கூடினர். முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த உபவிதிகள் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஸ்ரீலங்கா தேசியக் கூட்டுறவுச் சமாசம் - உதயமானது. குறிக்க சமாசக்கூட்டத்திற்கு யாழ் - மாவட்டப்பிரதிநிதிகளாக திருவாளர்கள் என். ரி. சிவஞானம், ஆர். ஆர். இராசரத்தினம். வி. இராசசுந்தரம் க. இ. குமாரசாமி, ஆகிய நான்கு பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஜீ. எஸ். தயானந்தா - கண்டி அவர்கள் தலைவராகவும் இ. இராசரத்தினம் அவர்கள் உபதலைவராகவும் தெரிவாகினர். குறிக்க ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சபை மாவட்டங்கள் தோறும் கிளைகளை நிறுவியது. இந்த வகையில் யாழ் - மாவட்டக் கிளையும் 1974ல் நிறுவப்பட்டது. ஸ்ரீ. தே. கூ. ச. பிரதிநிதிகளில் நால்வர் கூட்டுறவாணையாளரால் நியமிக்கப்பட்டவர் மூவர், மேலும் கைத்தொழில் கூ. சங்கங்கள், மீன்பிடி விவசாயசங்கங்கள், கடலைதவி சங்கங்கள், ஏனைய கூட்டுறவுச் சங்கங்கட்கு ஒவ்வொருவருமாக பதினொரு அங்கத்தவர்கள் குறித்த மாவட்ட சபைக்குத் தெரிவாகினர். குறித்த மாவட்டக்கிளைகள் செய்து வந்த கருமங்களை ஓரளவேதான் செய்யக்கூடியதாயுள்ளது சுயமாக எதனையும் சிந்தித்துச் செயலாற்ற முடியாத நிலை இன்று நிலவுகிறது. அரசினரின் திட்டங்களை நடைமுறைப்படுத்த கூட்டுறவுத்தாபனங்களும் பங்குதாரர்கட்கு இலாபத்தை ஈட்டும் நோக்கமாக அமைக்கப்பட்ட கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகளும் போன்றில்லாமல் அங்கத்தவர்களின் பொருளாதார நிலையைப்பேணி வளர்க்க - உதவிசெய்யவே கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளமை கவனத்திற்குரியதொன்றாகும். இலங்கையில் முன் மாதிரியாக விளங்கிய யாழ் கூட்டுறவியக்கம் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட அரசியல்தாக்கங்களினால் மிக்க நலிவுற்றுக்காணப்படுவது இன்றைய நிலையில் சிந்திக்க வேண்டியதொன்றாகின்றது.

மேலும்; வடபகுதியின் கூட்டுறவியக்கத்தின் சிறந்த சின்னமாக விளங்கிய வீரசிங்கமண்டபம் 1986 லிருந்து நடந்த ராணுவ குண்டடிகளால் தகர்ந்து பற்றை மண்டிக்கிடக்கின்றது குறித்த கட்டிடங்களின் மாடிகளில் இயங்கிய கூட்டுறவுக் காரியாலயங்கள் தற்போது மூலைமுடுக்குகளிலுள்ள பலவீடுகளிலும் இயங்கி வருகின்றன இந்த நிலைகள் மாறி மீண்டும் யாழ் கூட்டுறவியக்கம் புனர்வாழ்வு பெறும் நாள் எந்நாளோ? என்று அங்கலாய்க்க வேண்டிய நிலைக்கு கூட்டுறவாளர்கள் தள்ளப்பட்டுள்ளமை பரிதாபத்திற்கிடமானதே.



## வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை

| தலைவர்களாகச் சேவையாற்றியோர் | காரியதரிசி |
| --- | --- |
| திருவாளர்கள் | |
| வி. வீரசிங்கம் | வி. அருளம்பலம் |
| ஆர். ஆர். இராசரத்தினம் | அ. அருளம்பலம் |
| | சு. கந்தையா |
| சு. கந்தையா | பொ. செல்வரத்தினம் |

### ஸ்ரீலங்கா தேசிய கூ. சமாசக்கிளை

| | |
| --- | --- |
| சு. கந்தையா | பொ. செல்வரத்தினம் |
| மு. ஆலாலசுந்தரம் பா. உ. | எஸ். பரமோதயம் |
| சி. சிவமகாராசா பா. உ. | கே. கணேசலிங்கம் |
| சி. குமாரவேல் | ம. பத்திநாதர் |
| வை. செந்தில்நாதன் | எ. மகேஸ்வரன் |
| | இ. சுப்பிரமணியம் |
| | சு. சிவசுப்பிரமணியம் |

### யாழ். மா. கூட்டுறவுச்சபை

| | |
| --- | --- |
| சி. சிவமகாராசா | சு. சிவசுப்பிரமணியம் |
| சி. குமாரவேல் | ,, |
| வை. செந்தில்நாதன் | ,, |
| பீ. கந்தசாமி | ,, |

## வடபகுதி மேற்சபை நிர்வாகசபையினர்

| | 1956 | 1966 |
| --- | --- | --- |
| வலி - மேற்கு | வி. வீரசிங்கம் | இ. இராசரத்தினம் |
| | முகாந்திரம் M. கிருஷ்ணர் | மு. கணபதிப்பிள்ளை |
| வலி - வடக்கு | எஸ். கந்தசாமி | எ. ரி. சுப்பிரமணியம் |
| | R. திருநாவுக்கரசு | தி. க. இராசசேகரம் |
| வலி - கிழக்கு | செ. நடராசா | செ. நடராசா |
| | எ. ஆர். மனுவேற்பிள்ளை | (உபதலைவர்) |

யாழ்ப்பாணம் இ. பி. இராசையா துரை.சீனிவாசகம்
வடமராட்சி எஸ். ஆறுமுகப்பிள்ளை எம். செல்வராசா
வி. ஆழ்வாப்பிள்ளை சி. எம். மார்க்கண்டு
தென்மராட்சி வே. சுப்பையா வே. சுப்பையா
நெடுந்தீவு வி. நாகநாதன் வி. நாகநாதன்
வப்பற்று ரி. தில்லைநாதன் பி. கதிரவேலு
ச்சிலைப்பள்ளி செ. சேனாதிராசா செ. சேனாதிராசா
பூனகரி பி. ஆறுமுகம் வி. பரமநாதன்
முல்லைத்தீவு பி. வி. மைக்கேற்பிள்ளை பி. மைக்கேற்பிள்ளை
வவுனியா - எ. சிதம்பரப்பிள்ளை
வடக்கு முகாந்திரம் வி. கணபதிப்பிள்ளை
வவுனியா - வி. எஸ். கந்தையா எஸ். நாகலிங்கம்
தெற்கு
மன்னார் எஸ். கே. முகமது காசிம் எ. சி. குரேடா
முசலி ஆர். எம். சாத்தான் கே. அப்துல்கனி
மாந்தை எம். கே. எம். கரீம்லெப்பே சே. என். சேகுப்அப்தீன்

பதிவுகாரியஸ்தரால் நியமிக்கப்பட்டோர்

ஜே. சி. அமரசிங்கம் (உபதலைவர்) செ. சோமசுந்தரம்
அ. அருளம்பலம் (காரியதரிசி) வே. சு. பொன்னையா
சு. கந்தையா சு. கந்தையா (காரியதரிசி

இரண்டாம் பாகம் முற்றிற்று

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 9 | 4 | 6 | கொண்டவன் | கொண்டதன் |
| 12 | 4 | 6 | வேட்டையாலும் | வேட்கையாலும் |
| 13 | 2 | 2 | நண்ணீர் | நன்னீர் |
| 19 | 2 | 13 | சிங் | சிங்கள |
| 29 | 2 | 6 | அகதியருகே | அகழியருகே |
| 30 | 5 | 5 | பிணையும் | பிணையும் |
| 31 | 4 | 7 | உற்பத்தியால் | உற்பத்தியாளர் |
| 37 | 3 | 9 | மௌகை | மௌசு |
| 38 | 2 | 9 | இராச காய | இராச காரிய |
| 42 | 2 | 11 | சோல் | சேரல் |
| 55 | 3 | 4 | மடுக்கப்படும் | மதிக்கப்படும் |
| 64 | 5 | 7 | கண்ணளி | தன்னளி |
| 80 | 1 | 5 | 1980 | 1880 |
| 85 | 4 | 10 | காரணசிங்கம் | காரணலிங்கம் |
| 88 | 3 | 18 | சுற்றாலிலுள்ள | சுற்றாடலிலுள்ள |
| 93 | 5 | 4 | கொண்டுயில் உயிர் | கொண்டுயிர் |
| 105 | 2 | 6 | கட்டி வேலைகள் | கட்டிட வேலைகள் |
| 109 | 1 | 5 | உதவியிடன் | உதவியுடன் |
| 110 | 1 | 1 | போஷாக் குறைவு | போஷாக்குறைவு |
| 114 | 3 | 5 | மின்னிலையம் | மின்னிலையம் |
| 137 | 1 | 6 | கோப்பாயிலுள்ள | கோப்பாயிலுள்ள |
| 141 | 1 | 13 | கிரளைக் | திரளாகக் |
| 03 | 3 | 6 | பேராசனாக | பேராசானாக |
| 14 | 3 | 4 | பெராரா | பெரரா |
| 172 | 2 | 5 | பரி | பதி |
| 175 | 2 | 1 | பலவி | பளானி |
| 177 | 3 | 4 | தசமியிலின்று | தசமியிலன்று |
| 181 | 2 | 15 | குதித்த | குறித்த |
| 185 | 2 | 9 | பானேரசராயிரு | மானேசராயிருந்தார் |
| 201 | 2 | 8 | கிணைக்களங் | திணைக்களங்களால் |
| XIV | ௨ | ௬ | | |

# பாகம் II

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 44 | 2 | 1 | அழ்வாப்பிள்ளை | ஆழ்வாப்பிள்ளை |
| 58 | 2 | 1 | முன்னோகளும் | முன்னோடிகளும் |
| 60 | 3 | 1 | வகைபில் | வகையில் |
| 85 | 5 | 2 | சங்களையும் | சங்கங்களையும் |
| 75 | 1 | 8 | கூட்டுவுவாளர் | கூட்டுறவாளர் |
| 79 | 2 | 5 | கேட்கப்ட்டது | கேட்கப்பட்டது |
| 82 | 4 | 9 | ந்த | இந்த |
| 89 | 2 | 4 | சிடா (SIA) நிறுவனத்தின் | சிடா (SIDA) நிறுவனமும் |
| 89 | 4 | 5 | பரதான | பிரதான |
| 89 | 3 | 12 | பாதுக்கப் | பாதிக்கப் |
| 89 | 4 | 8 | என்னவற்றிொரு | என்பவற்றிஒவ்வொரு |
| 89 | 4 | 9 | கொ | கொள் |

முல்லை அச்சகம்
ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.